ஓம்:

நம்பியகவல்

(பாட்டுங் குறிப்புரையும்)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS

ஆசிரியர்:
புலவர் பாண்டியனார்

பதிப்பகம்:
மதராசு ரிப்பன் வெளியீட்டு நிலையம்
இராமச்சந்திரபுரம்
கொல்லம்யாண்டு
௧௧௨௩. ௧௨. ௭

பதிப்புரிமை விற்பனையுரிமைகள் நூலாசிரியர்க்கே.

நன்றியறிவுரை

பெருமால் கெடுக்குந் திருமாலருளிச்செய்த திருவாய்மொழியாகிய விந் நம்பியகவற்பனுவல் அப்பெரியபெருமாளின் றிருவடியடைந்துய்ந்த தளவாய்ப்பட்டினத்து அழகர்சாமி ரெட்டியாரும் அவர்தம் மகனூர் திருமலைக்கோவிந்தசாமி ரெட்டியாரும் எம் வாழ்க்கைக் கின்றியாவாறு நன்கிழைத்த நன்றிக்கு நினைவைடயாளமாகி அச்செம்மல்கட்கு நிலமிசைநிலவு மெச்சமாகுக.

எமக்குப் பல்லாற்ருற் றுணைபுரிந்துவரும் நற்சான்றுபட்டித் திருவாளர் பெ. ராம. சிதம்பரஞ் செட்டியாரவர்களின் தூயஅன்பும் செய்யாமற்செய்தவுதவியும் எம்மான்மறக்கற்பாலனவல்ல. பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிவுடைய பெருமான் அன்னார்க்கு வேண்டுவ நினைந்து முன்னின்று முடித்தருள்க.

இந்நூலுரைகளின் சொன்னடை தாங்கள் முன் னுணராத கடிய செந்தமிழ்நடையா யிருந்தும் முயன்று விரையமுறைப்படப் பதிப்பெழுத்துக்கோவை யமைக்க வல்லராகிய, இராமச்சந்திரபுரத்து மதராசு ரிப்பன்பதிப்பகத்து எழுத்துக்கோவைத் தொழிலாளர் பயிற்சியும் உணர்வும் நன்கு பாராட்டற்பாலவாம்.

நம்பியகவல் இங்ஙனம் பல்லாற்ருற் செப்பமுற்று வனப்புற வெளிவந்துலவுமாறு வேண்டுவ புரிந்த பதிப்பகப் பணித்தலைவர்க்கும் பணியாளரெல்லார்க்கு மெமது நன்றியறிவுரித்தாகுக.

ஓ௨ முதுமெய்.

புதுக்கோட்டை
20 . 7 . 1948

இங்ஙனம்
புலவர் பாண்டியனூர்

ஓம் :

வாழ்த்து.

இயற்பா.

௧. மன்னுக செந்தமிழ் வாழ்க தமிழ்ப்புலவர்
பன்னுக நம்மிறைவன் பாடுபுகழ் - முன்னுக
வெல்லா வுயிர்களும் யானென் றொருவர்பிறர்க்
கல்லாற் பிறவா வருள்.

---

௨. ஐவரு ளாருயி ரன்பனிடர் கண்டாற்று
துய்வருண் மாயோ னுணச்சொல்லிக் - கைவரு
நம்பி யகவன் மருந்தென நாநவில
வெம்பி விழுமால் வினை.

---

௩. அவாஅ வழுக்கா றகன்றுவினை நீத்தந்
தவாஅ திகக்குபுணை சாலுங் - குவாஅலுற்
றீண்டிய நம்பி யகவ லியற்புலவன்
பாண்டியன் பன்னிய பாட்டு.

இசைப்பா.

௪. இருதொழிலு முத்தொழிலு முப்பண்பு மோராங்
கியைந்தொன்று மியையாத விறைவன்ற னருளா
லுருகெழுமண் வாழுயிரு ளொருவனென விழிவுற்
றுரைசெய்திரு வாய்மொழியென் றுயர்நம்பி யகவல்
பெருமைதக வெற்கடவு ளென்னுதி மினிது
பேணுதள வாய்மருவு மாலழகர் சாமி
யருமைமகன் வழிமரபிஃ தாமெனவி சைப்ப
வாலமருஞ் செல்வனென வாழியரோ வாழி.

ஓம்:

முக வுரை.

நூற்பெயரமைதி.

எடுத்துக்கொண்ட விந்நூற்குப்பெயர் நம்பியகவலென்பது. இது நூலன்றிப் பாட்டாயினும் பாட்டுள்ளும் நூற்பாற்படவைத் தெண்ணப்படுந் தகுவரவிற்றாய்ச் சிறத்தலி னூலென வழங்கற்பாற்று.

இது நம்பியின் கூற்றுக்கள் சிறந்தனவும் பெரும்பாலனவு மாய்த் தொக்க கோவை. ஈண்டு நம்பிகூற்றுக்கள் அகவற்பா நடைய. இவை முனிவன் வாதராயணன் கூற்றுக் களாயினுங் கூத்தியல் வழக்குப் பற்றி நம்பிகூற்றுக்களெனப்படும். முனிவன் கூற்றாயினும் நம்பி வில்லிக்குக்கூறியருளிய கருத்தினைக் கூறுதலின் நம்பிகூற்றுக்களெனப்படு மெனினுமாம். நம்பியென்பான் நிலங் கடந்தநெடுமுடியண்ணலின்பிறப்பாகிய வடபான் மதுரைக்காரியம் பெருமாள். அவன் முதனுட்பாரதப்போர்த்தொடக்கத்துச் செருக் களனிடைத் தான்வலவனாகிக் கோல்கொண்டு குதிரையுய்ப்பத் தேரூர்ந்துவந்துதெம்முனைநடுவட்சிறந்துநின்றவில்லி தான் படுகளம் புக்க கேளிரைக்கண்டலு மீண்டிய பெரும் பரிவிற் பிணிப்புண்டு கலுழ்ந்து போர்கைவிட்டுத் தேர்மீதசைந்த மயக்கவுணர்வு நீங்கித் தெருளத்தெருட்டிவில்லியை நம்பி பணிகோடற்பொருட்டும் வையக முறுதிப்பொருளுணர்ந் துய்தியெய்துதற்பொருட்டுந் திருவாய்மலர்ந்தருளிய வெளியீடுகளென வைக்கப்பட்டனவே யீண்டை நம்பியி னருளிச்செயல்கள்.

நூற்சிறப்பு.

எனவே இதற்கு முதனூல் வடமொழிப் பகவற்கீதை யென நல்லிசை போய நன்னூலென்பதாம். அம்முதுநூன் மொழிபெயர்ப் புத்தாம் பல. அவற்றுளிது நேரிசை யகவற்பா நடைமொழிபெயர்ப் பெனவுஞ் செந்தமிழ்மொழிபெயர்ப்பெனவும் மரபுநிலை திரியா மொழி பெயர்ப்பெனவும் வேறு வேண்டப்படுவது.

முத்தை ஞான்று கண்ட நூல்கள் இற்றை ஞான்றைக்கும் இற்றை ஞான்று காணு நூல்கள் பிற்றை ஞான்றைக்கும் பொருளுணரலாகாவாய்க்கெடவே அவ்வஞ்ஞான்றை மாந்தர்க்கியலும் பொதுவுணர்வன்றி முஞ்ஞான்றை மக்கட்கு மொத்து நிலைபெறுஞ் சிறப்புணர்வினுஞ் சிறப்புடைநூல்களாக்கலும்பழுதாம். மக்களும் பழுதாவரென்பதனை யெதிர்நோக்கி அவ் விழிதகவு தீண்டாமைப் பொருட்டு.

“மரபுநிலை திரிபிற் பிறிதுபிறிதாகும்” [தொல்காப்பியன். மரபியல். 91.) எனவும்

“மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான.”

(தொல்காப்பியன். மரபியல். 90) எனவும்

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின."

(தொல்காப்பியன். மரபியல். 93.) எனவும் பணித்துப் பாது காவல் செய்பவாகலின் அவ்வேலியிகந்து மரபுநிலைதிரிய நூலியற்றலை வேண்டார் பண்டுமின்று மென்றுந் தமிழ்ச்சான்றோரென்க.

முதனூற் சிறப்பு

வடமொழிப்பகவற்கீதையென்பது தாமொருநூலன்றாய் மாபாரத வீடுமபருவத் திருநூற்றிருபத்திருபால்களுள்ளு மிருபத்தைந்தாவதுதொட்டு நாற்பத்திரண்டாவது முடியக்கிடந்த பதினென்பால்களின்றொகுதியாகி அந்நீள்பெரும்பாட்டின்கிளையுட்கிளை யெனப்படுவதாயினுந் தானே மாபாரதத்தின் உட்கோளும் ஊதியமுமாய்த் தலைசிறந்துநிற்றலானும் உயர்வறவுயர்நலனுக்கின்றியமையா மெய்யுணர்வின்கண் ஐயந்திரிபு களைந்து அமைதி நல்குதலிற் றனக்குத் தானன்றி யீடு மெடுப்பு மின்றி மேம்படுதலானும் மெய்ந்நூலுரையாளர்க்கெல்லா மேனைமெய்ந்நூல்களி னுண்பொருள் காண்டற்குக் கைக்கொள்ளுங் கைவிளக்காகி யொளிர்தலானும் அவ்வாற்றாற் செவ்வியர்பலரு மவாவி யோதுதற்பயிற்சி மிக்குடைமையானுந் தன்னையேயோதுதற்கேற்ற பரப்புடைமையானும் பலவேறினத்தார்க்கும் பொதுவாகலானும் வையம் பரந்த புகழ் சிறத்தலானுந் தனிநூலாகவு மேற்கொண்டுமுற்றொட்டுச் சான்றோரெல்லாம் உரைதந் தெடுத்துக்காட்டு மருமையும் பெருமையு முடைத்து. அதனாற் கீதையெனப் பெயருடைய நூல் பல வுளவாக இன்னகீதையென விதவாது வாளா கூறினுந் தானே யமைவதாயிற்று. இங்ஙன மொரு நூலு ளொருமருங்கினையும் நூலென வழங்கு மரபுண்டென்பது இந்நூற்பதினைந்தாவதுபால் ஆண்டகையிய லென்பதனீற்றுச் செய்யுளகத்து நம்பி தானே அப்பாலினை நூலென வழங்கிய வாற்றானும் பெறப்படும்.

முதனூற் பொருட் சிறப்பு

மெய்யுணர்வுபயின்று வீடுபெற்றானுக் கெவ்வினை செய்தலு மிழுக்கன் றென்பதூஉந் தான் செய் வினையெலாம் வேற்றுமையின்றித் தம்முளொப்பத் தனக்குப் பயனிலவா மென்பதூஉம் வினைகளு ளொன்றுஞ் செய்யாதொழியாது ஒன்றுவிட் டொன்று செய்யலுறின் அவன் றன் னுடற்பிறப்புக் கியைந்த வினைசெய்தலே நேர்வதென்பதூஉந் தான் செய்யும் வினைகளை வரைந்துகொண்டு, வரைந்துகொண்ட வினையளவி னன்றிப் பிறிதுவினைக்கட் செல்லாவாறு நெஞ்சினைச் சிக்கென நிலைபெறுத்தலான் மெய்யுணர்விடையறவுபடாது வினையொடு உடனிகழற்பாலதென்பதூஉம் அங்ஙனம் வினைசெய்தற்க ணெஞ்சு நிறுத்தல் வினைவயிற்புணர்ப்பெனப்படு மென்பதூஉம் அஃதின்றிச் செய்யும் வினை யாதாயினு மது வினைப்பிணி யெனப்படு மாதலின் அவ்வினைசெய்யற்க வென்பதூஉம் வினையென்ப துயிர்க் கொருஞான்று மின்றி உள்ளத்தியல்பாய்த் தானே நிகழ்ந்து செல்வதாதலின் அதனை யொருவன் செய்தலுஞ் செய்யாதொழிதலுமில்லை யென்பதூஉம் அதன்கட் பற்றொழிதற்கே அவற் குரிமையுண் டென்பதூஉம் அதனாற் பற்றுவிட்டு நினக்கென வரைந்துகொண்ட போர்வினையை நீ செய்பா

தொழியக்கடவையல்லை யென்பதூஉம் அதனால் எழுக பொருக வெல்க நுகர்க வென்பதூஉமென் றின்னவா றுணரக்கூறி நம்பி வில்லியைத் தெருட்டிப் போர்பொருவித்தற்பொருட்டுக் கூறப்பட்ட தெனினும் இதுவே வினைத்திறமெல்லாந் தெரித்துணர்த்துதற் கமைந்த நிலனாகலானும் உயிரெய்து மின்பத்துன்பமெல்லாம் வினை வழி யெய்தற்பால வாகலானும் அதனால் விளிவின்பவீடுபேறு காறு முயருமாக்கபெல்லாம் வினையாராய்ச்சிக்கண் உணரக் கிடப் பனவேயா மாகலானுங் கீதையினகத்து மெய்யுணர்வின் கூறுபா டெல்லா மினிது சுருங்கச் சொல்லிவிளங்கவைக்கப்பட்டுள. அதனா லிந்நூல் நாற்பானூல்களுள்ளும் வீட்டியற்பாற்படு நூலுரைகட்குச் சான்றாவதன்றிப் பொருட்பாற்படு நூலுரைகட் கெடுத்துக்காட்டத் தகு சான்றாவ தன்று. இந்நூலின்கட் பெறப்படும் அன்பு, அருள், வாய்மை, புறங்கூறாமை முதலாயின அறத்துப்பாற்படுவனவாயினும் அவை அறங்குறியாது வீடுபேறுகுறித்துப் பணிக்கப்படுதலின் ஈண் டறத்தின்பாற்படாது வீடுபேற்றின்பாற்படுவனவாயின. கடவுளர் முதலிய பிறவுயிரை நோக்கிக் கொள்ளப்படுவது அறம். ஒருவன் ஒருதானாகிய தன்னை நோக்கிக் கொள்ளப்படுவது வீடு அறம் பொருளின்பங்களையு மவற்று மறுதலையாகிய மறம் வறுமை துன்பங்களையு மெதிர்மறுத்தன்றி யுணரப்படாததாய் அதனால் வினையிற் பெறப்படு மவை போலாது வினையின்மையிற் பெறப் படுவதாய வீட்டியல் அறத்தின் வேறாமாறு துணியப்படும்.

"எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்"

என்பது தொல்காப்பியன்.

இதன் பொருள்: இறைவன் முதலிய வெல்லா வுயிர்க்கும் நுகரப்படுவதாகிய வின்பமென்பது அவ்வுயிரின் வேறாகாது அவ் வுயிரே தானா யமர்தலான் அவ்வுயிர்க்கு இடையீடின்றி மேன் மேல்வரும் நச்சுதலை யுடையதாகின்றது; அங்ஙனமன்மையிற் றுன்பமென்பது அவ்வுயிர்க்கு இடையீடின்றி மேன்மேல்வரும் நச்சாமையையுடையதாகின்றது என்பது. இதனால் உயிரொன்றே யின்ப மென்பதூஉம் உயிரொழிந்தன வெல்லாந் துன்பமென்பதூ உம் பெறப்படும். இங்ஙனந் தானாகிய வின்பத்தையே நச்சுதலை யுடைய வுயிர் அவ்வின்பத்தைத் தானல்லாத துன்பத்துக்கண் மயங்க்வுணர்தலின் வெள்ளென்பு கறிக்குஞ் சுணங்கன்போல அவையிற்றை நச்சி முயன்று நுகர்ந்து பின் அவை துன்பமாதல் கண்டு விட்டு விட்டுப் பற்றிப் பற்றிப் போய்ப் பின் னொரு ஞான்று அவையெல்லாந் துன்பமாதல்கண் டெல்லாவற்றையும் விட்டவழித் தானல்லது பற்றப்படுவதொன்று மில்லாமையிற் றன்னைப்பற்றவே தானே யின்பமாதலைக் கண்டு தேறிப் பின் விடுதலும் பற்றுதலு மின்றி யொருநிலைபெறுத லமைவதாகும். இவ்வாற்றான் உயிர் இன்பமெய்துதற்கு வேண்டுவன உணர்வும் வினையுமென விவ்விரண்டாகும். இவ் விருதிறத்துள்ளும் உணர் வின்வழியே யின்பமெய்துமாற்றுக் கொருநூலாக்கிய வாசிரியன் றானே யேனை வினையின்வழியே யின்பமெய்துமாற்றுக்கு மொரு நூலாக்கினான். அதுவே கீதையென்பது. வினையின் வழிப்பெறும் வீட்டின்பமாவது உள்ளம் வினைசெய்யாநிற்புழி வினையெல்லாந் துன்பமாதல் கண்ட அவ்வுள்ளமுடையான் அவ் வினைநிகழ்ச்சிக் கிடனாகி வினையின்மைக்குப் பற்றுக்கோடாவதனை யுய்த்துணர்ந்து

பின் அது தானுதலைக்கண்டவழித் தனக்கு வினையின்மையும் பிற வினையைத் தன் வினையாகக் கண்ட மயக்கமே தனக்குத் துன்ப மாயிற்றெனவுந் துணிந்து வினைக்குச் சான்றளவாய் வினை நிகழ்ச்சிக் கண் வினையின்றி யாண்டு மமைதியுற்று நீடுநிற்றலாம்.

நூலாராய்ச்சியே தொழிலாக வுடைய புலவன் றன் னுண் ணுணர்வின்சீர்மையானே வினையில்லாத தன்னைக் கண்டு வினையெல் லாந் துன்பமென வுணருமாதலின் அவன் வினைசெய்யாதொழித லியல்பாகும். அங்ஙன மன்றி வினையெல்லாந் துன்பமாதல் கண்ட பின் வினையில்லாத தன்னைக் கண் டமைவோன்வலிந்துவினை செய்யா தொழியின் மடிபுக மருள் வந்து தலைப்பட்டு மெய்யுணர்விழந்து வினைவழிப்பட் டுழலுதல் கூடுமாகலின் அவன் வினைசெய்யாதொழித லினுஞ் செய்தலே சாலச்சீரிது. அது கருதியே வில்லியை நம்பி வினை செய்க வெனப்பணித்தான். இஃதுணரமாட்டாதார் வேற்றுமைகரு தாது யாவரையும் பற்றின்றி ஒருதலையாக வினைசெய்க வென நுத லிற்றுக் கீதையென மருள்ப. அற்றுபின் வினைசெயலாற்று முதி யோர்க்கும் உறுப்புக் குறைபாளர்க்கும் ஊழ்வினையாலிரந்துண்டு வாழ்தலல்லது முயன்று வாழ்தற்குத் துணை தலைப்பெய்யா தார்க்கும் ஒரு சார் சிறந்தவானோர்க்கும் மெய்யுணர்வும் வீடுபேறு முளவாகல் கூடாதென்பது பட்டு முரணுமென மறுக்க. அன்றியும் வினைவயிற்புணர்ப்பு மன்னர்வழிவருவதென நம்பி கூறுதலின் அவர்க் கும் அவர்பாற்பட்டோர்க்குமன்றி யேனைப் புலவர்க்கின்மை பெறப் படும். கண்டுயிலேற்றான் கைப்பொருள்போல வீடுபேற்றின்ப மெய் யயர்வின்கண்வினை தானே யொழித லமையும். அவ்வயர்வில் வழி வினைசெய்வான் வினைவிடுதலமையாதென்பது கீதையின்கருத்து. வினையெனப்படுவன உழவுமுதலிய பொருள்வருவாய்முயற்சிகளும் இயல்புடைய மூவர்முதலிய பதினொருவர்க்குச் செய்யுந் துணையுங் கட னும் புலவர்க்கு நல்கு மீகையும் பொதுமக்கட்குச் செய்யுமொப்புரவு களும் இல்லியல்வினைகளாகிய நன்மணஞ்செய்தன் முதலாயினவு மென் றிவை. ஏனைத் துயிலெழுதன்முதலிய நாள்வினை வெறுவினை பிறவேவியனசெய்யுமடிமைவினை யென் றிவை யீண்டு வினையெனப் படா; நாள்வினை புலவர்க்கும் வினைவர்க்கும் பொதுவாகலானும் கண் ணிமைத்தன்முதலிய வெறுவினை நினைவின்றி நிகழ்வனவாகலானும் ஏனையது அவ்விருசாரார்க்குங் கூடாதாகலானுமென்க.

அந்நாளையிலே முயற்சியினால் விளைவு பெறற்பாலதாகலின் நன் முயற்சி செய்க வென்பாரும் முயற்சியும் விளைவுந்துன்பமாகலின் ஒரு முயற்சியுஞ்செய்யாதொழிக வென்பாரு மென விருசாரா ருளராயி னார். (கீதை. நம்பியகவல். 629) முயற்சி செய்தலுஞ் செய்யாதொழி தலு மென விவ்விரண்டுங் கழிபெருந்துன்பமேயாம். மெய்ம்மையான் உயிர் வினைசெய்தலுஞ் செய்யாமையு மியல்பி னிலவாகலான் அவை யில்லாமைக்கண் அவை யுளவாதலைக் காணு மயக்கவுணர்வு தெளி தலே துன்பக்கேடு மின்பப்பேறுமாம். அத்தெளிவ தலைப்பட்டுழி முயற்சி செய்தலுஞ் செய்யாமையுமென்னு மிரண்டும் பயனிலவாய்த் தம்மு ளொக்கும். அவ்வினை யிரண்டு மறியாமையைப் பயப்ப வாத லின் அவை மெய்யுணர்வுக்கும்வீடுபேற்றுக்கும் பகையாதலன்றித் துணையாத லில்லையாகும். ஆயினு மவற்றை வரைந்துகொண்டு அவ் வளவிற் பிறழாது நெஞ்சினை நினைப்பொழியுமாறு நீறிஇப் பயிலும் பயிற்சி கைவரின் அறியாமை தேய வுணர்வு மீண்டு தன்னைத் தா னேக்கி நிற்ற லமைவதாகும். என விவ்வாறு மெய்ம்மை யுணர்த்து தற்பொருட்டு நம்பி வில்லியர்நல்வழக்காட்டினை யிடமாக வைத்துக்

கொண்டான் கீதைபாடினோன். வினைசெய்தற்க ணெஞ்சு நின்று நினைப்பொழிதல் வினைவயிற்புணர்ப்பெனப்படும். வினைசெய்யாது மெய்ப்பொருளாராய்ச்சிக்கணெஞ்சு நின்று நினைப்பொழிதல் புலவயிற் புணர்ப்பெனப்படும். புணர்ப்பென்ப திடம் பற்றிப் பலவெனப்படுவ தல்லது தா னொன்றேயா மென்ப துணர்ந்துகொள்க. அதனாற் புணர்ப்பிரண்டற்கும் விளைவொன்றென்னாநின்றான் கீதையுள் வில்லிக்கு நம்பி. வினையிற் பிரிதற்கும் புலமையொடு புணர்தற்கும் புணர்ப் பின்றியமையாதெனப் புணர்ப்பினை வலியுறுத்துச் சிறப்பித்தலிற் கீதை புணர்ப்பியற்பனுவலெனவும் வழங்கப்படுவதாயிற்று. ஆரியர் மேற்கொள்ளுந்துறவினும் புணர்ப்புச் சிறந்தது. புணர்ப்பினைத் துறவோ டுறழ்ந்து ஒப்பு முயர்வுங் கூறப்படுதலின் இஃதாரியரின் வேறாயவரெனப்படுந் தமிழர்பாற் பெறப்பட்டதாகல் வேண்டும். புணர்ப்பின்க ணின்றவழி யெய்து மெய்யுணர்வு தற்காட்சியுணர்வும் பெருஞ்சார்புணர்வுங் கடவுணிலை யுணர்வுந் தொகையுணர்வு மூதன்முதலி வேற்றுமையுணர்வுஞ் செய்செய்யறி சிறப்பியலுணர்வும் ஆண்டகையுணர்வும் அளவையுணர்வும் புணர்ப் புணர்வுந் தன்னிய லுணர்வுங் கேள்வியுணர்வுமெனப் பலவாறு படு மென்பது கீதையிற்பெறப்படும்.

புணர்ப்பி னின்றவழி நிகழற்பால வினை முக்கூற்றுப்பண்பினுந் தலையாய வொண்மைப்பண்பின்பாற்படுவனவாதல்வேண்டு மென்ப தூஉ முணர்த்தப்பட்டுளது.

புணர்ப்பு நேராதார்க்குக் கடவுட்காதல் வாய்க்குமாயின் அது புணர்ப்புப்பயிற்சியினுஞ் சிறந்ததாகுமெனவும் அதுவு நேராதார்க் குப்புணர்ப்பின் எண்வகை யுறுப்புக்களைப்பயிலும் பயிற்சியானே ஆக்கமுண்டாமெனவும் அதுவுமாட்டார்க்குக் கடவுள் வழிபாடு செய்தலான் உய்தி யுளதாகு மெனவும் அதுவுஞ் செய்தலாற்றார்க்கு ஊதியங்கடவுட்குதவுதலான் உய்தி யுளதாகு மெனவும் அதுவுஞ் செய்ய வறியாதார்க்குக் கடவுள்பாலடைக்கலம்புகுதலான் உய்தி யுளதாகு மெனவும் அதுவுஞ் செய்யாதார்க்கு உய்தி யில்லை யெனவு மிங்ஙன முய்யுமா றெல்லாந் தொகுத்தோதுதல் கீதையாசிரியற்கு மன்னுயிர்மேற்செல்லும் பேரருளுடைமையை யினிது புலப்படுத்திக் கீதைக்குச் சிறப்பளிப்பதாகின்றது. கடவுள்வழிபாடாவது ஒருவன் றன் செயலெல்லாங் கடவுள்பணியெனக் கோடல். கடவுள்பா லடைக்கலம்புகுதலாவது ஒருவன் என்செயல் யாதொன்று மில்லை; எல்லாமென்னினைப்பு முயற்சியு மின்றித்தாமே யெதிர்ப்படு மியற்கை யென வுணர்தல்.

முதனூலாசிரியன் சிறப்பு.

அம் முதனூ லாசிரியனாவான் மாபாரதம்பாடிய முனிவன்வாத ராயணனென்பான். இவன் றன் தாய்வழிபற்றித் தமிழனெனவுந் தந்தைவழிபற்றி ஆரியனெனவு மிவன் றானே கூறிய வரலாற்றுக் குறிப்பினின்று முய்த்துணரப்படுகின்றான். இவன் பின்வாதராய ணன். முதல்வாதராயணன் வேறுளன். வடமொழித் தலைப்பெருந் தொகைநிலைச் செய்யுளெனப்படும் வேதமென்பதன் முற்கூறு தொகுத்த முதல்வாதராயணன்போல அதன் பிற்கூறு தொகுத்தோ னாகலானும் அவன்மரபினனாகலானும் நிறங்கரியோனாகலானும் முதல் வாதராயணற்கு வழங்கும் வேதவியாதன், கார்த்துவைபாயனன் முதலிய பெயரும் வரலாறுமெல்லாம் இப் பின்வாதராயணற்கும் வேற்றுமை தோன்றாது மயங்குமாறு வழங்கலாயின. வேதத்தின்

பிற்கூறு தொகுக்கு முன்னரெல்லாம் முற்கூறுமட்டும் வேதமென வழங்கப்பட்டிருந்தது. அதனால் அதனை யாராய்ந்த நூலும் மீமாஞ்சை யெனவே பெயர்பெற்றது. பிற்கூற்றினை யாராயும் பின்மீமாஞ்சை தோன்றலு மீமாஞ்சை முன்மீமாஞ்சையாயிற்று. இன்றும் மீமாஞ்சை யென வாளா கூறின் முன்மீமாஞ்சை யெனவே கொள்ளும் வழக்கு மிதனை வலியுறுத்தும். அதுபோலவே வேதாந்தமென்னுது வேதமென வாளா கூறின் வேதாந்தமொழிந்தகூற்றினை யுணர்த்தலே வழக்காறும், இன்ன குறிப்புக்களான் முன்மீமாஞ்சை நூலாசிரியற்கு முன் வேதந் தொகுத்த வேதவியாதனும் அவற்குப் பின் வந்த ஏனைமீமாஞ்சையாசிரியனும் மாபாரதம் பாடியவனுமாகிய வேதவியாதனு மொருவ னல்லரென்பது பொருந்துவதாகும். பின்மீமாஞ்சையாசிரியனும் வேதாந்தந் தொகுத்ததுபற்றி வேதவியாதனெனப்பெயர் வழங்கப்பட்டிருத்தல்வேண்டும். வேதாந்தந்தொகுத்தோன் பிறனுயின் இவன் வேதவியாதனது மரபின னென்பதுபற்றி அங்ஙனம் வழங்கப்பட்டிருத்தல்கூடும். வேதம் வேதாந்தமென வேறுபட வழங்குதற் கேற்ப வேதந்தொகுத்தோ னின்னு னென்றாற் போல வேதாந்தந் தொகுத்தோ னின்னு னென்றுதல் வேதவேதாந்தந் தொகுத்தோ னின்னு னென்றுதல் வழங்கும் வழக்கம் வடமொழியாளரிடைக் காணப்படுதலில்லை. வேதமெனவே வேதாந்தமு மடங்குமென்றல் பொருந்தாமை மேலே பெறப்பட்டது. வேதத்தின்பாற்படும் வேதாந்தத்தினை வேறோதுதல் ஆரியர் தமிழர்சார்பு பெறு முன்னர் வேத மன்றி வேதாந்த மில்லை யென்பதனைக் குறிப்பதாகும்.

மாபாரதம் பாடியவன் புத்தன்கொள்கையை மறுத்துரைத்துப் போதலின் (கீதை: நம்பியகவல்: பாட்டு, 579.) இவன் புத்தற்குப் பிற்பட்டவ னென்பது பெறப்படுதலானும் பாரதர்நாளை வேதவியாதனின் வேறுவ னென்பது துணியப்படும். எனவே பாரதரது வரலாற்றைத் தான் கேள்விப்பட்டவாறு கொண்டு வேறு கேள்வி யுற்ற வரலாறுபலவு மதனோ டிணைத்துத் தான் வேண்டியவா றெல்லாம் புனைந்துரைத்து விரித்துப் பாடி அறம் பொரு ளின்பம் வீடுபேறென்றிந் நூற்பொரு ளுன்கன் உண்மை பலவு நுண்ணிதி னுணர்த்தி வலியுறுத்துத் தெளிவித துலக மொருஞான்று மறக்கலாகாத பெருவள்ள ன்மை காட்டி நல்லிசை நிறீஇயினன். இப் பெருந்தகையின் செயற்கருஞ்செயலுஞ் சொலற்கருநுண் ணுணர்வும்நோக்கின் இவன் உலகினையுய்வித்தருளற்பொருட்டுத் தோன்றிய முதல்வன்பிறப்பாதலொக்குமென்பது படும்.

> "எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
> லில்லாத வெப்பொருளு மில்லையால்"

என மதுரைத்தமிழ் நாகனர் முப்பாற்கு மொழிந்த சான்றுரை வடமொழிக்கண் வியாதன் பாடிய மாபாரதத்துக்கு மொக்குமென்ப புலவர். ஆரியப்பார்ப்பனரையும் ஆரியமன்னரையு முணர்வு கொளுவிச் செவ்வியராக்கற்பொருட்டே வியாதன் மாபாரதம் பாடினன்போலும். அந்நாளையாரியருட் பார்ப்பனர் தாங்கண்ட வேள்வி வினையும் வேதமோதுதலு மன்றி முதல்வனுண்மையும் அவனை வழிபடுமாறும் ஊழ்வினையுண்மையும் வீடுபேற்றுணர்வு மறியாதவராயிருந்தனர். தமிழரைச் சார்ந்தவழியே அவருட் சிலர் தமிழர்பாற்பட்டுத் தாம் வேறு நூல்செய்துகொண் டுய்தி யெய்தி வருவாராயினர். தமக்கென வுணர்வில்லாத ஏனைப்பார்ப்பனர் பலர் தமிழரையுந் தமிழர்பாற்பட்ட தம்மினவரையு மிகழ்ந்துரைத்துத் தாம் வேறுபட்டுத் தமித்து நின்று தம்பிறப்பையுந் தங்கொள்கையையுமே

பாராட்டிக்கொண்டு தமக்குத் துணைநிற்கு மன்னரையுஞ் செல்வரையு மவா மிகுவித்துத் தமக் ககப்படுவித்து அவர்சார்பில் வாழ்ந்துவந்த னர். அவரது குறுங்கொள்கைக்கு உடன்படாத மன்னர் சிலர் அவரின் வேறுபட்டுத்தாமுந் தனிக்கொள்கைகண்டு துறவுபூண் டாசிரியர்தொழிலை மேற்கொண்டு செவ்விசாலா மாணவர் பலரைத் தொகுத்துத் தனித்தனிக்குழுவினராகி முரண்படுவா ராயினர். அவ் விருசாரார் போக்குக்களும் இயற்கையோ டிசைந்த வின்பமு மின்பத்தோ டியைந்த வாழ்வும் பயவாமை காட்டி அவரையும் பிறரையுந் தெருட்டுதற்பொருட்டு அப்பார்ப்பனர், மன்னரென்றிவர் களின் பிறப்புக்கலப்புப் பலவறறையுங் கொள்கைகளின் போலித் தன்மைகளையும் பலவாறெடுத்துவிளக்கியும் மெய்ப்பொருண்முடிபு களை நன்குவிளக்கியும் பாரதப்பெருஞ்செய்யுளும் வேதாந்தசூத்திர முஞ் செய்தருளினன் வேதவியாதன்.

தமிழ்மொழிக்கண் மெய்ப்பொருளுணர்வு.

செந்தமிழ் மொழிக்கண் மெய்ப்பொருண்முடிபுணர்த்துவனவா யிற்றைஞான்று வள்ளுவனார்முப்பாலுள் ஓரியலுந்தொல்காப்பியன் முதலிய வனைய சிலவற்றுள் ஆங்காங்குக் காணப்படுஞ் சிற்சில செய்யுளுஞ் சொற்றொடருந் தமிழெழுத்துக்களின் பெயரீடுகளும் எழுத்தியல்களுமே காணப்படுவ. ஆயினும் அயற்சொல் விடையிட்ட மொழிபெயர்ப்புக்களும் அவற்றின்பாற்பட்ட சார்புநூல்களும் பல வுள.

தமிழெழுத்துக்கட்கு உயிரெனவு மெய்யெனவும் வழங்கு குறீ யீடுகளும் அவற்றியல்புகளும் பண்டுதொட்டு இயனூல்களுணர்த்து மரபு காண்டலானும் வனை யெம்மொழியெழுத்துக்கட்கு மங்ஙனம் வழங்காமையானும் வழங்கலாற்ருமையானுஞ் செந்தமிழ்மக்கள் தம் மொழியொடு தோன்றியது போன்று மெய்ப்பொருளுணர் வொடு மவ்வுணர்வுக்கு வேண்டப்படும் புணர்ப்பொடுந் தோன்றின ரென்பது மறுக்கப்படாது. இங்ஙனந் தமிழர் தம் மெய்யுணர்வு சிறந்திருந்த சுவடு கண்டுகொண்டுய்த்துணர்துமாயிற் படைப்புக் காலத் தொடக்கமாகிய முதலூழித் தொடக்கத்துத் தமிழர் வழக்குஞ் செய்யுளு மெய்யுணர்வோடு அதன்வழியுணர்த்துவனவேயாதல் வேண்டுமென்பது பெறப்படும். அன்றேல் தா மெய்கண்ட நுண் பொருளோ டொப்புக் காண்டலுங் காட்டலு மியலு மத்துணைப் பயிற்சி நொய்ம்மை காணப்படுவதாங்கொல்லோ? தமிழ்மொழி நடை வனைமொழிநடைபோல ஆரியமொழியோடியைந்தொழுக லின்றி முரணித் தனித்தியலு முதன்மை யுடைத்தாதலானே முதலூ ழிக்கண் தமிழர் ஆரியரென்னு மோ ரின முண்டென்பதை யறியாத மக்களாதல் பெறுதுமாகலானும் படைப்புக்காலந் தொட்டுத் தமிழ் மக்கள் மெய்யுணர்வுங் கடவுள்வழிபாடு முடையராவரென்பது மேற் காட்டின மாகலானுந் தமிழர்சார்பு பெருத முன்னெல்லாம் முழுமுதற்கடவுளுண்மையும் வீடுபேற்றுணர்வு மாரியர் கண்டில ரென்பதற்கு அவர்தம் முதனூலு மவர் மேன்மேற் சீர்திருத்தமுறுந் தொறுங் கொள்கைவேறுபாடு கொண்டு செய்த நூல்களுங் கரியாக லானும் அன்னவற்றை முதற்கண் ஆரியர் தமிழர்பாற் கண்டு தம வாக்கிக்கொண்டனரென்பது தேற்றமாம். அவர் தாந்தமவாக்கிக் கொண்ட பிறருடையவற்றையெல்லாம் பிறர் தம்மிற் பெற்றனவே யெனவே புனைந்துரைத்துப் புகழ்பரப்புவர். அங்ஙனமன்ருயிற்ரும்

பிறரை யேவிக்கொண்டு மெய்ம்முயன்று வருந்தாது பிழைக்கும் வழி பிறிதில்லை யென்பதனை அவர் நன்குணர்ந்தவர். புரவலர்கட்குத் துறக்க முதலியவற்றுக்கண் வேட்கை மிகுவித்து அவற்றைத் தாம் நல்குவதாகக்காட்டி அவரைத் தம்பாற்படுத்து அவர் துணைகொண்டு பெரும்பான்மைமக்களி னுக்கத்துக் கிடையூறுகி அவர் படு மிடரை யொருபொருளாகக் கொள்ளாது புறக்கணித்துத் தந் நலமே நோக்கிச் சூழ்த லல்லது வேறு பொழுதுபோக்கில்லாதிருந்த முனைப்பாளர்க்குப் பண்டு, உயிர்க்கெல்லாம் பொதுவாகிய கடவுளுண்மையும் இயற்கையாகிய வூழ்வினையுண்மையும் பெறப்பட்டில வென்பது சொல்லவும் வேண்டுமோ? இவர்தஞ் சூழ்ச்சிவலையி லகப்பட்டுத் தப்ப மாட்டாதுழன்ற நாட்டுமக்கண்மேற் சென்ற பேருண்முதிர்ச்சியானன்றோ புத்தன், சினன்போலும் புலவர் ஆவன செய்ய விரைந்து தமக்கென வாழாது பிறர்க்குரியாளராயினர். முதல்வராகிய காரியம்பெருமாளும் வேதவியாதனு மங்ஙனமேயாகி அப் பிணியன்னுரை யிடித்துரைத்து மீட்கலாயினர். அங்ஙனங் கழறியுரைத்தது கீதையினும் நம்பியகவலினும் எண்பத்தொன்பது தொண்ணூறு தொண்ணூற்று மூன்றும் பாட்டுக்களினும் முந்நூற்றைம்பத்தொன்பதாம் பாட்டினுங் காணலாகும். இவர் வேதத்தைப் பழித்துரைத்தது தொண்ணூற்றிரண்டு தொண்ணூற்றுமூன்று முந்நூற்றைம்பத்தொன்பதாம் பாட்டுக்களிற் காணலாகும். இங்ஙனம் பார்ப்பனரையு மவர்தம் வேதத்தையும் பழித்துரைக்கும் பழையவடமொழிவழக்கிலவாயிருப்பக் கீதைபழித்துரைத்தலாற் காரியங் கடவுளும் வேதவியாதனும் வேதச்சான்று கொண்டிலரென்பதூஉம் பார்ப்பனர்பாற்படாதவரென்பதூஉந் தெரியவருகின்றன. எனவே கீதையின் பொருள் வேதமுடையாரியர்க்குத் தெரிய வாராததென்பதூஉ முணர்ந்துகொள்ளப்படும்.

இற்றைக்கு மூவாயிரயாண்டுகட்கு முன்னுங் கடவுளு முளப்படப் பார்ப்பனர்மேல் அலர்தூற்றினு ருளராயின் இற்றை ஞான்றையின் அவர்மேல் அலர்தூற்றுவார் பாற் குறை யென் னுண்டாம்.

அது கிடக்க. முதனூழிக்கண் மெய்யுணர்வு, புணர்ப்பென்றிவை தமிழர்க்குப் பிறப்புரிமையாயின வெனப்படுமன்றிப் பிறர் சார்புபற்றி வந்தன வெனப்படா வென்க. இன்று காறுந் தமிழிற் கிடைத்துள்ள பனுவலுளெல்லாம் பழம்பனுவ லெனப்படுந் தொல்காப்பியனுள்.

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

(மரபியல்.) என வரு நூற்பாவானே அம்முதனூழிக்கண்ணும் முதற்கடவுளொருவனுண்மையும் அவன்கண்டருளிய முதனூலும் அந்நூற்கண் உயிர்கள் வினையினீங்குமாறும் வினைமாசு துடைத்தவுணர்வு விளங்குமாறுங் கூறப்பட்ட திறனும் கட்டவிழ்ந்து வீடுபெறுமுயிருண்மையும் அது கட்டுறுதற்கும் வீடுறுதற்கும் முறையே வாயிலாவன அறியாமையும் அறிவுமாமென்பதூஉம் அஃதுறுதியுணர்ந்துய்தற்குவாயில் முதனூலாசிரியனையு மதுகற்றுத் துறைபோய அவன்வழிப்புலவரையுந் தலைப்பட்டு முதனூற்பொருளுணரு மெய்யுணர்வென்பதூஉம் அதனால் அப்பிணிப்பவிழ்ந்தொருதானாதலாகிய வீடுபேறே பெறற்பாலதென்பதூஉ மென்றிவை பண்டைச் செந்தமிழ்மக்கள் பெற்று முதன்மை யெய்தினரென்பது

தொகுத்துணரக் கிடத்தலின் விழுமியமெய்யுணர்வும் அஃதெய்து
வழியுந் தமிழர்க்குப் பிறரினின்றெய்திற்றில்லை. தமக்கியல்பாகவே
யமைந்து கிடந்தன வேதவியாதன் வேதந் தொகுத்தற்கு முன்னர்த்
தோன்றியது தொல்காப்பியன் என்பர் நச்சினார்க்கினியர்.

நெடுங்காலமாயினமையிற் கடல்கோண் முதலிய விடையூறுகட்
கிரையாகி அவற்றை யுணர வரு நூல்கள் பிற்றைஞான்றைத்
தமிழர்பால் அருகி வழங்கி மறையலாயின. "படைப்புத் தொடக்
கத்துக்கண் வினைவயிற் புணர்ப்பென்பதனைச் செங்கதிர்ச்செல்வற்
கோதினேன். அவன் வழிவந்தமன்னர் அஞ்ஞான்று அதனை
யறிந்திருந்தனர். அது நெடுங்காலமாயினமையான் இன்றிங்கு வழங்
காதொழிந்தது. அதனை யானின்று நினக்குக் கூறுகின்றேன்" னெனக்
கீதை நாலாவதுபான் முதன்மூன்றுபாட்டின்கண் நம்பி காரி வில்லிக்
கருளியவா றீண்டு நினைக்கத்தக்கது. இதனானே நெடுங்காலப்பழமை
யுடையவழக்கு மறைந்து மீண்டு வெளிப்படுத லியல்பென்ப துணரக்
கிடக்கும். இனிச் செந்தமிழ்ப்புலவராயினார் தத்த மாராய்ச்சி நுட்பத்
தானும் நுகர்வு காட்சித்தெளிவுணர்வானும் வடநூல்வழக்கு முதலிய
அயன்மொழி நூல்வழக்குணர்வானு மெய்யுணர்வு, புணர்ப்புமுதலிய
வுறுதி பயக்கு நூல் பல செந்தமிழ்மொழிவளஞ் சிறப்ப யாத்தல் கட
னாகும். அக்கடப்பா டுணர்ந்த யாம் 'புலவர்காஞ்சி' யென வொரு
மெய்ப்பொருளாய்ச்சிநூலும் 'புணர்ப்பிய' லென வொரு பயிற்சிநூ
லும் யாத்தாம். அவை யின்னும் பதிப்புவெளியீடு செய்யப்பட்டில.
அவையிற்றுப் பொருளும் ஏனை யுறுதி நூற்பொருளுந் தொகுத்து
விளக்கி வீடுபேற் றூர்வலாது வேணவாத்தணிக்கும் வினாவிடையாக
லானும் அதனால் உலகெங்கணுமுள்ள சான்றோராற் போற்றப்பட்டுப்
புகழ்சிறத்தலானும் எங் நுகர்ச்சியுணர்விற் கேற்புடைத்தாகலானும்
வடமொழிப் பகவற்கீதையைச் செந்தமிழ்மொழி நேரிசையகவற்பா
நடையின் மொழிபெயர்த்து நம்பியகவலெனப் பெயர் தந்து குறிப்
புரையுந் தலைப்பெய்து முந்துறக் குயிற்றிவெளியீடு செய்கின்றாம்.

பண்டைத்தமிழரது பகவற்கீதைப் பயிற்சி.

இன்று பகவற்கீதையின் அருமை பெருமை யுணர்ந்து பாராட்
டாத நாடில்லைப்போலும். ஆரியரல்லாதவருள் இற்றைக் கீராயிர
யாண்டுகட்கு முற்கொண்டு முதற்கண் வடமொழிவாயிலாகவு
மொழிபெயர்ப்புவாயிலாகவும் பகவற்கீதைகற்றுப் போற்றிவரும்
பெருமை செந்தமிழ்மக்கட்கே சிறந்ததாகும். முதற்கட் பாரத
மொழிபெயர்ப்புப்பெற்ற மொழி செந்தமிழ்மொழியேயாம். அச்
செயற்கருஞ் செயலாற்றியபெருமை தோன்ற முதற்பாரதமொழி
பெயர்ப்பாசிரியர் பாரதம்பாடிய பெருந்தேவனாரெனச் சிறப்பித்து
வழங்கும் பெருஞ்சுட்டுடையராய் வீற்றிருந்தனர். அவர்வாழ்ந்தது
இற்றைக்கு முன் ஈராயிரயாண்டாகுமென்ப. பாரதத்தின்பாற்பட்ட
மொழிபெயர்ப்பின்மேலுங் கீதைக்குத் தனிமொழிபெயர்ப்புந்
தண்டமிழ்மொழியிற் பண்டுளதாதல்வேண்டும்.

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப — விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என நல்கூர் வேள்வியார் கூறிய வெண்பா வகத்து முப்பானூ
லாசிரியனோடு கீதை யாசிரியனை யொப்பித்துப் பாடுமாற்றானும்

ம்துரைக்காஞ்சியில் "நிலந்தரு திருவி னெடியோன் போல," (அடி 763) என்னு மடிக்கு "எல்லா நிலங்களையுந் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையை யுடைய நல்லாசிரியரென (791) முன்னே கூட்டுக. என்றது கண்ணன் எப்பொருளுந் தானாயிருக்கின்றபடியைக் காட்டிக் கீதை யருளிச் செய்தெல்லாரையும் போதித்தாற்போல வெல்லாரையும் போதிக்க வல்லவராகிய வாசிரிய ரென்றவா" றெனவும்.

"மெய்யி னியக்க மகரமொடு சிவனும்"

(தொல்காப்பியன். மொழிமரபு. 13.) என வருந் தொல்காப்பிய னூற்பாவுரையிற் "கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே யெனக் கூறியவாற்றானு" மெனவு நச்சினார்க்கினியருரைத் துச் செல்லுதலானும் பண்டு கீதைத் தனிமொழிபெயர்ப்புண்மை பெறப்படும்.

அங்ஙனமாகிய பாரதமொழிபெயர்ப்புங் கீதைமொழிபெயர்ப் பும் பிற்றைஞான்றிறந்தன போலும். அதனாற் செந்தமிழ்மொழிக் கெமது மொழிபெயர்ப் பின்றியமையாதாகும்.

மொழிபெயர்ப்பமைதி

மொழிபெயர்ப்பென்பது வேற்றுமொழிப் பொழிப்புரை யெனப் படும். ஒருபாட்டுக் குரையுரைப்பார் தாந்தாம் பொருள்விளங்கிக் கொண்டவாறே பிறர்க்கு விளக்கப்புக்குப் பிறர் விளங்கிக்கொள்ளு மாற்றான் வாய்பாடுவேறுபடுத்துஞ் சொற்பெய்துஞ் சொற்றொடர் பெய்து முரைத்துச் செல்லுதலே ஒல்லு மரபாகும். அதனாற் பாட் டொன்றுக்குப் பலருரையாளராதலுங் காண்டும். அவ்வுரைகளுள் ஒன்றனை ஓரொருசாரார் பாட்டொடு பொருந்திற்றெனவு மூரா ணிற்றெனவுந் தத்த முணர்விருந்தவாற்றுக்கியையத் தழீஇயுந் தழா தும் போப. உரையுள்ளு மொழிபெயர்ப்பென்பதோ வேறுபடுமொழி மரபும் பிழையாதாகல்வேண்டும். அவற்றுள்ளுங்கட்டுரைநடைமொழி பெயர்ப்பாகாது பாட்டுநடைமொழி பெயர்ப்பாயிற் பாட்டியன்மரபு வேறுபாடும் வழாமைப் போற்றல்வேண்டும். இந்நூற்கு முதனூலும் உரைச்செய்யுளன்று, பாட்டுச்செய்யுள். பாட்டெல்லாம் வழக்காறு போலப் பட்டாங்குக் கிளத்தலெனப்படா, புலவர் தத்தங் கருத்தினைப் பொதிந்து வைத்துப் பாதுகாத்தற்பொருட்டுப் புனைந்து செய்த சொற் பேழையே செய்யுளெனப்படுவன. அதனாற் பாட்டெல்லாவற் றுள்ளு மவ்வவாசிரியன்மார் கருதியவாற்றினைக் காண்டலே வேண் டற்பாலதாகும். எனவே பாட்டோடுரையும் முதனூலொடு வழி நூலுங் கருத்தொன்றுபடுதலே யாராயற்பாற்றாம். அஃதாராய்வுழிச் சொல்லொடு சொல் நேர்நேரொன்றியும் பிறழ்ந்தொன்றியு மளவு படினும் படும். தொக்கசொல் விரிக்கப்பட்டு மிகைபடினும்படும். உள்ளசொற்றொகுக்கப்பட்டுக் குறைபடினும்படும். விரியுந் தொகையு மன்றி எனப்படும், என்மனார்புலவர் என்றாற்போல்வனவும் விளிப் பெயர் முதலியவு மெடுத்தோதினு மோதாதொழியினு மொக்கு மிடனு முள வாதலின் அன்ன வொவ்வாமையு மமையும். விழைவ வெகுளி நீத்தான் நிலைபெற்ற வுணர்வுடையனென்பதனை விழைவு வெகுளி நீத்தான துணர்வு நிலைபெற்றவுணர்வா மென வுரைப்பினும் மொழிபெயர்ப்பு வேறுபட்டதெனல் கூடாது. இன்னோரன்னவாற்றா னெல்லா முதனூற்கருத் திழுக்குறுதலில்லை. இக்கூறிய வெல்லாங்

கிடைப்பிடித்து நோக்குவார்க்கு இந்நூல் இதன் முதனூலி னோர் மொழிபெயர்ப்பென்பது கொள்ளப்படும். முதனூற்கட் பலதலை யாயதுபோலுங்கருத்து வழிநூற்க ணொருதலைப்படுதலுங் கூடும். அவை முதனூலொடு மாறுகோளெனக் கோடல் பொருந்தாது. அன்னவிடங்களின் அங்ஙன மல்லது மொழிபெயர்த்த லொல்லாதாகும். மொழிபெயர்ப்புப் பிழைத்தலுளதாமெனக் கோடுமென்பார்க் கொன்று கூறுதும். அற்றேலஃதாக. மெய்யுணர்வுவிழைவார் இதனை யாம் ஒருவாற்ருற் கண்ட நூலெனவே கொண்டாயினு மிதன்கட் பொருள்கண்டு நினைந்து தெளிதலேயாமிந்நூல்செய்த கருத்தாகும்; உமிக்குத்திக் கைவருந்தல் வேண்டா வென்பது.

இந்நூற்பாட்டுக்களை யிதன் முதனூற்பாட்டுத்தொறு மொப்பு நோக்குதற் கெளிதாக விந்நூற்பாட்டிறுதிதொறு முதனூற்பாட் டெண் குறிக்கப்பட்டுள. முதனூற் பாட்டெழுநூற்ருென்று. ஆண் டொருபொரு ளுதலிவரு மிரண்டு முதலிய பலபாட்டுக்க ளாங்காங் குள. அவை யொரோவொரு பாட்டாக்குமாறு தமிழிற்போல வட மொழியிற் செய்யுட்டுறை சிறந்திலது. கீதையிற் சிறுபான்மை யொழியப் பெரும்பான்மை ஒருவண்ணப்பாட்டுக்களே வருவன வாம். அவற்றைப் பாடுவார் இவ்விரண் டடிதொறு மிசைநிறுத்தா தொழியின் ஒவ்வோரடியு மொவ்வொரு பாட்டென்றேனும் நூன் முழுது மொருபாட்டென்றேனுங் கொள்ளப்படும். அதனுல் அங்கு ஒருபொருளுதலிவரும் பலபாட்டுக்களோ டொருபாட்டிடைப் பாடுவார்தாமே அடியிரட்டையாக்கி வேற்றுமை தெரிந்து கோட லல்லது இசைத்தூக்குப் பற்றித் தெரிந்துகோட லியலாது. அவ் விடர்ப்பாடு கடவுண்மொழியாகிய நஞ்செந்தமிழ்மொழிக் கின்ருக லான் அன்ன பல பாட்டுக்க ளிங்கொரோவொருபாட்டாக்கப்பட் டுள்ளன. அவற்றை அங்குப்போல விங்கும்பல பாட்டாக்கிற் செவிக் கின்னுவாகும். இம்முறையால் இந்நூற்பாட்டு அறுநூற்று நான்காகும்.

யாங் கீதையையே சான்று கொண்டதன்றி அதற்கு வட மொழிக்கண்வரைந்த மூவர்முதலியோ ருரைகளைச் சான்று கொண் டிலமாகலின் எமது கோட்பாடே பற்றி நம்பியகவர்க்கு யாமே குறிப் புரைபுங்கண்டாம். இவ்வுரை பிறர் கீதைக்குக் கண்ட வுரைகளோ டியையினுமியைக. இயையாதொழியினுமமைக. நம்பியகவற்குக் கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகலங்கூறுவா னவாயினுமாயினு மிதன்முன் வேறிரு நூலுமுரையு மெழுதி யெய்ப் புற்றதன்மேலுந் துணை போதாமையானும் பதிப்புவெளியீட்டுப் பொருட்செலவு மிகு மென்னு மச்சத்தானும் பிறவாற்ருனுங் குறிப் புரை யல்லது செய்ய முடியாமையாயிற்று.

எத்தகைய நூலாயினுஞ் செய்வார்செய்யு நூலெல்லா மெதிர் கொண்டு போற்றுதலே நாட்டுயர்வுக்கு நன்கு சிறந்த மொழி வளம் படுக்குமுறை யென்பதனை முந்தைச்சான்ருேர் நினைவுகூர்ந்து போற்றிவந்தனர். அவர்வழிவரு மறிஞர் யாவரு மின்னோரன்ன நூலைக் கொள்கைபற்றியேனுஞ் சொன்னடைபற்றியேனும் புறக் கணியாது புரந்தருவரென்னுந் துணிவுகொண்டேமுக்கு அறியாமையு மழுக்காறுங் கன்றிய பிறரைப் பொருளாகக் கோட லெங்ஙனமாவது.

எத்துணைக்காலமாயினு மெவ்விடமாயினும் பிறவுயிர்கள் கொணு டுண்ணினு முண்ணுதொழியினு மாமரம் மாம்பழமல்லது பழா. பலாமரம் பலாப்பழமல்லது பழா. பழாதொழியினு மொழியா.

அங்ஙனமாதல் ஊழினுகும்பொருட்பெற்றி. அதனைக் குறைகூறுவார்
மருளராவர். அதுபோலவே எத்துணைக் காலமாயினு மெவ்விடமாயி
னும் பிறர் கற்பினுங் கல்லாதொழியினும் புலவர்பலருந் தத்தமக்
கியன்ற அறிவாற்றல்கட்கியைந்த பலவாற்ரு னூல்செய்தலன்றிப்
பிறர்வேண்டு மாற்ருனூல்செய்யு மரபிலராவர். தத்தமக் கியன்ற
நூலுரை செய்யாதொழிதலு மிலர். பிறர் புலவர்வழிச் செல்க வென்
னுது புல்வர் பிறர்வழிச்செல்கவென்றல் அறப் வழீஇப் பொருளின்
பங்களின்வழியே சென்று அமைதியிழந்து புலம்பலு று நாட்டுக்கே
கடவதாகும். இத்துணையுங் கூறியது செந்தமிழ்மொழிபயிலுதலையும்
அதற்காக்கஞ்செய்தலையுங் கைவிட்டுப் பிறமொழியேபயிலுதலையு
மதற்காக்கஞ்செய்தலையுமே பெருமைதருவனவென மருண்டுணர்ந்து
பொருளின்பம்பற்றிப் பொதுமக்கட்குத் தலைமைதாங்கி அதற்கேற்பத்
தமக்குத் தெரிந்த தமிழ்நடைநூல்களே வேண்டற்பால. அல்லன
இக்காலத்துக் கேற்புடைய வல்ல வென முக்காலத்துக்கும் பொது
வாகிய புலவர்தமிழ்நடைபற்றிப் பிதற்றுவார் பல ரிக்காலத் துளரா
யினமை நோக்கியென்பது.

எம்வரலாற்றுக் குறிப்பு.

இனி, இந்நாளை வழக்குப்பற்றி இந்நூலுரைகளுடையேமாகிய
யாமே எம்வரலாற்றுக்குறிப்புச் சில கூறிவைக்குதும்.

யாம் பாண்டிநாட்டகத்துத் திருநெல்வேலிக்கூற்றத்து மலையடிக்
குறிச்சியெனவழங்குஞ் சிற்றூரிற் பிறந்தாம். இவ்வூர் பூழியன்குடி
யென்னுமூர்க்கு அணித்தாக வுளது. இப்பெயர் மலசையெனப்
புலவர்வழக்காற்றின்மரீஇ வழங்குதலு முண்டு. யாம் பிறந்தது
கொல்லம்யாண்டு 1078. ஆடித்திங்கள். 25-ம் வைகல் ஞாயிற்றுக்
கிழமை பிற்பகல் (கி. பி. 9–8–1903) 25½ நாழிகை யளவாகுமென்ப.
யாய்பெயர் கோமதியம்மை யென்பது. எந்தை பெயர் சிவனென்பது
எமக்குத் தமக்கைதம்பியரு முளர். எந்தையார் கோயம்புத்தூரைச்
சார்ந்த பொல்லாய்ச்சி யென்னுமூரகத்து வதிந்துகொண்டு அதனை
யடுத்த சிற்றூர்தொறுஞ் சென்று நாட்டுமருத்துவத்தொழில் செய்து
கிடைக்கும் ஊதியங்கொண்டு இல்வாழ்க்கை புரந்தருபவராவர். யாய்
துஞ்சியபின் முதற்பள்ளிக்கல்வி முடிதலும் எஞ் சிறியதந்தையார்
மீனாட்சிசுந்தரப்பிள்ளை யென்பவர்பால் அவர்மகனோடு நிகண்டுசூடா
மணி கற்றுவந்தாம். எம்மொடு கற்ற அவர் இப்பொழுது அண்ணா
மலைப்பல்கலைக்கழகத்துத் தமிழாசிரியருளொருவரா யிருக்கின்றார்.
அவர்பெயர் முத்துச்சாமியென்பது. யாண்டளவாக நிகண்டுகற்று
வந்தும் முடியமாட்டாத நிலையில் எந்தையாரொடு பொல்லாய்ச்சி
போய்வதிய அக்காலத்துப் பொல்லாய்ச்சியை யடுத்த ரெட்டியாரூர்
என்னுமூரில் வதிந்திருந்த சேற்றூர்க் கணபதிக்கவிராயர்பாற் கல்வி
கற்குமாறு எந்தையார் செய்திருந்தனர். அவர்பாற் சின்னாள் திருச்
செந்திநிரோட்டகயமக வந்தாதிகற்றுவந்தாம். அவர்பாலிருப்பிற்
புலவராகாது மடைய. (அட்டிற்றொழில் செய்பவர்) ராத லொருதலை
யென்று கண்டு அவர்பாற் சொல்லிக்கொள்ளாமல் எந்தையார்பாற்
பொல்லாய்ச்சி வந்து சேர்ந்தாம். அங்கு முத்துச்சாமிக்கவிராய
ரென வொருவர் குடியிருந்தார். அவர்பாற் சென்று கற்றுவரச்
செய்திருந்தனர் எந்தையார். அவரிடந் திருவரங்கத்தந்தாதி கற்கத்
தொடங்கி மூன்றுநாளின்மேற் கற்பதற்கு யாம் விரும்பவில்லை.
அவர் முதியவரும் நோயாளருமாயிருந்தனர். பின்னர் அப்பொழுது

மதுரைத்தமிழ்ச்சங்கத்திற் கல்வி பயின்றுவந்த சாமிநாதப்புலவரது
துணைமைகொண்டு மதுரைத்தமிழ்ச்சங்கக்கல்லூரியிற் சிலதிங்கள்
கல்விபயின்றுவருத னேர்ந்தது. சாமிநாதப்புலவர் எமக்குப்பெரிய
தாயார்மகனாவர். எந்தையாரது சிற்றூதியம் எங்கல்விக்கு நெடு
நாட் செலவு செய்தற் கியைந்ததன்று. அதனால் அங்குக் கற்க
முடியாதொழியவே நாட்டுக்கோட்டையிற் கோனார்பட்டுக் கற்பக
விநாயகர் கலாசாலையிற் போய்ச் சேர்ந்து செஞ்சோறு பெற்
றுக் கல்விபயின்றுவந்தாம். அக்காலை அங்குத் தலைமையாசிரி
யரா யிருந்தவர் மோகனூர் திரு. வேங்கடாசலம்பிள்ளையவர்
களாவர். அவர் இப்பொழுது தஞ்சைக்கரந்தைப்புலவர்கல்லூரித்
தலைமையாசிரியராயிருக்கின்றார். அவர்பாற் சில திங்களே
கற்றாம். அதற்கு அவர் அக்கலாசாலையைவிட்டு நீங்க நேர்ந்ததே
பொருட்டாகும். அந்நாளையில் எம்மொடு கற்ற பாழி யிளந்துறவியர்
சிலருள் திரு. நாராயணசாமியவர்களு மொருவராவர். அவர் கல்வி
யறிவொழுக்கங்களிற் சிறந்தவர். செந்தமிழு மாரியமுந் தெளிந்து
வல்லுநர். இப்பொழுது திருவையாற்றுப் பாழித்தலைவராயிருக்
கின்றாரெனத் தஞ்சையிலே திரு. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்
கூறினார்கள். கோனார்பட்டுநீங்கி மேலைச்செவற்பட்டிச் சன்மார்க்க
சபைக் கல்லூரியிற் சேர்ந்து மூன்றுதிங்கள் கற்க நேர்ந்தது. அக்
காலை அங்குத் தலைமையாசிரியரா யிருந்தவர் திரு. கந்தசாமியாரவர்க
ளாவர். இவர்பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சொற்
பொழிவாளரு ளொருவரா யிருந்து துஞ்சினார். இவ்வளவே யா
மாசிரியர்பாற் கல்விபயின்ற காலமாகும். பின்பு கோயம்புத்தூரைச்
சார்ந்த தாராபுரத்துக் கண்மையி லுள்ள தளவாய்ப்பட்டினத்து
வாழ்ந்த பெருஞ்செல்வருஞ் சிறந்தநற்பண்புபல வமையப்பெற்றவருந்
தமிழ்மொழிக்கல்வியார்வலரும் புலவர்தோழருமாகிய, திரு. அழகர்
சாமி ரெட்டியாராலும் அவர் யாக்கைநீத்தபின்னர் அவரருமைச்
செல்வப்புதல்வர் திருமலைக்கோவிந்தசாமிரெட்டியாராலும் தம்மொடு
வேற்றுமையின்றி அன்புபிழையாது ஊணுடை யுறையுள் புத்தக
முதலியன நல்கப்பெற்று அவர்கள் வீட்டிலே ஆறாண்டின்மேலு
மினிது வதிந்து எம்மளவிலே நல்குரவின்விடுபட்டுத் தமிழாராய்ந்து
கொண்டிருந்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தேர்வுக்குச் சென்று ஒருவாறு
பாலபண்டிதர் வகுப்பிலே முதலாகத்தேறினம். பின்னர்ப் பண்
டிதர் வகுப்புத் தேர்வுக்குச் சென்று தேறாதொழிந்தாம். இரண்டா
முறையு மங்ஙனமே. இங்ஙனம் பலகாலுந் தவறுபடுதற்கு வாயில்
எமக்கு மெய்ப்பொருளாராய்ச்சிக்கண்ணும் அதனை யெய்தும் வழி
யியலுதற்கண்ணு மினிது செல்லு முள்ளம் ஏனையவற்றுக்கண்
வலிந்து செலுத்தவேண்டி நிற்றலேயாம். அதனால் ஏனைநூற்பொருள்
எம்முள்ளத்துப்பதிதலு மரிதாயிருந்தது. சிறிதாவது பொருளீட்டற்
பொருட்டே பிறநூல் கற்க வேண்டியதாயிற்று அக் காலத்திலே
சிறிது வடமொழிப் பயிற்சியும் வடமொழியிலே கீதை யோதுதலு
முடையம். பின்பு திருமலைக் கோவிந்தசாமிரெட்டியார்பால் விடை
பெற்றுக்கொண்டு எங்கானுங் கற்பித்தற் றொழில்செய் தூதியமெய்
துதற்பொருட்டு நாடி நெற்குப்பை வந்து கருப்பஞ்செட்டியாரைக்
கண்ணுற நேர்ந்தது. அவர் யாம் மதுரைத்தேர்வுக்குச் சென்றி
ருந்தபொழுது தம் மகனது தேர்வுக்கு உடன் வந்திருந்தமையால்
அறிமுகமாயினர். திரு. கருப்பஞ்செட்டியார் தம் மகன் இராமநாத
னென்பவற்குக் கொழும்பிற் றம்மோ டிருந்து கல்விகற்பிக்குமாறு
கேட்டுக்கொள்ள வறுமையை அஞ்சி அதற்குடன்பட்டு அவரொடு
கொழும்பு சென்று கற்பித்துக் கொடுத்துப் பெற்ற சிற்றூதியங்

கொண்டு சுற்றத்துக்கு மெமக்குஞ் செலவு செய்து வந்தாம். அங்குக் கற்பித்துக்கொண்டிருந்தகாலையில் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் வகுப்புத் தேர்வுக்கு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கட்டிடஞ்சென்று வித்தியாசாலைத் தலைவர் திரு. கைலாசபிள்ளையவர்களது மேற்பார்வையில் நடந்த தேர்தலிலே ஒருவாறு தேறிவிட்டாம். கொழும்பில் வதிந்த காலையில் நாட்டுக்கோட்டை வணிக நண்பர் பலருளராயினர். அவர்கள் பொருளுதவி செய்யாவிட்டாலும் அவர்கள் செய்த வேறு பலவுதவிகள் எமக்கு வேண்டியனவாயிருந்தன. புலவூண்டுறந்த, வலம்புரி, வயி. வ. இலக்குமணச்செட்டியார், வடுகநாதச்செட்டியாரென்றிவர்கள் பல்யாண்டு நல்லூணளித்து அன்புவைத்திருந்தார்கள். யாம் வேண்டு முதவி செய்ய வெண்ணி யிருந்தவர் நற்சான்றுபட்டி, திரு. பெ. ராம. சிதம்பரஞ் செட்டியாரவர்களாவர். யாங் கொழும்பு சென்ற முதன்முவ்யாண்டின் பின் தளவாய்பட்டினத்திலே தந் தந்தையார்போலவே எம்மைப்பல்யாண்டு புரந்துவந்த திருமலைக்கோவிந்தசாமிரெட்டியார் மகப்பே றெய்தா முற் றங் கட்டிளங்காளைச்செவ்வியிலே காற்க ணுற்ற நோய் முற்றி அந்தோ தந்தைசென்ற திருநாடு தாமுஞ் சென்றனர். அவரொடு தந் தந்தை வழிமரபுமுடிந்தது. அவர்கள் எமக்குச் செய்த நன்றிக்கு யாம் வாழ்த்துரைதானும் வழங்க முடியாமற் போயிற்று. அவர்களது நன்றி கிடைத்திராவிடின் எமக் கித்துணைக் கல்வியறிவும் இதன்வழி வரு முயிர்வாழ்க்கையு மெய்துத லியலாவாகும். எல்லாந் திருவருட் செயல்.

கொழும்பில் ஆறுண்டுவரையும் இராமநாதற்குக் கற்பித்த பின்பு மீண்டு இந்தியா வந்து கைப்பொருளுங் கற்பித்தற் றொழிலுங் கிடையாது திரிந்துகொண்டிருந்துவிட்டுத் தொழில் கிடைக்கக் கூடுமென வெண்ணி திரு. பெ. ராம. சிதம்பரஞ்செட்டியாரது உதவியால் மீண்டுங் கொழும்புநோக்கிச் சென்றும். அன்னாரொடு அளவளாவியிருந்தொரு திங்கள் கழிந்தபிற் கொழும்பு விவேகானந்தசபைச் சார்பிற் சமயபாட வகுப்பாசிரியரா யூதியம் பெறலாயினும்? அது முதற் பன்னீர்யாண்டுக்கு மேல்வரையுந் தனித்தனியுந் தொகுதி தொகுதியுமாகிய வேத்தியல்வினைஞருங் கல்லூரி மாணவ மாணவியருமாகிய யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் பலர்க்குத் தமிழ்கற்பித்துப் பெற்ற வூதியத்திற் சுற்றத்துக்கு மெமக்குஞ் செலவுசெய்ததுபோக எஞ்சியதனைச் சிறிதுசிறிதாகத் தொகுத்து வைப்பாக்கி வந்தாம். இத் துணைக் காலத்திடையே இந்தியாவில் எந்தையாரும் யாக்கைநீத்தனர். யாம் வறுமை எளிமை முதலிய பல்லாற்றானும் இல்வாழ்க்கை கோடற்குத் தகுதியிலமாதலறிதலிற் கொண்டிலம்.

இங்குக் கூறியவை யொழிந்த வரலாறெல்லாம் விரிவுந் துன்பமு மிளிவரலு மாதலின் அவையிற்றை யெடுத்துக் கூறிற்றிலம். எமக்கு யாண்டுபல வாதலானும் இருபத்துநான்காம் யாண்டுமுதன் முயன்று வருதலானும் நிலையாமை நினைவு கூர்தலானும் உடம்பு தளர்ந் தோய்வு விரும்புதலானும் யாக்கை வீயு முன் என்னவானும் நூலுரைகள் வரைதல்வேண்டு மென்னு மவாவினானும் வருவாய்த் தொழிலை முடித்துக்கொண்டு அமைதிக்கும் உணவுக்கு மியைந்த தாகுமெனக் கருதி நற்சான்றுபட்டி, திரு. பெ. ராம. சிதம்பரஞ் செட்டியார் தொல்கேண்மை வழுவாத் தூயரும் இற்சிறப்புடையருங் கற்றோர்சார்பின்கணன்றி மற்றோர்சார்பின்கண் உள்ளுவகை கொள்ளுத வில்லாரு மாதலின் யாங் கேட்டுக்கொண்டவாறே உவகை

கூர்ந்து தமது குறுவத்தையென்னும் அழகிய தேயிலைத்தோட்டத்து விடுதியில் எமக்கு வேண்டுவவற்றைக் குறையறச் செய்துதவுமாறு தம் பணித்தலைவர்க்குக் கட்டளை தந்திருந்தனர். அங்ஙனம் அன்பர், திரு. சிதம்பரஞ் செட்டியாருடைய உணவும் பாலுந் தேநீரு மிசைந் தின்புற்று வதிந்து பத்துத்திங்களுட் புலவர்காஞ்சி, புணர்ப்பியல், நம்பியகவலென விம்மூந்நூலு மூவுரையும் படைத்தாம். இங்ஙனம் நூலுரையாக்குதற் கியன்ற செவ்வி வாய்த்தற்குத் துணை நின்ற வூழ் வினை நீடுநிற்குங்கொல்லோ வென்னு மையுறவினால் இவையிற்றை விரையச் செய்ய வேண்டிற்றாயிற்று. ஒன்றுஞ் செய்யாதுவறிதே மாய்ந்துபோதலினும் எங்ஙனமானு மிவையிற்றைச் செய்து முடித்தல் சிறந்த தென்பதே யெமது கோட்பாடு.

நூன் மூன்றனுள்ளும் நம்பியகவலை முதற்கட் பதிப்பித்து வெளியீடு செய்வான் இந்தியாப்போந்து புதுக்கோட்டையிலும் அன்பர் திரு. சிதம்பரஞ் செட்டியாருடைய அகனமர்ந்து செய்யாளுறையு மில்லத்துக்கண் முகனமர்ந்து நல்விருந்தளிக்கப்பெற்றுக் களிகூர வமர்ந்தாம். பின்னர்ப் பன்னாள் உடன்வைத்துண்டு மகிழுஞ் செட்டியார் புதுக்கோட்டையைச் சார்ந்த இராமச்சந்திரபுரத்துப் பதிப்பகந்தகுதியுடையதென அங்கு நம்பியகவல்பதிப்பித்தற்கு அப் பதிப்பகப் பணித்தலைவரோ டுரையாடி ஏற்பாடுகளை வரையறுத்துக் கொடுத்துத் துணைநின்றார். இத்துணைகிடையாதாயின் இராமச்சந்திர புரத்து மதராசுரிப்பன்பதிப்பகத் திந்நூற்பதிப்பு வெளிவந்திராது.

இவ் வெளியீட்டுக்கு நேர்ந்த பொருட்செலவு விலையாலாயினும் பரிசாலாயினும் எந்தொழிலாலாயினும் இம்மூன்றானுமாயினும் ஈடு செய்யப்படி னன்றி மற்றைநூல்களையு மிதுபோலப் பதிப்பித்து வெளியிடுதல் பெரிது மரிதாகும்.

ஓம் :
ஓஒ முது மெய்.
ஓஓம். உது. மெய்.
ஓமமைதீ. ஓமமைதீ. ஓமமைதீ.

நம்பியகவல்

முதற்பால்

வில்லி துனித்தயர்தல்

க. அம்ம! கேண்மதி யஞ்சய முனிவ!
செம்மையம் புலமெனுஞ் சீர்சால் குருபுலத்
தடுபோ ரயர்வா னவாயினர் குழீஇக்
கடுமா றென்னினிக் கண்டனர்
கெடுமா ரெமர்தா மைவரொடு கிளர்ந்தே. 1

நம்பி—ஆடவருட் சிறந்தோன். எனவே ஆட்சி, ஆற்றல், புகழ், திரு, புலமை, உவர்ப்பெனவிவ்வறு பெரும் பண்புஞ்சான்ற காதலஞ் செல்வனாகும். ஏனோர்பாலேற்றிழிவாயமையு மிவையாறுந் தனித்தனி முற்றுப்பெற வுடையோன் முதற்கடவுள். பாண்டியனறிவுடை நம்பி, பெருநம்பி யென்றாற்போல விதந்தோதியவழி நம்பியென்னும் பெயர் அவ்வவாடவர் பன்மையுட் சிறந்தோர் பலர்க்குந் தனித்தனிச் செல்லுமேனும் விதவாது வாளாகூறியவழி ஏனைத்தகை யாடவ ரெல்லாருள்ளுஞ் சிறந்து பொதுவினின்று நிலவு முதல்வனொருவற்கே இயற் பெயரெனச் சிறந்ததாகற்பாற்று. ஆகலின் அம் முதல்வனாகிய திருமாலின் பிறப்பாயினானை யீண்டு நம்பி யென்றவாறுமெனக் கொள்க. அவனாவான்: தொழுநை யாற்றங் கரை மதுரையிற்காரி. இந் நம்பி தமையன் வெள்ளை யென்பானை, நம்பி மூத்தானென வழங்குப வாகலின், அஞ்ஞான்றிவனம்பியென வழங்கப்பட்டானென்பது பெறப்படும். நம்பிக்குச் சிறந்த பண்பாறனுள்ளும் ஆட்சியென்பது எல்லா வுயி ருயிரல்ல வற்றையுந் தன்குறிப் பளவிற் றடையின்றித் தொழிற்படுத்துந் தலைமை. ஆற்றலென்பது தானெல்லாச்செயலு மினிதுசெய வல்லுதல். புகழென்பது பொருள்சேர் புகழ். திருவென்பது தன்னுளப்பாடு முயற்சிகளிலவாகவு மேனைய வெல்லாந் தன்னை யின்றியமையாது தன் பொருட்டே யுளவாய்த் தனக்கவைதாமே யெய்தப் பெறுந் தன்மை நோக்கம். புலமை யென்பது இயற்கையினாகு முற்றுணர் வினாதல். உவர்ப்பென்பது ஒருதனிப்பேருயிரென்னுந் தன்னையேதான் வேண்டுதலன்றி யாதும் வேண்டுதல் வேண்டாமையின்றி யொழிதல். இவ்வாறனையு மெண்பெரும் பண்பாக்கி யோதுதலு மரபு.

இனி, அகவலென்பது இரட்டுற மொழிதலாற் பாடலெனவும், ஆசிரியப்பா வெனவு மிருபொருளு முடன்றந்து நின்றது; 'முப்பா' வின் கட் "பெரியாரைப் பிழையாமை" யெனவந்த பெயர் போல. இதன் முந்து நூற்பெயர்ப்பொருள் பாடலென்பதே; சொல்லுஞ் சொலவு என்பாருமுளர்.

> " அகவன் மகளே யகவன் மகளே
> மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்த
> லகவன் மகளே பாடுக பாட்டே" (குறுந்தொகை. 23.)

எனப் பாடுதலுடைய மகளை அகவன் மகளெனவும்.

> " கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்து
> மகவலன் பெறுக மாவே" (பதிற்றுப்பத்து 43.)

எனப் பாடுதலுடைய பாண்மகனை 'அகவல' னெனவும் வழங்கிய வாற்றானே இச்சொற்கிப் பொருளுண்மை துணியப்படும். ஈண்டகவ லென்பதகவப்படும் பாட்டினை யுணர நின்றது; தொழிலினாகு பெயர்; பாடல், வற்ற லென்பனபோல. இனி, நம்பியின தகவலென வாறன் றொகையாக்காது, நம்பியகவுதலென எழுவாய்த் தொடராக்கி, அகவ லென்பதனை ஆகுபெயரென்னாது இயற் பெயரெனினுமிழுக்காது. இத் தொடர்ச்சொற்றானுமொருசொன்னீரதாகி யெழுவாயாய் நின்றிந்நூன்முழுதுக்கும் பெயராயிற்று. இன்னோரன்ன பெயர் வேற்றுமையை முடிக்கும் பொருணிலைக் கிளவியாவது: ஈற்றுக்கண் என்பது எனமுடியுந் தனித்தனி நூன்முழுதுமாகிய செய்யுட் கூட்ட முஞ் செய்யுளுமாமெனக் கொள்க. இப்பெற்றி மறந்த வுரையாளர் பலர், அன்மொழித் தொகை யென்பாரும், ஆகுபெயரென்பாருமா யிடர்ப்பட்டுரை கூறிப் பெயர்ச் சொல்லியல்வாளா போவர்.

பால்: ஈண்டு முறையே தம்முளொன்றனோடொன்று தொடர் புடையவாய் வருநூற் பகுப்பு.

வில்லி—விற்றொழில் வல்லான்: ஈண்டுப் பாண்டவர் ஐவருள்ளு மூன்றாவன்.

துனித்து அயர்தல்: அன்பு முதிர்ந்த வருண்மிகுதியாற் கவன்று சோர்ந்து வாழ்க்கை வெறுப்புற்றுச் செயலிழத்தல். துனித்தல்: உலகியல் வாழ்க்கையி னொரோவழிவரு நிலையிலா வெறுப்புறுதல். ஈண்டு வில்லிக்குற்றது துனியாதல் தன் வினைக்கண் வெறுப்புற்ற வன்றெருட்டத் தெருண்டுவினைவெறுப்புவிட்டவாற்றா னுணரப் படும்.

நம்பியகவலென்னுந் தொடர் பெயராமாறு நுவன்றது கொண்டு வில்லிதுனித்தயர்த லென்றாற் போலவருங் கிளைப்பெயரா மாறுமுய்த்துணர்ந்து கொள்க.

பெரும்பான்மையுஞ் சிறப்பும்பற்றி நம்பியகவலெனப் பெயரிய விந்நூலுளிம் முதற்பாலாவது போர்த்தொடக்கத்து, வில்லி, காரிநம்பி யுய்க்குந் தேர்மேற் சென்று போர்முனை நடுவணின்று தன் சுற்றமெல்

லாம் பொருதுயிரிழப்பத் துணிந்து வந்துற்றமை யெண்ணி நோக்கிப் பேரருளிற் கவரப்பட்டவனுகிக் கவற்சிமிக்குப் போர்மறுத்துச் செய விழந்து சோர்தலாதலின் வில்லி துனித்தயர்த லென்னும் பெயர்த்தா யிற்று.

முதனூலாசிரியன் முதற்கண் வில்லி யயர்வினை விரித்தெடுத் தோதியது வில்லிதான் றன்பகைஞரையெல்லா மெஞ்சாது பொருது தொலைக்கவல்ல வீற்றுண்மையுடைய னென்பதூஉம் அவன் வீடு பேற்றுக்கின்றியமையாவாகி யிந்நூனுதலும் பொருளாகிய புணர்ப்பு முணர்வு மெய்து வித்தற்குத் தகுஞ் செவ்வியுடைய னென்பதூஉம் புலவர் வினைஞரென்னு மிருசார் நன்மக்களுள்ளும் வினைஞராவார்க் குச் செவ்வி நிகழுமாறின்ன தென்பதூஉம் செவ்வி யெய்தப் பெற் றூர்க்கன்றி யிந்நா னுதலும் பொருளெய்தப்படா வென்பதூஉங் குறிப்பித்தற் பொருட்டாமென வுணர்ந்து கொள்க.

வீயாது மன்னும் வீடுபெற்றின்பத் துணையாகிய புணர்ப்பு முணர்வு மெய்தத்தகுஞ் செவ்வியாவது: அவை யொருதலையாக நிகழ்ந்து நிரம்புதற்குவேண்டுவன வெல்லாவற்றொடுங்கூடி நிற்றலாம். அஃதாவது: அருளற முதிர்ச்சிக்கட்டோன்றற்பால நிலையாமை யுணர்வும், இருவினை யொப்பும், மயக்கந் தேய்தலும், பற்று நீத்தலும், வீடுபேற்று வேட்கையும், மெய்யாசிரியற் றலைப்பாடு மெனவிவை முறையே நிகழ்ந்து நிற்றலாம்.

அருளறம் முதலாக வீண்டெடுத்துரைத்த வேழும் வில்லியின் பால் விரைய நிகழ்ந்து நிற்றலுய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

இச்செவ்வி நடைதா றாற்கூறுபடும்; தூங்கல், [illegible]ங்கல், கடுகல், முடுகலென. முறையானிகழுமிந்நான்கனுள்ளுந் துறவியர்க் குரிய பின்னிரண்டுமாகிய மூன்றுவதும் நான்காவதும் ஈண்டு வில்லியின்பாற் காணப்படுவ. இதனல் வில்லிதான், றனக்கு நம்பிகாரி தெருளுரையானுந் திருவருளானுந் தெருட்டத் தெருண்டு விரைய விருசார்ப்புணர்ப்பு மிருசாருணர்வுமெய்தி யுடல்வாழ்வீடு பேற் றொரு பேரின்பமாகி யுய்ந்தமை யுய்த்துணர்ந்து கொள்க. இரு சார்ப்புணர்ப்பாவன: புலவர்க்குரிய புலவயிற் புணர்ப்பும், வினைவர்க் குரிய வினைவயிற் புணர்ப்புமெனவிவை. இருசாருணர்வாவன: நூலுணர்வு, நுகர்வுணர்வென முறையே கூறப்படுஞ் சார்புணர்வு, மீயுணர்வெனவிவை. மட்கலத்துக்கு மண் முதலியன போல, வீயாது மன்னும் வீடுபேறென்னு மாக்கத்துக்கு வேண்டப்படும் பொருட்டு மூன்றனுள்ளும் மெய்யுணர்வே ஆமுதலெனவும் புணர்ப்பே துணைமுத லெனவுங் கடவுளே வினைமுத லெனவுங் கொள்க. மெய்யுணர்வு கிளர்ந்து வீட்டின்பமாயமைதற்குற்ற தடை நீக்குமுகத்தானே அதற்குப் புணர்ப்புத் துணை முதலெனப் படும். புணர்ப்பாவது வினையாதும் நிகழ்த்த நிகழ்தலன்றித் தானே நிகழாவா றடக்குதலாம். எனவே, வினைசெய்யாமை யென்பதாம். இதுவே வினைகட்கெல்லா மீற்றிற் செய்யப்படும் வினை. இதன்

மேலுள்ள துணர்வென்பதேயாம். உணர்வாவது: வினையில்லாமை. வினை செய்யாமையாகிய வினை, தனியுயிரொழிந்த வுள்ளமுடம்பு முதலியவற்றுக் கண்ணது. வினைசெய்யாமைவழித்தோன்றும் வினையில்லாமை தனியுயிரின் கண்ணது. வினையில்லாமையே வினைத் தூய்மை யெனவும், மெய்யுணர்வெனவும், வீடு பேறெனவுங்கொள் ளப்படும். வினை செய்யாமை யற்றன்று; ஆடைக் குவர்மண் முதலியபோல உயிர்க்கு வினைத் தூய்மையாக்குவதோரழுக்கெனப் படும். இங்ஙனம் வினை செய்யாமையோடு வினையில்லாமை யிடை வேற்றுமை கண்டு கொள்க. இத்தகைய புணர்ப்புணர்வுகட்கின்றி யமையாத தெனப்பட்ட செவ்வியாக்கம் நான்கனுள்ளும் தூங்கிய செலவாவது: செவ்வியொரோவழிச் சிறுச் சிறிதாகத் தோன்றித் தோன்றி மறைதலாம். ஓங்கிய செலவாவது: அடுத்தடுத்திடை யீடுபட்டுச் செவ்வி தோன்றி மறைதலாம். கடுகிய செலவாவது: செவ்வியிடையீடின்றி நிகழா நிற்றலாம். முடுகிய செலவாவது: வீடுபேறுற்றன்றி யுயிர் வாழ்தலாற்றாமையாம். அவ்வச்செவ்வி யளவுக்கியையவே புணர்ப்புணர்வுகள் பற்று மளவுந் தூங்குதலு மோங்குதலுங் கடுகுதலு முடுகுதலுமாமாறோர்ந்துணர்க.

ஈண்டுத் துறவுச்செவ்விதலைப்பட்ட வில்லிதான் மெய் யாசிரியனைத் தலைப்படுதலாவது: தன் மான்றேர் வலவனுந் தந்நல் லம்மான் சேயுந்தன்னாருயிர்த்தோழனுந் தமக்குற்றுழியுதவுங் களைகணுமாகிய காரி நம்பியைத் தம்மையாட்கொண்டுய்வித்தருள விழிந்தருளிய முதுமுதல்வனெனத் தெருண்டுணர்தலாம்.

புணர்ப்புணர்வுகள் புகுசெவ்வி யுறுதற்கண்ணே திருவருள் வீழ்[illegible] வினைக்கழுவாய் செயப்பெறுதலென விருபெற்றி கூறுவாரு முளர்; அவையிரண்டு மெய்யாசிரியனைத் தலைப்படுதலின் வேறன் மையுய்த்துணர்ந்துகொள்க.

இனி, வில்லி துனித்தயர்தற் புணர்ப்பென்றாற்போல, விச் செய்யுளின் பதினெண்பாற் பெயரீறுதொறும் புணர்ப்பெனப் பொருள்படுமாரியச்சொற்பெய்திதன் வடமொழி முதனூற்கண் வழங்கப்படும். அவ் வழக்கிம் முதற் கிளைப்பெயர்க்கு மாங்காங்குச் சில கிளைப்பெயர்க்கு மத்துணையியைபின்மையினண்டஃதவ் வாசிரியன் வழக்கன்று போலுமென்பது.

இம் முதற் கிளையுளித்தலைச்செய்யுள்: நூற்றுவர் தந்தை ததராட்டனென்பான்றன் தேர்வலவன் முனிவன் அஞ்சயனென் பானை விளித்துக் கூறும் வினவுரை. இவ் வஞ்சயன்றான் முனிவன் வாதராயண னென்பாற்கு மாணவன். ததராட்டன் குருடாத லினிவற்குச் செருக்களனிகழ்ச்சியாவும் உழையிருந்தெடுத் துரைக்கு மாறு வாதராயணன், அஞ்சயனைப் பணித்திருந்தான். செருக்களக் காட்சியுஞ் சொல்லாட்டுமெல்லா மிருந்துழியிருந்தே கண்கூடாக நேரினுணரவல்லதோராற்றலை யஞ்சயற்கு வாதராயணன்றன் புணர்ப்பாற்றலாற்றந்தருளினன். அங்ஙனந் ததராட்டன் கேள்வியு

மஞ்சயன், றன்கூற்றுங் கொண்டுகூற்றுமாகத், தான் பாடிய வடமொழி மாபாரதத்துள் இதன் முதனூற் பகுதி புனைந்துரைத்தான், அப்பாரதம் பாடிய வாதராயண முனிவன். பாரதம் பாடிய வாதராயணன் பாரதர் நாளை வாதராயணனது மரபு வழி மருமானுதலின் அப் பெயர் பெற்றான். இவன் முன்னோனாகிய வாதராயணனது நாளையிற் கையெழுத்து வழக்குக் கண்டிலாமையான் யாவரானு முற்றுமெஞ் சாது நினைவிற்கொண்டு கூறலாகாத பெரும்பனுவல்யாத்தலுந் தொகுத்தலுமியையாமையிற் பாரத புராண பிரம் சூத்திரங்கண் மூன்றனையுஞ் செய்தியாத்தோன் பின்னோனாகிய வாதராயணனே யாகல் வேண்டும். இவ் வடவாரிய முனிவன் புத்தமென்னுங் கொள்கை கண்ட கௌதம சாக்கிய புத்தனது நாளையிலேனு மதனை யடுத்த பிற்றை நாளையிலேனும் வாழ்ந்தவன் போலும். இவன் சாங்கியம் புத்த முதலிய கொள்கைகளைத் தழுவியு மறுத்துஞ் செல்லு மாற்றானே, மேற்கண்ட கொள்கைக் கிடனுளதாகின்றது. இச் சூத்திர வாதராயணன்றனதுநாளையாரிய மன்னர் சிலர் நாடாளுந் தங் கடமை கைவிட்டுத் துறவு பூண்டனரா யாரியப் பார்ப்பனருடைய தலைமைக்கும் வாழ்க்கைக்கு மிடையூறுக வொழுகி யியற்கையொடி சையாக் கொள்கைகளைப் புனைந்து, நாடுதொறும் பரவச் செய்து, பொதுமக்களுணர்வை முறையானன்றி வலிந்து வேறு படுத்தலானும், ஆரியப் பார்ப்பனருள்ளு மீமாஞ்சகர் முதலிய தாந்தோன்றிக் குழுவினர் பலர் போலிக் கொள்கைகளைக் கட்டிப் பரப்பி நாட்டைக் குறும்பு செய்து குலைத்தலானு, மிங்ஙனம் பார்ப்பனரு மன்னரு மாகிய விவ்விருசார்த் தலைவருடைய பிறப்புப் பற்றிய போலிச் செருக்கினையும் போலிக் கொள்கையினையு மெடுத்துக் காட்டி விளக்கி யெல்லார்க்கு முணர்வு கொளுவி, அவரவர் தத்தமியல்பி னின்று முறையா னுயர்ந்தினி துய்தி யெய்துதற்பொருட்டுப் பாரத முதலாயின பாடியருளினான். பாரத புராணங்கள் ஆரியரிடைக் கேள்வி மரபான் வருங் கதைகளும் வரலாறுகளு மாக்கியோன் கட்டிய புனைந்துரைகளு மென்றிவை கூறு முகத்தானே யறம் பொரு ளின்ப வீடு பேறுக ளென்னுங் கல்விப் பொருணன்கனையும் விளக் கிச்செல்வ. அவை பிற்றை ஞான்றை யாரியப் பார்ப்பனராற்றத் தமக்கு வேண்டு மாற்றான் மாற்றியுங் குறைத்துங் கூட்டியும் வேறு படுத்து வழங்கப்படுமாயினு மவையிற்றை யெல்லா மந்நூலாசிரியன் கூற்றெனவே வழங்கிக்கொள்ப. அதனு லவையிற்றின் கூற்றெல் லாஞ் சான்றாகுந் தகுதியவல்ல. அவற்றுட் பதரான கூற்றுக்களை யெல்லாந் தூற்றி யொழித்துள்ளீடுடையவே போற்றிக் கொள்ளத் தகும். வேத மென்னுந் தொகைநிலைச் செய்யுளின் முற்கூற்றினைப் பாரதர் நாளை வாதராயணனும் பிற்கூற்றினைப் பாரதம் பாடிய வாதராயணனும் தொகுத்திருத்தல் வேண்டுமென யாமுள்ளுதும். முற்கூற்றினை யாராய்ந்த மீமாஞ்சக நூலாசிரியன், பிற்கூற்றினை யாராய்ந்த வேதாந்த நூலாசிரியற்கு முற்பட்டோ னென்பது பெறப் படுதலின், அம் முற்கூற்றினைத் தொகுத்த வாதராயணன் மீமாஞ்சக

நூலாசிரியற்கு முந்துற்றவனுதல் வேண்டும். எனவே பிதனுனும் வாதராயண ரிருவருள ரென்பது துணியப்படும். வாதராயணரிரு வரும் வேதந் தொகுத்து வழிப்படுத்தோ ரென்பதுபற்றி வேத வியாதரென வழங்கத் தகுவர். இங்ஙனம் வழங்கும் பெயரொற் றுமையானும், புலமை முதலிய சிறப்பொற்றுமையானும், மரபொற் றுமையானுந் தம் பொய் புனையும் வழக்கத்தானும் வாதராயண னொருவனே யுளனென மன்றுடுவர் வடமர் பார்ப்பனர். புனைச் செய்தி நிகழ்வதன் முன்பே அது புனைந்த செய்யு ளுண்டாயிற்றென வும் காக்கையி னிரு கண்ணிற் கொரு விழி, அணில் வெரிந் மூவரி, வாழை யிலை நண் பெரு நரம்பென்றின்னோரன்ன வியற்கைப் படைப்புக் கெல்லாங் கதை புனைந்து, கதைக்கிவை சான்றெனவும் வேதத்தின்க ணில்லாத பகுதி யெல்லா மிருந்தன வென்பதற்கு வழி யளவை யிது வெனவு மதனு லுலகு வழங்கு மெல்லா மொழியினு முள்ள வெல்லா நூல்களும் வழக்குக்களும் வடமொழி வேதத்தின் வழிவருவனவே யெனவும், பிற நூல் வழக்குக்க ளெல்லா முந்து றவே தந் நூலின்கண் எடுத்தோதப்பட்டனவே யென்று கூறி, அவ்வந் நூல் செய்து யாமு மிதுகாறு மறியாத பழைய நூலிவை யென மெய்ப்பித்தும், இங்ஙனம் பிறர் நல மிகழ்ந்து தந்நலமே பேணி யெத்துணையோ பொய்ச் சான்று படைத்து மன்றுடும் போலி கட்குமாறுகப் பிறர் சிலர் யாது கூறினும் பொய்ப் புலன் மண்டும் பொதுமக்கள் கொள்ளா ரென்னுந் துணி வெஞ்ஞான்றுமவர்க்குப் பற்றுக்கோடாக வுள்ளது.

மற்று, வாதாராயணனைத் துவைபாயனனெனவுங் கார்த்துவை பாயனனெனவும் வேதவியாதனெனவும் வியாதனெனவும் வழங்குப. இவை யியற் பெயரா மாறு மரபுப் பெயரா மாறு முய்த்துணர்ந்து கொள்க.

ஆரியமொழிச் செய்யுளெழுத்தாளருள்ளுந் தொடர்நிலைச் செய் யுள் வல்லுநருள்ளு முதல்வனுவான் முனிவன் வான்மீகி யென்ப. இரண்டாவன் பாரதம் பாடிய வாதராயணனேயாம். இவனே யாரிய மொழிச் செய்யுள் வழக்கிற்குச் செல்வச் செவிலியெனத் தகும். இத்தகைய பெருமை சான்ற பேராசிரியன்பால் வடமொழிப் புலவர் பலர் மிக்க நன்றியறிவும் வழிபாடு முடையரா யொழுகுவர். இவனது கடவுட் புலமை கண்ட சான்றோரிவனைத் திருமாலின் பிறப் பெனவும் வாழ்த்துப.

இப்பெரியோன் நம்பியகவலை வெளிப்படுத்துதற் பொருட்டே மா பாரதம் பாடினனென்பது பதினெண்பெரும் பாலுடைத்தாக்கிப் பதினெண்ணாளைப் போர் வகுத்துக் கூறுவதன்கட் பதினெண்பா லுடையதாக நம்பியகவல் கூறியவக்குறிப்பாற் றுணியப்படும்.

இதனன் மா பாரதத்திற்கு உள்ளுறை யென்ப தோரணியாய்ச் சிறந்தது நம்பியகவ லென்பதாயிற்று.

பதினெண்ணுளைப் பாரதப் போருள் முதனுளை முனைப்போர்த் தொடக்கத்துத் ததராயனிவ் வினவுரை வினயினன்.

இனி, யிச்செய்யுட் குறிப்புரை வருமாறு :

அம்ம : ஒருவரொருவரைத் தாங்கூறுவது கேட்பித்தற்க ணெதிர் முகப் படுத்தற் பொருட்டு வழங்குமுரை யசையிடைச் சொல்.

மதி: முன்னிலையசை.

அஞ்சயன் : மரபுநிலைதிரியா வடசொற் சிதைவு. இச்சொற்கு நல்வென்றி யுடையோ னென்பது பொருள். வென்றியாவது தெவ்வரைச் செறுத்து மேம்படுதலாதலின் நல்வென்றியாவது: வினைசெறுத்து மேம்படுதலெனக் கொள்ளப்படும்.

செம்மையம் புலமெனவுங் குருபுலமெனவு மீண்டுக் கூறியது பாரதப் போர்க்களத்தினை. செம்மை—அறம். "செம்பொரு"ளென்றூர் செந்நாப்போதாரும். (முப்பால், இனியவைகூறல். க.) அறம் எஞ் ஞான்றுந் திரிபின்றி மன்னுதலிற் செம்மையெனப்படும். செந்தமிழ், செங்கோலென்புழிப் பொருள் படுமாறு கண்டு கொள்க.

அம்முச்சாரியை. அ: அழகுமாம்; அவ்வழி மகரம் புணர் நிலைத் திரிபு.

குருவெனப் பெயரிய பண்டை யாரிய மன்னனொருவன் றன் வேள்வி யீகை நோன்பென்பனவாகிய வறச்செயலாற்றுதற் பொருட்டு உழுதுதூய் தாக்கப்பட்ட நிலமவ்வாற்ருற் செம்மையம் புல மெனவுங் குருபுலமெனவும் பெயராக்கம் பெறுவதாயிற்று. புலம்—விளைநிலம். உழப்படுத லொப்புமை பற்றிப் புலமாகும். இவ்விரு தொடரு முறையே செம்மைக் காக்கிய புலமெனவுங் குருவினது புலமெனவு நான்கன் சொல்லும் பொருளுந் தொக்க தொகையும், ஆறன் றொகையுமாம். இனி, அம்முச்சாரியை யிடையிட்டுப் புணர்ந்தமையிற் செம்மை யென்பது போர்பொரு மள்ளரினுடலுகு சோரியாற் செந்நிற முடையதாகும் புலமென நிறத்தின் மேற் செல்லாதாகும்.

இனி, அறத்திற்கு மறுதலையாயினர் போர்க்களத்துப் பொருது கொல்லப் படுதலின் அறம் விளையச்செய்யும் போர்க்களஞ் செம்மை யம்புல மெனத்தகு மெனக்கொளினு மமையும்.

சீர்-பெரும்புகழ் ; நன்மையுமாம். சால்-அமைந்த; நிறைந்த வென்றுமாம். குருபுலமென வுயர்திணைப்பெயரியல்புபுணர்ச்சி யெய்திற்று.

அடுதல்-வெல்லுதல் ; கொல்லுதலுமாம்.

'அடுபோ' ரெனப் பெயரெச்சம் வினைசெய்யிடப்பெயர் கொண்டது ; மூன்ருவதன் றுணைப்பெயர் கொண்ட தெனினு மாம்.

விளையாட்டயர்த லென்றாற்போலப் போரயர்த லென்றதுபோர் மீளியரானே யுவகைமிக்கு விழைவுற்று மலையப்படுவ தென்பது தோற்றிற்று. அவாயினரென்றதூஉமதுநோக்கி. "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்பது புறம். (31) இதனாற் போரின் கண் விழைவில்லாரொடு பொருதலறமன் றென்பதூஉம் பெறப்படும்.

அயர்வான் : வினையெச்சம். அயர்தல்-களித்து விளையாடுதல்.

அவாயினர் : எச்சமுற்று. அவாவி யென்பதாம்.

குழீஇ-திரண்டு. கடுமாறு-கொடிய பகைமைச்செயல்.

என்-யாவை : எவனென்ப தென்னென மரீஇயிற்று. இனி-இப் பொழுது. கண்டனர்-செய்தனர். "முனைவன் கண்ட" தென்பது தொல்காப்பியன். (பொருட்பால். மரபியல். 94.)

கெடுமார்-கெடுவார்; கெடுவாராகிய எமர். கிளர்ந்து-உள்ள மூக்கிப் புறப்பட்டுப்போய். 'எமர்தா' மெனவிதந்துதழீஇ யெடுத்துக் கூறினன்; ஐவரதுயர்பு தெரித்தற்பொருட்டிழித்தற் குறிப்பின லென்பது. தான் வேதவியாதனாற் பணிக்கப்பட்டுத் தன்புதல்வர்க் கூஉய்ப்போர் விலக்கவுங் கேளாது பொருவான் முனைந்துநின்ற பட் டிமைபற்றித் ததராயனிவ்வாறு தன் புதல்வரைக் கூறினன்.

அஞ்சயமுனிவ! கேள். இனி, யெமர்தாமைவரொடு கிளர்ந்து போரயர்வான் அவாயினராய்க் குழீஇயென்கண்டனரென வினை முடிவு செய்க.

மொழிபெயர்ப்பெல்லாம் அயன்மொழிப் பொழிப்புரை யெனப் படுமாகலானும், பொழிப்புரை யெல்லாம் பாட்டின் பொருளை யினிது விளக்குமளவிற்குச் சொற்பெய்து விரித்தன் மரபாகலானும், அதுபற்றி ஒரு மொழிக்கண்ணேயாயினு மொருபாட்டின் பொழிப் புரை பலவுந்தம்மு ளாங்காங்கு முரணுதல் காண்டுமாகலானும் அம் முரண்பாடின்றிப் பொழிப்புரைத்தன் முற்றாதாகலானும், பாட் டாக மொழிபெயர்க்கு மொழிபெயர்ப்பின்கண் அவ்வமொழிக்குரிய சொன்மரபு, செய்யுண்மரபு, பொருள்கோண் மரபு, வழக்குமரபு முதலியன தழீஇச் செல்லுகவென்பது சான்றோர் பணியாகலானும், இதன் முதனூலுனுங் கட்டுரைச் செய்யுளன்றிப் பாட்டுச் செய்யு ளாகலானும், பாட்டுக்களெல்லாங் கண்கூடாக நிகழும் வழக்கினைப் பட்டாங்குக் கிளத்தலெனப் படாது, புலவர்தாம் பெற்ற வுறுதிப் பொருளைக், கேட்குஞ் செவ்வியாள ருள்ளத்தழியாது நின்று நிலவிப் பயத்தற்பொருட்டுப் பொதிந்து வைத்துக் கோடற் கணிபெறப்புனைந்த படைப்பேயாகலானும், அவ்வியல்பினை யுணர்ந்து, அப்புலவரது கருத்துப் பொருளைவாங்கி அயன்மொழியிற் றம்படைத்த செய்யுட் பொற்பேழையுட் பொதிந்து வைத்தல் புலவரெல்லார்க்கு மொப்ப முடிந்த வழக்கே யாகலானும், அதுபற்றி யவ்வயன்மொழியாளரவ் வுறுதிப்பொருளையு மப்பொரு ணுகர்ச்சியையு மிழத்தலின் றாகலா னும், உய்தி நோக்குவார்க்கவையே வேண்டற்பால வல்லது மொழி

பெயர்ப்பின்கட் சொல்லொடு சொன்னேர்கிகராதல் வேண்டற் பாலதன்ருகலானும், யாண்டு மதுநிரம்பாதாகலானும், அம்முறை மொழிப்பயிற்சி யெய்த விழையுநர்க்கும் நுகர்வு வேண்டாது வெளிற்றுரையாடுநர்க்குமேயன்றி வேண்டப் படாமையானும், எம்மொழியாளருந் தத்த மரபுபடவாரா வழக்காறுகளை யெல்லா முணர்ந்து கொள்வான் விழைந்துணரு மளவேயன்றி யவை யிற்றையெல்லா மேற்கொண்டொழுகன்மாட்டாமையானும், மேற் கொளினுந் தற்சிறப் புணர்த்தவரு மவ்வளவன்றி நுகர்வாகிப் பய வாமையானும், அப்பெற்றியுணர்ந் துணர்வு கொளுவுதலே பிறர் நலம் பேணும் புலவர் பெருமக்கள் கடனுகலானும் பிறவாற்ருனும் இதன் முதனூற்பாடலினுடைய சொன்னடை யளவின் மிகவுங் குறையவு மொப்பவு மாண்டாண்டு மேண்டுமாற்ருன் மொழிபெயர்த் ததர்ப் படயாத் திச்செய்யுளை முடித்தாமாகலின், இந்நூலை யிதன் முதனூ லொடிணைத்து நோக்குவார் எமதுகுறிக்கோள் கடைப்பிடித்து நோக்கிப் போதரக்கடவர்.

எனவே, சொன்முடி பொப்பவு மொவ்வாமையும் பொருண் முடி பொருங்கொப்ப முடிந்து வழிநூற் பாற்படுவதாயிற்றிச் செய்யுளென்ப துணர்க.

நிலையாமை குறித்துப் புணர்ப்பும் வீடு பேற்றுணர்வுமென விவ்விரு பெருஞ் சிறப்புடைய அறப்பாலுணர்த்துதலின் இந் நூனு தலும் பொருள் புறத்திணைப் பாலேழனுள்ளுங் காஞ்சித் திணைப்பாற் படுவதாகும். இது நிலையாமைக் குறிப்பினன்றி நூலொடு பயின்ற நுண்ணுணர்வு மிகுதியாற்கண்ட முடிபாயின் வாகைத் திணைப் பாற்படும். வாகைத்திணைத் துறையுள் அறிவன் வாகை [illegible]ணர்க. ஈண்டு வில்லி, "காஞ்சி சான்ற வயவர்"பாற் பட்டோனுகலிற் காஞ்சித்திணை யென்றலே பொருந்தும்.

இனி, யிம் முதற்பாட்டகத்துத் ததாாயற் கெதிர்வின்க ணேரு மிழவு பற்றி, அழுகையென்னு மெய்ப்பாடு பிறந்தவா றுய்த்துணரப் படும்.

இஃதிழுமென்மொழியான் விழுமியது நுவலலும், ஒரோ வழிப் பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகலுமாயினமையானே எண் வகை வனப்புள்ளுந் தோலென்னும் வனப்பாகும்.

இந் நூற்பா முழுது நேரிசை யாசிரியப்பா. இவை மூவடிச் சிற்றெல்லையும் தொண்ணூற்றெட்டடிப்பேரெல்லையு முடையன. 'அம்ம'வென அகர முதலவெழுத்தெல்லா மாயது ஒரு தனியுணர் வுயிர், முதற் பேருயிர், பொதுவுயிர், மன்னுயிரென விந்நாற்பா லாகு முயிரதியல்பும், 'அஞ்சய முனிவ' வென்பது அவ் வியல் புணர்தற்கு வேண்டப்படும், நினைப்பின்மை யெனவுந் துறவெனவுங் கூறும் புணர்ப்பும், 'செம்மையம்'புல மென்பது அப் புணர்ப்பு வழி நின்று செயற்பால செய்தல்வேண்டு மென்பதூஉம் எஞ்சிய கூற்றுக்களெல்லா முத்தொழிற்பட்டு முனைத்தெழு முன்னிலை

யியல்புங் குறித்தலானிந் நூனுதல் பொருண்ஞன்கனையுங் குறிப்பிற் புலப்படத் தொகுத்துணர்த்து நூன் முதற்பாவியல் பெறப்பட்ட வாறுணர்க.

இந் நூற்கிளை மூவாறு பதினெட்டனுள்ளு முதலாறு முதலாய முக்கூறுமுறையே மெய்யுணர்வு, மெய்க்காதல் மெய்யுவர்ப் பெனவிம் மூன்றுமாமாறு குறித்துணர்க. அல்லதூஉ முற்பா லொன்பான்கிளையும் உயிர்மரபாமாறும் பிற்பா லொன்பான்கிளையு மெய்ம்மரபாமாறு நுனித்துணர்க.

இச் செய்யுள் பாட்டாயினும் நூலோடொக்கு மென்பதுபற்றி நூலென வழங்கப்படும்.

இஃதொரு நூலன்றிப் பாரதப் பெருஞ் செய்யுளின்பாற் பட்டதாயினு மதனிற்பிரித்து வாங்கித் தனிநூலாகக் கோடற்கு மமைவுடைத்தாயிற்று.

யாமிதுபொழுதிதுபோலும் படைப்புச் சில படைக்கலாயின மையிற் செவ்வி சாலாமை யுள்ளிப்பாட்டு முழுதுக்குமாக நயம் பலவுந் தன்கோளும் பிறர் கோளுமென் றின்னோரன்ன வெல்லா மினிது தோன்றக் கூறிற்பெருகு மென்றஞ்சி யியன்றவளவு தொகக் குறிப்புரைத்தும், ஒரோ வழிச் சிறிதுவிரித்துரைத்தும் போதுவா மாயினும். ஏனையுரை யுரைத்துக்கொள்க.

உ. அரவுயர் வேந்த னவர் படையணித்
திரளினைக் கண்டுழிச் செப்ப லுற்றனன்
பணிக்கற் குறுகிப் பணிக்க! மற்றினி
யுதுக்கா ணவ ரொண்படை யிதுதான்
றெருடுத்தநின் மாணவன் றுருபதன் செம்ம
லணித்தகை பாத்தந் தமைத்த திவக்காண்
மல்லி வில்லியர் மானப் பலருளர்
மள்ளர் சிறந்த வல்வி லாளர்
பாண்டிய சோழ சேரர் பாரிவ
ரீண்டிய வுயுதான் விராடன் றுருபதன்
காண்டிக திட்ட கேது சேகிதா
னுண்மை யாளன் காதிமன் புருசி
குந்தி போயன் செம்பிய னுதாம
னுத்த மோயன் சுபத்திரை செல்வன்
றுருவதி புதல்வரிச் சொல்லிய மறவ
ரெனைவரு மியம்பிற் பெருந்தேர் வயவர்
மீளி யாளர் வில்வல் லோரே
கேளிஃ தம்ம! கிளத்துவல் யானே
யிருபிறப் பாள ரொருபெருந் தலைவ!
பொருதிற மிக்குப் போர்க்களம் புகுநம்
பொருநருட் சிறந்த பொருநர் தம்மையும்
புலவுகொள் புள்ளினம் படருங்
குலவுவிற் கையநீ குறிக்கொளற் கெனவே. 2–7

செந்தமிழ் மொழியிற்போல ஆரிய மொழியிற் செய்யுட்கள் வளமும் வனப்பு முற்றுமாட்சியுடைய வல்லவாதலின், ஆங்கு வழங்கு மொரு சார்ப்பாவினத்தின் பாற்படும் ஈரடிக் குறுவண்ணச் செய்யு ளொன்றினுள் நீண்டவொரு செய்தியாகிய வொரு பொருளை யடக்க லாகாமையின், இதன் முதனூற்கட் பலபாட்டிற் கூறப்படு மிவ் வொருசெய்தி யிங்கொரு நெடுங்குறும்பாட்டிற் கூறப்பட்டது; மேலுமது. இதன்கணொருபாட்டாக்கப்படு முதனூற் பலபாட் டெண்கள் அவ்வப்பாட்டின் கீழ்க் கொடுக்கப்படும்.

அரவுயர் வேந்தன் — பாம்பைக் கொடியில் வரைந்துயர்த்திய வேந்தன். என்றது துரியோதனனை. "வழக்கி னாகிய வுயர் சொற் கிளவி" (தொல். கிளவியாக்கம். 27.) யென்புழிப்போலப் பிறவி னைத் தொகையாயிற் றீண்டுயர் வேந்தனென்பது.

பணிக்கன்—ஆசிரியன். மற்று: வினைமாற்றசை. இனி — இப் பொழுது. உதுக்காண்—உதோ பார். ஒள்படை—விளக்கமாகிய படை. தொடுத்த—இயைபு படுத்திய. துருபதன்மகன் துரோணனைக் கொல்வல் யானெனச் சூளுறவு தொடுத்தது மீண்டுக் குறிப்பு. செம்மல்—மகன்.

'தொடுத்த நின் மாணவன் றுருபதன் செம்ம' லெனத் துரியோ தனன் சுட்டிக் கிளந்தது துரோணனுக்குப் போரூக்கங் கிளர்த்தற் பொருட்டாகிய விகழ்ச்சிக் குறிப்பு.

அணித்தகை—படைவகுப்பி னொழுங்கு. பாத்தல்—வகுத்தல். இவக்காண்: இவ்விட மென்னும் பொருட்டு; ஒட்டிநின்ற விடைச் சொல்.

இது,

"உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென், மேனி பசப் பூர் வது" (முப்பால். இன்பத்துப்பால். பசப்புறுபருவரல். 5) என வந்தவாறு காண்க.

மல்லி: மற்றொழிலிற் சிறந்தான், என்றது வீமனை. மல்லி வில்லி யர்: உயர்திணை யும்மைத்தொகை. மான-போல; ஒப்பிடைச்சொல்.

மள்ளரும் வல்விலாளருமாயினார் மல்லி வில்லியர்மானப் பல்ருள ரென முடிக்க. மள்ளர்-போராண்மை யுடையவர்.

காண்டியிக வெனவரற்பால இகவென்னு முன்னிலையசைச் சொலிகரந் தொக்கது.

காதிமன்: காசியரசன். செம்பியன்: சோழனல்லன், சிபியென் பவன் மரபிற்பிறந்த ஆரியமன்னன். சுபத்திரை செல்வன்: அபிமன். துருவதி: பாண்டவர் மனைவி.

பெருந்தேர்வயவர், மீளியாளர், வில்வல்லோ ரென்பன வொரு பொருட் பல்பெய ரடுக்குப் பொருணிலை. பொருணிலை: முடிக்குஞ் சொல்.

பொருநர் –படைத்தலைவர். புலவு–புலானுற்றமுடைய விறைச்சி. குலவுவில்–வளைந்தவில்.

நீ குறித்துக் கொளற்காகவே யான் கிளத்துவல்: இதுகேள் என முடிக்க. இக்கூற்றின்கண்ணும் துரியோதனற்குத் தன்கட் டோன்றிய மென்மை பற்றி யிளிவரன் மெய்ப்பாடு காணப்பட்டது.

ந. நின்னொடு வீடுமன் கருணன் கிருவன்
பைஞ்ஞிலம் வென்றடு பரித்தா மன்னே
விகருணன் சோம தத்தன் சேய்மற்
றேனை மறவரு மெனைப்பல ருளரா
லென்பொருட் டுயிர்வாழ் விகழ்ந்தனர் கடுங்கணை
நன்பல படைக்கல னண்ணினர்
புண்படு போர்த்துறை போயின ரிவரே. 8–9

நின்னென்றது துரோணனை. பைஞ்ஞிலம் – படைத்தொகுதி. வென்று அடு – வென்று கொல்லும். பரித்தாமன் – அசுவத்தாமன். சேய்–மகன். கணையும், வேறு படைக்கலங்களும். துறை போயினர் – பயின்று வல்லராயினர். மற்று: அசை.

இத் துரியோதனன் கூற்றினு மவன திளிவரல் புலனாகும்.

ச. வீடுமன் புரத்தன் மேய நம்படை
வீமன் புரக்கு மேவலர் படையி
னத்துணை யமைவிற் றன்று ஆலய!
வெத்துறை வயினு மெல்லீ ரும்மே
வீடுமற் புரந்தரல் வேண்டு
மாடுகொ டத்த மணிதொறு நின்றே. 10–11

வீடுமன் வீமனெனப் பெயரொப்புமை தோன்றத் துரியோதன னெடுத்தோதியது தன்கட் டோன்றிய வெள்ளல் பற்றிய நகை யென்னு மெய்ப்பாடு. படையின்: இன்: ஒப்புப் பொருஉ.

மேவிய: இடைக்குறை. மேவலர்–பகைவர். அமைவு–நிறைவு. ஆடு – வெற்றி. அணி – படைவகுப்பு.

இங்ஙனங் கூறியதூஉ மொரு குறிப்புடைத்துப் போலும்.

ரு. ஆயிடைப் பொம்மென வார்ப்பிசை யெழீஇச்
சேயிடை யாளி முழக்கஞ் செய்து
வெள்வளை யூதினன் வீடுமன் முதியோ
னிசைதரு வென்றி யெய்தினோ
னசைவுறு மன்ன னகமகிழ் கொளவே. 12

ஆயிடை: அங்ஙனந் துரியோதனன் கூறியபொழுது, பொம் மென்: ஒலிக் குறிப்பிடைச்சொல். ஆர்ப்பிசை – மிக்கவோசை; ஒருபொருட் பன்மொழி; இருபெயரொட்டுமாம். எழீஇ – எழுப்பி. இசை – புகழ். அசைவு – சோர்வு. மன்னன்: துரியோதனன்:

பகிழ்கொள வென்பது உண்ண வந்தா னென்பது போலும் முதலாக்கப் பொருட்டுச் செயவென் வினையெச்சம்.

சூ. புரிவளை யேனைய புறத்து முழங்கின
முரசுகண் முழங்கின முருடுகண் முழங்கின
தொகுவயிர் கிணையொடு துட்கென முழங்கின
வின்ன வெல்லா விசையினு
மன்ன பேரொலி யாயிற் றதுவே. 13

புரி : முறுக்கிச் சுற்றினாற்போலுங் கோடு. புறம்-பின்னர்.

முரசு, முருடு, கிணை யென்பன மூன்று மொவ்வொருவகைக் கொட்டுக்கள். வயிர்-ஊதுகொம்பு.

இன்ன-இவைபோல்வன. இசை-ஓசை. அன்ன - அத்துணை மிக்க வென நெஞ்சறிசுட்டாக்குக.

பேரொலி அதுவேயாயிற் றென்பதற்குப் பேரொலி பேரொலி யேயா யிருந்தது; பிறிதொன்று முணரப்பட்டில தென்பது கருத் தாகக் கொள்க.

எ. இப்பால் வெண்மா விணைத்த தேர்மே
லொப்பா ரில்லா வோரிரு மழவர்
திருவின் கொழுநனுந் திருத்தகு வில்லியுந்
தத்தம வொள்வளை தாமெடுத்
தத்தக முழக்கின ரதிரத் தெவ்வரே. 14

இப்பாலென்பது இனியெனவுந் துரியோதனன் சாருக்கெதிர்ச் சாரிலெனவுமிரு பொருளுமுடன் பயப்பக் கூறப்பட்டது.

வெண்மா-வெள்ளைக் குதிரை. இணைத்த - பூட்டிய. மழவர்- ஆண்மை மிக்க விளஞர். மழவராகிய. அத்தக-அழகுதக. அதிர- நடுங்க. தெவ்வர்-பகைவர்.

திருவின் கொழுநன் திருத்தகு வில்லிக்குத் தேர்வலவனாயினன்.

நூற்றுவர் படையுட் பெரியோன் வீடுமனாதல் போல ஐவர் படையுட் பெரியோன் திருவின் கொழுநனாதலின் அவனே முதற் கண் இப்பால் வளை முழக்கினன்.

அ. சாலவும் பாஞ்ச சன்னிய வால்வளை
மாலவன் முழக்கினன் மல்லல் வில்லி
தேவ தத்தத் திருவிதாங் கோடும்
வாவுஞ் செந்நாய் வயிற்றன் மாற்றலர்
வெருவரு செயல்புரி வெற்புறழ் மல்லி
பவுண்டர மென்னும், பரிய கோடு
மறத்தகை மன்ன னனந்த விசயமு

நறத்துளி மலர்த்தார் நகுலசா தேவர்
சுகோட மென்று சொலப்படுங் கோட்டொடு
மணிபுட் பகமும் வாய்வைத் திசைப்பக்
கடுவில் லாளி காதியன் றனுஞ்
செழும்பெருந் தேர்வல் சிகண்டியென் பவனுந்
திட்டத் தும்மனும் விராடனுஞ் செறுநர்
வெலற்கருஞ் சாத்தகி வேந்து மேனைத்
துருபதன் றனுந் துருவதி புதல்வருஞ்
சுபத்திரை சேயொடு துவன்றிய வெனைவருந்
தத்தமக் குரிய தகுவெண் கோடுக
ளுருமே றஞ்ச வொலித்தனர்
பொருமா றுவந்து புரவலர் கோவே. 15 — 18

மேல் 'ஆயிடை' (5) யென்னும் பாட்டுத் தொடங்கி வருவன முனிவனஞ்சயன் கூற்று.

வால் - வெள்ளை. மல்லல் - வளன்: ஆற்றல்வளம். வில்லி - அருச்சுனன். திருவிது-நல்லூழா னெய்தியது; அழகியதென்றுமாம். கோடு-வளை. வாவும்-தாவும். செந்நாய் வயிற்றன்-ஓநாய் வயிறு போலும் வயிறுடையவன்; வீமன். மாற்றலர் - பகைவர். வெற்பு உறழ்-மலையொடு மாறுபடும். மல்லி: வீமன். அறத்தகை மன்னன்: தருமன். நறத்துளி-தேன்றுளி. பாஞ்சசன்னிய முதல் மணிபுட்பக மீருகக் கூறப்பட்டன அவ்வவளைகளின் பெயர்கள். காதியன்—காசி வேந்தன். செறுநர்-பகைவர். சாத்தகி: நம்பியிளவல். உருமேறு-இடியேறு. பொருமாறு-போர் செய்தற்கு. புரவலர் - மன்னவர். புரவலர்கோ வென விளித்தது ததராட்டனை.

௬. அன்ன முழக்க மகலிட முழுதும்
விண்ணு மொருங்குடன் மிக்கொலிப் பித்து
நூற்றுவ ருள்ளமு நுடக்கிக்
கூற்றுற வீர்வதோர் தோற்றமு முடைத்தே. 19

அன்ன முழக்கம்: மேற்கூறிய வைவர்படையின் வெள்வளை விளிமுழக்கம். அகலிடம் — மண்ணகம்.

நுடக்கி — நடுக்கி. கூற்றுற: இருதுணிபட. ஈர்தல் — வெட்டிப் பிளத்தல்.

௭. இனிக்கடுங் கொடுங்கணை யிருசார் நின்றும்
பனிக்குறப் பாய்தரத் தலைப்பட லாயின
வாயிடை வன்குரங் காடுறு கொடித்தேர்
மேயவன் வில்லி மேவலர் திரள்கண்
டங்கையிற் றங்கின ஞனிரை காவலற்
கிங்கிது கூறுமா லெம்பெரு மானே
யிருசார்ப் படையி னிடைக்க ணுய்த்தந்
தென்றேர் நிலீஇய ரென்று
னன்றே வரும்போ ரவியா மன்னே. 20 — 21

இனி : அங்ஙனம் வளைமுழங்கியபின். கடு—அஞ்சத்தக்க. பனிக்குற—நடுங்க. தலைப்படலாயின — தொடங்கலாயின. உய்த்தந்து—கொண்டுபோய். நிலீஇயர்—நிறுவுக. வேண்டிக்கோடற்கண்வந்த வியங்கோள். வில்லி நிலீஇயரென்று னெனவியையும். அன்றே: வல்லாட் டயருஞான்றே: இங்ஙனம் வரும் போரைவாராத வற்றை ஞான்றே. அவிக்கக் கடவையாயிருந்து மவியாத மன்னனே யென்க. இங்ஙனம் போரின் கொடுமை நினைந்து வந்த விரக்கந் தோன்ற விளித்தான் அஞ்சயன். அக்கொடுமை யெல்லாங் குருடனைச் சார்ந்ததேயா மென்பதம் முனிவன் குறிப்பு. இஃது தெம்படைப்பு. முன்னும் பின்னுங் கண்டுகொள்க.

௰க. இப்போர்த் தொடக்கத் தென்னெடு போர்பொர
நிற்போர் யார்கொலோ நேர்வோர் தம்மொடு
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
சீர்கெடு முணர்வு சேர்துரி யோதன
னுவகைப் பொருட்டிவ ணொருங்குடன்
குவவுற் றோரைக் காண்கதில் யானே. 22 — 23

நேர்வோர் : ஒப்பாக வெதிர்ந்து பொருதற் குரியோர். புகலும்-விரும்பும். சீர்-நன்மை. குவவுற்றோர்-திரட்சியுற்றோர் ; கூடினோர். தில் : விழைவின் கண் வரும் அசைநிலையிடைச்சொல்; இது தன்மை யிடத்துக்க ணிற்கும்.

காண்க—காண்டல் வேண்டும்.

௰உ. நண்பன் வேண்டுகோ ணம்பி கேட்டலு
நன்றென் றெல்லை நன்பரி தூண்டி
யிருசார்ப் படையி னிடையி
னொருதேர் கடைஇ நிறீஇயின னுவந்தே. 24

நண்பன் : வில்லி. பரி-குதிரை. கடைஇ-செலுத்தி. உவந்து கடைஇ நிறீஇயின னென்க. ஒரு : ஒப்பற்ற.

௰௩. வீடுமன் றோணன் வேந்தர் பிறர்க்கு
நாடுற வெதிர்முக நடாஅய் வையய
நூற்றுவர் குழுமலை நோக்குக
மாற்றரு வில்லி யென்றனன் மாலே. 25

தோணன்: துரோணன் என்பதன் சிதைவு. நாடுற-குறித்து நோக்க. நடாஅய்-நடத்தி. வையம்-தேர். குழுமல்-கூட்டம். மாற்றரு: போரின் மீண்டு போகச் செய்தற்கரிய; "மாற்றருங் கூற்ற" மென்புழிப்போல. (தொல். புறத்திணையியல். 24.) வையம், நடாஅயென்க. மால் : நம்பி,

௰௪. அந்தில் வில்லி யாவயிற் கண்டான்
றந்தைய ரோடு தந்தை தந்தைய
ராசிரி யன்மா ரம்மான் மாரே
தம்முனர் தம்பியர் தங்கள்
செம்மலர் பெயரர் செறிநருந் தொகவே. 26

அந்தில் : அசைநிலை. செம்மலர் - புதல்வர். பெயரர்-புதல்வரின் புதல்வர். செறிநர்-நண்பர். தொக-கூடிநிற்ப.

ஆவயிற் றொகக் கண்டா னென முடிக்க.

௰௫. மகட்கொடை பூண்ட மாமன் மாரு
முளப்படக் கேளிரை யொருங்கு கண்டு
கூர்ந்தெழு வருளிற் கோட்பட் டழுது
சோர்ந்திது செப்புமார் தோன்ற
லோர்ந்துமுன் னின்ற வுடையவன் றனக்கே. 27

கேளிர்-சுற்றத்தார். கூர்ந்து எழு—மிக்குத் தோன்றிய. கோட்பட்டு-பற்றப்பட்டு; தம்மினாகிய வினையெச்சம். ஆர்: அசை. தோன்றல்: வில்லி. தோன்றல் செப்புமென்க. ஓர்ந்து: மெய்யுணர்வு கொளுத்தக் கொள்ளுஞ் செவ்வி வந்ததனை யாராய்ந்து. உடையவன் : உயிருமொழிந்தவு முறையே யடிமையு முடைமையுமாக வுடையவன்; இறைவனென்பதாம். இஃதிருவினையொப்புவந்தாற்கதுகண் டிறைவன்றானே மெய்யாசிரியனாகி முன்னின் றெழுந்தருளி அவனையுந் தன்[illegible]ஞ் சிறப்பியலாற் காட்டி, அவற்கு மெய்யுணர்வு கொளுத்தியுய்வித்தன் மரபென்னுங் குறிப்புத் தோன்றக் கூறியவாறுதல் காண்க. இதன்கண் அவற்குச் செவ்வி வாராமுன்ன ரெல்லாந் தானின்றானெனக் காட்டாது பின்னின்ற வுடையவ னிதுபொழுது செவ்வி வந்த தோர்ந்து இனித்தன்னை யின்னா னெனக் காட்டிற் காணு மெனத் தன்னைக் காட்டி, அவனைத் தான் முன்னின்று செய்வித்தலை யுணர்த்து மிறைவ னென்னுங் குறிப்பு மடங்கும்.

இங்குப் பிறர்கட் டோன்று மிழவு பற்றி வில்லிக்கு அழுகையென்னு மெய்ப்பாடு பிறந்தது.

அன்றித்தான் தன் சுற்றத்தை யிழத்த னோக்கித் தனக் கழுகை பிறந்ததெனிற் றன்கட் டோன்று மிழவுபற்றிய வழுகையாம். இன்னு மிழந்ததில்லை யாயினுங் கருத்துப் பற்றி யிழவெனக் கொள்ளப்படும்.

தன்கட் டோன்றிய விழவுபற்றிய வழுகையெனின் அவ்வழுகை அருளன்றாம்.

இரண்டழுகையும் வில்லிக் குளவாயின வெனவும் சிறப்புப் பற்றி மேலைப்பாட்டகத் தருளெடுத்தோதப்பட்ட தெனவுங் கொள்க.

௰௬. என்பெருந் தோழ! வென்கொலோ காண்டி
யிங்கினிப் பொருபாக் கெய்தியோர்க் காண்டலு
மென்னுறுப் பெல்லா மிடைந்து நெகுமா
லென்வாய் புலரு மென்னுடல் விதிர்க்கு
மென்மெய் சிலிர்க்கு மென்கை நின்றும்
வில்லோ ஞெகிழீஇ வீழா நிற்குமால்
யாக்கை முழுது மெரிவது போலு
மூக்க மின்றி யுலையும் யானினி
நிற்றலு மொல்லே னெஞ்சந் தெருமரும்
பொற்றட மார்ப! பொருந்தா வாகு
தலைத்தோற் றம்பல தாந்தோன் றும்மே
நினைத்திடி னிகற்போர் நிகழ்ச்சியி
லினத்தினைக் கோற லென்னு மெமக்கே. 28.—31.

பொருபாக்கு-போர் செய்தற் பொருட்டு; வினை யெச்சம். இடைந்து-சோர்ந்து. நெகும்: வலியிலவாகும். ஆல்: அசை. விதிர்க்கும்-நடுங்கும். ஞெகிழீஇ-நழுவி. உலையும்-தளரும். ஒல்லேன்-இயலேன். தெருமரும் - சுழலும். பொன் - அழகு. தட - பெரிய. தலைத்தோற்றம்: பின்வரு நிகழ்ச்சியுணரவருங் குறிகள். இகற்போர்-பகைமையாற் செய்யும்போர். என்னும்-யாது நன்மையுண்டாகும்? ஒன்றும் உண்டாகாதென்பது குறிப்பு.

இப்பாட்டு முதல் வில்லி கூற்று.

௰௭. வெற்றியும் யானினி வேண்ட கில்லேன்
கொற்றமும் வேண்டேன் குறிக்கு மற்றை
யின்பமும் வேண்டே னெழில்கொண் மாயோய்!
யின்பமுங் கொற்றமு மென்னு
மென்புயிர் வாழ்க்கைதா னெற்றுக் காவதே. 32.

கில்லேன்-மாட்டேன். கொற்றம்-நாடாட்சி. எழில்-அழகு. மாயோய்-கரியோனே!

என்னும்-என்ன வூதியமாகும்? என்பு-உடம்பு. எற்றுக்கு ஆவது-எதற்காகும்.

என்னுமெனவும் எற்றுக் காவதெனவும் நின்ற வினு விரண்டும் அவை நிலையாவுந் துன்பமுமா யூதிய மல்லவாமென வெதிர்மறைக் குறிப்பின.

௰௮. எம்மனோ ரானே யாவர் பொருட்டு
மண்ணக வேந்து மல்லற் றுப்புர
வின்ப நுகர்ச்சி யென்றிவை யெல்லாந்
துன்புற் றுழன்று தொகுக்கப் படுவகொ
லவரிவ ணின்றன ரந்தோ
விவர்தம செல்வமொ டின்னுயிர் துறந்தே. 33.

எம்மனோர்-எம்போல்வார். வேந்து-வேந்தானுளப்படு நாடு. மல்லல்-வளன். துப்புரவு-நுகரப்படுவன. உழன்று-முயன்று. அந்தோ: இரங்கற் குறிப்பிடைச் சொல். இவர்தல்—விரும்புதல். தம-தம் முடைய.

இன்னு மவர் தத்த முபிரையுஞ் செல்வத்தையும் புறத்தே துறந்திலராயினும் நெஞ்சிற் பற்றுவிட்டமையிற் றுறந்து நின்றன ரென்றான். இன்னுரை யிதனற் "காஞ்சி சான்ற வயவ" ரென்ப; பிறரும். (பதிற்றுப்பத்து. எ-ம் பத்து.ரு) காஞ்சி-நிலையாமைக் குறிப்பு.

ழகூ. ஆசிரி யன்மா ரருமைத் தந்தையர்
மாசறு சேயர் வண்முது தந்தைய
ரம்மான் மாரொடு மாமன் மாரே
நற்பெய ரன்மார் நாத்தூ ணம்பியர்
சார்பின் கேளிருஞ் சார்ந்துள ரிவணே
யானெவன் செய்கோ வானிரை காவல!
வீனுழி யிவர்தா மெற்கொலிற் கொல்க
யானிவர்க் கொல்லலோ ஞால மூன்று
மீயினு மிவர்கில னென்னைகொல்
மாயிரு வையம் வாய்த்தற் பொருட்டே. 34—35.

மாசு-குற்றம். சேயர்-புதல்வர். முதுதந்தையர்-பாட்டன்மார். நாத்தூணம்பியர்: அம்மான்மார் புதல்வரும் மாமன்மார் புதல்வரு மாவர். சார்பின் கேளிர்: மணவியோடியைந்த முறையினர்.

[illegible]ன் செய்கு-யாது செய்வேன். ஓகாரம்: அசை. ஈனுழி-இவ்விடத்து. இவர்கிலன் - விரும்பேன். கொலையையும் கொலை யான் வரும் ஞால மூன்றனையும் விரும்பே னென்க. சொல் லலோ: ஓகாரந்: தெரிநிலை. யானிவரைக் கொல்லுங் கொலை எனக்கு மூன்றுல காட்சியுங் கொடுக்குமாயினு மதனை விரும் பேன்; ஆனபின் இவ்வையகங் கிடைத்தற்பொருட் டெங்ஙனம் விரும்புவேன்?

விரும்பாமை சொல்லவேண்டாவன்றே யென்பது குறிப்பு. வாய்த்தற் பொருட்டுக் கொல்ல லென்னையென்க. கொல்: அசை

உம. நூற்றுவர்ச் சினைஇ நூறிய நமக்குத்
தோற்றுறு நயப்புச் சொல்வி னெவனோ
சாற்றுகின் றேனிது சான்றோ ரியாவருந்
தூற்றுமிக் கொடியரைத் தொலைப்பினு
மாற்றவுங் கொடுமை யணுகுமா லெம்மே. 36

சினைஇ - சினந்து. நூறிய - கொன்ற. நயப்பு - இன்பம். எவன்-யாது. தூற்றுதல் - அலர் கூறுதல். ஆற்றவும் - மிகவும்.

கொடியராவார் : கள்வர், ஆறலேப்பார், நஞ்சிடுவார், படைக் கல மெடுத்துக் கொல்வார், மனைநெருப்புக் கொளுவுவார், பிறர்மனை விழைவா ரென் றிவ்வறுவருமாம். இவரைக் கண்ணேடாது கொல்லல் வேண்டுமென்பது இறைநூற்பணி. ஐவரளவில் நூற்றுவர் அவ்வாறு கொடுமையும் புரிந்துளர். அதனலவர் கொலேயுணற் குரியர் ; ஆயி னுந் தன்னருண் மிகுதியானே அன்னோர்க் கொல்லுதலுங் கொடு மையோ ரன்னதாயிற்று ; வில்லிக்கு. இஃதில்லறத்தி னீங்கிய துறவறம்.

தொலேப்பினும் : உம்மை : உயர்வுசிறப்பு. எம் : எம்மை ; உளப் பாட்டுத்தன்மைப்பன்மை.

கொடுமை யெம்மை யணுகு மென்க. ஆல் : அசை.

உக. எவ்வாற் ருனு மினத்தினர்க் கொல்லுத
லொவ்வா திவரோ வுறவினர் நமக்குத்
திருத்தகு செல்வ தெரியி னிவரை
மாய்த்துழி யெங்ஙன மகிழ்வு
வாய்த்துறு மென்பது வயங்கிற் றிலெனே. 37

வாய்த்துறும்,-கிடைக்கும். வயங்கிற்று இலென்,-விளங்கிய தில் லேன். வயங்கிற்று : இடைநிலே பெற்று வந்த தொழிற்பெயர். வயங்குத லென்னு மளவே. இன்னவற்றை முற்றுச்சொற் ரெழின்மே னின்றதென்பாரு முளர். வினு : எதிர் மறைக் குறிப் பிற்று.

உஉ. கடும்பற் றுள்ளங் கவைஇய வாற்ருற்
கெடுங்கற் றுணர்வுடைக் கேடிய ரிவர்தா
மிற்கெடுத் தெய்து மேதந் தன்னேயு
நட்பிடைக் கேடுசூழ் நவையையு மொன்று
முணர்கில ராயினு முணர்ந்த யாமு
மவரோ ரன்ன மாயி
னெவனே விவணறம் வாழு மாறே. 38—39

கடும்பற்று-அளவிறந்தபற்று. கவைஇய-கவிந்த. கற்றுணர்வு-நூல்களேக் கற்றுணரு முணர்வு. கடும்பற்றுள்ளத்தாற் கெடுகின்ற கல்வி யறிவுடைய வென்க. கேடியர்-கேடுசெய்யுங் குற்றவாளிகள். இல்-குலம். ஏதம், நவை யென்பன குற்ற மெனப் பொருள்படும். அவரோ ரன்னமாயின்-அக் கேடியரோ டொருதன்மை யுடைய மானல். இதனல் அவரோ டொப்பாதற் கஞ்சி யா மவையிற்றைக் கடிதல் வேண்டு மென்பது வில்லி யுளக்கிடை. எவன்-யாது? எங் ஙனமென்பதாம். இவண் அறம் வாழுமா றெவ னெனவே அறஞ் செய்வா ரொருவரு மில ரென்பதாம்.

உங. இற்கெடின் மன்னு மில்லறங் கெடுமே
யற்றெனி னினமுழு தல்லவை துன்று
மற்றெனி னிற்பிறப் பரிவையர் வழீஇக்
கெடுவர் கெடவே கீழ்ப்பிறப் பெல்லாம்
வடுவில் பிறப்பொடு மயங்கு மயங்கப்
பிறப்புக் கெட்ட பேதை மாந்தரும்
பிறப்புக் கெடுத்த பேதை மாந்தரு
மெய்தற் கரிய வின்னாக் கீழ்நிலத்
துய்த லின்றி யுலமந் துழல்வ
ரன்னோர் தென்னரு மழிவ
ரன்னோ திரளைநீ ரயிலார் வீழ்ந்தே. 40-42

இல்-குலம். மன்னும்-அழிவின்றி நிலைபெறும். இல்லறம்-குலத்திற்குரிய நற்செயல். அற்றெனின்-அத்தன்மையதாயின். இன்முழுது-குலமுழுதும். அல்லவை-தீவினைத்தன்மை. துன்றும்-நிறையும். இற்பிறப்பரிவையர்—குடிப்பிறப்புடைய மகளிர். வழீஇ: கற்புவழுவி. கீழ்ப்பிறப்பு-கீழினம். வடு-குற்றம். பிறப்பு-இனம். மயங்கும்-விரவும். இன்னா-துன்பம். கீழ்நிலம்-இருளுலகு. உய்தல்-நீங்குதல். உலமந்து—கலங்கி. உழல்வர்—வருந்துவர். தென்னர்—தென்புலத்து வாழுங் கடவுளர். திரளை—சோற்றுத்திரளை. திரளைநீர்: உம்மைத்தொகை. அயிலார்: உண்ணாராய்: எதிர்மறை முற்றெச்சம்.

அன்னோருடைய தென்னரு மயிலார் வீழ்ந்தழிவரெனக் கூட்டுக.

[illegible]மை : இறந்தது தழீஇய வெச்ச வும்மை. அன்னோ: இரங்கற் கு[illegible]ச்சொல்

உச. அடக்க மின்மையிற் பிறப்புக் கலாவக்
குடிச்சிறப் பழிக்குங் கொடியோர் கொடுமையிற்
றந்தமக் கியையத் தக்கோர் யாத்த
பண்டைய வழிவில் பல்பிறப் பறமுங்
குலத்தகை யொழுக்கொடு குன்றி
நலத்தகை கெடவரு நலிவு பலவே. 43

கலாவ-கலப்ப. கலத்தலாலென முதற் பொருட்டு.

சிற்றின்பநுகருஞ் சிறுபொழு தொழிந்த பொழுதெல்லாம் பிறரைப் பெருந்துன்ப முழக்கச் செய்யுந் தன்மை யுடையோ ராதலிற் பிறப்புக் கலப்புச் செய்து குடிப்பிறப் பழிப்போரைக் கொடியோ ரென நொந்துரைத்தவாறும். அதனால் வழீஇய மகளிருறுந் துன்ப மவரான் ஆற்றொணாததாதலின் அவர் அங்ஙனம் வழீஇயொழுகுமாறு வலிந்து நின்ற வாடவர் பாற் பெரிதுங் கொடுமை நிற்றல் காண்க.

குலத்தகை-குலப்பெருமை. தகை: வேறுபா டெனினுமாம்.

நலத்தகை-நன்மைப்பெருமை. ஆவது: கல்வி, புகழ், சிறப்பு முதலிய வெய்துதல்.

குலத்தகை கெட்டார்க்குக் கல்வி முதலாய நலம் வாய்த்த லரிதாகலின் வறுமை, நோய் முதலாகவரும் நலிவு பலவாதல் காண்க.

நலிவு-துன்பமெய்தல்.

உரு. குடிமையுங் குன்றுப் பிறப்பொழுக் கம்மு
மடியநின் றிழிந்த வன்கண் மாக்கள்
புலையளற் றகத்துப் புக்கு
நிலைபெறல் கேளா நிற்று மாலே. (44)

குடிமை-குலவொழுக்கம். மடிய-கெட. வன்கண்மை-இரக்கமின்மை. புலை-இழிவு. அளறு — இன்னுக்கீழுலகு.

கேளாநிற்றும்-கேட்கின்றேம். மால்: விளிப் பெயர்.

உசு. எந்தாய் வேத்திய லின்ப நச்சி
யந்தோ விங்குநம் மருமைக் கேளிரைக்
கொல்லிய முயன்றநங் கொடுமை யெற்றே
யிதுவென் செய்தேம் யாமே
கதுமென் றெழுந்த காருணர் வினினே. (45)

எந்தாய்: எந்தையே! நச்சி-விழைந்து. எற்றே: [illegible]த்துணையிழிந்த தெனக் கழிவிரக்கக் குறிப்பின்கண் வந்த விடைச்சொல். கொல்லிய: செய்யிய வென் வினையெச்சம்.

கதுமென்று எழுந்த-விரைய வுண்டான: ஆராயாதுண்டான வென்றவாறும். கதுமென்று: இடைச்சொல்.

கார் உணர்வு-கரியவறிவு. என்றது: அறியாமையை, "களவென்னுங் காரறி வாண்மை" (முப்பால். கள்ளாமை. எ.) யென்றார்; பிறரும். உணர்வினின் — உணர்வினால்.

உஎ. கைப்படை யின்றிக் கடிந்தெதிர்க் கில்லேற்
கைப்படை கொடுபோர்க் களத்தெதிர் நின்று
நூற்றுவர் தாமே நொய்திற்
பாற்றினும் பெருநலம் படுமா லெற்கே. (46)

கடிந்து-சினந்து. பாற்றினும்-அழிக்கினும். படும்-உண்டாகும். ஆல்: அசை.

உஅ. இன்னணம் புலம்பலொ டியம்பி வில்லி
தன்னமர் தேர்மிசைச் சாய்ந்து சோர்ந்தனன்
வில்லொடு வெங்கணை வீசி
யல்லலின் மூழ்கிய வகத்த னகியே. 47

அல்லல்-துன்பம். அகம்-நெஞ்சு. இப்பாட்டு முனிவனஞ்சயன் கூற்று.

நம்பியகவல்.
அணிக்கொணர்.
பெரும் பற்றப் புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பி வில்லியர் நல்வழக்காட்டு.
வில்லி துனித்தயர்தல்;
முதற் பால்
முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம்:

ஓஒமுதுமெய்.

இரண்டாவது பால்

தொகையுணர்வின் புணர்ப்பு

க. அகன்றிய லருளிற் கோட்பட் டாற்ருன்
கலிழ்ந்துவீ ழரிப்புனற் கண்ணின ஞகிப்
புலம்பியோற் கண்டிது புகலுமார்
நிலம்பொறை யாற்ற நின்றருண் முதலே. 48

தொகையுணர்வு. மெய்யுணர்வு. மெய்யுணர்வாவது: ஐம்பெருந்தோற்ற முதலாகப் பொருண்மை பலவும் வேறுவேறு கண்டெண்ணித் தொகுத்துணர்த லாதலின், அஃதப்பெயர்த்தாயிற்று. பொருண்மை, 25 எனவும் 36 எனவும் 96 எனவும் பிறவாறு மெண்ணித் தொகுத்து வழங்குமாறு காண்க. இப்பொருள் படப் பெயரிட்டாண்டவர் வடமொழியாளர், முனிவர் கபிலனுரென்பவர். அச்சொற்பொருளே மீண்டுத் தொகையுணர்வென மொழி பெயக்கப்பட்டது. இதனுல் இதன் முதனூலாசிரியர் முனிவர் வாதராயணனுர் கபிலனுர்க்குக் காலத்தாற் பிற்பட்டவரென்பது பெறுதும். தொகையுணர்வெனினும் எண்[illegible] எனினு மமையும். பலவின்பாலென்புழிப்போலஇன்சாரி[illegible]ண்புத் தொகைக்கண் வந்தது.

அகன்று இயல் - மிக்கு உண்டாகின்ற.

ஆற்ருன்: சுற்றத்தார் படுந் துன்பமும் உலகியல் வாழ்க்கைத்துன்பமுங் கண்டு பொறுக்க லாற்ருதவனுகி; முற்றெச்சம்.

கலிழ்ந்து,—கலங்கி, அரி — விட்டுவிட்டுத் துளித்துளி யாய் விழுதல்.

'இது' வென்றது இனிக் கூறுங் கூற்றினை. கருத்திற் கணித்தாகலின் இதுவெனச் சுட்டப்படும்.

புகலும் என்பது படர்க்கை நாற்பாற் பொதுமுற்று. ஈண்டுயர்திணை யாண்பாற் படர்க்கை மேற்று. ஆர்: அசை.

பொறை—சுமத்தல்: ஈண்டுக் கொடியோரைச் சுமத்த லெனக் கொள்க. கொடியோர்—கொடுங்கோலாட்சியர்; ஈண்டு நூற்றுவர் முதலியோர்.

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை"

(முப்பால். பொருட்பால். வெருவந்தசெய்யாமை. க0.) யென்ருர் வள்ளுவனுரும்.

ஆற்ற — தணிக்கும் பொருட்டு.

முதல் — முதல்வன் : ஈண்டுயர்திணைப்பெயர் ; ஆகு பெயரென்னற்க; முதல்வற்கியற் பெயருளொன்ருகலின்.

வில்லியி னருளுளத்திற்கு மறுதலையாயினனம்பி யென்னும் வசைதீர நிலம் பொறை யாற்ற நின்றருளிய முத லென்ரும்.

இப்பாட்டு முனிவனஞ்சயன் கூற்று.

உ. ஏடா! வில்லி! யென்னிது செய்தனை
வாடா வுள்ளம் வாடிய புன்மை
யொவ்வா விதுபொழு தெவ்வா றெய்தினை
நன்றுநன் ருமரோ நவையி னின்னசை
யென்றுந் தமிழர்க் கியைவ தன்றிது
விண்ணக மெய்தலை விலக்குமான்
மண்ணகந் தீரா வசையும் பயக்குமே. 49

ஏடா!: தோழன் முன்னிலைப் பெயர். புன்மை—மிக்கவிழிவு. நவை—குற்றம். நசை—விருப்பம். நவை இல்நின் நசை யெனப்பிரித்துப் புணர்க்க. நவையினசையென நவையுடைய நசையென்னுங் குறிப்புப் பொருளுங் கூற்ருனே யுடன்ருேன்றக் கூறிப் பழித்துரை யாடியவாறுங் கண்டு கொள்க.

நன்று நன்று நின்நவை யில்லாத நசை யென்றது : கற்கறித்தானன்கட்டா யென்றது போலு மிகழ்ச்சிக் குறிப்புக் கிளவி.

எ[illegible]மென்னு மும்மை: எச்சப்படாமுற்றும்மை.

[illegible]ரியர் ; ஆவார் : மக்களுளுயர்ந்தா ரென்றவாரும். இழிந்தா[illegible]யுரித்தென்பது.

ஆல் : அசை. பயக்கும்—கொடுக்கும்.

ங. பெருந்தகை நீயிப் பேடிமை கோடல்
வருந்துதற் பாற்றிது மருவல் வேண்டா
விதுநினக் கேற்றதன் றிளிவரு மிழிந்த
விதுவுளத் தெண்மை வெகுண்டு
கதுமென வெழுந்திரு காளா யினியே. 50

பெருந்தகை: விளி. பேடிமை — பேடித்தன்மை. நினக்கென்ப தெடுத்தலோசையாற் கூறிக்கண்டு சொல்லாற்றலுடைமைக்கேற்ப விரித்துப் பொருள் கொளப்படும். இளி—எள்ளற்பாடு. விதுத்தல்—விரைதல்: வினைத்தொகை. எண்மை—வலியின்மை ; தளர்ச்சி யென்ப தாம். வெகுண்டு — வெறுத்துவிட்டு ; முதற்சொல் ஆக்கப்பொருண் மேற்று. கதுமென — விரைய. காளாய்: காளை யென்பதன் விளி. இனி — இப்பொழுது. வில்லி பேடிக் கோலங் கொண்டது நினைக் கற்பாலது.

ச. என்முது தந்தை யென்ன சிரிய
னின்னவர் தம்மை யெங்ஙனஞ் செருவிற்
கடுங்கணை கொண்டெதிர்த் தடுந்தொழின் முயல்கோ
வெழிலுடை மாயோ யிவரெனின்
வழிபடற் குரிய ரல்லரோ மற்றே. 51

இதுமுதல் வில்லி கூற்று.

முதுதந்தை: வீடுமன். ஆசிரியன்: தோணன். முதுதந்தை யாசிரியன்: செவ்வெண். செரு-போர். கடுங்கணை-விரைந்த அம்பு; கொடிய வம்பென்றுமாம். அடுந்தொழில்—கொல்லுந் தொழில். போரென்பது கொலைத்தொழிலென்றல் வில்லி கருத்து. முயல்கு-முயல்வேன். ஓகாரம்: மற்று: அசை. வினு: எதிர்மறைக் குறிப்பிற்று.

ரு. ஆற்றவும் பெரிய வவ்வா சிரியரை
மாட்டுத லொழிந்து வளவிய வையத்
தேற்றிரந் துண்ட லெனைத்துஞ் சிறந்தது
கைப்பொருள் காமுறுங் கல்விசால் பணிக்கரைத்
தப்பினர் துய்க்குமத் தகாஅத்
துப்புர வெல்லாஞ் சோரியொ டளாயவே. 52

ஆற்றவும்-மிகவும். மாட்டுதல்-கொல்லுதல்; மாளுதலென்பதன் பிறவினை. சுட்டு: புகழறி சுட்டு.

வளவிய வையமென்றது நல்வழியானே யாவரும் பொருளெய்து தற்கு யாங்கணுந் தடையின்றி யிருப்ப வதுசெய்துய்யா[illegible] யொருவரை யொருவர் கொன்றுயிர் வாழ்த லெத்[illegible] யென்னுங் குறிப்பிற்று.

எனைத்துஞ் சிறந்தது-எவ்வளவோ மேலானது. பணிக்கர்-கூலிக்குக் கற்பிக்கு மாசிரியர்.

தப்பினர்-கொன்றனராய்; முற்றெச்சம். துப்புரவு-நுகரப் படுவன. சோரி-புண்ணீர். அளாய-கலந்தன.

தீவினைத் தன்மையொடுகூடாத வெத்துணை யிழிதொழிலு முயர் தொழிலே யாமெனவும் அதனொடு கூடிய வெத்துணை யுயர்தொழிலு மிழி தொழிலேயாமெனவு மவை செய்குநரு மன்னரேயா மெனவும் அவ்வாறுணர்ந்து செய் தொழில்களிற் செய்வது தவிர்வது கொண் டொழுகுக வெனவும் இப்பாட்டின்க ணுணர்ந்து கொள்க.

சூ. யாமிவர்க் கொல்ல லெம்மிவர் கொல்ல
லாமிவற் றெமக்குநன் கமையச் சிறந்ததி
யாதுகொ லென்பதி யாது மறிகிலென்
மாதுகொள் பண்பின் மாஅ லென்னெனின்
யாவரைக் கொன் றபின் யாமுயிர் வாழல
மாவவர் நூற்றுவ ரல்லரோ
தாவடி முனையகஞ் சார்ந்துநிற் குநரே. 53

அமைய-நிரம்ப. மாது-காதல்; மாதரென்னு முரிச்சொ லீறு திரிந்தது. பண்பினை யுடைய மால்.

ஆ வவரென்பழி ஆ: இரக்கக் குறிப்பிடைச் சொல்.

அல்லரோ: ஓகாரம்: எதிர்மறை.

தாவடி-போர்; வருந்த வடுதலுடைய தென்னும் பொருட்டு; “ தாவடி போயினர் ” என்ப.

சார்ந்துநிற்குந ராதலி னென்க வெனவருவித்த சொல்லெச் சத்தை என்னெனின் என்னும் வினு வினையெச்சத்திற்கு முடிபாக்குக

எ. கடும்பற் றுள்ளக் கசடு தோய்தலிற்
கெடும்பெற் றியனுய்க் கெடாஅ நல்லற
மிற்றென் றுணரே னெம்மனேர்க் கெய்தி
நிற்றந் தனையரோ நின்னென் று வினவுவல்
யாதோ நன்றென யாப்புறத் துணிந்த
தோதாய் நிற்கியா னேதி
யீதோ நின்புக லெற்பணி கொள்ளே. 54

கசடு-குற்றம். தோய்தல்-செறிதல். பெற்றி-நற்பண்பு. இற்று-இத்தன்மையது. எம்மனேர்க்கு - எம்போலு மெளியோரை யுய் வித்தற் பொருட்டாக. நிற்றந்தனை-நின்றனை: ஒரு சொல். அரோ: அசை. யாப்புற-ஒருதலையாக. ஓதி-மாணவன். ஈதோ வென்பது என்னைப் பாரென வெதிர்முக மாக்குதற் குறிப்புணர்த்து மோருரை [illegible] புகல் - நின்னுடைய வடைக்கலப் பொருளாயினேன். [illegible] காள் - என்னை நின்னேவல் செய்வித்துக்கொள்வாயாக.

[illegible] ட்டான் வில்லி மன்னுயிர்ப்பாலருளு மிருவினையொப்பு மொருங்குட னெய்தப்பெற்று மெய்யுணர்வு கோடற்குச் செவ்வி யுடைய னுயினமை யெய்துவிக்கப்பட்டது.

மெய்யுணர்வு வேட்பான் மெய்யாசிரியற் றேர்ந்து தலைப்பட்டு நூலோதியாய்ப் புகல் புக்குப் பணி தலைநின்றெழுகி னன்றி மெய் யுணர்வு கொளுத்துதல் கூடாமையின் நம்பிபால் நிற்கியானேதி, ஈதோ நின்புகல்; எற் பணிகொள் ளென விரந்து குறையுற்றுப் பின்னின்றான்; வில்லி.

அ. தெண்கடல் வளாகந் தெவ்வ ரின்றி
வண்பெருஞ் செல்வ மல்லன் மல்கிய
கொற்றக் குடைவேந் துற்றக் கடைத்தும்
வானக முழுதுந் தானொரு மன்னென
மேனிலை யாட்சி மேவியக் கடைத்து
நெஞ்சக முளப்பட வைம்பொறி வாட்டு
மஞ்சுதக் குறுமிவ் வலக்க
ணெஞ்சுதல் கூடுமென் றெண்ணலோ விலெனே. 55

வளாகம்-நிலப்பரப்பு. மல்லல்—வளன். மல்கிய-நிறைந்த. வேந்து-வேந்தனுதல். உற்றக் கடைத்தும் - அடைந்தாலும். மேவியக் கடைத்து மென்பதூஉமது. முழுதும் - முழுதுக்கும். மேனிலை யாட்சி-வானுலகாட்சி. அஞ்சுதக்குறும் - அஞ்சத்தகுகின்ற. அலக்கண் - துன்பம். எஞ்சுதல்-ஒழிதல். ஒகாரம்: சிறிதுமிலெனென விழிவு சிறப்பின்மே னின்றது.

நோயுற்ருன் மருத்துவற்குத் தானுற்ற நோயிருந்தவா றுணர்த்தி னன்றித் தனக்கு நோய்க்குற்ற மருந்து மருத்துவனுற் கொடுக்கலாகாமைபோல ஓதி தானுந் தன்னறியாமை யிருந்தவாற் றைத் தக்க வாசிரியற் கெடுத்துரைக்கினன்றி யவனுற் றனக்கவ்வறி யாமை தீர்த்தற்கேற்கு மருந்து கொடுக்கலாகா தாகலின் வில்லியும் நம்பிபாற்றனக்குற்ற விருவினை யொப்பிருந்த வாற்றை யெடுத் துரைத்துத்துன்பந் தீர்த்தற் குற்றமருந்து வேண்டி நின்ருன்.

கூ. ஈதுரைத் திளங்கோ வின்னுயி ராகிய
வாநிரை மேய்க்கு மவனை நோக்கி
யானினிப் பொரேஎன் யாவெனத்
தானினி வாளா வசைந்தனன் றளர்ந்தே. 56

இளங்கோ: வில்லி. பொரேன்-போர் செய்யேன். செய்யுள ளபெடை பொராமைத் துணிவுங் குறித்தது. யா: அசை. வாளா அசைந்தனன்-ஒன்று முரையாடாதிருந்தான். தளர்ந்து வாளா அசைந்தனனென்க.

'இன்னுயிராகிய ஆநிரை' யென்பது இறட் [illegible] ன் மாட்டேற்றணியும், இருபெயரொட்டு மாயவாறு [illegible]

இப்பாட் டிருவினையொப்புற்றவழி நிகழற்ப [illegible] ணர்த் திற்று.

ம. இருசார் வாட்படை யிடைநில மருங்கிற்
பொருவான் புகூஉப் புலம்ப லுற்ற
நண்பனை நோக்குபு நகுவான் போலும்
பேரா சிரியன் பேணித்
தூரா விவ்வுரை சொற்றன னவற்கே. 57

பொருவான்-போர்செய்யும்பொருட்டு. புகூஉ-புகுந்து. நோக்குபு-நோக்கி. பேணி: வில்லிக் கறிவு கொளுவு மாற்றை விரும்பி. அவன் செவ்வி கடைப்பிடித் தென்றுமாம். அவனுளத் தூன்றி நின்று மறையாது பயப்பாடுடையவாமாறு கூறும் பொருளுரை தூரா வுரையாமாறு காண்க.

தூரா: மறையாத வெனவும் மறைக்காத வெனவுந் தன் வினையும் பிறவினையுமாய்ப் பொதுவாம். சொற்றனன் – சொன்னுன்.

இடம், பொழுது, எடுத்துக்கோ ளென்றிவற்ருே டியையாமை யிற் பிறன்கட்டோன்றிய பேதைமை பற்றி நகை மெய்ப்பாடு பிறந்தது.

நகுவான் போலு மென்றமையின் வில்லி செவ்வி நகுதற் குரித்தன் றியல்பா னிகழற்பாலதேயா மென்ப தாசிரியற்குக் கருத்தா மாறும், அதனு லவன் மெய்யே நக்கா னல்லனுமாறும் பெறப்படும்.

இவ்விருபாட்டு முனிவனஞ்சயன் கூற்று.

மேல் ஓதியுற்ற செவ்விக்கியையவவன்கொள்ளுமாற்ருற் றுறவு முதலிய வீடுபே ருமாறும் அஃதேனே யுறுதிப் பொருண் மூன்றற்கும் பொதுவாதலி னவற்ருெடு மறுதலே யாகாவாறு மாசிரியனு னெடுத்தோதி வலியுறுத்தப்படும்.

௫௧. கவலுதற் குரிய ரல்லார்க் கண்டு
கவலுதி நீயோ காவல வானு
தறிவுரை வழக்கு மளக்கின் றனேயரோ
மாய்குநர்க் காகவு மாய்வா ராகி
வாழ்குநர்க் காகவு மயங்கி
யாழ்குநர் கொல்லோ வருட்புல வோரே. 58

கவலுதற்கு - கவலப்படுதற்கு ; கவற்சி : அருளினுவது. ஆனுது : அங்ஙனங் கவலுதலோ டமையாது ; மேன்மே லமையா தளக்கின் றனே யென்றுமாம். அளக்கின்றனே-மேன்மேற் சொல்லுகின்ருய் ; இகழ்ச்சிக் குறிப்புரை: அரோ : அசை-ஆழ்குநர்-அழுந்துவர். கொல்: அசை. ஓ : எதிர்மறை. இதுமுத லாசிரிய னம்பி செவியறிவுறூஉ.

௫௨. யான்பிறந் திலாமை யில்லே நீயுமற்
[illegible]பொரும் பொருநர் யாவரு மற்றே
[illegible]நற் பின்னரு மெல்லாம்
[illegible]ல மாதல் யாவது மிலமே. 59

ந[illegible]மை : இறந்தது தழீஇய வெச்சம். ஈன்-இவ்விடம்.

பொரும் பொருநர் : எதிர் பொழுதைப் பெயரெச்சம். யாவரும்: உம்மை : இறந்தது தழீஇய வெண் ணும்மை.

பொருநர் ; மன்னரும், படைத்தலேவரும், படைவயவரும்.

அற்று: அங்ஙனம் பிறந்திலாமை யில்லே ; அதுபோல வென்பது சொல்லெச்சம். யாமெல்லா மெனக் கூட்டுக. யாம் : முன்னிலே படர்க்கை யுளப்பாட்டுப் பன்மைத் தன்மை. யாவதும் - எவ்வாற் ருனும். இலம் : ஈண்டுப் படர்க்கையாரையு மொருங்குளப்படுத்தது; மரபு வழுவமைதி. இலமாத லிலம்.

இப்பிறப்பின் முன்னரு முண்மையை யெடுத்துக் காட்டியது இனிமேலு மில்லாமை யில்லே யென்பதனேயும் உள்பொருட்குத் தோற்றக் கேடு கொளப் படா வென்பதனேயும் வற்புறுத்துதற் பொருட்டு.

யா மென்ப தாகுபெயர்; உயிரு முடம்புங் கூடிய கூட்டரவின் மேற்ருகற் பாலதீண்டு நுண்ணுடலுயிரை வரைந்துணர்த்திற்ருதலின்.

சார்பின் பன்மை பற்றி யுயிர்ப்பன்மைத் தோற்றங் கொளப் படும். சார்பு: நுண்ணுடல்; அவை பருவுடல் போலாது வீடு பெறுங்கா று மழிவுமார்க்கமுமின்றி நிலைபெறுவன.

இதனு லுயிர்க்குச் சாக்காடு பிறப்புக்கள் இல வெனவும் அவை உயிரின் வேருகிய வுடலியல்பெனவும் உடலோ டுயிரிடை யுள்ள வொற்றுமை வழக்கு நோக்கி யுயிரினுடைய வெனவழங்கப் படுவ வெனவு முணர்ந்து கொள்க.

இதனுற் பிறப்புச் சாக்காடுகளினுண்மை பெறப்படும்.

௰௫. உடல்வா முயிர்க்கிவ் வுடலிற் படூஉ
மழமை யிளமை முதுமையோ ரற்றே
வேற்றுடல் கோடலும் வேந்தே
யாற்றவு முணர்வோ ரலமரா ரிதுவே. 60

படுதல்: தோன்றுதலையுங் கெடுதலையு மொருங் குணர்த்திநின்ற வுடனிலைப் பொருட்டு; தோன்றிக் கெடுமென்றவாறு.

மழமை யிளமை முதுமைகளோடு வேற்றுடல் கோடலு மொருதன்மைத் தென்க. மழமை: மகவிளமை.

ஒருதன்மைத் தாதலாவது: உடற்கியல்பாய்த் தொடர்ந் தொரு தலையாகத் தோன்றக் கடவதொருசெவ்வியாதல்.

மழமை யிளமை முதுமைகளின் வரவு செலவுகளெ[illegible]க் குக் கேடின்மை கண்டு வருந்தாதவாறு போலச் [illegible] புக்களின் வரவு செலவுகளின்கண்ணு முயிர்க்கு[illegible] கண்டு வருந்தக் கடவமல்ல மென்பது குறிப்பு.

வேற்றுடல் கோடல் - எடுத்தவுடல்விட்டடுத்தவுட[illegible]காளல். சாவும் பிறப்பு மென்பதாம்.

ஆற்றவும்: மிகவும். அலமரார்: கலங்கார்.

இதன்கணென வேழன் வேற்றுமைச்சொ லீற்றுக்கட் டொக்கது.

உணர்வில்லாரே சாவின்கட் கலங்குவ ரென்க.

௰௪. புலம்பொறி தம்முட் புணர்ந்த வூற்றம்
விளங்குறு தட்ப வெப்பமோ டாங்கே
யின்பத் துன்ப விரட்டையு மீனுவ
வங்கவை வரவுபோக் கான
விங்குத லின்றவை யென்றுநோற் றல்லே. 61

புலம்: ஓசை முதலாயின. பொறி: செவி முதலாயின.

ஊற்றம்: தொடுமுணர்வு. விளங்குறுதல்-புலனுதல். புலமும் பொறியுந் தம்மு ளொன்றெ டொன்று தொடுந் தொடுதல்கள் ஈனுவ வெனக் கூட்டுக. ஈனுவ: முற்றுவினை; ஈண்டு வினைப் பெயரன்று.

ஆங்கே யென்றதனன் இன்பத் துன்பங்களுந் தட்பவெப்பங்கள் போல வவ்வப் போழ்து பொறி புலங்களி னியல்பாய் வருவன வல்ல துயிர்க் கியல்பாவன வல்ல வென்றவாறும்.

அங்கு : பொறி புலங்கள் புணரு மூற்றுணர்வின்கண்.

அவை : தட்பவெப்பமும் இன்பத்துன்பமும்.

வரவு போக்குஆன - வருதலும் நீங்குதலு மமையாது மேன்மே னிகழ்வனவாம்.

இங்குதல்-அழுந்துதல். "ஆர் சூழ் குறட்டின் வேணிறத் திங்க" என்பது புறம். (283) துன்ப வின்பத் தழுந்துத லென்க. இன்று: வினையெச்சம்.

என்று-எற்று. நோற்றல்-பொறுக்க: வியங்கோள். எற்றல் : நீங்காமலும் வாராமலுந் தடுக்கமுயலாமை.

பொறுத்துக் கொள்ளலாற் கேடில்லை யெனவும் பொறுத்த லல்லது செயற் பாலதின்றெனவும் பொருதொழிதலே துன்ப மெனவுங் கொள்க.

வரவு போக் கான வெனவே அவை நிலையுத வில வென்பது பெறப்படும்.

௬௨. [illegible] துன்பந் தொடர்வுழித் துளக்க மின்றி
[illegible]ன்பந் துன்ப மென்றிவை யொக்குந்
[illegible]ணியன் சாவாச் சீர்மை
[illegible]ணியர் தகுமென நவிலப் படுமே. 62

[illegible]தொடர்தல்: ஒன்று பலகாலும், பல வேறு விராய்ப் பலகாலு மிடையிட்டு மிடையிடாதுப் வருதல்.

துளக்கம் : பொறுக்கலாற்றாது நடுங்குதல்.

திண்ணியன்-கலங்கா வுணர்வினன். சீர்மை - மேன்மை. நண் ணியர் : வினையெச்சம் ; நண்ணுதற்கு. தகும் : தகுவான். சாவாச் சீர்மை : சாவாமை யாகிய சீர்மை யெனினுஞ் சாவாமையின் சீர்மை யெனினுமாம்.

௬௩. உள்பொரு ளல்லதற் குண்மையு மேனை
யில்பொரு ளல்லதற் கின்மையு மிரண்டு
மில்லெனக் கொள்பவா லிரண்டன்
றொல்லியல் வேற்றுமை துணிந்திசி னோரே. 63

உள் பொருளல்லது : இல்பொருள். இல்பொருளல்லது : உள் பொருள்.

உண்மை-உளதாதல். இன்மை-இலதாதல். இல்-இல்லை.

தொல்லியல்-மாறுத பண்பு : இயற்கைத்தன்மை.

இப்பாட்டானே உயிருள்பொருளாயின் ஒருஞான்று மில் பொருளாகா தெனவு மில்பொருளாயின் ஒரு ஞான்று முள்பொருளாகா தெனவும் பெற்ரும்.

உள்பொருளாதலாவது மெய்யுணர்வுக்குப் புலனுகற் பாலதாதல். இல்பொருளாதலாவது அவ்வுணர்வுக்குப் புலனுகாமைப் பாலதாதல். ஆல்: அசை.

௬எ. இன்ன முற்றும் யாதனிற் கமந்த
வன்ன தழிவில தழிலில தாவதற்
கழிவுசெய் கிற்கு மாற்ற
விழிவுதீர் வில்லி! யாவயி னுண்டே. 64

இன்ன: இவை; என்றது: உயிருணரும் பொருளெல்லா மென்பதாம். கமந்த-நிறைந்தன. கப வென்னு முரிச்சொலடியிற் படைத்தது. செயப்பாட்டுவினை செய்வினையாய் நின்றது. அன்னது-அது. என்றது உடல்கொளுந் தனியுயிரை.

செய்கிற்கும்-செய்யவல்ல. ஆற்றல் யாவயினுண்டெனக. வினு வீண்டின்மை குறித்தது. வில்லி: விளி; குறிப்புச்சொல்; உயிர் கொல்லும் வில்லியல்லை யென்பதாம்.

௬அ. மாவரைத் தோளாய் மற்றினிப் பொராஅய்
வீவர லியல மேவுமிவ் யாக்கை
யளத்தற் காகா தலங்கா
திறுத்தற் காகாதி யாக்கைகொ ளுயிர்ச்[illegible]

மா-அழகு; பெருமை யென்றுமாம். வரை-ம[illegible]
மாம்; ஒப்பு. மற்று: வினை மாற்று.

பொராய்: ஏவல். வீவரல்-வீதல். வீதலாகிய விய[illegible]யன; யாக்கையென்க. இயல: முற்று. அடுக்கி வினையெச்சமறை மூன்றுங் கொள் என்னும் வினைத்தொகையொடு முடியும். வினையெச்ச மெண்ணுப் பொருட்டு வந்தன. ஆடிப் பாடி நின்ருளென்பன போல.

அலங்காது-அசைபாது. இறுத்தல்-அழித்தல்.

யாக்கைகொளுயிர்க்குமேவுமிவ் யாக்கை வீவரலியல; அதனை யினிப்பொரா யென வினைமுடிக்க. அழிவதுடம்பே யல்ல துயிரன் றென்பதாம்.

௬கூ. இவ்வுயிர் கொல்லு மிவ்வுயிர் கொலப்படு
மென்னுமிவ் விருவரு மென்னு முணரார்
கொல்லுத லேனைக் கொலப்பட
வில்லையா விரண்டு மிவ்வுயிர் தனக்கே. 66

என்னும்-என்று சொல்லும். இருவரும்: கொல்லு மென்பானுங் கொலப்படு மென்பானும். என்னும்-யாதும். கொல்லும்: கொலப் படும்: முற்று.

உணர்விலார்க்குக் கொலைக் குற்றமும் கொலப்படு மெண்மையு முள வென்பதனொடு முரணாமை யுய்த்துணர்ந்து கொள்க. இரண்டு மில்லை ; அதனால் என்பது சொல்லெச்சம்.

உ0. எப்பொழு தானு மிறப்பொடு பிறப்புச்
செப்புத லுயிர்க்குச் செல்லா தன்றியு
மிருந்துபின் னில்லை யென்பதூஉ மில்லைப்
பிறந்தில தழியாப் பெற்றித் திதுதான்
வைகலு மன்னு மாணத் தொல்லது
பருவுடல் கொல்லப் படுவுழி
வெருவுறக் கொலையுணன் மேவல திதுவே. 67

ஆனும்-ஆயினும். செப்புதல் செல்லா தென்க.

வைகலும்—எப்பொழுதும். மன்னும் : முற்று. மாண-மிக. தொல்லது – பழையது.

பருவுடல்: காணப்படு மூனுடல். வெரு—அச்சம்.

உயிர் கொலையுண்ணாமையை விளக்கி வலியுறுத்தவாறு காண்க. இதுதான் பிறந்திலது; பெற்றித்து. இது மன்னும்; தொல்லது; மேவலது.

உக. மாயா தெனவு மன்னுவ தெனவும்
யா தெனவு மிகாஅ தெனவு
ன்னுயிர்ப் பொருண்மை யெண்ணு மன்னே
ன்னைகொ லென்பதி யார்யார்க்
ன்னுறக் கொல்லுங் கொல்விக் கும்மே. 68

மா[illegible]து-பொன்றாது. மன்னுவது—எஞ்ஞான்று நிலைபெறுவது. வீயாது—குன்றாது. மிகாது-தோன்றாது. புணரியற்க ணெழுத்துத் தோன்றுதலை மிகுதலென்ப; நுண்ணிது பரிதாதலே தோன்றுதலாகலிற் றோன்றுதன் மிகுதலாமா றுணரப்படும்.

பொருண்மை—பொருட்டன்மை. பொருண்மை யெனினுஞ் சிறப்பிய லெனினுந் தன்னியலெனினு மொன்று. எனவே மாய்தல் முதலாயின வுயிர்க்குச் சார்பிய லெனப்படும் பொதுவியலாயின.

கொல்: அசை. என்னை? – எவ்வாற்றான்.

யார் யாரைக் கொல்லு மென்பது; யார் யாரைக் கொல்லுவிக்கு மென்பதெனஎன்பதென்பதனைக் கொல்லு மென்பதனொடுங் கொல்லுவிக்கு மென்பதனொடுந் தனித்தனிக் கூட்டிப் பொருள் கொள்க.

யார் யாரை? யென்னும் வினா இன்மைக் குறிப்பின. கொன்னுற—அச்சமுற. கொன் னென்னு மிடைச்சொற் பெயர்ச் சொல்லாயிற்று.

இனிக், கொன்னுற வென்பதற்கு வாளாவாக வெனப் பொருளுரைத்து என்ப தென்பதன்கண் என்று சொல்லுவ தென விரிந்து நின்ற சொல்லுதலொடு கூட்டினு மமையும்.

வாளாவாக : சொல்லள வன்றிப் பொருள்படாவாக.

௨௨. சிதவ லாடை சீத்துப் பிறிதொரு
புதுவ தாடை புனைப வாங்கே
வருந்திய மூதுடல் வாங்குபு
விருந்துடல் கொள்ளுமால் வினையுடல் கொளியே. 69

சிதவல்—பழைதாய்ச் சிதைவுற்ற சிதார். சீத்து—நீக்கி. வாங்குபு—நீக்கி. விருந்து—புதுமை. புதுவதாகிய வாடை. ஆங்கே-அது போலவே.

உடல் கொள்ளுமுயிர் உடல்கொளி யெனப்படும்.

உடல்கொளி விருந்துடல் கொள்ளு மென்க.

இதனாற் சாக்கா டென்ப திது வெனவும் அது வருந்தற்பால தன்றி மகிழற்பால தெனவும் விளக்கிக் கூறியவாறு காண்க.

பூதாடை யுடாநின்றே மூதாடை களையுமாறுபோலப் பூதுடல் பெறாநின்றே மூதுடல் விடுதல் பெறப்படு மென்ப; உயிர் ஒருபருவுடலொடு நிற்புழிப் பிறிதொரு பருவுடலை நுண்ணுடற்கட் கருக் கொள்ளுதலின்.

௨௩. இற்றெனு முயிரை யெற்றினு மெஃகம்
வெட்டகில் லாதால் வெவ்விய நெருப்[illegible]
மெரிக்ககில் லாதா லீர்ம்புன லதுவு[illegible]
நனைக்ககில் லாதா னண்ணி
யுணக்ககில் லாதா லுலவையு மன்[illegible] 70

இற்று — இத்தன்மையது : மேலுயிராமாறு கூறியவாற்றினைச் சுட்டியவாறு. எஃகம் — படைக்கலம்.

எற்றினும்-எவ்வாற்றானும். வெட்டகில்லாது - வெட்டலாற்றாது. ஆல் எல்லாமசைகள்.

உணக்கல் – உலர்த்தல். உலவை – காற்று.

மன்: அசை; விளிப்பெயருமாம்.

௨௪. ஈரப் படவு மெரிக்கப் படவுந்
தோயப் படவுஞ் சுவற்றப் படவு
மொல்வ தன்றுயி ருலவா தெங்கணும்
புல்குவ தூன்றுகால் புரைவ
தொல்கல தென்று முளதா வதுவே. 71

ஈர்தல்—வெட்டிப்பிளத்தல். தோய்க்க வென்னும் பிறவினை தன்வினையாயிற்று. தோய்த்தல் – நனைத்தல். சுவற்றுதல் – உலர்த்தல்.

ஒல்வது—இயல்வது. உலவாது—கெடாது. புல்குவது—பொருந்துவது. ஊன்றுகால்போல நின்றுங்குகிற்ப தென்க.

ஒல்கலது — தளர்ந்தசையாது; பொருட்டுச்சொல் ஆக்கத்தின் மேற்று.

உலவாது; புல்குவது; புரைவது; ஒல்கலது; உளதாவது என்பன முற்று. இவற்றுள் உலவாதென்ப தொன் றொழிய வேனை நான்கும் வினைப்பெயரெனினுமாம்.

உடு. தெற்றென் ணுதது தேரொண் ணுதது
பெற்றின் றுயது பிறிதா தல்லே
யிற்றென் றிவ்வுயி ரெனைத்தும்
புற்கென் றழுங்கல் பொருந்துவை யல்லலையே. 72

தெற்றென்ணுதது-தெளிவாகப் புலப்படாதது. தேர வொண்ணுதது-ஆராய முடியாதது. பிறிதாதல் பெற்றின்றுயது-திரிந்து மாறுதலைப் பெற்றிலதாயது. லகரம் : விரித்தல்.

பிறிதாதலை மெய்பிறிதாதல் போலக் கொள்க. பிறிதாதல்-ஒன் றொன்றுகத்திரிதல்.

இவ்வுயி ரிற்றென் று-இவ்வுயி ரித்தன் மைய தென் றுணர்ந்து.

எனைத்தும் :-எவ்வளவு சிறிதாயினும்.

எனைத்தும் பொருந்துவை யல்லை யென வியைக்க.

பொருந்துவை-பொருந்துதற்குரியை.

...-பொலிவழிந்து. அழுங்கல்-வருந்தியயர்தல்.

...ன முன்னிலை யெதிர்மறை வினைக்குறிப்புமுற்று ...து.

உ[சு]. ...ற் றிவ்வுயி ரெஞ்ஞான் றும்மே
...யுற் றிறத்தலுந் தோன்றலு மியல்பெனி
னற்றே யாயினு மழுங்க
லுற்று யாகிய ருரியை யல்லலையே. 73

மற்று : வினைமாற்றின்கண்வந்தது. மகரவொற்று விரிக்கும் வழிவிரித்தல்.

துனி - வாழ்க்கை வெறுப்பு. அற்றேயாயினும் - அவ்வாறேயாயினும். அழுங்க லுற்று யாகியர் - வருந்தலுற்றுயாதற்கு: வினையெச்சம். அழுங்கலி னுவ தொன் றில்லை யென்பது துணியப்படுதலின் அது பயனில் செய லென்பதாம். ஆயினும் : உம்மை : துணியாமைக் குறிப்பிற்று.

உஎ. பிறந்ததி யாதும் பெரும்பிறி தாதலும்
பெரும்பிறி தாயது பிறத்தலு மிரண்டு
மொருதலை யென்ப துணர்தி யாயின்
மருந்தில் செயற்கு மாழ்கி
வருந்தற் குரிய வழக்கினை யல்லலையே. 74

பெரும்பிறிதாதல்-இறத்தல். ஒருதலை-துணிவு. மருந்து : மாற்றுந் தடை. செயற்கு-செயலின்பொருட்டு. மாழ்கி-மயங்கி. வழக்கு-முறை. வழக்கினை-முறையுடையை.

இப்பாட்டகத்து மருந்தில்செயற் கென்ப தொழிந்த கூற்றுப் பெயர்த்துரை.

உஅ. இவ்வுயிர்த் தொடக்க மெதிர்வதூஉ மன்றே
யிவ்வுயி ரிடைநிலை யினிது புலனு
மிவ்வுயி ரெச்சமு மிருட்பாற் பட்டன்
றீங்கன முணரா திருப்பவும்
யாங்கன முளைதல் யாணர்த் தன்றே. 75

எதிர்வது-புலனாவது. எச்சம்-எஞ்சிய வீற்றுநிலை.

இருட்பாற் பட்டன்று-புலனாகாமையி னுணரப் படாததாம்.

உளைதல்-அலமந்து வருந்துதல். இவ்வுயி ரிடைநிலையே யல்லது முதலு முடிவும் புலனாகா.

துன்பந் தருவதனைத் துன்பந் தருவதென் றுணர்ந்தவழி யன்றே துன்புறுவது. அங்ஙன முணரா திருப்புவுந் துன்புறுவ தென்ன மடமை? யென்றவாறும்.

உளைதல் யாங்ஙனம் — உளைதலெவ்வாறு; உளைதல் கூடா தென்பது குறிப்பு.

யாணர்த்தன்று-அழகியதன்று,

உளைதல் நல்லதன்றென்க.

உகூ. உயிர்த்தெழு முயிரைத் தலைப்படு மெ…
வியத்தகு வஃதென விழிக்கு மொருவ…
வியத்தகு வஃதென விளம்பு மொருவன்
வியத்தகு வஃதென விளம்பக் கேட்கும்
வியப்பொடு நோக்கியும் விளம்பியுங் கேட்டு
மவரு ளொருவரு மல்ல
ருணரு முயிரை யுணர்கிற் போரே. 76

உயிர்த்தல்-உடம்பொடு கூடுதல். எழும்-தோன்றும். தலைப் படுதல்-எதிர்ப்படுதல்.

வியத்தருவஃது : விரிக்கும்வழி விரித்தல்.

என : ஒப்பிடைச்சொல். வியத்தகுவது போல வென்றவாறு. வியத்தலாவது : இவன் மிக்க வழகன், இவன் நன்கு கற்றான்; இவன் வேந்த னென்றாற்போல அருமை யுட்கொளல்.

விழிக்கும்-நோக்காநிற்பன்.

உயிராவ தொருதனியுணர் வல்லது பிறிதன் றாதலிற் பிறவா றுணர்ந்து வியப்போர் தெருளில ரென்பது தோன்ற உணரு முயிரென வெடுத்தோதிற்று.

அவரு ளொருவரு முணரு முயிரை யுணர்கிற்போ ரல்ல ரென முடிக்க.

உணர்கிற்போர்-உணரவல்லோர்.

வேறு வேறு சார்புபற்றி வேறுவேறுபோற்றேன்று முயிர், சார்பு நோக்காது தன்னையே நோக்குவார்க்குத் தானென்றே யல்லது வேறுவேறன்றுமாதலி னிதனை வியத்தசன் மெய்யுணர் வின்மையி னுவதா மென்பதே நம்பிக்குக் கருத்தாதல்வேண்டும். ஒருவர்க்கு வியப்புத் தாமுன்னுணராதது மதனுற் றம்மின் வேறுயது மாய பொருள்பற்றி யல்லது தோன்றற்பாலதன்று. வியப்பான் வியத்தகுவானை யொருபொழுது முணராதவனல்லனுக உணராதான் போல வியத்தல் அறியாமை யெனவே வியப்பான் வியத்தகுவானின் வேறல்லன். பிறனை வியப்பவன் றன்னைத் தான் வியப்பவனெனப்படு மென்பது நம்பியின் றுணிபாதல் விளங்கும். ஈண்டுக் கருதிய துயிரை யன்று; ஒன்று யெல்லாமாகிய கடவுளை யென்றுதல் ஒரு பெருஞ்சார்பினை யென்றுதல் கொள்க வென்பார்க்கு நம்பி வில்லிக்குப் போர்க்களத் துயிர்கொல்லுதலுங் கொல்லப்படுதலு மில்லை யென மறுத்துரைத்துத் தேற்று மெல்லைக்க ணங்ஙனங் கருத்துக்கோடல் பொருந்தா தெனமறுக்க. முன்னும் பின்னுங் கூறிப் போதருமாற்றுனும் நம்பி உயிர்ப்பன்மைக்கொள்கையனல்லன் உயிரொருமைக் கொள்கையனென்பது தெற்றென விளங்கும். உயி[illegible]ன் உணருந் துணைபற்றியாதல்பகைபற்றியாதல் [illegible]ருள்பற்றியாத லல்லது தன்கண் வேற்றுமை [illegible]ன்று காட்டலாகாமையின் இயல் வேறுபாடில் [illegible]றுபா டாமாறு செல்லாமையை யுய்த்துணர்தற் பொரு[illegible] முயிரென மிகுத்தோதிபதூஉமென்க.

௩௰. எவ்வுட லுள்ளுமா ரிவ்வுட லாளி
செவ்விதின் மன்னுந் தெறப்பட லொல்லா
தாதலி னிவர்க்கே யன்றி
யாவுயிர்க் கழுதலும் யாவதோ நினக்கே. 77

ஆர்-பொருந்தும். உடலாளி-உயிர். செவ்விது-திரிபின்றி: வினைக் குறிப்பு வினையெச்சம்; இன்: அல்வழிச் சாரியை.

மன்னும்: முற்று. தெறுதல்-கொல்லுதல்.

இவர்க்கே யன்றி: இங்குப் பொருதுபிரிழப்பான் வந்து நின்ற தமர்க்கே யல்லாமல்.

யாவது-எவ்வாறு பொருந்துவதாம். ஓ; அசை.

நினக் கென்னுஞ் சொல்லாற்றலாற்றுறவு பூண்டு தனியனுகிச் செல்லாது நாடாட்சி வேண்டித் தமரிற் பிரியலாற்றுத நினக் கென்பது போதரும்.

எனவே வில்லி தான் பிறிதுநிலைக்க ணின்று பிறிதுநிலையைக் காமுறுதலின் அக்காமுறவு நிலைநில்லாது வீயு மென்னுங் கருத்துப் பற்றியே நம்பி வலியுறுத்துச் செல்லல் பெறப்படும்.

௭௧. தன்னறங் கருதியு நின்னிது செய்யலை
யென்னதுந் துளங்கற் கென்னியை பிதுகேள்
குடிபுறந் தருநலங் கொண்ட போரினுங்
கடிதர லில்லாக் கவினலம்
வடிகணை கைக்கொண் மறவர்க் கின்றே. 78

தன்னறம்: குடிபுறந்தருவாற் குரியவறம். நின்னிது-நினக்குரிய விப்போரை. செய்யலை: முன்னிலை முற்றெச்சம்.

என்னதும்-சிறிதும். துளங்கல்-நடுங்குதல். இயைபுளன்-இயைந்த வாயில்யாது?. இல்லையென்பது குறிப்பு.

கடிதரல்: குற்ற மென்று நூலோர் விலக்கல்.

கவின்-அழகு. அழகிய நல்வினை யென்க.

வடிகணை-தீட்டிய அம்பு.

குடி புறந்தருநலங் கொள்ளாப் போரெல்லாங் கொலைக் கொடு வினை யெனநூலோராற் கடியப்படு மென்பதூஉ மிதனாற் கருதிக் கொள்க.

௭௨. முயற்சி யேனை யுளப்பா டின்றிய
நிகழ்ச்சி தானே நேர்ந்தது நிற்கிது
துறக்க வாயிற் கதவந் திறப்ப
திப்பரி சியல்போ ரெய்தினோர்
செப்பரு நயவர் திருவத் தவரே. 79

உளப்பாடு-நினைப்பு. முயற்சியு முளப்பாடு மில்லாத நிகழ்ச்சி தானே நேர்ந்த தென்றது களப்போரை.

அஞ்சாது பொருது துஞ்சுவோர் துறக்க மெய்துப வாகலிற் போர் துறக்க வாயிற் கதவந் திறப்ப தெனப் புனைந்துரைக்கப்படும்.

இப்பரிசியல் போர்: கிடைத்தற் கரிதாய்த் தானே வந்து கிடைத் ததுந் துறக்க மீனுவதுமா யிவ்வாறுள போர்.

நயவர்-இன்பமுடையோராவர். திரு-நல்லூழ்வினை. திருவத்தவர்-நல்வினைசெய்தவராயினர். அத்துச் சாரியை ஒருமொழிப் புணர்ச்சிக் கண் வந்தது.

௭௩. அன்றியுங் கேட்டியிவ் வறப்பெரும் போரை
நன்றியென் றியற்றலை நண்ணுதி யாயிற்
பொன்றலிஃ றன்னறம் புகழொடு
கொன்றனை யாகுங் கொடுங்கோட் படுதியே. 80

நன்றி-அறம். இயற்றலே நண்ணுதியாயின்-இயற்ருயா யிருப்பையானல்.

இல் தன்னறம் : அஃறிணைபோலப் புணர்ச்சி யெய்தின.

கோள்-தீவினை. படுதி-அகப்படுவாய்.

இப்போரை வில்லி செய்யாதொழிதலே குற்றமாவ தென்ருனம்பி.

நச. ஐய! நின்பா லழியா தாகும்
வையஞ் சொல்லு மாயா வசையே
யிசையினை நட்டோற் கெய்திய
வசையினு மினிதுதான் மாய்குவ தவற்கே. 81.

வசையழியாதாகுமென்க. வசையினு மென்னு மும்மை அசை. வசையின் மாய்வ தினி தென்றது.

"சாதவி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை"

முப்பால். ஈகை. ௰) என்ருற் போலக்கொள்ளப்படுங் குறிப்புச் சொல், மாய்தலினும் வசை யின்ன தென்பது கருத்து.

நரு. செருவிற் புலிநிகர் திண்டிற லாள!
வருளிற் போர்விட் டகன்றனை யெனினும்
வெருவிச் செய்தனை யெனஅ மிகவு
...ள்ளி நகுப விகற்பெருந் தேரோர்
...ளி யுணர்தி தேரோர் பலரா
...ருஞ் சுட்டு நண்ணினை
...ரு நொய்ம்மை பெறுதியோ மற்றே. 82.

திறலா... வெற்றி யுடையவனே! ஆற்ற லுடையவனே யெனினுமாம். சுட்டு-நன்கு மதிப்பு.

நொய்ம்மை-இகழப்பட்டெளியனுதல்.

வினு ஓகாரம் எதிர்மறைக்க ணின்றது.

மற்று : அசை :

நசு. எடுக்கு மிப்போ ரிகந்தனை யேனிற்
கடுக்கு மின்ன ரடாத வாகிக்
கிளக்கிய வாகாக் கிளவி பலவுந்
தொடுக்குவர் நினது தோலா வாற்றலை
யிழித்துரை யாடுவ ரிதனினும்
பழித்திடு மாணப் பருவரல் யாதே. 83

எடுக்கும்-மேற்கொள்ளும்; உயர்த்துச் சொல்லப்படு மென்றுமாம். இகந்தனையேல்-செய்யாது விட்டாயாயின். அடுக்கும்-சேரும். இன்னர்-இனியரல்லார்; பகைவர். அடாத-தகாதன. கிளக்கிய வாகா-சொல்லுதற் காகாத

தொடுக்குவர்-இசையத்துச் சொல்லுவர்.

மாணு-தகாத. பருவரல்-துன்பம். யாதென் வினு இன்மை குறித்தது.

௩௭. கொலப்படின் வானகங் கொள்ளுவை பகையை
வெலப்பெறின் வையக வேந்து நுகர்வை
யிருவழி யானு மிழவின்
றெருவழித் துணிவுகொண் டெழுவினிப்
பொரவே 84.

இழவு: பெறற்பாலதனையிழத்தல். ஒருவழித் துணிவுகொண்டு: போர் செய்வலென வொருவழியிலே துணிவு கொண்டு.

இனி-இப்பொழுது.

பொர வெழு வென்க

வேந்தரா லாளப்படுவது வேந்து. வையகமாகிய வேந்தென்க.

௩௮. இன்பந் துன்ப மிழவோ டூதியம்
வென்றி தோல்வி யென்றிவ் விரட்டை
யொப்பக் கொண்டுபோ ருளுற்றுக
தப்பற் கொடுமை சாரகில் லாயே. 85

ஊதியம்-பேறு.

ஒப்பக் கொள்ளுதலாவது: இவ்விரண்டனு[illegible] விழைந் தொவ்வொன்றனை விழையாமை யின்றி [illegible] மொருங்கு விழையாமையு மொருங்கு விழைத[illegible]நங்கு கடவுட்குக் கொடுத்தலு பொருங்குயிரோ டியைபில [illegible]றலுமது.

தப்பல்-கொல்லுதல். தப்பலான் விளையுங் கொடுமை யென்க. சாரகில்லாய் - சாரமாட்டாய்.

௩௯. இப்பரி சன்ப! செப்பிய பொருண்மை
யொப்பரும் புலமை யுதாஅன் றினியே
புணர்ப்பு மாமா புகலக் கேளிது
நினைப்பொடு தெளிந்து நிற்கின்
வினைப்பிணி தடிதியால் வேந்தர் வேந்தே. 86

இப்பரிசு-இவ்வாறு. புலமை: புலமைப்பாற்படுவது. உதா அன்று-உதுவன்றி.

புணர்ப்பு-உளப்பாடவித்தல். ஆமா-ஆமாறு; கடைக்குறை.

வினைப் பிணி-வினைக்கட்டு. பிணி: நோயுமாம். தடிதி-வெட்டு வாய்: அழிப்பாயென்பதாம்.

ஆல்: ஆசை.

புலமையாவது வினையின்மையும் புணர்ப்பாவது வினையடக்கலு மாமாதலிற் புலமை புணர்ப்புக்களில் வினையமைதிவேற்றுமை தெரிந் துணர்ந்துகொள்க.

சஎ. இவணிதன் முயற்சி தவலில தோருந்
தவறில தின்ன தகைநலம் வறிது
மெதிர்வுறு காலை யிறப்பவு
மதிர்வுறு மச்ச மகற்றும் பிறவே. 87

இதன்முயற்சி: இப்புணர்ப்பென்றதனைச் செய்ய முயலு முயற்சி.

தவல் இலது-கெடுத லில்லது. கேடில்லதாதலாவது: அம்முயற்சி யமையாது மேன்மேலெழுந்து முற்றுதலும் நிகழ்ந்தவளவிற்குத் தக நலம் பயத்தலுமாம்.

தவறிலது - வழுவுதலில்லது. என்பது: வேறு வினைவழுவிற் குற்றமாமாறுபோலப்புணர்ப்புவினைவழுவிற் குற்றமாகா தென்ற வாறும்.

தகை-பெருமை ; அழகுமாம்.

நலம்-நல்வினை ; என்றது புணர்ப்பினை. வறிதும்-சிறிதும்.

எதிர்வுறு காலை-வருங் காலம். இறப்பவும்-மிகவும்.

[illegible]றும் - நடுக்கமுறுகின்ற ; பெயரெச்சம் அச்சமெனப் [illegible]பெயர்கொண்டது.

[illegible]க்குந்தன்மையது ; நெருப்புச் சுடுமென்பதுபோல [illegible]பு வினைப்பாற்படுந் தெரிநிலைவினை.

[illegible]தும் பிறவென்பது மசைநிலை.

இப்பாட்டு மேற்றோற்றுவாய்செய்த புணர்ப்பின்சிறப்புக் கூறிற்று.

சஅ. துணிபிய லுணர்விவட் டொக்க வொன்றே
துணிபக லுணர்வு துனைந்தா னது
கிளைபல மேன்மேற் கிளைத்துத்
தளைவினை யெனத்துயர் தலைத்தலைத் தருமே. 88

துணிபே இயல்பாகிய வுணர்வென்க. துணிபு-ஒருமைப்பாடு. விரியாது சுருங்கிய உணர்வு ஒன்றேயாயிருக்கு மென்க. இவ் வுள்ளமே புணர்ப் பெனப்படுவது.

துணிபகலுணர்வு-துணிவு நீங்கிய வுணர்வு.

துனைந்து: நில்லாது விரைந்து. ஆனது-அமையாது.

வினைத்தளை யென மாறுக ; வினைக்கட்டு.

உணர்வொன்றுகாது பலவாதலே வினையெனப்படுவதென வினை யாவ திஃதெனத் தெரித்தவாறு.

இதனால் நினைப்புப் பலவாதலே வினை யெனவும் நினைப்பொன் ருதலே புணர்ப்பெனவும் நினைப்பொன்று மில்லாமையே புலமை யெனவும் வினை, புணர்ப்புப், புலமை மூன்றனிடையும் வேறுபாடு கண்டுகொள்க.

ஆக வென்னும் பொருட்டாகிய எனவெ னெச்சம் ஆகி யெனச் செய்தெனச்சப்பொரு டந்தது.

தலைத்தலை-மேன்மேல்.

இப்பாட்டகத்தே உள்ளம் உணர்வென வொற்றுமை வழக்குப் பற்றி யோதப்பட்டது. உணர்வென்பது கிளைவிடாதொன்றேயா யெஞ்ஞான்று முள்ளது. உள்ளமே கிளைவிட்டுப் பலப்பலவாவது.

துணிபகலுணர்வு துயர் தலைத்தலைத் தருமென முடிக்க.

சஉ. வேத வழக்கு விழல்விழை வாளர்
கோது வினைபுகல் கொடித்துணர்க் கிளவி
யோதுவர் பலவுமிவ் வொழிய
வோதுவ விலவென வுரைக்கின் றிசினே. 89

விழைவாளர் - விருப்பமுடையவர். வேதவழக்கு விழைவாள ரென்றது காட்சியளவையு மாராய்ச்சி யளவையுமே யளவையாகற் பால வன்றி அவற்றையே யெடுத்தோதுதலின் அவற்றின்பாற் படுவ தாகிய நூலினைத் தனியளவையாகக் கோடல் பொருந்தாதாகவு மதனையே யளவையாக நாட்டிக்கொண்டு தமது வேத[illegible]த்து வழங்கு மெல்லாநூற்கு முதனூ லெனவு மதனகத்[illegible] ளில்லை யென்று மிப்பொழுதில்லாத அறப்பால் [illegible] இன்பப் பால்கள் முன்னுளவெனவும் அஃதான்றே[illegible] துணரப்படுமெனவும் வேதமே கடவுளாற்செய்யப்பட[illegible]மது கடவுளானுஞ் செய்யப்படாதியல்பாகவே தொன்று தொட் டுள்ள தெனவும் வேள்விக் கொலைஅறமெனவும் அது துறக்கந் தருமெனவு மிங்ஙனம் தமக்கு வேண்டியவாறெல்லாம், பிறருடம் படினும் படா தொழியினும் பிதற்றி வற்புறுத்திக்கொண்டிருப்பவரை யெனவுணர்க. இவர் பிதற்றும் வழக்குக் கிவர்செய்துவைத்துக் கொண்ட நூல்க ளல்லது உலகத் தெத்துணை நுண்ணுணர்வுடையோர் செய்த நூல்களுஞ் சான்றாகா.

வேதம் : ஆரிய ரோதும் பழைய தொகைநிலைப் பெருஞ்செய்யுள். வேதம் : வடசொல்.

விழல் விழைவு : ஐம்புல வின்பமாகிய சிறுபய னல்லது பெரும் பய னில்லதாகிய விழைவு. விழல்-பயப்பில்லது.

கோது கோதமென அம்முச் சாரியை பெற்றது. கோது-பயன் கழிந்தது. கோத வினை புகல் கிளவி யென்க. எனவே அவை புணர்ப்பும் புலமையுங் கூறு வென்பது பெற்றும். இங்ஙனம் நம்பி மாயோன் கூறுதலின் இஞ்ஞான்று புலமை யுணர்த்தும் வேதப்பிரிவு

நம்பிநாளேயி லின்றெனவு மஃதிடைச்செருக லெனவும் கொள்ளத் தகும். அவை: அணிக்கொணரி யென்னும் பொருட்பெயர். தன்னே யுணரு முயிரி னுணர்வைப் புறம்போகாமே மீட் டுயிரி னண்மைக் கட் கொண்டு வருவ தென்பது அணிக்கொணரி தென்னுஞ் சொல் லின் பொருளாம். அவ்வாற்றுனே அப்பெயர் மெய்யுணர்வு பயக்கு நூல்கட்கெல்லாம் பொதுவாதற் குரியதாகும். துணர்-பூங்கொத்து. கொடிப் பூங்கொத்துப் போலுங் கிளவியென்றது அக்கொத்திற்பூப் பூவேயாயிருந்து சிறிது பொழுது பொலிந்து பிறருள்ளங் கவர்ந்து அவரான் மேற்கொள்ளப்பட்டு வாடித் யுதிர்ந்து வீழ்ந்து தூரா லென அலகிடப்படுவன வன்றிக் காயீன்று பயன்படாதவாறு போலச் சொல்லு மளவிற் செவிக்கினியவாய்ப் பின்பு வெறுத் தொதுக்கப்படுவன வல்லது பிறர்க்காவன பயத்த லில்லாமைபற்றி யெனக் கொள்க.

கிளவிபலவு மோதுவரென்க

இவ் வொழிய-இவை தவிர.

ஓதத் தகுவன வில வெனவே வேருேதப் படுவன வெல்லாம் பயனில வென்ப தவர்கருத்து.

உரைக்கின்றிசின்-உரைக்கின்ருர்; இசின் உயர்திணைப் பலர் பாற்படற்க்கைக் கண்வருதல் ''நேரு நிறையு மென்றிசிற் பெயரே'' (தொல், செய்யுளியல், 3,) என்புழிப் பெறப்படும்.

சா[illegible]ழைவுளங் கோட்படு வேத வாணர்
[illegible]வினைப் பெருக்குமவ் விண்ணகந் தருபவும்
[illegible]பொடு நுகர்வே பயப்பவு மாய
[illegible]ல வினைத்திறம் பகர்வர்
[illegible]படு துப்பொடு பொருள்பெறல் குறித்தே.

பொரு ளின்ப விழைவினு னுள்ளங் கவரப்படுகின்ற வேத வாண ரென்க. வாழ்ந ரென்பதன்மருஉ; வாணரென்பது.

மண்ணகத்தினு மிக்க தன் னின்பநுகர்வுச் சிறப்பானே விண் ணகந் தன்கண் வாழு மிமையோர்க்குந்தன்னே வியக்கு மாந்தர் க்கு மேன்மேல் விழைவு வளர்ப்பதாய் வீடுபேற்றுக்குத் தடை யாய்ப் பொன்விலங்குத் தளே போல்வ தென்ப.

பிறப்பாவன: இமையவர்பிறப்பு, வேந்தர்பிறப்பு முதலிய செல் வப்பிறப்பாம்.

நுதர்வு: சிறந்த ஆடை, அணிகலம், பெண்டிர், புகழ் முதலிய வாக வைம்புலப்பாற்படுவவற்றைத் துய்த்தல்.

வினைத்திறமாவன: குதிரைவேள்வி, ஆவேள்வி, மகவுதரு வேள்வி வேந்துவெல்வேள்வி முதலாயின.

எனவே பிறப்பினேயும் நுகர்வினேயு நீத்துப் பேரின்ப மெய்தக் கடவார்க்கு வேதவாணர் பகரும் வினைத்திறம் பலவு மின்னு வாக விற் கடியப்படுவன வென்பதாயிற்று.

புலப்படு துப்பென்றது: அவை அழிதன்மாலைய வென்னுங் குறிப்பிற்று.

துப்பு - நுகரப்படுவன.

வேதவாணர் தாந் துப்பும் பொருளும் பிறராற் பெறுதல் கருதியே அவர்க்கு வினைத்திறம் பலவும் பகர்வ தல்லது பிறர் நலங் கருதியன்றென வேதவாணரது புன்மையை விளக்கியவாறு கண்டு கொள்க.

சச. ஆட்சியு நுகர்ச்சியு மவாஅம் வேட்கையிற்
காட்சியை யிழந்து மாட்சிமை யிலர்க்குத்
துணிபிய லுளமெனச் சொற்ற
திணியுறு நொசிப்புச் செப்பவும் படாதே. 91

ஆட்சி: பிறரை யெல்லா மேவல் கோடல். காட்சி - மெய் யுணர்வு. மாட்சி - நற்பண்பு நற்செயல்கள்.

இழந்தென்னும் வினையெச்சத்தெரிநிலை, இலர்க்கென்னும் வினைக்குறிப்புப் பெயரின் வினைக்குறிப்புக் கொண்டது. "ஆவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே" (தொல். எச்சவியல். 36) என்ற தனான் வினையெச்சங் கொள்ளும் வினைக்குறிப்புமுற் றீண்டாக்கச் சொற் றொக்கு நின்றது. இலராயினார்க் கென வாக்கம் விரியும்.

நொசிப்பாவது: உள்ளந் திரிபின்றி நின்றாங்கு நீடு நிற்ற லாதலிற் றுணிபிய லுளமெனப்படும். "நொசிப்பி னேழுறு [illegible]னி யுணர்ந்து" (ஐந்தாம் பரிபாடல், அடி 37.) என்ப[illegible]

திணி - தளராது நிலைபெறுதல், உறு - மிக்[illegible] புணர்ப்பினெண்சினையுளு மெட்டாவது.

செப்பப்படாது: நூல்களாற் சொல்லப்படாதென[illegible]

உம்மை: அசை.

வழக்கிற் கொள்ளப்படாமையே யன்றி நூல்களாற் சொல்ல வும் படாதென வெச்ச வும்மை யாக்கினுமாம்.

சரு. துப்பா கின்ற மூப்பாற் பண்பே
செப்பா நிற்பது திருந்தா வேதம்
முப்பாற் பண்பு முனிந்தனை யாகிக்
கவர்வு நீங்கிக் காலூன் றுளமொடு
வரவு செலவு வையா
துரவு மார்ப! வொடிவற நின்மே. 92

துப்பாகின்ற - நுகரப்படுவனவாகின்ற.

யாக்கையும் வாயிலும் நிலனுந் துப்புரவு மென நாற்கூறுபட்ட தோற்ற மெல்லா மூவகைப்பண்பின்பாற்பட்டன. அவற்றையே பொருளாக வுடையன; வேதமெல்லாம். எனவே அவை அம்மூப் பாற்பண்பின் வேறாகிய வுயிரியலையு மதனைப் பெறும் வழியையு

நுவலா வென்பது கொள்ளப்படும். அஞ்ஞான் றுயிர்மெய் யாராய்ச்சி பெரு வேதவழக்கிகள் பிற்றைஞான்று பெற்ற வவ்வ ராய்ச்சி, ஆரியராகிய தம்மின் வேருய் உயிர்மெய்யாராய்ச்சி யொடு தோன்றிய தமிழ்மொழியாளர்பாற பெறப்பட்டதென்பது துணியப்படும். வையத்துப் பண்டுதொட்டுச் சிறந்துவரும் பல் வேறு மக்களினங்களுள்ளுந், தாம் வழங்கு மொழியி னெழுத்திசை யெல்லா முயிரொடு மெய்யொடு மொப்புமை கொள்ளலாமா றமைந்திருத்தலு மவ்வொப்புமை கண்டு உயிரெனவு மெய்யெனவு மவற்றுக்குக் குறியிட்டு வழங்குதலுந் தமிழ்மொழிக்க ணல்லது வேறெம்மொழிக்கண்ணுங் காணப்படாமை ஆரியர் முதலிய யாவர்க்கு மொப்ப முடிந்ததாகலானும் ஆரியரது வேத முண்டா தற்கு முற்றெட்டுத் தமிழ்வழக்கு வருதலானும் இதளினுஉங்தொல் சான்று வேறு காட்டலாவதின்மையானு மிச்சான் றேனை நூற் சான் றெல்லாவற்றினும் வலியுறற்பாற்றுகலானு முயிர்மெய் யாராய்ச்சி யெனவு மெய்யுணர்வெனவும் வீட்டுணர்வெனவும் வழங்கப்படுமுடிபுணர்வு தமிழரினின்றே யாரியர் பெற்றிருத்தல் வேண்டுமென்பது மறுக்க முடியாததாகும். தமிழரொடு கலவாத முன் ஆரியர்க்கு அவ்வுணர்வின்மை நினைக்க. அதனைப் பெற்றபின்ன ராரிய ரதனைத் தம் வேதத்தின் பிற்பாலெனவுந் தமக்கே யுரிய தெனவும் வழங்கிக் கொள்ள லாயினர். அது தம் வேதத்தின் பிற்பாலென்பது வாய்மையாயிற் பொய்யாநாவினையுடைய நம்பி மா[illegible] இங்ஙன மதனெடு பால்பற்றி விதவாது அவ்வேதத் [illegible]யெரையு மிகழ்ந்து வையக்கடவனல்லனென்பது துணிக. [illegible]ஞான்றைச் சான்றோரையொப்பவே பல்லாயிரம் [illegible]முன்னருஞ் சான்றோர் வேதத்தையும் வேத வழக் கை[illegible]ரையு மிழிவாக நோக்கிவந்தன ரென்பதூஉம் பெறு[illegible]

இனி, முப்பாற்பண்பாவன: உண்மை, புன்மை, மைம்மை யென்பன. உண்மை யெனினும் ஒண்மை யெனினு மொன்று.

உயிரின் வேருய மெய்யெல்லா முப்பண்பின்பாற்பட்டன வென்பது தமிழர்தம் படைப்புக் காலந் தொட்டுணர்ந்து வழங்குப. இவர் அவற்றை வன்மை, மென்மை, யிடைமையெனக் குறியிட்டு வழங்கினர். உண்மை, வன்மை யெனப்படும். மைம்மை, மென்மை யெனப்படும். புன்மை இடைமை யெனப்படும்.

முனிந்தனையாகி - வெறுத்தனையாயென்பது.

கவர்வு: இன்பத்துன்பம்; விருப்பு வெறுப்பென்றற் போலு மிரட்டைகள்.

காலூன்றுதல்: அசைவின்றி நிலைபெற நிற்றல். வரவு செலவு: இன்ப முதலாயின வருதலும் நீங்குதலும்.

வையாது-கருதாமல். உரவு மார்ப-பரத்தலுடைய மார்புடைய வனே!

ஒடிவு-நிலைதளர்தல். அற-இன்றி. பண்பே யென்னு மேகாரந் தேற்றம் ;பிரிநிலையுமாம்.

சசுா. கோடை யென்றூழ்க் கூர்ங்கடுங் கொதிப்பு
வீடப் பருகல் வேண்டு வார்க்குச்
சின்னீர்க் கேணி தேவைப் படுந்துணை
முன்னீ ரன்ன முதுகுள மாகு
மற்றே வேத மறிவுசால்
பற்றேய் தந்த பார்ப்பான் றனக்கே. 93

கோடை-வேனிற் செவ்வி. என்றூழ் - வெயில். கூர் - மிக்க. கொதிப்பு-மிக்க வெப்பம்: உடல் வெப்பமும் வயிற்றுவெப்பமு மென்க.

வீட-கெட. சின்னீர்-சிறியநீர். ஈண்டுச் சின்மையைச் சின்னா லென்புழிப்போலக் கொள்க. சின்மையைக் கேணிக்குங் கூட்டினு மாம்.

கேணி-சிறுகுளம். கிணறுமாம்.

தேவை-கொளற்பாலது. இது கொளற்பொருட்டாகிய தெவ் வென்னு முரிச்சொலடியிற் றோன்றிய பெயர்ச்சொல். துணை-அளவு.

முன்னீர்-கடல்; யாறு முதலிய நீரெல்லாந் தோன்றுமுற் றோன்றிய நீராதலிற் கடன் முன்னீரெனப்படும். ஐம்பெருந்தோற் றத்துண் மண்ணின்முற்படத் தோன்றிய நீரெனவு முரைப்[illegible]

இனி, முந்நீரென வோதித் தன் பரப்புக் குறைந்து [illegible] படுத்தலுங் கரைகடவாது கிடந்து, மழைபெய்[illegible] நிலம் பாதுகாத்தலும் கரைகடப்பப் பொங்கிநிலப[illegible] முத்தன்மை யுடைத்தாதலிற் கடன் முந்நீரென்னு[illegible] வுரைத்தலுங் கொள்க

முதுகுளம் - பெருங்குளம்.

பருகல்வேண்டுவார்க்கு முன்னீ ரன்ன முதுகுளஞ் சின்னீர்க் கேணி தேவைப்படுந்துணையேயாகு மெனக் கூட்டுக. துணையே யென்னு மேகாரந் தேற்றம் ; தொகுத்தல்.

அற்றே : அம் முதுகுளம்போலச் சின்னீர்க் கேணி யளவினதே யாம்.

வேதம் : தொகுதியொருமை.

பற்று ஏய்தந்த : வேதத்திற் பற்று விடாது பொருந்திய.

அறிவு சால் பார்ப்பானென்க. சால்-அமைந்த-பனைநட்டுப் பழம் பறித்துண்பான்போலப் பார்ப்பான் றன் பரந்த வேதத்தைப் பன் னெடுநாட் பயின்று பிறநூல் வழக்குக்கொண்டு தன் வேதத்திலே தான் வலிந் துய்த்துணர்ந்து சொல்லும் புணர்ப்பும் புலமையும் பிறன் றன்சிறுநூல் கற் றடிப்படுத் திடர்ப்பட்ா தினிது கொளற்பால வாகலிற் சில் வாழ்நாளையும் பழுதே பாழாக்கி மலை கல்வி யெலிபிடிக் கும் பார்ப்பானை அறிவு சால் பார்ப்பானென்ற திகழ்ச்சிக்குறிப்பு.

ஒருவன் றனக் குரித்தாயது மண்மைக்கண்ணது மினியதுந் தெள்ளியதுந் தூயதுமாய கேணிப் புனல் பருகித் தன் னடக்கலாகா நீர்வேட்கையை வல்லே தணித் துயிருயற்பாலனாகத், தனக் குரித்தல்லாததுஞ் சேய்மைக்கண்ணது மின்னாதுந் தெளிவிலதுமாய பெருங்குளனீர் சென்றுண்ண நினையாமைபோலப் பிறர் தமக்குரிய வல்லவும் பார்ப்பார்க் குரியவாய்ச் சேய்மைக்கண்ணவும் வலிந்து முயன் றிசைத்தலிற் செவிக்கின்னாவும் பொருட் டெளிவிலவும் பலர் ஆங்காங்குத் தத்தமக் கேற்றவாறு மாற்றிக் கொண்டு பலவா றோதுதலிற் றூய வல்லவுமாய வேதங்களை விழைந் துணர்வு மாய்ந்துபோவதற்குப் பார்ப்பாரைச் சார நினையாது, தமக்குரியவு மெளிதிற் பெறக்கடவ அண்மைக்கண்ணவும்வலிந்து முயன் றிசைத்து மூச்சுக் காற்றை விரையவும் நீளவும் வெளிப்படுத் தடக்கமு மறிவு முயிரு மிழவாது மெல்லென விசைத் தெய்ப்பின்றி யியல்பாக வமைந்துய் தற்குரிய விசையுடைமையிற் செவிக்கினியவுந் தாம் நுதலிய பொருளை மயங்கவுங் குறிப்பானு மெய்துவியாது மயங்காமே வெளிப்படக் கூறுதலிற் றெளிவுடையவும் பொருடுணியா தையுறப் பலவா றோதுதலின்மையிற் றூயவுமாய்ச் சில்லெழுத்திற் பல்பொருளைச் செவ்விதிற் றெளிக்குஞ் சின்னூல் பயின்று விரைய நொசிப்பும் புலமையும் பெற்றுய்ந்து போதலே சில்வாழ்நாட் பல்பிணியுடைய மக்கட்கு வேண்டற்பாலதெனப் பேரருள் கூர்ந்து திருமாலென்னு மொருபேரிறைவன் பணித்தருளினான்.

[illegible]டி வரையும் வர வைந்து பாட்டிற் கூறியவாற்றானு [illegible]ார்ப்பானுக்கென வெடுத்துச்சுட்டி வேறுபடுத்த [illegible]லாயிரம் யாண்டுகட்கு முந்துற ஆரியருட் பார்ப் [illegible]ம்வேதத்தையும் வேதவழக்கையும் பழித்துரைப்பா ரொரு[illegible]ரிய ருமிலராகப், பழித்துரைத்தலானும் முழுமுதற் கடவுளின் றோற்ற மெனப்படுமிச் செல்வநம்பி பார்ப்பனர்பாற் படாது வேதத்தையும் வேதவழக்கையு முடன்படாது புறம்பாகச் சிறந்த செந்தமிழ்மக்களினத்துச் சிறந்த தலைவனும் புலவனுமாயினானென்பது வெள்ளிடைமலையாகும்.

இப்புலவ னம்பி பிறந்தது தமிழகமென்றல் இவனது வடமதுரை நிலவு மடைகரை யுடைத்தாய யாறு தொழுநையெனத் தமிழ்ப் பெயர்பெற்றது கண்டசுவடுகொண் டுய்த்துணரப்படும். தொழுநை பொருநைபோலும்; இதன்சிதைவே வடசொல்; தொழத் தகுவ தென்னும் பொருட்டு.

வடமதுரை யென்னும் பெயருந் தென்மதுரைபோல யாதேனு மொரு தமிழ்மொழிச் சொல்லையே திரித்துக் கொண்ட வடசொல்லாயினுமாகலாம்.

ஆய்ப்பாடியு முல்லைநில்னு முல்லைக்கடவுளும் வரைந்து வைத்துவழங்குந் தொல் பெருமரபு ஆரியர்க் குரித்தன் றாகலானும் யாமேற் கொண்ட கொள்கை நன்கு வலியுறுத லினிது காணப்படும்.

இனி இப்பாட்டகத்துப் பிறவிப் பெருந்துயர் பொறுக்கலாற்ருது மெய்யுணர்வு வேட்டலே யுள்ளுறுத்துக் கோடையென்றாழ்க் கூர்ங் கடுங் கொதிப்பு வீடப் பருகல் வேண்டுவாரெனக் கூறியவாறு கண்டுகொள்க.

சஎ. இனையது கேண்மோ யாதா யினுமொரு
வினைசெயற் கன்றி வினையி னூதியக்
கெனையது முதன்மை யென்று மில்லைநிற்
கவ்வினை யூதிய மவாற்க
வவ்வினை யொழிதலு மவாவற் கவ்வே. 94

இனையதுகேள்-யான் சொல்லலுறு மிச்செய்தியைக் கேள். மோ: முன்னிலையசை.

உடம்புடையவுயிர் கடவுளேயாயினும் வினைவிளைவு வேண்டினும் வேண்டாவிடினு மறந்தாயினும் வினைசெய்தலை யின்றியமையாமையும், குன்ருநிறைவினற்புடைபெயர்ச்சியொருஞான்று மொரு சிறிது மமையாதவுயிரின் முன்னிலை பொருட்டாக வினையும் வினைவிளைவுந் தொடர்ந்தியைந்து தாமே நிகழ்வனவாக வவ்வியைபுபற்றி அவ்விரண்டன்கண்ணு முயிர் யானெனதெனத் தான் பற்றி நிற்பது போலநின்று தனக்குத் தானுணர்வாயமைவ தல்ல தவ் வியல்பாகிய வினையையும் வினைவிளைவையுந் தான் செய்தலுஞ் செய்பாதொழிதலுங் கொள்ளுதலுங் கொள்ளாதுவிலக்குதலு மென்றிவை தனக் கியல்பன்மையுந் தோன்ற யாதாயினு மொரு வினை [illegible] வினையி னூதியங் கருதுதற்குச் சிறிதும் நினக்கு முத[illegible] ஞான்று மில்லை யெனவும் வினையூதியமும் வினைசெ[illegible] மவாவற்க வெனவும் பணித்தவாறென வுணர்க.

ஊதியத்துக்கென அத்துச் சாரியைதொக்கது; [illegible]ரிபு.

“ நலக்குரியார் யாரெனி னமநீர் வைப்பிற்,
பிறற்குரியா டோடோயா தார் ”

(முப்பால், பிறனில்விழையாமை 9.) எனவள்ளுவனருந் தொகுத்தார்.

எனையதும் - எவ்வளவு சிறிதும். உம்மை : முற்றும்மை.

அவ்வ வுயிர்களின் வினையும் வினையூதியமு ஞால முழுப்பிழம்பு நிகழ்ச்சியி னெவ்வொரு மருங்கெனப்படுவன வன்றி யொவ்வோருயிர்க்குந் தனித்தனி யுரிய வல்ல வாமாறு மெல்லாவுயிர்களு மொருங்குடன் ருேன்றும் பன்மைத் தொகையாகிய வொன்றறற் குரிய வினை வினையூதியங்களிலே தனித்தனியுயிர்க்கு முதன்மை யின்ருமாறு முணர்ந்து கொள்க.

வினைநுகர்ச்சிக்கே யன்றி வினை செயற்கு மன்னுயிர்க்கண் முதன்மை யின்ருயினு மதன்கண்வினை செயற்றன்மை யெப்பொழுது மமைந்து கிடத்தலின் வினைசெயற்கண் முதன்மை யின்மை விளங்கித் தோன்ருதென்பதுபற்றி வினைநுகர்ச்சிக்கண்ணே முதன்மை மறுத்துரைக்கப்பட்டது. இஃதறம் பொரு ளின்ப மென வெடுத்

துக் கொண்ட முப்பாற்குஞ், செஞ்ஞாயிறு வெண்டிங்கண் முதலாய கோளும் நாளுங் காற்று முதலிய வைம்பெருந்தோற்றமு மின்றி யமையாதனவாக வவற்றின் சிறப்பெல்லா மெடுத்தோதாது அவற்றுத்தொகையினாகு மழைச்சிறப்பே வள்ளுவனாரா லெடுத்தோதப் பட்டதுபோலக் கொள்க.

அவ் வினையூதிய மென்ற சுட்டு அங்ஙனந் தனக்கு முதன்மை யில்லாத வினையூதியமென மேல்வந்த முதன்மை யில்லாமை மேற்று

முதன்மை: தனக்குத் தானுரிமை யெனப்படுந் தற்கிழமை.

ஊதிய மென்னும் பெயர் உதவி யென்பத னடியாகப் பிறந்தது. வினைப்பயன் வினைபற்றிக் கடவு ளுதவுதலான் வருவ தாமா றுணர்க.

அவாற்கவென அல் லிடைநிலை முதல் கெட்டது.

அவ்வினை யொழிதலு மென்புழிச் சுட்டு, ஊதிய மவாவாத வென மேலடுத்துநின்ற வூதிய மவாவாமை மேற்றாய் வினையொழி தற்கு வாயிலாமாறு தோன்ற நின்றது.

ஒழிதலு மென்னு மும்மை ஊதிய மவாவாமையே யன்றி யென இறந்ததுதழீஇயிற்று.

வினையொழிதலு மவாவற்க வெனவே ஊதியங் கோடற்க ணன்றி வினைசெய்தற்கண்ணு முதன்மை யில்லாமை குறிப்பிக்கப் பட்

ற்று : விரித்தல்.

ளிரண்டுங் கட்டளைப் பொருண்மைக்கண் வந்தன.

ச ருநர் தலைவ! புணர்ப்பி னின்றுபற்
றொருவி நீமுயன் றுஞற்று வினைதா
முடிவு பெறுதன் முடிவு பெறாமை
யிருதிற மொக்குமென் றியைந்து முறையின்
வருவினை செய்க மாள
விருவினை யொப்புமற் றென்பது புணர்ப்பே.

பொருநர் - படைத்தலைவர்; மன்னருமாம். ஒருவி - நீக்கி. இருதிறம் - இருவகையும்; முற்றும்மை தொகுக்கப்பட்டது.

இயைந்து - உடன்பட்டு. செய்க: கட்டளைவியங்கோள். மாள : முன்னிலையசை.

இருவினை: இன்பமுந் துன்பமு மாகிய வினைநுகர்ச்சி யிரண்டும். அவ் விரண்டன் கண்ணுங் கோடாதொத்திருத்தலை இருவினை யொப்பென வழங்குப; இருவினை தம்முளொத்தின்னாமையும் பொய்யு மாதலென்பாருமுளர். இருவினையொப்பினானே நெஞ் சலைவற நிற்றல் புணர்ப் பெனப்படும்.

இருவினையொப் பென்பதே புணர்ப்பெனப் பொருட்டே ஆக்கமாகக்கூறியதுமுகமன்.

புணர்ப்பெனப் பொதுப்படக் கூறினும் புணர்ப்பின் முடிவாகிய நொசிப் பெனவே கருதிக்கொள்க. மேலு மீண்டாண் டுய்த்துணர்ந்துகொள்க.

மற்று : அசை.

௯௬. உள்ளப் புணர்ப்பி னுறுநனி சேய்த்தென
வெள்ள விழிந்த தேனைச் செய்வினை
புணர்ப்புளம் புகல்சார் புலவ! தாஞ்செய்
வினைப்படு மூதியம் விழைநர்
புனைப்படு மிவற்ற ரெனப்படு மவரே. 96

உள்ளப்புணர்ப்பு: நொசிப்பு. உடலின் செயலைத் தடுத்தல், உயிர்ப்பு வளிச் செயலைத் தடுத்தல், ஐம்பொறிகளைத் தடுத்தன் முதலாயின முறையே உடற்புணர்ப்பு, உயிர்ப்புப்புணர்ப்புத் தொகைப் புணர்ப்பென்றுற்போல வழங்கத் தகுமாதலின் உள்ளத்தின் செயலைத் தடுத்து நிறுத்தல் உள்ளப் புணர்ப்பெனத் தகும். எனவே உள்ளப்புணர்ப்பே நொசிப்பெனப்படுவதாம். உயிரொழிந்த வுள்ள முடம்பு முதலாய அகச்சார்புகளைப் புறமாயவற்றொடு பொருந்த வொட்டாது தகைந் துயிரொடு புணர்த்தலே புணர்ப்பு. அவையிற்றையுயிரொடு புணர்த்தலாவ [illegible]ரையுற்றொட்டச்செய்த லன்று; என்னை? உயிரு முயிரொ[illegible] ளெதிர்மறையாகலி னுறற்பால வல்ல வென்[illegible] டொப்பச் செய்தலே யுயிரொடு புணர்த்தலாம். [illegible] ஞான்றுந் திரிபிலதாகிய வுயிரோ டொப்ப [illegible]யும் திரிபின்றியே நீடு நிற்பச் செய்தலா மென்க

புணர்ப்பினென்னு மைந்தாவ தெல்லைப் பொருட்டு. உறு, நனி: ஒருபொருட்பன் மொழி.

சேய்த்து-சேய்மைக்கண்ணது. மிகவுந் தாழ்ந்தது; செய்வினையென்றற்கு உறுநனி சேய்த் தென்றது வழக்குநடை.

வினையாவது ஆட்சியும் நுகர்ச்சியும் வேண்டிச் செய்யு முயற்சியாம்.

செய்யாவினை வேறுண்மை தோன்ற விது, செய்வினை யென விதப்படுத்தது. செய்யாவினையாவது வினைசெய்யாமை; அதுவே புணர்ப்பு. எனவே வினைசெய்யா தடக்குதலாகிய புணர்ப்புஞ் செய்யாவினையென வினையாதல் பெறப்படும். அங்ஙனம் வினையாகு மினம் பற்றியேனை வினையெனப்பட்டது; செய்வினை. செய்வினை எள்ளுமாறு இழிந்ததென மாறுக.

வினையியற்றலினும் புணர்ப்பியற்ற லெத்துணைமடங்கோ மிகவுயர்ந்ததாகலின் வினைசெய்யாது புணர்ப்புச் செய்க வென்பதிப் பாட்டின் குறிப்பு.

புகல்சார்-அடைக்கல மடைவாயாகுக. புணர்ப்பி னின்ற உள்ள முடையானே அடைக்கல மடையென்றது நொசிப்பினையே யிடையீடின்றிச் செய்க வென்றவாறும்.

வினைபடு மூதியம்-வினையானுண்டாகும் பயன். விழைநர்-விரும்புவோர்.

புனை : கைகால் விலங்கு. வினைத்தளை பூணு மிவற்றர் : வினைக்கண் அகப்பட்டுத் தப்பமாட்டாது கிடந்துழல்பவரென்க.

இவறுதல் : பொருளின் கண்ணும் நுகர்ச்சியின் கண்ணு மெவ்வாற்றானும் விடமாட்டாத கடும் பற்றுள்ளமாதல். இவறுதலுடையோர் இவற்ற ரெனப்பட்டனர். இவர்க்குத் துன்பமல்லது தொழுதகவில்லை யென்க.

ரு௦. புகன்றுங் குள்ளம் புணர்க்கும் பெரியோ
னலந்தீங் கிருமையு நச்சலன் பற்று
ஞதலிற் புணர்ப்போ டமர்க
வீதலில் புணர்ப்பு வினைகளு ளரிதே. 97

புகன்றுங்கு : யான் மேற்கூறியவாறு.

உள்ளம் புணர்க்கும் பெரியோன் : தன்னுள்ளத்தைத் திரிபின்றி யலைவற நிறுஉம் பெரியோன்.

ந[illegible]ன் : முற்றெச்சம். அமர்க-மேவுவாயாக.

[illegible]புணர்ப்பு-கெடுதலில்லாமைக்குவாயிலாகிய புணர்ப்பு. [illegible]ரியது.

[illegible] வினைகளுட் செயற்கரிய தெனவே புணர்ப்பும் வினை[illegible]றும்.

மக்களுட் பலராற் செயற்கரியது செய்பவனே பெரியோனெனப்படுமாகலிற் புணர்ப்பாளனே பெரியோனவன்.

"செயற் கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

(முப்பால். நீத்தார் பெருமை, 6.) எனச் செந்நாப்போதார் கூறிய தூஉமிப்பாவிற்குப் பரிமேழகியாருரைத்ததூஉ மீண்டுள்ளற்பால.

வினைகளுட் செயற்கரிதாய்த் தலைசிறந்தது புணர்ப்பெனவே புணர்ப்பின்மேல் வினை யாது மின்மை யெனப்படும் புலமையேயுளதாவதென்பது பெறப்படும்.

ருக. யாதொரு வினையும் யாப்புறச் செய்து
மூதியம் வேண்டா துள்ளம் புணர்க்கு
மேதகு மறிவர் வினைவழி வரூஉம்
பெயராப் பிறவிப் பிணிப்பவிழ்ந்
தயரா நோயி லாக்க முறுபவே. 98

யாப்புற - தகுதியாக. மேதகுமறிவர் - மேன்மையாற் றக்க வறிவுடைய பெரியோர்.

வித்தும் விளைவுமாய்த் தொடர்ந்து கரையின்றி மேன்மேல் வருதலிற் பெயராப் பிறவி யெனப்பட்டது.

பிணிப்பு - கட்டு.

நோயில் ஆக்கம்: துன்ப மின்றி யின்பமேயாய வுயர்வு அழியாமை. ஆவது: விடுபேறு.

அயராமைக்கு வாயிலாகிய வாக்கமென்க.

அயராமையாகிய வாக்க மெனினுமாம். உணர்வு மயங்காதொருபெற்றியே யாதல் வீடாமாறுணரப்படும். அயராமை—மயங்காமை.

ருஉ. மயலகப் பட்டு வழீஇக் கலிழ்ந்து
துயல்வரு முள்ளந் தோன்றும் போழ்திற்
கேட்டவு மேனைக் கேட்பவு
நாட்டமுற் றுளைவு நண்ணுதி போன்மே. 99

மயல் - அறியாமை. வழீஇ - வழுவி. கலிழ்ந்து - கலங்கி. துயல் வரும் - நிலை நில்லாதசைகின்ற. நாட்டம் உற்று, - நினைத்து உசாவுதலுற்று. உளைவு - அமைதி யுருது வருத்தமுறுதல்.

போலும்: ஒப்பில்போலி. இவ்வுரையசை யீற்றயலுகரங் கெட வொற்றுத் திரிந்து மகரத்தொடு மயங்கிற்று.

நொசிப்பிற் றிரியாது நின்ருங்கு நின்றவுள்ள ம[illegible]
லுற்றபோழ்தெய்து மிழிவு கூறியவாறு.

ருஙு. சொல்லுவார் சொல்லுஞ் சொற்கேட[illegible]
செல்லுமா றின்றித் திரியா வுளமது[illegible]
நொசிப்பி னின்று நுடங்கா
தொசிப்பில் காலை யுற்றனை புணர்ப்பே. 100

பிறர்சொற் செவிப்பட்டவழி யுள்ளம்பற்றி நினைப்புக் கொள்ளுமாயின் அவ்வுள்ள மின்னும் புணர்ப்பின்க ணிலைபெறவில்லையெனத் துணிந்து கொளல் வேண்டும். அற்றன்ருயின் அதன்க ணிலைபெற்றதாம் அவ்வுள்ளம்.

நுடங்காது - அசையாது. ஒசிப்பு - நிற்கலாற்ருது தளர்தல்.

உளந்திரியாது நொசிப்பினின்று நுடங்காதொசிப்பில் காலைப் புணர்ப்புற்றனையாவா யென்றது அங்ஙன மொசிப்பில்லாமையே புணர்ப்பாமென்றவாறு. நொசிப்பினின்றென்பது ஐந்தன் வேற்றுமையுமாம்.

ருச. தொடக்கரு மடக்கத் துறையி னெல்லை
நுடக்கமி லுணர்வி னெசிப்பிற் புலவற்
கென்னே வுரையு மென்னே வுரைக்குமா
றென்னே விருக்குமா றெய்துவ
தென்னே பெரும! வியம்பி யருளே. 101

எல்லா வொழுக்கங்கட்குந் தொடக்கமாகிய டைக்கமென்ப தடங்கி யொழுகுத லரிதாகிய விளமைச்செவ்விக்கட் டொடங்கற் பாலதாகலிற்றெடக்கருமடக்கமென்றது.

துறை - ஒழுகலாற்றுப் பகுதி. ஒருவர், தம் மிளமை தொட்டுப் பயின்றுவரற்பாலவடக்கமென்னுந் துறையினீற்றெல்லை நொசிப் பென்பது தோன்ற, அடக்கத்துறையினெல்லை நொசிப்பென்றது.

அந் நொசிப் பிஃதென்பது நினைப்பிப்பான் நுடக்கமி லுணர் வென்றது

'அடக்கத்துறையினெல்லை ; நுடக்கமி லுணர்'வென்பன வொரு பொருட்பல்பெயரடுக்கு. ஒருபொருட்பல்பெயரடுக்கு, முடிக்குஞ் சொற்கொளவருங்காற் பெயரிணுகிய தொகையெனப்படும். "பெயரி ணுகிய தொகையுமா ருளவே, யவ்வுமுரியவப்பாலான" என்பது தொல்காப்பியன். (வேற்றுமையியல். 6). இந் நூற்பாவிற் கிடர்ப்பட் டுரைப்ப ; உரையாள ரெல்லாம்.

உணர்விஞெசிப்பெனத் " திருவின் செய்யோள்" (மணிமேகலை துறவு. 19. அடி 34.) போலப் பண்புத்தொகைக்கண் இன்சாரியை வந்தது.

உணர்வினை யுடைய நொசிப்பெனச் சாரியைநிற்பத் தொக்க வேற்றுமையாகக் கொண்டு எல்லையாகிய நொசிப் பெனவியைப்பினு மண...

...டு வில்லிவிஞ.

...மகிழ் கொளுவுவ காணு திருப்பவு
...மரு வுள்ளத் தார்வ முற்றும்
...ரிதலி னிறையும் படர்கோ ளின்றித்
தன்னிற் றன்னுற் ரூனன்கு
மன்னி மகிழ்நன் மன்னுணர் வினனே. 102

களிமகிழ் : களியு மகிழு மென வும்மைத்தொகை. கொளுவுவ- கொடுப்பன.

களிமகிழ் கொளுவுவ வாவன : இன்னுரை, நல்லாடை, நற் பெண்டிர் தொடக்கத்து நுகர் பொருளாகிய புறப்பொருள். அவை காணப்படாதிருப்பவு மவையின்றியே மகிழுபவனெனக் கூட்டிப் பொருள் கொள்க.

அளி : மன்னுயிர்மேலருள். ஆர்வம்—விழைவு. பரிதல்—கெடு தல். இறையும்—சிறிதும். படர்கோள் : யாதானும் நினைவு கோடல்.

பரிதலாற் படர்கோ ளின்றி யென்க தன்னின் : தனியுயிராகிய தன்னுள்ளே.

தன்ருனென்பது: முயற்சி யாது மின்றி யிருந்தாங் கிருந்தவாறே யென்பதாம்.

தானென்றது புறச்சார்பு மகச்சார்புமாக வுணரப்படுவன யாதுமின்றித் தனித்திருந் தென்றவாறு.

நன்கு மன்னி மகிழ்ந னெனவே வினைமகிழ்ச்சி போலத் துணை கொண்டெய்தப் பெறுமையானே அம்மகிழ்ச்சி யொருஞான்று மழிவின்றி நிலையுத லுடைத்தென்பது பெறப்படும்.

மன்னுணர்வு—அழிவின்றி நிலைபெற்ற வுணர்வு. மகிழ்வோன் மன்னுணர்வினனாவா னென முடிவு காண்க.

௫௬. நல்லவை யாகுக வல்லவை யாகுக
புல்லியக் காலைப் புல்லா னாகித்
துனியுங் களியுந் தொடரான்
பனியி லுணர்வு படாஅ வுணர்வே. 103

புல்லானாதல் : பற்றில்லாமை. துனி—கவலை. களி — மகிழ்ச்சி. தொடரான்—பற்றாதவனுடைய. ஆறன் வேற்றுமை. பனி—நடுக்கம்.

படாஅ வுணர்வ—சாயாது நிலைபெற்று நின்ற வுணர்வாம்.

புல்லானாகித் தொடராதவ னென்க.

புணர்ப்பாளன், மேலைப்பாட்டகத்துப் பெற்றாங்கு நீங்காது நிலைபெற்ற பேரின்ப முடைமையினேனையவற்றுக்க ணிருக்குமா றிவ்வாறென்ற திப்பாட்டு.

௫௭. பொறிபல வற்றையும் புலங்களி னின்று
மறிதர யாமை மானத் தட்கு
மறிவன தறிவே யாகுஞ்
செறிவுற நிலைஇச் சிதையா ததுவே.

பொறிபலவற்றையும் : செயல்வாயில், உணர்ச்[illegible] சென விப் பதினொன்றனையும்.

மறிதர—மீள. மான : ஒப்பிடைச்சொல்.

தட்கும்—தடுத்துச் சிறைக்கும்.

யாமை தன் னுறுப்புக்களைத் தனக் கிடர் புகுதாமன் மீட்டுக் கொள்ளு மியல்பினது.

எனவே புணர்ப்போன் றான் வேண்டுமிடத்துத் தன்னுள்ளஞ் செலவிடுத்தல் புணர்ப்புக் கிழுக்கன் றென்பதூஉம் பெறுதும். என்னை? யாமை தான் வேண்டுமிடத்துத் தன் னுறுப்புக்களை வெளிப்படுத்துமாகலி னென்பது.

செறிவு—புறஞ்செல்லா துள்ளமடங்குமடக்கம்.

அறிவே சிதையாததுவாகு மென முடிக்க.

சிதையாததுவாகும் : சிதையாதவறிவாகும்.

௫௮. நுகராக் கடைக்க ணுகரார் தம்மிற்
பெயரா நிற்கும் பிறபொரு ளெல்லாந்
தஞ்சுவை யொழியத் தாஞ்செலு மாதோ
வஞ்சுவை தாமு மழியு
மெஞ்சுறு முயர்தனிச் செஞ்சுவை காணினே. 105

நுகராக்கடை—நுகராத முடிவில்: ஒரு பொருளை நுகர்ந்து கழிந்த முடிவு நுகராத முடி வெனப்படும்.

நுகாரர் என்பதனையு மங்ஙனங் கருதிக்கொள்க.

இன்: நீக்கப்பொருட்டு. பெயராநிற்கும்: கழிந்து மீண்டு முன்போலக் காணப்படாதாகின்ற.

பிறபொருள்: தனியுயிரொழிந்த வேனை நுகர் பொருள்.

தஞ் சுவை யொழிய: அவை தாங் கழியாநின்றுழித் தஞ் சுவை தம்மிற் பிரிந்து நுகர்ந்தாருள்ளத்தே கிடப்ப.
அச்சுவை யென்பது செய்யுணோக்கி மெலிந்தது.

அச்சுவையாவது: நுகர்பொருளின் நுண்ணிய நொய்ய மொய்களாகிய துகள்.

அது புணர்ப்பினும் புலமையினு மல்லது கழியாது.

எஞ்சுதல்: எனை யாவுந் திரிந்து மாறுவனவாகக் கண்டபின் மாறு தெஞ்ஞான்று மொரு பெற்றியேயாய் நிற்பதெனத் துணியப் படுவதாதல்.

உயர்தல்: எனை யாவு முளவாதற் கின்றியமையாததாதல்.

தனிமை: எனை யாதனொடுந் தீண்டற்பாலதன்றாய்த் தூய்தாதல்.

செம்மை: தோற்ற வொடுக்க முதலிய திரிபுங் கூறுபடுதலு [illegible]

[illegible] தனிச் செஞ்சுவை யென்றதனானே எனைச் சுவை, [illegible] ற்றை யின்றியமையாவாறு போலாது எஞ்ஞான்றுந் தா[illegible] நின் றுண்பது முண்ணப்படுவதுந் தானே யாவ தொரு சுவை யெனவு முணர்ந்து கொள்க; என்ற தொரு தனி யுயிரை.

௫௬. வினைமுயல் கின்ற வினைஞற் காயினு
மினைவுற வழூஉ மெல்லைய வாய
வாயி லைந்தும் வலித்துநின்
றேயு நெஞ்சினை யீர்த்தெடுத் தெழுமே. 106

வினை: ஊதியம் விழைந்து செய்யு முயற்சி. அவை: வேள்வி, நோன்பு, வருவாய்த்தொழின் முதலாயின.

இனைவு—வருத்தம். வழூஉம்: தந்நெறியினின்றுந் தவறுகின்ற. எல்லை—செவ்வி; அளவுமாம்.

வாயிலைந்து: கண்முதலாயின. ஏயும் தன்பாற் பொருந்துகின்ற வாயிலைந்துந் தாம் விழைந்தவாற்றிற் செல்லலுற்று முரணுங்காலை நெஞ்சின்வழிப்படாது நெஞ்சினையுந் தம்வழிப்படுத் திழுத்தெடுத்துக் கொண்டுபோகு மென்பது.

மேற் றெண்ணூற்றுறும்பாட்டிற் புணர்ப்பிற் காட்டில்வினை மிகவுஞ் சேய்த்தா யிழிந்த தென்ற வினையினிழி பாமாறு, புணர்ப்பி னுயர்பு வலியுறுத்தற் பொருட் டிங்குக் கூறப்பட்டது.

சுo. அகனெடு வாயி லடையவு மொருங்கு
மிகமுயன் றிறுக விசித்துப் பிணித்தன
னென்னின் றமையா திருப்பப் பொறிபல
தன்னின் றமையல தாமெனின்
மன்னின் றன்றவன் மாண்ட வுணர்வே. 107

அகன்—நெஞ்சு. வாயில் – பொறி. அடையவு மென்ற வும்மை யான் மூச்சுக்காற்றும் பிணித்தல்வேண்டு மெனக் கொள்க. அடைய—எல்லாம்.

இறுக—சிக்கெனநிற்ப. விசித்துப்பிணித்தனன்—இறுக்கிக்கட்டி.

என் இன்றமையாது இருப்ப—என்னையின்றி யமையாதிருப்ப. பொறிபல: ஐம்பொறியும் நெஞ்சும். தாந்தன்னையின்றியமையா வாய்த் தனக்கு வழிப்பட்டிருக்குமாயினென்க.

மன்—மிகவும்; நிலைபேறுக வெனினுமாம்.

நின்றன்று—நின்றது. அவன்: அப்புணர்ப்பாளன். மாண்ட—மாட்சிமைப்பட்ட: திருந்தி நிரம்பிய. மாண்டவுணர்வு மன்நின்றன்று.

இருப்ப வென்பதற்கு அவனெனப் பிற் சுட்டப்ப[illegible]னிற் கற்பால வெழுவாய் விரித்துரைக்கப்படும்; அஃது: ஒ[illegible]

சுக. நெஞ்ச மசையி னினைவு தோன்று
மதனி னனே விழைவு தோன்று
மதனி னனே வேட்கை தோன்று
மதனி னனே வெகுளி தோன்று
மதனி னனே யயர்வு தோன்று
மதனி னனே நினைவுதடு மாறு
மதனி னனே யறிவுகே டுறுமரோ
வறிவு கெட்ட வவனுஞ்
செறிவு கெடலிற் றிருந்தலன் கெடுமே. 108-109

இப்பாட்டு நினைப்பெழா தடக்குதலாகிய புணர்ப்பினைப் பயிலா மையாற் கேடு வருமா றுணர்த்துமுகத்தாற் புணர்ப்புப் பயிற்சியின் சிறப்புணர்த்துத லுதலிற்று.

இன்: நீக்கப்பொருட்டு. இங்கு நினைவு, விழைவு, வேட்கை, வெகுளி, அயர்வு, தடுமாற்றம்; அறிவுக்கேடு, அறிவுகெட்டான்கே டென்னு மிவ்வெட்டு முறையே யொன்றினின்றொன் றெழுவன வென்பதூஉ மிவற்றுக்கெல்லாம் அடிமனை நினைவே யென்பதூஉம் பெறப்படும்.

எனவே மேன்மேல் வரூஉங் கேடு தவிர்ந்துய்தல்வேண்டுவார் நினைப்புக்களை மேன்மேற் செறுத்து முற்றச் செறுத்தலே செயற்பாலதெனப் புணர்ப்பின் சிறப்புணர்த்தியவா றுயிற்று.

விழைவு—பற்று. வெகுளி—வெறுப்பு.

செறிவு—அடக்கம்: தீயநெறியிற் செல்லாது மடங்குதல்.

அறிவுகெட்ட அவன்றன்னிலைக்க ணின்மையிற் றனக்குத்தானுரியனல்லனாகவே தன்னெஞ்சு முதலியவற்றைச் செறித்தலில்லையாயிற்று. எனவே செறிவில்லையாயிற்று. செறிவில்லாதவை நிலமறிந்து செலுத்து மேலாளில்லாக் குதிரைபோலத் தாம்வேண்டியாங்குச் செல்ல, வவையுடையோனு மவற்றுவழிச் சென்று கெடுமென்க.

திருந்தலன் : முற்றெச்சம்.

யாங்கணும் யாவரு மெஞ்ஞான்று மறிவித்தா லறியுமறிவுடையானை யன்றி விலங்கோடொப்பானை யறிவித்துத் திருத்துமா றின்மையிற் றிருந்தலன்கெடு மென்றது.

கூஉ. ஆர்வமுஞ் செற்றமு மணையா னாகிச்
சார்வுறு புலந்தொறுந் தங்கும் பொறியொடு
தன்வயி னுரிமையிற் றற்பணித்
தின்வழிப் படுவோ னெய்துந் தெளிவே. 110

செற்றம்—விருப்பு, வெறுப்பு.

மிரண்டு மிலவாயிற் புலந்தொறும் பொறி தங்கு

மிலவாம்.

ருட்சியின்றித் தெருட்சியுடைமையிற் றன்பொறியகப்படாது தன்னகப்பட்டுத் தனக்குத்தா னுரிய னாதலானே தன்னையவன்றானே கட்டளையுட்படுத்தினியவழியிற் செல்லுதலல்ல தின்னாவழிச் சேறலில்லை யெனவே அவன்றன் மயக்கந் தேய்ந்து தேய்ந்து தெளிவெய்துத லொருதலை. ஆக, வவற்கு ஆர்வஞ்செற்ற மயக்கமெனவிம் முக்குற்றமு மிலவென்பதுணர்க.

தற்பணித்து-தன்னைத்தானே கட்டளையுட்படுத்து.

புலங்களைப்பற்றிய நினைவென்ப தெழாதாயிற் கேடுந் துன்பமுமென்பன வொன்றுஞ் சாராமை யெய்துவித்தபின் அந்நினைவெழுதற்கு வாயின் முக்குற்றமுமாதலின் முக்குற்றமுங்களையவே நினைவெழாதாகுமென நினைவெழாமைக்கு வாயில் கூறிற்றிப்பாட்டு.

கூங. தெளிவுடை யாற்குத் தெளிவி னானே
யிளிதரு துன்ப மெல்லாங் கெடுமரோ
வொல்லென் றவன துள்ளம்
வல்லென் றூன்றுபு மன்னுமாற் பெரிதே. 111

தெளிவு : மேலைப்பாட்டிற் பெறப்பட்ட தெளிவு.

இளி-தாழ்வு. ஒல்லென்று-விரைந்து.

வல்லென்று : அசைக்கமுடியாவாறு திண்ணென்று. பெரிதூன்றுபுமன்னும் - மிகவுமூன்றி நிலைபெறும். அரோ, ஆல் என்பன அசை.

தெளிவு வந்துழி உள்ளம் நொசிந்தூன்றி நின்றசையாமையும் துன்பக்கேடு மின்பப்பேறு முளவாகு மென்ப திப்பாட்டாற் பெறப்பட்டது.

சுசா. புணரி யல்லாற் குணர்வு புணரா
தணரி நில்லா வவற்கதன் றலையு
மொருமை யெண்ண முளதா காதுமற்
றொருமை யெண்ண முளதா காதெனி
னருமை யமைதி யமையா தாகு
மமைதி யமையாற் கின்ப
மமைதல் யாண்டைய தமைவில் லோயே. 112

புணரி-புணர்ப்பாளன் ; புணர்ப்பவன் புணரியென்க.

உணர்வு : தக்கவின்ன, தகாத வின்ன வெனக் கூறுபடுத்துணர்தல்.

அணரி—மேனோக்கி. அதன்றலையும்—அதன் மேலு[illegible]

அமைதி—தளம்பாமை. அமையாது—நிரம்பாது.

யாண்டையது ?— எங்கிருந்து வருவது ? இன்[illegible] குறிப்பு.

அமை—மூங்கில்.

அமைவில்லோ டென்ற திசைக் குறிப்புப் பொருண்மைத்தாவதோரணியாயிற்று. அமைவு இல்லோயென வொலித்து அமைதியில்லோ யெனக் குறித்தது.

சுரு. இயங்கும் பொறிவழி யியலு நெஞ்சம்
வயங்கு முணர்வை வழிப்படுத் தெற்றுத
லொண்புன லுழுவத் தோடந்
தண்புயற் காற்றுத் தாக்கிற் றெக்குமே. 113

தாமே புலந்தொறு மியங்கும் பொறிகளின் பின்னே யுடன் செல்லு நெஞ்சமென்க. வழி—பின்.

வயங்கு முணர்வு—விளங்கு முணர்வு.

வழிப்படுத் தெற்றுத லென்பதனை எற்றி வழிப்படுத்துதலென மொழிச்சினை பிரித்துக்கூட்டி மோதித்தள்ளுதலெனப் பொருள் கொள்க. “அறஞ்செய்தருளுடையீராகுமின்”

என நாலடி நானூற்றின்கண் அருளுடையீரா யறஞ்செய்ம் மினென விருமொழிச் சினைபிரித்து மாற்றிப் பொருள்கொள நின்ற வாறு காண்க.

அழுவம்—பரப்பு. ஒண்புனலழுவமென்றது: கடல்.

ஓடத்தை யென்க.

புயற்காற்று — மழைக்காற்று: பெருங் காற்றென்பதாம்

தாக்கிற்று ஒக்கும் — தாக்கியதனேடொக்கும்.

இதனுனே நிறைநெஞ்சமில்லானுடைய வுணர்வு அமைதியிழந்து குலைந்து கண்டவாறேடிச் சிதைவுறு மென்றவாறும். ஆகவே நிறை நெஞ்சினேனதுணர்வு, அலைகடற்கணலையுமியல்பின தாயினுமோட மிடரின்றிச் செல்லுமாறு போன்று, அலையுமியல்பின தாயினு மவ்வுணர் விடரின்றிச் செல்லுமென்பதூஉங் கருதிக்கொள்ளப்படும்.

இனி, ஓட நிலைக்கேற்ப வோட முடையாரையு முணர்ந்து கொள்ளல்போல வுணர்வு நிலைக்கேற்ப வுணர்வுடையான்றன் கேடு மாக்கமு முணர்ந்து கொள்க.

இனி, யியங்கும் பொறிவழி யியலு நெஞ்சம் புயற்காற்றுப் போலுமெனவே யியலாநெஞ்சம் ஓடக்கோல் போலுமெனவுங் கொள்ளப்படும். அதனையது சிதையாது வழிப்படுத்து மென்பது.

நெஞ்சம் வழிப்படுத்தெற்றுத லென்றதனை நெஞ்சம் வழிப்படுத் தெற்... வ்வாருத லென விரித்துரைக்க.

...ற வாற்ருற் புலங்களி னின்று
...ன்றன் பொறிக ளீர்க்கப் படுபவோ
...ற னுணர்வே யன்ப
...ந்த தாகி நிலைபெற் றன்றே. 114

புகன்ற வாற்ருன்: மேலைப்பாட்டிற் கூறிய வாற்ருன்.

ஈர்க்கப்படுதல்: வலித்து மீட்டுத்தகையப்படுதல்.

நிவந்ததாகி—உயர்ந்ததாகி.

நிலைபெற்றன்று—நிலைபெற்றது.

ஒகாரம்: அசை.

ஈண்டும் பொறி யென்றது: நெஞ்சுமுளப்பட. பெரும்பான்மை பற்றி ஆண்பான்மேல்வைத்துச் சொல்லினு மேற்புழிப் பெண்பாற் குங் கருதிக்கொள்க. முன்னும் பின்னுமது.

கூள. எப்பரி சுயிர்க்கு மெற்பொழு தாயது
நப்புணர்ப் பாளற் கற்பொழு தென்போ
வற்பொழு தாங்க ணவன்ரு
னெற்பொழு தெனவிழித் திருக்கு மைதே 115

எப்பரிசுயிர்க்கும் - எத்தன்மையான வுயிர்க்கும்; நிற்ப, ஊர்வ முதலான வெல்லாவற்றுக்கு மென்றவாறு.

எற்பொழுது - பகற்பொழுது. அற்பொழுது - இராப்பொழுது. நப்புணர்ப்பாளன் - சிறப்புடைய புணர்ப்பாளன். ந: சிறப்புப் பொருண்மை குறித்துவருவதோரிடைச்சொல். நக்கீரனரென் புழிப் போல. அன்றி, நப்பின்னை யென்புழிப்போல நம்புணர்ப்பாள னென்பது திரிந்ததெனினு மமையும்.

இங்ஙனம் நம்முத் திரிந்துவருதல், "அத்த மரிய வென்னூர் நத்துறந்து" (குறுந்தொகை. 174) எனவும் "நத்துறந்து, நெடுஞ்சே ணட்டாராயினும்" (குறுந்தொகை 228.) எனவும் "நெஞ்சுநப் பிரிந்தன் ருயினும்" (குறுந்தொகை 237.) எனவு மிரண்டாவதன் கட் பயிலும்.

என்: என்றுணரா யெனவேவல். போ: முன்னிலை யசை. "எரியி னன்ன செந்தலை யன்றில், பிரியின் வாழா தென்போ" என்னுமிடத்து வந்தவா றுணர்க.

ஆங்கண்: ஏழன்வேற்றுமையிடைச் சொல்.

எப்பரி சுயிர்க்குமென்பதனையும் எற்பொழுதாயதென வந்த வாக்கச்சொல்லையும் எப்பரிசுயிர்க்கு மற்பொழுதாய தாங்கணெனப் பின்னுங் கூட்டிப் பொருள் கொள்க.

ஐது விழித்திருக்குமென மாறி வியத்தகுவதாக விழித்திருக்கு மெனப் பொருள் கொள்க. அழகிதாக விழித்தி[illegible]மெனக் கொளினுமாம். இனி, மாருது அவ னங்ஙனமா[illegible]யத்தகுவ தென்றுதல் அழகிதென்றுதல் விரித்துப் பொருள் [illegible] றுருக் குதலு மொன்று.

பிறவுயிரெல்லா முணர்வு சோர்ந்து செயலு நுகர்வு மின்றித் துயிலுங் கங்குற் பொழுதினும் புணரி தானுணர்வு சோர்வின்றி நின்றுங்குநிற்ப வுள்ள மடக்கி நிறூஉஞ் செயலு மங்ஙனநின்றவுள் ளத்தினையுந் தன்னையும் நுகருநுகர்வு முடையனுகித் துயிலாமையி னவற் கவ்வற்பொழுதெற்பொழுதா மெனவும் பிறவுயிரெல்லா முணர்வு கிளர்ந்து செயலு நுகர்வுங் கொள்ளும் பகற்பொழுதிற் புணரிதானவ்வுணர்வுஞ் செயலு நுகர்வு மின்றி யொழிதலி னவற் கவ்வெற்பொழுதற்பொழுதா மெனவுங் கூறப்பட்டன.

சூ அ. நன்கன நிரம்பித் தன்கரை யிகவா
தங்கன மடங்கி யார்வது வேண்டாப்
புணரியிற் புகூஉம் புனற்பெருக் கெல்லாம்
புணரியிற் புகூஉம் புலப்பெருக் கெல்லாம்
புணரி யமைதி புணரு
மிணரி யாயி னியைவ தென்னே. 116

நன்கனம்: அன்னு மம்முஞ்சாரியை. 'ஆர்வது வேண்டா' வென்பதன்காறு மிருபுணரிக்கும் பொது. இருபுணரிக்குந் தனித் தனி யேற்குமாறு பொருள் விரித்துரைத்துக்கொள்க. இவ் விதப்புக்கிளவி புணர்நிலை நவிற்சியென்பதோரணியின்பாற்படும். அங்ஙனம்: அவ்வாறெனவும் அவ்விடமெனவு மிருபொருளும்படும். ஆர்வது: பொருந்துவதெனவும் நிறைவதெனவும் உட்கொள்வ தெனவும் பொருள்படும்.

'புணரியிற் புகூஉ, மென்றது மடக்கென்னுஞ் சொல்லணி.

முதற்புணரி: கடல். இடைப்புணரி: புணர்ப்பாளன்.

'புணரி யமைதி புணரு' மென்றது தழூஉ வென்னும் பொருளணி. அஃதாவது: பொருளுக்குரிய சொற்றொடர்தானே ஒப்பனையையுந் தழீஇ யிருபொருள்படுதல். புணரும்: முற்று.

புணரியல்லாதவன் இணரியெனத்தகுவான்; இணரி: புலம்பொறி களோடு மவற்று விருப்பு வெறுப்புக்கண் முதலிய வற்றொடுங் கூடிப் பிரியா திருப்பவன்: இணர்—கூட்டம்.

"இணரெரி தோய்வன்ன வின்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று" (முப்பால். வெகுளாமை. அ.) என்பது கொண்டுய்த்துணர்க. மலர்க்கு மரபாயது மரபு வழீஇ யமைந்தது.

இனித் தன்னோரன்னோரொடு கூடி யியைந்து மலர்தலுங் கூம்பலு முடைமை யொப்புமைபற்றி யிணர்போலுமவனிணரி யெனப்படு வர்னெ[illegible]மையும். ஒப்படியாக்காதிணர்த்தன்மை யுடையா னெனப்[illegible]டியாக்கினுமாம். இணர்: இணர்த்தன்மைக்காகு பெயராம்[illegible]

இ[illegible]யைவமதன்[illegible]: இணரிபாற் புலப்பெருக் கெல்லாம் புகுதலும் அமைதி புணர்தலும் பொருந்துத லெங்ஙனமென வெதிர்மறுத் துணர்க.

புகுதல்: அவைதாமேவருதல்.

இணரி தான் புலங்களை முயன்றுசென் றெய்துத லல்ல தவை தாமே யவன்பால் வந்து புகுதலின்மை யுணர்க.

யாதும் வேண்டாமையிற் புணரிபாற் புலந்தாமே வந்து புகுவன; புகினு மவற்றோ டவன் பொருந்தான்.

"பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே"

(புறம். 358) என்னுஞ் செய்யு ளீண்டு நினைக்கற்பாலது.

அமைதி: களிப்புங் கவற்சியுமின்றித் தன்னியல்பினிற்றல்.

௬௬. பற்றெடு வேட்கை பசையறத் துறத்தலிற்
செற்றனன் யானென் செருக்கினை யொழிவோன்
மற்றுப் பெறுவன் மாண
முற்று மமைதி மூவா நிலையே. 117

பசை - ஒட்டு. ஆவது : அவற்றின் மருஉ.

செற்றனன்-கெடுத்து. 'யானென் செருக்கினைச் செற்றெழிவோ' னென்க. யானென் செருக்கெனவே யினம்பற்றி எனதென் செருக்குமடங்கும்

செருக்கு - களிப்பினுகு மயக்கம். மற்று : வினைமாற்றிடைச் சொல்; அசையுமாம்.

மாண - மாட்சிமைப்பட. அவற்கியாண்டு மெஞ்ஞான்று மிடையீ டின்றி யிருந்து துன்பக்கேடு மின்பப்பேறு மெய்யுணர்வுந் தந்து முற்றுதலின் முற்று மமைதி யெனப்பட்டது. முற்றும் : பெயரெச்சம். நிரம்புகின்றவென்பதாம். அமைதியாகிய மூவாநிலை யென்க. அமைதியானது மூவாது நிற்கு நிலையெனினு மமையும்.

மூவாமை : சாவாமையுங் கேடின்மையுமாம்.

ஒழிவோன் மாண மூவாநிலை பெறுவனென முடிக்க.

௭௦. இத்துணைப் போதர வியம்பிய விதுதான்
முத்தைய விழுமிய் முதுநிலை யிதனைப்
பெற்றவன் மருளிற் பிழைத்துத் தெருளு
மிதன்கண் வாழ்நா ளீற்றி னிற்பினு
மவனினி தெய்து மம்ம
தவநனி யுடாமைத் தனிப்பெருந் துறவே. 118

இத்துணைப் போதர - இவ்வளவும் வர ; உம்மை தொக்கது.

இது : இப்புணர்ப்பு. முத்தைய - முந்து தொட்டுவரும் பழமை யுடைய. விழுமிய - சீரிய. முதுநிலை - பெரியநிலை.

மருளிற் பிழைத்துத் தெருளும் - அறியாமையினின்று தப்பியறி வுறுவான்

அவன், தனிப்பெருந் துறவை யினிதெய்து மென்க. அம்ம : அசை; கேட்பிக்கு முரையசையுமாம்.

தவநனி : ஒரு பொருட் பன்மொழி.

உடாமை : உடம்பு முலகமு முதலாயவையொன்றுந் தன்னைச் சூழ்ந்திருத்தலில்லாமை. உயிரைச் சூழ்ந்து மூயிருத்தலானே யாக்கை உடலென்னும் பெயர்த்தாயிற்று. உடுத்தல் - சூழ்தல்; "அருங்குறும் புடுத்த கானப்பேரெயில்" (புறம். 21). என்புழி உடுத்தல் சூழ்தற் பொருட்டாய வாறுணரப்படும். உடல் : மாறுபடு வதெனினுமாம். உயிர் வீடுபெற்றுழித் தானேயன்றித் தன்னைச் சூழ்ந்திருப்ப தியாதொன்று மின்மையின் வீடுபேற்றுக்கு உடாமை யென்பதொரு பெயராகு மெனக்கொள்க. வீடுபேறென்பது உயிரதியற்கைத் தன்மையே யன்றிப் பொருளன்றாகலின் வீடுபேறு

உடாமையெனப் பண்பு வாய்பாட்டான் வழங்கப்படும். உடாமை போன்றே அஞ்சாமை, அவாவாமை யென்னு மெதிர்மறைப் பண்புப் பெயர்களும் வீடுபேற்றுக்குப் பெயர்களாக வழங்கப் படுதலுண்டு.

உடாமையாகிய தனிப்பெருந் துறவென வீடுபேற்றின்க ணிரு பெயரொட்டாக்குக.

வினைமரூஉவு, முட்பட வெஞ்சா தெல்லாந் துறந்துயிர் தனித்து நிற்றலாதலானே வீடுபேறு தனிப் பெருந் துறவாமாறு முணர்க.

ஒருவன் முன் றன் வாழ்நா ளீற்றுக்கட் புணர்ப்பி னிற்பினு முடல்விட்டபின் மீமிசைஞால மெய்தியாண்டே விழுமிய வீடுபெறுவ தன்றி யீண்டுமீண்டு வந்து பிறவி யெய்தா னாகலின் அவனு முடா மைத் தனிப்பெருந்துற வெய்துமெனக் கூறப்பட்டான்.

நூற்றொன்றாம் பாட்டின்கண் வில்லி வினய வினா நான்கு. அவை மன்னுணர்வாளனென்னும் நோசிப்பாளன், என்ன சொற் சொல் வான்? எவ்வாறு சொல்வான்? எவ்வாறிருப்பான்? என்னவெய்து வானென்பன. இந்நான்கனுள்ளும் பின்னைய விரண்டற்குமே விடை கூறப்பட்டன. முன்னைய விரண்டும் வாளா விடுக்கப்பட்டன. இதனா லவன் யாது மெவ்வாறு முரையாடாமையாகிய வாய்வாளா மையுடையவ னென்பது தானே பெறப்படும். அன்றி யாவருந் தத் தம் பயிற்சியளவாகவே தாந்தாஞ் சொல்லுவனவும் சொல்லுமாறு மமைவ தியல்பென்பதியாவரு முணர்பவாகலானே புணரி சொல்லு வனவுஞ் சொல்லுமாறுங் கூறவேண்டாமே பெறப்படுமெனக் கருதி அக்கடாவிரண்டுங் கடாவற் பாலவற்றைக் கடாவாமையானே கடா வல்லவென மறுத்துச் செப்பாதொழிந்தான்; நம்பியெனக் கோடலு மொன்று.

இங்குப் புணரி தானெய்துவனவாகக் கூறப்பட்டன தெளிவு அமைதி, வீடுபேறென விம் மூன்று.

எண்பத்தேழாவது பாட்டு முதல் இவ்விரண்டாவதுபான் முடியத் துன்பத்தொலைவிற்கு வாயிலென வரைந்துகொண்ட புலமை, புணர்ப் பென்னு முறுதி யிரண்டனுள்ளு மேனைப் புணர்ப்பின் சிறப்பும் புணரப்பாமாறும் புணர்ப்பின் பயனுந் தொகுத்தோதப்பட்டன.

நம்பியகவல்.
அணிக்கொணர்.
பெரும் பற்றப் புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பி வில்லியர் நல்வழக்காட்டு.
தொகையுணர்வின் புணர்ப்பு.
இரண்டாவது பால்.
முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

மூன்றுவது பால்.

வினைவயிற்புணர்ப்பு.

க. வினையினு முணர்வே விழுமிய தென்றனின்
னினைவெனப் படுமே நெடுமுடி யண்ண
லென்னைப் பணித்த லென்னைநீ
மன்னைக் காஞ்சி வன்கண் வினையினே 119

வினை: மேலைப் பாலுட் போந்த புலமை, புணர்ப்பென்னு மிருசாரின் வேறு.

ஈண்டுணர்வென்றமையிற் புலமையும் புணர்ப்பு முணர்வென வொன்றன்பாற்படு மென்பது பெறுதும்.

விழைவு, வெகுளி, வேட்கை, மயக்கமென்னு மிவற்றோ டியையுமுயற்சியு நுகர்ச்சியுமே வினையெனப் படுமாகலின் அது புணர்ப்பொடு நோக்க வெத்துணை மடங்கு மிழிந்ததெனப் படுமென மேலையோத்துட் கிளந்தவாறு கடைப்பிடிக்க.

விழுமியது - சிறந்தது. என்றல் - என்று கோடல்.

நெடுமுடி - வீறுபெற்ற பொன் முடி. நெடுமை நீண்டள வன்று.

மன்னை: கழிவின்கண் வருந்துதற் குறிப்புணர வரு மிடைச் சொல். அக்குறிப்பு நிலையாமைக் குறிப்பின்பாற்படுதலின் மன்னைக் காஞ்சி யெனப்படும். காஞ்சி - நிலையாமைக் குறிப்பு.

வன்கண் - கொடுமை. மன்னைக் காஞ்சியாகிய வன்கண்மையை யுடைய வினை யென்றது: நிகழும் போரை.

நீ யென்னை வினைக்க ணேவுத லெதன்பொருட்டென்க.

உ. தடுமாற் றம்படு விடுமாற் றத்தினே
படுமா லுணர்வு படுக்குதி போலுஞ்
சீர்மை யெற்கெது தீற்றுமந்
நீர்மை யொன்றனை நிகழ்த்துக துணிந்தே. 120

வினைசெய்க; வென்றதனொடு மலைய வினை யிழிந்த தென்றலைத் தடுமாற்ற மென்னுநின்றான்; வில்லி.

விடுமாற்றம்-விடுக்கும்விடை. விடை, செப்பு, மாற்றமென்பன வொருபொருள. மாறுவது மாற்றம்; மாறு. வினாவிற்கீடு; விலை மாற்றுப்போலக் கருதிக்கொள்க. தூதுரையும் விடுமாற்றமெனப் படும்: ஈண்டஃதன்று.

படுமாலுணர்வு – மிக்க மயக்கவுணர்வு

படுக்குதி-உண்டாக்குகின்றனை. படுத்தல் ஆக்கலு மழித்தலு மாதலின் இகழ்ச்சிக் குறிப்பான் அழிக்கின்றனை யென்னும் பொருளிசைப்ப ஆக்குகின்றனை யென்ற திசைக்குறிப்பணி.

இவ்வாறுவில்லி, நம்பிதான் மெய்யாயதனை வெளிப்படுத்து வானுக்குதற் பொருட்டிகழ்ச்சிக் குறிப்புடையான் போலக் கூறிய தன்றிப் பிறிதன்றென்க.

சீர்மை-சிறந்தநன்மை. தீற்றும்-நுகர்விக்கும்.

நீர்மை-இனிமை. ஆகுபெயரான் இனியதனை யுணர்த்திற்று. நீர்மை: தன்மையுமாம்; அத்தன்மையாயதென வதுவு மாகுபெயராம்.

துணிந்து நிகழ்த்துக வென்க. நிகழ்த்துக-சொல்லுக: வேண்டுகோட்பொருட்டு.

எது தீற்று மென மூன்றுவதன் றனைமுதல் எழுவாய் வினைமுதலாயிற்று.

இப்பாட்டிரண்டும் வில்லிகடா. இனி, நம்பிசெப்பு.

ந. கேண்மதி யத்தை கேழின் மள்ள!
நீண்மலர் நிலமிசை நெடுநாண் முன்னிரு
நீடு நிலையை நிகழ்த்தினென் யானே
பொருட்டொகை யுணர்வியர் புணரியர்க் காகும்
புலவயிற் புணர்ப்பொடு புரைசால்
வினைவயிற் புணர்ப்பென மேயவற் றானே. 121

மதி, அத்தை யென்பன முன்னிலையசை.

கேழ்–ஒப்பு. நீண்மலர்–நீண்டுபரந்த.

நீடு நிலை; உள்ளமலை வின்றி யெஞ்ஞான்று மொரு பெற்றியே நிற்றல். அஃதாவது: நொசிப்பு.

நீடுநிலை யுளதாகும் வாயில் பற்றிப் புலவயிற் புணர்ப்பினீடு நிலை, வினைவயிற் புணர்ப்பி னீடுநிலை யென நீடுநிலை யிருதிறப்படுமென்றான்.

மெய்ப்பொருளை யாராய்ந்துணரு மெய்யுணர்வின்கட் பொருண்மைகளை வகுத்தெண்ணித் தொகுத்துணர்தலின் மெய்யுணர் வென்னும் புல்மை பொருட்டொகை யுணர்வெனப்படும். உணர் வுடையவன் உணர்வி யெனப்படுவான்; உணர்வியர்: உயர்திணைப் பன்மை.

பொருட்டொகை யுணர்வியர்க்காகும் புலவயிற் புணர்ப்பொடு புணரியர்க்காகும் வினைவயிற் புணர்ப்பென நிரனிறைப் பொருள் கோள்பட நின்றன.

புலம்—மெய்யுணர்வு. "புலம் பிரிந்துறையுஞ் சேவடி" எனத் திருமுருகாற்றுப் படையின் வந்தது.

புலத்துக்க ணிகழும் புணர்ப்புப் புலவயிற்புணர்ப்பு. வினைக்கணி கழும்புணப்பு வினைவயிற் புணர்ப்பு. புரைசால்—உயர்வமைந்த.

மேயவை - மேவியவை. 'இவற்றானே யிருநீடுநிலையை நில மிசை நெடுநாண்முன் யானிகழ்த்தினெனென முடிக்க.

ஒருவன் றான் றன் மொழிமெய்களான் வினைசெய்யா நின்றே நெஞ்சு முணர்ச்சிவாயிலைந்து மவ்வ வினையளவினன்றிப் புறம் போகாமே யோய்தல் வினைவயிற் புணர்ப்பெனப்படும். மொழி மெய்களான் வினைசெய்தலையொழிய அவ்விருதிறனு மவ் வினைசெய் யாமை யளவினன்றிப் புறம்போகாமே யோய்தல் புலவயிற்புணர்ப் பெனப்படும். வினைவயிற் புணர்ப்பின்க ணுள்ளஞ் சிறிது மசை யாது நின்றாங்கு நீடுநிற்றல் வினைவயினெகிப்பெனப்படும். புலவயிற் புணர்ப்பின்கணுள்ளஞ்சிறிது மசையாது நின்றாங்கு நீடு நிற்றல் புலவயினெகிப்பெனப்படும. உள்ளமசையாது நிற்றல் கூறவே விழைவு, வெகுளி, களிப்புக், கவற்சிமுதலியவுள்ளத்திரி பொன்று மின்மைதானேயமையும். உள்ளம் நெகிந்து நீடுநின்றவழி யதற் கியைந்த கடவுட்காதலு மெய்யுணர்வென்னும் புலமையு மியைபு பற்றித் தாமே தோன்றுவ. யாவர்க்கானுங்கடவுட் காதல், புலமை, நுண்ணுணர்வெனவிம் மூன்றனையும் புணர்ப்புத்தானே தோற்று வித்துப் பாதுகாத்து முடித்தற்கண் நூற்கல்வி துணைநின் றுதவுவதல்ல தவையிற்றை நூற்கல்விதானே தோற்றுவிக்கவும் பாதுகாக்கவும் வற்றன்று. புணர்ப்புச் சாலாமையானே பொச் சாந்ததனைநினைவுகோடற்குத் துணையாமளவே நூற்கல்வியினுதவி யாகும். மக்கட்கன்றிவனோர்க்காயின் நூற்கல்வி சிறிதும் வேண்டாமே பிறப்பினமைந்த புணர்ப்புத் தானே யெல்லாவுணர்வு மெல்லாப்பண்பு மெல்லாநுகர்வும் விளைக்க வற்றாகும். இத்துணை யின்றியமையாது சிறந்த புணர்ப்பிரண்டனுள்ளும் வினைவயிற் புணர்ப்பு மதன்முதிர்ச்சியாகிய வினைவயினெகிப்புமே செய்கவென நம்பி வில்லியைப் பணித்ததல்லது வினைசெய்க வெனப் பணித்தில னென்பது துணியப்படுதலின் இப்பாட்டானே வில்லியின் மயக்கந் தெளியவிடையிறுக்கப்பட்டவா றுணரப்படும். முன்னருந்தனக்குச் செவ்விபோதாமையின் வில்லி, நம்பி கூறியவாற்றினை யுட்கொள் ளாது தானேமயங்கி யிங்கு வினைய தல்லது வில்லிமயங்க நம்பி கூறிற்றிலன். அவன்றன்மயக்கத்தை நம்பிமேலேற்றிக்கூறினான்.

நொசிப்பென்பது உளந் திரியாது நீடு நிற்றலென வொன்றே யாயினுஞ் சார்புபற்றியிரண்டென வழங்கப்படும். சார்பாவன்: வினைவயிற்புணர்ப்புப் புலவயிற் புணர்ப்பென்பன.

ச. வினையினைத் தொடங்கான் வினையில னெனப்படான்
வினையினை முற்றும் விடுத லானே
நினைவு நன்கு நிரம்புதல்
புனைவு கோடலி னனைய தென்மே. 122

வினையினைத்தொடங்கான் - வினைசெய்தலைக் கைவிட்டவன். அதனாலவன் வினைசெய்தலில்லாதிருப்பவனெனக் கொள்ளப்படா னென்பது. ஆகவே வினைசெய்யாமையும் வினைசெய்தலேயா மென் பது நம்பிகருத்து. என்னை? வினைசெய்யாமையென்பது வினை செய்த லென்பத னெதிர்மறையாகலின் வினைசெய்யாதவன் உடன் பாட்டுவினை செய்கின்றிலன்; எதிர்மறைவினை செய்யாநிற்குமென் பது. அதன்மேலுமுள்ளத்தானுள்ளலும் வினையென்பதுணர்க. கனவு காண்டலு மது. தன்னைத் தானுகர்தலன்றி நுகராமையொன்றே வினை செய்யாமை யெனப்படும்.

இதனானே மடிகோடலுந் துயில்கோடலு மெய்யயர்தலுஞ் சாதலு மெனவருஞ் செய்யாமைகளுஞ் செய்தலேயா மென்பது பெற்றாம்.

நினைவு: நொசிப்பும் மெய்யுணர்வும் வீடுபேறும் பெறலா மென்னும் நினைவு.

நன்கு நிரம்புதல்: அவை பிழையாது நுகரப்படு மளவின வாதல்.

புனைவு கோடலி னனையது: நிரம்பு மெனத் தான் பொய்யே படைத்துக்கொள்ளலி னளவினது: நிரம்புதன் மெய்யாகக் காண வாராதென்பதாம். வினைவிடுதலும் வினையாதலின் அவ்வினை யுள்வழி அதன் மறுதலையாகிய புலமைவீடுபேறுகள் உளவாகா வென்றவாறு.

என் - என்றுணராய். மே: அசை.

ரு. எவ்வுயி ராயினு மெவ்விறைப் போழ்தினு
மெவ்வது மியற்றா திருத்த லாற்றா
மூதலிற் றோன்று முப்பாற் பண்பு
மன்னுயிர் வாளா மயங்கிக் கிடப்புழி
மன்னுயிர் தம்மைத் தம்வயிற் கொண்டு
தாமே வினைசெய் தன்மைய
யாமே வினையை யாக்குமா றென்னே. 123

எவ்வுயிராயினும்: ஓரறிவுயிர் முத லாறறி வுயி ரீறாகக் கிடந்த வெல்லாவுயிரு மென்க.

இறை - சிறிது. எவ்வதும் - எவ்வாற்றானும். சாதல், உறங்கன் முதலாயவும், நினைவும், நுகர்வு மெல்லாம் வினை யென்பது முன்னர்க் கூறினம். கடைப்பிடிக்க.

ஆற்றா - மாட்டாவாம்,

மூதல்: முன்னிலைப்பொரு ளென வோரின மாகிய வெல்லாத் திரிபுபொருட்கும் வித்தாகிய முதற்பொருள். மூதலெனினும் இயற்கையெனினு இருளெனினும் மருளெனினும் அற்றமெனினும் முதனிலை யெனினு மொன்று.

அதனிற் றோன்று மூவகைப்பண்பாவன: உண்மை, புன்மை, மைம்மை யென மேற்கூறப்பட்டன. அம் மூன்றுமே யாக்கை, பொறி, நிலங், துப்புரவென வேறுவேறு பலவாகித் திரிந்து தொடர்ந்து ஞால முழுதுமாய்த் தோன்றுவ. அவற்றி னியல்பே வினை யென்பது.

வாளா: செயலின்றியே.

வினைசெய் தன்மைய - வினைசெய்யு மியல்பின.

யாக்குமாறென்? செய்யாதடக்குதற் கென்ன வியைபு; அடக்குமா றெங்ஙன மொல்லும்?

'மன்னுயிர்தம்மைத் தம்வயிற் கொண்' டென்றதனானே கடவுளாகிய தன்னைத் தம்வயிற்கொள்ள லாற்று வாயின வெனவும் வினைசெய்யா தொழியாமைக்கண் யாமெனத் தன்னையு முளப்படுத் தமையானே பற்றும், வேட்கையு, மயக்கமுமின்றித் தானும் வினை செய்து போது மியல்பினனெனவு முணர்ந்துகொள்க.

'யாமே வினையை யாக்குமா றென்'னென்பது இதன்முதனூற்க ணின்றிக் கருத்து நோக்கியீண்டு விரித்துரைத்தாம். முன்னும் பின்னுமது.

மன்னுயிர்தம்மை யென்பது சுட்டுப்பெயர்.

'தம்,வயிற் கொண்டு தாமே வினைசெய் தன்மைய'வெனவே தம் வயிற் கொள்ளாவழித் தாம் வினைசெய்யுந் தன்மைய வல்ல வென வுணர்க.

அவை கடவுளைத் தம்வயிற் கொள்ளாவாகவுங் கடவுள்தான் வினை செய்தலென்பது அவன்றன் பண்பின்பாற் பட்டிலனாயினும் பண்பின்பாற்பட்ட மன்னுயிர்ப்பாற் பட்டிருக்கு மாதலிற் பொருந்து மெனக்கொள்க. வினையில்லாதவுயிர் பிறிதின்வினையைத் தன்வினையாக மருளுதலள வல்லது அவ்வினை செய்தலும் விடுதலுந் தன்னியல்பன்றென்பது.

சூ. மற்று வினைசெய் வாயினன் கடைத்துப்
பொத்து நெஞ்சிற் புலம்பல படர்வோன்
புல்லறி வாளன் பொய்யொழுக் கினனென
நல்லறி வாளர் நகுப
சொல்லறி நயம்படு துறையறி யானே. 124

மற்று: வினைமாற்று. வினைசெய்வாயிலாவன: வாய், கை, கால், இழிகண், விழைச்ச மென்பன.

இழிகணவன: எருவிழியும் புழையும், சில்லுவரியிழியும்புழையு மாகிய விடக்கர்ச்சினைகளாம். விழைச்சமென்பது வெண்சேரி கழிக்கு முறுப்பாகும்.

வினை இரைப்பை, உயிர்ப்புப்பக்கு, மூளை, தலை, கழுத்து, மார்பு முதலியவும் வினைசெய்வாயில்களே யாயினு மவை தம்மையுடைய வுயிர்க்கேயன்றிப் பிறவுயிர்க் கினியவாத லின்னவாதல் விளைத்த லின்மையின் வினைசெய்வாயிலெனப்படாவாயின. இழிகணிரண்டு மன்னவாயினு முரியவல்லாவிடத்தெருவிடுதன் முதலிய செயலாற் பிறவுயிர்க் கின்னுபயத்த லுண்மையானே யவையும் வினைசெய் வாயி லெனப்பட்டன.

பொத்துதல் - மறைத்தல்; எரிபொத்துதலென்றாற்போல விழைவு முதலியன மூட்டு நெஞ்சென்னுங் குறிப்புப் பொருளுந் தந்திரட்டுற மொழிதலாயிற்று.

புலம்: ஐப்புலம். படர்தல் - நினைத்தல்; செல்லுதலுமாம்; நெஞ்சாற்புலம்பல செல்லுதலாவது: நினைத்தல்.

நெஞ்சிற் புலனினைத்தலும் வினையேயாகலான் அவன் வினை செய்வாயில்களை யடக்கிய வளவில் வினைதுறந்த விழுமியோ னெனப் படானுகவே அவ னிம்மை மறுமை வீடுபே றென்னு மும்மையு மிழத்த லறியாமையிற் புல்லறிவாளனும் பொய்யொழுக்கினனுமா மாறுகாண்க: அன்னோன், கூடாவொழுக்க முதலியவுடையனுதலிற் றப்பாமையானும் பொய்யொழுக்கின னென்றற்குத் தகும்.

இனி, வினைசெய்வாயில்களை யடக்கியவழியும் நெஞ்சு தொழிற் படுமாறுபோல வவையிற்றை யடக்காவழியும் நெஞ்சு தொழிற்படா மைக்குரித்தெனப் பெறப்படுதலின் வினை செய்யாநின்றே நொசிப்பி னிற்றல் கூடு மெனவுணர்க.

நகை: பிறன்கட் டோன்றிய பேதைமைபற்றிய மெய்ப்பாடு.

சொல்: புலவர் சொல்லாகிய நூல்கள்.

நூல்களா னுய்த்துணரப்படு மினிமை யுண்டாகின்ற நுண் பொருட் கூறுபாடுகளை யறியானென்க. துறை - கூறுபாடு. இதனுற் புலவர்சிலர்தம் வினைசெய்வாயில்களை யடக்கி நெஞ்சிற் புலனினைத்தல் புலங்களின் றிறமாராய்ந்து காண்டலு மவற்றைக் கேட்பாருளங் கொள நயம்பட வெடுத்துச் சொல்லுமா றெண்ணிக்காண்டலு மாமாதலின் அது குற்றமன்மையினீண்டடங்காதென்பது பெறப் படும். அதுவும் வினையேயாகலின் வினைவயிற்புணர்ப்பெனப் போற்றப்படும்.

எ. உணர்ச்சி வாயி லோரைந் தணையு
முணர்ச்சி நெஞ்சா னுறுத்து மீட்டு
வினையெய் வாயிலின் வினைவயிற் புணர்ப்பு
முனைவின் றூக முடியூஉ
வினையின் விழைவிலன் விழுமியோன் காணே. 125

உணர்ச்சி வாயிலோரைந்தாவன: மெய், வாய், கண், மூக்குச் செவியென்பன.

ஒறுத்து - அடக்கி. இன்வேற்றுமை துணை முதற்பொருண்மைக் கணின்றது. வினைவயிற் புணர்ப்பினைச் செய்துமுடியாநின் றென்க.

முடியூஉ : நிகழ்வின்வரூஉஞ் செய்யூஉவென் வினை யெச்சம்.

முனைவு - வேண்டாமை. வினைசெய்தலை வேண்டாமை யில்லை யாக வென்பது.

வினையின்விழைவின்மை : முயற்சியும் நுகர்ச்சியும் செய்யா நிற்பேன் யா னென்னும் பற்றும், அவற்றுக்கு வேண்டுவன எனவ வென்னும் பற்று முளவாகாமை.

வினைசெய்யானின் வினைசெய்வோன் விழுமியோ னென்றவாறு.

இவையிரண்டுபாட்டானும் வினைசெய்யாற்கு நினைவு பெருகு தலும் வினைசெய்வாற்கு நினைவுதேய்தலு மியல்பென்பதூஉ முய்த் துணரக் கிடக்கும்.

புலவன்பொருட்டுப் புலவயினெசிப்பும் வினைவன்பொருட்டு வினை வயினெசிப்பு மென்னுற் கூறப்பட்டனவெனமேற்கூறினுகலின் மக்கட்பிறப்பினருள் வினைத்துறைபுகுதா தாராய்ச்சித்துறை புகுது மியல்பினேரும் ஆராய்ச்சித்துறைபுகுதாது வினைத்துறைபுகுதுமியல்பி னெருமென விருசார்ப்பிறப்பாள ருள ரெனவு மவரு ளாராய்ச்சித் துறை புக்கார்க்குப் புலவயினெசிப் புரித்தாகலின் ஏனைவினைத்துறை புக்கார் வினைவயினெசிப்புக் கோட லொருதலையாக வேண்டற்பாற் றெனவு மிருசாராரு மாறிச்செய்தன் மரபன்றெனவும்வினைத் துறைவர் புலவயினெசிப்புக் கோட லாற்ருமைபோலப் புலத்துறைவரும் வினைவ யினெசிப்புக் கோட லாற்ருரெனவும் புலவயிற்புணர்ப்புச் செய்யாமை யிழுக்காவ தல்ல தது செய்ய லாற்று மவர் வினைவயிற்புணர்ப்புச் செய்யாமை யிழுக்கன் றெனவு மிருசாரருந் தத்தமக்காகும் புணர்ப் புக் கொள்ளாவழி வினைவழிப்பட்டு வீழ்தலல்லது பிறி துய்யுமா றில்லையெனவு மதனுலவ்விருவரு மவ்வவற்றை யொருதலையாகச் செயக்கடவரெனவு முன்னெடுபின் முரணுவாறு கடைப்பிடித் துணர்ந்துகொள்க.

கூறிய வ்வ் விருசாராருள்ளும் வில்லி, வினைவயிற்புணர்ப்புக் கோடற்கே யுரிய வியல்பினன். அதனு லவனை யதுசெய்க வெனப் பணித்தலே நம்பிக்குக் கடனுயிற்று. அவற்குக் கடவ வினைவயிற் புணர்ப்பு விளக்கிவலியுறுத்தற்பொருட் டேனைப் புலவயிற் புணர்ப்பும் வினையும் விளக்கிவலியுறுத்த லின்றி யமையா தாயிற்று.

அ. வரைவு வினையை வரையா தாற்றுக
வரைவி லாள ! வடித்துணர் காலை
வினைசெய் யாமையின் வினைசெயல் சிறந்தது
வினையி னுகி வினையின் றமையா
வினையுடல் வாழ்க்கையு மென்னும்
வினைசெயல் கைவிடின் வெல்போ ரேறே. 126

வரைவுவினையை: சான்றோரானே நின்பண்புக்கென வரைதலை யுடைய வினையை. ஒருதலையாகச் செயற்பாலதென்பது. வரைதல்-கூறுபடுத்துக் கொடுத்தல்.

வரையாது: செயற்பாலதன்றெனநீக்காது.

வரைவில்-மூங்கில்வில். வடித்து-நுனித்து.

இனையுடல்-இத்தன்மையாயவுடல்.

வாழ்க்கை-உயிரொடு கூடுதல்.

கைவிடின் என்னுமென வியைக்க. இல்லையாமென்பது.

கூ. வேள்விப் பொருட்டு வினையல் வினைதாந்
தாள்விற் குனிப்போய் தட்குமா காலே
வேள்விப் பொருட்டு வினையைக்
கோள்விட் டினிது கொள்ளுதல் கடனே. 127

வேள்வியாவது: முனிவற்காயினும் வானோர்க்காயினு மக்கட் காயினும் வேறெவ்வுயிர்க் காயினு மொருவன் றன்னுடைமையை யவர்க்காக்குதல். அங்ஙன மாக்குமிடத்தே யவ்வுடைமைக்கண் அவற் கிஃ்தெனதென்னும் பற்றிருப்பின் அவை யவர்க் காகாமையின் அதுவேள்வியாகாது. அன்றியு மவன் றன்னுடைமை கொடுத்துக்கொடுத்ததற்கு ஈடு வாங்கினும் ஈடாகற்பாலவற்றிற்கு மேற்படு மளவினவற்றை யிரந்து வாங்கினு மவ்வீகைவேள்வி யெனப்படாது. கட்புலனுவார்க்கு முன்னின்று, கொடுக்குமாறு கொடுத்தலுங் கட்புலனுகாத முதல்வன், வானவர், தென்புலவாழ்நர் முதலியோர்க் கின்னபொழுதின்னவிடத்தின்னபொருளின்னூர்க்காகுக வென வியைபோ டொருமைப்பட வெண்ணுதலும் வேள்வியாகும். வேள்வியே வினையிற் புணர்ப்பு. இதன்கண்ணே யுள்ளந் திரிபின்றி யசையாது நிற்றலே வினைவயி னெசிப்பென்னும் நீடுநிலை.

வேள்விப் பொருட்டாய வினை யென்க.

தாள்-முயற்சி. அடியுமாம். காலைத் தட்குமென்க; இரண்டாவதிறுதிக்கட்டொக்கது. காலைத்தளையுமென்றது புனையின் வினை வினையின்மே லேற்றிக்கூறியவாறு. இஃ்துஆக்கவியலணி யெனப்படும். ஆவது: ஒன்ற னிய லொன்றற் காக்குதலாம். வினை காலைத் தளைதலாவது வினைதன்னைச் செய்தானைத் தன்னைநுகர்வித்தன்றித் தப்ப வொட்டாது வளைதல்.

மா: அசை. சிறுபான்மை வியங்கோளடாது வந்தது.

கோள்விட்டு-பற்றுவிட்டு. கொள்ளுதல்-செய்தல். கடன்-இன்றியமையாதது.

ம. செம்மலர் முதியோன் செய்த வந்நாள்
வெம்முது மக்களை வேள்வியொ டாக்கி
யிதுநீர் கவர்வ யாவையுங் கறக்கும்
பழிதப விதனெடு பல்கி
வழிவழி மரபு வாழ்கவென் றனனே. 128

செம்மலர் - செந்தாமரைப்பூ. முதியோன் - முதற்றந்தையாகிய படைப்புக் கடவுள்.

வெம்மை — விருப்பம். முதுமக்கள் - பெருமையுடைய பிள்ளைகள். என்றது மாந்தரை.

முதியோன்முன்படைத்த வேனைப்படைப் பெல்லாவற்றையுங் கண்டு வாய்ப்பின்மை கருதி மகிழ்ச்சியிலனாக, மக்கட்பிறப்புப் படைத்துக் கண்டுழி வாய்ப்புடைமைகருதி மகிழ்ந்து மக்கண் மாட்டு விருப்பமுடையனாயின னென்பது தோன்ற வெம்முதுமக்களென மாந்தர் சிறப்பிக்கப்பட்டனர்.

வேள்வி பற்றின்றிச் செயற்பாலதாகலின் மக்களென்றது மாந்தரொழிந்த மன்னுயிர்மேற் செல்லுமா றில்லை.

வானோர், விலங்கு, பறவை, நீர்வாழ்வ, நிற்ப முதலவாக முதியோன்படைத்த படைப்பெல்லாம் வேள்வியோடியையுடையவாதலின் வேள்வி யெனவே மக்களொழிந்தபடைப்பெல்லா மடங்கும்.

இதுவென்றதும் இதனைடென்றதும் வேள்வியை.

கவர்வ - விரும்புவன. செய்தொறு மேன்மேற் கொடுக்குமென்பது தோன்ற ஆன்போலக் கறக்குமெனக் கூறிற்று.

பழிதப - பழிக்கப்படுங் குற்றங் கெட. பல்கி-பெருகி.

இதனானும் வேள்விசெய்தன் மக்கட் கின்றியமையாது வேண்டற்பாலதாய்த் தொன்று தொட்டு வருவ தென வலியுறுத்தான்.

கக. மாந்தரிர் ! நீயிர் மற்றிவ் வேள்வியி
னேந்துவிட் புலவரை யெண்ணுவி ராகுக
வாங்கவர் நும்மையு மதுவா குகமா
வொருவி ரொருவி ரிருவிரு மெண்ணினி
ரொருவிர்க் கொருவி ருதவி
யிருவிரு முயர்சீ ரெய்திவா ழியவே 129

மற்று : வினைமாற்று. ஏந்து - உயர்ந்த. விட்புலமுடையார் விட்புலவர். புலம்-நிலம். ஆங்கு-அவ்வாறு. அதுவாகுக ; எண்ணுவாராகுக ; வியங்கோள் ; கட்டளைப்பொருள. ஒருவிரையொருவிர். உயர்சீர் - உயர்ந்த மேன்மை ; என்றது வீடுபேற்றை.

மா : வியங்கோ ளசை.

௧௨. நீவிர் வேள்வியி னினைக்கும் வானோர்
மேவி நீயிர் வேண்டுவ நுகர்வு
நல்குவர் நயப்ப நல்கிய வவற்றை
நல்கிய வவர்க்கு நல்கி
யல்கிய மிச்சி லயிலான் கள்வனே. 130

நீவிரென்றது மேலைப்பாட்டகத்து விளித்த மாந்தரை. மேவி - விரும்பியமர்ந்து. வேண்டுவ வாகிய நுகர்வென்க. நயப்ப - மகிழ.

அல்கிய - ஒழிந்த. அயிலான் - உண்ணுதவன் : எழுவாய்.

இப்பாட்டானே ஒருவர்தம் முடைமையெல்லாந் தமக்கிமையோ ரளித்த வவருடைமை யாதலிற் பிறருடைமைகளைத் தம்முடைமைகளெனப் பற்றுச் செய்தலின் குற்றமெடுத்துக்காட்டி அக்குற்றந் தீண்டாமைக்குப் பற்றின்றி வேள்விசெய்துய்க வென்பது கூறப்பட்டது.

கங. வேட்டு மிச்சிலுண் மேலோர் தாமு
னீட்டு கொடுமை யெல்லாம் பறைவ
ரடிசி லுண்பாக் கடுவுழித் தம்பொருட்
டடுநர் கொடிய ரவர்தாங்
கொடுமை தின்றுட் கொள்ளுந ராபவே. 131

வேட்டு - வேள்விசெய்து. ஈட்டு - சேர்த்த. கொடுமை - தீவினைத் தன்மை. பறைவர் - தேய்ந்தொழிவர்.

அடிசில் - அடப்படுவன. உண்பாக்கு - உண்ண; ஒருவினையெச்ச வாய்பாடு.

பிறர்பொருட் டென்னுது தம்பொருட்டென வடுகின்றவர் கொடியரென்க.

தம்பொருட் டட்டோர் உணவுண்பவ ரெனப்படார்; கொடுமையுண்பவ ரெனப்படுவார். கொடுமை யில்வழியன்றிப் புணர்ப்பும் புலமையுந் தலைப்படா.

கசா. உணவி னுகுவ வுயிரே யுணவு
மழையி னுகுவ மழையும் வழிபடு
வேள்வியி னுகுவ விசும்பிவர்
வேள்வி தாமும் வினையினு குவவே. 132

மற்று : வினைமாற்று.

விசும்பு : ஆகுபெயர். விசும்பிற் கேறிச் செல்லுதற்கு வாயிலாகிய வேள்வியென்க.

இவர்தல் - ஏறுதல். விசும்பினுல் விரும்பப்படும் வேள்வியென்றுமாம். இவர்தல் - விரும்புதல்.

இனி, ஆகுபெயராக்காது விசும்பின்க ணேறிச் செல்லற்கு வாயிலாகிய வேள்வி யெனினுமாம்.

இப்பாட்டானே வேள்வி செய்யாதோர்க்கு மன்னுயிர்முழுதுமொருங்கு கொன்ற கொடுமை சாரு மாதலின் அதுசெய்தற் குரியார் செய்யாமையா னுகுமுய்தியில் குற்றத்தினின்று முய்தற் பொருட் டொருதலையானே அதுசெய்தல் வேண்டுமென்பதெய்துவிக்கப்பட்டது. எனவேயொருவர்தம்பொருட்டன்றிப் பிறவுயிர்ப் பொருட்டு வினைசெய்தலே பற்றின்றிச் செய்தலெனப்படுமென்பதாயிற்று. இங்ஙனமவர்தம் யாக்கையைப் பிறவுயிர்க் காக்கித் தம்முள்ளத்தையு முணர்வையும் தமக்காக்கி வாழ்தலே வினைவயிற் புணர்ப்பு.

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"

எனவும் (புறம். 180.)

"மன்பதை காக்குநின் புலரமை நோக்கா
தன்புகண் மாறிய வறனில் காட்சியொடு
நும்ம னோருமற் றினைய ராயி
னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ"

எனவும் (புறம். 210.)

"வடதிசை யதுவே வான்றோ யிமையந்
தென்றிசை யாஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே"

எனவும் (புறம். 132).

"பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங் - கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப!
வென்னை? யுலகுய்யு மாறு"

எனவும் (நாலடி நானூறு. 97.)

"துளியின்மை ஞாலத்திற் றெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு"

எனவும் (முப்பால். கொடுங்கோன்மை7) வருவனவும் பிறவு மாகிய சான்றோர் செய்யுட்களானே வேள்வி செயற்பாலார் செய்யாவழி வையத்து மன்னுயிர்பலவுங் கொல்லுங் கொடுமை யுடையராதல் பெறப்படும்.

கரு. வினைதாம் விழுப்பெரு மெய்ப்பொருண் மாட்டுச்
சினையா நிற்குஞ் சிறந்த வப்பொரு
ளுலவாச் செம்மையி னுளதா கும்பிற
வாகலின் யாங்கணு மான்ற பெரும்பொருள்
வேள்வியின் மாட்டு மிளிர்குபு
நாளினு மன்னி நன்னிலை பெறுமே. 133

தாமென்பது மேற் பெற்ற வினை யெனத் தெரிநிலைப் பொருண்மையுணர்த்துவ தோ ரிடைச்சொல்.

விழுப்பெரு மெய்ப்பொருள்: உயர்வற வுயர்ந்த வொருதனி முழுமுதல்.

சினையாநிற்கும் - உண்டாகும்.

எப்பொருளினுடைய புடைபெயர்ச்சியும் வெட்டவெளி யின்றாயி னுண்டாகாவாதல் காண்டுமாதலின் விழுப்பெருமெய்யுயி ரென்னும் பெரும்பாழ்வெளி யின்றாயின் எவ்வினையு முளவாகா வென்பது துணிபு. அதனால் வினை விழுப்பெரு மெய்ப்பொருண் மாட்டுப் பிறக்கு மென்றல் பொருந்துமா றுணரப்படும்.

பொருள்கள் புடைபெயர்ந்து திரிதலே வினையெனப்படுமாக லின் அந்நிலையாமையை நோக்கவே அவ்வினைக்கு நிலைக்களனாகப் பெறப்படு முழுமுதற்பெருவெளியி னிலைபேற்றுக்கண் அப்பொருள் யான்றானெனப் புலனாதலே சிறந்தவப்பொருள் உலவாச் செம்மை யினுண்டாதலெனப்பட்டது. புடைபெயர்ச்சி கொண்டன்றி வெறு வெளியுண்டெனப் புலங்கொலாகாதெனவே வினைகொண்டன்றிப் பெருவெளிப்பேருயிருண்டெனப் புலங்கொளலாகாமையானும், வினை செய்தலினின்றியமையாமை வலியுறும். அதனா லப்பொருள்வேள்வி செய்தலாகிய வினைக்க ணெப்பொழுது மன்னி நிலைபெற்றுள்ள தெனப்பட்டது.

உலவாச் செம்மை - கெடாமையாகிய திரிபின்மை.

ஆன்ற-நிறைந்த. மிளிர்குபு-விளங்கி. நாளினும்-எப்பொழுதும்.

அப்பொரு ளேனை யெப்பொருளானுந் தீண்டலுறாமையானும் தனக்கு நிலைக்கள னின்றித்தானே நிலைக்களனாகி நீக்கமற நிறைந்த தாகலானு மன்னி நிலைபெறுமென மிகுத்து வலியுறுத்தப்பட்டது. ஆல் : அசை.

கசூ. இன்னண மறுகி யிடையறா துருளும்
பொன்னணி யாழிப் பொலந்தே ருருளிசெல்
வழிப்பட லில்லான் வையக மருங்கி
னழிம்பு வாழ்நா ளமைந்தோ னவன
திம்பரி னைம்புல வின்பமார்
வம்பமர் மாணு வாழ்க்கை பாழே. 134

இன்னணம் - இவ்வாறு. மறுகி - சுழன்று. பொன்னாற் செய்த வழகிய வளையவுருளியென்க. ஆழி - வளையம்.

தேர்க் கேற்ற விதப்படுத்து நின்றது.

உருளியென்றது வேள்வி வினையை: மாட்டணி. வேள்வி வினையை யுருளி யெனவே வையகந்தேரும் அதன்கண் வாழு மக்கள் தேரூர்ந்து வழிச்செல்வோரும் வினையுருளி யுருண்டு சுழன்று செல்லும் நிலன் மெய்ப்பெருவெளியுமாக மாட்டேற்றுக.

உலகிற் றேர்ச்செலவிற்கு வேண்டப்படு நிலனும் வெளியும் வேறுவேறாதல் போலாது வானவூர்திச் செலவிற்கு வேண்டப்படு நிலனும் வெளியுமொன்றேயாதல்போல வையகத் தேருருளை யெனப் பட்ட வேள்வி வினையின் செலவிற்கு நிலனும் வெளியும் விழுமிய மெய்ப்பொரு ளொன்றே யெனக்கொள்க.

அழிம்பு - கொடுமை : வழக்குச்சொல்.

கொடுமையாகிய வாழ்நாளென்க. அவற்கு வாழ்நாள் கூடுந் தொறுந் தீவினைகூடுதலின் அங்ஙன மவனைத் தீவினைமிகுவித்துக் கெடுக்கும் வாழ்நாளாதலின் அவன்வாழ்நாள் கொடுமையாயின.

இன்பம் ஆர் - இன்பம் நுகர்கின்ற. வம்பு அமர் - நிலையின்மை மேவிய. மாணு - திருந்தாத.

இன்பமார் வாழ்க்கை; வம்பமர் வாழ்க்கை; மாணு வாழ்க்கை யென்க. வாழ்க்கை பாழ்வாழ்க்கையென்க.

விளிவிலின்பமாகிய வீடுபே றெய்தற்குச் சிறந்ததாய்ப் பெறற் கரிதாகிய மக்கட்பிறப்பு வாய்ப்பப் பெற்றிருந்து மதனீற் றுக்கட் பெற்றதொன்று மின்றிப் பெறற்பாலதனை யிழந்ததன் மேலுமுன்னர்ப்பெற்றதுஞ் சிற்றின்பமேயா யினிப்பெறக்கடவது முடிவில்லாத்துன்பமேயாயினமையின் வேள்வியாகிய வினைவயிற் புணர்ப்பினை மேற்கொள்ளாது வினைசெய்வானது வாழ்க்கை 'வம்பமர்மாணு வாழ்க்கை பா'ழெனத்தகுமாறும் அவன் வாழ்நாள் அழிம்பு வாழ்நாளாகுமாறு முணர்ந்துகொள்க.

இப்பாட்டானே வினைவழிச்சேறற்குரியான் வீடுபேறு தரும் புலமைக்குந் துன்பக்கேட்டிற்கு மின்றியமையாத வினைவயினெசிப் பெய்தற்பொருட்டு வினைவயிற்புணர்ப்பென்னும் வேள்வி செய்யா வழி, அவன் புலவற்குரிய புலவயிற்புணர்ப்புச் செய்தல் கூடாமையாற் பற்றின்பாற்பட்டு வினைசெய்துழன்று கெடுத லொருதலையென்பது பெறப்படும்.

கஎ. புறப்புலன் பொறியொடு புல்லினும் புல்லா
தகப்புல னாகிய வாருயி ரொருதான்
றன்னைத் தழீஇத் தன்னைத் துய்க்குபு
தன்னள வமைந்து தன்னின் மகிழ்வாற்
கென்பெற வென்செயக் கிடப்பது
தன்பெருந் தனிமைச் சால்புகே டின்றே. 135

உணர்வதாகிய வுயி ரிப்பொழுது தன்னாற்று னுணரவும் படுதலின் அகப்புலனாகும்.

ஆருயி ரொருதான் : நிறைந்து நுட்பமா யரியதாகிய வுயிர் தானொருவனாயினன். இதனால் உயிர் உள்ளம், உடம்பு முதலிய முன்னிலைக ளெல்லாவற்றினும் வேறுதல் பெறப்படும்.

ஒருதானாகிய தன்னையென்க. தன்னைத் தழுவுதலாவது: தன்னைத் தன்கட் டன்னாற் றானுணர்தலாம்.

தன்னைத்துய்த்தலாவது: தன்னின் வேறாயவையெல்லாம் பொய்ம்மையு முணர்வில்லாமையுந் துன்பமு மாதலின் அவற்றுக் கெதிர்மறையாய்த் தான் உண்மையு முணர்வு மின்பமு மாதலாம்.

தன்னளவின் அமைதலாவது: தன்னைத் தான் பெற்றபின் அவாவற்பால தொன்று மின்மையின் அவாவில்லாமை.

தன்னின் மகிழ்தலாவது: தன்னை யொழிந்தவற்றைப் புலங் கொளாதயர்தலாம்.

இனி, என்பெற என்செயவுள்ளது : பெறற்பாலவாக்கமுமில்லை ; அதனு லதனைப் பெறுதற்குச் செயற்பால செயலுமில்லை யென்ற வாறு.

தன்பெருந்தனிமையாவது: புணர்ச்சியின்றியொருதானுகியி ருத்தல்.

இரண்டாதலாவது புணர்ச்சியாதலானும் புணர்ச்சி யெல்லாம் நிலைபே றின்றிப் பிரிவாகித் துன்பமாமாதலானும் இரண்டற் றிருக்கையாகிய வொருதானுதல், சால்பெனவுங்கேடின்றெனவுங் கூறப்பட்டது.

இப்பாட்டானே வினைவயிற்புணர்ப்புடையான் வினைக்கட் பற்றிலனுகுக வெனவே அங்ஙனமவ னதன்கட் பற்றிலனுதற்குப் பொருட்டாவதாய், வினையிற் சிறப்புடையதாய்ப், பற்றப்பட்டின்றி யமையாதாய பிறிதி யாதோ ? வென்னும் வினு விடுக்கப்பட்டது.

இப்பாட்டகத்து முன்னை யீரடியு மீற்றடியும் வழிநூற் படைப்பு.

கஅ. தற்பெற் ருற்குத் தன்வினைச் செயலாற்
பிற்பெற் றுறுபயன் பேணவும் படாஅ
வினைசெய் யாமையின் விளைவதூஉ மில்லை
யெனைய வுயிரையு மெற்றுக் கானுஞ்
சார்தல் வேண்டுந் தன்மையு மில்லை
யூதிய முள்ளலை யுளுற்ரு தொழிதுமென்
றூதிய மின்மையு முள்ளலை யாகிச்
சேயொடு சிவணவுஞ் சேர்ந்தோர்ப் பற்றும்
பேயொடு சிவணவும் பிதற்று மைய
னேயொடு சிவணவு நோய்கொள லின்றிச்
செற்றமும் பற்றுஞ் செற்றனை யாகி
யுற்றன வுற்ருங் குறூஉ மளவுஞ்
செய்வ நன்கு செய்யாப் போதரு
வுய்வ னிங்கன மொழுகுவோன்
மெய்கொ ளோங்குயர் மேதக வமைந்தே.

136—137

மேலைப்பாட்டிற் கூறியாங்குத் தன்னைத் தான் பெற்றவற் கென்க. பேணல் - விரும்புதல்.

எனையவுயிரையும் - எல்லாவுயிரையும். எற்றுக்கானும் - எதன் பொருட்டாயினும்.

தற்பெற்றுற்குப் பேணவுமபடா ; விளைவதூஉமில்லை ; தன்மையு மில்லையென வியைத்துக்கொள்க. உள்ளலை: நினையாயா யென முற்றெச்சம்.

உஞற்று தொழிதுமென்று-செய்யாது விடுவோமெனக் கருதி; ஊதியமின்மையின் அங்ஙனங் கருதுதலாகும் ; தன்மைப் பன்மை : வினைவிடுவோன் றன்னுயர்வியல்புபற்றிக்கொள்ளுந் தனித் தன்மைப் பன்மை.

சேய் - மகவு. சிவணவும் - போலவும்.

சேர்ந்தோரைப் பற்றிப் புலப்படும் பேயெனவே பேயென்றது பேய்கோட்பட்டானை யென்பதாயிற்று.

மையனேயென்றதூஉ மீண்டு மையனேய் கோட்பட்டானை. மையனேய் - மருட்கொளி.

நோய் : மயக்கநோய்; உயிருணர்வு கிளராமே மெலிவித்தலின் அஃதன்னது.

உற்றன - பொருந்தியன.

இயன்றன வியன்றவா றியலு மளவுமென்க. உற்றனவாகிய 'செய்வன'வற்றை யெனக் கூட்டிப் பெயரொட்டாக்குக.

போதரு - வா : ஏவல். செய்துபோதரு : ஒருசொல். செய்யா : வினையெச்சம்.

இங்கன மொழுகுவோன் மேதக வமைந்துய்வ னென முடிக்க.

ஈண்டு மேதகவு : தற்பெறுதல்; அதுவே வீடுபேறு. உடல் கழியாது வாழாநிற்புழி யெய்திய தென்பதுபற்றி அவ்வீடுபேறு உடல் வாழ்வீடென வழங்கத்தகும்.

உடல்வாழ் வீடுற்றோன் அவ்வுடல்வாழ் வீடமைந்துய்தலாவது : வீடெய்தினு மூழ்வினை கழியுந் துணையுமுடல் கழியாதுடனிற்குமா கலின் அவ்வியைபுபற்றி மரூஉவானே தற்பெற்ற பேற்றின் வழா மையு மொரோவழியரிதிற்சிறிது வழீஇயினுங்கடிதின் வழுத்தீர்தலு மாம். மரூஉவாவது : பயிலப்பட்டது பயிற்சியானே பயின்றதன்க ணினைவின்றியுந் தானே வரற்பாலதாந்தன்மை.

இப்பாட்டின்கண் வினைசெய்யாமையின் விளைவதூஉ மில்லை யென்ற வாற்றுன் ஒருவன்றுன்வினைசெய்தலுமதுசெய்யாமையு மென விரண்டுந் தற்பெறுதலாகிய வீடுபேற்றுக்குத் தடையாவனவு மல்ல ; துணையாவனவுமல்லவாய்த் தம்முளொக்கு மெனவே யவை யிரண்டு முயிரின வல்ல ஒழிந்தவற்றின வென்பதூஉம் ஒழிபோ டுயிர்க் கியைபின்மையாற்றன்னின் வேருகியவொழிபின்க ணியல் பாக நிகழும் வினையை யுயிர் தான் றடுக்கலுறு மெனின் அஃ துயிர்ஒழிபோடு பற்றுச் செய்தலின ஞகக்கடவதாகலின் வினைசெய் யாமையு முயிர்க்குத் தளையெனக் கடியப்படுவ தென்பதுஉம் அதனல்

வினைசெய்யா தொழிதற்கு மோருயிரு முரியதன் றென்பதூஉம் புணர்ப்பும் நொசிப்பும் புலமையுமே தற்பெறுதலாகிய வீடுபேற் றுக்குச் சிறந்ததுணை யென்பதூஉம் தானே யியங்க வல்லதோ ரூர்திக்கணிருப்போர்தம்மூர்தி யியங்காநிற்பவுந் தாமொருவினையு மின்றித் துயில்கோடற்குத் தடையிலராதல்போலவே யாவருந் தம் முள்ளம்வினைசெய்யவுஞ் செய்யாதுநிற்பவு மொப்பத் தாமொரு வினையு மின்றி நொசிப்பும் புலமையுங்கொண் டின்றுயில்கோடற் கிடையீ டின்றென்பதூஉ முய்த்துணரப்படும்.

சேய்முதலாயமூன்று மூதியமு மூதியமின்மையு முள்ளிவினை செய்யாது உள்ளாது வினைசெய்த லொப்புமையானே யொப் பிக்கப்பட்டன.

இனி, 'உற்றன வுற்றுங் குறுமளவுஞ் செய்துபோதரு' வெனவே வினைசெய்வான்கண்வினை, துயில்வோன் கைப்பொருள் போலத் தானே யொழியற்பால தல்லது வினைசெய்வானு லொருஞான்று மொழிக்கற்பாலதன்றென்பது பெறப்படும். துயில்வோன் றன் கைப் பொருளை நோக்கியிராதே துயில் விழைதல் போன்று வினைசெய் வானுந் தான்வினைசெய்யாநிற்பவே யதனைநோக்கி யிராது தன்னையே நோக்கி யயர்ந் தறிதுயில் கோடலும் வேண்டப்படும். இதனல் வரும் வினைத் தடுமாற்றமு மமையும்.

இன்னு மதனனே அவன் றன்னிளமை முதுமைகட்கும் பிறசார்பு கட்கு மேற்ப வினைத்திறம் பெருகச்செய்தலு மளவேசெய்தலுங் குறையச்செய்தலு மங்ஙனமுஞ் செய்யாமையும் கைகான்முதலிய குறைதலாயின் அதற்கேற்ப வமைத்துக்கோடலுநோய்மிக்கு மாட்டாமையு மெல்லா மடங்கும்.

அவை யெல்லா மவனுடைய வல்ல.

கசு. பண்டை மன்னர் பாண்டியர் முதலோர்
கொண்ட வினையைக் கோடற வாற்றிக்
கைகண் டனரால் காளை யன்னய!
ஞால முறுநல னுடியுஞ்
சால வினைசெய் தகவுளை மற்றே. 138

கொண்ட வினை: தமக்கென வரைந்துகொண்ட வினை.

கோடு-கோடுதல். கோடாமை: விருப்புவெறுப்பின்றி யொப்ப நிற்றல்.

ஆற்றி-ஊக்கிச்செய்து.

கைகண்டனர்: பயன் பிழையாமற் செய்து பயின்று துறை போயினர்,

ஆல்: அசை.

காளை-ஆனேறு.

ஞாலமுறு நன்மையை நாடி யாயினுமென வும்மை யிழிவு சிறப்பின்கண் வந்தது. அந்நாட்டமு மொருபற்றுகலிற்பற்றுத் துவரத் துறப்பார்க் கதுவு மிழிந்ததாமாறு காண்க.

எனவே அதுவு நாடாது ஆயண்டிரன்போலச் சான்றோர் பிறருஞ் சென்ற நெறியெனக் கொண்டு வினைசெய்தலே சிறப்புடைத் தென்பது பெற்றும்.

வினைசெய்வான் றன்னுன் ஞாலமுறுநலனுவன: தனது வினை கண்டு ஞாலமும் வினைசெய்து விளைவு துய்த்தலுந் தன்வினையி னூதியங் களைத்தான்கொள்ளாது கொடுப்பக் கொண்டு துய்த்தலுமாம்.

எனவே யிதனுனு மவன் றன்வினைக்கண் ணு மூதியத்துக்கண் ணுந் தனக்குப் பற்றின்மை யமையும்.

தகவு-தகுதி: உரிமை. தகுதி சால வுள்ளனை யென்க.

தகவுண்மை தகவுடையான்மே னின்றது. "கிணற்றூற் றன்ன நீயுமாருளையே" யெனவிச்சொல் பண்டும் வந்தது.

மற்று: அசை.

உ௯. முதுமை சான்ற முதல்வ ராயினர்
செதுமை யின்றிச் சிறப்புப் பெறுமவ
ரெவ்வெவை கொல்லோ வியற்றி யொழுகுப
வவ்வவை யிற்றையே யல்லார் செய்ப
சான்றோர் மேற்கொளுஞ் சான்றினை
யேன்று ராகுப விவ்வுல கோரே. 139

முதுமை-பேரறிவுடைமை. சான்ற-நிரம்பிய; அமைந்தவெனினு மாம். முதல்வர்-தலைவர்.

செதுமை-தீமை. சிறப்பு-பிறராற்பேணற்பாடு.

சான்றோர்: பொருளொடு புணராச் சுட்டுப்பெயர்; முதுமை சான்ற முதல்வரைச் சுட்டுதலின்.

சான்று: தம் மொழுகலாற்றை வலியுறுத்தற்குக் கொள்ளு மெடுத்துக்காட்டு, நூல்வழக்கு முதலாய வளவைகள்.

என்று ராகுப-ஏற்றுக்கொண்டாராவார்.

இதனுற் றமக்கொரு பயனின்றேனும் பிறர் தம்மைக் கண் டொழுகுதற் பொருட்டுத்தாஞ் செயக்கடவ வினை செய்தொழுகு தன்முதுமை சான்ற முதல்வர்க்குக் கடனுயிற்று.

உக. அன்ப! வெற் காண்டி யடுக்கிய மேல்கீ
ழிம்பரென் றெண்ணு மிம்மூ வுலகினும்
யான்செயற் பாலதி யாது மின்றே
யான்பெறு கிலவும் யாவோ
யான்குறை வினைவழி யாப்புறச் செல்கே. 140

பெறுகில-பெறுதன. யாவோ : ஓ : அசை. இல்லையென்பது.

குறை-இன்றியமையாதது. "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்தன் றுல"தெனவும் (முப்பால். ஆள்வினையுடைமை. 2.) "பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே" எனவும் (புறம். 188.) வந்தது.

ஞால முய்தற் கின்றியமையாதாகலின் நம்பி தன்வினையைக் குறைவினை யென்றானெனக்கொள்க. தன் பேரருட் கின்றியமையாத தெனினுமாம்.

யாப்புற-கட்டுப்பாடாக: வரம்புபடவென்பதாம். யாப்பற வென வோதிப் பற்றாகிய கட்டின்றி யெனப் பொருள்கொளினுமாம்.

செல்கு - செல்லாநிற்பேன். நிகழ்வின்கணின்றது. பண்டும் பின்றையுமுட்பட முப்பொழுதினுஞ் செய்யு மியல்புபற்றிச் செல் கென நிகழ்காலத்தாற் கூறினு னெனினு மமையும்.

உஉ. யான்மடி மடியா வெஞ்ஞான் றானு
மேன்முறைத் தொழிலொடு மேவா தொழியி
னவ்வழி மாந்த ரணைகுவ
ரெவ்வழி யானு மென்பது கொளலே. 141

மடிமடியா-மடியை மடித்து. ஆனும்-ஆயினும். மேன்முறைத் தொழில்-தொன்று தொட்டுவரு மொழுங்காகியதொழில். ஒழுங்கா வன : அறம், ஒழுக்கம், செப்பமென்பன.

மேன்முறை - முற்காலமென்றுமாம். முற்காலத்தொழிலாவது : அறம். அஃதேனைச்செயல்போலாது இறப்பு நிகழ் வெதிர்வுகளின் மாறுதெஞ்ஞான்றுமொருபெற்றியேயா யிருப்பதாகலின் முற்காலத் தொழிலெனவும்படும்.

அவ்வழி-அச்சோம்பல்வழி.

எவ்வழியானும் : நெஞ்சு மொழி மெய்களானு மில்வாழ்க்கை, யேனைவாழ்க்கைகளானு மறம்பொருளின்பங்களானு மென்றவாறு.

இனி, எவ்வழியானுமென்றது : எவ்விடங்களினு மென்ற வாறுமாம்.

கொளல் : வியங்கோளுடன்பாடு.

இதனன் மாந்தர் மடிகொள்ளாது நல்வினையை மேற்கொளற் பொருட் டிறைவன் மடியின்றி வினைமேற்கொள்ளன் மரபென் பதூஉ மவன்அது செய்யாவழி மாந்தர் மடிமேற்கொண்டு வினை திறம்புவரென்பதூஉ மதனு விறைவற்கு மன்னுயிர்க்குப் போலப் பலப்பல பிறப் பெடுத்துவந்து மாந்தரூடு வழங்குதலு மரபென்பதூ உந் துணியப்படும்.

இத்தொழில்கடா மிறைவன் றன் முன்னிலையளவானே ஞாலத் தொகை முத்தொழிற்படநிற்றலொடு மதற்கு நிலைக்களனாதலொடு முரணாறாது நிகழ்வனவாம்.

மேலுமிறைவனுவா னெல்லாம்வல்லன் : எல்லாமுடையன் ; எல்லா வற்றுக் கண்ணும் வேண்டுதல் வேண்டாமையிலன் ஆகலின் அவன் பிறத்தன் மாட்டானெனவும் பிறத்தலிலனெனவும் பிறவித் துன்பம் வேண்டாதவனெனவுங் கோடல் இறைவன் றிறமைக் கிழுக் காதலான் இறைவனேனையுயிர்போல வினைவழிப்படாது வினையைத் தன் வழிப் படுத்துத் தானே தன்னைப் படைத்துக் கொண் டவ்வப் போழ்து பிறந்து வந்து மீளுமெனக்கோடலே தக்கது.

அன்றியுங் கடவுண் முற்று முணர்தலென்பது பொதுவாக வுணர்தலல்லது தனித்தனி யுணர்தலன்றாகலானுந் தனியுணர்வு முற்றுணர்வாதல் செல்லாமையானும் அவ்வுணர் வில்லாதான் அவ் வுணராமையுடையனெனப்படுங் குற்ற முடைமையானு மவ்வுணர் வுதா னுடம்பொடுகூடியவழியன்றிப் பெறப்படாமையானு மிறை வனு முடம்பொடு கூடியவழி யன்றிஅக் குற்றந் தீர்ந்திலனுவ னென்பது முணர்க.

எனவே முதல்வன் முற்றுணர்வென்னும பொதுவுணர்வுந் தனித் தனி யுணர்வென்னுஞ் சிறப்புணர்வு மொருங்குடைய னென்பதா யிற்று. மன்னுயிர்க்காயின் அவற்று ளொன்றுள்வழி யென்றிலதா மென வுணர்க. இது முதல்வனொடு மன்னுயிரிடைவேற்றுமை.

உடம்பு கொள்ளு முயிரு ளன்புமிக்கவற்றி னுடம்பை யிறைவன் பற்றிநின் றுணர்தல்கூடும் ; வேறுடம்பு கோடன் மிகை யெனின் அவற்கவ்வுடம்பு கோடலோடு வேறுடம்பு கோடலிடைப்படு முயர் விழி வென்னை ? யென மறுக்க.

உ௫. வினைசெய் யேனெனின் மெய்கொண் டியலு
மினைய மக்க ளெல்லாங் கெடுவர்
நலந்தீங் கிடையில கலந்தே னுகுவல்
வலந்தரு மைந்த ! மக்களை
யுலந்தறக் கொன்ற வொருவெனு குவெனே. 142

மெய்-உடம்பு. இயலும்-வழங்கும். இடை-வேற்றுமை. நன்மை தீமைகளைத் தம்முள் வேற்றுமை யிலவாக விரவிமயக்கினே னுவே னென்க. மக்களெல்லாருநன்மைதீமைகளை மாறியுணர்ந்து செய்வ ரென்பது கருத்து.

வலம்-வெற்றி. தரு-கொள்ளும். மைந்த-ஆடவனே ! அஞ்சாமை யுடையவனே ! யெனினுமாம்.

உலந்துஅற-கெட்டொழிய.

கொன்ற வொருவெனுகுவெனென்றது வையத்துட் கொலைக் கொடுமை செய்தாரு ளெல்லா மிகக்கொலைசெய்தலிற் றலையாய கொலையாளி யானேயாவே னென்றவாறும்.

இதனுனும் கடவுள்பிறந்து வினைசெய்யாவழித் தான்பே ரருளுடையனுகா னெனப்பட்டுக் கடவுட் டன்மைக்கு மாருய தன்மை யுடையனுவான்செல்லு மென்பது துணியப்படும்.

மக்கட் டன்மை யழிய நின்றது மக்கட்கொலை யெனப்படும்,

உச. புலவ ரல்லார் பூணும் வினையைக்
குலவு மார்வங் கொடுசெய் தாங்கே
புலவரு மார்வம் பொய்த்து
நிலநலப் பொருட்டு நிகழ்த்துதல் கடனே. 134

புலவரல்லார் : பொதுமக்கள். பூனும் - மேற்கொள்ளுகின்ற.

குலவும்-விளங்கித் தோன்றும். ஆர்வங் கொடு-ஆர்வங் கொண்டு. செய்தாங்கே-செய்தாற்போலவே. நிலன்-உலகம்.

நிகழ்த்துதல்-வினைசெய்தல். கடன்-இன்றி யமையாதது.

ஆர்வம் பொய்த்தலாவது : தாமார்வமுடையார்போலக் காணப்பட்டு மெய்யானே யார்வ மிலராதல்; மழை பெய்யு மெனத் துணியப்பட்டிருந்து பெய்யாதொழிதலை "விண்ணின்று பொய்த்த" லென்றார்; வள்ளுவனார். (முப்பால். வான்சிறப்பு, 3.)

ஈண்டுப் புலவரென்றது மெய்யுணர்வுடைய வினைவயிற் புணர்ப்பாளரை.

உரு. கதுவிய வினைவயிற் காதல ராய
பொதுவியன் மாக்களைப் புலவ ராயினு
ருணர்வு வேறுபா டுறுத்த லொழிக
வுணர்வு மிகுதா மொருமைப் புணர்ப்பொடு
வினைநன் கியற்றுபு வேற்றோர் தமவ
வினைசெய் தொழுகுமா விழைவுறுத்
தனையர் பாற்பட் டவர்வியங் கொளலே. 144

கதுவிய-பற்றிய. காதலராய-விருப்ப முடையவராகிய.

அவரை யுணர்வு வேறுபடுக்கலுறின் அவர் அது கொள்ள மாட்டாச் செவ்வி யுடையாராதலின் முரணிக்கலக்கமெய்துதலி னற்றுது சினமுதலிய குற்றத்தின்வழிச் சென்று தமக்கும் பிறர்க்குந் தீங்கிழைத்தல்கூடும். அவரங்ஙனமாகுங் குற்ற மவரை யங்ஙன முணர்வு வேறுபடுத்த வறிஞர்மேலதேயாம். அதனாலறிஞரவரை யங்ஙனஞ் செய்யாது தாந் தம்வினை நன்கு செய்தொழுகுமாற்றை யவர்கண்டு தாமு மங்ஙனம் வினைசெய்தல் வேண்டுமென வவர்தாமே கொண்டொழுகுமாறு அவர்க்கு விழைவு மிகுவித்து அவ்வழியானே யவர்பாற்பட்டுநின்று அவரை யினிதேவல் கொள்கவென்பது.

தாஞ் செய்வினையைப் பிறர்விழைவொடு செய்யுமாறு புலவர் தா மவ்வினையை விழைவின்றிச் செய்தல்வேண்டும்.

வேற்றோர்-பிறர். தமவ-தம்முடைய. ஈற்றகர மாறன்வேற்றுமைப் பன்மைச்சொல்.

தம்மென்றது புலவரை.

தமவ வினையை வேற்றோர் செய்தொழுகுமாறென்க. ஒழுகுமாறு : கடைக்குறை; ஒழுகவென வினையெச்சமாயிற்று.

உறுத்து - மிகுவித்து.

விழைவுறுத்து வியங்கொள லென்றமையின் வலிந்து சொல்லி வியங்கொளற்க வென்பதாயிற்று.

அனையர் பாற்பட்டு : அவர் விழைவோ டொத்து நின்று.

வியங்கொளல்—ஏவல் கொள்க: வியங்கோள். அவரை வியங் கொள லென விரண்டாவது செய்யுண்மரபாற் றொக்கது.

உசு. மூதலிற் றோன்று முப்பாற் பண்பினு
மாதலுற் றியல வாக்கப் படுவன
யாதுமன் வினையும் யாவயி னானு
மீதுணர் கல்லா விழுதை வினையிது
செய்வல் யானெனச் செருக்கொடு பட்டு
மையல் கொள்வன் மற்றுப்
பொய்யென் றுணர்க புரிதல் வினையே. 145

மூதலு முப்பாற்பண்பு முன்னர்க்கூறப்பட்டன.

ஆதலுற்று இயல - உண்டாகி நடப்ப

யாது வினையும் யாவயினானு மூதலிற்றோன்று முப்பாற்பண்பினு மாதலுற் றியல வாக்கப்படுவன வெனவியைக்க.

மன் : அசை.

உணர்கல்லா - உணரமாட்டா.

இழுதை - அறிவிலான்.

அவன்றன்னின் வேறாய பண்பினாற் றன் முன்னிலையிற் செய்யப் படும் வினையைத் தான் செய்யாமே வாளா விருப்பவுந் தன்னாற் செய்யப்படுவதாக மாறுபடவுணர்ந்து யான்செய்வே னெனச் செருக்கி னகப்பட்டு மயக்கங் கொண்ட வவ்வளவே யுள்ளது; அவன் வினைபுரிதல் பொய்யென் றுணர்க வென்பது.

புரிதல் - செய்தல். வினைபுரித லென மாறுக.

இங்ஙன மொருவனான்றும் வினை செய்யாமையே யுயிர்க் கியல்பா யிருப்ப வஃதுணர்ந்து உடம்புவினைசெய்யாமையை யொரு வன்றான்வினை செய்யாமையாமெனக் கோடலு, மதுவினைசெய்தலைத் தான் வினைசெய்தலா மெனக் கோடலு மயக்கவுணர்வா மென்பது காட்டப்பட்டது.

மெய்ம் மொழிநெஞ்சுமுதலாக வினைக்குப் பற்றுக்கோடா யவையெல்லா முப்பாற்பண்பின் றிரிபே யாகலா னவற்றின் வினை பண்பினாற் செய்யப்படுவ வெனப்படும்.

உஎ. பண்பொடு வினையெனப் பாற்படு பொருண்மை
நன்கினி துணர்ந்த நவையறு சான்றோர்
பண்பு தாமே பண்புதொ றியலு
மென்பஃ துணர்ந்தெமக் கென்னென
வென்பின் வினையிடை யியைபின் றிருப்பவே. 146

பாற்படு பொருண்மை — கூறுபடு முண்மைத் தன்மை ;

அவை யிரண்டுந் தம்முட் கூறுபடுதலாவது முறையே வினை முதலும் வினையுமா யியைந்து நிற்றல்

அவையிற்றை நன்கினி துணர்தலாவது: யானெல்லாத் திரிபு களையு முக்காலத்தினுநின் றுணருஞ் சான்றுதலின் யான் றிரிபின்றி யிராநின்றேனாக வித்திரி பென்னுடையவல்ல; என் முன்னிலையாகிய பண்பினுடையன. இப்பண்புதா மென்னாற் சுட்டியுணரப்படுதலி னுணர்வேனாகிய வென்னின் வேறு யென்னோ டியைபில்லன; இவற் றான் எனக்கி யீது மூறின் றென நுகர்வினுணர்தலாம்.

நவை - குற்றம்: முக்குற்றம்; துன்பமுமாம்: பிறவித் துன்ப மும்மையு மென்க.

பண்பின் றிரிபுகளு மொற்றுமை வழக்குப்பற்றிப் பண்பெனத் தகும்.

பண்புதாமே! யென்றது நெஞ்சுமைம்பொறியுமுதலாயவற்றை. பண்புதொறென்றது ஐம்புலங்களை.

இயலும் - செல்லா நிற்கின்றன.

எமக்கு என் - எமக்கிப்பண்பொடும்வினை யொடுமென்ன வியை புளது; இன்றென்பது குறிப்பு.

என - என்றுண்மை யுணர்தலானே.

என்பு - உடல். உடல் செய்யாநிற்கும் வினையின்கண்ணே தொடர்பின்றிப் புறக்கணித்து நொதுமலுற்று வாளா வோரேதமு மின்றியினி திருப்பா ரென்க.

இதனானும் வினைசெய்த லுபிரது வீடுபேற்றுக்கிடையூ றன்றென் பது பெறப்படும்.

உஅ. இயற்கைப் பண்பி னேழைமை யுடையோ
ரியற்கைப் பண்போ டியல்வினை பற்றுவர்
முழுதுணர் கிற்கு முதுக்குறை வில்லாப்
பழுதுறு மன்ன பைதன் மாக்களை
முழுதுணர் கிற்கு முதுக்குறை வாளர்
தெருமரு மாறு செய்யார்
மருவுறு செவ்வி வழக்குணர் தலினே. 147

இயற்கை—மூதல். அஃதொருவரா னாக்கப்படாமலு மொன்றினின் றாகாமலு மியற்கையா யமைந்து கிடத்தலின் இயற்கை யெனப்படும்.

பண்பு; முப்பண்பு. ஏழைமை—அறியாமை.

பண்பினையு மதன் வினையையு மயங்கியானெனப் பற்றுக் கொள்வ ரென்க.

உணர்கிற்கும் - உணரவல்ல.

முதுக்குறைவு - பேரறிவு.

முதுக்குறை வில்லாமையாகிய பழுதென்க.

பழுது - தீது. பைதல் - சிறுருணர்வு.

தெருமருமாறு - கலங்குமாறு.

பேரறிவு மருவுதற்குரிய செவ்வி முறையை யுணர்தலானே தெருமருமாறு செய்யாரெனக் கூட்டுக.

செவ்வி வாராதவர் தமக்கு உணர்வு கொளுத்தினுங் கொள்ளார்; செவ்விவந்தார் தமக்குணர்வு கொளுத்தாதொழியினுந் தாமுணர்வு கொள்வர். செவ்விவாராதார்க்குணர்வு திருத்தப் புகின் அவருளங் கலங்குத லுறுவர்; அதனலஃ துணர்ந்தார் அது செய்யாரென்க.

உகூ. தன்னிய லுணர்வா னின்வினை யெல்லா
மென்வினை யெனஅ வென்பாற் படுத்து
வேட்கையும் பற்றும் வீந்தனை யாகி
வெப்பு நீத்து மெலிவின்
றப்பு வெம்போ ராற்றுதி மன்னே. 148

தன்னிய லுணர்வு – உயிராகிய தனதியல்புணருமுணர்வு: உயிராகிய தன்கண் வழங்குமுணர் வெனினுமாம். அவ்வுணர்வே பின் வருந் துறவுக்குப் பொருட்டாகும்.

முப்பாற்பண்பு முழுதினையு மொருங்குடன் றனக்குடம்பாகக் கொள்ளு மொற்றுமை வழக்குப்பற்றிப் பண்பின்வினை யிறைவன் வினை யெனப்படும். அங்ஙனமுணர்தலே ஒருவன் றன் வினையை யிறைவற்குக் கொடுத்தலாகிய வினைத்துறவெனப்படும்.

இறைவற்குக் கொடுத்த வினைக்கட் பற்றும் வேட்கையுஞ் செய்யிற் கொடையாகாவாறுணர்க. வீதல் – நீங்குதல்; கெடுதலுமாம்.

வெப்பு: உடலினகத்துள்ளது. மெலிவு: உடலின் புறத்துத் தோன்றும் வாட்டம். இன்று – இன்றி. வாழ்க்கைத் துன்பங் கண்டு புலம்புங் கவலையுள்ளத்தா லுடற்கு வருவது வெப்பு.

வேட்கையும் பற்றும் வீயவே யுள்ளக்கவலைதணிதலி னுடல் வெப்புந் தணியும்; வெப்புத் தணிய மெலிவு தணியும்; மெலிவு தணிய வினையூக்கங் கிளரும்.

அப்பு – அம்பு: மென்றொடர் வன்றொடராயிற்று.

ஆற்றுதி – செய்; ஏவல். மன் – வேந்தன்: விளி.

ந௦. அழுக்கா றுமையு மவ்வுளக் கிளர்ச்சியு
மிழுக்கா ராகி யெஞ்ஞான் றும்மெவ
ரிவ்வென் கோட்பா டேற்றுப் படர்ப
வவ்வ மாந்தரு மைய!
வெவ்வ வினையி னிகெப்ப மன்றவே. 149

அ-அழகு. இழுக்காராகி-தவறுதுடையராகி.

மகர வொற்று: விரித்தல்.

எக்கோட்பாடுகளையும் யாவராயினு! மேற்று வழிப்படுதற்கின்றியமையாதன: அழுக்காறுமையு, முள்ளக்கிளர்ச்சியு மாதலின் அவற்றை யெடுத்தோதினன்.

உள்ளக் கிளர்ச்சி - ஊக்கம்.

ஏற்று - மேற்கொண்டு. படர்ப - ஒழுகுவர்.

அவ்வ : சுட்டடுக்கு. ஐய ! : விளி.

எவ்வம் - துன்பம், எவ்வமாகிய வினையென்க. எவ்வந் தரும் வினையுமாம். இன் : நீக்கப்பொருட்டு.

இகப்ப—நீங்குவர். மன்ற : தேற்றப்பொருண்மை யிடைச் சொல் ; ஒருதலையாக நீங்குவரென்க.

௩௧. ஔவியம் பற்றி யன்பிழந் தெனது
செவ்விய கொள்கை செல்சா ராகா
வோட்டை நெஞ்சி னொழுகிய வுணர்வினோ
ராக்கங் கெட்டா ராமென
நோக்கங் கொள்க நூல்வல் லோயே.

ஔவியம்—அழுக்காறு : எல்லா வுயிர்கட்கு மியல்பா யெழுவது மின்னாப் பண்புகட் கெல்லா முதலாகிய வித்துமாய்க் கேட்டுக் கின்றியமையாதாகலின் அழுக்காற்றையே யெடுத்தோதினான்.

அன்பு செய்ய வழுக்காறு மழுக்காறு செய்ய வன்பு மாயுமாகலின் அவை யிரண்டுந் தம்முண் மாறுவனவா யொன்றுள்வழி யொன்றிலவாம்.

கேடுகட் கழுக்காறுபோல நலங்கட் கெல்லா மின்றியமையாது முதலாகிய வித்தா யெல்லா வுயிர்கட்கு மியல்பா யெழற்பாலது அன்பாதலின் நலங்களுள் அன்பே யெடுத்தோதப்பட்டது.

இதனாற் கேடு செய்தலும் நலஞ்செய்யாமையு மென்னு மிரண்டுங் குற்றமாயின.

செவ்விய கொள்கை—திரிபின்றி நிலைபெற்ற கொள்கை. மயங்கா ஐயந்திரிபின்றித் துணியப்பட்டதாகலிற் செவ்விதாகும். செவ்விய—ஔவியமில்லாத வெனினுமாம்.

செல்சார்—பற்றுக்கோடு.

நெஞ்சின் : இன் : நீக்கப்பொருட்டு.

" ஓட்டை நெஞ்சி னொழுகிய வுணர்வினோ" ரென்ற தியற்கையுணர்வுஞ் செயற்கையுணர்வு மொருங்கு சிறிது மில்லாதவ ரென்றவாறு. இதனாற் சாற்றைவிட்டுக் கோதுபற்றும் பொள்ளற் பொருள் போல அன்பிழந் தௌவியம் பற்றுத லியல்பாயிற்று.

செல்சாராகா வென்னு மீறு தொக்க பெயரெச்சம் உணர்வினோ ரென்னும் பெயர்கொண்டது. " உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட், செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை, மறுவில் கற்பின் வாணுதல் கணவ " னென்னுந் திருமுரு காற்றுப்படையிற் போல.

நோக்கம்—நோக்கனோக்கம் : என்றது - கருத்தென்பது.

தன் பணிகேட் டொழுகு மடக்க முடைய னென்பது தோன்ற நம்பி, வில்லியை 'நூல்வல்லோயென'க் கேட்பித்தான். என்னை?

" வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய "

(கலி. குறிஞ்சி. 11.) னென்றலி னென்பது.

கெட்டாராம் : ஆம் : அசை.

'ஆக்கங்கெட்டா' ரெனப் பண்புவினை பண்பிமேனின்றது. ஆக்கம் - மேன்மேலுயர்தல்.

கஉ. உணர்வு சாலியு மொழுகு மாறுதன்
னணவு மியற்கையொ டமையப் புரைவ
தாங்க வாழுயி ரடையவுந் தத்தம
பாங்கி னொப்பவே படரு மரபின
வின்ன வாறு மென்று
லென்ன வாறுதம் மியல்பின் மீடலே. 151

உணர்வுசாலி - உணர்வு மிகுதி யுடையவன்.

உம்மை : உயர்வுசிறப்பு.

அவன் நடக்குமுறையுந் தன்னியற்கையொடு பொருந்த வொத்திருப்பதேயா மல்லது தன்னியற்கையின் வேறுபட வொழுகலாற்று னென்க.

அணவும் - சாரும். இயற்கை - இயல்பாய பண்பு. ஒழுகுமாறு புரைவதென முடிக்க. ஒழுகுமாறு - ஒழுகுமுறை.

புரைவது – ஒத்திருப்பது ; முற்றுவினை.

ஆங்க - அதுபோல. வாழுயிர் - மன்னுயிர். அடைய - எல்லாம். உம்மை : அசை.

பாங்கு - இயற்கைக்கூறுபாடு. அதனோ டொப்பவே செல்லும் வழக்க முடையனவென்க. மரபு - வழக்கம்.

'இன்னவாறு மென்றுல் அவை தம் மியல்பினின்று மீட்க மீடலெவ்வாறு? : முடியாதென்பதாம். அதனல் அவை தாமே தம்மியல்பான் மீளுமாறு அறிஞராயினர் தம்மியல்பாகிய வினையைப் பற்றின்றி நன்கு செய்துபோதருத லல்லது அவ்வுயிர்களி னுணர்வை வலிந்து மீட்க முயலுதல் கூடாதென்பது குறிப்பெச்சம்.

இயல்பின் : ஐந்தாவது : நீக்கப்பொருட்டு.

கங. யாவருந் தத்த மியல்பிற் கேலா
மீவரு வினைநலன் மிகநன் காற்றலி
னிழிந்ததன் னற்செய லேற்றமா மிதன்கட்
டுஞ்சினு நன்றே தோழ!
வஞ்சிய தகுமா லயல்வினை நலமே. 152

மீவரு - மேலாக வருகின்ற. வினை நலன் - நல்வினை. நன்காற்ற லின் - குற்றமற நன்மையாகச் செய்தலிற் காட்டினும்.

தன் னற்செயலென்றமையானே இழிந்த வென்பது கெட்ட வென்ருகாது; பிறருடைய வுயர்ந்த நல்வினையிற் குறைந்த வெனப் பொருள்படும்.

ஏற்றம் - மேன்மை. தனக்கு மேன்மையாமென்க.

துஞ்சுதல் - சாதல். இதன்கட் டுஞ்சுதலென்றது இவ்வினை யையே செய்துபோதலின்கண் வறுமை களையலாற்ருமையானுதல் கேடர்செய்யு மிடையூறு காத்துக்கொள்ள லாற்ரு வெளிமையானு தல் சாதலாமென்றவாறு.

துஞ்சினு மென்னு மும்மை யெதிர்மறையாகலிற் றுஞ்சாமையே கொள்ளப்படும். நல்லதேயாமென்க. இனித் துஞ்சுதல் இயல்பாக வாழ்நாண் முடித லெனினுமாம்.

'அயல்வினைநலம் அஞ்சியதகு' மென முடிக்க. அயல்வினை - பிறர்வினை. அஞ்சிய தகும். அஞ்சுதற்குத்தகுவதுளன்க; செய்பிய வென் வினையெச்சம்.

நன்கு முடியுங்கொல்லோ முடியாது கொல்லோ வெனவும் பிற ரிகழ்வர்கொல்லோ வெனவும் பிறர்பகையுந் தம்மினப்பகையு மொருங்குநேர்தலுங் கூடுங்கொல்லோவெனவு மிங்ஙனம்வரு மையுறவுபலவற்ருனுங் கடிதினு மெளிதினு மாகாமையானு மஞ்சிய தகுவதாமாறுணர்க.

இன்னோரன்ன வுளவு தத்தம் வினைநல னற்றற்க ணுளவாகா. ஆல்: அசை.

இதனு லவரவர்க்குரிய நற்செயல்களை மாற்றுதலானும் மாற்று வித்தலானும் வரும் பழுதாமாறு தெரிக்கப்பட்டது.

௩௪. புணர்ப்பொடு நின்ருேன் புலப்பற் றெனைத்து
நினைப்பொடு நீத்த நிலைமைக் கண்ணும்
வஞ்சிசென் றிறுத்து வணக்கப் பட்டன
னெஞ்சிய கொடுவினை யிழைக்கு
மஞ்சுறு மெதனு லருட்டிரு மாலே. 153

புலப்பற் றெனைத்து நீப்பின் நினைவென்பது முண்டாகாமையி னினைப்பொடு நீத்த வென்றது.

ஒடு: ஆருவதுடனிக்ழ்ச்சியொடு. பற்றும் நினைப்பு முடனீங் குதலின்.

வஞ்சி - வேந்தனை வேந்தன் படையெடுத்து வலிந்து சென்று விட்டுப் பொருது நாடு கவர்தல்.

வஞ்சி சென் றிறுத்து வணக்கலாகிய வேந்தன்செய்தி யீண்டுக் கொடுவினைமே லேற்றப்பட்டது; கொடுவினையின் வலிமிகுதிதோன்ற. வணக்கப்பட்டனன்: செயப்பாட்டுமுற்றெச்சம்; வணக்கப்பட் டென்பதாம்.

வேந்தன் வலிந்து நாடு கவர்தல்போலக் கொடுவினை யிழைப் பிக்குமது வலிந்து அறிவு, அன்பு, அருள், உவகைமுதலிய நலங்கவர் தல் கொள்க.

எஞ்சிய : செய்யாதொழிந்த. இழைக்கும் - செய்கின்றான்.

அஞ்சுறும் - அஞ்சப்படும் : செயப்பாட்டுவினை.

அருட்டிருமாலே! புணர்ப்பொடு நின்றோன் றான் புலப்பற் றெனைத்து நினைப்பொடு நித்த நிலைமைக்கண்ணும் அஞ்சுறு மெதனுல் வஞ்சிசென்றிறுத்து வணிக்கப்பட்டவனாகி யெஞ்சிய கொடுவினை களை யிழைக்கின்றான்? எனக் கூட்டிவினை முடிவுசெய்க.

நிலைமைக்கண்ணும் : உம்மை : உயர்வுசிறப்பு. இது கொடு வினையின் வலியுயர்வுசிறப் பென்க.

இதனாற் புணர்ப்பினின்று வழுவுதலு மொரோவழிக்கூடு மென்பது பெற்றாம்.

இப்பாட்டு வில்லிவினா. மேல நம்பிவிடை.

நரு. அத்துணை வலிமிகு மாற்றவுங் கொடியவை
செற்றமொ டார்வஞ் செப்பிய விவ்வே
யிடைநிலைப் பண்பி னெழூஉ முடற்பிறப்
படையவும் விழுங்குபே ரகடுடைக் கூளிகள்
மயக்கந் தெளியு மகனையு மருவி
முயக்கஞ் செய்ய முனைதரு தாப்பகை
யிவ்வல தில்லென வெற்றுபு
செவ்வனம் போற்றல் செயற்பா லதுவே. 154

மேலைப் பாட்டில் வில்லி கூறியாவாறே யவ்வளவு வலிமை மிகுங் கொடியவை செற்றமு மார்வமுமென்னு மிவ் விரண்டுமா மென்க.

ஆற்றவும் - மிகவும்.

தம்மை யுடையாரைத் தீவினைநெறிக்கட் கொண்டுய்த் திம்மை மறுமை வீடுபேறுகளைக் கெடுக்குங் கொடுமைபற்றிச் செற்றமும் ஆர்வமுங் கொடியவை யெனப்பட்டன.

செற்றம் - சினம். ஆர்வம் - மேன்மேலெழும் பற்று.

செப்பிய : முன்னர்க் கடிந்து சொல்லி விலக்கப்பட்ட, இவ்வே- இவைதாம்.

உண்மை, புன்மை, மைம்மையென முறையே தலை, யிடை, கடையாகிய பண்பு மூன்றனுள்ளு மிடைக் கண்ணதாகிய புன்மைப்பண்பு இடைநிலைப்பண் பெனப்படும்.

இடைநிலைப் பண்பினின்று முண்டாகு முடற்பிறப்புக்கள் செற்றமு மார்வமும். ஒருபண்பினின்று முண்டாவன வென்பது பற்றித் தம்மு ளுடற்பிறப் பெனப்பட்டன. உடற்பிறப்பு - உடன் பிறப்பு, "உடற்பிறப் பில்லா வுடம்புபாழ்" (நல்வழி, 24.) என்றார்; பிறரும். வழக்கினு முடற்பிறப் பென வழங்குப; உடன்பிறப் பென்பதன் மரூஉ வெனினுமாம்.

செற்றமு மார்வமுந் தம்மு ளிணைந்தல்லது நில்லாமையானு முடற்பிறப்பாமாறுணர்க.

எல்லாவற்றையும் விழுங்குகின்ற பெரிய வயிறுடைய பேய்களென்க. அகடு - வயிறு, கூளிகள் - பேய்கள்.

அவை யிரண்டு மொருவரைத் தம்வழிப்படுத்துநின்று அவர்தம் அறிவு, நற்பண்பு, ஒழுக்க மெல்லாவற்றையு மேன்மேற் கெடுத்தல் பற்றி யவ்வாறு புனைந்துரைக்கப்பட்டன.

இவ்வே உடற்பிறப்புங் கூளிகளுமா மென வியைக்க.

‘மருவி’ யென்றதனானே அவைதா மொழிக்கப் பட்டபின்றையு மரூஉவாய் நின்று முயங்குதலுங் குறிக்கப்படும்.

முனைதரு - முற்பட்டெழுகின்ற.

இவ் - இவை. எற்றுபு - துணிந்து; நினைந்தென்றுமாம். “எற்ற நினைவுந் துணிவு மாகும்” என்பது தொல்காப்பியன். (உரிச்சொல்லியல். 41.)

செவ்வனம் - தப்பாது.

போற்றல் - பாதுகாத்தோம்புதல்.

போற்றலே செயற்பாலதென வெழுவாயும் பொருணிலையுமாயமையும்.

௩௬. புகையிற் பொதியுண் பொங்குசெந் தழலுந்
துகளின் மழுகுந் தூயகண் ணடியும்
பையு ளன்னை பரிவுறு வயிற்றுட்
பையுட் பொதியும் பச்சிள மகவு
மென்றிவை பொரூஉ மென்ப
கன்றலுங் காதலுங் கவைஇய வுணர்வே. 155

பொதியுண் - பொதியப்பட்ட. மழுகும் - ஒளிதேய்ந்து மறையும். கண்ணடி - கண்ணாடி.

பையுள் - துன்பம்: சூன்முதிர்தலா னுறு நோவென்க. பரிவு உறு - அன்பு மிகும். பரிவுறு மகவெனக் கூட்டுக. வயிற்றுட்பை: கருப்பை.

பொரூஉம் - ஒக்கும். என்ப : அசை.

கன்றல் - வெகுளல். காதல் - ஆர்வம்.

கவைஇய - அகத்திட்ட; பொதிந்துமறைத்த வென்பதாம். கவைஇய வுணர்வு பொரூஉமென முடியும்.

எனவே தன்னியல்பிற் றுகளின்றித் தூய்தா யொளிப்பிழம்பாகிய வுயிருணர்வு மேற்கூறிய விழைவு வெகுளிகளாகிய துகளானே மறைப்புண்டு தனக்குத் தான் றோன்றாது மயங்குதலும், புகைக்காற்றாற் கொண்டுபோகப்பட்டு மிளிருந் தழல்போல்வும் துகடுடைக்கப்

பட்டு மிளிருங் கண்ணாடிபோலவுஞ் சூன்முதிர்ந்தவழிப் பிரிந்து வெளிவந்து மிளிருங் கைம்மகப்போலவுஞ் சினனுங் காமமும் புணர்ப்பானே வீசப்பட்டும் நொசிப்பினானே துடைக்கப் பட்டும் புலமையானே தான்வேறாய் வெளிவந்து மிவ்வாற்றான் அவ்வுயிருணர்வு மிளிர்தலு மொப்பொடு பொருந்த வுரைத்துக்கொள்க. புணர்ப்பினானே வீசி யெறியத் தக்கவும் நொசிப்பினானே துடைக்கத் தக்கவும் புல்மையானே யுயிரிற் பிரியத் தக்கவுமாகச் செற்றமு மார்வமுந் தத்தமுட் பலவேறுபடுமாற்றையு முய்த்துணர்ந்து கொள்க.

நஎ. ஆரா வியற்கை யவாஅ வென்னுந்
தூரா நெருப்புச் சூழ வெரியப்
புலவ ருடைய புலமை யுணர்வு
குலவ லுடைத்துக் கொற்றவ!
நிலவ லுறுபகை நெடிதவர்க் கதுவே. 156

ஆராமை - நிரம்பாமை. நிரம்பாமையாகிய வியல்பினையுடைய வவா வென்க: இயற்கையாய் நிரம்பாத வவா வெனினுமாம்.

தூரா நெருப்பு - அவியாத நெருப்பு. இஃதேனைக் கட்புலனாகு நெருப்பொடிந்நெருப்பிடை வேற்றுமை.

சூழ வெரிய: புலவருடைய புலமையுணர்வினைச் சுற்றிநின்றெரியா நிற்க வென்பது.

எனவே யவ்வுணர்வு சிறிது தன்னிலையிற் றிரிந்து பெயருமாயின் வேட்கைத் தீப் பட்டு வெதும்பு மென்றவாறு மாயிற்று. அதனா லவ்வுணர்வு தன்னைக் குறிக்கொண்டு கடைப்பிடித்து அற்றப்படாது நோக்கி வரல்வேண்டு மென்பதூஉங் கொள்க.

குலவலுடைத்து-விளங்குதலுடையது.

நிலவல் - நிலைபெறுதல். நெடிது - நெடுங்காலம்: எப்பொழுது மென்பதாம்.

அதுவென்றது அவாவினை. அவர்க்கு-அப்புலவர்க்கு.

அவர்க்கு நெடிது நிலவலுறுபகை அதுமென மாறுக. புலமையுணர்வு, நெருப்பெரியக் குலவ லுடைத்தென்க. நெருப்பாற்சூழப் பட்டதென்பது கருத்து; மேற் புகையோ டொப்பிக்கப்பட்டது.

மெய்யுணர்வு சான்ற புலவர்க்கு வேட்கை அற்றம் நோக்கி யண்மைக்க ணிடையீடின்றிநிற்கும் பகையாகலின் அதனையே யவர்க் கீண்டுச் சிறந்தெடுத்துக் காட்டி யெச்சறிக்கை செய்யப்பட்டது. அவாவே கடியற்பாலதன்றி வினை கடியற்பாலதன்றென்பது கருத்து.

நஅ. ஐம்பொறி தாமு மகத்த வாகிய
நெஞ்சமுந் துப்பொடு நிரம்பா வேட்கை
நெருப்புக் கனலு ஞெகிழி யாதலி
னுடல்கொ ளுயிரை யுணர்வுசூழ்ந்
துடல்பு மயக்கு முருமந் நெருப்பே. 157

அகத்த-உடம்பினுள்ளிருப்பன.

நெஞ்சந் துப்பென விவ்விரண்டு முள்ள மெனப்படும்.

ஐம்புலனு மொருங்குணர்வதும் நினைவு கொள்ளுவது மையுறு வதுமாவது நெஞ்சம்.

புலங்களை யெல்லாம் வேறுபடுத்துத் துணிவதுந் துணியப்பட்ட வவ்வப் புலமாகத் திரிந்துயிருணர்வா னுகரப்படுவது முயிருணர்வு பற்று நிலைக்களஞ்வது மாவது துப்பு. துப்பென்பத னொருகூற்றுத் திரிபே நெஞ்சமாகும். இவ்விரண்டு மைம்பொறியுமாகிய இவ் வேழ் துணைமுதலு மேற்கூறிய வேட்கை நெருப்புப்பற்றிக் கனன்று கொண்டிரா நின்ற கொள்ளிக்கட்டைகளாகு மென்பது.

ஞெகிழி-கொள்ளிக்கட்டை.

கொள்ளிக்கனல் உயிரினுணர்வைச் சுற்றிக் கவிந்து கனலா நிற்றலி னுயிர் சோர்ந்து மயக்க முருநிற்குமென்க.

உடல்பு-உடன்று: மாறுபட்டு; வினையெச்சம். ஊரும் - ஊர் கின்ற: மேன்மேல் வருகின்றவென்பதாம்.

அந்நெருப்பு-அவ் வேட்கை நெருப்பு.

ஊருமந் நெருப்புஉணர்வு சூழ்ந் துயிரை மயக்கு மென முடிக்க.

உயிரை உணர்வு சூழ்ந்தென்பது ஆவினைப் பால்கறந்தா னென்ருற்போல நின்றது.

கஅ. புலவனை நீநின் பொறிமுத லாயின
வலனுற முந்துற வலந்து மாணூஉத்
தன்மைப் புலமை தனிப்பெரும் புலமையென்
றம்மைப் புலமை யாயிரண் டனையுங்
கொல்லுமவ் வேட்கைக் கொடியோற்
கொல்லுக கொலைஞற் கொல்லுதன் முறையே. 158

புலவனுக வுள்ளாயாகிய நீயென்க. புலவனை: முன்னிலைப்பெயர்.

வலன்-வெற்றி. உற-பொருந்த. வலந்து-கட்டி: அடக்கியென் பதாம்.

நீ முந்துற நின் பொறி முதலாயினவற்றை வலனுற வலந்தென்க.

மாணூஉ - மாட்சிமைப்பட்டு.

மாட்சிமைப் படுதலாவது: ஆர்வச் செற்றங்களை யடக்குதற் குரிய புணர்ப்பும் நொசிப்பும்கிரம்புதலாம்.

தன்மைப்புலமையாவது: பொருள்களின் பொதுமைத் தன் மையையாராய்ந்து துணிந்து காணுங் காட்சியாம்.

தனிப் பெரும் புலமையாவது: பொருள்களைத் தனித்தனி யெடுத்துக்கொண் டொவ்வொரு பொருள்களின் கூறுபாடுக ளெல்லாவற்றையு மாராய்ந்து துணிந்து காணுங்காட்சியாம்.

தனித்தனிப் பொருள்களின் கூறுபாடுகளை முற்ற வுணராது எஞ்ச வுணர்தலாகிய புலமையு முண்மையிற் றனிப்பெரும் புலமை யெனத்தகும்.

அம்மை - அழகு. அமைதியுமாம்.

வேட்கை இருபெரும்புலமையையுங் கொல்லுதலிற் கொடியோ னெனப்பட்டது.

வேட்கையாகிய கொடியோ னென்க.

கொடுமை - தீவினைத்தன்மை : அஃதாவது : மறுமைக்கண் இன்னாபயப்பது.

முறை-செங்கோன்மை.

கொலைஞனைக் கொல்லுதல் செங்கோன்மை யென்றவாறு.

கொலைஞனைக் கொல்லுதன் முறையாகலாற் கொலை செய்யும் வேட்கை யென்னுங் கொடியோனைக் கொல்லல்வேண்டு மென நயம்படக் கூறிற்றுமென்க.

வேட்கையைக் கொடியோனென்றது குறிப்புச் சொல்; ஐம் பொறியை ஐவரென்ற குறிப்புச்சொற் போல்வது.

சㅇ. சிறந்தது பொறியே சிறந்த பொறியிற்
சிறந்தது நெஞ்சே சிறந்த நெஞ்சிற்
சிறந்தது துப்பே சிறந்த துப்பிற்
சிறந்தது செப்பிற் சிறப்பறச்
சிறந்தது படுமுயிர் செவ்வொரு தானே. 159

சிறந்தது - உயர்ந்தது : தொகுதியொருமை. இன்னெல்லாம் உறழ்பொருஉ.

சிறப்பறச்சிறந்தது - உயர்வறவுயர்ந்தது ; தன்னி னுயர்ந்த தின்றாகத் தானே யுயர்ந்ததென்றவாறு.

சிறந்ததுபடுமுயிர் - சிறந்ததாகுமுயிர்.

சிறந்தது படுமுயிர், செவ்வொருதா னென்னும் பெயர் ஒரு பொருட்பல் பெயரடுக்கு.

செவ்வொருதான் சிறந்தது : திரிபில்லாத தானென்றே சிறந்தது. பொறி, புலனிற்சிறந்ததெனக்கொள்க.

சக. இன்னணந் துப்பி னிறப்பவு முயர்ந்த
தன்னைநன் குணர்ந்து தன்னைத் தன்னு
னன்னிலைப் படுத்து நவின்ற தெவ்வெனும்
வெலற்கரு நசையை வென்று
கொலற்கடன் முற்றுக கோமான் மகனே. 160

இறப்பவும் - மிகவும். நன்குணர்ந்து - ஐயந் திரிபின்றி யாராய்ந்து தெளிந்து. நன்னிலைப்படுத்து - நல்ல நிலைபே ருக்கி; என்றது நல்லநிலை பெற்றதாகவுள்ளவாறு தன்னை யுணர்ந்து நின்றென்ற வாறும். நவின்ற: மேற்கூறிய.

நசை-அவா. வென்று-அடக்கி. கொலற்கடன்-கொல்லுதலாகிய இன்றியமையாத செயல். முற்றுக-முடிவுபெறுக.

அவாவறுதலே வீடுபேருகலின் அதன்மேற் செய்யலாவதும் பெறலாவதும் மின்மை தோன்ற முற்றுக வென்ருன்.

இப்பாட்டானே மேற்கூறிய வேட்கையாகிய கொடியோனைக் கொல்லுதற் குரிய வாட்படை ஒருவன் உயிராகிய தன்னை யுள்ளவாறுணர்ந்து கண்டு நுகர்ந்துநிற்றலாகிய புலமைநோசிப் பென்பது கூறப்பட்டது.

நசைப்பகை வென்று கொன்றவன் அச்சமு மடிமையும் வினையுமின்றித் தன்னைத்தா ஞண்டுகொண்டு தன்னிடத்துப் பேரின்பநுகர்ந் தமைதியுறு மென்பது தோன்றக் கோமான்மக னெனக் கேட்பித்தான்.

நம்பியகவல்.
அணிக்கொணர்.
பெரும்பற்றப் புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பி வில்லியர் நல்வழக்காட்டு.
மூன்ருவதுபால்
வினைவயிற்புணர்ப்பு
முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

புலவயிற் புணர்ப்பு.

க. சொற்றமன் புணர்ப்புத் தொன்று நாளையிற்
றெற்றெனச் செங்கதிர்ச் செல்வற் கோதினென்
மண்விளக் கேற்றும் விண்மணி யென்னு
மண்ணலங் கதிரோ னதுவிது தன்னைத்
தன்மகன் சோழன் ருன்கொளக் கொடுத்தான்
சோழர் முதல்வன் சோழன் றன்சேய்
கேழில் செம்மல் கிள்ளிக் கீந்தான்
கிள்ளிதன் மகற்குக் கிளப்ப வழிமுறை
யொள்ளிதின் வரூஉ முதனை யஞ்ஞான்
றெள்ளரும் புலத்துறை யெல்லாங்கண்ட
மன்புல வாணர் வாய்த்திருந் தனர்கா
ணின்புறு மத்தகு மெழிற்புணர்ப் பீண்டுப்
பொழுதின் போக்காற் புலப்படா தொழிந்தது
புலப்படா தொழிந்து போய பழைய
சொலப்படா வஃதே சொற்றனெ னிற்கின்
றெனக்குநல் லன்பனு மினிய நண்பனு
மெனக்கொளற் பாலை யென்ருங்
கனைத்தகை விழுமிய தற்ற மிதுவே. 161—163

மன்-அழிவின்றி நிலைபெறுகின்ற.

சொற்ற: மேலைப்பாலிற் சொல்லிய.

புணர்ப்பென்றதீண்டு வினைவயிற் புணர்ப்பாமென்க; அதுவே மேலைப்பாலிற் கிளக்கப்பட்டதாகலின்.

நாளை: ஐ: தனிமொழிச் சாரியை; நாளினென்க.

மண்விளக்கேற்றும் - மண்ணுக்கு விளக்காக வேற்றப்படும். மண்ணு னியன்ற விளக்கெனவு மிசைத்தது.

அண்ணல் - பெருமை; பெரியோனுமாம்.

அதுவாகியவிதனையென்க. சொல்லுவான் குறிப்புவேறுபாட்டா னென்று தானே அணித்துஞ் சேய்த்துமாக வொருமுறை யிருகாற் சுட்டப்பட்டது. சுட்டியது புணர்ப்பினை.

சோழனென்பது : செங்கதிர்ச் செல்வன் மகன் பெயர்.

சோழன் வழிவருவோர் சோழ ரெனவழங்கப்பட்டனர். எனவே சோழனென்பவன் சோழர் குடி முதல்வனுவான்; பாண்டியனுஞ் சேரனுந் தத்தங் குடிமுதல்வ ராயினுற்போல.

கேழ் - ஒப்பு. செம்மல் - புதல்வன். கிள்ளியென்பது சோழ னென்பவனுடைய மகன் பெயர்.

ஒள்ளிது - விளக்கமுடையதாக. இன் : அல்வழிச் சாரியை

எள் அரு - இகழ்தலில்லாத. புலம் - நூலுணர்வு. துறை - கூறுபாடு. கண்ட - கற்றுத் தெளிந்து நுகர்ந்த.

மன் - வேந்தர். மன்னவராகிய புலவரென்க. என்றது மன்னரிற் புலவர்மன்ற மேறினரை.

வாய்த்திருந்தனர் - தலைப்பட்டிருந்தனர். உதனை மன்புலவாணர் வாய்த்திருந்தனரென்க. காண் : முன்னிலையசை.

எழில் - உயர்ச்சி; அழகுமாம். சொலப்படா: உலகி லின்று வழங்கப்படாவென்பது.

எனக்கு நீ அன்பனும் நண்பனுமாகக் கொளற் குரியை யென்று கருதியே நிற்கின்றஃதே சொற்றனனெனக் கூட்டுக.

அனைத்தகை—அவ்வாறு.

இதுவிழுமியதும் அற்றமுமா மெனமுடிக்க. அற்றம் : மறைத்து வைத்துப்போற்றத்தக்கது. இது : இவ்வினைவயிற்புணர்ப்பு.

உ. என்னோ பெரும! நீ யியம்பிய வாறு
நின்னேய் பிறப்போ வின்னே யன்றோ
முன்னே பண்டு முன்னினன் கதிரோ
னென்னே யுணர்தல் யானிது
முன்னே யவற்கு மொழிந்தனை யெனவே. 164

என் - எவ்வாறுபொருந்தும்? ஓ: அசை. நின் ஏய் - நினக்குப் பொருந்திய, பிறப்போ : ஓகாரந் தெரிநிலைப் பொருட்டு.

இன்னேயன்றோ - இப்பொழுதேயா மன்றோ : ஓகாரம் : எதிர் மறை.

முன்னே : எல்லாருமுலகிற்றோன்றுதற்கு முன்னே. ஏகாரந் தேற்றம் ; பின்னுமது.

முன்னினன் - தோன்றினன். கதிரோன் முன்னினனென்க.

இது - இவ்வினைவயிற்புணர்ப்பு.

இதுமுன்னே அவற்கு மொழிந்தனையென யானுணர்தலென் னென்க. என்னே : ஏ : அசை.

என்? எவ்வாறு?

இப்பாட்டு வில்லிவினா. அறிவினா, அறியாவினா, ஐயவினா வென வரும் வினாத்திற மூன்றனுள்ளு மிவ்வினா அறிவினா வெனப்படும்; வில்லி நம்பியின் பிறப்பாமா றுணர்ந்திருந்து மவன் விடையளிக்கு மாற்றை யறிதற்பொருட்டு வினாதலின். மேல்வருவன நம்பிவிடை,

௩. எற்குக் கழிந்தன வெத்துணைப் பிறப்போ
நிற்கு மதுவே நிகழ்ச்சி யிஃதே
னின்னோ டென்னிடை நிலவும் வேற்றுமை
யெதுவெனி னென்பிறப் பெதுவெது
வதுவது வுணர்குநீ யல்லை யதுவே. 165

எவ்வளவு பிறப்போ கழிந்தன வென்க.

ஓ: மிகுதிக் குறிப்பின்மேற்று. நினக்கு மவ்வாறே.

இஃதேல்: எல்: எனிலென்பதன்மரூஉ.

ஒருஞான்றுங் கடவுண் மன்னுயிரு மன்னுயிர் கடவுளு மாக மாட்டாத வரைவு, நிலவும் வேற்றுமையெனப்பட்டது.

அடுக்கிரண்டும் பன்மைக்கண்வந்தன.

உணர்கு: தன்மையொருமை.

இஃதுணர்தல் வினையை யுணர்த்தாது உணர்தற்றன்மை யுணர்த்திநிற்றலிற் குறிப்புவினையின்பாற்படுந் தெரிநிலை வினைமுற்று. உணர்தற்றன்மை யுடையேனென்பது பொருள்.

நீ அது வல்லை யென மாறுக: நீ அங்ஙன முணர்வா யல்லை யென்பதாம்.

அங்ஙனம்யா னுணர்தலும் நீயுணராமையும் வேற்றுமை யென்க வென்பது சொல்லெச்சமாக விரித்துரைத்து எதுவெனினென்னும் வினாவினையெச்சத்துக்கு முடிபு கண்டுகொள்க.

மேலைக் கிளையிற் குறிப்பிற் றுணிந்த கடவுட்பிறப்புண்மை யிங்குக் கூற்றினுந் துணிய வந்தது.

வில்லிக்குப் பெறப்பட்ட பிறப்புணராமை வேற்றுமை மன்னுயிர்க்கெல்லாம் பொது.

நம்பி தன் பிறப்புக்களை யெல்லா முணர்குவென்றது அவை இன்னின்ன பிறப்புக்களென வுணர்தலை யன்று; அவ்வப் பிறப்புப் பிறவா நிற்குந்தொறு மேனை யுயிர்போல மயங்கி யுணர்விழந்து கிடவாது தன்னை யுணராநின்றே யா னிங்ஙனம் பிறவாநின்றே னென வவ்வப்போழ் துணராநிற்றலை யென வுணர்க. நம்பி யான் முற் செங்கதிர்ச் செல்வற்குக் கூறினேனெனத் தன்பழம்பிறப்பு நிகழ்ச்சியை யிப்பொழுது கூறியது தன் கடவுட்டன்மைக் கையை வொருதலையாக நிகழுமுறையவ்வாருதலைத் தன்னியல்பாகிய நொசிப்பிற் கண்டு கூறியதாகும். அவ்வாறு தத்தம் பழப்பிறப்பு நிகழ்ச்சிகளை நொசிப்பிற் கண்டு கூறுந் திறம் கடவுட்கே யன்றிப் புணர்ப்புப் பயிற்சியின்கணொசிப்புக் கைவந்த பலர்க்கு மியல்வதாகும். அதனா லது கடவுட்குச் சிறந்த வேற்றுமை யெனப்படாது. கடவுட்குப் புணர்ப்பும் நொசிப்பும் புலமையுமியல்பாயவை; ஏனை யுயிர்க் கியற்கையல்லவா யிடைக்கணியைபுபற்றி வருவன.

இவ்வாறு நம்பி தன்னோ டவனிடைப் பிறப்புணர்வும் பிறப்புண ராமையு முறையே வேற்றுமையாமா றெய்துவிப்பவே நம்பி பிறப்புப் பிறர் பிறப்புப்போல அறியாமையான் வரக்கடவ வினைவழிப் பிறப் பாகுமிழிவுடைத்தன்றென்பதூஉமெனவே அறிவான் வரக்கடவ அருள்வழிப்பிறப்பாகுஞ் சிறப்புடைத்தென்பதூஉ மவற்குத் தான் பிறவாமுன்ன ருள்ளவுணர்வு பிறவாநிற்புழியும் பிறந்தவழியு மொப் பத்திரிபின்றி யெஞ்ஞான்று மொருபெற்றியேயாய் நின்றுநிலவுதலாற் றன்கண் வேறுபா டின்றெனவே தான் பிறவி யுடையனாகியும் பிறவி யிலனெனப்படுமாகலிற் கடவுளாவான் எஞ்ஞான்றும் பிறப்பிறப் பில னென்பதனோடு மலைவுகோட லின்றென்பதூஉ மங்ஙன மன்று யிற் கடவுட்கு மன்னுயிர்களொடு வேற்றுமையின்றிக் கலந்துள்ள வியைபானே அவ்வுயிர்கள் பிறவிகொள்வுழித் தானும் பிறவிகொள்ளு மெனப்பட்டுக் கடவுள் பிறப்பிலனென்பதனொடு மலைவுகொள்ளு மென்பதூஉ முய்த்துணர்ந்து கொள்க.

கடவுட்கே யன்றி யெவ்வுயிர்க்கும் பிறப்புமுதலியநிலைவேறுபா டெல்லாந் தம் முன்னிலையிற் றோன்றுந் தோற்ற மளவாயவற்றைத் தங்கண்ண வென மருண்டுநின்ற தல்லது வேறன்மையிற் றஞ் சால் புக் கிழுக் கின்று யிருப்பக், கடவுள் பிறக்கு மெனிற் றுன் மீமிசை ஞாலத் திருக்குந் தன்மீமிசை நிலைக்கும் தான்யாங்கணும் நீக்கமற நின்ற தன் சால்பு நிலைக்கு மிழுக்கின் றென்பது சொல்லல் வேண்டுமோ ?

ச. தோற்றமுந் துஞ்சலுந் தொடர்கிலெ னாகித்
தோற்றுறு முயிர்க்கெலாந் தோன்றல் யானென
வமையா நிற்பே னாகவு மெனது
மருள்வழி மேனின் றருள்சிறந் தெழவே
தெருளோடு தோன்றுதல் செய்குவென்
வெருளுறு மருள்யான் வேண்டியாங் குறவே. 166

தோற்றம் - பிறப்பு. துஞ்சல் - சாக்காடு.
தொடர்கிலெனாகி - பற்றப்படாதேனாகி.
தோற்றுறு - பிறப்பினையடைகின்ற.
தோன்றல் - தலைவன்.

பிறப்புச் சாக்கா டுடைய மன்னுயிர்க்குப் பிறப்புச் சாக்கா டில்லான் றலைவனாகல்வேண்டு மென்ற கடவுளியல் பெறப்படத் 'தோற்றமுந்துஞ்சலுந் தொடர்கிலெனாகித் தோற்றுறு முயிர்க் கெலாந்தோன்றல் யானெனவமையா நிற்பே' னெனக் கூறியவாறு காண்க.

'அமையா நிற்பேனாக' வென விடையீ டின்றி நிகழும் நிகழ் விற் கூறவே அவ்வமைதிக்குத் தடையின்றாயிற்றுக் கடவுள் பிறப் பென்பது போந்தது.

மருளென்பது : முன்னிலைப்பொருளெலாந் தோன்றுதற்கு முதலாகிய வொருசெத்தைப் பொருள். செத்தை - உணர்வில்லது.

மருளினின்றுமே ஞாலமுழுதுந் தோன்றிற்று.

அது தனக்குரிமையின்றிக் கடவுள் வழிப்பட்டு நின்று தொழிற்படுதலானே அவன துடைமை யெனப்படும். அதனு லவன் அதனை யெனதுமரு ளென்ருன்.

இருசார் மருளுள ; தூமருள் புன்மருளென. திரிபின்றி யியல்பி னின்றவா றியங்குவது தூமருள். அஃதொலியளவாதலானே இசை யெனவும்படும். அஃதுயிருணர்வுமட்டு மெழுமளவா யுமைந்தியலும்; யாக்கை முதலியவாகத் திரிதலின்றி நிற்பதாம். அதுவே அருளென வுந் தெருளெனவும் படும். இறைவற்குப் பற்றுவ ததுவே. அதனு லஃதிறைவ னெனவு மிறைவியெனவும் வழங்குப. அது திரிபின்மை பொருட்டாகத் தூமருளெனப் பெயர்பெறற்பாற்று. தூய்மை-திரி பின்மை. திரிபு : புன்மை. தூமருளினை வாழ்மருளென நம்பி பின்னர் விதந்துவேறு கூறுவன். மற்றைப் புன்மரு ளென்பதுதான் தூமரு ளானே யுணர்வெழு முயிர்கட்கு வேண்டும் யாக்கை முதலியவாகத் திரிந்து ஞாலமாகிநிற்பது. இதுதிரிபுபொருள்கட்கெல்லா முதலாவ தென்பது தோன்ற மூதலெனவும் வழங்கத்தகும். புல்லியமருள் புன்மருள் ; இழிந்தமரு ளென்பதாம். எனவே தூமருள் உயர்மரு ளென்பதாயிற்று. புன்மருளே மன்னுயிர்க்குப் பற்றுவது. இஃதுயிர் கட்குத் தூமருள்போல வின்பமுந் தெருட்சியுமீனுது துன்பமு மருட்சியுமீன்பது. உயிர் தம்மை யெதிர்ப்பட்டு மருள நிற்றற் பொதுமையாற் றூமருளுப் புன்மருளு மருளென வோரினமாயினும் புன்மரு டன்னையல்ல துயிர்காணுதவாறு நிற்பத் தூமரு ளங்ஙன மன்றித் தன்னையுமதனையு முடன்காண நிற்றல் வேறுபாட்டானே. தூமருளும் புன்மருளுமாகிய மேன்மருளுங் கிழ்மருளுமுறையே தம்மு ளொளியு மிருளுமாய் முரணிநிற்பனவாம். அதனு லவை யப்பெயர. புன்மருட்குத் தூமரு ணிலைக்களனுகி யுடனிலையும். உட னிற்பினு மிவ்விரண்ட னுள்ளு மொன்றை நோக்கியவழி யொன்று புலனுகாது. ஒளிமருளளவேயாய் நின்ற வுயிர்க்கு மெய்யாய தன்மையொருமை முற்றுணர்வு மெய்யாய வமைதியு மல்லது பொய்யாய முன்னிலைப் பன்மைச் சுட்டுணர்வும் பொய்யாய வினையுமுளவாகா. அன்மருள ளவேயாய் நின்றவுயிர்க்குப் பொய்யாய முன்னிலைப் பன்மைச் சுட்டுணர்வும் பொய்யாய வினையுமல்லது மெய்யாய தன்மை யொருமை முற்றுணர்வு மெய்யாய வமைதியு முளவாகா. அமைதி : வினையின்மை.

இறைவற்கு ஒண்மருளே யுடம்பெனவும் அன்மருளே யுடைமை யெனவுங் கொள்ளப்படும். இறைவ னொளிமருளளவேயாய் நிற்கு மியல்பின னுயினு மன்னுயிர்க் கிருண்மருளை விலக்குதற்பொருட்டு அதனைச் சார்ந் தடக்கி மேனின்று பிறவி யெடுக்கும். அப்பிறவி தோறும் பெரும்பான்மைத் தூ மருளியல்புஞ் சிறுபான்மைப் புன்மரு ளியல்பு முடன் றேன்றி நிற்கும்.

இப்பாட்டகத் தெனதுமருளென்றது புன்மருளை. அருளென்றது தூமருளை.

அருள் சிறத்தலாவது: பிறவுயிரெல்லாவற்றின் கண்ணுந் தோன்றுமளவின் அவ்வருண் மிகுதலாம்.

தெருளொடு தோன்றுதல்: பிறக்குங்காற் பிறவுயிர்போலாது மயக்கவுணர்வின்றியே பிறத்தல். மயக்கவுணர்வாவது தன்னைத் தானுணராமை.

வெருள் - அச்சம். மன்னுயிர் வெருளுறுதற்கு வாயிலாகிய மருளென்க. அஃதாவது மேற்கூறிய புன்மருள்.

இனி, யிறைவற்கு அஞ்சு மருளெனினுமாம்.

அம்மருடான் இறைவன் வேண்டியாங் குறுதலாவது: தன்னைத் தா னுணரு முற்றுணர்வாகிய வவனது மெய்யுணர்வுக் கிடையீடா காதவாற்றுனே அவற்கி யாக்கையுஞ் சுற்றமும் பகையு மேனைறுகர் பொருளுமாக வமைதலாம்.

அங்ஙன மன்றி அதற்கிடையீடாக நிகழும் நினைவு முதலிய வினையெல்லாம் மருளின்பாற்பட்டன வல்ல தருளின்பாற்பட்டன வாகாமையி னவ்வாறெல்லா மஃ தமைத லாற்று தென்க.

ரு. இச்செய னிலமிசை யெவ்வெப் போழ்தி
னற்செய னலிவுற வற்செய லெழுங்கொ
லவ்வப் போழ்தத் தருள்பிறர்
துவ்வ வென்னையான் றேன்றுவிப் பேனே. 167

நுகர்ச்சிக்கே யன்றிச் செயற்குரித் தாகாத மேலகங் கீழகம் போலாது செயற்கு மொருங்குரித்தாதலின் வையஞ் செயனில மெனத் தகும்.

அல்லதூஉ மிவ்வையகத்துக்குத் கடவுட் பிறப் பின்றியமையா தென்பது தோன்றச் செயனிலமெனக் கூறிற்று.

நற்செயலாவது: மெய், மொழி, நெஞ்சுகளாற் பிறவுயிர்க்கு நன்மைபயப்பச் செய்யுஞ் செயல். என்றது: அறம்.

அங்ஙனமன்றி யம்மூன்றனு மேனை யுயிர்க்குக் கேடுபயப்பச் செய்யுஞ் செயல் அற்செயல். அல்செயலென்பது திரிந்தது: நற் செயலல்லாத செய லென்பதாம். என்றது: மறம்.

நலிவுறுதல்: அற்செயலாகிய தன்பகை மீதூர்தலினுற் றுனிருத் தற் கிடனின்றி யிடருற்றுத் தேய்ந்து நைதல்.

ஒகாரம்: தெரிநிலை.

பிறர்தன்னருளைத் துவ்வ வென்க. துவ்வ-நுகர.

பிறர்: நல்லோருமல்லோரும்.

"போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துமின்
ருற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலே
னேற்று வந் தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொன்கையென் கொள்கையே"

திருவாசகம். 45.) எனவருந் திருவாதவூரடிகள் கூற்றுனே அல் லோரு மவ்வருளைத் துவ்வுமா றினிது பெறப்படும்.

எனவே யற்செயல் செய்யு மவரை யச்சுறுத் தடக்கி யுய்த்தலு மழித்தல்வேண்டி னழித்தலு மவரை யாட்கொண்டருளுமுறை யென அவை யருளின்வேறுகாமை பெறப்படும். அவ்வருள் வெவ் வருளெனப்படும். ஏனையருள் தண்ணருளெனப்படும். தோன்று விப்பேன்-பிறப்பிப்பேன்.

என்னை யான் றேன்றுவிப்பே னென்றதனு மிறைவனது பிறப்பின் றூய்மையு முதன்மையும் பெறப்படும்.

இன்னு மிதனுனே யிறைவன் றன் றனக்கென வுடல்கொண்டு பிறந்து தோன்றுதலே யன்றிப் பிறருடற்க ணின்று தோன்றுதலுங் கருதிக்கொள்க.

இனி, யென்னைப் புறத்தே காணு மவரவ ருயிர்க்கண்யா னிருத் தலை யக் காட்சி தலைக்கீடாகத் தோன்றச் செய்வே னெனினுமாம். எனவே யிறைவன் றன் றன்னை யுயிர்க் குண்ணின்று காட்டுதலு முன்னின்று காட்டுதலு முடைய னென்பதூஉம் பெற்றும்.

இறைவனைப் புறத்துக் கண்டதுணையானே யகத்துக் காண்டலுந் திருமங்கையாழ்வார்போல அற்செயல் கைவிட்டு நற்செயன் மேற் கொள்வாரு முளர்.

அங்ஙன மிறைவன் செய்தலு நற்செயல் பாதுகாத் தோம்புத லேயாம்.

இப்பாட்டானே யிறைவன் றன் பிறத்தற்குரிய பொழு திது வென்ப தெய்துவிக்கப்பட்டது.

சூ. பொல்லார்ப் பணித்து நல்லார்ப் புரப்பவுந்
தொல்லார் நல்லறந் தோலா தூன்றவு
மாழிசூழ் வையத் தாங்காங்
கூழிதொ றூழியான் றேன்றுவெ னெளிந்தே. 16௨

பொல்லார் - அற்செயலாளர்.

பணித்து - அடக்கிக் கீழ்ப்படுத்து.

அழித்தென்னுது பணித்தென்றமையானே யிறைவன் பொல்லா ரையு மழித்த லுள்ள மின்றி யாக்குதற் றிருவுளங் கொள்ளும் பேரருளாண்மை துணியப்படும்.

பொல்லார்ப் பணித்தலைத் தடுத்தாட்கொள்ளுத லெனவும் நல் லார்ப் புரத்தலை எடுத்தாட்கொள்ளுத லெனவும் வழங்குத லொக்கும்.

ஆர் - பொருந்தும்.

தொன்று தொட்டுப் பொருந்தி வரு நல்லறமென்க.

தொன்மையாவது: கடவுண் மன்னுயிரையெல்லா முறையாற் படைக்கலுறுதற் பொருட்டுத் தன்னைத் தான் படைத்துக்கொண்ட ஞான்று தொட்டு மரபுவழி வாரா நிற்றலாம்.

ஆர்தலாவது: ஏனைப் பொருளின்பம் போலப் பொழுதுதொறு மிடந்தொறு மினந்தொறு மியைய மாறுபா டுற்று வாராது அறம் எப்பொழுதைக்கு மெவ்விடத்துக்கு மெவ்வினத்துக்கும் பொது வாகித் திரிபின்றி நிலைபெற் றின்றியமையா திருத்தலாம்.

நலலறமாவதெவ்வாற்ருனு முயிர்க்கொலையும் புலாலுண்ணுதலும் விரவாததாய்த் தன்பொருட்டாகப் பொருளின்பங்கோட லன்றிப் பொருளின்பங்களின்பொருட்டுத் தான் கொள்ளப்படாததாய் மேற் படுவது.

தோலாது: கொடுமைகளோ டெதிர்ந்து மேற்பட லாற்ருது தோற்றுக் கீழ்ப்படாது.

தோலாதென்பது எச்சத்திரிபு.

இனி, அதனைத் செய்தெனெச்சமாகவே கொண்டு நல்லறமுங் கடவுளுந் தம்முள் வேறன்மையாற் றன்வினைமுதலொடு வந்ததாக வுரைப்பினு மமையும்.

எனவே நல்லறத்தோல்வி கடவுளின் ருேல்வியாயிற்று. நல்லறம் வெல்க; கடவுள்வெல்க வென்னு மெய்வாழ்த்துக்குக் கேடின்ருகக் கடவுளும் பிறத்தல் கடமையாயிற்று.

ஊன்ற – நன்கு நிலைபெறுத்த.

நன்கு நிலைபெறுத்தலாவது கடவுடான்பிறந்து தன்கடமை முடித்துத் தன்னடிப்பேரொளிக் கெழுந்தருளிய பின்பு மதனைத் தொடர்ந்து பாதுகாத்து வருதற் குரியாரையும் அவரைத் தேர்ந் தெடுக்கு முறையையும் யாப்புறவமைத்துப் போதலாம்.

ஆழி - கடல்.

ஊழியாவது மேலைப்பாட்டிற் கூறியவாறு நற்செயல் நலிவுற அற்செய லெழுந்து அடிக்கொள்ளலுறு மெல்லையாகும்

ஒளிந்து - மறைந்து: பிறரறியாம லென்பதாம். கடவுள்பிறப்பும் பிறர்பிறப்பொடு வேறுபாடின்றி நேரொத்ததாகலிற் பிறர் கடவுள் பிறக்குங்கால் இதுகடவுள்பிறப்பென வெவ்வாற்ருனுந்துணிந் துணர்த லொல்லாது.

மகவு தன்ருயை யுணராது மயங்கல்கூடுமாயினுந் தாய் தன் மகவை யுணராது மயங்க லொருஞான்றுங் கூடாமை யொருதலை யாதலுந் தாய் தன் மகவுக்குத் தான்ருயெனத் தன்னை வுணர்த்துதல் வேண்டாமே தன்மகவுக் காவனவே தாய்செய்துபோதருதலு மரபாதல்போலவே கடவுளு மன்னுயிர்களை யெல்லா பொருங்குகண் டொப்பத் தன்மக வெனப் பரிவுகோடலு மவற்றுக்குத் தன்னைத் தான் கடவுளென வுணர்த்துதல் வேண்டாமே யவற்றுக் காவன செய்துபோதருதலு மரபாகுமென வுணர்க. அதனலவன்பிறப்பைப் பிறருணராமை யியல்பென்பதூஉ மதனலவற் கிழுக்கின் றென்பதூஉங் கொள்ளப்படும்.

ஆயினு மவனைக் காண்டலும் பேரன்பு சுரப்பப் பெறுஞ் செவ்வி யுடையாரவனை யுணரா தொழிதலு மவர்க் கவன் றன்னை யுணர்த்தாதொழிதலு மில்லாமையில்லை.

இனிப், பொல்லார்ப் பணித்து நல்லார்ப் புரப்ப வெனவே நல்லறந் தோலா தூன்றுத லமைவதாகவு மெடுத்தோதிய வதனாற் கடவுள் பிறக்குங்காற் றலைவனுகப் பிறந்தருளுதலன்றியும் நூலோதுவிக்கும் பேராசிரியனும் நூலாசிரியனும் எண்பெருஞ் செல்வம் வல்ல முனிவனு மென்றிவரு ளொருவனாகிய புலவனாகப் பிறந்தருளி நல்லறந்தோலா தூன்றுதலும் வழக்கென்பது துணியப்படும்.

புரப்ப, ஊன்ற வென நின்ற செய்வெனெச்சமிரண்டும் பொருட்டாக்கப் பொருட்டாயின; உண்ணவந்தான்போல.

இனி, நல்லார்ப் புரப்ப வென்ற பொதுமையாற் கடவுட்காதலுங் காமமு மொருங்கு வாய்ந்த மங்கையரைப் பிணித்து நன்மணஞ் செய்து நுகர்ந்து நுகர்வித்துப் புறந்தராலு மடங்கும்.

பொல்லார்ப் பணித்தலும் நல்லார்ப் புரத்தலு நல்லறந் தோலா தூன்றுதலு மென்னுமிவை பெரும்பான்மையுந் தலைமையும் பற்றி யெடுத்தோதப்பட்டன. சிறுபான்மை கடவுட் பிறப்பு நிகழ்ச்சி பிறர் நிகழ்ச்சியோடொப்ப வேறுபடுதலுங் கொள்க. அங்ஙனம் பிறக்குங் கடவுடானும் பெரும்பான்மை நோக்கியே கடவுளென வழங்கப்படுவன். அது நோக்காதவழி யவ்வப் பிறப்பென வழங்கப் படுவன்.

எ. வானுறு மொளியொடு வருவன மரீஇ
யானுறு பிறப்பும் யான்செய் செயலு
மாய்தரி னின்ன வாகு மென்று
வாய்வதி னுணரு மக்க டாமு
மாய்வுறு முடற்பின் மற்றுப்
போயினி வருதல் போயினர் மன்னே. 169

வானுறுமொளி - மக்கட் டன்மையின் வேறுபடத் தோன்றுங் கடவுட் டகைமைத் தோற்றம்.

அத்தோற்றமொடு மரீஇ வருவனவாகிய பிறப்புஞ் செயலு மென வியைக்க. மரீஇ - பயின்று: கல்லா தியற்கையாகி யென்பதாம்.

'இன்ன'வென்ற சுட்டு மேலைப்பாட்டிற் பெற்ற வாயிலாற் பிறப்பு வருதன்மேற்று.

வாய்வது - தப்பாததாக: உண்மையாக வென்பதாம். இன்: அல்வழிச்சாரியை.

மாய்வுறு முடற்பின்: துஞ்சியபின்பு.
மாய்த லவர்க்காகாமை தோன்ற உடன்மேல தென்றவா றுணர்க.

மற்று: வினைமாற்று.

வருதலீண்டுப் பிறத்தல்.

போயினர் - தொலைந்தனர். மன் : விளி.

அங்ஙன முடல்விட்டுப் போய்ப் பின் மீளா துயர்நிலை யெய்தற் குரிய செல்வியுடையவரே கடவுளின் பிறப்புஞ் செயலு மேற்கூறிய வாறுமெனப் பிழையா துணர்தல்கூடு மாகலின் அவரினி மீண்டுப் பிறவா ரென்றது பொருந்து மென வுணர்க.

இப்பாட்டானே கடவு ளிங்கு வந்து பிறந்து வாழினு மவனைக் கண்டோ ரவனையவனென வுணரி னன்றித் தன்னை யவர் காண்ட லான் அக்காட்சிக்குச் சிறந்த வூதிய மெய்துத லியலாதென்பது பெறப்படும்.

அங்ஙன மன்றுயி னுடம்புதொறு மன்னுயிர் கடவுளோ டுடனு றையாநிற்ற லொருதலையாகவு மவ் வறவாழியந்தணனியல்பின்றி யவ் வுயிர் தீவினையிழைத்துத் துன்பக்கடலு ளழுந்துதல் கூடாதன்றே.

இதனாற் கடவு ளுயிரைக் காணினு மவ்வுயிர்தான் கடவுளைக் காணி னன்றிக் கடவுளியல்பாகிய நல்லுணர்வு நற்பண்பு நன்மொழி நற்செயல்களைப் பற்றுதன் மரபன் றென வுணர்க.

அ. ஆர்வஞ் செற்ற மச்ச மில்லான்
மார்வந் தன்னுள் வதியு மென்னொடு
தன்னை முழுவுயிர் தானொரு வழியென
வுன்னி யானென வொருதா னாகி
யென்னை யின்றி யமையா திருந்து
புலமையி னேன்பிற் பொலியுந் தூய்மையொ
டென்னிய லெய்தி யானென
மன்னினர் பலரான் மாயிரு நிலனே.

கடவுளை யுட்கொளற் கிடையீடாகிய வேறுநினைவு பல விளக்கு மாதலின் ஆர்வமுதலிய மூன்று மில்லாதொழிதல் வேண்டுமென்றது.

மார்வம் : ஆகுபெயர்; நெஞ்சினையுணர்த்திற்று.

நெஞ்சுதொறுங் கடவுளு முயிரு முடனுறையு மென்க.

கடவுளை முழுவுயி ரெனவு முயிர், தன்னை அம்முழு வுயிரினொரு பாலிடமெனவு முன்னவே கடவுளுந் தானுந் தம்முள்வேறாகா தொரு பொருளென நிற்றல் காணப்படும்.

இதுவேயுயிர் கடவுளை நுகர்தலெனவுங் கடவுளின்பா லழுந்தித் திளைத்தயர்தலெனவும் அயராவன்பெனவுங்கடவுளொ டிரண்டறக் கலத்த லெனவுங் கொள்ளப்படும்.

யானென வொருதானாகி - யானாகத் தானொருவனேயாகி. "ஒரு நீயாகித் தோன்ற விழுமிய, பெறலரும் பரிசினல்குமதி" (முருகாற் றுப்படை. அடி) யென்றார் ; நக்கீரனாரும்.

என்னொடு தன்னை முழுவுயிர் தானொரு வழியென வென்பதனுள் என வென்பதனை முழுவுயிர்க்குங் கூட்டி நிரனிறைப் பொருள்கோள் படப் பொருளுரைக்க.

கடவுளோ டுயிர் தான்யானென நின்ற மெய்ந்நிலைக்கண் வேறு சார்பெல்லாவற்ஞெடுந் தனக்கியைபின்மை தோன்றுதலிற் கடவுளைத் தானின்றியமையாமை புலனுகும்.

அந்நிலைப்பின்னர்ப் புறத்துநோன்பு மகத்துப்புலமையு முளவாம். நோன்பாவது : துன்பவின்பமுதலிய விரட்டைகளிற் கோடுத லின்றிச் செப்பமிருந்து பொறுத்துக்கோடலாம். கடவு ணினைவுதானின்றியமையாது மேற்பட்டுத்தோன்றலானே இன்பத்துன்பமுதலிய புறச்சுட்டுணர்வு முனைப்பின்றி நொய்ய வாதலானே யந்நினைவுக்கிடையூறின்ருகும். புலமையாவது கடவுளையுந் தன்னையு முள்ளவாருராய்ந்து தெளிந்து நிற்றலாம். இவை யிரண்டுங் கடவுட்காதலின் விளைவு.

நோன்பினுனே கொடுவினைத்தன்மையும் புலமையானே நல்வினைத்தன்மையும் வினைப்பொருட் டெனப்படு முக்குற்றமு மென விவ்வுயிரழுக்குக் கழுவப்படுதலே புலமையி னுனேன்பிற் பொலியுந் தூய்மை யெனப்பட்டது.

தூய்மையுறு தொறு முயிர் தனக்குத்தான் புலனுதலாகிய ஒளித் தோற்றமே பொலிவெனப்படும்.

உயிர் தனக்குத் தான்வினைமுதலுஞ் செயப்படுபொருளு மன்மையிற் றனக்குத் தான் புலனுதலாவது : தன்னு னுணரப்படுவனவாகிய செயப்படு பொருட்கெல்லாந் தானெதிர்மறையா யுடனுதலாம்.

கடவுளினியலை மன்னுயிரெய்துதலாவது : கடவுடான் றன்னியல்பானே பெரும்பொருளாய் நிற்குநிலையின் வேருகாது கடவுளாய் நிலையுதல்போல மன்னுயிர் தானும் பெரும்பொருளாய்நிற்குநிலையின் வேருகாது மன்னுயிரா யமைதலாம்.

பெரும்பொருளாதலாகிய நிலைக்கட் கடவுளு மன்னுயிரு மொன்றே யாதலின் 'என்னிய லெய்தியா னென மன்னினர் பல' ரென்ருன்.

இனிக், கடவுளினியலை மன்னுயிரெய்தலாவது : மன்னுயிர் கடவுட்சார்பானே கடவுளின்பேரின்ப முதலிய வியல்களைத் தானும் வேறுபெற்றுக் கடவுள்போல விருத்த லெனக்கொள்வாரும் ஞாயிற்ருெளி விண்மீன்முதலியவற்றிற் பட்டுவிளங்குதல்போலக் கடவுளின் எல்லையிலின்ப மன்னுயிர்மறையப் பட்டுவிளங்குதலெனக் கொள்வாருமுளர். இக்கொள்கையிரண்டுங் கடவுளாகிய பேருயிரனைச் சிற்றுயிர்களா னுணரப்படுதற் றன்மையின் மறுதலையாகிய வுணர்தற் றன்மைக்குந் துன்பமாகிய புடைபெயர்ச்சியின் மறுதலையாகிய சால்புடைமைக்குந் திரிபின்மைக்கும் பொதுத்தன்மைக்கு மிழுக்காகாதவாறுபொருந்துமே லாராய்ந்து கண்டு கொள்க.

மன்னுதல் - திரிபின்றி யொருபெற்றியேயாய் நிலைபெறுதல்.

நிலத்துக்கண் ணென வேழாவ திறுதிக்கட் டொக்கது.

மாயிரு நிலத்து மன்னினர் பல ரென்க.

மாயிருநிலத்துமன்னுதலாவது உயிர்தா னுடல்வாழ்வீடுறுதலாம்.

கூ. யாங்கன மென்னை யாஅர் பற்றுவ
ராங்கனம் யானு மவரைப் பற்றுவெ
னென்வழிப் படுவ ரெங்கணு
மன்வழிமருக! மாந்தர் யாருமே. 171

பற்றுதலாவன: அவன்பால் அவர் உணர்த, லுள்ள, லுரைத்த, லொழுகலென விந்நான்குமாம். அவனுமவரைப் பற்றுதலாவனவு மவையே.

மாந்தர் தத்தம் பண்பு செயல்கட் கேற்றவா றவனை யாண் டாண்டு வழிபடுமாறு பல வாதலின் 'யாங்கன' மென்றான்.

அவரவர் தத்த மொழுகலாறுகளை யெல்லாங் கடவுள்பணி யெனக் கோடலின் என்வழிப்படுவ ரெங்கணு மென்றான்.

மன் - அரசர். வழி - மரபு. மருக - குடிப்பிறந்தவனே!

கஉ. வினைச்செய் லாக்கம் வேண்டுவோ ரிம்மையிற்
பழிச்சினர் பராவுப பல்வயி னணங்கே
மக்கண் ஞாலத்து வல்லை
யக்கண் வினைச்செய லாக்கம் வருமே. 172

வினைச்செயல் - தொழின்முயற்சி. ஆக்கம் - பயன். இம்மை யின் - இவ்வுலகில்.

பழிச்சினர்; வணங்கி; முற்றெச்சம். பராவுப - வேண்டிக் கொள்வர். பல்வயின் - பலவகை.

பல்வயி னணங்குகளைப் பழிச்சினர் பராவுப வென்க. அணங்கு களாவார்: விண்வேந்து, நெருப்புகிழான், வளிகிழான், கடல் கிழான், காடுகிழாள், கொற்றவை முதலாயினோர்.

மக்கண்ஞாலமென வெடுத்தோதியது இஃதேனைஞாலம்போ லாது வினைச்செயற் குரித்தாத லுணர்தற்கு.

வல்லை: விரைவுகுறிப்பிடைச்சொல்; ஈறுதிரிந்தது. அவ்வினை யெனச்சுட்டுமாறுக.

கண்ணிய வினைச்செயலாக்க மென வினைத்தொகையாக்குக. கண்ணுதல் - கருதுதல்.

அக்கண் வினைச்செயலெனச் சுட்டியது அங்ஙனம் வினை முடிவு பெறுக வென அணங்கினைப் பராய் நுதலி யெடுத்துக் கொண்ட வினைச்செய லென்றவாறும்.

அக்கண் வினைச்செயலாக்கம மக்கண் ஞாலத்து வல்லை வரும்; அதனாற் பல்வகை யணங்கு பராவுப வென்க.

கக. பண்பொடு செயலின் பாகுபாட் டானே
நண்புறப் படைத்தே னல்வயிற் பிறப்பு
மாங்கயான் வினைமுத லாயினுந்
பாங்கயா னல்லனாற் பாத்துணர் வோர்க்கே. 173

பண்பு: முப்பண்பு. செயல்: கற்பித்தல், உழுதல், விற்றன் முதலாய தொழில். பாகுபாடு - கூறுபாடு.

நண்புற: வேறுவேறு தொழிலாளர் பலருந் தம்மிலொருவர்க் கொருவர்தந் தொழிலா னுதவிசெய்து பகையின்றி நட்பாகுமாறு.

நால்வகைப் பிறப்பும் படைத்தே னென்க.

நால்வயிற் பிறப்பாவன: புலவர் பிறப்புத், தலைவர் பிறப்பு, விலைஞர்பிறப்பு, வினைஞர்பிறப்பென்பன. அவையிற்றை யவ்வத்தொழிலாற் கண்டுகொள்க. தொழில்பற்றியல்லது அவரவர்பாற் பிறத்தல் பற்றி அவ்வப் பிறப்பெனலாகாது. இது திருமாற்கடவுட்கு மண்மகள்பாற் பிறந்தோனைக்கடவு ளென்றது கடவுளர்க்குப் பகைவனாகிய தகுவனென வழங்கினாராகலானும் பெறப்படும்

ஆங்க-அவ்வாறு. வினைமுதல்-செய்பவன். பாங்க! – தோழனே! அல்லன்: வினைமுதலல்லனென்க.

பாத்துணர்வோர்க்கு - பகுத்தறியு மறிஞர்க்கு.

பாத்துணர்தல் - பொருடொறு மயங்காது வேறுபடுத்துணர்தல். எனவே மெய்யுணர் வென்பதாம்.

பாத்துணராதார்க்கு யான் அங்ஙனம் படைத்த வினை முதலெனவே தோன்றுதல் கூடுமாயினும் பகுத்துப் பொருள்களை மெய்ம்மையா னுணர்வோர்க்கு யான் வினைமுத லல்லாமை தோன்றுமென்று னென்க.

இதனால் யாக்கை வாயினிலந்துப்புரவெனக் கூறுபடும் பொருட்பன்மைப் பரப்பென்னும் ஞாலத்தொகை, கடவுள்தான் சான்றென வாளாவிருப்ப, வவன் முன்னிலையளவானே அவனது நினைவு முதலாக வியற்கைமருள்படுந் திரிபல்ல தவனானுணர்ந்து நினைத்துச் செய்யப்படுவதெனப்படா தென்பதூஉம் எனவே மன்னுயிர்தொறும் வினைவழியாற் காணப்படு மேற்றத்தாழ்வுகட்குக் கடவுள் பொருட்டாகாமையானே யவன்றனக் கியல்பாகிய செப்பத்தினும் பேருளினுந் தீர்திலனவனென்பதூஉ மவன்முன்றன்னையே மெய்ம்மையாற் கண்டு நுகர்ந்தயர்தற் கியையுமாற்றுன் மூதன்மருள் தானே ஆக்கமுறுமென்பதூஉம் பெறப்படும்.

எழுத்தல்லாத வியற்கையிசைதானே சார்புபற்றியவழியுந் தன்னளவின் வேறுபடாமே அகரவுயிரெழுத்தெனவும் அமைந்து கொண்டவாறுபோன்று சார்புயிரல்லாத வியற்கைமுழுவுணர் வென்னும் பெரும்பொருண்மை தானே சார்புபற்றியவழியுந் தன்னளவின் வேறுபடாமே கடவுளாகிய பேருயிரெனவு மமைந்து கொண்ட தாகலிற் பற்றின்றித் தன்னையே நோக்கி நிற்குங் கடவுடான் ஞாலமுழுதும் படையா நின்றுழியும் படைத்தில னென மெய் கூறினன். இனிப், பண்பொடு செயலின் பாகுபாட்டானே நால்வயிற் பிறப்பும் படைத்தே னெனவே பண்புஞ் செயலும் பற்றுவிட்டோர்க்கு நால்வயிற் பிறப்பு மிலவாயின வென்பதூஉம் பெறுதும். அவர்க்கவையுடற்பிறப்பல்ல துயிர்ப்பிறப்பெனப் படாவாம்.

கஉ. எவ்வினை தாமு மென்னை யுரூஅ
வவ்வினைப் பயனுமுழை யவாவு மற்றே
யின்னே னென்றெனை யெண்ணு
மன்னேன் றானு மதுவென வுணரே. 174

உரூ - தொடாவாம். உழை : ஏழாவது.

அவாவுந் தொடா வென்பதாம்.

இன்னேன் - இத்தன்மையுடையேன்.

எண்ணும் - அறியும்.

அதுவென்னுஞ் சுட்டு, வினையும் வினைப்பயன்கணவாவு முறுமை மேற்று. அன்னேன் றானும் வினையோ டலா வில னுவ னென்பதாம்.

அவனுங் கடவுள்போலத் தன்னைத் தானுணரும் புலமை யெய்து தலிற் பற்று மவாவு முற்றிலனாகும்.

தாமும் : முற்றும்மை. அவாவும் : எச்சவும்மை. தானும் : எச்ச வும்மை : யானே யன்றி அவனு மது வென்றலின்.

கந. ஈடுபா டுற்றெனை யிங்ஙன முணர்ந்து
வீடுபேற் றார்வலர் மேன்முறை யாளருஞ்
செய்தற் பாலன செய்தனர் நீயும்
பண்டையோர் செய்து பயின்ற
பண்டைய வினைசெயற் பால கோவே. 175

ஈடுபாடு : கடவுளன்பர் தம்மைக் கடவுட்கு விற்றுக் கடவுளைத் தமக்கு வாங்கிக்கோடல். அஃதாவது : தாமவனென்னும் வேற்றுமை நடையாடாத பேரன்பு.

உற்று - மிக்கு. இங்ஙனம் : மேற்கூறியவாறு.

வீடுபேற்றார்வலர் - வீடுபேற்றை யடைதல் வேண்டும் வேணவா வுடையோர்.

மேன்முறை - முற்காலம்.

பயின்ற - தொடர்ந்துவந்த

கோ - மன்.

வீடுபேற் றார்வலராகிய மேன்முறையாளரு மென்க.

கச. வினையு மேனை வினையி னின்மையு
மினைய வென்னு விடைதெரி கல்லா
திடர்ப்பட் டுணர்ப வெண்டகு புலவரு
மிடர்ப்பா டின்றிநீ யாதுணர்ந் தின்னுக்
கடற்படா துய்திகொல் காளாய்
விடப்படா வினையது விளம்புவெ னிற்கே. 176

இனையவென்னு : தனித்தனி யித்தன்மையவென்று. இடை - வேற்றுமை.

எண்டகுபுலவரும் - நன்குபேணத் தக்க புலவருமென்க.

இடர்ப்பாடு: ஆராய மாட்டா திடர்ப்படுதல்.

யா துணர்ந் துய்தி? அதுவாகிய வினையை நிற்கு விளம்புவெ னென்க.

இன்னாக்கடல்: பிறவித்துன்பம்.

விடப்படாவினை: ஒரு தலையாகச் செயற்பால வினை.

அது மேற்கூறப்படும்.

கரு. வினைவினை யன்மை வினையின் மையோ
டினையன மூன்று மிவ்விவ் வியலவென்
றோரோஒ வொன்று முணரற் பால
வுராஅ வினைச்செல வுணர்வரி
தராஅ வருவினை யகப்பட் டோர்கசே. 177

இனையனமூன்றும் - இவ்வேறுபாடுடையன வாகிய மூன்றும். வினையும் வினையன்மையும் வினையின்மையுமென விம்மூன்று மேற்பெறப்படும்.

இயல - இயலுடையன.

ஓரோஒ வொன்றும் - ஒவ்வொன்றும்.

உரா - புடைபெயர்தல்: முதனிலைத் தொழிற்பெயர். புடைபெயர்தலாகிய வினையென்க. உணர்தற் கரியது.

அராவுத லரிய வினை யென்க. அராவுதல் - தேய்த்தல்.

வினையகப்பட்டோ ரறியாமையுடையராதலின் அவரானுணர்த லரிதாகும்.

கசு. செய்யா நிற்றலிற் செய்யா மையுஞ்
செய்யா மைக்கட் செய்யா நிற்றலு
மாணுறக் காணுநன் மகனே மக்களுட்
பேணுறு முணர்வு பெரியோ னதாஅன்
றெய்தரும் புணரியு மென்ப
செய்குவ முற்றுஞ் செய்தோ னவனே. 178

செய்யாநிற்றல்: நிகழ்பொழுதைத் தொழிற்பெயர். இன்: ஏழாவது.

மாணுற - நன்றாக: மயங்காது தெளிவாகவென்பதாம்.

செய்யாநிற்றற்கண்ணே செய்யாமையைக்காண்டலாவது: செய்யு மியல்பின வாகிய மெய்ம்மொழிநெஞ்சுதாமே தாம் பயின்ற வாறு மியன்றவாறுமியலாநிற்ப வுயிர் தான் சான்றளவாய்ப் புடைபெயர்ச்சி யின்றி நின்றாங்கு நிற்கும் வேற்றுமை யினிது புலனாதலாம்.

செய்யாமைக்கட் செய்யாநிற்றலைக் காண்டலாவது :

மெய்ம், மொழி, நெஞ்சுதொழிலின்றி மடிந்து சோர்வுழி அவற்றோடுயிர் தனக்கு வேற்றுமை தோன்றாது மயங்குலின் அம்மடிந்து சோர்தலாகிய செயல்உயிர்ச் செயலாதலைக் காண்டலாம்.

ஈண்டுச் செய்தலாவது : ஆள்வினையுடையராதல். செய்யாமையாவது : மடிகொளல். ஆள்வினையுடையராதல் : வேள்வி, நோன்பு, புணர்ப்பென்பவூற்று ளொன்றனை யின்றியமையாமை. கல்வி கற்பித்தல், நாடாளுதல், உழுதல், விற்றன்முதலாய தொழிலெல்லாம் வேள்வியின்பாற்படும். உண்டன்முதலாய நாள்வினையும் இணைவிழைச்சு முதலாயவும் விழாவெடுத்தன் முதலாயவ மெல்லா மதன்பால.

பேணுறும் : எல்லாரானும் விரும்பப்படும். உணர்வுமிக்கோனென்க. அதா அன்று - அங்ஙனமன்றி.

புணரியுமாம்என வினைக்குறிப்புமுற்றுக்கு வேண்டப்படு மாக்கச்சொற் றொக்கது.

என்ப : அசை.

செய்துவ - செயற்பாலன.

செய்குவமுழுதுஞ் செய்தோனுதலாவது : செயலுஞ் செயற்பயன்விழைவு மில்லாமையாம்.

அவன் ஆராவின்பமும் பேராவமைதியுமாகிய தன்னைத்தான் பெறுதலின் வேண்டப்படாவாகியசெயலுஞ் செயற்பயன்விழைவு மிலனுவன். செய்யாநிற்றலிற் செய்யாமையைக் காண்டல் வினையின்மையாகும். செய்யாமைக்கட் செய்யாநிற்றலைக் காண்டல் வினையன்மையாகும். பற்றொடு செய்யுஞ் செயல் வினையாகும்.

கஎ. எவ்வினைத் தொடக்கமு மெண்ணமும் விழைவு
மெவ்வமொ டில்லா னெவனவன் றன்வினை
புலமை யழலிற் பொடிந்த
புலவ னென்ப புலவர் தாமே. 179

வினைத்தொடக்கம் - வினைசெய்யத் தொடங்குந் தொடக்கம். தொடக்கமும் : உம்மை : முற்றும்மையோ டெண்ணும்மையுமாயிற்று. ஏனைய வெண்ணும்மை. எண்ணம் - நினைவு. வினையும், வினையினூதியமும், வினைசெய்யுமாறு, மதுதொடங்குமாறு மதற்காகுமிடையூறு, மதுநீக்குமாறும், அவ்வூதியந்தனக்குரியவாமாறு, மவைதா னுகருமாறுமுதலாயினவற்றை நோக்கிநெஞ்சுபடர்தலாம்.

எவ்வம் - துன்பம்.

வினைமுயற்சியு மூதியமு மென்றிவை துன்பமாதலும் அத்துன்பம்பயப்பது வினைத்தொடக்கமும் அத்தொடக்கம் பயப்ப தெண்ணமு மவ்வெண்ணம் பயப்பது விழைவு மாதலானே 'எவ்வமொடெவ்வினைத்தொடக்கமு மெண்ணமு விழைவு மில்லானென முறைதோன்ற வைக்கப்பட்டன.

வினைமுயற்சியும் வினையூதியமுமே யன்றி வினைத்தொடக்கம் வினையெண்ணம் வினைவிழைவுகளுமெவ்வமே யாதலின் எவ்வமொடு வெனத் தலைமைதோன்றப் பிரித்தோதிற்று.

புலமை - மெய்யுணர்வு. புலமையாகிய வழலென்றது மாட்டேற்றுயர்வுநவிற்சி.

புலமை யழலிற் பொடிந்தது வினையெனவேவினையோ டுயிர்க்கியைபின்மையு மவ்வுயிர் தன்னைத் தா னுணரும் புலமை யிடையூறின்றி மன்னுதலும் பெறுதும்.

வினைத்தொகை, வினைநிகழ்ச்சி, வினைவரவெனப்படு வினைத்திற மூன்றனுள்ளும் புலமை யழலிற்பொடிந்தது வினைத்தொகை. புலமை யழலை நெருங்கலாற்றுமையான் வினைநிகழ்ச்சி, உயிர்தனக்கு வேறாகச் சேய்மைக்கட் டோன்றுதலும் ஏனைவினைவரவில்லாமையுங் கொள்ளப்படும். எனவேஅப்புலவ னுகர்ச்சியுமுயற்சியு முறையே வெறு நுகர்ச்சியும், வெறுமுயற்சியுமாயின.

வினை பொடிந்த புலவனென விடத்து நிகழ்வதனியல் இடத்துமேனின்றது. வினைக்குயிர் மெய்ம்மையாற் பற்றுக்கோடன்றி யிடனுத லுணர்க; வெளிபோல. வினைக்குப் பற்றுக்கோடு: மருளும் மருளினுக்கமுமாம்.

புலவன்: மெய்யுணர்வின்றியமையாதவன். புலவரல்லாதாரெல்லாம் வினைவரெனப்படுவர். எனவே யிவ்வாற்றான் மக்களெல்லா மிவ்விருபாற் படுவாராம்.

கஅ. சார்புஞ் சார்பு சார்வினைப் பயனியை
பேர்பு மிரிதர விடையீ டின்றிக்
களிதுளும் புவகைக் காட்சி யயர்வோன்
வினைவயின் முயன்று மேயினு
மனையவன் வறிதும் வினைசெய விலனே. 180

சார்பாவன: மெய்ம்மொழி நெஞ்சு. இயைபு - பற்று. ஏர்பு - எழுதல்: தோற்றமென்பதாம்.

இரிதல்: அவையிரண்டும் புலமை மீதூர்தலை யஞ்சிக் காணு தொழிதல். இதனாற் புலமை யெய்தினோன் புலமையினின்று மீளாமை பெற்றாம்.

துளும்புதல் - மேன்மேன் மிகுதல்.

அயர்தல் - திளைத்து மெய்ம்மறத்தல்.

வறிதும் - சிறிதும்.

இப்பாட்டுக் கூறியது: செய்யா நிற்றலிற் செய்யாமையாம். இப்பாட்டானே புலவற்கு வினைநிகழ்ச்சியின் றென்றவாறும். களிதுளு புவகைக்காட்சி: தற் காட்சி: தன்னைத் தான் காண்டல்.

அனையவன் வறிதும் வினைசெய விலனெனவே நிகழும் வினை, மெய்ம்மொழி நெஞ்சுகளின் பயிற்சிமருஉவாற்றமே நிகழ்வனவாதல் பெற்றாம்.

கக. யாதும் வேண்டான் யாத்த நெஞ்சினன்
யாது மீய வேற்ற லியையா
னுடலள வியல்வினை யுளுற்றுதற்
கடனினற் கில்லைக் கடுவினை மையே. 181

வேண்டான் - அவாவான். யாத்த - அடக்கப்பட்டுக் கிடந்த. ஏற்றல் - கையேற்றுவாங்குதல். இயையான் - உடன்படான்.

தன்கண் வினை யின்மையின் உடலளவே யாகும்; வினை. உளுற்றுதல் - முயலுதல்.

உளுற்றுதலாகிய கடமை யுடையவ னென்க. வேண்டான் நெஞ்சினன்இயையான் கடனினற்கு என ஒருபொருட்பல்பெயர் ஒருவேற்றுமையாயின.

கடுவினைமை - தீவினைத் தன்மை.

புலமையின்பத்தொடு நோக்கப் புலவற்கு நல்வினையுந் தீவினை யோடொக்குமாகலின் ஈண்டிருவினைத்தன்மையுங் கடுவினைத்தன்மை யெனப்பட்டன.

வினைத்தன்மை - வினைப்பொதுமை. வினைப்பொதுமை யின் றென்ப தெல்லாவினையு மில வென்றவாரும்.

இதனற் புலவற்கு மறுமைப்பொருட்டாகிய வினை யில்லை யெனவே அவற்கு வினைத்திற மூன்றனுள்ளு மெஞ்சிய வினைவரவின்றென்பது கூறப்பட்டது.

ஈதலும் ஏற்றலும் மறுமை பயப்பன வாதல் காண்க. ஏனை வேண்டுதலும் நெஞ்சடங்காமையு மன்ன.

உ0 தற்செய லாகத் தான்வந் துறவே
பெற்றது மகிழ்ந்து பிணையற் குப்பா
னிலீஇ யிகல்கொள னேரா னுகி
யடுவினை முடியிய ரலீயர்
நடுவணன் செயினு ஞாண்பிணித் தின்றே. 182

தற்செயலாக: புலவன் றன் னுளப்பாடு முயற்சியுமிலவாக வவன்பாலும் பொருள்தனது செயலாகவே தான் வந்து பொருந்து மென்க.

பெற்றது: அப்புலவன் ருன் பெற்றதற்கு. அது பெற்றென மாறினுமாம்.

மகிழ்ந்து: அது நன்ருயினுந் தீதாயினு மதற் கமைந் தென்பதாம்.

பிணையல் - இரட்டை. இரட்டையாவன: இன்பத்துன்பம் புகழிகழ் ஏத்தெடுப்புப் பேற்றவிழவு தட்பவெப்ப மென்ருற்போல விணைந்தவருவன.

உப்பால்: அவைகதுவலாகாவாறு அவற்றுப் புறமாயென்க. நீலீஇ - நின்று.

இகல் - மாறுபாடு; என்பது பிறவுயிர்களோ டொன்றுது உறழ்ந்துவேறுபடுதல்.

இகல்கொளலே யுடன்படாஞகி யென்க.

அடுவினை : தனக்கடுத்தவினை : தன்ஞற் செய்தற் கியன்ற வினை யென்பதாம்.

முடியியர் முடியலீயர் என்க : வியங்கோள்.

முடியியர் - முடிக. முடியலீயர் - முடியா தொழிக.

அவை முடியினு முடியாதொழியினு மவைபற்றிக் களிப்புங் கவற்சியு மின்றி யவற்றிடையொத்து நடுநின்றவஞயினுன் வினை செயினு மவ்வினைஞாண் அவனைப் பிணித்திலதாமென்க.

நடுவணனென்பது வினைமுடிவு முடியாமைக்க ணடுவணஞயி னுன் என வினைக்குறிப்புப்பெய ரெனக் கொள்க.

வினைசெயினு மெனச் செயப்படுபொருள் சொல்லெச்சம். அவ்வினை ஞாணுஞ் சொல்லெச்சம்.

நாண் ஞாணகும். ஞாண் - கயிறு : வினைக்கயிறென்பதாம்.

நேராஞகி நடுவணனெனவினையெச்சம் வினைக்குறிப்புக் கொண்டது.

அந்நடுவணனை யென்னுஞ் சுட்டுப் பெயர்ச்சொல்லெச்சம் பிணித்திலதென்பதன் செயப்படுபொருள்.

உக. ஒட்டுப் பற்றில ஞெருதனி வாழ்க்கையன்
கட்டுப் புலமையிற் கட்டிய வுணர்வினன்
வினையினை வேட்கியர் மேற்கொளு
மனையவன் வினையெலா மவிழ்கின் றவ்வே. 183

ஒட்டு : சார்புவந்து தன்னே டியைபு கோடல் : மேலைப்பாட்டிற் பெறப்பட்டவாறு ஊழ்வினையாற் றற்செயலாகப் பிறர் வலிந்து நல்கு மடியுறையாகிய முற்றூட்டு முதலாயின வந்தியைதல்.

பற்று : தான் பிறவற்றைப் பற்றுதல்: புலவன் றனக்கு வேண்டுமென வுறையுண் முதலாயவற்றைத் தான் பற்றுச் செய்தல்.

"அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ரு
லற்குப வாங்கே செயல்"

(முப்பால். நிலையாமை. 3) என்றவாறே ஒட்டுப்பற்றியைந்துழி உடனே அறப்பொருட் டழித்தல்வேண்டும்.

ஒரு தனி வாழ்க்கை : சுற்றத்தொடும் நட்பொடும்படா தொருவ ஞகித் தனித்து அத்தனிமைக் கமையு மளவேயுண்டுடுத் துறைந்து வாழ்தல்.

கட்டுப்புலமை - உறுதியான தற்காட்சியுணர்வு.

புலமையிற் கட்டிய வுணர்வினன் : புலமைக் கண்ணே கட்டி வைத்தாற்போல நெகிழாது நிலைபெற்ற உள்ளமுடையோன்.

வேட்கியர் - வேள்வி செய்தற்பொருட்டு.

வேட்கியர் வினையினை மேற்கொளூ மனையவனென்க.

ஒட்டுப் பற்றிலன், வாழ்க்கையன், உணர்வினன் என்பன முற்றெச்சம். அவை மேற்கொளூ மென்பதனோடு முடியும். அவிழ்கின்றவ்வே: விரித்தல். வினைகட்டெனப்படுதலான், அவிழ்கின்றவெனப்பட்டன.

வினையிற் கட்டுண்டிருந்த புலவன் றன்புலமையாற் றன்னைத்தானோக்கி நுணுகவே கட்டுத் தாமே விசிப்பு நெகிழ்ந் தவிழ்வனவாம்.

உஉ. ஓங்குவண் சார்பி னோங்குவண் சார்பெரி
யோங்குவண் சார்பென வுறுகொடைச் செயலி
னோங்குவண் சார்பிற் குதவு மடையூ
ணோங்குவண் சார்பென வுணர்ந்து கொள்க
வோங்குவண் சார்பு வினைதா னென்றினோன்
பெறுதற் கருமடை பெய்தலி
னுறுதற் பாலது மோங்குவண் சார்பே. 184

சார்பு-இன்றியமையாத பற்றுக்கோடு.

ஓங்குவண்சார்பு-உயர்பெருஞ்சார்பு.

தனக்கொரு பற்றுக்கோ டின்றித் தனித்து முதலா தழியாதொருபெற்றியேயாய்த் திரிபின்றி நின்றுங்குநின் றேனையெல்லாவற்றுக்குந் தா னின்றியமையாத வொருபெரும்பொருள் ஓங்குவண் சார்பெனப்பட்டது. அஃதொன்றே யின்பம். அல்லன வெல்லாந் துன்பம்.

இப்பாட்டிற் கூறப்பட்டது ஓங்குவண்சார்பு வேள்வி. இவ் வேள்விக் கியைந்தன வெல்லா மோங்குவண்சார் பல்ல தில்லை

ஒருவன் றுன் வினை செய்யாநின்றே வினையிற் பற்றின்றித் தன்னையே தான் பற்றித் தன்னையே தானோக்கித் தன்னையே தானின்றியமையாது நிற்றலாகிய மேற்கூறிப்போதரும் வினைவயிற் புணர்ப்புத்தானே இங்கு வேள்வியாக்கிப் புனைந்துரைத்து விளக்கப்பட்டது.

ஓங்குவண் சார்பானென்றது வேள்வி யெரியில் வேள்விமடையெடுத்துப் பெய்தற் குதவு மகப்பையு மோங்குவண் சார்பென்றவாறு.

சார்பாகிய எரியென்க. சார்பென வுற்ற கொடுத்தலாகிய செயலின்க ணென்க.

ஓங்குவண் சார்பென வுறு கொடைச்செயலி னுதவு மடையூணோங்குவண்சார்பே யென மாறுக. எரிக்க ணுதவு மெனவியையும்.

மடை: கடவுளர்க் காகுக வென வேள்வி யெரியிற் பெய்தூட்டுங் கொடைப் பொருள்.

சார்பாகிய வினை யென விருபெயரொட்டாக்குக.

சார்பு வினை தா னென்றினோன்: வேட்போன்றுன் வேட்கும் வினையே தானாக வேறன்றியொன்றுயினோ னென்க.

மடை பெய்து வேட்டல் வாயிலானேயடையற்பாலது மோங்கு வண்சார்பே யென்க.

இதனானே ஒருதானாகிய வொருதனியுயிரே யோங்குவண் சார்பென்பதூஉ மதுதானே தன்னைப் படர்க்கையு முன்னிலையுந் தன்மையுமாகிய மூவிடமாமெனக்கொண்டு நின்று கொடுப்பது மேற்பதுங் கொடையுங் கொடுக்கப்படுவதுமா யமைந் தொன்றென நிற்றலல்லது வேறன்றென்பதூஉ மவ்வுணர்வுதானே புலமையும் வீடு பேறுமா மென்பதூஉம் பெறுதும்.

இவ்வோங்குவண் சார்பு வேள்வி, புலமை வேள்வி யெனவும் பெருவேள்வியெனவும் மெய்வேள்வி யெனவும் வழங்கத்தகும்.

ஓங்குவண்சார்பு, பெருஞ்சார்பு, பெரும் பொருள், பெரும்பற் றென்பன வொருபொருள.

உரு. ஒருசார் புணரிய ரும்பர் வேள்வியைப்
பெருகார் வம்படப் பேணுப வொருசார்
வேள்வியுட் பெரும்பொருள் வேள்வியின்
வேள்வியை வேள்வியான் வேட்ப மற்றே. 185

ஒருசார் புணரியர் - புணரியர் சிலர்.

உம்பர்வேள்வி: வானோரை யூட்டும் வேள்வி. சிறிதாயினும் பெருகு மியல்புடைய வார்வ மென்க.

பட - கெட: ஆர்வமின்றியென்பதாம்.

வேள்விகளுட் சிறந்ததாகிய பெரும்பொருள் வேள்விக்க ணென்க.

வேள்வியை வேள்வியான் வேட்டலாவது உம்பர்வேள்வி கைசோரப் பெரும்பொருள் வேள்வியே செய்யாநிற்றலாம்.

இதனால் வினைவேள்வி செய்வாரு மதுவிட்டுப் புலமைவேள்வி செய்வாரு மெனப் புணரிய ரிருசா ருளராதல் கூறியவாறும்.

புலமையை வேள்வியென்றது வினைவேள்வி செய்யாநிற்புழி அது தானே துயில்வான் கைப்பொருள்போலச் சோர்ந்துபோதல்பற்றி யென வுணர்க. அதனானே யிஃ திவ்வோத்தின்கண்ண தாயிற்று.

உச. செறிவெனு மெரியிற் செவிமுத லைம்பொறி
யறிவினை வேட்பா ரவரு ளொருசா
ரைம்பொறி யென்னு மழற்க
ணைம்புலன் வேட்கு மவரு முளரே. 186

செறிவு: விழைவு, வெகுளி, வெரூஉவென்றிவை யெழாவாறு நெஞ்சு புறஞ்செலாதடங்குதல். அவருள்: மேற்கூறிய புணரிகளுள்.

செறிவென்னு மெரியிற் செவி முதலாய வைம்பொறியுணர்வு களை வேள்விமடையாக வேட்டலாவது நெஞ்சு பொறிவழியாகப் புலன்மிசைச் செல்லாது மீட்டடக்குதலாம்.

ஐம்பொறி யென்னு மழலின்க ணைம்புலன் வேட்டலும் பொறி புலங்களிற்செல்லாது மீட்டு நிறுத்துதலா மென்க.

இன்னோ ரன்னவாகக் கூறிப் போதரும் வினைபலவு முடல்வாழ் வீடு பெற்றுத் தற்காட்சியில் நிலைபெற்ருேனுழை அவன்பொருட் டன்றிப் பற்றின்றி நிகழ்ந்து நிகழ்தொறு மவ்வப் போழ்தே யழிந்துவிடுவன வாதலின் வேள்வி யெனவும் வினைவயிற் புணர்ப் பெனவுங் கொள்ளப்படும். இவை புணரிகளுழையன்றி இணரிக ளுழை நிகழ்வுழி வினையெனவே கொள்ளப்படு மன்றி வேள்வியும் வினைவயிற்புணர்ப்புமா மெனக் கொள்ளப்படா.

எனவே யிவை செப்பும் பாட்டெல்லா முடல்வாழ்வீடு பெற் ருற்கு வினைவரவின்மைதோன்றவூழ்வினையு முயற்சியு நிகழுமாறு நுதலிச் செப்புவன வெனப்படும்.

வேள்வியென்பது ஒருசாரார் நெருப்புவளர்த்து நெய்ம்மடை கொடுத்தற்கேசிறந்த பெயரன்று : அன்னபலவுள ; அவற்றுக்கெல் லாம் பொதுப்பெயரா மென்பதூஉ மிவண் விளங்கும்.

உரு. எனையும் பொறியி னியல்செய லெல்லாந்
துனையு மூச்சின் ஞெழிலு முளப்பட
வுன்னரும் புலமை யொளிவிடுந்
தன்னமர் நொசிப்புத் தழலின் வேட்பவே. 187

எனையும் பொறியின் - எல்லாப் பொறியானும் : உணர்ச்சிவாயில செயல்வாயிலெல்லாவற்ருனு மென்பதாம்.

இயல் செயல் - நடைபெறுஞ் செயல். துனையும் - விரையும். மூச்சு - உயிர்ப்புவளி. மூச்சின்ஞெழில் : மூச்சுவிடுதலு மூச்சுவாங் குதலுமாம்.

இச்செய லெல்லாவற்றையும் வேட்டலாவது அவை நிகழா வாறு நன் கடக்குதலாம். அவற்றை யடக்கிப் புணரி தன்கட் டன் ஞற் றன்னைத் தானேக்கி நிற்றலே தன்னமர் நொசிப் பெனப்படும்.

உயிராகிய தன்கண் மேவு நொசிப்பென்க.

தன்னமர்நொசிப்புத்தழல் புலமையாகிய வொளிவிடுமாறுணர்க.

இதனல் அப்புணர்ப்பும் வேள்விவினையாதல் பெற்ரும். எனவே அது வினைசெய்யாமை யன்று.

நொசிப்பாகிய தழல்.

உசு. செப்பிய நோன்பு திருந்திய புலவருட்
கைப்பொருள் வேள்விக் கடவ ரொருசார்
நோன்றவ வேள்வி நோற்பவ ரொருசார்
ரேம்புறு புணர்ப்பென வியம்பு வேள்வியு
மாள்வினைக் கல்வி யாகிய
வேள்வியு மாக்குநர் வேறுவே றுளரே. 188

செப்பிய : நூல்களுட் செப்பியவென்க. நோன்பு : வரையறுத்து மேற்கொண்ட செயல்களை வழுவாது பாதுகாத் தோம்புதல். அவை : இல்வாழ்க்கைச் செயல்.

கைப்பொருள்வேள்வி : வேள்பாரி முதலிய புரவலர்போல வறிய நல்லோர்க்கு வேண்டுவன வரையாது மெய்யன்பு சுரந்து கொடுத்து மகிழ்தலாம். வேள்வியாகிய கடனுடையவரெள்க. நோன் தவம் : ஐம்புலவின்பங் கைவிடுத்தலா னுறுந் துன்பங்களைப் பொறுத்து நெஞ்சோடாது நிறுத்தல். வினை தவலுடையது தவம். தவல் - கெடுதல். நோன் - வலிமை.

ஏம்புறுதல் - மகிழ்தல். புணர்ப்பு : எண்கிளைப் புணர்ப்பு.

ஆள்வினை - இடைவிடாமுயற்சி. கல்வியாகிய ஆள்வினையென்க. கல்வியாள்வினை : பன்னூல் கற்றலுங் கற்பித்தலுமாம்.

இவரெல்லா மீண்டு உடல்வாழ்வீடர் என்பது கடைப்பிடிக்க.

உஎ. மூச்சுச் சிறைசெயன் முனைந்து நிற்குநர்
மூச்சுக் காற்றொடு மூச்சன் மூச்சு
மூச்சுப் பேச்சு முற்றக் காத்து
மூச்சின் மூச்சன் மூச்சு
மூச்சன் மூச்சின் மூச்சும் வேட்பவே. 189

மூச்சு - உயிர்ப்புக்காற்று. மூசுதன் மூச்சாயிற்று. மூசுதலாவது மூசென வொலிப்ப வுயிர்த்து வாங்குதல்.

சிறைசெயல் - தடுத்துப் புறப்படாமே யுள்ளிருத்துதல். முனைந்து- ஊக்கி முயன்று.

மூச்சன்மூச்சு - மூச்சல்லாத மூச்சு : என்றது எருவாய்க் காற்றினை.

மூச்சுப்பேச்சு - மூச்சினா னிகழும் பேச்சு. அதனான் மூச்சடங் கும்வழிப் பேச்சில்லாமை யொருதலை.

காத்து - தடுத்து. மூச்சின் : இன் : இருவழியு மேழாவது.

முனைந்து நிற்குந ரொருசா ரெனத் தந்துவிரித்துரைர்க. நிற்கு நராய்வேட்ப.

சொற்பொருண் மீட்சி யணி வந்தது.

மூச்சின்கண் மூச்சன்மூச்சினையும் மூச்சன் மூச்சின்கண் மூச்சினையும் வேட்ப ரென்க.

மூச்சன் மூச்சினை யடக்குதலாவது எருக்குடரு ளொரு வெஞ்சாதவ்வப் போழ்து கழிதல் பிழையாமையானும கோதில்லாத கூழுண்டானும் இறையு முண்ணாமையானு மூச்சன்மூச்சு நிகழாமைச் செய்தலாம். அது வன்றி யது வருவுழி வாராமைத் தடுத்த லன்று. தடுத்துழி யிழியாவெரு இனிதிழியும். மூச்சன்மூச்சு, மூச்சுப் போல யாப்புறவாய தன்று; எருக்குடரு ளழுகிய வெருவினிற் றோன்றி விரையப் புடைபெயருங் காற்றேட்ட மல்லது பிறிதன்று.

உஅ. வரைந்து கொண்ட வாயுறை யுண்குபு
நிரைந்து வாழு நெட்டுயிர் வாழ்வெனு
நெருப்பிடை வேட்பவந் நெருப்பினை யிங்ங
னன்றியம் பெல்லா நலவருந்
தொன்றியல் வேள்வியிற் றுடைத்தனர் துகளே.

வரைந்து கொண்ட வாயுறை: இன்னவுணு இன்னபொழு தின்னவளவுண்பலென வெல்லைப்படுத்து வைத்த வுணவு. வாயுறுக் கப்படுமுணு வாயுறையாகும். உறை: மருந்துமாம். உண்ணுஞ் சோறும் பருகும்புனலு மிருமருந்தென்ப. அவை சாந்காடு தவிர்த் தலின் மருந்தாயின. ஆற்ருமைப் பிணி நீக்குதலின் அது வெனலு மொன்று. உணவை மருந்தென்றமையின் அது மருந்தாகற்பால தாகல் வேண்டுமென்பது பெறப்படும். மருந்தாகற்பாலதாகலாவது நோயுங் காமமு மளவி னில்லாது மிகுதற்குத் துணையாகா வளவின தாதலாம்.

நிரைந்து வாழும் - ஒழுங்குபட்டு வாழ்கின்ற. ஒழுங்குபட்டு வாழ்தலாவது நோயும் நோயின்மையு மாறி மாறி வாராமே யெப் பொழுதுமொருபெற்றியே நோயின்றி யிருத்தலான் இன்பமு மாற்றலு நெடுவாழ்க்கையுங் குன்ருமையாம். நெடுமை உயிர்க் கன்றியுயிர் வாழ்வுக்கடை.

நன்று இயம்பு - மிகவுங் கூறிய.

நலவர்: தமக்கும் பிறர்க்கும் நன்மை செய்பவர்.

தொன்று இயல் - பழையதாகித் தொன்று தொட்டு வழங்கு கின்ற. தொன்று: தொகுதியொருமை. அன்றிப் பழையதாக வழங்குகின்ற வென வழக்கினைச் சிறப்பித்த தெனினுமாம். ஆண்டு வேள்வி அஃறிணையியற்பெயர்.

ஈண்டுத் துகளாவன: உடல் வாழ்வீடர்கள் உறக்கடவ வினை மரூஉக் குற்றமரூஉ வென்றிவை.

அம்மரூஉத்தான்நனி நொய்தாய்ப் படுதலும் ஒல்லென்றிரிதலிற் றுடைத்தனராம். இத்துணையுங் கூறிப்போந்தவாற்ருற் பெரும் பொருண்மையாகிய தானேதாணுகிய உடல்வாழ்வீடர்காணும் வினையாவன இவையென்பதூஉம் அவையே வேள்வி யென்பதூஉம் விளக்கப்பட்டன.

உகூ. வேள்வி மிச்சின் மருந்து மிசைகுநர்
வேள்வி வினைவழி மேவுங் கெடாஅச்
செம்மைப் பெரும்பொருட் செல்வம பெறுகுவ
ரிம்மை யின்ரு லென்பிற
வொண்மை யுணர்விலா வொழிந்தோர் தமக்கே.

மிச்சில் : பெரும்பொருட்கு ஊட்ட அஃதுண்டொழி யெச்சம்.

மருந்து : மூவாமை நல்கு முணு.

வேள்விக்கட் பெரும்பொடான் மிசைதலாவது நுகரப்படு முன்னிலைத்தொகை முழுதிற்கு மின்றியமையாத தென வதுகொண்டு பெரும்பொருளுண்மை பெறப்படவே அத்தொகை முழுதுங் காணப் படாமையாம்.

வழி - பின். வேள்வினைவழியே பெரும்பொருள் மேவுதலாவது உள்ளங்களின் வினைகளை யெல்லாம் நோக்கியபின் அவற்றுக் கெல்லா மின்றியமையாத வெளியென்பததானே பெறப்படுதலாம். யாண்டும் வினையை நோக்கியவழியன்றி வெளி யுய்த்துணரப்படுவ தன்று. வெளியென்பது பொருள்கட்குச் சார்பன்று; பொருள் களின் புடைபெயர்ச்சி யெனப்படுஞ் செயல்கட்கே சார்பாவது. அச் செயல்கட்கு அதுவன்றிச் சார்பு பிறிதொன்று மின்று. அதனுன் அவற்ருன் அஃதுய்த்துணரப்படுத லொருதலை.

செம்மை - திரிபின்மை.

செல்வங்களுட் கெடாமையுஞ் செம்மையுமாகிய செல்வ மப் பெரும் பொருளன்றி யொன்று மின்ருமாறுணர்க.

வேள்விமிச்சின் மிசைவார்க்குச் செல்வந் தலைப்படுமென்னு நயமுந் தோன்றிற்று.

ஈண்டுச்செல்வம் பெறுதலாவது கேள்வியளவையினு மாராய்ச்சி யளவையினு மங்ஙன மிசைவதாகப் படர்க்கையின் வைத்துப் பெறப் பட்ட வப் பெரும்பொருளாகிய செல்வம், நுகர்ச்சியாகிய காட்சி யளவையிற் காண்போன் ருனேயா யமைந்துகிடத்தலாம்.

ஒண்மை யுணர்வு : மாசுநீங்கி விளக்கமாகிய வுணர்வு. ஒழிந் தோர்க்கு : மிசைகுந ரல்லாத வினைவர்க்கு.

அவர்க் கிம்மைநல மில்லை; அங்ஙனமாயிற் பிறவாகிய மறுமை வீடுபேற்றுநலங்க ளெவ்வாறுளவாம் : உளவாகா வென்பது.

இம்மை, மறுமை, வீடுபேருகிய மும்மை நலனும் வேள்விமிச் சின் மிசையினே யுளவா மென்பது.

மேல், வேள்வியிற் றுகள்துடைத்தனரெனவே வேள்வி செய்யாதார் துகடுடைக்கலாகாமையின் ஒண்மையுணர்விலராத லுணர்க.

இங்ஙனங்கூறியது உடல்வாழ்வீடாகிய வினைவர்க்கல்லது அப் புலவர்க்கன் றென்பதுணர்ந்து கொள்க.

நo: இப்பெரு வேள்வி பற்பல திறனு
மப்பெரும் பொருள்வா யாக்கமுற் றிவர்ந்தன
வவைதாம் வினையி னுகுந
விவையா மென்றுணர்ந் தெழுமை நீத்தியே. 192

திறன் - கூறுபாடு.

பெரும்பொருளின் வாயினின்று மேன்மேலுயர்வுற்றுப் பரந் தன வென்க.

இவர்தல் - பரத்தல்.

வாயென்றது சொல்லசையை; அதுவே தூயமரு ளெனவும் இறைவனெழிலெனவு முன்னர்க் கூறப்பட்டது. ஞாலம், இறைவன் சொல்லினற் றெழிற்பட்டுத் தோன்றி நின் றெடுங்கும். பெரும் பொருளாகிய பாழ்வெளியினின்று சொல்லுஞ் சொல்லினின்று வினை யும் வினையினின்று வேள்வியு மெழுவன வென வுணர்க.

அவைதாம் - அவ்வேள்விதாம்.

இவையாம் - இத்தன்மையவாம்.

எழுமை - எழுபிறப்பு. அவை வானோர் பிறப்பு முதலாயின.

எழுமைநீத்தல்: பிறவியில்லாமை: வீடுபேறென்பதாம். உணர்ந்து: பொருட்டுப் பொருண்மைக் குறிப்பி னின்ற வினையெச் சம்; உணர்தலா லென்பது கருத்து.

௩க. கைப்பொருள் வேள்வியிற் கழியச் சீரிது
மெய்ப்பொருட் புலமை வேள்வியென் றுணர்க
புலமை வேள்வியிற் புகழ்வினை
பலவு மொருங்கு படுமான் முற்றே. 193

கைப்பொருளாற் செய்யும் வேள்வியென்க.

கழிய - மிக. சீரிது - சிறப்புடையது.

புகழ்வினை - நல்வினை. புகழ்பலவும் வினைபலவுமென வும்மைத் தொகையுமாம். என்னை? எல்லாப்புகழும் பெரும்பொருளிடத்த்த முற்றுப்படு மாதலி னென்பது.

முற்றுப்படு மென வியைக்க. ஆல்: அசை. முற்றுப்படும் - முற்றுகும்.

புகழ் வினை யொருங்கு பலவு முற்றுப் படுதலாவது வேட்போன் றுன் சொல்லுமுணர்வுஞ் செயலுங் கடந் தெஞ்சி நின்றம் மூன்ற னுடுமியைப்பின்மைகண் டம்மதலானே அவையிற்றின் றன்மைப் பொதுமைக்கட் பற்றெடு வேட்கை யில்லா தொழிதலாம்.

௩உ. யாதனை யுணர்ந்துழி யீங்ஙன மயர்வு
சார்தலை யழித்துஞ் சார்குவை யல்லைகொல்
யாதனிற் றோற்றம் யாவையு நீயே
தன்பாற் கண்டுபி னென்பாற் காண்பைகொ
லன்பா னெதிர்ப்பட் டல்லவை சினை இப்
பணிவு கேள்வி புரிவெனப் பகருங்
கனிவு மூன் றினுங் கைக்கொ ளதனைப்
பொருண்மை கண்ட புலவர்
பொருண்மைப் புலமை புகலுவர் நிற்கே. 194–195

அயர்வு: உண்மையல்லாததனை யுண்மையெனக் கொண்டு கன விற்போன் மயங்கு மயக்கம். அழித்தும் - மீட்டும்.

புலமை தலைப்பட்டுழிப் பின்ன ரெவ்வாற்றானு மயர்வு குறுகுதல் செல்லாமையின் அயர்வு மீட்டும் பொருந்துவா யல்லை யன்றான்.

தோற்றம் : முன்னிலைப்படு முயி ருயிரல்லவையாகிய தோற்றம்.

தன்பாற் காண்டலாவது : உணருமுயிரு முணரப்படுபொருளு மொருஞான்று மெவ்வாற்றானு முறையே யுணரப்படுபொருளு முணருமுயிருமாதல் செல்லாமையானே உணர்வதொன்றெனத் துணியப்பட்ட தன்மை யொருமைப் பொருண்மையாகிய ஓங்குவண் சார்பு தான் யானென்பது தானே பெறப்படவே முன்னிலையெல்லா வற்றுக்குஞ் சான் றொருதானேயா யமைந்து தன்னோ டவை முறையே யியங்காவிடமுந்தன்பாலியங்கு மிடத்தினிகழ் பொருளு மாதல் புலனாதலாம்.

அவன் றன்பாற் கண்ட ஞாலத்தைக் கடவுள்பாற் காண்டலாவது அவன் றன்னையே நோக்கி நின்றதுணையாற் றான் முழுவுணர் வாயினு முன்னிலை புலனாகின்றுழித் தானொருவழி யுணர்வாதலானே தானாகிய வோங்குவண்சார்பு பொருடானே யியல்பாக வொருவழி யுணர் வென்னுஞ் சுட்டுணர்வின்றி முன்னிலைப்பொதுமையுந் தன் பொதுமையு மொருங்குட னுணர நிற்குமிடங் கடவுளென்றுணர்ந்து தன்சுட்டுணர்வை யிழப்பவே தான் சுட்டியுணரப்படுபொருட்கெ லாங் கடவுள் நிலைக்களனாதல் புலனாதலாம். உயிர் தா னுடம்பு முழுதினும் ஆன்றுநின் றுணர்வதாயினு முடம்பினுள் அது தன்னைத் தானுணரு மிடம் நெஞ்சக மல்ல தின்மைபற்றி யாண்டேதன் னுண்மை புலனாதலு மேனை யெம்மருங்கினுந் தன்னுண்மை புலனா காமையு மங்ஙன மாண்டெல்லாந் தன்னுண்மை தனக்குப் புலனாகா தொழியினுந் தன்னுண்மை யியல்பாதலா னொருவழிக்கட் டன் னுண்மை புலனாகவே அமைதலும்போல ஒருதனிவாய்மையுயிரெனும் பெரும் பொருள்தான் ஞாலமெங்கணும் ஆன்றுநின் றாங்காங் கவ்வவ் வளவே யுணர்ந்து அவ்வவிடத்து மன்னுயிரெனப் பெயர்பெறுவ தாயினு மதுதான் ஞாலமுழுதுமொருங் குணர்ந் துய்த்துத் தன்னைத் தானுணர்ந்து தன்னுண்மைதனக்குப் புலனாக நிற்குமிடங் கடவுளெ னப்படுதலு மேனை யெம்மருங்கினு மங்ஙனந் தன்னுண்மை தனக் குப் புலனாகாமையு மங்ஙன மாண்டெல்லாந் தனக்குத் தன் னுண்மை புலனாகாதொழியினுந் தன்னுண்மை யியல்பாதலாற் கட வுளாகிய வொருதழிக்கட் டன்னுண்மை புலனாகவே யமைதலுங் கண்டுகொள்க.

இதனான் மன்னுயிர்க்கும் பற்றற்றுத் தனித்துச் சுட்டுணர் விழந்துழி யன்றி யாண்டு முதன்மை யின்மையுங் கடவுளோ டொன் றாத லின்மையு மங்ஙன மொன்றாயவழியுங் கடவுள்பால் விளங்கு மமைதி யின்ப மல்லது பிறமாண்பு தன்பால் விளங்காமையும் வினை செய்யாநின்றுழித் தனக்குஊழி னமைந் தியல்பாகிய வினை யல்லது தான் செய்யலாற்றாமையு மதுவுங் கடவுள் பணியானன்றி யின்மையு மதனைக் கைவிடுதலு மவனருளா னல்ல தியலாமையும் பிறவு முண ரப்படும்.

'எதிர்ப்பட்டு' : புலவரை யெதிர்ப்பட்டென்க. அவ்வெதிர்ப் பாடு தானு மவர்பாலும் பிற வெவ்வுயிர்ப்பாலு மன்பெழற் குரி யார்க் கன்றிப் பிறர்க்கெய்தாமை தோன்ற அன்பா னென்றவாறு காண்க.

புலமை தா னிருபாற்று; நுகர்ச்சியுணர்வும், உய்த்துணர்வு மென. அவைமுறையே ஈற்றுணர்வும் ஈற்றயலுணர்வுமாம். அதனு லவையிற்றை முறையே மீயுணர்வெனவும் ஏனையுணர் வெனவும் வழங்குப. அவ்விருசார்ப் புலமையுள்ளும் புலவராகியாரை யெதிர்ப் படுவழிப் புலவரோ டெதிர்ப்பட்ட செவ்வியாரிடை முறையே உட னிகழக்கடவ அருட்காட்சியும் அன்புக்காட்சியு நிகர்த்துண்டாய வழியன்றி நுகர்ச்சியுணர்வு தலைப்படற்பால தன்ருதலிற் புலவரை யெதிர்ப்படுதல்வேண்டு மென்க.

அல்லவை : புலமையல்லாதன. சினைஇ : வெகுண்டு நோக்கஞ் செய்யாது. அவை பொய்த்தோற்றமென வுணர்தலே யீண்டுச் சினத்தலென்றதாம். ஈண்டுத் துன்பநோக்கிச் சினத்தல் கூடாமை யுணர்க,

பணிவு : புலவரைப் பணிந்து பணிசெய்தல்.

கேள்வி : அறியாதவற்றையுந் திரியக் கொண்டவற்றையு மையுற்றவற்றையும் புலவர் சொல்லச் செவிமடுத்தல்.

புரிவு : அங்ஙனந் துணிந்துகண்ட துணிவின்கட் கடைப்பிடித் துச் சோர்வின்றி நின்று பயிலுதல்.

இம் முறையே நிகழு மூன்று மொருதலையான் வேண்டப்படுவ.

கனிவு : தானே பற்றற்று வேருதற் கமையுஞ் செவ்விமுதிர்ச்சி.

பணிவு முதலிய மூன்று முள்வழியே அச்செவ்வி யமைதலின் அவை மூன்று முடைமை கனிவெனப்பட்டது, மூன்றினும் - மூன் ருனும்.

கைக்கோடல் - நுகர்ச்சியுடைமையாக்கிக் கோடல். அதனைக் கைக்கொ ளென்க.

காண்பைகொ லென்பதன்காறும் வினவப்பட்டஅதனையென வியைக்க. அதனை : அப்புலமையை.

பொருண்மை - பொருட்டன்மையாகியவுண்மை. அவையாவன: ஒங்குவெண்சார்பி னுண்மைத்தன்மையாகிய பொய்யாமையும் ஒழிந்தனவற்றினுண்மைத்தன்மையாகிய பொய்ம்மையுமாம்.

பொருண்மையைக் கேட்டாராய்ந்து நன்குணர்ந்து திருந்துதல் பொருண்மைப் புலமை.

புலவர் நிற்குப் புகலுவரென்க.

இதனுற் புலமை யெய்துஞ் செவ்வியுடையார்க்குப் புலவர்தாமே தலைப்படுவ ரென்ருனுமாம்.

கடவுள் வேண்டுவார்க்கு வேண்டுவதே யீவானுகலிற் புலவரைத் தலைப்படுவித்தலுந் தன்னியல்பாகும்.

௫௫. வடிவாட் போர்வல் வயவ ரேறே
கொடியார் யாரினுங் கொடியை யாயினும்
புலமாந் தெப்பம் புகுதரி
னலமாப் பின்றி யதுநீந் துதியே. 196

வடி - நீட்டிய. வயவர் - அஞ்சாதவர்.

கொடுமை - தீவினைத்தன்மை. கொடியை - கொடுமையுடையை. உம்மை: எதிர்மறை: கொடியையல்லை யென்பது குறிப்பாகலின்.

புலம் - புலமை: மேலைப்பாட்டிற் கூறியது.

புகுதரின் - போந்தேறின். அலமாப்பு - கலக்கம். அது: அக் கொடுமைக்கடல். ஒருவழிமாட்டேற்றணி.

நீந்துதி - கடப்பாய்.

வினைகடத்தல் புலமையா னல்ல தில்லையென்ப திதனாற் கூறப்பட்டது. எனவே புலமையன்றி வீடுபேற்றுக்கு வினை வாயி லன் றென்பது பெறப்படும்.

ஈண்டுங் கொடுமையென்றது வினைப்பொதுமையை யென்றுணர்க: இருவினையுமென்பதாம்.

ஈண்டு வினையென்ற தூழ்வினையு, முயற்சியுமென்பது நீந்துதலாற் பெறப்படும்.

௫௪. விறகிற் றேன்று விறகின் மிளிர்குபு
விறகை நீற்றும் வெவ்வெரி மான
வினையிற் றேன்று மிளிர்குபு
வினையை நீற்றுமான் மெய்ப்புல மையே. 197

நெருப்புக்கு விறகு போல மெய்ப்புலமைக்குப் பற்றுக்கோடாவதுஉயிரன்றி வினையன்றாயினும் உயிர்வினைக்குப் பற்றுக்கோடாயது போன்று தோன்று மொற்றுமையானும் புலமை தோன்றி மிளிர்தற்கு வினை வாயி லாதலானும்உயிரிற் றேன்றி மிளிரும்புலமை வினையிற்றேன்றி மிளிர்வ தெனப்பட்டது.

தோன்று - தோன்றி. நீற்றும் - சாம்பராக்கும். ஆல்: அசை.

இதனாற்புலமைபற்றியவழி வினைத்தொகை, வினைநுகர்வு, வினைவரவெனப்படு முக்கூற்று வினையு மரூஉவறக் கெடுமென்பது பெறப்படும்.

இனி, விறகெரிந்து கெட்டவழித் தழலுமுடனவியுமாறுபோன்று வினைபிரிந்து கெட்டவழிப் புலமையு முடனவியு மெனக் கொள்க.

"சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின்"

எனத் திருமுருகாற்றுப் படையிற் புலமையையுங் கைவிட்டுத் தங்குதற்குச் செல்லுஞ் செலவென வீடுபேற்றின்கண் அறிதனிகழ்ச்சி யின்மை கூறினர்; நக்கீரனர். "உணர்ந்தார்க் குணர்வரியோ" னென்றார்; திருக்கோவையுடையாரும்.

௫௫. புலமையிற் றூய்து பொன்னியல் வானினு
நிலமிசை யாங்கணு நேடினு மிலது
செயற்கரும் புணர்ப்புச் சீர்த்தோன் றூஅன்
மயக்கறுஞ் செவ்வி வாய்த்துழி
வயக்குறத் தன்னுண் மரூஉ மதுவே. 198

இன்: ஒப்புப்பொரூஉ. பொன்னினுகிய வானென்க. நேடினும் - தேடினும்.

பொன்னியல் வானின்கண்ணும் நிலத்துக்கண் யாண்டுந் தேடினும் புலமைபோலுந் தூய்தியாது மின்றென்பது. தூய்து: தூய்மை தருவது. தூய்மை யுடையதூஉமாம்

தூய்மை: திரிபுஞ் சேர்வு மின்மை. புலமை யுற்றுழி யுயிர் வினைமாசு சிறிதுமொட்டின்றித் தனித்துத் தன்னியல்பி னமைதலே யீண்டுத் தூய்மையாம். இஃதுயிர்த்தூய்மை யெனப்படும். இவ் வுயிர்த்தூய்மை செய்வது புலமையன்றிப் பிறிதொன்று மின்மையின் அதுபோல்வ தியாண்டு மின்றென்ப. உயிர்த்தூய்மை யெனினும் வீடுபேறெனினு மொன்று.

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"

(முப்பால். அவாவறுத்தல். 4.) என வள்ளுவனுருந் தூய்மை யெனப்படுவ தவாவின்மையே யெனவு மவ்வுயிர்த்தூய்மை வாய்மை வேண்டுத லாகியபுலமையா னமைவ தெனவுங் கூறினர்.

செயற்கரும்புணர்ப்பு: "செயற்கரிய செய்வார்பெரிய" (முப்பால் நீத்தார்பெருமை. 6.) ரென்றூர்; வள்ளுவனுரும்.

சீர்த்தோன் - வாய்க்கப்பெற்றவன்.

புணர்ப்புச் சீர்த்தோ னுறு மயக்காவ தியான் புணர்ப்புடையே னென்றும் பற்று.

அஃ தறுஞ் செவ்வி: அஃதற்றுப் புலமை கைகண்ட வாசிரியனை யெதிர்ப்படு மெல்லை.

அஃதவனுளப்பாடு முயற்சியு மின்றி நேர்வதாகலின் வாய்த்துழி யெனப்பட்டது.

வயக்குற - விளக்கமாக. மரூஉவுமென்பது ஈற்றுமிசை யுகரங் கெட்டது.

அது: அப்புலமையை.

சீர்த்தோன் செவ்வி வாய்த்துழி அதனைத் தானே தன்னுண் மருவுவா னென முடிக்க.

புணரியாயினன் நல்லாசிரியனைத் தலைப்பெய்த துணையானே அவ் வாசிரியன் றனக்கி யாதுஞ் சொல்லா னுணர்த்த வேண்டாமே அப் புலமையை அவன் றானே தன்னுண் மருவு மென்ற விதனானே புலமை தான் யாதானும்வாயிலா னெய்துவதன்றி யியற்கையானே யமைந்து கிடப்ப தெனவு மதனு லது கெடாது மன்னுவதெனவு மதன் மறுதலை

யைத் தலைப்படுதலே மயக்கமெனவு மதுகெட்டதுணையானே செய்து கொளவேண்டாது புலமை தானே யமையுமெனவு முணர்ந்து கொள்ளப்படும். எனவே புணர்ப்பும் புலவர்க்காட்சியு மயக்கறுதலை விளைப்ப வல்லது புலமையை விளைப்ப வல்ல வென்பது பெறப்படும்.

புணர்ப்புச் சீராதான் செவ்வி வாய்த்துழியும் செவ்வி வாயா தான் புணர்ப்புச் சீர்த்துழியும் புலமை மருவா ரெனவுணர்ந்து கொள்க. சீர்த்தல் - வாய்த்தல்.

வயக்குற வென்றதனாற் செவ்வி வாய்க்குமுற் பெறும் புலமை யுய்த்துணர்வளவே யெனவு மதுவு மிதற்குமுன் னொருதலையான் வேண்டற்பால தெனவுங் கொள்ப.

எனவே வயக்குறும் புலமைக்கு வாயிலாவன புணர்ப்பே யுய்த் துணர்வே, செவ்வியே யென விம்மூன்றென்பதாம்.

நகூ. வாயில் யாவு மாணச் செற்று
வீயில் வாய்மை வேண்டி யூக்குநன்
புலமை யெய்துவன் புலமை யெய்தியோன்
நிலமை பெற்று நிலவும்
வலமெய் யமைதி வல்லை யுறுமே. 199

வாயில் யாவும்: நெஞ்சு முதலாகிய பதினொரு பொறியும். மாண - நன்றாக. செற்று - அடக்கி.

வீயில் - நீங்குதலில்லாத ; கேடில்லாதவெனினுமாம்.

வாய்மை: பொய் பொய்யாய்ப் போக வருவது. வேண்டி— இன்றியமையாது. ஊக்குதல் : அவ்வேண்டுதலோடியையவொழுகல்.

நிலமை - நிலைமை : அசையாத்தன்மை.

வலம் - வென்றி. ஏனை யெல்லாநிலையுங் கீழ்ப்பட் டிழியுமாறு தான்மேற்பட் டுயர்தலானே அவ்வமைதி வென்றியுடையதாகும். அன்றியுந் தான் பிறிதொன்றானுங் கெடுக்கலாகாமையு முணர்க.

அவ்வமைதியல்லது புலனாகாமைபற்றி மெய்யமைதி யெனப் பட்டது.

வல்லை - விரைய. எய்தியோ னுறு மென்க.

இதனாற் புணர்ப்பின் வாய்மை வேண்டுதலு மதனாற் புலமை யெய்துதலு மதனன் அமைதியுறுதலு மென விவை முறையா னிகழ் வனவாதல் பெறப்படும்.

இவ் வமைதியே உடல்வாழ்வீடு : புலமைநுகர்ச்சி.

புலமையெய்துதலு மமைதியெய்துதற் கிடையீ டின்றாகலின் அவ்வமைதி வல்லை யுறும்.

நஎ. உணர்வி லாதா னுக்கமி லாதான்
றுணிவி லாதான் றொலையுங் கடுத்தாற்
கிம்மை மறுமையொ டின்பமு
மின்மை யாகு மெஞ்ஞான் றும்மே. 200.

உணர்வு : மெய்ந்நூலுணர்வு. ஊக்கம் : புலமையின்கண் அவாவும் உள்ளக்கிளர்ச்சியு முயற்சியுமாம்.

துணிவு : பொருள்களை மயங்கா தையந் திரிபின்றித் துணிந் துணரு முணர்வு,

தொலையும் – கெடுவான். கடுத்தாற்கு – ஐயுற வுற்றாற்கு: துணி வுணர் வில்லாதாற் கென்பதாம்.

இதனாற் புணர்ப் பெய்தினோ னாயினும் மெய்யுணர்வாகிய புலமை யில்வழிப் பயனில்லை யெனப் புலமைச்சிறப்பு நூன் மரபுபற்றி யெதிர் மறையாற் கூறி வற்புறுத்தவாறும்.

அவனுள்ளம் ஐயுறவா னமைதியின்றிக் கலங்குதலானே யவை யென்று மிலவாயின.

எஞ்ஞான்று மென்றது துணிபுணர்வு வராத பொழுதெல்லா மென்றவாறு.

கடுத்தாற் கெஞ்ஞான்று மின்மையாகுமென்க.

இன்பம் : இம்மைப்பிறப்பின்க ணிடையிடை யெய்து மைம்புல வின்பம். அவை விலங்கு, பறவை முதலியவற்றிற்கு மமைவன. உம்மை : இழிவுசிறப்பு.

நஅ. புணர்ப்பின் வினைச்செயல் போக்கி யையந்
தணப்பில் புலமையிற் றடிந்து நின்று
தற்பெற் றுடைய சான்றோற்
கெற்பெற் றுடையாற் கியாக்கில வினையே. 201

புணர்ப்பின்: இன்: மூன்றுவதன் றுணைமுதற் பொருட்டு.

புணர்ப்பான் வினைச்செயலைப் போக்கி யெனவே யிது வினைவர்க் குரிய வினைவயிற்புணர்ப்பன்று; புலவர்க்குரிய புலவயிற்புணர்ப்பென் பது பெறப்படும். அதனால் வினைவயிற் புணர்ப்புக் குரிய வினைவர் வினைதுறவாமை வேண்டுமென்றதனோடு முரண்படாமை காண்க.

அன்றி வினைசெய்யா நின்றும் பற்றின்மைபற்றித் துறக்கப்பட்ட தாகக் கூறப்பட்டதெனினு மமையும்.

ஐயம்–ஐயவுணர்வு: தன்னைத் துணிந்துணராமை.

தணப்பு – நீக்கம். நீக்க மில்லாத புலமையென்ற திடையீடின்றி நிகழ்தலின்.

தடிந்து – வெட்டி : தடிந்தென்றமையாற் புலமை வாட்படை யென்றதாயிற்று.

உய்த்துணர்வும் நுகர்ச்சியுணர்வுமென விருபாற்பட்ட புலமை யானு மையுறவுணர்வைத் துணித்து நின்றென்க. இதனாற் புலமை தான் கலக்கந்தரு மையவுணர்வு களைந் தமைதி பயக்குமா றெய்து விக்கப்பட்டது.

நின்று – துளங்காது நின்று.

தற்பெறுதல் — தன்னைத் தான் றெளிந்து நுகர்தல்.

தற்பெற்றுடையவன் கடவுள் யானென நிற்கு மாகலின் எற் பெற்றுடையா னென்றான். எனவே தற்பெற்றிலாற் கெற்பெற்றின் மையு மெய்து மென்றானு மாம். "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்றார்; பிறரும். (சிவஞான போதம். பாயிரம் 2.

சான்றோற்கு, உடையாற் கென நான்காவது தனித்தனி யடுத் தது; இரண்டாவதன் பொருண்மயக்கம். வினை யாக்கிலவென்க. யாக்கில — கட்டமாட்டாவாம்; என்றது வேள்வி வினையேயன்றி வரம்பின்றிச் செய்யு மிழிசெயலுங் கொடுவினையுமே யாயினும் மவனைப் பிணியாவென்றவாறும்.

௩௧௬. ஈண்டிதன் காறு மியம்பிய வாற்றா
னீண்டிய மருளி னெழூஉ நெஞ்சி
னின்றதன் னைய மென்றவல் விகலைப்
புலமை வாளிற் பொள்ளெனத் துணித்துப்
புலமைத் துணையெனும் புணர்ப்பிற்
றலைமை நிற்க தகவோ யெழுவே. 202

ஈண்டு—இந்நான்காவது பாவின்கண்.

ஈண்டிய — செறிந்த. மருள் — அறியாமை.

எழூஉ — உண்டாகி: வினையெச்சம். எழுந்து நெஞ்சினின்ற தன் னுடைய ஐயவுணர் வென்ற வலிய பகையைத் துணித்தென்க. துணித்து — வெட்டி.

பொள்ளென — விரைய; இடைச்சொல்.

புலமைத்தோற்றத்துக் கிடையீடாகிய வினையைப் போக்கித் துணைநிற்றலிற் புணர்ப்புப் புலமைத்துணையாகும். புணர்ப்பிலே தலை மையாக நிற்க.

தகவோய் — தகுதியுடையவனே!

எழு: போர் செய்தற்குப் புறப்படு: ஏவல். புணர்ப்பு: வினைவயிற் புணர்ப்பு.

நம்பியகவல்.
அணிக்கோணர்.
பெரும்பற்றப்புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.
நான்காவதுபால்
புலவயிற் புணர்ப்பு
முற்றும்.

ஓமுதுமெய்.
ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

ஐந்தாவது பால்.

நீத்தற்புணர்ப்பு.

க. இனைவற நின்ற வின்றுணை யெலுவ!
வினையொடு துறவு மீட்டும் புகழ்தி
யிவ்விரு புணர்ப்பினு மேற்றம் யாதுகொ
லவ்வதொன் றருடி யளியனேற்
கெவ்வமின் றாகச் செவ்வனந் துணிந்தே. 203

இனைவு – வருத்தம். எலுவ! – தோழா!

வினை : வினைவயிற்புணர்ப்பு. துறவு: வினைசெய்தலை விட்டொழித்துச் செய்யும் புணர்ப்பாகிய புலவயிற்புணர்ப்பு.

புகழ்தி: வேற்றுமை தோன்றுவா றொருங்கு புகழ்கின்றனை. இதனு லிவ் விரண்டனுள்ளு மெதனைவிட் டெதனைமேற் கொள்ளலா மென்பது துணிதல் கூடாதது பற்றி வருந்துகின்றான், வில்லி.

ஏற்றம் – மேலானது. அவ்வது - அத்தன்மையது. அருடி : கூறியருள்வாயாக. இஃதெதிர்வின்கண் வந்தது. புகழ்தி : நிகழ்வின்கண் வந்தது.

எவ்வம்–துன்பம். அளியனேற்கு–இரங்கத்தக்க வெளியேனுக்கு.

செவ்வனம் : பிறரான் மறுக்கப் படாதவாறு.

இது வில்லிவினா. மேல நம்பி செப்பு.

உ. வினையொழி பேணே வினைவயிற் புணர்ப்பெனத்
தழுவிய விரண்டும் விழுமிய வாவயின்
முன்னது தன்னினு முனிவ
பின்னது சிறந்த பெற்றிய தாமே. 204

வினையொழிபு – வினைத்துறவு. வினைத்துறவுக்கும் வினைத்துறவின்மைக்கும் பற்றுத்துறவு பொது. அஃதுள்ளத் துறவெனப்படும்.

தழுவிய வென்றதனனே அவற்று ளொன்றும் நூலோரான் விலக்கப்படுவ தன்றென்றவாறும்.

விழுமிய : முற்று. ஆவயின் - அவற்றுள்.

முன்னது : வினையொழிபு. பின்னது : வினைவயிற்புணர்ப்பு : பற்றின்றி வரைந்துகொண்டு செய்யும் வினை. இன் : உறழ்பொருவு.

ஆம் : அசை.

மேலைப் பாலுள்ளே நம்பி வில்லியை வினைசெய்க வென்றது வினைவயிற் புணர்ப்புச் செய்கவென்றவாறன்றிவினைசெய்கவென்றவா றன்றென வினைவயிற்புணர்ப்பேயொழிய வினைசெயற்க வென்று கூறித் தெளிப்ப வில்லி தான் வினைய கருத் ததுவன்றென வும் புணர்ப்பொடுநின்றேயும் வினைசெய்தல் வினைசெய்யாமையென் றிவ் விரண்டனுட் சிறந்தது தெரிந்துகொடற் கருத்தானே யங்ஙனம் வினையதெனவு மதனையினிக் கூறுக வெனவும் மேலைப்பாட்டகத்து கேட்டுக்கொண்டதனு லிங் கவ் விரண்டற்குந் தம்மிடை ஒற்றுமை மேல் வேற்றுமை கூறப்பட்டது. புணர்ப்பொடு படுவினையொடு புணர்ப்பொடுபடாவினையிடை மலையொடு மடுவிடைப்போலு முயர் விழிவுவேற்றுமை நனிபெரிதென மேலையோத்துட் கூறியது நினைக்க.

௩. விழைவொடு வெகுளி மேவ வில்லா
விழுமியோன் மன்னுந் தொழுதகு முனிவன்
றுனிபடு கவையடுந் தூயோ
னினிதினிற் றளையவிழ்ந் தின்களி யயர்மே. 205

மன்னு முனிவன் - நிலைபெற்ற முனிவன். முனிவு - துறவு. நிலைபெற்ற துறவுடையோ னென்பதாம்.

துனி - துன்பம். படு - ஆகின்ற. கவை: இன்பத்துன்பம் போலு மிரட்டை. துன்பமாகின்ற விரட்டையென்றது அவ்வை யமைதி யில்லாமையாகலின்; இனித் துன்ப முண்டாக்குங் கவை யெனினுமாம்.

அடும் - அழிக்கும். தூய்மை: உயிர்த்தூய்மையு முளத்தூய்மை யுமாம்; அவற்றை யுடையோ னென்க. தூயோன்: சுட்டுப்பெயர்.

இனிது - முயற்சியின்மை. தளை: வினைக்கட்டு. தளையவிழ்தல்: ஒருவன் றன்னைத் தான் பெறுதல்.

களியயர்தல் - உணர்வு கடந்து மகிழ்ச்சி கொண்டயர்தல்.

அயருமே யென முற்றீற்று மிசையுகரங் கெட்டது. கவை யடுதல் இருவயிற் புணர்ப்புக்கும் பொதுவாக வேண்டப்படுவது.

௪. புலமையும் புணர்ப்பு பொருவுவ வென்னுர்
முதுவாய்ப் புலவ ரதுவன் றென்ப
வவற்று ளொன்றனை யரிறப
வியற்றி னெய்துமா லிரண்டன் விளைவே. 206

ஈண்டுப் புலமையென்றது புலவயிற்புணர்ப்பினை. ஆவது நூற் பொருளாராய்ச்சியின் பொருட்டு உள்ளமுதலாய வினைப்பற்றுக் கோடுகளை வினைசெய்ய வொட்டாது வலிந்து தடுத்து நிற்கச் செய் யும் பயிற்சி. அப் பயிற்சிபொருட்டாக விளையு மெய்ந்நூற்பொரு ளாராய்ச்சித்துணிவே புலமையெனப்படுவது. இப்புலமையே யிரு வயிர்புணர்ப்புக்கு மோருதியமாவது.

வரைந்து யாப்புறுத்து மேற்கொண்ட வினையினளவே யுள்ள முதலாய வினைப்பற்றுக்கோடுகளை நீரீஇப் புறஞ்செல்லாவாறு தடுத்

துப் பயிலும் பயிற்சி வினைவயிற்புணர்ப்பெனப்படுவது. எனவே வினை செய் வாயில்களாகிய துப்பு, நெஞ்சு, மூச்சுப், பொறியென்பன வற்றைப் புடைபெயரவொட்டாது தடுத்து வினைசெய்யாமைக்கண் நிறுத்தலும் வினைசெய்தற்கணிறுத்தலு மென விவ் வேறுபாட்டாற் புணர்ப்புத் தானிருபாலதாயிற்று. இதனாற் புணர்ப்பென்பது சார்பு பற்றிக் கூறுபட்டதல்லது கூறுபடாததாய்த் தானொன்றேயாவ தென்பதூஉ மதனு லதனி னுகுஞ் சிறந்தவூதியமாகிய புலமை யிருவ யிற்புணர்ப்புக்கு மொன்றேயாயதென்பதூஉ மினிது பெறப்படும்.

ஈண்டுப் புணர்ப்பெனப் பொதுப்படக் கூறினும் புலமையெனப் புலவயிற்புணர்ப்பினை விதந்தமையிற்புணர்ப்பாவது வினைவயிற் புணர்ப்பாமாறுணரப்படும்.

பொருவுவ : தம்மு ளொப்பன.

என்னார் - என்றுகூறுதவர் : வினைப்பெயர். என்னுதவர் மகாரரவ ரென்க. மகார் - சிறுர் ; சொல்லெச்சம். "உடையார்மு னில்லார் போ" லென்னுந் திருக்குறளிற்போல.

விளைதல்இல்உணர்வு - முதிர்தலில்லாவறிவு.

முதுவாய் - பேரறிவு வாய்த்தலையுடைய.

அதுவன் றென்ப - அங்ஙன மன்றென்று கூறுவர். அன்மை ஐயத்தின்பிற்றுணியப்பட்டதன்மேலாயிற்று.

அவற்றுள் - அவ் விருசார்ப் புணர்ப்பினுள்ளும். யாதாயினு மொன்றனை. அரில்தப - மயக்கமின்றி; மயக்கங்கெடவெனினுமாம்.

யாதாயினு மொன்றனைச் செயினும் விளையும் பய னென்றே யென்பதாம். அப்பயன் புலமையும் வீடுபேறும்.

அவற்றுள் யாது மியற்றலாமாயினும் மக்க ளவரவர் பிறப் பியல்புக் கேற்ப வினை செய்தலும் ஒழிதலு மமைந்துளவாக லானு மவ்வியல்பிற் றிரிதல் யார்க்கு மொல்லாமையானும் வினைவாணர் புலவாணராதலும் புலவாணர் வினைவாணராதலுங் கூடாமைபற்றி வினைவாணர்க்கு வினைவயிற்புணர்ப்பும் புலவாணர்க் குப் புலவயிற்புணர்ப்புமே புலவராற் பணிக்கப்பட்டுள்ளன. அதனல் வினைவாணர் புலவாணர்க்குரிய புலவயிற்புணர்ப்பினை மேற்கோடலும் புலவாணர் வினைவாணர்க்குரிய வினைவயிற்புணர்ப்பினை மேற்கோட லும் பெரும்பான்மையுங் கடைபோகா. அரிதிற் சிறுபான்மை கடை போதலு முண்டு. இதுகருதியே நம்பிவில்லியை நீ வினைவயிற் புணர்ப்பே செய்தல்வேண்டும்; ஏனைவினையொழிபுணர்ப்புச் செய்தல் கூடாதென வற்புறுத்துதலை இந்நூன்முழுதினு முணரலாகும்.

வினைவராற் செயற்பாலதும் புலவரான் விடற்பாலதுமாகிய வினை யாவன : ஊ ணுடை யுறையுள்சுற்றம் நட் பிரவலர் புலவர்கடவுளர் பொருட்டுச் செய்யுஞ் செயல்களாம். வினை துறந்த புலவர் தமக்கு வேண்டுவனவற்றை வினைவர்பா லிரந்து பெறுதலு மவர் தாமே கொடுப்பக் கோடலும் அவ்விரண்டுமின்றிக் கிடைத்தனகொண் டமைந்து வாழுதலுந் தம் புணர்ப்பினாற்றலாற் பிறிதுயாதும் வேண் டாமே வாழ்தலு மேற்கொள்ப.

ரு. புலவயிற் புணர்ப்பிற் புகுமிடன் யாதது
வினைவயிற் புணர்ப்பினு மேவுப வதற்கொண்
டேண்பா லிரண்டுமொன் றென்று
காண்பார் காண்பார் காணார் பிறரே. 207

பெறும் பயன் புகு மிடனெனப்பட்டது. மேவுப வென்பதற் கெழுவாய் சொல்லெச்சம். மேவுப - பொருந்துவர். அதற்கொண்டு - அதனால். ஏண் - நிலையுடைமை. பால் - கூறுபாடு. இருவயிற்புணர்ப் பாளரும் பாரிடை யெஞ்ஞான்று முளராய் வருதலின் அவ்விரண்டும் நிலையுடைய கூறுபா டாமாறுகாண்க.

காண்பார் காண்பாரென்றது காண்போர் கண்ணுடைய ரெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவரென்பதாம்; குருடரல்ல ரென்றவாறு. காணார் பிறரென்றது அங்ஙனங் காண்கலாதார் கண்ணுடையாரிற் பிறரெனவே குருடரென்பதாம்.

இப்பாட்டு மேலதனையே வலியுறுத்திற்று.

சு. புணர்ப்பி னன்றித் துறவு பூணாத
விறப்ப வரிதரோ வெழிற்புணர்ப் பியன்று
புலமையிற் பெரும்பெயர்ப் பொருண்மை
நலமுற விரைய நண்ணுவ னெளிதே. 208

புணர்ப்பு: வினைவயிற்புணர்ப்பு. துறவு: பற்றுவிடுதல்; வினை விடுதலன்று. இறப்ப - மிக. அரிது: துன்புற்று முயன்று நெடு நாட்பின் பெறற்பாலது. அரோ: அசை. எழில் - உயர்வு.

புலமை - மெய்யுணர்வு. பெரும்பெயர்ப்பொருண்மை: பெய ரொட்டு. ஓம், உது, மெய் என்னும் பெரும் பெயர்ச்சொற் கிளவியின் பொருண்மை யெனினுமாம்.

நலமுற - நன்றாக: துணிவாகவென்பதாம்.

இப்பாட்டுப் புலவயிற்புணர்ப்பினும் வினைவயிற்புணர்ப்புச் சிறப் புடைய தென்ற சிறப்பாமாறு கூறிற்று. சிறப்பு: பெரும்பெயர்ப் பொருண்மையை விரைய வெளிதி னெய்துதலாம். எனவேயேனைப் புலவர்க்குரிய புலவயிற்புணர்ப்பானே அப்பொருளை மெல்ல வரிதி னெய்துத லென்பது பெறப்படும்.

எ. நனிகடுந் தூய்தாய் நன்கனம் வெலப்பட்
டெனையுயி ருள்ளமொ டனையனைப் பண்பி
னினிதிய லுள்ளமு மிகலடு புலனு
மொன்றிய புணர்ப்பின னன்றியல் வினையோ
டிசைந்தக் கடைத்து மிறையும்
பசைந்தின் றவனைப் பயின்ற வினையே. 209

நனிகடு: ஒருபொருட்பன்மொழி. வெலப்பட்டு - ஆர்வ முதலிய வெழாதவாறு அடக்கப்பட்டு. வெலப்பட்டியலு முள்ள மென வியைக்க. தூய்தா யியலு முள்ள மென்க.

எனை யுயிருள்ளமொடு - எல்லாவுயிர்களி னுள்ளங்களோடும் : முற்றும்மை தொக்கது.

அனையனைப்பண்பின் - அவ்வ வுள்ளத் தியல்புகளின்கண்நின்று.

இனிதியல் - வருத்தமின்றி நடக்கின்ற.

இகல் - பகைமை. அடு - கெடுக்கப்பட்ட. புலன் - பொறி.

உள்ளமும் புலனு மொன்றிய புணர்ப்பின னென்க. நன்மையாகிய வியல்பினையுடைய வினை.

இறையும் - சிறிதும். பசைந்தின்று - ஒட்டாது. வினை யிறையு மவனைப் பசைந்தின்றென்க.

அ. பொருட்பா டுணர்ந்த புலமைப் புணரி
விழித்தல் கேட்டன் மெய்யுறன் மோத்த
லுண்டல் சொல்லுத லுறங்குத லுயிர்த்த
லென்ப செய்வுழி யானிவை வறிது
செய்தலு மிலெனெனத் தேறி
வைகலும் வைகும் வாளா வுவந்தே. 210

பொருட்பாடுஉணர்ந்த - பொருளுள்ளவாறுணர்ந்த.

புலமை - மெய்யுணர்வு. புணரி - புணர்ப்பாளன். மெய்யுறல் - தொடுதல். உயிர்த்தல் - மூச்சுவிட்டுவாங்குதல். என்ப - என்பன.

இங்ஙன முள்ளஞ்செய்தற்க ணுயிர்செய்யாமையைக் காண்டலாகிய புலமைகூடுதல் வினைவயிற்புணர்ப்புக்கு மொக்குமென்பது கூறியவாறாயிற்று.

புணரி யான் செய்தலுமிலெ னெனத் தேறி வைகலும் உவந்து வாளா வைகும். ஆல் : அசை.

தேறி : கேட் டாராய்ந்து தெளிந்து. வைகலும் - நாடோறும். வைகும - தங்குவான்.

கூ. ஏன்று வாளா சான்று வதியியர்
மான்று புலம்பினு மாழ்க லொழியினுங்
கொடுக்கின் றுழியுங் கொள்கின் றுழியு
மிமைக்கின் றுழியும் விழிக்கின் றுழியும்
புலந்தொறும் பொறிதாம் புரிந்து
வழங்குறு மாலோ மயங்கலென் னெனவே. 211

ஏன்று : கவலாது களியாது எற்று. வாளா - செயலின்றியே. சான்று – கரி. சான்றாகப் பொதுவிருத்தல்வேண்டு மென்க. வதியியர் - தங்குக : வியங்கோள்.

மான்று - மயங்கி. மாழ்கல் - மயங்கல். புரிந்து - பொருந்தி. வழங்குறும் - வழங்குகின்றன.

மயங்கல் : செயலுடைய பிறவற்றின் செயலைச் செயலிலாத தனது செய லென்று மருளுதல்.

இங்ஙன மயங்குத லென்ன பேதமையென்று பிறவற்றுச் செய லெல்லாவற்றையு மேற்றுச் சான்று வாளா வதிக வென்பது.

ஆலும் ஓவுமசை : பிறிதவணிலையல்.

க0. இயங்குந வியங்க விடம்பட நிலவும்
பெரும்பொருண் மாட்டுப் பிணிவினை யேற்றி
விழைவில னாகி வினைபுரி வோன்றன்
வினையொடு தீண்டுதல் வெறிது
நனைமலர் முளரி யிலைநீர் நாடவே. 212

இயங்குந : புடைபெயர்வனவாகியசெத்தை : உணர்வில் பொருள். உணர்வுடைப்பொருட்குப் புடைபெயர்ச்சி யின்று. புடைபெயர்வனவற்றுக்குப் புடைபெயராத உயிர்ப்பெரும் பொருள் இடமாக நிலவுவதாம். எனவே யவ் விட மில்வழிப் புடைபெயர்வன புடைபெயர்தல் செல்லாமை காண்க.

வினைப்பிணி யென மாறுக.

பெரும்பொருண்மாட்டுப் பிணிவினை யேற்றுதலாவது : வினைக் கின்றியமையாதவெளி பெரும்பொருள், அதனினியலும்வினைக்கு யான் செய்பவனாதல் செல்லாதெனத் துணிதல்.

விழையினும் விழையாதொழியினும் நிகழும் வினை நிகழாதொழியா. நிகழாதன வொருஞான்று நிகழற்பால வல்ல. அதனா லவை தடுக்கற்பாலவுமல்ல; மாற்றற்பாலவுமல்ல; அழிக்கற்பாலவு மல்ல; ஆக்கற்பாலவுமல்ல வென மெய்ம்மை யுணர்ந்தான் தான் விழைவு கோடல் பயனின்று; அறியாமையினாவது எனக்கோடலின் விழை விலாமை யுளதாம்.

வெறிது - இல்லதாம்.

நனை - குளிர்ச்சி; தேனா னனைந்த வென்றுமாம்; அரும்புமலரு மாம். முளரி - தாமரை. முளரி யிலைநீர்போல் வினைபுரிவோன்றன் வினையொடு தீண்டுதல் வெறிதெனக்கூட்டுக.

நாட - போல : ஒப்பிடைச்சொல்.

செயலொடு கூடியுஞ் செயலொ டியைபின்மை ஒப்புமையானு மெய்ப்புத்தவாறுயிற்று.

கக. உடம்பொடு நெஞ்ச முள்ளம் வாயில்
கடம்படு மளவிற் கையகல் பற்றொடு
புணரியர் வெறுவினை புரிவார்
வணரிய செயிர்த்துகண் மருவாப் பொருட்டே. 213

உள்ளம் : ஈண்டுத் துப்பு.

கடம்படுமளவில் - கடமையாகுமளவில். தமக்கு வேண்டாமே யென்பதாம்.

கையகல்பற்று - நீங்கியபற்று. ஆவது : பற்றில்லாமை.

வெறுவினை - தமக்குப் பயனில்லாத வினை.

வணரிய - சூழ்ந்த. செயிர் - குற்றம். ஆவன : மயக்கம், விழைவு, வெகுளி, வேட்கையென்பன. ஈண்டவையிற்றின்மரூஉ வென்க.

வினைசெய்தலாற் பயனில்லை யாயினும் நீங்கிய செயிராகிய மாசு சூழ்ந்து நிற்றலின் அவற்றின்மரூஉ மீளவு மெழாமைப் பாதுகாத்தலும் எழின் விரைய வழித்தலு முடைமையிற் புலமைக்குத் துணை நிற்பதாகலானுஞ் செயற்பாலதென வலியுறுத்தவாறாயிற்று. இதுவும் புலவர்க்கன்று; வினைவர்க்கே யெனக் கொள்க.

புணரியர் துகண்மருவாப்பொருட்டுக் கையகல்பற்றெடு உடம்பு முதலாயின கடம்படுமளவில் வெறுவினை புரிவா ரென வியைக்க.

கஉ. புணர்ப்பு வினைவன் புரிவினை யூதியந்
தணப்ப வமைதி சால மன்னுமால்
விழைவு பொருட்டா விளைவு வேட்டு
வினையிற் பிணிக்கொளன் மேவி
யினையு மாலரோ வேனோன் றனே. 214

தணப்ப : தணந்து : எச்சத்திரிபு.

சால - நிரம்ப. மன்னும் - நிலைபெறும். ஆல் : அசை. விளைவு - ஊதியம். வேட்டு - அவாவி.

பிணிக்கொளல் - கட்டுண்ணல்.

இனையும் - வருந்தும்.

ஆலும் அரோவும் அசை.

ஏனோன் : புணர்ப்பு வினைவ னல்லாத வினைவன்.

இங்ஙனம் வேற்றுமை காட்டி வினைவயிற்புணர்ப்பின் சிறப்பு விளக்கியவாறு காண்க.

கங. இனிதுதற் கிழவ னென்பான் றன்னு
ளெனைவினை யாயினு நினைவினிற் றுறவா
வொன்பான் புழையெயி லுள்ளகத்
தின்பா னியற்றலு மேவலு மிலனே. 215

இனிது - இடரின்றி. தற்கிழவன் - தனக்குத் தானுரியவன். என்றது தன்னின் வேறாய வுள்ள முதலியவற்றிற் றான் வேறாய் நிற்ற லுணர்ந்து அவற்றின் வழிப்படாது தன்கண்ணே நிற்பவ னென்றவாறு. இனிது துறந்தென்க. தற்கிழவன் - புணரி. எனை வினை யாயினும் : எல்லாவினையு மென்பதாம்.

துறவா - துறந்து. நினைவினிற் றுறந்தெனவே யுடம்பிற் றுறவாமை பெறப்படும்.

எயில் - கோட்டைமனை. என்றது உடம்பை.

இன்பான் : ஆன் : ஒடுப்பொருட்டு. இன்போடிருந்தென வொருசொல் வருவிக்க.

செய்தலுஞ் செய்வித்தலு மில்லென்பது.

இதனாலவன் வினைசெய்யினும் எய்ப்புக்கோடற் கிடனின் றென்பதாம்.

கச. வினைமுத லாதல் வினையோ டேனை
வினைவிழை வென்றிவை மேலைக கடவுண்
மன்னுயிர்க் குளவா மண்ணல
னென்னவு மியல்பி னியல்வன தாமே. 216

வினைமுதலாதல் : வினைசெய்பவனாதல்.

மேலை : படைக்குமுன்னின்.

உளவாக மண்ணலன் : கடைக்குறை.

மண்ணலன் - செய்திலன். மண்ணல் - செய்தல்.

எல்லாந் தாமே இயல்பான்இயல்வன வென்க.

இதனாற் கடவுள் உலகந்தோற்றி நிறீஇ யொடுக்குமுத்தொழிலு டையா னென்ப துண்மை யன்று. குறிப்புச்சொல்லெனக் கொண்டு குறிப்புயத்துணர்தல் வேண்டும்.

கரு. இருளின் மூய தெருளின் வழிய
மருளு மன்னோ மன்னுயி ரளிய
வருளி னுடல்கொ ளான்றோ னவைதா
நல்ல வெனவு நயவா
னல்ல வெனவு மளியகன் றிலனே. 217

இருள் - அறியாமைக்கு வாயிலா யெதிரு மியற்கை மூதல். மூய- மறைக்கப்பட்ட. தெருள் - உணர்வு; தெருளின் வழிய - தெரு ளின் வழிப்பட்டனவாய்.

மருளும் - மயங்கும். அன்னோ : இரங்கற் குறிப்பிடைசசொல். அளிய - இரங்கத்தக்கன.

திருவருளானே யுடல்கொண்ட நிறைந்தோன் : கடவுள்.

அவைதாம் ; அம்மன்னுயிர்தாம்.

நயவான் - மகிழான். நல்ல வல்ல வெனவு மென்க. அளி - அருள். அருணீங்கானென்க. உம்மை : எண்ணும்மை.

இங்ஙன மிவ்விருபாட்டானுங் கூறியவாறே எல்லாந் தாமே பொருட்டு மாக்கமுமாய்த் தொடர்புற்றியல்பா னிகழ்வன வென வுணரினு மொருவர்க்குத் தம்வினைக்கண்ணும் வினையூதியத்துக்கண் ணும் பற்றுண்டாகாது கெடுகற் கிடனாகு மென்பது நம்பி திருவுளம்.

இவ்விருபாட்டினும் பெற்ற குறிப்புக் கணியன்பூங்குன்றனர் பாட்டுள்ளும் வருமாறு காண்க. அதுவருமாறு :

"யாது மூரே யாவிருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே. புறம். 192

கசு. அருளின் வரூஉந் தெருளி னிவனை
வெருளுய்க் கிற்கு மருளற் றூர்க்குச்
செழுவள ஞாயிறு சிவண
விழுமிய வப்பால் விளக்குமத் தெருளே. 218

அருள் : புணரி தான் மன்னுயிர்மேற் கொள்ளு மருளு மிறைவனும் புலவருந் தன் மேற்கொள்ளுந் திருவருளுமாம்.

அருளானல்லது தெருளுருமை யொருதலை. தெருள் : தன்னையுந் தலைவனையுங் காணு மெய்யுணர்வு. மருள் - முன்னிலை யுணர்வாகிய சுட்டுணர்வு. வெருள் - அச்சம்.

தெருளினுன் இப்பிறவி வாழ்வுகளாகிய அஞ்சுதக்கவற்றுக்கட் கொண்டு செலுத்தவல்ல வென்க.

சிவண - போல.

அப்பால் : உணர்விழந்துணர்வது முணரப்படுவதுமாகிய தான்.

மருளற்றூர்க்கு அத்தெருள் ஞாயிறு சிவண அப்பாலை விளக்கு மென்க. விளக்குதல் - உண்மையாக்குதல் : புலனுக்குதல்.

ஊசற் கட்டில் கயிறற்று நிலத்து வீழ்ந்து செயலற்றுக் கிடப் பதுபோல உயிருணர்வு மருளற்று லப்பாலை நோக்கி மீண்டு செயலற் றுக் கிடக்கு மென்பதுணர்க.

புணரி தான் தெருளினுனே தனக் கெவ்வாற்றானுங் கேடின் மையு மல்லனவற்றுக் கெல்லா மெவ்வாற்றானுங் கேடுண்மையுந் துணிதலான் அவன்கண் அச்சமின்மையு மங்ஙனந் தெருளமாட்டா மருளன்கணெஞ்ஞான்று மச்சமுண்மையும் பெறப்படும்.

கஎ. அதுவே படர்க்கையி னையமற் றுணர்ந்துழி
யதுவே தானென வந்நிலை மரீஇ
யதுவே தானின் றமையா னாகித்
தெருளிற் றுடைத்த செயிர்த்துக ளுடையோ
னிருளின் மீளா னினிமற்
றிருளி னப்பா லெற்காண் டலினே. 219

அது : அப்பாலைப்பாழ். அதனைப் படர்க்கையின்வைத் துண் டென வுணர்ந்த புணரிப்புலவன்றா னுண்டென வுணர்ந்த வம் மூதன் மேலை முழுப்பொருள் தான் உணர்வதோ? உணரப்படுவதோ? வெனவாராய்ந்து அஃதுணர்வதே ; உணரப்படுவ தன்றெனத் துணிந் தவழி அங்ஙனமாயின் அஃ தென்னு னுணரப்படுமா றெங்ஙன மென வைய மெழ வங்ஙன முணர்ந்த யானே யென்னைப் பிறிதாக வைத்

துணர்ந்த தல்லது பிறிதில்லை யென்பது நோக்கவே அன்ன அப்பா லைப்பாழ்ம் பெருஞ்சார்பே யானென்னு நுகர்வுக்காட்சி தலைப்பட்டு அதுவே தா னென வந் நிலைபேறு மருவு மென வுணர்க.

அதுதான் ஏனை யெல்லாப்பொருளு மொருங்குடன் றெகினு மொருமொய்த்துகள் போலுஞ் சிறியதாமா றத்துணைப்பெரிதாகலின் அதனைமருவினன் அதனையன் றியறியானவன்.

இருள் : மயக்கமும், பிறப்பு, முலகமும், உடம்புமென்க.

எல் - ஒளி. என்றது அப்பெரும்பொருள்தானதலை.

எற்காண்டலானே யினி யிருளின் மீளா னென்க. இருளின் : இன் : ஏழாவது.

கஅ. கல்வியும் பணிவுங் காண்டகக் கவினிய
செல்வனொ டானிரை சிறுகண் யானை
நாய்நா யாடியென் றேய்வா ரிவரு
ளொருதா னுயிரென வுள்ளு
மொருநேர்க் காட்சிய னொண்புல வன்னே. 220

காண்பாரை மகிழ்விப்பன வாதலிற் கல்வியும் பணிவுங் காணத் தகுவவாம்.

உலகத்தா ரெல்லாந் தன்னையவாவச் செய்தலிற் கவினிய செல்வ னாகும். கற்றோன் இன்பத்தாற் குறையற்றோ னாகலிற் செல்வனெனப் படும்.

நாயாடி - நாயையட்டுண்போன் ; திரிசொல்.

ஏய்வார் - பொருந்துவார் : அவ்வவூழ்வினையான் அமைவார்.

உயர்திணையு மஃறிணையு மெண்ணித் தலைமைபற்றி யுயர்திணை யான் முடிந்தவாறு காண்க. ஒருதானுயிர் - தானொன்றே யாகிய பொதுப் பேருயிர். அதுவே தனித்தனிச் சிற்றுயிராகச் சார்புபற்றித் தோன்றுமருணீங்குதலானே அவையெல்லாந் தம்முள் வேறல்ல வாயின.

ஒள்புலவன் : கற்று நிரம்பியவன்.

ஏனையோன் புலவனெனச் சிறப்பித்துச் சொல்லப்படானென்க ; மெய்யுணராமையின்.

நேர்க்காட்சி - ஒத்த பொதுப்பார்வை.

இதனால் எல்லாவுயிர்களையும் வேறுவேறுக்காண்டல் சிறப்பில் லாத பொதுமக்களின் சிறப்பில்லாத பருவுணர்வெனவும் அங்ஙன மன்றி யொன்றாகக்காண்டல் புலவற்குச் சிறந்த நுண்ணுணர் வெனவு மதனா லதுவே கற்றோரொடு மற்றோரிடை யுள்ள வேற்றுமை யெனவு முணரப்படும்.

உயிர்களின் பொதுத்தன்மையாகிய ஒருமையையுணருமுணர்வு பெரும்பொரு ளுணர்வென்பது கண்டுகொள்க.

கக௯. படைப்புயி ரொப்புமைப் பாற்படு நெஞ்சம்
விடைப்பற யாவரான் வெலப்படு மிம்பர்
ரவர துள்ள மப்பெரும் பெயர்வயி
னுளர்த லன்றி யூன்றுமாற்
றுளரி லதுநேர் தோன்றுத லானே. 221

படைப்பாகிய மன்னுயிர்களின் பொதுத்தன்மை யொருமைப் பாற்பட்டு நிலைபெற்ற நெஞ்சென்க.

விடைப்பு – முனைப்பு: பற்று. வெலப்படும்: அடக்கப்பட்டு நிறுத்தப்படும்.

இம்பர் – இவ்வுலகு.

பெரும் பெயர் – பெரும்பொருள்.

உளர்தல் – அசைதல். ஊன்றும் – நிலைபெற நிற்கும் ஆல்: அசை.

துளர் – களையப்படு மிடையூறு. "துளர்படு துடவை" என்பத னுணரப்படும்.

அது – அப்பெரும் பொருள்.

நேர் தோன்றுதலான் – ஒரு பொதுவாகப் புலப்படுதலான்.

இதனுன் மேலைப்பாட்டிற் கூறியமன்னுயிர்ப் பொதுத்தன்மைக் காட்சியானே தற்காட்சியாகிய பெரும்பெயர்க்காட்சி யுணர்வும் ஒப்புமைபற்றி யுண்டாகுமென வப்புலமை யெய்துதற் கொரு சூழ்ச்சி யுணர்த்தியவாறு காண்க.

மன்னுயிர்ப் பொதுமையும் பெரும்பொருளுமாமெனச் சார்பு நோக்கியும் நோக்காது மொன்றிரண்டாகக் கொள்ளப்படுத லல்லது பொருள்வேறள்மையின் அவை தம்மு ளொப்பனவாய் அவற்று ளொன்று நினைத்தொன் றுணரப்படுத லெளிதாயிற்று.

உ௦. பெருஞ்சார் புணர்ந்தோன் பேதமை யின்றிப்
பெருஞ்சார் பாங்கட் பிழையா தூன்ற
நிலைப்படு முள்ளந் தலைப்படு மாற்றுன்
விருப்ப மெய்தின் மிளிர்தலும்
வெறுப்ப தெய்தின் விளிதலு மிலனே, 222

பெருஞ்சார்பு – பெரும்பொருள்.

உணர்ந்தோன்: அப்பொருளாமாறு மது தானுதலு மறிந்தோ னென்பது.

பேதமை: தன்னைத் தா னுணராமை.

ஆங்கண்: ஏழாவதன் சொல்.

பெருஞ்சார்பின்க ணிலைப்படு முள்ளமென்றது உள்ளத்தை அசையாது நிறுத்திப் பெருஞ்சார்பினை யுணர்தலை மாற்றிக் கூறியவாறு மென்க. பிறுண்டு மிங்ஙன முய்த்துணர்க. இங்ஙன முய்த்துணராக் காற் றீண்டற்பால தல்லாத நுண்பெரும் பொருண்மாட்டுப் பருப் பொருளாகிய வுள்ளந் தீண்டி யூன்றிநிற்கு மெனப்பட்டு வழுவா மென்பது.

மிளிர்தல் : ஈண்டு மகிழ்தல். ஆக்கம் பொருட்டின் மேற்றாயிற்று. விளிதல் — வெகுளுதல் : கவலுதல்.

பெரும்பொருளுணர்வுக் கின்றியமையாத விழைவின்மை வெகுளியின்மைகள் அவ்வுணர் வெய்தியபின் னிலைபெற நிற்பனவாகு மென்பது இப்பாட்டு நுதலியபொருளாம்.

உக. அயற்பொரு ளியைபி னவாஅ வின்றித்
தனக்குள தாகுந் தன்னயந் துய்க்கும்
பெருஞ்சார் பொன்றிய பெரியோன்
வரும்பே ரின்ப மாயா னாகுமே. 223

அயற்பொருள் — தன்னின் வேறாகிய புறப்பொருள். தன்னயம் — தன்னின்பம் : தனியுயிரின்பம். இயைபு : உணர்தல்.

அயற்பொருளை யானெனவு மெனதெனவும் பிறிதெனவு முணர்த லின்கண் வேட்கையின்றி யென்க.

பெருஞ்சார் பொன்றிய : பெருஞ்சார்புந் தானுந் தனித்தனி யன்றி யொன்றா யமைந்த.

வரும் : மேன்மேற் றெவிட்டாத.

தன்னயந் துய்க்கும் பெரியோன் மாயாத பேரின்பம் பெற்றவ னாயினா னெனவே தன்னய மழிவில்லாததெனத் தன்னைத்தானொரு வன் பெற்றபின் அவற்குப் பிறவற்றுக்கணவாவில்லாமைக்கு வாயி லாவ திது வென்ப துணர்த்துத னுதலிற்றிப் பாட்டு.

இதனால் அத்தகைய தெவிட்டாத பேரின்பந் துய்த்தற்பொருட்டுப் புணர்ப்பொடு நின்று புலமையெய்துதல் வேண்டப்படு மென்பதூஉம் பெற்றாம்.

உஉ. அயற்பொரு ளியைபி னாகிய நுகர்ச்சி
துயர்ப்பிறப் பிடமெனச் சொலப்படு மதனா
லான்றவ ரவற்றிடை யயரார்
தோன்றலுந் தொலைவு முடையவா லவையே. 224

இயைபு — புணர்ச்சி : தனியுயிர்க் கயற்பொருளொடு புணர்த லாவ தவற்றையுணர்தலேயாம். அதுவே மயக்கத்தாற் புணர்ச்சி போலுமாதலிற் புணர்ச்சியெனப்படும். அற்றன்றாயிற் றனியுயிர்க் கயற்பொருளொடு மெய்யுற்று நிற்றற் குரிய வொப்புமை கொள்ளப் பட் டுயிர்ப்பொரு ளுயிரல்பொருளாமா றுணர்க. அயற் பொருளின் மறுதலையாகிய தன்னைத் தானோக்கி மீளுமாறே மயக்கம் விழைவு, வெகுளி, வேட்கை யென்னுங் குற்றங்களை விடுதலாகிய பிரிவெனப் படும்.

நுகர்ச்சி துயர்க்குப் பிறப்பிடமெனச் சொலப்படுமென்க. ஆன் றவர் — அறிவு நிரம்பியவர்.

அவை தோற்றமு மழிவு முடைய வென்றது இன்னா நுகரப் படாமையாற் றுன்பமென்றாத லின்பமென்றாத லுணரப்படாதவை யாயினு மவையெல்லாந் துன்பமேயெனத் துணிதற்குரிய வடையாள முணர்த்தியவாறாம்.

இதனு லவற்றிடை விழைவுவெகுளிப்பற் றெழாமைக்குப் புலவன்றுனே அளவு மழிவு மில்லா வுயர்வறவுயர்ந்த வின்பமாதலன் றியு மயற்பொரு ளொருத்லேயாகத் துன்பந்தலேத்தலேப் பயத்த லுடைமையும் வாயிலா மென்பது பெறப்பட்டது.

இதன்க ணுகர்ச்சி துயர்ப்பிறப்பிடமென்றதனுன் அவை யிற்றிடை யின்பநுகர்ச்சி கொள்வார் துன்பநுகர்ச்சியுங்கொள்ளுதல் விலக்கப்படாதென்பதூஉ மதனுல் இன்பநுகர்ச்சியு முடனீத்த லல்லது வழி பிறிதின் றென்பதூஉம் பெறப்படும்.

இன்பமல்லாதவற்றையுந் துன்பம் பயப்பவற்றையு மின்பமெனவு மின்பம்பயக்குமெனவுமயங்குத லன்றியு மெல்லாந் துன்பமே யாயவற்றுட் சிலவற்றை யின்பமெனப் பிரித்துவைத்துப் பற்றுச் செய்தலு மீண்டயர்தலெனக் கொள்ளப்படும்.

உங. அரும்பெறல் யாக்கை பெரும்பிறி தாகுமு
னரும்பிய காமமொ டழிசினம் வெதுப்ப
விதுப்புறு நெஞ்சினே நுதுப்ப வல்லிற்
புகழ்க்குரி யவனே புணரி
நயக்குறு மின்ப நம்பியு மவனே. 225

பெறற்கரிய யாக்கை யென்றது மக்கள்யாக்கையை: இவ் யாக்கை யில்வழி வீடுபேற்றை யெய்துதற் கின்றியமையாத புணர்ப்பும் புலமையு மெய்தலாகாது. அதனுனும் புற் பூடு முதலாய பிறப்புப் பல வற்றினும் வினைசெய்துணர்வுமிகாநிற்ப நெடும் பொழுதைச்சேட்சியு முழற்சியு மாயவழி யன்றி யெய்தற்கருமை யானு மக்கள் யாக்கை அரும்பெறல்யாக்கையென்ப. இவ் யாக்கைக்குச் சிறந்தபய னிதுவெனற திப் பாட்டு. பெரும் பிறி தாதல் - சாதல்.

அரும்பிய : சிறுச்சிறிதாகத் தோன்றிப் பெருகி முதிர்ந்த.

காமமில்லார்கட் சினமு முண்டாகாமையிற் சினத்திற்கு முதல் காமமாகும்.

அழிசினம் - மிக்கவெகுளி; அறிவு மதன் வழியாக்கமு மெல்லா முறையே கெடுதற்கு வாயிலாதல்பற்றி யழிகினமெனப் பட்ட தெனினுமாம். இச்செஞ்ஞாயிறு போலும் விதப்பினைக் காமத்துக்குங் கூட்டிக் கொள்க.

கொளுந்த - பற்றியெரிய; எனவே அவையிரண்டு மொருசா ரிருநெருப் பென்றதாயிற்று; அணிபற்றியன்று.

விதுப்புறு நெஞ்சு - நடுங்குகின்ற நெஞ்சு. இதனுல் அவை யிற்றுன் அமைதி யுண்டாகாமை விளக்கியவாறும்.

நுதுப்ப - அவிக்க, வல்லின் - வல்லனுகின், "உணர்த்த வல்லின்" என்பது தொல்காப்பியன். (சொல். உரிச்சொல். 95).

உரிய அவனேயெனச் "சிறியிலே" யிற்போல அகரந் தொகுத்த லாயிற்று.

நயத்தல் : விழைந்துநுகரப்படுதல்.

அவன் : அங்ஙனம் நுதுப்பவல்லோன்.

உச. அகனய மகமகிழ் வகனெளி யென்ற
தகவுறு முனிவன் றலைச்சிறந் தொளிருந்
தமிழ்ப்பெருஞ் சார்பு தானெனச்
சிமிழ்ப்பரு மதற்படு சிறப்புறும் வல்லே. 226

அகனயம் : தன்னுட்டா னின்பமாதல். அகமகிழ்வு : தன்னுட்டான் மகிழ்தல் : அகனெலி : தன்னுட் டா னுணரப்படுதல்.

தகவுஉறு : தகுதி மூன்றனையு முற்ற. முனிவன் - புணரி.

தலைச்சிறந்து : புணரிகளுள்ளே மேலாக வுயர்ந்து.

தலைச்சிறந்துறுமெனக் கூட்டுக.

தமிழ் - இனிமை.

பெருஞ்சார்பு தானே யாதலான் அதற்குரிய தளையின்மை முதலாயின தன்னுடையவாயின வென்க.

சிமிழ்ப்பு - கட்டு. அரு - இல்லாத.

அதற்படு - அதற்குக்கூறுபட்ட : என்றது உரித்தாய்ச் சிறந்த வென்பதாம் : நான்கன்வேற்றமைக்குத் தொல்காப்பியன் கூறு மதற்படு பொருட்கிளவி யீண்டு நினைக்கற்பாலது.

சிறப்பு - வீடுபேறு. "சிறப்பீனுஞ் செல்வமுமீனும்" எனவும் (அறத்துப்பால். அறன்வலியுறுத்தல்,க) "பாங்கருஞ்சிறப்" பெனவும் (புறத்திணையுயல் 23.) முறையே முப்பாலுள்ளுந் தொல்காப்பியனுள்ளும் வருமாறுணர்க.

உரு. பிணைய விரியப் பிணித்த நெஞ்சினே
டணைய வுயிரு மினிதுறல் காமுறு
மந்தணர் தாமே யருமை சான்ற
நந்தலில் வீடு நண்ணிச்
சிந்திய துகளிற் றெளிகுவர் கடிதே. 227

பிணையல் : இன்பத்துன்பமுதலிய விரட்டை. இரிய - அஞ்சிக் காணொழிய. பிணித்த - புறஞ்செல்லாமலு மசையாமலு மடக்கி நிறுத்தப்பட்ட.

இனிதுறல் - இனியநலமுறுதல்.

அந்தணர் - அழகிய தண்ணளி யுடைய புலவர்.

நந்தல் - கெடுதல்.

சிந்திய-வீசிச் சிதறிப் போகடப்பட்ட. கடிது-விரைந்து: குறிப்பு வினையெச்சம்.

உசா. காமமுஞ் செற்றமுங் கடிந்த காட்சியி
னமற வொருங்கிய நல்லுளஞ் சிறந்த
நீத்தார்க் கம்ம நிலத்துச்
சேய்த்தன் றென்ப செம்பொருள் வீடே. 228

கடிந்த - விலக்கிய. காட்சி - மெய்யுணர்வு.

நாம் - அச்சம் : உரிச்சொல். ஒருங்கிய-ஒன்றுயொடுங்கிநின்ற. நீத்தார் - முனிவர் : புணரியர்.

செம்பொருட் குரிய வீடு இந்நிலத்தே யெய்தற்கு நெடுங்கால முடைத்தன்று ; விரைந்தெய்து மென்றவாறு.

செம்பொருட் குரிய வீடாவது : தானொழிய வேறி யாதொன்று மில்லாமை.

அம்மவும் என்பவு மசை. அம்ம உரையசையுமாம்.

உள. புறப்பொருட் புணர்ச்சி புல்ல லோம்பி
நுதற்கொடி நாப்பண் விழித்துணை செரீஇ
யெருக்குடர் கழீஇ யிழிகாற் றின்றி
மூக்கினுள் வரவு போக்குற லானு
வுயிர்ப்பினை டைம்புல னுள்ளஞ் செறுத்து
விருப்பு வெறுப்பு வெரூஉ வீசிப்
புலங்கொண் டயரும் புலவன்
வலம்பெறு வீடுறு நலஞ்சிறந் தோனே. 229-230

புல்லலோம்பி-தீண்டுதலைப் பாதுகாத்து ; தீண்டாமலென்பதாம்.

நுதற்கொடி-புருவவொழுங்கு.

நாப்பண் - நடு. விழித்துணை - கண்விழி இரண்டும். செரீஇ - செருகி.

இழிகாற்று-மூச்சன் மூச்சு.

உயிர்ப்பு-மூச்சுக்காற்று. செறுத்து : இயங்காவாறு நிறுத்தி. வெரூஉ-அச்சம்.

வீசி ; அம்மூன்றனையுமிக விட்டெறிந்து. புலம்பு-தனிமை. அயரும்-இன்களிமகிழ் கொள்ளுகின்ற.

வலம்-வென்றி. எல்லாரையும் வென்று கீழாக்கித் தம்வழிப் படுத்து மருளினையும் வினையையும் வென்று மேற்பட்டுத் தன்வழிப் படுத்தலே யீண்டு வென்றி.

நலம்-பேரின்பம். சிறந்தோன் : தனக்குரிமையாகப் பெற்றான்.

இவற்றானே நெஞ்சினை விருப்பு வெறுப்பு வெரூஉ விட்டடக்கு மாறு குறிப்பிக்கப்பட்டது ; இதனால் வருகின்ற பாற்குத் தோற்றுவா யுஞ் செய்யப்பட்டது.

உஅ. நுவன்ற வேள்வியு நோன்புந் துய்த்தலொ
டொருங்கு ஞாலக் கொருபெருங் கொற்ற
மன்னுயிர்க் கெல்லாந் துன்னிய கேண்மையென்
றின்னவை கெழீஇய வென்னை யுணரி
னன்னோ னிடையூ றகல்வுற்
றென்னோ ரமைதி யெய்துவன் விரைந்தே. 231

இதனாற் புணர்ப்பி னன்றிக் கடவுட்காதலானும் புலமையு மமை தியும் பொருந்துதல்கூடு மெனவவை பொருந்துதற் குரிய வேறொரு வாயிலும் பெறப்பட்டது.

நுவன்ற: நூலகத்துக்கூறிய. இது நுகர்ச்சி கொற்றங் கேண்மை யென வரு மூன்றற்கும் பொது.

ஞாலக்கு: அத்துச்சாரியை தொகுத்தல். கொற்றம்-ஆளு முரிமை. கேண்மை-உறவுடைமை. உறவாவது முதற்பொதுத் தந்தையு, முதற்பொதுத்தாயு, முதற்பொதுவாசிரியனு, முதற்பொதுத் தமையனு, முதற்பொதுத்தலைவனுமாதலாம். கேண்மை: அவ்வ வுயிர்த்தன்மையா யிருக்கும் பேருளுடைமை யெனினுமாம்.

உணர்தல்: அவனையுந் தன்னையும் அவனொடு தன்னிடையுள்ள வியைபினையு முணர்தலாம்.

இடையூறகலுதல் கூறியது புணர்ப்பிற்காட்டிற் கடவுட்காதற் குரிய வுயர்வு வேற்றுமை யுணர்த்தியவாறும்.

என்னேரமைதி-என்போலுமமைதி; என்றது புலமை யெளிதிற் பெற்றெய்துந் தன்னமைதி.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பி வில்லியர் நல்வழக்காட்டு.

ஐந்தாவது பால்.

நீத்தற் புணர்ப்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

ஆருவது பால்.

தன்னியற் புணர்ப்பு.

க. முயற்றி யாக்க முன்ன ஞகி
யியற்றக் கடவ வியற்று மாயி
ஞயவ னன்றி யாங்கவை செய்யான்
யாவனே யானு மெண்ணின்
யாவதோ துறவி புணரி யெனலே. 232

முயற்றி - முயற்சி. ஆக்கம் - பயன். முன்னுகி - நினையாஞகி. ஆயவன் - அவன்.

அவை : எவ்வேள்வியும் நோன்புந் தொழிலுமாகிய முயற்சி. ஆனும் - ஆயினும்.

யாவதோ : ஓ: அசை. யாவது: எவ்வாறு பொருந்தும்? பொருந்தா வென்பதாம்.

துறவி யெனலும் புணரியெனலும் யாவதென என வென் பதனைத் தனித்தனிக் கூட்டி யும்மைத்தொகையாக்குக.

வினையை விடாது செய்யா நிற்றலொடு பற்று விடுதலும் நெஞ் சொருக்கமு மமையு மென்ற விதனுனே அவையுடைமை யின்மை பற்றி யல்லது வினைசெய்தல் செய்யாமைபற்றித் துறவி யோ புணரியோ அல்லனெனவும் ஆமெனவுங் கோடல் பொருந்தா தென்றுன்.

இப்பாட்டின் கருத்தாவது வினைசெய்யிற் பற்றுண்டாகு மென்பது கருதி வினையை யொருவன் விட்டிருந்தானுயின் அவன் வினை நேரக் கூடிய பொழுது பற்றுச்செய்யுந் தன்மையனுதலான் வினை செய்யாதவன் யாவனேயாயினுந் துறவியுமாகான் புணரியு மாகான் என்பதேயாம். இதனை லியல்பாகவே வினையில்லாத புலவரும் வினை செய்தல் வேண்டு மென்பது கருத்தாகாது. அல்லதூஉ மப் புலவர்தாமு மொருவாற்ருன் வினை செய்பவரேயாவ ரெனக் கொள்வதாயின் வில்லிதானும் போர்செய்த லொழிந்து இரந்துண்டு கொண்டு வாளாவிருத்தலு மமையுமென்பது படு மாகலின் வில்லியை வினை செய்த லொழியற்க வென நம்பி வற்புறுத்திப் பணிகோடல் வேண்டாவாம்.

முயற்சிவினை யொழிந்த நாள்வினை, இல்லியல்வினை, வெள்வினை யெனக் கிடந்த முத்திறத்துள்ளும் நாள்வினையும் வெள்வினையும் வினை வாணர்க்கேயன்றிப் புலவாணர்க்கு மொப்ப நிகழ்வ வாகலானும்

எனை யில்லியல்வினை வினைவாணர்க்கே சிறந்ததாய் முயற்சிவினையின் பாற்படுமாகலானும் வினைவயிற்புணர்ப்பாளற்குப் பணிக்கப்பட்டற் பாலது முயற்சிவினையேயாயிற்று. நாள்வினையாவன: துயிலெழுதல், வாலாமைநீக்கல் புனலாடல் உண்டன் முதலாக நாடொறுஞ் செயக்கடவ. இல்லியல்வினையாவன: மகவீனுவித்தல், கடிமணஞ் செய்வித்தல், பிணமுய்த்தடக்கல்போலு மில்லிற் கியலும் வினைகள். வெள்வினையாவன: கண்ணிமைத்தல், மூச்சுவிடுதல் கைகான்முத லியவுறுப்புப்புடைபெயர்த்தன் முதலாக நினைப்பின்றித் தாமே நிக ழற்பாலன. வெள்வினையெனினும் வெறுவினையெனினு மொன்று. ஈண்டு நம்பி, வில்விக்குப் பணிப்பது முயற்சிவினையேயாயினும் நுகர்ச்சிவினை யுளப்பட வெல்லாவினையு மியற்கைநிகழ்ச்சியாதலின் ஒருதன்மையவா யுயிரோடியையிலவாதலின் அவற்றின்கணெல்லாம் பற்றொழிந்து உயிர் தன்னையே தானோக்கிநிற்றல் வேண்டு மென்பது நம்பி திருவுளம்.

துறவி: பற்றுவிட்டவன். புணரி: நெஞ்சொருக்க முடைய வன். பற்றுவிடுதலு நெஞ்சொருக்கமுந் தம்மு ளொன்றின்றி யொன் றமைதல் நிலைபெறாததாய்ப் பொய்படுமென்பது நம்புதிரு வுளம். எனவே துறவியென்பதும புணரியென்பது மொருபொருட் கிளவி யெனக் கொள்ளுநம்பிதான் பிறர்கொள்கை பற்றித் துறவி யெனவும் புணரியெனவும் வேறெடுத்துக் கூறி மறுத்துரைத்தான். இனி, உயிர்ப்பொருக்க முடலொருக்கம் புலனொருக்கங்களின்றி நெஞ் சொருக்கந் தனித்துநிகழாதாகலின் நெஞ்சொருக்கங் கூறுந் தொறு மேனைமூவொருக்கமு மின்றியமையா துடனிகழ்தல் கருதிக் கொள் ளப்படு மென்பதூஉ முணர்ந்துகொள்க. நெஞ்சொருக்கத்தின் முடி வெல்லையே நொசிப்பெனப்படுவது.

இச்செய்யுண்முழுதினுங் கூறிற்றுக்கூறல் போன்று தோன்று வன வெல்லாம் பெயர்த்துரை யெனக்கொண்டுய்த்துணர்ந்து கொள்க.

உ. நீத்தல் யாதென நிகழ்த்துவ ரதுவே
யாத்தற் புணர்ப்பென யாங்கு முணர்தி
நினைவு நீத்தில னயிற்
புணரி யென்றல் பொருந்துமா றின்றே. 233

நீத்தல் - பற்றுவிடுதலாகிய துறவு.

யாத்தல்: நெஞ்சு முதலாயவற்றைக் கட்டுதல். புணர்ப்பாகிய யாத்தலெனப் பெயரொட்டாக்குக.

யாங்கும் - எவ்வாற்றானும்.

இதனானே துறவியும் புணரியு மேற்கொள்வது நினைப்புக்களை நீத்த லென வொன்றே யாதலின் அவ ரிருவருந் தம்முள் வேறாகாமை துணியப்படு மென மேற் றுறவும் புணர்ப்பு மொன்றேயா மென்ற தற்குப் பொருட்டுக் கூறியவாறும்.

இதனுனே துன்பமென்பது யாதானு மொரு நினைவல்லது பிறி தில்லையெனவும் அதனாற் றுன்பந் தொலைத்தற்கு வேண்டுவார் நினைப்பு நீத்தல் வேண்டுமெனவும் அந்நினைவுதான் பற்றினானும் நெஞ்சடங்கல் பயிலாமையானுமே நேர்வதென்வும் பற்றுவிட்டு நெஞ்சடங்குதல் பயிலவே நினைவுதானே யுளதாகாது கெடுமெனவு முணர்ந்துகொள்க. இந்நினைப்பு நீத்தலே நெஞ்சொருக்கத்தின் முடிவெல்லை யெனப்பட்ட நொசிப்பென்பது. இந்நொசிப்புக் கைவந்ததன்பின்னர் நிகழற்பாலதுவே மெய்யுணர்விரண்டனுள்ளும் நுகர்ச்சியுணர்வென்பது.

ங. புணர்ப்பெனும் வெற்பிற் போக லுறுவார்
துணைக்கொள நிற்பது தொழில்செய லென்ப
குவட்டி னின்றுழிக் கொளுந்துணை
சுவட்டி னென்றிய தூயசெப் பம்மே. 234

வெற்பு — மலை.

தான்பயிலுதற் கரிதாகலானும் தன்னைப் பயிலப்பயிலப் பயில்வார்க் குயர்வுண்டாதலானும் அவர்தொடர்பு நீத் தொருதனிவாழ் வுறுதலானும் புணர்ப்பு வெற்பென மாட்டப்பட்டது.

போகலுறுவார்: அம்மலைமே லேறிப் போதற்கு விழைந்து அதற்கு முன்னர்ச் செயற்பாலவற்றைச் செய்யாநிற்பவரும் ஒருவாற்றான் அம்மலைமேலேறிப் போகாநிற்பவருமாவர். அவருடைய விழைவுக்கும் முயற்சிக்கு மின்றியமையாத துணையாவது தொழில்செய்தலேயா மென்பது.

குவடு — மலைமீமிசை.

அவர் புணர்ப்பின் முடிவெலலையை யுற்றவழி அந்நிலைக்குத் துணையாவது தொழில் செய்தலன்று; இன்பத்துன்பமுதலிய பிணையவிடை யெல்லாம் திரிபின்றிப் பொதுவிருத்த லெனப்படுஞ் செப்பமே துணையாவதாம். இதனாற் புணரிதான் றொழில் செய்யுமளவும் செய்யாதொழியுமளவும் பெறப்படும். நினைவென்பது சிறிது மின்றி யொழிந்தக்காற் றொழில்செய்யலாகாமை யுணர்ந்துகொள்க.

துணை செப்பமென்க.

சுவடு — பயிற்சி. பயிற்சியிற் பொருந்திய செப்பம். செப்ப முற்றுழி யுயிர்க்கு மாசின்மையிற் றூயசெப்ப மெனப்பட்டது.

ச. ஐம்புலன் மாட்டு மாற்றுதற் கண்ணு
நம்புதல் கைவிடு நலந்தலைப் பெய்தலி
னினைவெனைத் தாயினு நேரா
வனையவன் புணர்ப்பி னுவயி னனே. 235

ஆற்றுதல் — தொழில் செய்தல். ஐம்புலன் மாட்டுந் தொழில் செய்தலாவது அவற்றைக்கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றுணர்ந்து முயன்று நுகர்தலாம். நம்புதல் — நச்சுதல். எனைத்தாயினும் — எவ்வளவு சிறிதாயினும். தலைப்பெய்தல் — நேர்தல்.

நேரா – தலைப்படாத. ஆவயினென்றது புணர்ப்பின் மீமிசையாகிய வம்மலைக்குவட்டினை. குவடென மேலைப்பாட்டகத்து நின்றதனைச் சுட்டுதலிற் பொருளறி சுட்டாம். நெஞ்சறிசுட்டெனினுமாம். அக் குவட்டின் மிசை நின்றவனுவானென்பது பொருளாம்.

அனையவன் ஆவயினுனென்க. ஆவயினுன்: குறிப்புமுற்று.

இதனுற் புணர்ப்பின் முடிவெல்லையாகிய நொசிப்பாவதிது வென்பது கூறப்பட்டது.

ரு. தற்சிறப் பித்துத் தகவுற வெடுப்புக
புற்கென விழித்துப் போகடா தொழிக
தனக்கு நண்பனுந் தானே
தனக்குப் பகைவனுந் தானே யாமே. 236

தன்னைப் பிறர் சிறப்புச் செய்யுமாறு செய்வித்தலாவது தான் புணர்ப்பிற் றலைநிற்றலாம்.

எடுப்புக - உயர்த்துதல்வேண்டும்.

புற்கென - பொலிவில்லையாக. போகடுதல் - கீழ்வீழ்த்துதல். தன்னைப் போகடாதொழிக வென்க,

தன்னைத்தானுயர்த்துத் தனக்கு நலஞ்செய்து கோடலிற் றனக்குத் தா னண்பனுவான்.

அவ்வா றின்றித் தன்னைத்தானிழித்துத் தீமைவிளைத்துக் கோடலிற் றனக்குத் தான் பகைவனுவான்.

யாவர்க்குந் தத்தமக்குத் தாமே யல்லது பிறர் நண்பரும் பகைவருமாகா ரென்பதூஉந் தனக்குத் தா னண்பனுவாற்குப் பிறரெல்லா நண்பராவார் தனக்குத்தான் பகைவனுயினுற்குப் பிறரெல்லாம் பகைவராவாரென்பதூஉ முணர்ந்தொழுகுக வென்பது.

சா. தன்னெஞ் சட்டுத் தன்வரைப் படுத்தோன்
றன்னண் பாயவன் றானே யாயினு
னற்றன் றாயி னவன்றற்
பற்றின் றவனைப் பகையிற் றெறுமே. 237

அட்டு - வென்று. தன்வரைப்படுத்தோன் - தன்னளவி னிற்கச் செய்தோன்: பிறவற்றினுணர்வெழாமற்செறுத்தோ னென்பதாம்.

அற்றன்றாயின் - அவ்வா றன்றாயின்.

தற்பற்று - தன்கட்பற்று. இன்று - இன்றி.

பகைபோல வழித்துக்கொள்வா னென்க.

இன் : ஒப்புப்பொருஉ.

இதனுன் மேற்கூறியவாறு தனக்குத்தான் நண்பனும் பகைவனுமாமாறு கூறப்பட்டது.

எ. தன்னை வென்ற தண்ணளிச் செவ்வியோற்
கின்ன வின்பம் வெம்மை தண்மை
யெடுப்பிழிப் பின்ன விரட்டை தோறு
மடுப்பதாந் துணைப்பே ருகு
மெடுப்பிணைப் பில்லா வெழிற்பெரும் பொருளே.

தண்ணளி - குளிர்ந்தவருள். செவ்வியோன் - அமைதியுடையவன். இன்னல் - துன்பம்.

எடுப்பு - உயர்த்தப்படுதல். இழிப்பு - தாழ்த்தப்படுதல்.

அடுத்தல்-உடனின்றுதவுதல். எடுப்பு, இணைப்பு - உயர்வொப்பு.

இரட்டைதோறு மெழிற்பெரும்பொருள் துணைப்பேருகுமென்பது. பெரும் பொருளுணர்வுள் வழி இரட்டையுணர்வு மேற்படாது கீழாகுமென்பது கருத்து.

அ. கோதில் புலமையொ டேதில் புலமை
போதப் பெற்றுப் பொலிவு மேவி
யேத மின்ரு வைம்புலம் வென்ரே
ரேருநற் புணரி யென்ப தொக்குமாற்
காரக லோடுபொன் கல்லிவை
நேர்வன தம்முளென் ரூர்தரு மன்னே. 239

கோது : முக்குற்றம். கோதில்புலமையாவது : பெரும்பொருட் புலமை. ஒழிந்தபுலமையெல்லா மேதில்புலமையெனப்படும். ஏதின்மை-அயன்மை. தன்னே டியைபில்லாத புலமை யென்பதாம்.

இவ்விரு புலமையும் புணரிக் கெய்து மென்க.

போத - நிரம்புமளவாக. பொலிவு : ஈண்டுப் புலமையிரண்டு நிரம்புதலானே தோன்றும் பெருமைத்தோற்றம்.

ஏதம் - துன்பம். இன்ருக : கடைக்குறை.

ஒரும் : அசை. ஒக்கும் - தகும். ஆல் : அசை.

கார் அகல் - கரியபானை. பானையுடைந்தவோடென்க.

இவை தம்மு ளொப்பன வென்றுணர்ந்து ஒன்றின்கண் விழைவு மொன்றின்கண்வெகுளியு மொன்றின்கண் நொதுமலு மின்றி யெல்லாவற்றுக்கண்ணு மொப்ப நொதுமலிருக்கு மென்க.

மன் : விளி. அசையுமாம்.

ஓர்தருவான் அதனுலவன் நற்புணரி யென்ப தொக்கு மென்பது.

கூ. ஆர்வலர் நட்டா ரயலவ ரடங்கலர்
சேரலர் கேளிர் சீர்நடு நிலையர்
ரின்னு ரினிய ரென்னேர் மாட்டு
மன்னு ராத லவரவ ரூழ்வினை
யென்னு மெமக்கே யெமக்கோ ரனைய
ருயிரின் வேற்றுமை யுற்றன் றின்மையிற்
சுட்டி நோக்குந் துரிசு
மெற்றென் றுணர்வோ னிவட்சிறந் தோனே. 240

ஆர்வலர்: சுற்றத்தாரல்லராய்த் தன்மாட் டன்புடையோர். அடங்கலர் - அடக்கமில்லாத தீயோர். சேரலர் - பகைவர். கேளிர் - சுற்றத்தார். சீர் - நன்மை. இன்னூர்: பிறர்க்கின்னு செய்பவர். என்னோர்மாட்டும் - எத்தன்மையுடையோரிடத்தும்.

எமக்குளன்னும்: எமக்கிவரான் வருவதோர் நன்மையுமின்று தீமையுமின்றென்பது.

எமக்கோரனையர் - எமக்கொருதன்மையராவர்.

உடம்பின்க ணல்ல துயிரின்க ணுண்பெண் மக்கள்விலங்கு ஆர்வலர்முதலாயவேறுபா டின்மையானே யென்க. உற்றன்று இன்மை — உற்றது இல்லாமை.

சுட்டி நோக்குதல்: இவரார்வலர் இவர் நட்டாரென்றுற்போல வேறுபடுத்துக் காண்டல்.

துரிசு - குற்றம்: அறியாமை.

எற்று: எத்துணையிழிந்தது.

உணர்வோன்: புணரி. இவண் — இவ்வுலகில்.

கO. புணர்ப்பு மேயோன் புணர்ப்புத் தணவான்
றனக்குத் தானே பெறப்படுந் தன்வயி
னிலைக்க நன்கு நிற்கக் கடவ
னொருவழி யற்றத் தொருதனி வதிந்
தொருவிய நினைவோ டுற்றுப்
பருவரல் வேட்கை யிரவொடு பழித்தே. 241

மேவியோன்: இடைக்குறை. தணவான் - பிரியாதவனாகி.

நிலைக்க - நிலைபெற.

ஒருவழியற்றம் - ஓரிடமாகிய மறைவிடம்.

அவ்விடத்தே யொருவனாய்த் தனித்துறைந்தென்க.

ஒருவிய நினைவோ டுற்று - நினைவில்லாமையோடு பொருந்தி. பருவரல் - துன்பம். பரவரலாகிய வேட்கை. இரவு - இரந்துபெறுதல். வேட்கையை யிரவோடு பழித்து விலக்கி யெனப் பழித்தென்பது தன்னூக்க முணர்த்திற்று.

மேயோன் தணவானாகி யிரவொடு பழித்துத் தன்வயி னிலைக்க நிற்கக் கடவ னென முடிக்க.

ஈண்டுக் கூறிப் போதருவன வெல்லாம் புணர்ப்புக்குந் துறவுக்கு மொருங்கு வேண்டற்பால.

புணர்ப்பென்ப் பொதுப்படக் கூறலின் இருசார்ப் புணர்ப்பினு ளேற்பது கொள்க

வதிந்தென்பது ஒற்றளபெடை.

கக. தூய நிலவயிற் றுன்னுயிர்க் கிடரின்
றார மிசையு மவலும் படாமை
வான் றூ மடியொடு மான்றேல் பைம்பு
லுய்த்த மணையி னும்பர் நன்கிரீஇ
யுடம்பொடு நெஞ்சு நுடங்க லின்றி
யொருமுனைப் படவைத் தொறுக்கப் பட்ட
வுளம்பொறி வினையோ டுயிர்ப்புச் செறித்துப்
புணர்ப்பொடு புணர்க புலவன்
மணப்பருந் தூய்மை மருவுதற் பொருட்டே.

இது புலவயிற்புணர்ப்புப் பயிலுமாறு தொகுத் தோதுகின்றது.

நுண்ணிய வெறும்பு முதலாகத் துன்னிய சிற்றுயிர்க் கிடரின்றாக விருக்கை யிருக்கு மிட மமைதல்வேண்டும். ஆர - மிக. மிசை - மேடு. அவல்-பள்ளம். படாமை - ஆகாமல். வான்றூ மடி - வெளிய தூய ஆடை. உய்த்த: இம்மூன்றனு ளொன்று கொணர்ந்திட்ட. மணை - இருக்கவிடுமணை. மணையினும்பர் - மணையின்மேல். நுடங்கல் - அசைதல்: அசையாது நிமிர்ந்திருந்தென்பதாம்.

ஒறுக்கப்பட்ட: முயன்று அடக்கப்பட்ட. நெஞ்சும் பொறிகளுஞ் செயலு மென்றிவறறெடு. செறித்து - உள்ளடக்கி வைத்து; உயிர்ப்புக்காக்குக. தூய்மை: புணர்ப்புப் பயிற்சியினுக்கம். மணப்பரு - சார்தற்கரிய. தூய்மை: உயிர்த்தூய்மையு முளத்தூய்மையும்.

உயிர்த்தூய்மை: புலமை. உளத்தூய்மை: நொசிப்பு.

கஉ. தலையுடல் கழுத்தென் றிவையலங் காமை
நிலையுறச் செவ்வே நிறீஇக் கண்ணிணை
மூக்கி னுனிநேர் நோக்கி யாங்கணு
நோக்கல் சிறைத்து நோவறச் செவ்விய
தண்ணிய னாகித் துண்ணென லின்றிப்
பேரா ணேன்பிற் றீரா னிலைஇப்
பேரா தடக்குபு பேணிய நெஞ்ச
மென்னகஞ் சார விரீஇ
யென்னல தில்லா னென்க வவனே. 244—245

அலங்காமை - அசையாமல். செவ்வே - நேரே.

மூக்கினுனிநேர் நோக்குதலாவது மூக்கினுனிக்கு நேராகிய நுதலகநடுவ ணேக்குதலாம். நுனியைநோக்குதல் அகத்துநினைவூன்றுதற்கியலாது; கண்ணிணைப் பார்வையை யொப்பநிறீஇப் பயிறலளவே யன்றிப் பிறிது பயப்பாடின்று; வேண்டுமேற் கொள்க.

சிறைத்து - தடுத்து. செவ்வியதண்மை - நடுநிற்கு மமைதி. துண்ணெனல் - அஞ்சுதல்.

பேராண்மையாகிய நோன்பு என்றது காமநுகர்ச்சிகடிதல். தீரா ணுகி நின்றென்க. பேணிய - பாதுகாத்த. இரீஇ - இருத்தி.

அவன் : அப்புலவயிற்புணரி.

இதுவுமது.

கரு. இன்னணந் தகைந்த வெண்ணமொ டென்றுந்
தன்னுழைப் புணர்ப்பிற் றுன்னிய புலவ
னென்னுழை நன்கு மன்னுவ தாகிப்
பன்னருஞ் சிறப்பின் பாற்படு
மின்னியல் பமைதி யியையப் பெறுமே. 246

தகைந்த – தடுக்கப்பட்ட

ஒருவன் றன்னெஞ்சலங்காமை நிறுத்திக்கொண்டு தன்னைத் தானேக்கி நிற்றலே தன்னுழைப்புணர்ப்பெனப்படும்.

துன்னுதல் - அழுந்துதல். துன்னல் தைத்தலாமாறு குறிக்க.

சிறப்பு – வீடுபேறு. வீடாவ தித்தன்மையதெனவுடன்பாட் டான் யாவரானுஞ் சொல்லலாகாமைபற்றிப் பன்னருஞ்சிறப்பெனப் பட்டது. அஃ தேனையவற்றை யெதிர்மறுத்துச் சொல்லப்படும்.

இனிய வியற்கையாகிய வமைதி.

கசு. அயிலுதன் மிகினு மயிலா தொழியினுந்
துயிலுதன் மிகினுந் துயிலா தொழியினும்
புணரா தாகுமாற் புணர்ப்பு
நிணவா துடல்வினை நெகிழ்த லானே. 247

அயிலுதல் – உண்ணல்.

புணர்ப்புப் புணராதாகுமென்க. புணராதாகும் – கைகூடா தாகும். ஆல் : அசை.

நிணவாது – கட்டாது; நிணத்தல்: – கட்டின்முதலாயின பின்னு தல். ஈண்டுப்பிணித்தலாயிற்று. நிணவாது : வினையெச்சத்திரிபு.

உடலின்செயல் அடக்கலாகாவாறு சோர்தலாற் புணர்ப்புப் புணராதாகு மென்க.

இதனாற் புணர்ப்பு நடைபெறற்கு அளவேயயிலுதலுந் துயிலுத லும் வேண்டுமென்பது பெறுதும்.

இதுவுமது.

கரு. உணவே விளையாட் டுறுப்புப் பெயர்ப்பொடு
துயில்வே யேனைத் துயிதுணர் வென்றிவை
யாப்புற வரைந்தி யாங்குங்
காப்புறு நோன்பிற் கவற்சி கெடுமே. 248

இதுவுமது.

உறுப்புப் பெயர்ப்பு – கைகான் முதலிய வுறுப்புக்களை யசைத்தல்.

யாப்புற – கட்டுப்பாடாக. வரைந்து – வேறுபடுத் தெல்லையுட் படுத்து.

காப்புறு நோன்பு: யாப்புற வரைந்துகொண்ட செயல்களை யவ்வரைவு கெடாமே பாதுகாத்த லுறுகின்ற நோன்பு.

ஏ கா ர ம்: எண்ணேகாரம். விளையாட்டே துயிலுணர்வே யெனவேகாரம் பிரிந்து சென்றுகூடும்.

கசு. எஞ்ஞான் றுள்ள மினிதுகட் டுண்டு
தன்மாட் டல்லது தாழாது கொல்லோ
வஞ்ஞான் றூர்வுறு மவற்றவற் றெல்லா
மார்வமற் றிருக்கு மதுவே
சார்வரும் புணர்ப்பெனத் தகும்பிற மற்றே. 249

இனிது - முயற்சியின்றி: குறிப்பு வினையெச்சம்.

தாழாது - தங்காது. ஓ: தெரிநிலை. கொல்: அசை.

ஆர்வுறும் - விரும்புகின்ற.

விரும்பப்படுபவற்றை யெல்லா மெதிர்ந்த வழியும் விருப்பமற் றிருக்கு மந்நிலையே புணர்ப்பெனப் புணர்ப்பு முற்றுப் பெற்றநிலை யாமா றுணர்த்திற்று.

பிறவும் மற்று மசை.

கஎ. தென்றலு முளர்தல் செல்லாப் பொதியறை
நின்றவிர் விளக்கி னீள்சுடர் புரைமே
தன்னு ணிலைஇச் சாலவு நவின்று
நன்னர்ப் பிணித்து நட்ட
வன்ன நெஞ்சமொ டணைதரு மவனே. 250

உளர்தல் - அசைதல். உளர்தல் செல்லா வென்ற தொரு சொல். பொதியறை: காற்றுப் புகாதவாறு மூடிய கட்டிடப் பகுதி.

அவிர் - விளங்கும். புரையு மென முற்றீற்றுமிசை யுகரங் கெட்டது.

நவின்று - பயின்று. பிணித்துநட்ட - அடக்கி நிறுத்தப்பட்ட.

புணர்ப்பு முற்றி நொசிப்புற்ற நெஞ்ச மசையாது நிற்குமாறு ஒப்புமைமுகத்தாற் றெரிக்கப்பட்டது.

சிறிதுங் காற்றில்லாவழி யசைவின்றி நேர்நின் றெரியும் விளக் கினீள்சுடர் சிறிதும்விழைவு முதலாயின வில்லாவழி யசைவின்றி நடுநின் றுணர்வுதரு நெஞ்சிற் கொப்பாகுமாறு காண்க. விழைவு முதலியன புகாவாறு பொறிகளெல்லா மடைக்கப்பட்டவுடம்புக்குப் பொதியறை யொப்பாகும்.

கஅ. புணர்ப்பென வழங்குந் திருப்பணி யகத்துப்
பிணித்தென மன்னும் பிணிப்பி னெஞ்சமுந்
தன்னிற் றன்னைத் தன்வயிற் றூன்கண்
டென்னெற் கினியென் றிடையின்று மகிழ்தலு
மாணுறு முளத்தினும் வாயி லைந்தினுங்
காணரு முழுநயங் காணூஉத் திளைத்தலு
முண்மைத் தன்மையி னுளர்த லில்லா
மெய்ம்மை யாண்டு மேவுதல் காண்டலு
மினிப்பெறற் பால தின்றெனக் களித்தலு
மெனைப்பெருந் துயரினுங் கலக்கமெய் தாமையு
மென்றிவை யுடைமை யென்பது தானே
கன்றிய துன்பங் கலத்தலி
னன்றுத லென்னு மத்தகு புணர்ப்பே. 251—253

திருப்பணி: செல்வந் தருஞ் செயல்; கடவுளினேவ லெனினு மாம்.

பிணித்தென - கட்டிவைத்தாற்போல அசையாது. மன்னும் - நிலைபெறுகின்ற.

பிணிப்பு இல் நெஞ்சு: புலங்களிற் பற்றுதல் இல்லாத நெஞ்சு. ஆவது நொசிப்பு.

எற்கினி யென் னென் றென மாறுக. பெறற்பாலதனைப் பெற்றே னென்பதாம்.

மாணுறும் - மாட்சிப்படும். முழுநயம் - நிரம்பியவின்பம். திளைத்தல் - நுகர்ந்தயர்தல். உளர்தல் - அசைதல்.

தன்னைத் தானே நோக்குபவன் றூனிடந்தொறும்பெயரினும் பொழுதுபலபெயரினு மாறாது நிற்கு முண்மையை யாண்டுங் காண்பானென்க.

கன்றிய: முதலாக் காலந் தொட் டடிப்பட்டுவந்த. துன்பத் தோடு கூடுதலினின்றும் வேறுபடுதலே யழகு தக்க புணர்ப் பென்பது.

கலத்தலின்: இன்: நீக்கப்பொருட்டு.

அன்றுதல் — வேறுதல். ஆவது: பிரிதல். எனவே துன்பமுற்று மெஞ்சாது தொலைதலே புணர்ப் பென்றதாயிற்று.

புணர்ப்புப் பயிற்சி முற்றிய முடிவிற் புலமை யிடையீடின்றித் தொடர்ந்தெழுந்து நிகழுமாகலானும் புணர்ப்புத் துணையாகப் புலமை நிலைபெற்று வலியுற்றுப் பயத்தலானும் புலமை யென்னும் வீடுபேற் றியல்பாகிய முற்றுத் துன்பக் கேட்டினை நம்பி யீண்டுப் புணர்ப்பிய லாக்கிக் கூறியருளினன்.

எனவே புணர்ப்புப் பழுத்து முதிர்தலே புலமை யெழுதலென்ப தாயிற்று.

இன்னு மிதன்கண் உயிர் முழுத்துன்பக்கே டெய்தலே முழு வின்பப்பே றெய்தலா மென்பதூஉ நம்பிதிருவுளமாதல் விளங்கும். அதுவே வீடுபேறென்பது.

துன்பம் விடுதலு மின்பம் பெறுதலு மொன்றென்பது வீடுபே றென்னுஞ் சொற்பொருளானும் பெறப்படும்.

இதனாற் புலமை யீனும் புணர்ப்புப் பயிற்சி யல்ல தெண்பெருஞ் செல்வமே யீனும் புணர்ப்புப் பயிற்சி பழுதெனக் கடிந்தருளலே நம்பியின் கோட்பா டென்பதூஉம் படும்.

கசுக. உலையா வுணர்வொ டொருதலை யாக
நிலையா நின்று நிகழ்த்துக புணர்ப்பு
நினைதலி னின்று நிவக்கு மார்வ
மெனையது மெஞ்சா தெறிந்திடை யீடின்
றொருங்கிய நெஞ்சி னேவா தைம்புல
மொருங்குடன் றொடக்கி யொண்மைத் திண்மையிற்
றன்மைப் படுமுளந் தன்னி னெஞ்சுதன்
னண்மைப் பாங்க ரலங்கா துறீஇப்
பைப்பயத் தலைத்தலைப் பல்குந் தன்சுவை
துய்ப்பவ னுங்கனந் துய்த்தலா
னெப்பரி சுள்ளலு மிலீயர் நன்கே. 254, 255, 256

உலையா — நிலைதளராத. ஒரு தலையாக — துணிவாக. நிலையாநின் றென்பது தனிமொழியுந் தொடர்ச்சொல்லுமாய் நின்று முப் பொருளும் படும்.

புணர்ப்பு நிகழ்த்துக.

நிவத்தல்—எழுதல். ஆர்வம்—பற்றும் அவாவும். அவை யாதேனு மொன்றனை நெஞ்சு நினைதலா லுண்டாவன வென்பது இரண்டாவது பாலு ளெடுத்தோதப்பட்டது.

எனையதும் — எவ்வளவு சிறிதும். எஞ்சாது—குன்றாது. எறிந்து— களைந்துவீசி.

ஒருங்கிய — கிளையா தொன்றி யொடுங்கிய. ஏவாது — ஒழியா மல். தொடக்கி — கட்டி யடக்கி. நெஞ்சானே யைம்புலமடக்கி யென்க.

ஒண்மை — தெளிந்த வுணர்வு விளக்கம். திண்மை—கலங்காமை.

தன்மைப்படுதல் — புணரி தன் றன்மையாய் நிற்றல்: என்ற துள்ளமடங்க வுயிர் தான் றன்னிற் புலனருகுமாறஃதங்ஙன மடங்கி நிற்றலை:

ஒண்மையானுவது திண்மை. திண்மையானே யுள்ளந் தன்மைப் படுதலுளதாம். அவ்வுள்ளத்தானே நெஞ்சினை யடக்கல்வேண்டு மென்பது.

அலங்காது றீஇ—அசையாம லுறுவித்து. அலங்காது: எச்சத்திரிபு. பைப்பய – மெல்ல மெல்ல. தலைத்தலை – மேன்மேல். தன்சுவை: தனியுயிராகிய தனது சுவை.

எப்பரிசு உள்ள லும் - எவ்வாறு நினைத்தலும். இலீயர் - இல்லா தொழிக. நன்கு - மிகவும். சிறிது மில்லாதொழிக வென்பது.

நினைப்புச் சிறிது மில்லாதவனே புணரியாவா னென மேற்கூறிய வாறே யவ னினைப்பில்லா தொழியுமா றிவ்வாறென்ப தெய்துவிக்கப் பட்டது.

உ0. எதனி னெதனி னேக லுறுமோ
வதனி னதனிற் கதுமென் றீர்த்தீர்த்
தவ்வப் போழ்து தன்னுழை யமையா
வல்லாங் ககப்பட வடிக்குக
நில்லா துழிதரும் பொல்லா நெஞ்சே. 257

எதனின்: இன்: ஏழாவது. அதனின்: இன்: ஐந்தாவது: நீக்கப்பொருட்டு. கதுமென்று - விரைந்து. ஈர்த்தீர்த்து - மீட்டு மீட்டுவாங்கி.

அமையா - அமைத்து. வல்லாங்கு - இயன்றவாறு. வடிக்குக-திருத்துதல்வேண்டும்: தனக்காக்கல்வேண்டும். உழிதரும் - அலைந்து திரிகின்ற.

நெஞ்சினைக் கதுமென் றீர்த்தீர்த் தமையா வடிக்குக வென முடிக்க.

இப்பாட்டானே நெஞ்சினை யடக்குதலினருமையும் அடக்கு மாறும் விளக்கப்பட்டன.

உக. பொற்கும் பெருவண் பொருடா னாகி
நற்குத் தண்ணென நடுநிலைச்சுவையொடு
நிற்குந் தன்னொடு நேர நிறுவிய
வலையா நெஞ்ச மழுக்கறு புணரிகட்
டொலையா தாகுந் தொல்லைத்
தலையா கின்பந் தானே வருமே. 258

பொற்கும் - பொலிகின்ற. நற்கு - மிகவும். தண்ணென - அமைதியாக.

நடுநிலைக் குறிப்பென்னுது சுவை யென்றது கடவுட்குறிப்புக் கண்டு தன்கணுகாப்பட்ட தாகலி னென்பது. தன்னொடு நேர நிறு விய - தன்னொடொப்ப நிறுத்தப்பட்ட.

அழுக்கு: விழைவுமுதலாயின. நெஞ்சம் அழுக்கறு புணரிக ளென உடைமையின் வினை உடையார்மேனின்றது.

செய்துகொள்ளப்பட்டதன்றித் தன்க ணமைந்து கிடந்த வியற்கை யென்பது தோன்றத் தொல்லை யின்ப மெனவும்அதனு லதற் கழிவு மதனை யழித்தலு முடியாமையிற் றொலையாதாகு மின்பமெனவு

மதுதான் வேறுதுணை வேண்டாமே தனக்குரித்தாகக் கோடலானும் அதனே டொப்பது மிக்கதும் யாண்டு மின்மையானும் செயலொன் றும் வேண்டாமே யமைதலானுந் தலையாகின்பமெனவுங் கூறியவாறு கண்டுகொள்க.

தானே வருமென்றதனு னெஞ்சு நிறுத்தாவழி யஃ தமைதற் பாற்றன்றெனவு மதுவே செயற்பால தெனவு மதன்மேற் செயற் பாலதின்றெனவுங் குறித்தவாறும்.

உஉ. வினைமா சுதிர்தலிற் றனையல துணரா
முனைவன் றன்னை முன்னு மெளிது
பெருஞ்சார் புறுதல் பெற்றுழி
வரும்பே ரின்ப வளமுழு தும்மே. 259

மாசு - அழுக்கு. முனைவனே டொக்கு மாகலின் முனைவ னெனப்பட்டான். முனைவன் - முதற்கடவுள்.

முன்னும் - முற்பட்டுவரும். எளிது - முயற்சியு முளப்பாடு மின்றி. பெருஞ்சார்பு - பெரும்பொருள்.

உறுதல் - தொடுதல். ஈண்டுணர்தலாம்

வரும் - வரக்கடவ.

முனைவன் றன்னை வள முழுது மெளிதுமுன்னுமென முடிக்க.

வளம் - வருவாய்மிகுதி ; செல்வமிகுதியுமாம்.

இதுவும் புணர்ப்பின் வரும் புலமையி னன்மை வலியுறுத்தது.

உங. புணர்ப்பு வல்ல புலவன் பிறர்மே
னினைப்புக் கிளர்ந்துழி நிறுக்க லுற்று
மன்னுயி ரெல்லாந் தன்னுளுந் தன்னை
மன்னுயி ரெல்லா வகையி னுள்ளு
மோராங் கொருநிகர் காட்சியிற்
பாரா வதியாப் பேரா துறுமே. 260

பிறரை நோக்கி நினைவெழுந்துழி யிவ்வாறுணர்ந்து நினைவடக்கித் தன்கணிற்றல் வேண்டுமென்பதாம். புலவனுறுமென்க.

ஓராங்கு-ஒருங்கு. ஒன்றாகக் காண்டலே ஒப்பாகக் காண்டலாம்.

பாரா : வதியா : செய்யாவெனெச்சம்.

பேராது : நெஞ்சு முணர்வும் புடைபெயராது.

உச. என்னை யேனை யாவற் றுள்ளு
மென்னு ளேனை யாவற் றினையுங்
காணு மவனெற் காண்ட லானும்
யானு மவனே யதுவென லானு
மொருவா வொருவர்க் கொருவ
ரிருவேங் கெடுத லென்னு மிலமே. 261

அது : அங்ஙனங் காண்பேன். அங்ஙனங் காண்பே னுதலானு மென்க.

ஒருவர்க் கொருவ ரொருவா விருவேமென மாறுக.

எனவே யிங்ஙனங் காண்டல் எதிரெதிர்நேர்க்காட்சியாகலின் இருவே மில்லையாதல் சிறிதுமிலமென்றான். கண்கூடாகக் காணப் படாப்பொருளுய்த்துணரப்படுமாயினு மத்துணையுண்மைப் பொரு ளெனப்படா.

கெடுதல் - இல்லையாதல். என்னும் - யாதும் மேலைப்பாட்டிற் றன்னைக் கண்டவாறு கூறி யிப்பாட்டின்க ணவ்வா றிறைவனையுங் காண்டல்வேண்டு மென்று கூறியருளினான்.

உரு. எற்றுளு மிருக்கு மென்னை யாவணுஞ்
சுட்டுணர் வின் றித் தற்கெடுத் தொருமைப்
பற்றொடு வழிபடும் பரிசிற் புலவ
னெவ்வழி யானு மியலி
னவ்வழி யென்னகத் தன் றி யிலனே. 262

எவற்றுளுமென்ப தெற்றுளு மெனத் திரிந்தது.

யாவணும் - எவ்விடத்தும்.

சுட்டுணர்வு - தனித்தனியுணர்வு.

தற்கெடுத்து - தன்னைக் காணாது : கடவுடானெனக் கடவுளையே காண்டலிற் றன்னைக் காணாமை யுளதாம்.

திருவருட் பரிசிலைப் பெறும் புலவன்.

எவ்வழியானு மியலின் - எவ்விடத்தாயினும் வழங்கின். இயலி னெனப் பொதுப்படக் கூறியது நிற்ற லிருத்தல் கிடத்த னடத்த லுண் ணுதன் முதலாய வழக்கெல்லா மடங்குதற் கென்பது.

இவ்விருபாட்டும் பெருஞ்சார்பின்க ணிலைபெறுதற் கின்றியமை யாதது கடவுட்காதலுமாமென்றன.

உசு. உடலின் வேற்றுமை யுன்னா துடலு
ளுயிரின் பொதுமை யுன்னுத லானே
யென்ன வுயிரி னின்ன லின்பமு
மென்ன வெனவே யெண்ணா வருள்வோன்
முதுமாண் விழுமிய முனிவ
னதுவே யெனது துணிபா கும்மே. 263

இன்னலின்பம் : உம்மைத்தொகை.

எல்லாவுயிரி னின்பத்துன்பங்களும்.

என்னவெனவே - என்னுடையனவென்றே. எண்ணா - எண்ணி.

இதனானு முயிர் பலவாதல் சார்புபற்றிய தோற்றமேயன்றிப் பொருட்டன்மையா னெவ்வுடற்கண்ணுமுயி ரொன்றல்ல தில்லை யென்பது வலியுறும். மேனின்ற மூன்று பாட்டுக்களுக்கு மிதனோ டியையக் கருத்துணர்ந்து கொள்ளப்படும்.

அருள்வோனென்றது அருளாவ திதுவெனப்புலப்பட்டது நினைப்பித்தவாறும்.

அருள்வோன் முனிவனென முடிக்க.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

(முப்பால். நீத்தார் பெருமை. ௧௦) என்ற வள்ளுவனார் துணிபு மிங்கு நம்பி துணிபு மொப்பு நோக்கற்பால.

உஎ. அம்ம! கேண்மோ வானிரை காவல!
வின்ன வாறெனு நின்ன சொற்பொரு
ளுயிரி னொப்புமை யுணர்வி னொருமை
யுறுதி யாக வுணர்கிலென்
மறுகு நெஞ்சியல் வழக்கத் தானே. 264

சொற்பொருளாகிய வொருமை யென வியைக்க.

ஒருமை - புணர்ப்பு: உயிரி னொப்புமையுணர்வின்க ணொரு நிலைப்படுதலென்க. அது மேனன்குபாட்டானுங் கூறப்பட்டது.

மறுகு நெஞ்சு - நில்லாது சுழலுநெஞ்சு. நெஞ்சினியலாகிய மரபானென்பது.

வழக்கத்தா னொருமையை யுணர்கிலென்என்க.

இதுவு மேல்வருவதும் வில்லிவினா.

இவ்வினா நெஞ்சொருக்க மின்றேற் புலமையுளதாகா தென்பதனை வலியுறுத்துதற் கருத்துடையது. வில்லியின்கருத்து நெஞ்சொருக்கமுண்டாகுமாற்றினை நன்குணர்ந்துகோடலாம்.

உஅ. நெஞ்சோ சிக்கென நிற்கின் றிலதா
லெஞ்சா திழுக்கு மியல்பிற் றாமால்
வலிதா கின்றே மற்றுத் திண்ணிதா
லின்ன பெற்றி யிதனை வணக்கன்
மதவுக் காற்றினை வணக்கு
மதனிற் பெரிது மரிதா கின்றே. 265

நெஞ்சோ : ஓ ; தெரிநிலை. நெஞ்ச மிற்றென்ப தியாவரானுந் தெரியப்பட்ட தென்பதாம்.

ஒழியாது தவறு மியல்புடைத்தா மென்பது.

ஆகின்றென்பன "இனி நினைந்திரக்க மாகின்று" (புறம், 243.) என்புழிப்போல ஆகின்றது எனப் பொருள்படும்.

மற்று : வினைமாற்று.

இன்னபெற்றியிதனை - இவைபோன்ற வியல்புடைய விந் நெஞ்சினை.

வணக்கல்-தன்வரைத்தாக்குதல்: அசையாது நிலைநிற்கச்செய்தல்.

மதவு - வலிய : உரிச்சொல் வீறு திரிந்தது.

௨௯. அசைவி லாள! வஃதே யயிர்ப்பின்
றசையு மியல தசைத்த லரிய
தெனினு நெஞ்சினை யிடையீ டில்லாப்
பயிற்சியொ டுவர்ப்பிவை பற்றி
வழிப்பட வணக்கன் மாட்சிப் படுமே. 266

அசைவு - தளர்வு. அஃதே - நீ கூறியவவ்வாறேயாம். அயிர்ப்பின்று : அதன்கணையுறவில்லை. அயிர்ப்பு - ஐயுறவு.

இயலது - இயல்புடையது. அசைத்தல் - கட்டுதல்.

உவர்ப்பு - வேண்டாமை. பயிற்சி: புணர்ப்பினைப் பயிலும் பயிற்சி. உவர்ப்பு: அப்பயிற்சியின் வேறாய செய லெல்லாவற்றையும் வேண்டாமையாம். இவ்விரண்டனுமென்க.

வழிப்பட : தன்வழிப்பட்டுரித்தாக. வணக்கல் - அகப்படுத்தல். மாட்சிப்படும் - சிறப்ப முடிவுறும்.

நெஞ்சினை வணக்கற்கு வேண்டப்படும் வாயி லிவை யென வரையறுத்தவாறாயிற்று.

௩௦. தன்னை வெல்லுதல் சாலா னாயின்
முன்னைப் புணர்ப்பு முயங்க லரிதென
லெனது கோட்பா டிருநிலம் புரவல!
தனைவென் றுயர்ந்த தற்கிழ வோன்றன்
முயற்சியுஞ் சூழ்ச்சியு முன்னிப்
பயிற்சிகைக் கொள்ளிற் பைப்பய மிகுமே. 267

தன்னைவெல்லுதல் - தனக்குத்தானுரியனாகித் தனக்கு நயமெய்த நெஞ்சினை யடக்குதலாம்.

சாலானாயின் - அமையானாயின்.

முன்னைப்புணர்ப்பு - மேற்கூறியபுணர்ப்பு.

முயங்கல் - மேற்கொள்ளுதல்.

பெரிய நிலம் புரத்தல் வல்லவனே! தனை : தொகுத்தல். முயற்சி : மடியின்றிச் செயல் செய்தல்.

சூழ்ச்சி; மேற்கொண்ட புணர்ப்புக் கடைபோக வுய்த்தற் கேற்ற முறைகளை யவ்வப்பொழுதை நிலை யுணர்ந்து கடைப்பிடித்தல்.

முன்னி - பொருந்தி.

முயற்சிசூழ்ச்சிகளாற் பயிற்சி யுண்டாகும்; பயிற்சியாற் புணர்ப்பு முடிவுறும்.

அப்புணர்ப்பு முயங்கல் பைப்பயமிகுமென வெழுவாய் சொல் லெச்சம்.

௩௧. ஊக்கங் கொடுதன் யாக்கை லாமையின்
வாக்கும் புணர்ப்பின் வழுக்கிய நெஞ்சாற்
புணர்ப்பி னாதியம் புல்லாற்
குரைப்பி னென்னைகொ லுளதா வதுவே. 268

ஊக்கங்கொண்டு - ஊக்கத்தால்.

தன்னையாக்கலாமை. யாக்கலாமை : கட்டியடக்காமை. வாக்கும் - திருத்துகின்ற.

புணர்ப்பினின்று தவறிய நெஞ்சினுலென்க.

புணர்ப்பு நிரம்பாமையானே அத னூதியத்தைப் பொருந்தாதாற் குளதாவ தென்னைகொ லென்பது. அதனாற் கேடு நேருமாயின் அதனைத் தொடங்குதற்க ணூக்கமுண்டாகாமையான் அஃதுண் டாதற்பொருட்டு வில்லி வினையினன்.

௩௨. வளைக்கை யேந்தால்! வயங்க வுரைமோ
புரைப்பில் பெரும்பெயர் புரிதரு செந்நெறி
யிழுக்கிய முட்டா ளிருமையுங் கெட்டு
வளியிற் புடைத்த மஞ்சு புரைய
விளியுங் கொல்லோ தெளிவின் றுலையு
மளியெற் குற்றவிவ் வையம் பலவுங்
களைதற் குரியை கரிய கள்வ!
வின்ன வையுற வெல்லா
நின்னிற் பிறர்யார் நீக்கவல் லோரே. 269—270

வளை - படையாழி; கடல்வளையுமாம். வயங்க - விளங்க. மோ : முன்னிலையசை. புரைப்பு - பொய்படுதல்.

பெயர்-பொருள். புரிதரு—பொருந்துதலைச் செய்யும். செவ்விய வழியென்றது புணர்ப்பினை. முட்டாள் - வழுவுடைய ஆள்.

காற்றுற் றுக்கப்பட்ட வான்முகில்போலச் சிதைந்துகெடுமோ வென்க. தெளிவு - துணிவு. உலையும் - தளர்ந்து வருந்தும். அளியெற்கு - இரங்கத்தக்க வெளியேற்கு. கள்வன் - சான்று. ஞால முழுதுக்குஞ் சான்றுவான் என்பதாம். "யாருமில்லைத் தானே கள்வன்' எனக் குறுந்தொகையில் இச்சொல் இப்பொருட்டாயவாறு காண்க.

இன் : ஒப்புப்பொருஉ.

நீக்கவல்லோ ரொருவரு மிலரென்பதாம். இவ்விருபாட்டும் வில்லி வினை

௩௩. அளியை யஞ்சலை, யார்வல! புணர்ப்பின்
வழுவி னுனுக் கழிவின் மன்ற
விம்மை யாயினு மம்மை யாயினு
மென்னை பொருட்டெனி னெனைத்தே யானு
நன்மை புரியு நல்லுயிர் யாதும்
புன்மைப் பிறவி புகுத
லின்மை யானென வெண்ணினை கொண்மே. 271

அளியை - இரங்கத்தக்காய். அஞ்சலை - அஞ்சாதொழிக. ஐ : முன்னிலை விளக்கிற்று.

இல் : இல்லை. மன்ற — ஒருதலையாக ; இடைச்சொல்.

இம்மையாயினு மறுமையாயினு மழிவில்லென மேலே கூட்டுக. பொருட்டி யாதோ ? வென வினவுவையாயின்.

எனைத்தே யானும் — எவ்வளவு சிறிதேயாயினும்.

புன்மை — இழிவு. புன்மைப் பிறவிக்கட் புக்குப் பிறந்திழித லில்லாமையா னென்கவென வொருசொல் வருவித்து வினை வினையெச் சத்தை முடிக்க.

இன்மையா னென்க வென வெண்ணிக்கொள். எண்ணினை : முன்னிலை முற்றெச்சம். மே : அசை.

புணர்ப்பி னின்று வழீஇயினுஞ் செய்தது நன்றன்றித் தீதன்றாக லிற் செய்தவளவுக் குரிய நன்மை யெய்துத லொருதலை. அதனால் என்னாகுங் கொல்லோ வென வஞ்சிப் புணர்ப்பு மேற்கொள்ளா மையை யொழிக; வழுவிற் குற்றமில்லை யென விளக்கித் தேற்றுவித் தருளினான்.

௨௪. நல்லறஞ் செய்தோர் நணுகும் வானகம்
பல்லவும் யாண்டு பயில வைகி
யார வின்களி யார்ந்து முற்றி
யீரந் தண்ணளி யீகை யொழுக்கம்
வாய்மை யொன்றிய தூய்மைச் செல்வர
திற்பிறந் திசைபுக விலங்குமாற்
பொற்புறும் புணர்ப்பிற் புக்கிழிந் தோனே. 272

நல்லறம் : இல்லறம். பல்லவும் - பலவற்றுக்கண்ணும். பயில - மேன்மேல்வர : பலயாண்டாகவென்பதாம்.

ஆர - நிரம்ப. ஆர்ந்து - நுகர்ந்து. ஈரம் - அன்பு. அளி - அருள்.

இற்பிறந்து - குடியிற்பிறந்து. இசைபுக - புகழ்வர. இலங்கும் - விளங்கும்.

புணர்ப்பிற் போய்க் கீழிறங்கினேன்.

இழிந்தோன் வைகி ஆர்ந்து முற்றி இற்பிறந் திலங்கு மென முடிக்க. ஆல் ; அசை.

இது புணர்ப்புவழுவானே நேருநன்மைப்பய னிது வென்று கூறிப் புணர்ப்பு மேற்கொளுமா றூக்குவித்தவாறும்.

௨௫. புணர்ப்பிற் றளர்வு புக்க வன்னேன்
புணர்ப்புப் பயில்வுறு புலவ ரில்வயிற்
பிறப்புக் கூடும் பெற்றியு மாமரோ
முந்நீ ருடுத்த முதுநிலத்
திந்நீர்ப் பிறவி யிறப்பவு மரிதே. 273

புணர்ப்பின்கட் டொலைவு : புணர்ப்புமுயற்சியை முற்ற முடிக்க லாற்றாது சோர்ந்து கைவிட்டொழிதல். புக்க - நேர்ந்த.

இல்வயின் - குடியின்கண். பெற்றி - இயல்பு.

முந்நீர் - கடல். இந்நீர் - இத்தன்மையான.

இறப்பவும் - மிகவும்.

இந்நீர்ப்பிறவியென்றது முற்பிறவிபிற் புணர்ப்பினின்று வழீஇய குறையுடையோன் புலவர்மரபின் வந்து பிறக்கும் பிறப்பை.

இப்பிறவி யிறப்பவு மரிதென்ற விதனான் மேலைப்பாட்டிற் போந்த செல்வரில்லிற் பிறத்தலினும் புலவரில்லிற் பிறத்தல் சிறப்புடைய தென்றது குறையாகிய புணர்ப்பினை மீட்டு மேற்கொண்டு குறைமுடித்துப் புலமை நுகர்வு மெய்தி வேண்டாமையென்னும் விழுச்செல்வராவரென மேற்கூறுதலி னென்பது செல்வரில்லிற் பிறத்தலாற் புகழுஞ் செல்வநுகர்ச்சியுந் தலைமையுமே யுளவாம். ஒரோவழிச் செல்வந் துறந்து புலவரா யுய்தலுங் கூடும்.

இதுவும் புணர்ப்புவழுவாற் கேடின்றென்பதனை வலியுறுத் தற்குப் பயன் கூறிற்று.

௩௬. அவ்வழி யும்மை யணைஇய யாக்கையிற்
கவ்விய பயிற்சிக் கருத்து மெழவே
பொய்தபு புலமையின் புணர்ப்பு வேட்டு
மரீஇய வாற்றான் மறித்துந்
தரீஇய முயன்று தான்முடிக் கும்மே. 274

அவ்வழி : அங்ஙனம் புலவரில்லிற் பிறந்தவழி.

உம்மை - முற்பிறப்பு. கவ்விய - பற்றிய.

பொய்தபு - பொய்யைக் கெடுக்கும். ஈனும் புணர்ப்பு. வேட்டு - அவாவி. மரீஇயவாற்றான் - பயின்றவாற்றான். மறித்தும் - மீட்டும்.

தரீஇய - செய்தற்பொருட்டு.

பயிற்சி, மருஉ, எண்ணம், வேட்கை, முயற்சி, முடிவுபேறெனவிவை முறையே யொன்றினின்றொன்றாகற் பாலவாமா றுணர்க.

௩௭. தன்வழி யன்றித் தானுள னாயினு
முன்னைய மருஉ முன்னின் றீர்த்துப்
புணர்ப்பொடு புணர்ப்பப் புணர்ப்புரைப் பனுவ
லுழப்பொடு விழைந்துகற் றுணர்தலொ டானது
விழைவி னாயினும் வெகுளியி னாயினுந்
தனிமை வாழ்வு தான்புகப் பெற்றுச்
சாஅய் வின்றிச் சார்பிற் றீர்ந்து
தோஒய் வின்றிச் சொற்கெடப்
போஒய்ப் பெரும்பொரு டாஅய் நிற்குமே. 275

தன்வழியன்றித் தானுளனாதலாவது சுற்றம், நட்பு, வேந்து முதலிய சார்பின்பாற்பட்டுப் புணர்ப்புப் பயிலுதலை நினையாதிருத்தலாம்.

மருஉ - பயிற்சியினுகுஞ் சுவடு. அச்சுவ டுள்ளத்துக் கிடத்தலிற் புணரிகளை யெதிர்ப்பட்டுழியும் அவரைப் பற்றிச் சொல்லக்கேட்டுழியு மியல்பாகப் பற்றுண்டாக்குதலே அவனை அம்மருஉ முன் னின் நீர்த்தலாம்.

பனுவல் - நூல். உழப்பு - முயற்சி. ஆனது - அமையாது. கற்றதனே டமையாது கற்றுங்குப் பயிலுதன் மேற்கொள்ளு மென்க.

தந்தைதாயர் மனைவிமக்கண் முதலிய சுற்றத்தொடு துனிகொண்டாதல் வறுமை, எளிமை முதலியவற்றான் நன்கு வாழலாகாமை கண்டு வாழ்க்கை வெறுப்புற்றுதல் தந்தை தாயரிட்ட பணிபிழையேனெனக் காடுபோய் வாழ்ந்தான் போன்றுதல் இளங்கோவடிகள் போலப் பிறர்க் கின்னுசெய்யாமை கடைப்பிடித்தாதல் பிரிந்து போய்த் தனிவாழ்வு மேற்கோடலே வெகுளியி னுகுந் தனிமை வாழ் வெனப்பட்டது.

அவை யெல்லாமூழ்வினையாற் றுமே நேர்வன வல்ல தொருவரானுணர்வினுதல் உணராமையானுதல் செய்துகொள்ளப்படுவன வல்ல வென்பது தோன்றத் தான்புகப் பெற்றென்றது.

சாய்வு - தளர்வு. சார்பின் தீர்ந்து: வினை வினைப்பற்றுக்கோடுகளாகிய சார்பினின் றுநீங்கி. தோய்வு - பற்று.

உலகமெல்லாங் கடந்துநின் றுலகமெல்லா மியக்குந் தூயமருளெனப்பட்ட உயிர்மருளே சொற்பிழம்பாவது. அதன் உப்பாலது பெரும்பொருள். அதனுற் பெரும்பொருளாதலைக் காண்பவர் சொல்லையு மிழத்தல் வேண்டுமென்பதுபற்றிச் சொற்கெட வென்றுன்.

உணர்பவன் றுனே யுணரப்படும் பெரும்பொருளாயக்கால் உணர்வுநிகழாமையின் உணர்வொடுபடுஞ் சொல்லு மில்லாதொழியும். உணரப்பட்ட பெரும்பொருடானுயினுற் கப்பொரு ளுணர்வது முணராதது முணரப்படுவது முணரப்படாதது மாகாமைபற்றிச் சொற்கெடப் போய்ப் பெரும்பொருளைக் கடந்து நிற்கு மெனப் பட்டான்.

இதுவும் புலவரில்லிற் பிறந்த புணரி தான் குறைமுடிக்குமாறுணர்த்திற்று.

௩அ. வல்வினை தீண்டா வாலியோ னெருவன்
வல்லிதி னுழந்து நெஞ்சம் வணக்கிற்
பற்பல பிறவியி னற்பெரும் பேற்றெடு
பிற்படு வீடு பேறும்
பொற்புற வெய்தி நிற்குமென் றுணரே. 276

வாலியோன் - தூயவன். வல்லிதின் - இயன்றவாற்றான். உழந்து - முயன்று. வணக்கின் - தன் வழிப்படுக்கின். அஃதாவது புணர்ப்பு.

புண்ரி தான் பல பிறவிகளிற் பெறற்பால பெற்றமெல்லாந் தன்னிகழும் பிறப்பொன்றினே பெறுதல்கூடும். அங்ஙனம் பெறுதலின் அவையெல்லாவற்றுக்கண்ணு மவ்வொருபொழுதளவினே யுவர்ப்புளதாகும். அதனலவற்குப் புலமை வேட்கையும் புலமைப்பேறு முளவாகும்.

பிற்படு: அப்பேற்றின் பின் னுண்டாகும்.

நிற்கும்: முடிவுற்றமைதியுற்று நிலவும். இப்பாட்டு முடிந்தது முடித்தல்; இங்ஙனங் கூறிப் போந்தவாற்ருற் புணர்ப்புச்செய்க வென மீண்டுங் கூறி முடித்தலினென்பது.

௩௬௯. நோன்பியர் தம்மின் மிக்கோ னுவலிற்
புலவரின் மிக்கோன் வினவரின் மிக்கோ
னனையன் புணரி யாதலி
னினையிற் புணரி யாகியர் நீயே. 277

புலவர் - மெய்யுணர்வுடையோர். வினவர் - வேள்வி வினை செய்து வாழ்வோர்.

புணரியாவா னின்ன பெருமை யுடைய னென்பதனை நினைந்தா யாயி னீபுணரியாகுக வென்பது.

புணரியைப் புலவரின் மிக்கோனென்றது புணர்ப்புக் கைவந்தபிற் புலமை யெய்துத லெளிதாகலிற் புணர்ப்பின் செயற்கருமை நோக்கி யென்க. மெய்யுணர்விரண்டனுள்ளும் ஏனையுணர்வுடையாரையே யீண்டுப் புலவரென்ரு னெனினுமாம்.

நோன்பியரும் வினவருந் தவறுதல் கூடுமாயிற் கழுவாய் செயினன்றி உய்தியிலதாகப் புணரிதவறினுங் கழுவாய்வேண்டாமே கூடுமாகலின் அவ்விருசாராரினும் புணரி மிக்கோனெனப்படுவான். அல்லதூஉம் நோன்பும் வினையும் ஏனையுணர்வீனுமன்றிப் புணர்ப்புப் போன்று மீபுணர்வின மாட்டாமையுமுணர்ந்துகொள்க.

இப்பாட்டுப் புணரியின் சிறப்புக் கூறிற்று.

௭௦. புணரியர் தம்முளும் புகற்சியொ டென்னை
யணைதரு முளத்தொ டார்வம் பெருகி
யூக்கமொ டோவா துள்ளுபு மகிழு
மத்தகு புணரி யாவான்
மெய்த்தக மேலோ னிதுவென் விழைவே. 278

புகற்சி - விருப்பம். ஓவாது - இடையிடாது. புணரியாவான் மேலோன்.

மெய்த்தக - வாய்மைக்குப்பொருந்த.

விழைவு: கொள்கை; ஆகுபெயர்.

இது : இங்ஙனமவனே மேலென்பது.

இப்பாட்டு ஏனோரிற் சிறந்த புணரியருள்ளுந் தலைசிறந்தா னிவ னென்றது.

இருசார்ப் புணர்ப்புஞ் சிறந்தன வென் றெடுத்துக்கொண்டு பின்னரிப்பானமுழுதினுங்கூறப்பட்டது புலவர்க்குரிய புலவயிற் புணர்ப்பேயாம் ; ஏனைவினைவயிற்புணர்ப்பு மேலைப்பாலுள் விளக்கிக் கூறப்பட்டமையினென்பது.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

ஆறுவதுபால்

தன்னியற் புணர்ப்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம்:

ஏழாவது பால்.

புலவயிற் புணர்ப்பு.

க. என்மாட் டார்வ மெஞ்சா நெஞ்சினெ
டென்மாட் டொன்ற வியைந்து நின்றனை
நொசிப்பினெ டென்னை நுண்ணிதி னுனித்தனை
யையமற் றுணர்தி யாமாறு
மெய்யுணர் வதனையான் விளம்பக் கேட்டியே. 279

எஞ்சா: இடையீடுபட்டுக் குன்றாத. ஒன்ற: யான்நீ யென்னும் வேறுபாடின்றி. இயைந்து: ஆண்டானடிமை யென வியைபுற்று. நின்றனை: நெஞ்சசைவின்றி நின்றாயாய்: முற்றெச்சம்.

நுண்ணிதி னுனித்தல்-வேற்றுணர்வு சிறிது மின்றி யொருமை யுணர்வானே நிலைத்துநின் றியைபுபடவாராய்ந்து காண்டல். நுனித்தனை: முற்றெச்சம்.

ஆமாறு - ஆதற்பொருட்டு.

இதனான் மெய்யுணர்வென்பது புணர்ப்பொடு நிகழற்பால கடவுட்காதலின்வழி வரற்பாலதென்பது பெற்றாம். கடவுட்காத லிருவகைத்து: உண்ணிகழ்காதல், புறஞ்செல் காதலென. இவை தம்மு ளொன்றின்றி யொன்று நிலைபெறா. இங்கெடுத்தோதிய காதல் உண்ணிகழ்காதலாம். மெய்யுணர்வாசிரியன்பாலுங் கடவுட் காதலர் பிறர்பாலுஞ் சென்று நிகழுங் காதல் புறஞ்செல்காதலாம். இவ்விருபெருங்காதலு மொருங்குட னெய்தியவழியன்றி மெய் யுணர்வெய்தப் பெறுதன் முடியாமை கண்டுகொள்க. இனிக் கடவுட்காதல்வழிப்படுமுற் புணர்ப்பின்வரூஉமெய்யுணர்வு உய்த் துணர்வளவேயன்றி நுகர்ச்சியுணர்வாகாது. இங்கு நுதலியது நுகர்ச்சியுணர்வு.

இதனான் மெய்யுணர்வுணர்த்துதற் குரிய செவ்வியும் பெறப் படும்.

ஒடுவிரண்டும் உடனிகழ்ச்சிப்பொருண்மையொடு துணைமுதற் பொருண்மையு முடன்பயந்து நின்றன.

புணரிதான் பெரும்பொருளைக் கடவுள்பாலுணர்தலும் பிற வுயிர்க்கணுணர்தலுந் தன்கணுணர்தலும் பின்ன ரிங்ஙன முறையே பெரும்பொருளாகக் கண்ட மூன்றனுள்ளுந் தன்னைக் கடவுட் கண்ணும் பிறவுயிர்க்கண்ணு முணர்தலும் பிறவுயிரைத் தன்

கண்ணுங் கடவுட்கண்ணு முணர்தலுங் கடவுளைப் பிறவுயிர்க் கண்ணுந் தன்கண்ணு முணர்தலு மென விவ்வாற்ருற் றனித்தனி யாகவு முறழ்ந்தும் நிகழு மெய்யுணர்வறுவகைப்படும்.

இவ்வாறனுள்ளும் பெரும்பொருளைக் கடவுள்கண் வைத்து ணர்தலு மங்ஙனம் பெரும்பொருளாகக் கண்டகடவுளைப் பிறவுயிர்க் கண்ணுந் தன்கண்ணுங் காண்டலுமாகிய மெய்யுணர்வு சிறப் புடையதாகலான் இப்பாட்டகத்து மெய்யுணர்வினை 'என்னை நுண்ணிதினுனித்துணர்த' லென்ருனம்பி.

நுண்ணிதினுனித்துணர்தலாவது கடவுளின்பண்பு செயல்களா கிய மாட்சியை நோக்காமே அவனதுண்மையளவி னின்றுணர்த லாம்.

உ. யாதனை யுணரின் யாதும் பின்னிவ
ணோதவு முணரவு முளதன் றன்ன
முற்றுப் புலமையு முற்ரு
வெச்சப் புலமையு மியம்புவெ னிற்கே. 280

பெரும்பொருளை யுணர்ந்தவழி யுணரக் கிடப்ப தொன்று மின் ருகலிற் பெரும்பொருளுணர்வே முற்றுப்புலமை யெனப்படும். வணைப் பொருணூற்புலமையெல்லா மெச்சப்புலமை யெனப்படும்.

முற்ருவெச்சப்புலமை யென வடுக்கிக் கூறியது முற்றுப்புலமை முன் அவ்வெச்சப்புலமை அவ்வளவோடமையாது பொய்படுமளவு மெஞ்சுதலின்.

ஓதவென்றது நூல்களை யோதியுணரவெனவும் உணரவென்றது நூல்களின்றித்தன்னு ணுகர்ச்சியளவிற் கண்டுணர வெனவும் பொருள்படும்.

ங. ஓரா யிரவரு ளொருவ னென்னை
யோரா வுணர வொருமை யாற்றுவ
னுங்கவர் தம்மு ளரிதி னொருவன்
பெட்டாங் கென்னைப் பேணுபு
பட்டாங் குணரும் பான்மையன் மன்னே. 281

ஓராவுணர - ஓர்ந்துணர்தற் பொருட்டு. ஒருமை - புணர்ப்பு முயற்சியு நூலாராய்ச்சியும். ஆற்றுவன் - செய்வான்.

பெட்டாங்கு - விரும்பியவாறு. பேணுபு - பாதுகாத்து. பட் டாங்கு - உள்ளவாறு. பான்மையன் - கூறுபாட்டியல்புடையவன். மன்: அசை; விளியுமாம்.

ச. மண்புன லெரிவளி வான்மற் றேனை
நெஞ்சொடு துப்புப் பற்றெண் நின்ற
வெண்பெருஞ் சினைவிட் டெழுந்தது
பண்பெனு முதல் பட்டின் றதுவே. 282

மண்முதலிய வைந்தும் புலமெனப்படும். அவை யொரோ வொன்று நுண்புலமெனவும் பரும்புலமெனவு மிவ்விருபாலவாம். புலமெனினும் பாரெனினுமொன்று.

மற்று: அசை.

ஐம்புலனுமொருங்குணர்தலும் எண்ணுதலும் ஐயுறுதலுமென் றிம்மூவியல்புடைய துணை நெஞ்செனப்படும்.

பொருள்களைத் தனித்தனித் துணிந்துணர்தலுந் துணிந்துணரப் பட்ட வவ்வப் பொருளாகத் திரிந் துயிருணர்வா னுகரப்படுதலும் நெஞ்சு உடம்பு முதலியவற்றைத் தோற்றித் தாங்கி யுய்த்தலும் வினைக்குப் பற்றுக்கோடாதலு முயிர் வீடுபெறுங்காறும் படைப்பு முதலொரோ வொன்றுய் நிலைபெற்று நிற்றலு மென விவ்வையியல் புடையன துப்பெனப்படும்.

அத் துப்புத் தானே வினைசெய்யுங்காற் பற்றெனப்படும். எனவே நினைவு நெஞ்சின் பாற்படுவது போன்று பற்றுத் துப்பின்பாற்படுவ தென்பது பெறப்படும்.

நெஞ்சு முதலிய மூன்றும் உள்ளமென வழங்கப்படும்.

இவை யெட்டும் பண்பென நின்ற வொன்றன் றிரிபாகலிற் பண்பி யெனப்படும்.

பண்பு, துப்புப், பற்று, நெஞ்செனவிந்நாலுள்ளமு முறையே ஒன்றினின்றொன்று தோன்றிப் பருப்பொருளாய்த் தனித்தனியைம் புலத்தொகுதி யொருமை யெனப்படுவனவாம்.

மூதல் எழுந்தது எனவியையும்.

பண்பெனினும் மூதலெனினும் இயற்கையெனினும் மருளெனி னும் இருளெனினும் ஆற்றலெனினும் அற்றமெனினு மொன்று.

பண்பி யெட்டும் பண்பொன்று மிவற்றையுணரு முயிருமாக விப் பதிற்றுப் பொருண்மை யல்லது ஞாலமென வொன்றில்லை. இவற்றின் வேறாகவுணரப்படுவதி யாதொன்று மில்லை.

அது பட்டின்றென்க. அதுவென்றது பண்பெனுமூதலை. பட் டின்றென்பது தோன்றலதெனவும் அழியலதெனவு மிருபொருளு மீண்டொருங்குபடும்; இரட்டுற மொழிதல்.

ரு. ஏனை மூத லிதுவிதி னேற்ற
மாவி யாக்க மதுகாண் ஞெமிர்தரு
மின்ன ஞால மெல்லாந்
தன்னிற் றூங்குந் தகைமைத் ததுவே. 283

ஏனைமூதல் வழிமூதல். எனவே முதன்மூதல் வேறுண்மை பெறப் படும். வழிமூதலென்பது மேற்கூறியவாறு திரிபுடைமையாற் புன் மூதலெனவும் முதன்மூதலென்பது திரியாது நிற்றலின் வான்மூத லெனவும்படும். வான்மூதவெனப்படுந் தூமருள் சொல்லிசையள வாய்நின் றேனைமூதலெனப்படும் புன்மருளினின்று ஞாலந் தோற்றி நிறீஇ யொடுக்கு மியல்பிற்றும். அஃதுயிர் தன்னைத்தானேக்கி வாழ் தற் கியைந்த வுணர்வுதோன்ற நின்றுயிரோடொற்றுமையுடைத்தாய் நிற்றலானே ஆவியாக்க மெனப்பட்டது. ஆவி — உயிர்.

காண் : முன்னிலையசை ; தெளிவித்தற் குறிப்பின்மேனிற்கும். காணுமின்னஞாலமெனினுமாம்.

ஞெமிர்தல் — பரத்தல்.

இதனான் மூதலென்னு மருள் இருசாருள வென்பது பெற்றும்.

ஈ. மன்னுயிர் பலவும் வரும்பிறப் பிடனென்
முன்னுறு மூதலென் றுன்னுக பொருந!
ஞால முழுதி னுற்றமுஞ்
சால வழிதலுந் தாவில் யானே. 284

வரும் - புலப்படும். புலப்படுதற்கிடனாவது பிறப்பிடனெனப் பட்டது.

முன்னருற்ற மூதலென்றது ஆவியாக்கமென்ற வான்மூதலை. என்மூதலென்க. வனைமூதல் மன்னுயிர்களுடையன.

நாற்றம் - தோன்றுதல். சால - முழுதும்.

தா - கேடு. துன்பமுமாம். இங்ஙனங் கூறிய குறிப்பான் வான் மருள் என்னும் இசைப்பிழம்பு இன்பப்பிழம்பாமென்பதூஉங் கொள்க. வனைமருளென்பது துன்பப்பிழம்பு.

எ. என்னினு மில்லை யாதும் விழுப்பொரு
ளென்னிடை யின்ன வெண்ணரு ஞாலம்
பொன்னிழைப் பொதுத்துக் கோப்பத்
துன்னிய மணியிற் றொகுநிரை யவ்வே. 285

உம்மை : உயர்வுசிறப்பு. யாதும் : முற்றும்மை.

என்னினும் விழுப்பொருளாவது யாது மில்லை யென்க.

எண்ணருஞாலம் - எண்ணில்லாதஞாலம் : எண்ணற்கரியஞால முமாம்.

பொன்னிழை - பொன்னினியன்றநூல்.

பொதுத்தல் - துளைத்தல்.

மணியின் றகுதிநோக்கியும் தூய விறைவற்கொப்பாதல் கருதி யும் நூலிழை யென்னாது பொன்னிழை யென்றது.

துன்னிய - இடையீடின்றி நெருங்கிய. நிரையவ்வே : விரித்தல். ஞாலம் நிரையவென முடிக்க.

பொன்னிழை தானொன்றேயாய்த் தோன்றா துண்ணின்று பல வேறுமணிகளையுந் தொகுத்து நிரைத்துத் தாங்கிப் பற்றுக்கோடா மாறு போன்று கடவுளுந் தானொருவனேயாய்த் தோன்றா துண் ணின்று பலவேறு ஞாலங்களையுந் தொகுத்து நிரைத்துத் தாங்கிப் பற் றுக்கோடாவனென விரித்துரைத்துக் கொள்க.

முழுமுதற் கடவுட்கு முன்னர்க் கூறிய சொல்லிசைப்பிழம் பாகிய ஆவியாக்கமென்ற வான்மூதலே யாக்கையும் பொறியு நில னுந் துப்புரவுங் கிழத்தியுமாமெனக் கொள்ளப்படும்.

எனவே கடவுள்வான்முதலென்னுந்தன் ஆற்றலானே, இங்குக் கூறியவாறு ஞாலமெல்லாந் தாங்கி நிற்றல் கருதிக்கொள்ளப்படும்.

தொகு நிரைய - தொகுத்த நிரையா யமைந்தன.

அ. தண்புன லகத்துத் தாழ்சுவை யானே
வெண்சுடர் செஞ்சுடர் மேவொளி யானே
பனுவலு ளெல்லாம் பனுவல் வித்து
முனைவாழ்த் தென்னு முன்னுரை யானே
மண்ணின் மணனு மக்களி னுண்மையும்
விண்ணி னிசையும் வெவ்வெரி யொண்மையு
மன்னுயிர் மாட்டு வாழ்வும் யானே
நோற்போர் மாட்டு நோன்பும் யானே
யாவுயிர் தம்மையும் யாணுற வீன்று
வீவறக் கிடக்கும் வித்தும் யானே
தெள்ளிய ருணர்வின் றெளிவும் யானே
யொள்ளியர் மருங்கி னொட்பமும் யானே
விழைவு வேட்கை விடுக்க வல்ல
வலியர் தம்முழை வன்மையும் யானே
திறப்படு மன்னுயிர்த் திறத்தி
னறத்தொடு முரணு வார்வமும் யானே. 286—289

இதன்கட் கடவுள் தானல்லாதவற்றை யெல்லாம் யானென்றது அவற்றோடெல்லா மவற்றுக்கோருயிரா யின்றியமையாது அவையே தானாயுடனிற்கு மொற்றுமைவழக்குப்பற்றியும் புலப்படும் பொருட்கண் அப்பொருட்டன்மையாய் அவையிற்றை நுகர்வுழித் தோன்று மவ்வுயிர்களே போலப் புலப்படுமாருயிர்க்கண் அவ்வுயிர்த்தன்மையாய் அவையிற்றை நுகர்வுழித் தோன்றுமவ்வொப்புமை வழக்குப் பற்றியுமாமென வுய்த்துணர்ந்து கொள்க.

தாழ் — தங்கிய, மேவுமொளியென்க. பனுவல் — நூல். முனைவாழ்த்து — முதல் வாழ்த்து. கடவுளை வாழ்த்துதன் முதலிய வாழ்த்துக்களுளெல்லா முதலாவதுவாழ்த்தாய்ப்பொதுவாதலின் ஓம் என்னும் வாய்மை முனைவாழ்த்தெனத் தருவது. எல்லா நூற்பொருளையுந் தொகுத்துணர்த்துதல் பற்றி ஓமென்பது எல்லா நூல்களுக்கு முன்னுரைக்கப்படுதலின் முன்னுரை யெனப்பட்டது.

வாழ்வு — சாவாது பிழைத்திருத்தல்.

யாண் — கவின்.

ஒள்ளியர்—பிறருளங்கொள வுணர்த்தவல்ல வறிவு விளக்கமுடையவர்: ஒட்பம் அவ்விளக்கம்.

விழைவும் வேட்கையு முள்வழி அச்சம் நிகழுமாகலின் அவை யில்லாமையே அஞ்சாமை யென்னும் வலிமையாமாறுணரப்படும்.

திறப்படும் – வேறுபடும்: தனித்தனியாகிய வென்றவாறு. மன்னுயிர்த்திறத்தி னென்புழித் திறம் தொகுதி யென்க.

இனித், தொகுதிப்படு மன்னுயிர்களின்கண்ணென முன்னது தொகுதியெனவும் பின்னது ஏழாவது வேற்றுமைச்சொல் லெனவுங் கொண்டு அத்து மின்னுஞ் சாரியைமயக்க மெனினு மமையும். பெயர்ச்சொற்கும் வேற்றுமை யிடைச்சொற்கு மிடையின் வரக் கடவன அவ்விடைச்சொற்கும் அதனைமுடிக்கும் பொருணிலைக்கு மிடையின் மயங்கி வருதலான் அவை சாரியை மயக்கமெனல் வேண்டும்.

அறத்தொடு முரணு வார்வ முதலாயின கடவுளுண்மைநினை வுணர்வொடு நிகழற்பாலவென்பது பெறப்படும்.

கூ. உண்மை புன்மை மைம்மை யென்ற
தன்மை மூன்றன் சார்பிற் படூஉ
மவற்றுக் கின்றி யமையாச் சார்பி
யானே யானவற் றில்லைக்
கோனே யென்வயிற் குவைஇய வவையே. 290

உண்மையெனினும் ஒண்மையெனினுஞ் செம்மையெனினும் முதற்பண்பெனினு மொன்று. புன்மை: இடைப்பண்பு. மைம்மை: கடைப்பண்பு.

உணர்வுமின்பமு மாதற்றன்மை உண்மைப் பண்பெனப்படும். கலக்கமு முயற்சியு மாதற்றன்மை புன்மைப்பண்பெனப்படும். மயக்கமு மடியு மாதற்றன்மை மைம்மைப் பண்பெனப்படும்.

எல்லாயாக்கை பொறி நிலந் துப்புரவுகளும் முப்பாற்பண்பி னின்று முண்டாயவே.

சார்பு – பற்றுக்கோடு.

யானவற்றுக்கணில்லை; அவைதாமென்னிடங் குவிந்துள்ளன வென்பது.

கO. பண்பவை மூன்றன் பாற்பட வரூஉ
மெண்கழி யெண்ணம் யாவற் றானு
மும்மை ஞாலமு மம்மர் கொள்ளுமா
லின்ன வாற்ற னிவற்றின் வேறுயர்ந்
தின்னே மன்னு மென்னை
யன்னோ வளிய வறிகின் றிலவே. 291

எண் கழிந்த நினைவு: அளவில்லாத நினைவென்பதாம்.

ஞாலம்: ஞாலத்துயிர்கள், மம்மர்—மயக்கம். மயக்கமாவது முப்பாற் பண்புகளின் பாற்படுதல்.

இன்னவாற்றான் - இங்ஙன மயல்கொள்ளுந் தன்மையானே.

இவற்றின் வேறாக வுயர்ந் திவ்வாறே நிலைபெறு மென்னை எனக.

இன்னே - யென்ற சுட்டு நெஞ்சறிசுட்டு.

இன்னே மன்னுதலாவது பண்பின்பாற்படாமையானே கனுக்கனு முதலிய பாடுகளின்றி யொருபெற்றியே யெப்பொழுது மிருத்தலாமென்க.

அன்னோ : அருளிற் குறிப்பிடைச்சொல்.

அளிய - இரங்கத்தக்கன.

கக. இயம்பிய வியல்பா மிம்மூப் பண்பின்
பிழம்பெனப் பெற்ற பேரிரு ளென்னு
மென்மருள் கடத்த லெளிதன்
றென்னுழைப் புகல்புக் கிருப்போர் கடப்பவே. 292

இயல்பாம் பண்பு : ஒருவராற் செய்யப்படா தமைந்தியல்பாகும் பண்பு.

பிழம்பு - தோற்றம் ; திரளுமாம்.

பேரிருள் : இருட்கு மிருளாய் முச்சுடரானும் போக்கப் படாதது.

அதன் வழிப்படாத விறைவன் வழிப்பட் டிருத்தலின் மருள் கடவுளது மருளெனப்படும்.

புகல் - அடைக்கலம்.

இறைவனை யடைக்கலம் புகுவோர் அவனது மெய்யுணர்வைத் தாமு மெய்தலின் மருள் கடப்ப.

கஉ. கடையர் மடவர் கயவர் தம்மைக்
கடவும் பொய்ம்மருள் கவர்ந்த வுணர்வாற்
றகுவர் தன்மையுஞ் சார்பும்
புகுவ ரென்னைப் புகல்சா ரலரே. 293

கடையர் - புலையர். மடவர் - அறிவிலார். கயவர் : இழிசெயலாளர்.

கடவும் - நடத்துகின்ற. மருள் கவர்ந்த வுணர்வு : உணர்வில்லாமை : சுட்டுணர்வு.

தகுவர் : வானோர்க்கு மாறுயினர்.

தன்மை - பண்பு. சார்பு : அவரை வழிபடுதல்.

புகல் சாரலர் - அடைக்கலமடையார்.

இறைவன் றன்னைப் புகல்புகாதார் மருளின் மயங்கிக்கெடு மாற்றை யெடுத்துக்காட்டி வற்புறுத்தவாறும்.

கங. நண்ப ! வென்னை நன்கு வழிபடு
மன்பர் நால்வ ரவர்யா ரெனினே
நலிவுற் றோரு நல்லுணர் வீண்ட
முயல்கிற் போரு மொய்பொரு ளீட்டும்
விழைவுற் றோரு மெய்யுணர் புலவரு
மென்றிவ ராவ ரிவருட் புலவ
ரென்றுமெற் காதலித் தின்புணர்ப் பெய்தி
யொன்றுபட் டிருத்தலி னுயர்ந்தோ ராப
வெனக்கவர் தாந்தவ வினிய
ரவர்க்கெனின் யானு மத்தகை யேனே. 294—295

நலிவுற்றோர் : நோய் வறுமை, பகை முதலியவற்றானலியப் பட்டோர்.

ஈண்ட - பெருக.

நல்லுணர்வீண்டமுயலுதலாவது பன்னூலும் விழைந்து பலருட னும் பலகாலுங் கற்றல்.

தவவினியர் - மிகவினியராவர்.

அத்தகையேன் — அங்ஙனமினியெனுவேன்.

கச. நால்வரும் வீறுகோ ணண்பர் பெரியர்
நால்வருள் வைத்து நாடுங் காலை
யேனை மூவரு மென்றம ராவர்
புலவன் யானெனல் பொருந்துமென் கொள்கை
புலவன் புணர்ப்பொடு புல்லித்
தலைநன் சார்பெற் றவிர்ந்துதா னிலனே. 296

வீறு - பிறர்க்கில்லாத பெருமை. வைத்தென்பதொருசொன் னடை.

புலவனைப் பின்விகத்தலின் ஏனைமூவரென்றது. தான் ஏனைத் தவிர்ந்து தலைநன்சார்பில னெனவியைக்க.

தலைநன்சார்பு - தலைமையாகிய நல்ல பற்றுக்கோடு.

கடு. அளக்கரும் பல்பிறப் பகன்றுபோந் துயர்ந்து
முடிக்கிய வந்த முற்றுப் பிறவியி
னிருவினை யெய்த்துக் கருவற முயன்று
புலவ னாகிப் புனையுல கெல்லா
மிறைவ னாகுமென் றெற்புகல் புக்கு
வருந்தலின் றென்கண் வாழ்குவன்
பெருந்தகை யவனரு மருந்தனை யானே. 297

முடிக்கிய : பிறவிமுடித்தற்பொருட்டு. முற்றுப்பிறவி - ஈற்றுப் பிறப்பு.

இருவினையெய்த்தல் : இருவினையானு மமைதி யின்றென அவை யிற்றை வெறுத்து விட்டொழியக் கருதுதல். இதனை இருவினை யொப்பென வழங்குப.

கரு - பிறப்பு. புனையுலகு : நினைவளவாகத் தோன்றுமுலகு ; தளை விலங்கு பூணு முலகெனினுமாம்.

பெருந் தகைமையுடையவன். அருமருந்தன்னனென்பது.

இதனாற் புலவர் சிறந்தவாறு தெரிக்கப்பட்டது.

கசு. பற்பல விழைவிற் பற்றுக் கோட்படும்
புற்கெனு முணர்வொடு பொறிவழிச் செல்லுந்
தத்த மியல்பொடு சாரத் தாமே
வைத்த கட்டளை வழியிற் பிழையா
தணங்குபல் வேறுவே றழைத்து
வணங்குவர் தாமுண் மடைபல கொடுத்தே. 298

புற்கெனுமுணர்வு - பொலிவில்லாதவறிவு.

அவ்வவணங்குகளே வணங்குமுறை யெல்லாந் தாந்தாமே வரைந்து கொள்ளப்பட்டன.

மடை: அணங்குகட்கென வாக்கு முணவு. ஒடு: ஆன்பொருட்டு. இயல்பொடு: உடனிகழ்ச்சிப் பொருட்டு.

இதுவும் பிறரிழிபுகூறுமுகத்தாற் புலவன் சிறப்புக் குறித்தது. பிறர்: எனேமூவரும்.

கஎ. எவ்வெவ ரெற்றினு மிடையா வூக்கமொ
டெவ்வமி லன்பி னெவ்வெப் பிழம்பிடைச்
செவ்வனஞ் சிறப்புச் செய்வான் விழைபகொ
லவ்வண மவ்வப் பிழம்புகொ
டவ்வவர்க் களிப்ப லவாவி யாங்கே. 299

எற்றினும் – எதனுனும். இடையா—தளராத. அன்பு நிகழ்வுழி யின்பமல்லது துன்பமுளதாகாமையின் எவ்வமி லன்பெனப்பட்டது.

சிறப்பு—வழிபாடு.

அவ்வப்பிழம்பு–அவரவர் நினைந்து வழிபடும் பிழம்பு. அவரவர் அவாவியவாறே யளிப்பலென்க.

இதனுற் புலவன் எனேமூவர்போலாது பிழம்பிடையன்றி யாண்டு மொப்பப் பற்றற நிற்குநிலையிடை முன்னிலையுணர்விழந்து வழிபடு மென்பதூஉம் பெறுதும்.

எனே மூவருந் தன்னே வழிபடுமா றிவ்வாறெனவு மவ்வவழி பாட்டுக் கியையவே தன்னுற் பயனளிக்கப்படுமல்லது பிறவாறு பயனளிக்கப்படா வெனவும் நம்பி கூறினன்.

கஅ. யாவருந் தாந்தா மேவரு மருங்கி
னீவருங் காத னேர்வரு மியல்பான்
வேறுவேறு முறையாற் சாறயர்பு செல்ப
வேறுவேறு மொழிசெயன் மிசையூ ணெக்கலொடு
வேறுபல வேண்டுவார் வேண்டுவ
கூறுபல செய்து கொடுக்குவென் யானே. 300

மேவரு மருங்கின் - அமருங் கூற்றுன்.

நீவரும் - நீக்குதலரிய. நேர்வரு மியல்பான் - தலைப்படுந் தன்மையானே. வேறு வேறு - தனித்தனி.

சாறு அயர்பு - விழாக் கொண்டாடி. செல்ப - ஒழுகுவர்

மிசையூண் - உண்ணு முணவு. ஒக்கல் - சுற்றம். ஒக்கலொடு சாறயர்பு செல்ப வென மேலே கூட்டுக,

ஒருவர் வேண்டுவதனைக் கொடுத்தலாற் பிறர்வேண்டுவதனைக் கொடுக்கமுடியாமை நேருமாகலின் வேண்டுவனவற்றைக் கூறுபல செய்து கொடுத்தலே செயற்பாலதாகும்.

எனவே ஒருவர் வேண்டுகோள் பிறருடைய வேண்டுகோட்கு மாறுகாதிருக்குமளவாகவே பெறப்படுமாதலின் அவ்வளவே வேண்டுதல் வேண்டும். அஃதன்றி யொவ்வொருவரு முலகாளவேண்டுமென வேண்டுவாராயின் அவர்க்கெங்ஙனங் கடவுள் உலகமெல்லாங் கொடுத்தலொல்லும். அதனால் உலகைப் பகுத்துக் கொடுத்தாட்சி புரியுமா றமைப்பான். ஒருவரா யுலகமெல்லாமாட்சிபுரியவேண்டு மென்று நினைவாரெல்லாந் தோல்வியு மிளிவரலுஞ் சாக்காடுமே யெய்துதல்கூடுமென்பது பெற்றும். இங்ஙனமேனைப் பயனையு முய்த்துணர்ந்து கொள்க.

கசு. புல்லறி வாளர் புகலு மூதிய
மவ்வா வடைய வழிதருந் தன்மைய
வணங்கு காதல ரணங்கு சார்ப
பிணங்கு பேணு தென்னை
வணங்கு காதலர் மரூஉப வென்னே. 301

புகலும் – விரும்பும். அடைய – எல்லாம்.

அணங்கு: வேறு வேறு கடவுளர்.

பிணங்கு: அஃதவர்கடவுள் இஃதெங்கடவுளென்றாற் போல வழக்காடுதல்.

அவ்வக் கடவுளாகிநிற்பா னொருபொதுவனே யென வென்னை வணங்கு மன்ப ரென்னை யடைவரென்பதாம். கடவுளை வணங்குதலாவது உயிர்ப்பொதுத்தன்மை யுடற்பொதுத்தன்மைகளை யுணர்தலும் அதனால் அவ்வுணர்வுடையோன் றன்னுணர்வு முன்னிலை யுணர்வுகளை யிழந்துதுயிலுதலுமாம். உடம்படுமெய்யானன்றி உயிரோடுயிர்க்குப் புணர்ச்சிகூடாமையிற் கடவுளைமருவுதலாவன கடவுளை யுணருமுயிர் கடவுட்காதலின்க ணமையுந் தற்பெருங்காட்சியின்ப நுகர்வு தலைப்படுதலுங் கடவுளின் றிருவருள்யாக்கை யெனப்படுந் தூமருளாற்றற் பேரின்பந் துய்த்தமைதலுமாம். இக்கூற்றானே தனியுயி ரிரண்டுமுதலியபல வொருங்குடனுளவாதல் கூடாதென்பது பெறப்படவே முதலாது மன்னு மியற்கை யுண்மைச் செம்மையுயிராவ தொன்றேயாமல்லதில்லையென்பது தமிழரிடை வழங்கிய முடிபாதல் காண்க. எனவே ஒன்றல்லா வுயிரெல்லா முயிர்ப்போலிகளென்பதாகும்.

இதனாலேனை மூவர்வழிப்பாட்டி னிழிபு நன்கு விளக்கப்பட்டது.

உ0. கொன்னே யற்றந் தெற்றெனல் கொள்கென
வென்னை யெண்ணுவ ரிழுதை மாக்கண்
முன்னுங் கேடுமின் முழுமுதற் பான்மை
யென்ன துண்மை யென்கில
ரின்னுந் தேரு விடையீட் டானே. 302

கொன் - பயனின்றி. இடைச்சொல்லீறுதிரிந்தது.

அற்றம்—மறைவு. தெற்றெனல் - வெளிப்பாடு. கொள்குளன— கொள்வேனென்று. பிறப்பு மிறப்புமு முடையேனென்றென்பது.

இழுதைமாக்கள்—அறிவிலராகிய மாந்தர்.

முன்—தொடக்கம். பான்மை—தன்மை.

முன்னுங்கேடு மில்லாதவென்க.

எனது : விரித்தல்.

இடையீடு—தடை. இன்னுந் தெளியாமைச் செய்யு மிடையீடு டுடைமையான் இழுதைமாக்கண் முன்னுங் கேடு மில்லாமையே யெனதுன்மைத்தன்மையெனக் கருதுகின்றிலரென்றவாறும்.

தன்பிறப்பிறப்பினைப் பிறப்பிறப்பில்லாமையாகுமென்னர் ஆரா யிற்றானே ஞாலமுழுதுமா யிருத்தலின் ஞாலமுழுதின் றோற்றக்கேடு கடவுளுடைய தோற்றக்கேடுகளெனக் கொள்ள வமையு மென்பது தேருமை தோன்றத் தேரு விடையீடு கூறப்பட்டது.

உக. யாவற் றுக்கு ஞாயி றனையே
ஞகக் கவித லாற்று தாகு
மருட்புணர்ப் பென்னும் வல்லிருண் மன்ற
பிறப்பொடு சாக்கா டுரைக்க லாகா
வென்னை யன்ன னென்ன
தென்னை யிருந்தவா வேழை யுலகே. 303

ஆக : இவ்வாறுதலால்.

கவிதல்—சூழ்ந்து மறைத்தல்.

மருட்புணர்ப்பென்னும் வல்லிருள் கவிதலாற்றுதாகு மன்ற வென மேலே கூட்டுக.

மன்ற - ஒருதலையாக.

இறைவற்கு மருளென்னுந் தன்னுற்றலின் செயல் இறைவன் செய்யும் புணர்ப்பு கொசிப்புமாதலான் மருளென்னுது மருட்புணர்ப் பென்றவாறுணர்க. இதனன் ஞாலத்தோற்ற நிலை யொடுக்கமுதலி யன வெல்லா மிறைவனுடைய வினைவயிற்புணர்ப்பெனப்படு மென் பது காண்க.

ஒருவற்குத் தன்னுடம்பு துன்பமு மயக்கமுந் தருவதாயினும் புணர்ப்பும் புலமையும் பயக்குங்கால அத்துன்பமு மயக்கமுந் தோன்றுவாய்க் கெடுமாறுபோன்று இறைவற்கு மருளு மருளினுகு ஞாலமுந் தன்னுடையவாய்த் துன்பமு மயக்கமுந் தருவவாயினும் அவற்குப் புணர்ப்பும் புலமையுப் பயத்தலானே அவை அவற்குத் தோன்றுவாய்க் கெடுவவாகுமாதலின் ஞாயி றனையேனுக வல்லிருள் கவித லாற்று தென்றான்.

அன்னன் : பிறப்பிறப்புடையேனுயினு பிறப்பிறப்பில்லாத கடவுளாவேன்.

ஏழையுலகு - அறிவில்லாததாகியவுலகு.

ஏழையுலகு என்னை யன்ன னென்று இருந்தவா றென்னை யென்க. இருந்தவாறு: கடைக்குறை.

என்னை: எத்துணை யிரங்கத்தக்கதாகின்றது.

இவ்வாறு கடவுளையுங் கடவுளைக் கண்டாரையு முண்மையா னுணர்தலில்லை யெனின் மக்கடம்மறியாமையி னுழலுதலை விடலாகாது துயருறுவராதலின் ஏழையுலகிருந்தவா றென்னை யென விரங்கினன்.

உஉ. வந்தவு மேனை வாரா நிற்பவும்
வந்தில வுளப்பட மன்னுயி ரெல்லாம்
யானென வுணர்வேன் யானெனைத்
தானென வுணர்வோன் றானிலன் மன்னே. 304

முப்பொழுதையுயி ரெல்லாவற்றையும் யானென வறிதலாவது அவ்வவற்றினுடம்பு வேறுபாடு நோக்கி வேறு வேறு கருதா துயிர் நிலை பொன்றனையே குறிக்கொண் டொன்றுபடநோக்குதலு மவ்வுயிரெல்லாந் தன்னையின்றியமையாதுதான்சான்றாகத்தன்முனிலையளவா னுளவாதலுந் தன்னின் வேறாகாது தன்னோ டொப்பத் தோன்றுதலு முணர்தலாம்.

உடம்புகொண்டு மக்களோ டொப்பக் கூடி வாழ்ந்து போது மிறைவனை அவன் றானே தன்னை யுணர்த்தினு முணராமையுந் தொடர்பு பற்றி நனியன்பு மீதூரு மொரோவொருவ ரவனைக் கடவுளென வுணர்தலு முண்டாயினும் அதுவு மவனுணர்த்தவன்றித் தாமே யுணர்தலாகாமையானுந் தானென வுணர்வோன் றானில னென்றான்.

அதனை லறியாமையிற் றீர்க் தின்புற்றிலனெனக் கழிவின்க ணிரங்குதலின் மன் கழிவிரக்கக்குறிப்பின்கண் வந்தது.

தானென்பதுயர்திணைத் தொகுதியொருமை.

பிறப்பெய்திய கடவுளையிவன் கடவுளாகல் வேண்டுமென வுணரு செவ்வியுடையோ னெதிர்ப்பட்ட வளவினே தான் அவனை முன்பு காணுதிருந்தும் தன்னைத் தான் காண்பதுபோலும் பயிற்சியுடைமை தோன்றுமாகலின் எனைத் தானென வுணர்வோ னென்றவாறுமெனவுணர்க. இன்னுங் கடவு டானுகவே யிருத்தலாகிய நுகர்வுந் தோன்று மென்க

உங. விருப்பஞ் செற்றமென் றிவற்றி னெழுஉ
மிரட்டை மயலி னெனைத்துயிர் தாமும்
பெரிது மாழ்குபு பிறவி
புகுது மாலோ புன்கண் புகவே. 305

இரட்டை: இன்பத் துன்பம்.

இரட்டைமயலாவது இன்பத்துன்பம் எனவெனப்பற்றுதல்

மாழ்குபு - மயங்கி.

பிறவி புகவே துன்பமு முடன்புகுது மென்க.

புன்கண் - துன்பம். ஆலும் ஓவும் அசை.

அங்ஙன மயக்கந் தோன்ருவாறு கடவுளை யுணர்தல்வேண்டு மென்பது குறிப்பு.

உச. அல்வினை கழிய நல்வினை செய்யூஉச்
செல்லுறு மக்க டிண்ணிய நோன்பினர்
பிணையன் மயக்கம் பிதிர்ந்தெனை
யணையல் செய்சிறப் பாற்றுவ ருவந்தே. 306

அல்வினை: நல்வினையல்லாதவினை. அல்வினை கழிதலாவது நல்வினை பயிலாநிற்ப வவை தாமே சார்பின்றி யொழிதலாமாகலின் அல்வினை கழிய நல்வினை செய்யூ வென்றதென் றுணர்க.

செய்யூஉ - செய்யாநின்று. செல்லுறும் - ஒழுகுகின்ற. திண்ணிய - நிலைதளராத. நோன்பினராயென்க.

பிணையல்: விழைவுவெகுளி இன்பத்துன்பமென்ருற் போலு மிரட்டை.

பிதிர்ந்து - சிதைந்து: கெட்டென்பதாம்.

அணையல் - தழுவுதல். சிறப்பு - வழிபாடு. ஆற்றுவர் - செய்வர்.

இதனற் கடவுளை யுணராத மயக்கந் தீருமாறு கூறப்பட்டது.

எனவே யித்தகையோ ரல்ல தேனையோர் யான் பிறந்து வாழினு மென்னைத் தம்மோ டொப்பவ னெருவனெனவே புறக்கணித்திருந்து தமக்கு வலிந்து கிடைக்கலுற்ற சிறந்த நலம்பலவு மிழந்தவராவரென நம்பி குறிப்பித்தான்.

உரு. மற்று மூப்பொடு மாய்விற் றீரவெற்
பற்றுக் கோடெனப் பற்றி முயலுந
னிதுவெனத் தன்னிய லினிதி னுணரு
முதுவெனப் பெரும்பொரு ளுணரு
மதுவது வெனவினை யனைத்து முணருமே. 307

மற்று: வினைமாற்று; அசையுமாம்.

இன்: நீக்கம். என்னைப் பற்றுக்கோடாகப்பற்றி அதற்கியைய முயன்றெழுகுமவன்.

தனியுயிராகிய தன்னியலென்க.

வினையனைத்து முணர்தலாவது வினையெல்லாமியற்கையெனவுந் துன்பமெனவு மியைபில வென்வுங் கருதி அவையிற்றுக்கட் பற்றின்றி நினைப்பற்றெழிதல்.

இதனற் கடவுளை யுணர்தலானே மெய்யுணர்வெல்லாந் தாமே வந்தியையுமெனக் கடவுளை யுணர்தற் சிறப்புக்கூ றினன்.

உகூ. தன்னியல் பேணி மன்னுயி ரியல்பு
பன்னிய வேள்விப் பாற்படு வினையோ
டென்னை யுணர்த லின்னுயிர் மெய்வித்
டிறக்கு மெல்லையி னெழினும்
புணர்க்கு முணர்வுடைப் புலவ னவனே 308

தன்னியல்புணர்தல், மன்னுயிரியல்புணர்தல், வேள்விப் பாற்படு வினை யுணர்த லென உணர்தலென்பதனை யேனை மூன்றனேடுங் கூட்டிக் கடைநிலைவிளக்காக்கி விதலை யாப்புப்பொருள்கோள்பட வுரைக்க. விதலையாப்புப்பொருள்கோளெனினும் அளைமறியாப்புப் பொருள்கோ ளெனினுமொன்று.

இங்குப் பெறப்பட்ட நாலுணர்வு மேலைப்பாட்டிற் கூறப் பட்டன.

மெய்யுணர்வெல்லா நான்காகத் தொகுத்துக் கூறினன்.

இதனன் மெய்யுணர்வு, துஞ்ச மெல்லைக்கண் ஒருவற்குண்டாயி னும் வீடுபேறு கிடைக்குமென்பதாயிற்று.

புணர்த்தல்: நெஞ்சினைச் சிக்கென வடக்கல்.

இதுவுங் கடவுளை யாராய்தற் சிறப்புக் கூறிற்று.

கடவுள் ஞாலந்தொழிற் படுத்துமாறு மங்னனந் தொழிற்படுத் துங்காலை அத்தொழிலோ டவற் கியைபின்றுமாறு மவனேனையெல்லா வுயிர்க்கும் பொதுத் தன்மையாகி அவை யெல்லாவற்றுக்கண்ணு மொப்பத் திரிபின்றி வதியுமாறு மவனிவ்வாறு தன்மைக்கணின் றுயிர்களை யுணர்ந் துணர்த்துத லன்றி யுடம்புகொண்டு பிறந்தருளி முன்னின்றுணர்ந் துணர்த்துமாறும் பிறப்பில்லாத கடவுளாமாறு மென்றிவை யுணர்தல் கடவுளையுணர்தலா மென்பதிப்பாலுட் பெறப்பட்டது.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

ஏழாவதுபால்.

புலவயிற் புணர்ப்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைமதி. ஓமமைமதி. ஓமமைமதி.

ஓம்:

எட்டாவது பால்.

எஞ்சாப் பெரும்பெயர்ப் புணர்ப்பு.

க. உதுவெனும் பெருஞ்சார் பெதுவென வுணர்கோ
வெதுவென வுணர்கோ தன்னிய லாக்கம்
வினையெனப் படுவது மெனையதென் றுணர்கோ
முன்னிலை யாக்க மென்னவென் றுணர்கோ
வணங்கி னுக்கமு மறிய கில்லேன்
வேள்வி யாக்கமும் விளங்குமா றுணர்த்துக
விறக்கு மெல்லை யேய்ந்தக் கடைத்தும்
புணர்க்கு முணர்வுடைப் புலவர்க் கானு
மிம்பரிவ் யாக்கையு ளெங்ங
னும்பரின் றலைவ வுணரப் படுதியே. 309, 310

பெருஞ்சார்பென்பது உணர்வார்தம் முணர்விழந்துணரப்படுவதாகலின் உதுவெனச் சுட்டுதற் குரித்தாயிற்று. இங்ஙனமாகிய உண்மைத்தன்மைச்சுட்டு வையத்து வழங்கும் வழக்குமொழி செய்யுண்மொழி யெல்லாவற்றுள்ளுஞ் செந்தமிழ் மொழிக்கணல்லதில்லைப்போலும்.

எது—எத்தன்மையது. உணர்கு: தன்மை யொருமை. ஓ: அசை.

தன்னியலாக்கம்: உயிரியல்பாமாறு.

எனையது — எத்தன்மையது.

முன்னிலை: யாக்கை நெஞ்சு புலமுதலாய செத்தை.

அணங்கு — புத்தேளிர். புத்தேளிரானுவ தென்க. வேள்வியாக்கம் — வேள்வியாமாறு.

எய்ந்தக் கடைத்தும் — சார்ந்தாலும்.

ஆனும்: ஆயினும். எங்ஙன் — எவ்வாறு.

இது வில்லி மீண்டும் நன்கு விளங்கிக்கோடற்கு வினவுமாறு.

இதனுட் போந்தவினு ஏழ்.

உ. உயர்வற வோங்கி யுலப்பில தாவ
துதுவெனும் பெருஞ்சார் புண்மை யென்க
வுன்னுவோன் ருஅ னுளனு மாறு
தன்னியல் பாக்க மென்னநன் குணர்தி
யுயிருண் டெனவுயி ருண்மைத் தன்மை
யுணரிய தோன்று மியல்பு வினைகா
ணழிவுபாட் டியல்பு முன்னிலை யாக்க

மாள்வினை யாள ராண்மை தானே
யாடுகொ ளணங்கி ஞக்க மென்ப
வென்ன ராயினு மிவ்வுட லகவயி
னென்னை யிவ்வுடற் கிழவோ னெனக்கண்
டுண்ணு முணவும் பருகும் புனலு
மென்ன வாகுக வென்ற
லன்ன வேள்வி யாக்க மெனலே. 311, 312

உலப்பு – கேடு. பெருஞ்சார்பு – பெரும் பொருள். சார்பாகிய வுண்மை. உன்னுவோன் : உணரு முயிராயினேன். உன்னுதல் : ஈண்டுணர்தன்மேற்று.

உணரிய – உணருமாறு. உணருமாறு தோன்றுமியல்பாவன : நினைத்தல், சொல்லுதல், செய்தல், நுகர்தலென்பன.

ஆள்வினை – இடைவிடா முயற்சி. ஆளர் – ஆட்கள். ஆண்மை : ஒன்றனை யேறட்டு நடத்துதற் றன்மை. ஆடு – வென்றி. அணங்கிணுக்கம் – அணங்கினுகுந்தன்மை.

என்னவாகுக – என்னுடையவாகக்கடவ.

வேள்வியாக்கம் – வேள்வியாமாறு.

இதனுள் வினவாறன்விடை காண்க.

௩. துஞ்சுறு போழ்தினு மஞ்சுறு கின்றிலன்
மைஞ்ச வென்னை மறக்கில ஞகி
யென்னினை வின்கட் டன்னுட னீப்போ
னென்னிய லெய்து மென்னெனின் மறுமை
யிறக்கு மெல்லையி னெவ்வுயிர்க் காயினு
மடுக்கு நினைவோ டடுக்குங்
கடுக்கு முணர்வு களைதன் மற்றே. 313, 314

துஞ்சுறுபோழ்து – இறக்கும் பொழுது. மைஞ்ச-மைந்த : இளஞனே ! வலியோயென்றுமாம்.

தன்னுடலை நீப்போனென்க.

என்னிய லெய்தும் – என் னியல்பைப் பெறுவான்.

என்னெனின் – எதனுலெனின்.

அடுக்கு நினைவு – நேர்படு நினைவு. நினைவோடு அடுக்கும் – நினைவுக்குத் தகுவதாயிருக்கும். அடுக்கும் : முற்று. மறுமை நினைவோடடுக்குமென முடிக்க.

இறக்கு மெல்லைக்கண் அவ்வுயிர் யாங்ஙன நினைக்கு மாங்ஙன மறுமை யடையும். அதனுல் என்னினைவின்கட டன்றுடணீப்போனென்னியலெய்து மென்ருன்.

கடுக்குமுணர்வு – ஐயுறு மறிவு. களைதல் – விடுக. மற்று: அசை. இதன்கணையப்படவேண்டா வென்ருன்.

இஃதேனைவிடை.

ச. இப்பரி சம்ம விடையீ டின்றி
யொப்பரு வென்னை யுன்னினை யாகி
நின்னுள முணர்வொ டென்னுழைத் தரீஇ
நையனீத் துஞற்றுக ஞாட்பினை
யையநீ யென்னை யணைதல் வாயே.

இப்பரிசு: இங்ஙனந் துஞ்சும் போழ்தை நினைவுக் கியைய மறுமையாகு மென்ற விவ்வாறு.

இடையீடின்றி யுன்னுதல் இறக்குங் காலை வந்துதவுதற்கு.

தரீஇ - தந்து. நையல் நீத்து, ஞாட்பு - போர். ஞாட்பினையு ஞற்றுகவென்க.

வாய் - மெய்.

ரு. எங்க ணாயினு மேகுவ லென்ன
தங்கண் வதிந் தல்லவை கடிந்து
புணர்ப்பு நவிலும் போக்கள வாகி
நினைப்பு நீள நினையா நிற்போன்
சொற்றகு புலவனைத் தொன்மூ தாளனைக்
கட்டளை மன்னைக் காட்சிக் கெய்தா
மொய்யினு நுணங்கிய மொய்யா மொய்யினை
வையுல கீன்று வழங்கும் வள்ளலை
யெண்ணுதற் கெட்டா வெழிலைக் கொம்மெனத்
துன்னிய பேரிருட் சூழற் கடந்துங்
குண்டென வோங்கிய வொண்சுட ரென்றினைக்
கொண்டுளஞ் செல்லுங் கோட்பா டொன்றி
யுடலுயிர் நீங்க லுற்ற வெல்லையி
னுடலுத லியல்பி னுள்ளந் துளக்கறச்
செவ்விதி னிறீஇச் செந்நுதன் மருங்கி
னுயிர்ப்புநன் கேற்றிப் புணர்ப்பின தாற்றலொ
டுவப்புறு காதலி னேவா துள்ளுநன்
வீற்றொளிப் பிழம்பினை விழுமிய
போற்றருஞ் செல்வனைப் பொருந்தி மன்னுமே.

எங்கணாயினும் - எவ்விடத்தாயினும்.

ஏகுவலென்னாது - போவேனென நினையாது.

அங்கண் வதிந்து - அவ்விருந்துழி யிருந்து. ஒற்றளபெடை வந்தது.

அல்லவை: புணர்ப்புமுயற்சி யல்லாத நினைவுஞ் செயலும்.

நவிலும் - பயிலும். போக்கு - நடை.

நினைப்புநீள - புணர்ப்புப்பயிற்சியோ டியைபுடைய வெண்ணங்க ணீளச் செல்லுமாறு.

இவ்விரு பாட்டுமது.

சொல் - புகழ். புகழ்க்குத் தக்க புலவன். என்றது கடவுளை. மேலுமது.

தொன்மூதாளன் - மிகப்பழமையுடையவன். முதலாதானென்பதாம்.

கட்டளையன் - மன்னுயிர்களைப் பணிகொள்ளும் வேந்தன்.

மொய்: கூறுபடுத்தலாகா நுணங்குநுண்கூறு. நுணங்கிய - நுணுகிய, மொய்யா மொய் - செறியாத மொய். மொய்யெல்லாஞ் செறிந்தல்லது தமிதமிகிடவா. கடவுள் பிறிதொன்றனொடுமொட்டாது தனித்து நுணுகி யிருத்தல்பற்றி மொய்யா மொய்யெனப்படும்.

வை - பிரிவு. பலபிரிவாகிய வுலகு.

வழங்கும் - கொடுக்கும். வள்ளல் - வரையாது கொடுத்தளிப்போன்.

கொம்மென: மிக்க செறிவாக. பேரிருட் சூழ லென்றது மருளினை.

கடந்து உங்கு என்க. உங்கு - உப்பால். என்று - ஞாயிறு.

உளங் கொண்டென மாறுக. உள்ளத்துக்கொண்டு செல்லுங் கொள்கை பொருந்தி.

உடலுதலியல்பின். மாறுபடுதலாகிய வியல்பினையுடைய.

துளக்கற - அசைவின்றி.

செவ்விது - நடுநிலையதாக. செந்நுதல் - புருவநடு. உயிர்ப்புக் காற்றினைச் செந்நுதன் மருக்கின் நன்ருக வேற்றி வைத்தென்க. அன்றி வுயிர்தானுணர்வோடுகூடி யிருத்தலைச் செந்நுதன்மருங்கின் மிகவைத் தெனினுமாம்.

புணர்ப்பினதாற்றலாவது நெஞ்சசையாது நிற்கவல்லுதல். ஓவாது - இடையீடின்றி.

ஒளிப்பிழம்பு - ஒளித்திரள். ஒளிக்கோல மென்றுமாம்.

பிழம்பினை யெனவுஞ் செல்வனை யெனவுங் கூறியது முன்னர் நினைவொன்றி யுள்ளிய கடவுளை. மன்னும் - நிலைபெறும்.

இப்பாட்டின்கண் விரிந்துநின்ற விரண்டன் வேற்றுமைச் சொல்லெல்லாந் தனித்தனி யியைந்தடுக்கி நின்றன.

சூ. மேதகு பனுவ லாய்தரு புலவர்
யாதனை யெஞ்சா தெனவுணர்ந் துரைப்பகொன்
முனிவொடு விழைவு முனிந்த முனிவர்
கனிவொடு புகுதருங் காணி யாதுகொல்
யாதனை யிவர்தலின் யாப்பறை மகளிரைக்
கோதென விகழ்ந்து கோடா தொழுகும்
பேராண் செலவு பேணப் படுங்கொ
லெடுத்துக் கொண்டஃ திவண்யான்
ஹெகுத்துச் சுட்டுவல் சூழ்ந்துணர் வோய்க்கே. 319

மேதகு - மேன்மையாற் றகுந்த. எஞ்சாது: எஞ்ஞான்று மினுங் குன்றாது.

கனிவு: சுவைமுதிர் நுகர்வு. புகுதரும் - மீளும். காணி: தமக்கே யுரிய நிலவுரிமை, யாப்பறை மகளிர் - கட்டுப்பாடற்றொழுகும் பொது மகளிரும் வழுநடை மகளிரும். கோது: உள்ளீடில் பொருள், யாப்பறை மகளிர் அன்பு, அருள், அறிவு, முதலிய வுள்ளீடில்லாத கோதாமா றுணர்க.

கோடாது ஒழுகும்: காமங் கதுவுதலாற்றாது இணைவிழைச்சு விழைந்துழன்று நெறிதவறுத லின்றி நடக்கும்.

பேராண் செலவு - பெருமையொடுபட்ட வாண்டகைமை யொழுக்கம். மிக்க வலியுடைய தெவ்வர்யாரையும் வெல்லவல்ல வாண்மை யுடையாரானும் வெல்லலாற்றாத காமத்தை வெல்லு மாண்மை பேராண்மையாமா றுணரப்படும். இதனாற் கடவுட் சார்புணர்வெய்தினர்க்குப் பேராண்செலவு தளராதூன்றி நிலை பெற்று நிற்கு மென்பதூஉமவரதந்நிலையே பேராண் செலவின் பேரெல்லை யென்பதூஉம் பெறுதும்.

பேணுதல் - வழுவாது பாதுகாத்தல்.

அஃதிவண் யான் எடுத்துக்கொண்டு தொகுத்துச் சுட்டுவலென வியைக்க.

அஃது: அக்கடவுட் சார்புணர்வு. தொகுத்துச் சுட்டுவல் - சுருக்கிக் குறிப்பேன்.

சூழ்ந்துணர்வோய்க்கு - ஆராய்ந்துணர வல்ல நினக்கு. ஆராய்ந் துணர்பவர்க்குத் தொகுத்துச் சுட்டுதலல்லது விரித்துக் கூறுதல் வழுவாம்.

எ. அஞ்சிவர் பொறியுந் தன்சிறைப் படுத்து
நெஞ்சக வயினே நெஞ்சினை யடைத்திட்
டுயிர்ப்புறு வாழ்வு நடுத்தலை யுய்த்துப்
புணர்ப்பு நிலையிற் றணப்பின் றூன்றி
யோமெனும் பெரும்பெய ரோரெழுத் தொருமொழி
யேமுறச் சோரா திடையீ டின்றி
யென்றெடு நினையூஉத் தன்னுடல் பிரியின்
மன்னவ தன்வினை மாய்த்த
வன்னவன் விழுச்சீ ரருஞ்செல வுறுமே. 320 - 321

அஞ்சு - ஐந்து: எழுத்துமயக்கமன்று; மரூஉ. செய்யுண் மரபன்மையினென்பது.

இவர் - மேன்மேலேறிப் படரும்.

புலங்களிற் சிறைப்படுத்தாது தன்பாற் சிறைப்படுத்தென்க.

அடைத்து இட்டு - அடைத்துவைத்து.

உயிர்ப்புறு வாழ்வு - மூச்சுப்போகாது பிழைத்தல். உய்த்து-கொண்டு போய் வைத்து.

ஊன்றி - நிலைபெற நின்று.

பெயர்: பெயர்ச்சொற்கிளவியுமாம் பொருளுமாம். கிளவி யாங்காற் பெரும்பொருளை யுணர நின்ற பெயர் பெரும் பெயரா மென நுண்ணுணர்வு போலப் பொருளின் விதப்புச் சொன் மேலேற்றப்பட்டதாம்.

பெரும் பெயராவது ஓம் என்பது.

ஏமுற - இன்பமுற. சோராது - மறவாது.

நிலத்தினையும் நிலத்துவாழுயிர்களையு மொருங்குணர்த்தும் வையக மென்னும் பெயர்போல ஓமென்னும் பெயரும் பெருஞ் சார்பினையும் பெருஞ்சார்பின் வேறன்றித் தன்னை யியல்பா னுணருங் கடவுளையுங் கடவுள் சார்பாற் றன்னைத் தானுணரு முயிரையுங் கடவுளாற்றலையுங் கடவுளுடைமையையு மொருங்குணர நிற்ப தொன்றுமாதலின் என்னொடு நினையூஉ வெனத் தழீஇக் கூறி னான். நினையூஉ - நினையா நின்று.

விழுச்சீரருஞ் செலவு - பெரும் பொருண்மை பெறுதற்பொருட்டு ஏனைச் சார்பிடையீடுகளை யெல்லாம் விட்டு விட்டு மீடல். இனிக் கடவுண் ஞால மெனப்படு மீமிசைஞாலஞ் சென்று மீளாமை யெனினுமாம்.

அ. நாட்புணர்ப் பல்லது வேற்றுணர் வின்றி
யாப்புற வென்னை யாவயி னானு
நோக்க னேக்கஞ் செய்ஞ்ஞற்
கேக்க மின்று வெளியேன் யானே. 322

நாடொறுஞ் செய்யும் புணர்ப்பு நாட்புணர்ப்பு.

யாப்புற - வரம்பாக யாவயினானும்-எவ்விடத்தாயினும்: எல்லா விடத்து மென்பதாம்.

நோக்கனேக்கம்: கண்ணானேக்குதலன்றி யுள்ளத்தானேக்கு தல் நோக்கல்லாதநோக்கம். எனவே ஒருப்பட நினைத்தலாயிற்று.

செய்ஞ்ஞன் - செய்ங்நன்: எழுத்து மயக்கம்.

ஏக்கம்: அவாவியது வாயாமைபற்றி வாட்டந் தீராமை. இன்றுக. அவனால் யான் எளிதிற் பெறத்தக்கேனவேன்: அவன்பால் விரைய வலிந்து சென்றெய்துவே னென்பதாம்.

கூ. எனுவ! கேட்டி யென்வயிற் புகுதரி
னுலைவி லாக்க மோங்கு மன்னேற்
கிடுக்க ணென்னு மெல்லா வற்றி
னிலைக்கள னவது நிலையுத லிலதெனும்
பிணிக்குறும் பிறப்பினி யுண்டெனா
நினைக்கவும் வேண்டா வாழ்கவ னிலையே. 323

எனுவ! - தோழ! உலைவு - நிலைதளர்வு. ஆக்கம் - மேன்மே லுயர்தல். பிணிக்குறும்: தன்னையுண்மைபோலக் காட்டி யுயிரைப் பிணிக்கு மென்க.

அவனிலேவாழ்க. அகரந் தொகுத்தல்.

உவகை மிகுதியா னெழுந்த வாழ்த்தாமாறுணர்க.

கo. பிறக்கீ டில்லாக் கழற்கான் மறவ!
படைப்போன் ஞாலத் தொடக்கத் தெல்லா
மறுமை யுடையவா மற்று
மறுமை யின்றெனே மரீஇ யோர்க்கே. 324

பிறக்கீடு - பின்வைத்தல். படைப்போனது ஞாலத்தொடக்கமாக வுள்ள வெல்லா ஞாலமு மென்க.

ஞாலத் தொடக்கத்து - ஞாலமுதலாக.

எல்லா மறுமையுடைய. மறுமை - மறுபிறப்பு.

ஆம் : அசை. மற்று : வினைமாற்று ; அசையுமாம்.

அதனுன் முனேவன்மீமிசைஞாலமெய்தினர்மீண்டுப் பிறத்தலில்லையாகுமென்பது வலியுறுத்தவாறும்.

கக. அம்மலர்ப் பெருமாட் காயிர வூழி
யல்லள வாகு மற்றே பகலு
மின்ன பெற்றி யெண்ணு
ரென்ன பகலோ டெல்லியு முணர்பவே. 325

பெருமா ளென்றது பெரியோனுகிய மலரவனே.

ஊழி : ஒரு பெருங் காலவளவு.

அல் - இரா. பெருமாட்கு ஆயிரவூழி அற்பொழுதையளவாகும் ; பகற்பொழுது மவ்வளவே யென்க. உம்மை : எச்சம்.

மலரோன்வைகற்க ணெல்லாவுயிர்களின் அற்பகல்வைகலு மகப்படுதலின் எல்லா வெல்லியும் பகலு முணர்வா ரென்றுன். உம்மை. முற்று.

இதனுற் படைப்போற்கும் படைக்கப்படு முயிரெல்லாவற்றுக்கு மறுமை யுண்டென மேற்கூறியதனே வலியுறுத்தவாருயிற்று.

கஉ. கொற்றப் பெரியோற் குற்ற பகலி
னற்றத் தின்றுந் தெற்றென் றவ்வே
மற்றக் கங்குல் வருதலு
மற்றப் படூஉ மசையிய ருயிரே. 326

கொற்றம் - தலைமை.

அற்றம் : புலனுகாது மறைந்து கிடக்குமருள்.

அற்றத்தினின்று மென்ப தற்றத்தின்று மெனச் செய்யுட்கண் மரூஉவாய் வந்தது.

தெற்றென்ற - தெளிய வெளிப்பட்டன ; வ்கரம் : விரித்தல். வருதலும் என்பது மகரவீற்றுன் வருமொரு வினையெச்சவாய்பாடு. அக்கங்குல்.

அற்றப்படும் - மறைவாகும். அசையியர் - எய்ப்பாறுதற் பொருட்டு; வினையெச்சம்.

உயிர் தெற்றென்றன; அற்றப்படும் என்க.

இதுவு மறுபிறப்பாமாறு வலியுறுத்திற்று.

இதனாற் கடவுட் பற்றுவது பெருஞ்சார்புணர்வாவது வரும் வரையு மறுமை வாராதொழியா தென்பது பெறப்படும்.

கங. கூரிருள் புக்குழிக் கொள்ளைத் தோற்றஞ்
சேரநற் கயர்ந்து செத்தெனக் கிடக்குந்
தோன்றித் தோன்றித் துஞ்சித் துஞ்சி
மீண்டுத் தோன்றுமால் விடியல்
காண்டற் றெட்டுக் கழிக்கியர் வினையே. 327

சிறந்த விருளென்றது மருளெனு மற்றத்தினை.

கொள்ளை - கூட்டமிகுதி. தோற்றம் - காணப்படுவன. சேர - ஒருங்கு. நற்கு அயர்ந்து - மிகவுமறிவிழந்து. துஞ்சுதல் - சாதல்.

வைகறை விடியல் காண்டற் றெட்டு எஞ்சிய வினைகழித்தற் பொருட்டு மீண்டுத் தோன்றுமென்க.

ஈண்டு வைகறை விடியல் : மலரோன் விடியல்.

இதுவுமது.

கச. அற்றமென்ற வதனி னுப்பா
லற்றமொன்றுண் டழிவற் றெளிர்வது
முற்ற வுயிரு மற்றப் படுவுழிப்
படாஅ தமையும் பாங்கிற் றதுதான்
படாஅ விழுச்சீர்ப் பன்னரு நிலைய
மெய்தின் மீட லில்லா
வுய்தி நிலைய மதுவெற் குரித்தே. 328—329

உப்பால் - மேல்.

இவ் வற்றத்தின்மே லற்றமாவதுவே தூமருளெனவும் வான் மூத லெனவுங் கடவுளாற்றலெனவுந் திருவருளெனவுஞ் சொல்லிசை யெனவு மேற்கூறப்பட்டது. ஒளிர்வது : இருளாகாதொளியாயிருந்து ஒளிவிடுவது. உயிர்முற்றவு மென வும்மை மாறுக.

அற்றப்படுதல் - மறைதல்.

படாதமையும் - அழியாது கிடக்கும்.

பாங்கிற்று - வேறுபாட்டுத் தன்மை யுடையது.

பன்னரு நிலையம் - சொல்லுதற்கரிய இடம்.

இது மீண்டு வாரா மீமிசைஞாலச் சிறப்புக் கூறிற்று.

கரு. யாவனி னுளகொல் யாவுமித் தோற்றம்
யாவனிற் கவைஇய யாவுமித் தோற்ற
மத்தலைச் சிறந்த வண்ண லேற்றை
மெய்த்தலைப் பட்டு வேற்றுமை யின்மையி
னினைய னிவனெனக் கின்னன் யானென
நினைய லின்று நின்ற
வனைய காதலி னணையப் படுமே. 330

இத்தோற்றம் யாவும் எவனகத்துள்ளவோ இத்தோற்றம்யாவு மெவனுற் றன்னகத் திட்டு நிறையப்பட்டனவோ வவ்வேற்றை யென்க.

அண்ணலேறு - பெருமையிற் சிறந்தாருளெல்லா மிக்கவன். ஏற்றை: ஐ: சாரியை. ஏறென்பதாம்; எழுவாய். அண்ணலேறு; மீமிசைஞாலத்தலைவன்.

மெய்யாகத் தலைப்பட்டென்க.

அனைய - அவ்வளவுமிக்க.

ஏற்றை யணையப்படுமென முடிக்க.

இவ்வளவுதான் நாற்பாலதென்ப; அச்செய்மை, அவ்வண்மை அக்கோலம், அவ்வாக்கமென.

அவற்றுள் அச்செய்மை மீமிசைஞாலமெய்தித் திருவோலக்கத்தே யிடையிட்டிருந்தின்ப நுகர்தலாம். அவ் விடையீடின்றி யணுக்க மாதல் அவ்வண்மை. அம்முதல்வனது கோலமெய்தி அவனேடொப்ப விருந்து மகிழ்தல் அக்கோலம். அவனின் வேறிராதே அவன்பாற் புக்கு மறைந் திரட்டாமை அவ்வாக்கம்; அவனுதலென்பதாம்.

இப்பாட்டான் மீளாஞால மெய்தும் வாயிலிது வென்பது கூறப் பட்டது.

கசு. என்ன போழ்தத் திவ்வுட லிகக்கிற்
பின்னர் வாராப் பெற்ற மெய்துவன்
புணரிக் குரியவப் பொழுதினை
நினைவிற் கொண்மியா நிகழ்த்துவல் யானே. 331

செறுதல் செற்றமாகியாங்குப் பெறுதல்பெற்ற மாயிற்றென்க.

மியா: முன்னிலையசை. நிகழ்த்துவல் - கூறுவேன்.

இதனல் இவ்வுடல்விட்டு மீமிசைஞாலஞ் செல்வாற்குத் துஞ்சா நிற்புழிக் கடவுட் காதனினைவமைதல் வேண்டுமென்னுங் குறிப்புக் கொள்ளப்படும்.

கஎ. எரியொளி பகல்வெள் ளெல்லி யேனைத்
திரிகதிர் வடவழிச் செம்பால் யாண்டோ
டினைய செவ்வியின் யாக்கை நீப்பின்
முனைய பெரும்பொருண் முயங்குப
வனைய பெருப்பொரு ளாய்ந்திசி னேரே. 332

எரி: அற்பொழுதாயினும் விளக்கெரியா நிற்கும்பொழுது.

ஒளி: எரியொளி யன்றியும் வேறு மணியொளி முதலிய வொளி படர்ந்தபொழுது.

எரியும் ஒளியும் அவ்வப்பொழுதின்மேலாகுபெயராயின,

வெள் எல்லி - முற்கூற்று நிலாவை யுடைய பதினையல்லுப் பொழுது.

கதிர் திரியும் வடவழிக் குரிய செம்பால் யாண்டென்றது ஓர் யாண்டி னிருகூற்றுள்ளே தைம்முதலாறுதிங்களுமாகிய வொரு கூற்றினை. அஞ்ஞான்று கதிர் வான்வடபால்வழிச்செல்லுமாகலின் வடவழிச் செம்பால்யாண்டெனப் பட்டது. செம்பால்-நேர்பாதி.

முனைய - முதற் பொருளாகிய.

மீமிசை ஞாலமெய்தினோரு மாண்டு முதல்வனை முன்னிட்டுப் பெரும்பொருளுணர்ந் துய்தலே நிகழ்வதாகலிற் பெரும்பொருண் முயங்குப வென்றான்.

கஅ. புகையோ டல்கல் புன்கார்க் கங்குல்
செகுகூற் றிடவழிச் செம்பால் யாண்டென்
றுயிடை யாக்கை வீயிரும் புணரிகள்
சேயிடைத் திங்களந் தெண்சுடர்
மேயினர் வைகுபு மீள்குவ ரிவணே. 333

புகை; துஞ்சுவானைப் புகை சூழ்ந்திருந்தபொழுது; ஆகுபெயர். அல்கல் - இரா. புன்கார்க்கங்குல் - பொலிவில்லாத கரிய கங்குற் பொழுது. என்றது முற்கூற்றுநிலாக் குன்றிய பதினையற்பொழு தினையும்.

செகுகூற்று - கொல்லுங்கூற்று. கூற்றிடவழி யென்றது ஞாயிறு வானூர் தென்பால்வழி யென்றவாறு. கூற்றிடவழிச் செம்பால்யாண்டு: வடவழிச் செப்பால் யாண்டின் மறுதலைக்கூற்று.

வீதல்-நீங்குதல். வீ: வினைத்தொகை. சேயிடை - சேண்விசும்பில்.

திங்களந் தெண்சுடர் மேயினர் வைகுதலாவது திங்களின் வழி யாகச் சென்று துறக்கம் மலரிஞால முதலாய கடவுளர் ஞாலமெய்தி ஆண்டைத் துப்புரவு நுகர்தலாம்.

இவர் மீண்டிவண் வந்து பிறவி கொள்பவர். இவ்விரு பாட்டா னும் வானகஞ்செல்வழி ஞாயிற்றுவழி யெனவுந் திங்கள் வழி யெனவு மிருபாற்படுமெனவும் ஞாயிற்றுவழி மீளாவழியாய் மீமிசை ஞால மேறுவதெனவு மேனைத் திங்கள்வழிமீள்வழியாய் மீமிசை ஞாலமொழிந்த ஞாலங்கட் கேறுவதெனவு முணர்ந்து கொள்ளப் படும். ஞாயிற்று வழியை எரிமுதல் வழியெனவும் திங்கள் வழியைப் புகைமுதல்வழி யெனவும் வழங்குப. முறையே ஒளிவழி யெனவு மிருள்வழி யெனவும் வழங்கப்படும்.

கக. வெள்ளிய வென்றுக் காரிய வென்று
வொள்ளிய வீரிய வுலவா வுளவாம்
பாரவர்க் கியன்றவிப் பழந்தெரு விரண்டினு
மொன்று மீள லுறுவ
தொன்று மீளா துறுவது நன்கே. 334

இயவு - வழி. வெள்ளியவு : ஞாயிற்றுவழி. காரியவு : திங்கள் வழி. என்று : எண்ணிடைச்சொல்.

ஈரியவு - இருவழி. உலவா - கெடா. ஈரியவு உலவாவாயுள வென்க.

பாரவர் - பாரின் வாழுமக்கள்.

இவ் விருசார் ஞாலமு நன்குறுவனவாய்ப் புணரியரா னெய்தற் பால வெனவே வையத்தினின்று மேற்செல்வழியான் மேற்செல்லாது கீழ்ச்செல்வழியாற்கீழ்ச்சென்றிழிந்தெய்தூந் தீங்குறுவவாகிய ஞாலம் பிற வுள வென்பதூஉ முணர்ந்து கொள்க.

உ0. வழியிரண் டனையும் வாய்ப்ப வுணருங்
கழிபுணர்ப் பாளர் கழும லெய்தா
ராகலி னிடையிடா தம்ம
வாகுக புணரி யரிறப முயன்றே. 335

கழி - சிறந்த. கழுமல் - மயக்கம்.

மயக்க மெய்தாமையாவது புணர்ப்பியற்றினல்லது சிறந்தவாக் கழுறுதலாகாதென்னுந் துணிவெய்துதலாம்.

அம்ம : அசை.

புணரியாகுக வென மாறுக. அரில்தப - குற்றங்கெட. முயன்று இடையிடாது புணரியாகுக வென்பது.

புணரிகளுட் கடவுட்காதலுணர்வமையாதார்க்குத் திங்கள் வழியும் அஃதமைந்தார்க்கு ஞாயிற்றுவழியு முரியவென வேறுபாடு கண்டு கொள்க.

இங்ஙனம் வழி யிரண்டு மெடுத்தோதியதூஉங் கடவுட் காதலுணர்வின் விழுப்பந் தெரித்தற் கருத்தினு னென்பதுணர்க.

உக. கேள்வி வேள்வி நோன்பு நன்கொடை
யாயிந் நான்கினு மடையக்கடவ
நன்னயம் யாவு நன்றுங் கடந்ததென்
றின்னயப் புணர்ப்பினை யெண்ணித் துணிந்த
புணரியர் தாமே பொருந்துவ
ருணர்வரு முதன்மை யோங்கு நிலையமே. 336

கேள்வி : அறந் தெரி பனுவல் பலவுங் கேட்டல்.

வேள்வி : கடவுளர் விருந்தினர் முதலியோரை யுவப்பித்தல்.

நோன்பு: உண்ணுமை முதலியனவாக வரைந்து கொண்டு துன்பம் பொறுத்தல்.

நன்கொடை - புலனுழுதுண்மார் புன்கணஞ்சித் தமது பாத்தீதல். ஆயிந் நான்கினு மெனச் சுட்டு நீண்டது.

நன்றும் - மிகவும். இன் நயம் - இனிய வின்பம். என்றது புணர்ப்பி னெய்தும் பெருநுகர்ச்சியினை.

நிலையம் - நிற்குமிடம். அதன் மேற் செல்லலாவதின்மையின் அது நிலையமெனப்படும். என்றது மீமிசைஞாலமும் விழுமிய வீடு மென் றிவற்றை. மீமிசைஞாலத்தின் மேற்பட்டு யாங்கு மொக்க விருத்தலாகிய வீடு விழுமிய வீடெனவும் மீமிசைஞாலமேனைவீடெனவும்படும். விழுமிய வீட்டுக்கு மேனைவீட்டுக்கு மவை யெய்தினர் மீளப் பிறவாமை யொக்கும்.

இதனாற் புணர்ப்பி னெய்தக்கடவதனைக் கேள்வி முதலிய நான் கானும் பெறலாகாதெனப் புணர்ப்பின் சிறப்பு வலியுறுத்தப்பபட்டது. இங்ஙனம் புணர்ப்பினை மிகுத்துஞ் சிறப்பித்துங் கூறுதலின் இந்நூல் புணர்ப்பியற்பனுவ லெனவும் பெயர் வழங்கப் பெறுவதாகும்; இறையனாரகப் பொருளென்னு நூலை மிகுதியுஞ் சிறப்பும் பற்றிக் களவிய லெனவும் வழங்குமாப் போல வென்பது. பெரும் பற்றப்புலமை புணர்ப்போடுடனிகழ்வதாகலின் இந் நூல் பெரும் பற்றப் புலமை யெனவும் பெயர் வழங்கத் தகும். புணர்ப்பென்றது புலவயிற் புணர்ப்பு வினைவயிற் புணர்ப் பென விவ் விரண்டனையுமாம்.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

எட்டாவது பால்.

எஞ்சாப் பெரும்பெயர்ப் புணர்ப்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

ஒன்பதாவது பால்.

மன்பெரும் புலமை மன்பேரற்றம்.

க. யாதனை யுணரிற் றீதகன் றுய்தி
ஈதனை யழுக்கா றில்லோய்க் கினிமற்
றேதில் புலமையொ டியைந்த புலமை
யற்றம் பலவற் றற்ற மாவ
திற்றென் றியம்புவ லெடுத்துக்
கொற்ற வெண்குடைக் கோஒன் யானே. 337

திது : வினையுங் குற்றமும்.

ஏதில் புலமையாவது பெரும்பொருட் புலமை யொழிந்த புலமை யென முந்துறக் கூறப்பட்டது. ஏதில் புலமையென விதத்தலிற் புலமையென்றது சிறப்புடைய பெரும்பொருட் புலமை யென்பது தானே போதரும்.

ஏதில் புலமையில் வழிக் கோதில்புலமையு மெய்தாமையி னேதில் புலமையொ டியைந்த புலமை யெனப்பட்டது. ஒடுச்சொலடை மொழிப் பொருண்மேற்று.

அற்றம் : மறைத்து வைத்துப் பாதுகாக்கப்படுவ தென்றவாறு.

பலவற்றும் : முற்றும்மை தொக்கது.

எடுத்தியம்புவெனென மாறுக.

கோஒன் : விளி.

ஈதனை யென்பது சுட்டு நீண்ட பெயர்.

புலமையும் அற்றமாவதுமாகிய ஈதனையென மேலே கூட்டுக.

ஈதனை : நெஞ்சறியண்மைச் சுட்டு.

உ. மன்பெரும் புலமை மன்பே ரற்ற
நன்கினி தாயது நல்லறச் சார்பு
கண்கூ டாகக் காண்டக நிற்பது
தொலைவில தாவது தூய்து
தலைசிறந் ததுவெனல் சாற்றிய வதுவே. 338

இப்பாட்டு மேலெடுத்துக்கொண்ட மன்பெரும்புலமைமன் பேரற்றத்தின் சிறப்புணர்த்திற்று.

மன் - வேந்து. புலமைகளுள் வேந்தாகிய புலமையென்க. என்ற தேனைப்புலமையெல்லாந் தன் கீழ்ப்பட நின்று தானவற்றை யெல்லாந் தன் பொருட்டு நடத்துவ தென்றவாறும்.

அப்புலமை புலமையெல்லாவற்றுள்ளும் வேந்தாகலின் மன்பெரும் புலமையெனப்பட்டது.

மன்னுயிரெல்லாவற்ருெடுங் கடவுளொடும்வேறன்றியொருவனுகிப் பிறரறியாமே வைத்து நுகரப்படுவதும் பிறரின்மையிற் பிறர்க்கெஞ்ஞான்றும் வெளிப்படுத்தப் படாததுங் கேடில்லதுமாய்த் துயிலு மறதியு மின்றிப் பாதுகாத்துப் பேணப்படுமிம் மன்பெரும் புலமைபோலும் அற்றம்யாது மின்மையானு மேனே அற்றம் பலவற்றையுந் தன்கீழ்வைத்தாண்டு வருவதனுனு மன்பேரற்றனெவும் பட்டது.

நன்கினிதாயது - மிகவுஞ் செயற் கெளிதாயது. என்றது கடவுட்சார்புபற்றவே தானேவந் தெய்துதல் பற்றி யென்க.

சார்பு - பற்றுக்கோடு.

உயிரின்கணுகர்வுக் காட்சியளவிற் காணப்படுவது பிறிதின்மையிற் கண்கூடாகக் காண்டக நிற்பதாமாறுணர்க.

காமம்வெகுளிமயக்கமாகிய துகளொடு படாமையிற் றூய்தாம்.

எனல் - என்க.

சாற்றிய வது : மேற்கூறிய வப்புலமைதானென வெழுவாயாக்கித் தனித்தனிப் பொருணிலையொடு கூட்டி விதலேயாப்புப் பொருள் கோள்பட வுரைக்க.

ங. புகழ்ந்த மாட்சியிற் பூட்கை யில்லா
திகழ்ந்த மாக்க ளெற்சா ராமைச்
சாவுழல் வாழ்வு தருவழி
மீள்குவ ரந்தோ வினைப்பிணிப் பட்டே. 339

மாட்சி - நன்மை. பூட்கை - ஊக்கம்.

மாட்சியாற் பூட்கை கோட லில்லாதென்க. கோடலென்பது விரித்துரைக்க; மேற்புகழ்ந்தமாட்சி பற்றிப் பூட்கைவருத லியல்பாகலின்.

எற்சாராமை : என்னையும் என்னுண்மைப் புலமையையுஞ் சாராம லென்றவாறு.

சாவுழல்வாழ்வு - சாவிற் குழன்று வாழும் வாழ்க்கை.

வழி : பிறவிவழி. வினையாகிய கட்டின்க ணகப்பட்டு.

இது நூன்மரபு பற்றி மேற்சிறப்பித்த புலமையின்சிறப் பெதிர் மறையாற் கூறியவாறும்.

ச. அற்ற மாகியே னவ்வெழில் யாக்கையின்
முற்ற ஞாலந் துற்றப் பட்டுள
தன்பா! தோற்றமிவ் வனைத்து
மென்பா லுளவிலன் யானிவற் றுள்ளே. 340

அற்றமாகியேன் - மறைவாகிய வியற்கை யாற்றலாகி யுள்ளேனது. அவ்வெழில்யாக்கையான் - அவ்வாற்றலாகிய வென் யாக்கைத் தோற்றத்தான்.

துற்றப்பட்டுளது - நிறையப்பட்டுள்ளது.

தோற்றம் - காணப்படுங்காட்சி.

யா னிவற்று ளிலனென மாறுக. என்றது இடத்தின்க ணிடத்தி னிகழ்பொரு ளிருத்தலன்றி யிடத்தினிகழ்பொருளின்க ணிடமிருத்த லில்லையென்பது பற்றி யென வுய்த்துணர்க. இது நோக்கியே முதற்க ணிறைவுங் கூறப்பட்டது. இடத்திற்கு நிறைவும் இடத்தினிகழ் பொருட்கு நிறைவின்மையு முணர்க. என்கண் உடலல்லது உடலின் கண் யானில்லை.

ரு. என்பா லுளவென வியம்பப் படுநவு
மென்பா லிலவிஃ தென்னை யிறும்பூ
தென்பெருஞ் செல்வ மிருந்தவா காணுய்
தோன்றுந வடைய நோன்றுளென் யாஅ
னேன்றவித் தோற்றத் திருந்தன் றில்லேன்
றுன்னு முன்னிலைத் தோற்றர
வென்னு ளெண்ண மென்னுடல் யானே. 341

முன்னிலைத் தோற்றரவெல்லாந் தஞ்செயலானே தாங்கப்படுவ தல்லது பெரும்பொருளாற் றாங்கப்படுத லில்லை.

ஞாயிறு திங்கள் முதலியவற்றி னியக்கத்தான் அவையுளவாதற் கிடமாவது வெளியாதல்பற்றி வெளியின்கண் அவை யெல்லா முள வெனக் கொள்ளப்படும். இங்ஙனங் கலப்புப்பற்றியுந் தொழிற்பட நிற்குந் தன்மைபற்றியும் வெளியின்கண் ஞாயிறு முதலாயின வுள வெனப்படினும் பொருட்டன்மை நோக்குமிடத் தவ்வெளிபிறிதி யாதனெடு மொட்டற்றுத் தனித்துத் தானுளதாகுமாதலின் ஞாயிறு முதலாயின வெளியின்கணில வெனக் கொள்ளப்படும். இவ் வெடுத் துக்காட்டினை வைத்துக்கொண்டிங்கு நம்பிகூற்றின் பொரு டுணியப் படும். இவ்வாறன்றித் துணியுமா றில்லை. நம்பி தான் கடவுளாத லானுங் கடவுளாவான் றன்னிறைவுபற்றித் தான் கடவுளாய் வேறு பட்டிருத்தலையும் ஞாலந் தொழிற்பட நிற்கு மிடனுதல்பற்றித் தான் மன்னுயிரெல்லாமாகி யிருத்தலையும் பொருட்டன்மைபற்றித் தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மூவிடத்தின்வேருய்ப் பெரும்பொரு ளென விருத்தலையு மியல்பா னினிதுணருமாகலிற் பெரும்பொரு ளியல்பு தன்னியல்பாக விங்ஙனங் கூறினனென வுணர்ந்துகொள்க.

இறும்பூது – வியப்பு. வியப்பிதிருந்தவா றென்னை யென்க. தனக்கு வியப்பின்ருகலின் வில்லியின் வியப்பைத் தன்கட் கொண் டுரைத்தான். பெருஞ்செல்வம் : மன்னிய புலமைச் செல்வம்.

அடைய–எல்லாம். நோன்றுளென்–தாங்கியுள்ளேன். என்ற– தாங்கிய. இருந்தன்று – இருந்தது : தொழிற் பெயர்.

துன்னும் : இடைவீடின்றித் தொடர்ந்து தோன்றும். தோற்ற ரவு – தோற்றம்.

முன்னிலைத் தோற்றரவெல்லா மென்னகத்துநிகழு மெனது நினைவு ; அந்நினைவே யெனதுடல்; அவ்வுடல் யான் என்றுனென்பது.

இங்ஙனந் தன்னுண்மைத் தன்மைக் காட்சிப் புலமைபற்றிக் கூறினுனென்னுக்காற் சிற்றுடலளவாகக் காணப்படு நம்பியிங்ஙனங் கூறுதல் பொருந்தாமை காண்க.

சு. யாங்கணுந் தூங்கி யோங்குபு மன்னும்
வாங்கரு வளிதான் வானெடெற் றற்றே
யென்னொடு பொருந்தி யென்னுழை
யென்னவுந் தோற்ற மிருக்கு மாறே. 342

தூங்கி – இயங்கி. தூங்கெயி லென்புழிப்போலக் கொள்க. ஓங்குபு – உயர்ந்து.

வாங்கு – நீக்குதல். நீக்கலரிய வளியென்றது உயிர்வாழ்க்கைக் கின்றியமையாமைபற்றி.

தோற்றமென்னவும்.

வளி தான் வானெடிருக்குமா றெத்தன்மையது? அத்தன்மை யதே தோற்ற மென்னவு மென்னுழையிருக்குமா றென்றுன். இது மேற் கூறியவாறுபற்றி யினிதுணர்ந்து கொள்ளப்படும்.

எ. ஊழி யீற்றி னெருங்கு தோற்ற
மூழி யொருவனேன் மூதலு ளொடுங்கு
மூழித் தொடக்க முற்றக் காலை
மூதலிற் பெயர்த்து முழுது
மேர்தரக் காண்ப விருவினை வழியே. 343

தோற்றமொருங்கு.

ஊழிக்கணொருவனுகுவேனது மூதற்கணொடுங்குமென்க.

மூதல் – இயற்கை மருள் : ஆற்றல்.

மூதலின் : இன் : நீக்கப்பொருட்டு. பெயர்த்தும் – மீட்டும். ஏர்தர – எழ. காண்பல் – செய்வேன்.

இறைவன் ருன் காண்டலளவே தனக்குச்செயலல்லது இல்லாத வற்றை யுண்டாக்குதலுந் துணைகொண்டு செய்தலும் புடைபெயர்ந் தசைத்தலு மின்மைதோன்றச் செய்தல் காண்டலெனப்பட்டது.

தானினைத்தவாறுசெய்யிற் றனக்குச்செப்ப மின்மையும் வன் கண்மையுமாகிய விழுக்கெய்துமாகலின் அவ்வுயிர்களி னிருவினை வழிக் காண்பலென்று னென்க. முன்னையூழியின் முற்றுதெஞ்சிய விருவினையென்க.

இதனுன் ஞாலத்தொகை யென்னும் ஆக்கப்பொருட்கு வேண் டப்படும் வினைமுதல் இறைவனென்பதூஉம் உயிர்களி னிருவினை துணைமுதலென்பதூஉம் மூதலென்னு மருள் இயன்மூதலென்பதூஉ மெய்துவிக்கப்பட்டனவாதல் கண்டுகொள்க.

குடத்திற்கு மண்போல்வன இயன்முதலெனப்படும்; தானே யவ்வாக்கமென வியலுதலினென்பது.

அ. வீற்று வீற்று மேன்மே லுளவாந்
தோற்றஞ் சான்றவித் தொகுதி யாவுந்
தம்மகப் படாது தம்மகப் படுத்து
மம்மர்செய் யாற்றல் வரைய வாதலி
னன்னவென் னாற்றலொ டணைத்துப்
பின்னையு மிவற்றை யென்னொடு படைக்கே. 344

வீற்றுவீற்று - வேறுவேறு.

தம்மகப்படாது - தமக்கு அகப்படாது.

தம்மகப்படுத்து - தம்மைத் தனக்ககப்படச் செய்து. மம்மர் - மயக்கம். ஆற்றல் - மூதல்.

ஆற்றல் வரைய - ஆற்ற லளவின.

இம் மன்னுயிர்த்தொகுதி யாவு மாற்றல்வரைய வாதலினென்க.

அன்ன : அவ் வாற்றல் வரையவாய வுயிர்ப்பன்மையையு மவ் வாற்றலையும்.

என் னாற்றலென்றது கடவுளினாற்றலாகிய தூயமருளாம்.

அணைத்து - சேர்த்து.

பின்னையும் - மீட்டும். உம்மை யெச்சமாதலின் மீட்டுமீட்டு மென்க.

படைக்கு - படைப்பேன். என்னொடிவற்றைப் படைக்கென்றது இறைவன்றன்னைத் தான் முதலிடை கடைகளிற்படைத்துக்கொண்டு தன்னினின்றும் பிறவற்றைப் படைத்தலின்.

இதனான் மன்னுயிரின் மருணீக்குதற்பொருட்டுப் படைப்பே னெனப் படைத்தற்குப் பொருட்டாமாறு விரித்தான்.

கூ. அன்ன னாயினு மென்ன வினையு
மென்னைப் பிணிக்கு மியல்பில மாதோ
வென்னை பொருட்டெனி னெவ்வினை யகத்து
முறைத்து நிற்ற லொருவிப்
புறக்க ணாற்றிப் புரிகுவென் யானே. 345

அன்னனாயினும் - அங்ஙனம் வினைசெய்யுந் தன்மையுடையே னாயினும் - மாது : ஓ : அசை.

பொருட்டென்னையெனின்.

உறைத்து - பற்றுச்செய்து முனைத்து.

புறக்கண் - கண்டுங் காணாமை. ஆற்றி - செய்து.

எனவே யிறைவன் றான் றன்னை நோக்கிநிற்பத் தன்முன்னிலை யளவானே ஞாலந் தொழிற்படாநிற்கு மென்பது போதரும். தன் முன்னிலை பொருட்டாயின் ஞாலத்தொழிற்பாட்டிற்குத் தானின்றி யமையானாகலிற் றன் செயலாகக் குறிப்பு வேறு கொண்டு கூறினான்.

புரிகுவென் - வினைசெய்வேன்.

இதனால் வினைசெய்வேனென்றலுஞ் செய்யேனென்றலுந் தனக்கமையுமென்பது கூறினானாம்.

கo. எனது காட்சி யின்றி யமையாத்
தனது முன்னிலைச் சார்பள வானே
போதல் வருதல் புரிவினை யியற்கை
மூதல் கமஞ்சூன் முன்னி யீனு
மீங்கு நிற்ப வியங்குவ வெல்லா
மாங்கு வருபொருட் டமைதியான்
வீங்கு ஞாலஞ் சூழ்வரும் விரைந்தே. 346

தனதென்றது பின்வருமூதலை.

முன்னிலைச் சார்பு : என் முன்னிலையாதலாகிய சார்பு.

போக்குவரவுபுரிதலாகிய வினையே யியற்கையாக வுடைய மூதல். இதனான்மூதலென்பதெப்பொழுது மசைந்துகொண்டிருப்பதல்லது அசைப்பாரசையாதவழித் தானசையாது கிடப்பதென்பது கூடாமையும் அதனான் அறிவிலதாகிய வதனை யசைத்தற் கொருவன் வேண்டுமென்னலாகாமையு முணரப்படும்.

ஞாலமெல்லா மூதற்கட் டன்மையளவா யமைந்துகிடந்து வெளிப்படுவன வன்றி யில்பொருளாய்ப் பிற் புலப்பட்டன வன்மை தோன்றவும் இறைவனைக் குறிக்கொண்டியங்குமாறு தோன்றவுங் கமஞ்சூன்முன்னிலை யென்றவாறுணர்க.

முன்னி - பொருந்தி.

நிற்ப வியங்குவ வெல்லா மீனுமெனவியைக்க.

ஆங்குவருபொருட்டமைதியான் - அவ்வாறு தோன்றுதலாகிய பொருட்டமைதியானே, ஞால மென்செயலாகவே விரைந்துசூழ்வரும், அதனால்வினை யென்னைப் பிணிக்குமாறில்லையென மேலதனை முடித்துக்கொள்க.

கக. மக்கள் யாக்கை வாங்கிய வென்னைப்
பொக்க மிக்க புல்ல ருணரார்
முழுமுதற் கடவுள் யானென
விழுமிய வாய்மை வேறுகாண் கிலரே. 347

வாங்கிய - கொண்ட.

இறைவன் றனக்கன்பராயினர்க்குத் தன்னைக்கொடுத்துத் தான் வாங்கியதாம் அவன்யாக்கை.

பொக்கம் - பொய். புல்லர் - இழிந்தவுணர்வுடையவர். பொய்யராதலின் உண்மைகாணலர்.

வேறுகாண்கிலர் - மக்களின்று என்னை மன்னுயிரினின்று பிரித்துத் தனியாகக் காணமாட்டாதவராகின்றனர்.

ஞாலந் தொழிற்படுத்துஞ் செய்தி தனக் கியையாதவாறுபோலத் தான் பிறந்து வழங்குஞ் செய்தியுந் தனக் கியையாமை கூறினன்.

கஉ. பழுதுறு மவாவினை யுணர்விவை பற்று
மிழுதையர் தம்மை யெண்ணுங் காலைத்
தாக்கரு நிணவர் தகுவர்
தாக்கணங் கென்றிவர் தன்மையுக் கோரே. 348

பழுதுறு - பயனின்மை பொருந்திய.

பழுதுறு மவாவும் பழுதுறு வினையும் பழுதுறுமுணர்வு மென்றிவை சாரு மிழுதையரென்க.

இழுதையர் - அறிவிலார்.

தா - கேடு; துன்பமுமாம்.

கேடு செய்யுங் கரிய நிணவருந் தகுவருந் தாக்கணங்கு மென்றிவரென்க. கருமை — கொடுமை

நிணவர் - நிணமுண்ணு மொருசார்வல்லணங்குகளாவர். இவர் தமக்கோ ரூதியமின்றியும் பிறர்க்குக் கேடுசெய்பவர்.

தகுவர் : தமக்கோ ரூதியங்கருதிப் பிறர்க்குக் கேடு செய்வோர். இவரிமையோர்க்கு மாறுயினர்.

தாக்கணங்கு—தீண்டித் துன்புறுத்து மொருசார்க் கொடும் பெண்ணணங்குகள்.

இம்மூவரும் பழுதுறு மவா முதலிய மூன்று முடையார்களைச் சார்ந்துபுக்கிருப்பவராவர்.

அதனலவர் அத்தன்மையராகின்றனர்.

இதனாற் கடவுளைச் சார்ந்தொழுகுமவர் பழுதுறு மவா முதலிய குற்றமிலராவராகலின் அவன்பிறப்பினையுணரு மியல்பினராவர். அவைமேற் கூறுவன்.

கா. பெருந்தகைச் சான்றோர் பெற்றிமை நோக்கின்
மருந்துனும் வானோர் மாண்பு சார்தலின்
மன்னுயிர் முதலியு மன்னியு மாகு
மென்னைநன் குணர்மா ரேனை
யெண்ணமொன் றின்றி யினிதுவாழ்த் துவரே. 349

மாண்பு — நற்பண்பு நற்செயல்கள்.

முதலி — தலைவன். மன்னி — அழிவின்றி நிலைபெறுவோன்.

உணர்மார் — உணர்வார் : உணர்மார் வாழ்த்துவரென மாரீற்று முற்றுப் பெயர்கொள்ளாது வினைகொண்டது.

இனிது — வருத்தமின்றி. கடவுளை யுணரவே வருத்த மாயு மென்க.

இதனாற் கடவுளைச் சார்தலுறுவார்க்கு வானோர் துணையும் வேண்டுமென்பது பெற்றும்.

கச. கடிந்தனர் மடியினைக் கன்றிய நோன்பொடு
தொடர்ந்தியல் புணர்ப்புத் தொழிலுடைப் பெரியோ
ரெற்புகழ்ந் தேத்துவ ரென்று
மற்புளம் போற்றி நிற்பதம் மயர்ந்தே. 350

மடியினைக் கடிந்தனராயென்க; முயற்சி யுடையவராயென்ப தாம். கன்றிய நோன்பு – அடிப்படப் பயின்ற நோன்பொடு.

தொடர்ந்து – இடையீடின்றி. இயல் – நடக்கின்ற. ஏத்துவர் – வழிபடுவர். அற்பு – அன்பு.

போற்றி – மறவாது. அயர்ந்து – மெய்ம்மறந்து.

அற்பொடு போற்றித் தம்மை யயர்ந்து நிற்பரென்க.

கரு. புலமை வேள்வியிற் போற்று மொருசார்
பலரு மாங்குப் பல்லாற் ரானு
மொருமை பன்மையி னொன்றிற்
பெருமை தகவெற் பேணுவர் சிறந்தே. 351

புலமை வேள்வி—மெய்யுணர்வென்னும் வேள்வி. ஆவது: மெய்ந் நூல் பலவற்றின் பொருளை யாராய்தல். இஃதோதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், உய்த்துணர்த லெனவைம்பாற்படும். ஈண்டுக் கேட்டல்: களம்படு கட்டுரைகேட்டல். களம்படுகட்டுரையாற்று தலே கேட்பித்தலாம். வினைவேள்வி, நோன்பு வேள்வி, நவிற்சி வேள்வி, நினைவு வேள்வி, புலமை வேள்வியென முறையே யொன்றற் கொன்றேற்றமாய விவ்வைம்பால் வேள்வியுள்ளும் புலமை வேள்வி சிறப்புடைத்தென்ப. நான்காவது பாலுள் விரித்துக்கூறிய வேள்வி பலவு மிவ்வைம்பால் வேள்வியுளடங்கும்.

போற்றுகின்ற வொருசார் பலருமென்க.

ஆங்கு: அவ்வேள்விக்கண்.

பல்லாற்ரானும் - பலவழிகளானும். என்றது காண்டல் கருதல் எடுத்துக்காட்டு முதலிய பல வளவைகளானு மென்பதாம்.

ஒருமைபன்மைகளு ளொன்றின்கண் வைத்துப் பேணுவரென்க. பேணுதல் - வழிபடுதல்.

ஒருமையிற் பேணுதலாவது கடவுளின் பண்பு செயல்களை நோக் காது கடவுளி னொருமை யுணர்வே நோக்கி யாங்கணுஞ் சான்ற வுணர்வொருமை கண்டு விழைதலாம்.

பன்மையிற் பேணுதலாவது அங்ஙனம் பண்பு செயல்களின்றிக் கடவுளை யுணர்தலாற்ருமையான் அவன் றன் படைத்தல், காத்தல், ஒடுக்கன், மறைத்தல் அருளலெனவுஞ் செம்மை, புன்மை, மைம்மை, தனிமை, ஒப்புமை யெனவுந்தோன்று முழுச்செயன் முழுப்பண்புக டொறும் வேறுவேறு வைத்து விழைந்து பற்றுதலாம். எண்ணித் தொகுத்த பண்பைந்தனுள்ளுந் தனிமைப்பண்பாவது செம்மை முத லிய முப்பண்புந் தம்முள் விரவி மிக்குங் குறைந்து நில்லாது தனித் தனி நிற்றலாம். ஏனைப்புன்மை மைம்மைகளொடு விரவாது தனித்து

நிற்குஞ் செம்மைப் பண்புடைமைபற்றிக் கடவுளைத் தூயசெம்மைப் பண்பு சிறந்தானென்ப. தனிச்செம்மைப்பண்புதான் மீமருளாகிய தூமருளெனப்படுவது. இனி, ஒப்புமைப் பண்பாவது முப்பாற் பண்புந் தம்முள் விரவி, மிக்குங் குறைந்து நில்லா தொப்ப நிற்றலாம். இதுபற்றி ஐந்தொழிலும் ஐம்பண்பு மொருங்குடைய வொருவனே கடவுள். ஏனை யொரோவொன்று குறைய நிற்பவெல்லா முயிர் களேயா மென்ப.

இங்ஙன முழுமுதற்கடவுளை வழிபடுவார்க் கேனைக் கடவுளரை வழிபடுவாரினுஞ் செயற்கருஞ்செயற் பெருமை தகுமாதலிற் பெருமைதகவென்றது.

சிறந்து : யாமார்க்குங் குடியல்லோமென்று கடவுட்கே சிறந்த குடியாகி.

கசுரு. இன்புறு விழவொடு வேள்வி யாஅன்
றென்புல வாழ்நர்த் தீற்றலும் யாஅன்
மருந்தி யாஅன் வாய்மொழி யாஅ
னருந்து நெய்யு மழலோ டார்த்தும்
விருந்து மடையுமென் றிருந்தி யாஅ
னம்மை யப்பரு மவர்ப்பயந் தோரு
மிம்மை யாண்டும் யானென வுணர்க
வோர்தரத் தக்க வோஒ மென்னு
மூவெழுத் தோடு முத்தமி ழாகிய
வியலிசை கூத்து மென்றிவை யாஅன்
யாஅன் களைகண் யாஅன் புரவலன்
யாஅ னண்ணல் யாஅன் சான்று
யாஅ னிலைக்களம் யாஅன் புகலிடந்
தொழுதகும் யாஅன் கெழுதகைக் கேண்மை
முழுவது மிவைதா முளைத்துநின் றோங்கும்
வீயாத் தொன்முது வித்தும் யாஅன்
காயா வெதுப்புங் கனைவெயில் யாஅன்
மழைதலை யாமே வாங்குபு வைத்து
விழைவுறப் பெய்தல் விளைக்குவென் யாஅன்
விளிவொடு விளியா விழுப்பமும் யாஅ
னுளதில தென்றூங் குரைக்கும்
வளவிய பொருண்மை வழக்கும் யானே. 352—355

தென்புலவாழ்நர் : தந்தையர் கிழாராகிய வொருசார்க் கடவுளர். அவருறையுமிடந் துறக்கத்துக்கட் டென்பாற் கூற்றமாகலிற் றென் புலவாழ்ந ரெனப்படுவர்.

தீற்றல் - தின்னுவித்தல்; ஊட்டலென்பதாம். தீற்றலென்னுந் தொழிலாவதீண்டுத் தீற்றுவாரது நினைவளவேயாம்.

மருந்து - வானோருண்ணுமுண வன்று: நோய் மருந்து. வாய்மொழி - நிறைமொழி.

அருந்து நெய்: இமையோ ருண்ணு நெய்.

ஆர்த்தும் - ஊட்டும். விருந்தாகிய மடையென்க. கடவுளர்க்கு விருந்தாகிய மடையென்பதாம். அவை வேள்விக்கட் கொடுக்கும் பொங்கல். இருந்து – இருந்தேன்.

விழவுமுதல் மடையீருகக் கூறப்பட்டன நிகழ்வுழி நிகழ்த்துவார்க்குக் கடவுட்குறிப் பெழுதலின் அவையிற்றை யொற்றுமை வழக்குப்பற்றி யானென்றான்.

தானுயிர்மரபு படைக்குந்தன்மை தாய்தந்தையர்மாட்டு மவர் முன்னோர்மாட்டு மவர்மரபின்வந்தார்க்கு விளங்கு மொப்புமைபற்றி அம்மையப்பரு மவர்ப் பயந்தோரும் யானென்றான். அல்லதூஉமம் மரபுநோக்கிச் செல்லச்செல்ல வதன்றொடக்கந் தன்பால் வந்து முடிதலானுமங்ஙனங்கூறினா னென்றலு மொக்கும்.

ஓர்தல் - ஆராய்தல்.

ஓமென்னு மூவெழுத்தினின்று முத்தமிழு முறையே தோன்றுதல் பற்றி ஓமெனு மூவெழுத்துமுத்தமிழெனக் கூறியவாறு கண்டுகொள்க. அவை தன்னிடத்தே தோன்றித் தன்னையே நோக்கித் தனக்கினிய யாக்கையாதலின் அவையிற்றை யானென்றான்.

களைகண்-பற்றுக்கோடு. புரவலன்-காத்தல்வல்லுநன். அண்ணல்-எல்லாச் செல்வமுநிரம்பியவன். சான்று - கரி. கெழுதகை - உரிமை. கேண்மை - நட்பு.

ஞாலமிறைவன்பாற் றோன்றிநின்றொடுங்கிமீட்டுந் தோன்ற அதற்கிடனாகி வீயாதுகிடத்தலின் வீயாத்தொன்முதுவித்தாவான்.

காயா - காய்ந்து. கனை - செறிந்த.

தலையாமே - பெய்யாமல்.

பெய்தல் விளைக்குவென் - பொழிதலையுண்டாக்குவேன்.

விளிவு - சாக்காடு. விளியா விழுப்பம் - சாவாமையாகிய சிறப்பு. விளிவின்கண்ணுங் கடவுண்முதன்மை குறிக்கப்படும், சாவாமைக் கண்ணுங்கடவுட்டன்மை குறிக்கப்படும்.

யாதானுமொரு பொருளை யுண்டென்றுயினு மில்லையென்றுயினு மெடுத்துக்கொண்டு வலியுறுத்துகின்றுழியு முள்ளமொடுங்குதலாற் கடவுட்பான்மை தானே யமையும்.

கள. மும்மைப் புலமை முதிர்ந்தோ ராகி
யிம்மைச் செய்யுந் தின்மை தீண்டா
தொண்மை வானோ ருண்டொழி மிச்சி
னவைதீர் சாற்றினை நாடொறும் பருகுபு
விண்ணக நச்சி வேள்வி வேட்டன

றென்னக மிரப்போ ரன்னதொ ரியல்பான்
விண்ணுள் வேந்தன் வியனில மெய்தி
மண்ணோர்க் கெய்தா வாலிய
வுண்ணுத் துப்புர வுண்டாட் டயர்பவே. 356

மும்மைப்புலமை - மூன்றுவேதப்புலமை.

தின்மை - தீச்செயற் றன்மை. ஒண்மை - விளக்கம். மிச்சிலாகிய சாற்றினை யென்க. வேட்டனராயிருப்போர். நவைதீர் - குற்றம் நீங்கிய. வேள்வி - வழிபாடு. என்னகம் - என்பால்.

வாலிய - தூய.

துப்புரவு - நுகரப்படுவன. ஈனோர்போலச் செயலானுகரவேண்டாது நினைவளவானே நுகரப்படுதலின் அவையுண்ணுத் துப்புர வெனப்பட்டன. உண்டு - நுகர்ந்து.

அயர்ப - கொண்டாடி மகிழ்வர்.

கஅ. வானொளிச் செல்வ மாந்தி வாழ்வுழி
யீனிய னல்வினை யிற்றக் காலே
வியலொளி ஞாலம் விட்டன ரழித்து
மிழவுபடு ஞால மிழிவ ரளிய
ரிங்ஙன் வேத வியல்பு பற்றினோ
றென்னைச் சார வெண்ணு மடமையிற்
பின்னைப் பின்னைப் பெயர்த்து
முன்னைக் கவையுண் முனைந்துழல் வோரே. 357

மாந்தி - நுகர்ந்து. ஈன் இயல் நல்வினை - இவ்வுலகின் உண்டான நற்செயல். என்றது துறக்க மெய்துதற்கு வாயிலாகத் துறக்கமெய்து முன்னரிவ்வுலகின் மக்களாகிச் செய்த வேள்வியை.

இற்றக்கால்: அது நுகர்தற் கமையும் பொழுதளவு முடிந்தால்.

வியல் - அகன்ற. வியலொளி ஞாலமென்றது துறக்கத்தினை. அழித்தும் - மீளவும்.

இழவுண்டாகின்ற ஞால மென்ற திம்மக்கண்ஞாலத்தினை.

இங்ஙன் - இவ்வாறு. என்றது துறக்கமெய்தி மீட்டுமித் துன்பநிலத்துக் கிழியுமாறு

இவை: இன்பத்துன்பமுதலியபிணையல்.

முனைந்து - அழுந்தி. உழல்வோர் - துன்புறுபவர்; பிறந்திறந் தலைபவரேயாவர்,

இவை யிரண்டுபாட்டானுந் துறக்கத்தின்கட் பற்றுண்டாக்கி வளர்த்து நாட்டுமக்கள் ஆக்கமுறாமல் இடையூறு விளைக்கும் வேத வாரியரை யிழித்துரைத்துநாட்டுமக்கள் வேதியருடைய நயவுரையின் மயங்கிக் கெட்டொழியற்க வெனத் தெருட்டினன், இறைவன்.

கஅ. முனைப்பொழிந் தொன்றி நினைப்புவே றின்றி
யெனைப்பல காலு மெனைத்தொழுந் தொழும்பி
னுட்படு மன்ன நாட்புணர்ப் பாளர்
வரவு செலவு வகைமுழு
திரவு பகல்யா னேறட் டெழுகே. 358

முனைப்பு - யானெனதென்னும்பற்று. ஒன்றி: ஒரு நினைவாகி.

எனைப்பலகாலும்-எவ்வளவு பலகாலத்தும்; எப்பொழுதுமென்றவாறு. தொழும்பு - அடிமைப்பணி. தொழும்பொடு அடிமைப்படுமென்க.

நாட்புணர்ப்பு - நாடொறுஞ் செய்யும் புணர்ப்பு. இடைவிடாது செய்யும் புணர்ப்பென்றவாறு.

வரவுசெலவுவகை - எய்தற்பாலவுங் கழியற்பாலவுமாயவற்றின் வகை.

இரவும் பகலு மென்க. ஏறட்டு - மேலிட்டுக்கொண்டு. எழுகு - முயல்வேன்.

உ௰. ஊனைக் கள்ளை யுண்ணு நின்றன
ரேனைக் கடவுளை யெண்ணி யன்பொடு
வழிபடு மதுவும் வழீஇப்
பழிபட வென்னை வழிபடு மாறே. 359

உண்ணு நின்று.

வழிபடுமதுவுமென்ற விழிவுசிறப்பெச்சவும்மையானே யூனுங் கள்ளுமுண்ணுதொழிந் தேனைக் கடவுளை முறைவழுவவழிபடுமாறு மேனைக்கடவுளரையன்றியிறைவனையும் வேட்டடிகள் கண்ணப்பனார்போல முறைவழுவ வழிபடுமாறுங்கொள்ளப்படும். எனவே யவ்வழிபாட்டுவழு வெல்லா மிறைவனுடைய வொரோவொரு பண்பு செயல்களைப் பற்றிநின்றுவழிபடுதலேயா மென்பது பெறப்படும்.

உக. வேட்டொறும் வெம்மடை மிசையுநன் யான்கா
ணூட்டவுண் டொளிரு முடையவன் யானெற்
கோட்டமின் றுள்ளவா கொள்ளார்
நாட்டமின் றிழுக்கி நவைப்படு வாரே. 360

வேட்டொறும் - வேள்வி செய்யுந்தொறும். எல்லா வேள்வியினு மென்பதாம். வெம்மடை - வெப்பமுள்ளவுணவு. நெருப்பிடைப்பட்டன வெம்மை யாறியவழிக் கடவுளர்க்காகவா யிழிந்தனவாம்; விரும்பப்படுமடையெனினுமாம். இதனல் வேள்விக்கண் வழிபடினும்பிறவாறு வழிபடினு மொக்குமென்பதாம். உடையவன் : எல்லாமுடையதலைவன்.

எற்கொள்ளார். கோட்டமின்று - அழுக்காறின்றி. உள்ளவா- உள்ளவாறு. கொள்ளார் - கருதமாட்டாதவர். நாட்டம்இன்று - கண்ணின்றி; ஈண்டுக்கண் அறிவுக்கண். நாட்டம்: ஆராய்தலுமாம்.

இழுக்கி: கடவுளைச் சாரும் வழியினின்றும் வழுவி.

நவைப்படுவார் - துன்பத்திலே யகப்படுவார்; குற்றத்திலே யகப்படுவா ரெனினுமாம்.

உஉ. இமையவர்ப் பேணுந ரிமையவர்ச் சார்ப
முதியவர்ப் பேணுநர் முதியவர்ச் சார்ப
வவரவர்ப் பேணுந ரவரவர்ச் சார்ப
லமருமெற் பேணு மன்புசா
லெமருமன் னுங்க வெற்சார் பவ்வே 361

பேணுநர் - விரும்பி வழிபடுவார். சார்ப - அடைவார்.

முதியவர் - தென்புலவாழ்நர்.

அவரவர்: உயிரின்பாற்படு மவ்வக் கடவுளர்.

தங்கண் மேவு மென்னைப் பேணு மன்பு நிரம்பிய வெமரென்க. மன்: அசை.

ஆங்க - அதுபோல.

வகரவொற்று: பிரித்தல்.

இறைவ னொருவனே அவரவர் வழிபடு மெல்லாக் கடவுளருமா யெல்லாவழிபாடுகளையு மேற்றருளுமேனு மவரவர் தந்தம் வழிபாட்டு வேற்றுமைக் கமையு மூதியமல்லது வேறு பெறலாகா தென்ப திதனாற் பெறப்படும்.

உ௩. ஆன் றவிந் தமையு மகஞ்சா லன்பொடு
தேன்றுளி மலரோ செவ்வித் தழையோ
புனலோ கனியோ புல்லிலை யெருக்கோ
யாவ ரேனுமெற் கினிய
ரீவ யாவு மேற்றுண் டொளிர்கே. 362

ஆன்று - அறிவானிறைந்து. அவிந்து - பொறி புலங்கண்மேற் செல்லாதடங்கி. அமையும் - நெஞ்சு விழைவு, வெகுளி முதலியன வின்றி நிரம்பும். சால் - நிறைந்த.

மலராயினுந் தழையாயினும் புனலாயினுங் கனியாயினு மெருக் கம்பூவாயினு மீவன யாவற்றையு மெனவோகார மெல்லா முறழ்ச் சிப்பொருண்மேல் வந்தன.

மலர்முதலாயின வெடுத்துக்காட்டுக்களாதலிற் பிற விழிந்தவு முயர்ந்தவுங் கொள்ளப்படும்.

செவ்வி - வாடாமை; பசுமையென்பதாம்.

யாவரேனுமென்றது பிறப்பு முதலியவற்று னுயர்ந்தவ ரிழிந்தவ ரிடையாயினர் மகார் மடவார் யாவராயினு மென்றவாரும்.

இனியரென்றதனுனே அன்பராயினர் தனக்குப் பதினறு சிறப்பு முறையா னிரம்பச் செய்யாது நல்குதலு மமையு மென்பதாம்.

யாவுமென்றதனுற் கடவுட்குப் பரிவு சிறப்ப நல்குவன அறு வேறு தூய்மை செய்யப்படாவழியுங் குன்றுத தூய்மை யுடையனவேயா மென்பதுகொள்க. அறு வேறு தூய்மையாவன கொடுக்கும் பொருள் கொடுப்பான்றூயனுதல், அவன் கொடுக்கும் பொரு டூய் தாதல், அப்பொரு ளுய்க்கு மிடந் தூய்தாதல், அப்பொருள் வந்த பொருண்மரபுதூய்தாதல், அப்பொருள் கொள்க வென்னுஞ் சொற் றூய்தாதல். அப்பொருள் கொளக் கடவுட்கொணர்ந்துய்க்கு நிலைக் களந் தூய்தாதலென்றிவை. ஏற்குங் கடவு ளென்ஞான்றுந் தூய னுதலான் அவன் றூயனுதலாராயப்படாது. கடவுளை யொழிந்தார்க் காயின் அதுவுமாராயப்படும். ஆண்டஃதுளப்படத் தூய்மை யேழாகும்.

கடவுடன் னன்பர்க் கெளியனுதல் புலப்பட ஈவவெனவு மேற்றுண்டொளிர்கெனவுங் கூறிய வேறுபா டுணரப்படும்.

தன்னன்பர்பா லேற்றுண் ணுதலிற் கடவுட்காகுமுவகைமிகுதி 'ஒளிர்' கென்றதனுற் பெறப்படும்.

> "இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
> துன்ப முருஅ வரின்" (இரவு. 2.)

எனவும்,

> "இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
> முள்ளு ளுவப்ப துடைத்து" (இரவு. எ.)

எனவுமுப்பால்கூறுமாற்ருன் இரத்தலும் பேரின்பமாமா றுணரப் படும்.

இப்பாட்டின்கருத்துப் புறநானூற்றுப் பாட்டினுங் காணப் படும். அது வருமாறு :

> "நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
> புல்லிலை யெருக்க மாயினு முடையவை
> கடவுள் பேணே மென்னு வாங்கு
> மடவர் மெல்லியர் செலினுங்
> கடவன் பாரி கைவண் மையே." (106.)

இது கபிலர் வேள்பாரியைப் பாடியது.

உச. ஏதமில் பண்பின் மேதகு வேந்தே
யாதனைச் செய்வை யாதனை யுணர்வை
யாதனை வேட்பை யாதனை யீவை
யாதனை நோற்பை யாதனை மொழிவை
யதனை யதனை யாங்காங்
கிதனைக் கொள்கென வியற்றுக நீயே. 363

ஏதம் - குற்றம்.

கொள்க: வியங்கோள் வேண்டிக்கொடற்கண் வந்தது.

இங்குக் கருதிக் கூறு மன்பு நெய்யென விடையருதொழுகு தலை யன்பெனப்படும். ஏனை யிடையன்பு கடையன்பு புணரிகட்குரிய வல்ல.

௨௫. வினையெனக் கீதலின் வினைவிளை வாகு
மெனைநலந் தீங்கின் யாப்பவிழ்ந் தனையாற்
றுறவொடும் புணர்ப்பொடுந் தோய்ந்து
மறவியின் றென்னை மருவுவை நீயே. 364

எனை - எவ்வளவு. யாப்பு அவிழ்ந்தனை - கட்டவிழ்ந்தனையாவாய். யாப்பும்: முற்றும்மைதொக்கது. அவிழ்ந்தனை யெனத் துணிவின் கண் எதிர்விறப்பொடு மயங்கிற்று. தோய்ந்து - பொருந்தி.

துறவொடும் புணர்ப்பொடுந் தோய்ந்து மறவியின்றென்னை மருவுவை யென்றது கடவுள்பாலயராவன்பு கிளர்ந்துழி அஃதெய்தப் பெற்றார்க்குத் தறவும் புணர்ப்பு நினைந்து மேற்கொண்டு முயல வேண்டாமே வேட்டுத் திண்ணப்பனுக்குப்போல அவைதாமே யமைதலிற் கடவுளைச் சார்தலிற் றப்பின் றென்றவாறும். எனவே கடவுட் காதலின் சிறப்புணர்த்தியவாறுயிற்று.

வினையைக் கடவுட்கீதலாவது அஃதவனாற் செய்யப்படுவதென வுணர்தலாம்.

வினைவிளைவின் யாப்பவிழ்தலாவது வினைகடவுளாற் செய்யப் படுவதென வுணரவே வினைவிளைவுங் கடவுளா னுகரப்படுவதென உணர்ந்து புறக்கணித்திருத்தலாம். எனவே துறவாயிற்று. கடவுள் பாலன்றி வேறு நினைவின்மையானே புணர்ப்புந் தானே யமைவதாம்

௨௬. எவ்வுயிர்க் கானும் யான்பொதுச் சான்றெனிற்
றெவ்வொடு நட்புத் தேவையெற் கல்ல
வாயினு மென்னை யன்பொடு வழிபடன்
மேயவ ரென்வயின் மேயின
ராயவர் மருங்கின் யானு மதுவே. 365

தெவ் - பகைமை. எற்குத் தேவை யல்லவென மாறுக. தேவை - கொளற்பாலன; தெவுவென்னு முரிச்சொலிற்படுபெயர்.

மேயவர்; மேவியவர்.

அதுவே: அவ்வாறு அன்போ டவர்வயின் மேயினனென்க.

அவரவ ரளவினுகுங் கடவுடன் னன்பரளவினனுய்த் தானுமன் பினனுதல் செப்பத்திற் றிறம்புத லன்றுகு மென்றான்.

௨௭. ஆவுரித் துண்டுழ லடலை யாயினு
மோவுற வில்லா துன்னி யென்னை
வழிபடு மாயின் மாண்டகு செயலா
னிழிதக னுகா னினையன்
றெழுதக நல்லன் றுணிந்துணர் வார்க்கே. 366

அடலை - தீவினையாளன். ஓவுறல் - இடையிடுதல். உம்மை: எதிர்மறை. அன்னேற்கு வழிபாடரிதென்பதாம். மாட்சிமை தக்க செயலென்றது அவ் வழிபடுஞ்செயலை. அதனாலவன் குற்றங் கெடுக் கப்பட்டமையா னிழிதகனுகா னென்றான். இழித்துரைக்கத் தகுப வன் இழிதகன். துணிந்துணர்வார்க்கென்பதனை உணர்ந்து துணி வார்க்கெனப் பிரித்துக் கூட்டுக.

உணர்ந்து துணிவார்க்குத் தொழுதக நல்லனுவனென வினைக் குறிப்பாக்கச்சொற் றெருகநின்றது. மாண்டகு செயலாற் றெழுதக நல்லனென வியைக்க.

உ அ. என்னடி யானெனின் யாவ னுகுக
வன்னவன் கண்டா யறத்தகை யானென்
மன்னிய செந்நிலை தன்னியல் பாயினன்
மன்னவ விதனை மறவ
லென்னடித் தொழும்பற் கில்லைக் கேடே. 367

கண்டாய் : முன்னிலையசை ; தெளிவித்தற் குறிப்பிற்று. தகை - அழகு. அறத்தின் கோல முடையானென்க.

மன்னிய - நிலைபெற்ற. செந்நிலை - அமைதிநிலை. செந்நிலையே தனதியல்பானவன்.

இதனையெனச் சுட்டியது தொழும்பற்குக் கேடில்லை யென வருவதனை. மறவல் : எதிர்மறை யேவல்.

உகூ. புலைஞ னயினும் பொதுமக ளாயினும்
விலைஞ னயினும் வினைஞ னயினு
மென்னுழைக் காதலி னெய்துப மன்ற
பொன்னுல காளரும் புகற்கரி தாகு
மின்னமர் விழுமிய மீமிசைச் செலவே
யினைய பரிசெனி னியம்புத லென்யான்
புலவருஞ் செங்கோற் புரவலர் தாமு
மேனையடைந் துய்குவ ரென்னும் வாய்மை
யாதலி னைய நீயிது தெரியின்
வீதலும் விழுமமு மிடைதரு மிம்மை
யெய்தலி னென்னை யிறைஞ்சுக
வுய்திநீ கோட லொருதலை காணே. 368—369

புலைஞனயினு மென்பது முதலிய வும்மை நான்கு முயர்வுசிறப்பு; காதலினுயர்வைச் சிறப்பித்தலின்.

பொன்னுலகாளரும் : உம்மை : இழிவு சிறப்பு.

மின் அமர் — ஒளிமேவிய.

மீமிசைச் செலவு — மீமிசைஞாலஞ் சென்றடைதல். மீமிசைச் செல வெய்துபவெனக் கூட்டுக.

இனையபரிசெனின் — இவ்வாறுயின்.

இனைய பரிசெனிற் புலவரூஞ் செங்கோற் புரவலர்தாமு மெனை யடைந்துய்குவரென்பது யானியம்புதல் என்னென முடிக்க ; சொல்லாமே பெறப்படுமென்பதாம். அடைந்தென்பது பொருட்டுப் பொருண்மே னின்ற வினையெச்சம் ; அடைதலாலென்பதாம்.

வீதல் – சாதல். விழுமம் – துன்பம். மிடைதரும் – மேன்மே லிடையீடின்றி வரும்.

காண : அசை.

௩௦. என்னொடு நின்னெஞ் சிணைத்தென தாக்கி
யென்னடி யன்ப னெனத்தலை நின்று
பரிவினே டென்னைப் பராஅய்ப் பழிச்சுக
வரிவி லாள ! வல்லை யாயிற்
றன்னை முந்துறத் தலைப்பெயா நிற்றலொ
டென்னை முன்னிட் டியலிற்
பின்னை யென்னைப் பெறுவது துணிபே. 370

எனதாக்கி – என்னெஞ்சாக்கி; எனவே யா னீயாகித் தன்னைத் தா னினைத்தென்பதாம்.

தலைநின்று – மேலாக நின்று. பரிவு – அன்பு.

பராய்ப் பழிச்சுக – வாழ்த்தி வணங்குக.

என்னை முன்னிட்டு – என்னை நின் செயற்கு வினைமுதற் பொருட் டாகக் கருதி. இயலின் – ஒழுகினல்.

தன்னைத் தான் முந்துற வுணர்ந்து தான் கடவுளை யின்றியமை யாமை யுணர்ந்தொழுகிற் பின்பு கடவுளை யெய்துதல் பிழையா தென்றவாறும்.

ஒருவன் கடவுளைப் பெறுதலென்பன தான் றன்னுடற்கண் யாண்டு நிறைந்த கடவுளாதலு முடனீத்துழி மீமிசைஞாலஞ் சென்று கடவுளைத் துய்த்தலுமாம்.

இப்பான் முழுதுங் கடவுட் பெருங்காதற் சிறப்பு வலியுறுத்தப் பட்டது.

நம்பியகவல்.
அணித்தரவு.
பெரும்பற்றப்புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.
ஒன்பதாவது பால்
மன்பெரும்புலமை மன்பேரற்றம்
முற்றும்.

ஓமுதுமெய்.
ஓமமைத். ஓமமைதி. ஓமமைதி.

ஓம்:

பத்தாவது பால்.

கடவுட் செல்வக் காட்சிப் புணர்ப்பு.

க. இன்னுங் கேட்டி யென்பெருங் கட்டுரை
பன்னு மாங்கது பலர்நலங் காமுறு
நின்பொருட் டின்னே நிகழ்த்துவ
லென்பொருட் டினிய தியற்றுநல் லோயே. 371

கட்டுரை — பொருள்பொதிந்த வுறுதிச்சொல். பன்னும்: இனிச் சொல்லும். ஆங்கு; அசை. இனி — இப்பொழுது. நிகழ்த்துவல் — சொல்லுவேன். அது நிகழ்த்துவலென்க.

இனியது: தொகுதியொருமை.

இனியன: மகிழ்வளிக்கு முணர்வு, நினைவு, சொற், செயல்கள். இயற்றுநிற்கு நல்லோய்!

என் பொருட் டினிய தியற்று நல்லோயாதலின் நின்பொருட் டியானு மினியது சொல்லுவ லென்பது கருத்து.

பலர் நலங் காமுறு நின்பொருட்டு நிகழ்த்துவலென்றதனாற் பிறர் நலம் பேணு மவர் நலங் கடவுள் பேணுதல் கடனென்னுங் குறிப்புந் தோன்றிற்று.

இனித், தம்முள் வேற்றுமை யில்லாது நட்டோராயினர் தம்மு ளொருவ ரொருவரைக் கேளாவழியுந் தாமே யுணர்ந்து ஒருவர்க் காவன வொருவர் செய்வரென்னுந் தலைநட்பியலு மீண்டுப் பெறப் படும்.

மேலு மன்னுயிர்ப்பா லன்புடையார்க்குக் கடவுள்பாலுங் கடவுள்பா லன்புடையார்க்கு மன்னுயிர்ப்பாலு மின்றியமையா அன்பு நிகழு மென்னும் வாய்மையு மிங்கமைந்தது.

உ, இமையோர் குழாஅ மென்பிறப் புணர்கில
முனிவோர் குழுவு மதுவே முனிவ!
முதுவோ ரிமையோர் முற்றுங்
கதுவா முதற்பெருங் கடவுள் யானே. 372

இறைவன் றானே தன்னிற் றோன்றியபின்னரே அவனிட மிருந் தேனை யிமையோர் முனிவோர் முதலா மன்னுயிரெல்லா முறைமுறையே தோன்றினவாகலின் அவையெல்லா மவன்பிறப் புணர்தலாற்றுவாகும். அதுவே: அங்ஙன முணரா வென்றவாறு. முனிவ! என்றது வில்விளி.

முதுவோர் - முனிவோர்.

கதுவா - பற்றப்படாத. அவரெல்லா மியல்பானே தன்மை யுணர்வின்றி முன்னிலையுணர்வே யுடையராதலின் இயல்பாகவே முன்னிலையுணர்வின்றித் தன்மையுணர்வேயுடைய விறைவன்ரு னெதிர்ப்பட்டுத் தன்னையுணர நின்றவழி யன்றி யிமையோர் முதலாயினரா னிறைவன் பற்றப்படாமை யுணரப்படும். அஃதாவது தம்முணர்வின்றித் தாமிறைவனாகி நின்றன்றித் தாமேயாய் நின் ேறோரா னுணரப்படாதவன் இறைவனென்பதாம்.

பெருங்கடவுள் — பொதுக்கடவுள்.

ங. பிறவா யாக்கைப் பெரியோ னெனவு
முதலா தமைதரு முன்னோ னெனவு
முலகத் தனிப்பெருந் தலைவ னெனவு
மிவ்வா றென்னை யெண்ணு மறிவ
னெல்லா ருள்ளு மீண்டுப்
பொல்லா வினையெலாம் போயகன் றேனே. 373

முதற்கட் பிறந்த கடவுள்யாக்கை தந்தைதாயர்வயிற் பிறவா மையிற் கடவுள் பிறவாயாக்கைப் பெரியோனாமாறு காண்க. அவ்யாக்கையெவ்வாற்ருனு மேனையாக்கை போலாமையின் எனை யாக்கைகட் கமையுங் குற்றமொன்று மவ்யாக்கைக் குளதாதல் கூடாமையான் அப்பெரியோன் றூயனு மொப்பில்லானுமாவன்.

இயல்பாகிய வோசை தானே அகரவெழுத்தாயு மமைந்தவாறு போல வியல்பாகிய பெருஞ்சார்பு தானே தன்னியல்பி னின்ற வாறே கடவுளுமாதலான் முதலாதமைதரு முன்னோனெனப்படு வான், அவ்விறைவன்.

இறைவன் முன்னிலைபி னிறைவனை நோக்கி யியலுத லின்றி யமையாமையி னுலகம் வரம்புபட்டுத் தொடர்ந்தொழுங்காக வாக்கமுற் றியலும்; அதனாலவன் உலகத் தனிப் பெருந் தலைவ னவன்.

மக்களெல்லாருள்ளு மென்க.

இங்ஙனங் கடவுளை நினைத்தலான் அந் நினைவுபற்றி நின்று வினைச் செயற்கட் புறக்கணிப்பு நிகழ்தலானுந் தன்னைத் தாணுண ரும் புலமையெய்துதலானும் அவன் வினையெலாம் அகன்றுபோமா றுணர்க.

வினையகலுதலாவது ஒருவன் ருன் றன் வினையொடு தானே எதிர்மறையாய இயைபின்மை துணியநேர்தலாம்.

பொல்லாவினையென்றது நல்வினையு முளப்பட.

ச. நுட்ப வுணர்வே நூலுணர் வென்றூத்
தெட்ப வுணர்வொடு தேற்றூர்ப் பொறுக்கும்
பொறுமை வாய்மை செறிவு செம்மை
யின்கண் புன்க ணின்மை யுண்மை

யச்ச மாண்மை யாருயிர்க் கிரங்கல்
செப்ப மீகை செங்நோன் புவகை
யிசையொடு வசையென் றின்னே ரன்ன
வென்னவு மன்னுயிர்க் கெல்லா
மென்னுழை நின்று மெழுவன தாமே. 374—375

நுட்பவுணர்வு; பொருட்டாக்கங்களை யொருவர் தாமே இயற்கையா னுணுகி யெண்ணி யுணரு மியற்கை யுணர்வு.

தெட்பம் - தெளிவு.

தெட்பவுணர்வாவது பொருள்களைக் கண்டுழி வியவாமையு மயங்காமையுமாம்.

தேற்ருர் - தெளியாதார்; பிறவுயிர்க்குத் தாஞ் செய்யு நன்மை தீமைகண் மீண்டு தமக்கெய்துத லொருதலை யென்னுந் துணிவில்லாதாரென்பதாம். தேற்ருரைப் பிழைபொறுக்கும் பொறுமையென்க.

செறிவு - பொறியடக்கம். செம்மை - நெஞ்சடக்க மென்னு மமைதி. இன்கண் - இன்பம். புன்கண் - துன்பம். இன்மை - கைப்பொருளின்மை: வறுமை. உண்மை - கைப்பொருளுடைமை. இனி யின்மை யுண்மைகண் முறையேயொருபொருளிலதாலு முளதாதலு மாம். செப்பம் - நடுநிலை. செங்நோன்பு - பிறழாத நோன்பு. உவகை - கிடைத்தவளவினமைதல். இசை - புகழ்.

இங்கு நுட்பவுணர்வுமுதல் வசையீருக வெடுத்தோதிய மாட்சிகளின் நிறுத்தமுறையாமா றுய்த்துணர்ந்துகொள்க. யாமுரைப்பிற் பெருகும்.

ஞாலமுழுதுந் தனக்கு முதன்மையின்றிக் கடவுளைநோக்கி யியங்குமுறையான் மேற்கூறிய நிகழ்வவாதலான் அவையிற்றை யெல்லா மென்னுழைநின்று மெழுவன வென்ருன். எனவே யம்மாட்சியுடையார்க்கன்றிக் கடவுளுணர்வுங் கடவுட்பற்று மமையுமா றில்லையென்பதூஉ மினிதுணரப்படும்.

ரு. புலவ ரெழுவர் புரவலர் நால்வர்
தலைவ ருழித் தலைக்கண் வந்தோர்
தூயவென் னெஞ்சிற் ருேன்றி யானே
யாயவிவ் வான்ருேர் மரபினர்
பாயவிம் மாந்தர் பல்லோ ரும்மே. 376

பொறி பதினொன்ருகலிற் பதினொருவ ருளராயினர். பொறி பதினொன் றனுள்ளும் சொல்லுதற்குரிய வாயென்பதுணர்த்துதற் கியைபுடையதாகலின் வாயுளப்பட நெஞ்சுங்கண்முதலியவைம் பொறியுமாக விவ் வேழனிற் ருேன்றியோர் செயற்குரியரன்றி யுணர்த்துதற்குரியாராகலிற் புலவாராயினர். எனைச்செயற்குரிய நால்வரும் புரவலராயினர்.

நெஞ்சொழிந்த பதிற்றுப் பொறியு நெஞ்சிற் றோன்றியன வாதலுணர்க.

பாவியவென்பது பாயவெனத் தொக்கது.

பாய - பரந்த.

சூ. இன்ன வெனவ செல்வமும் புணர்ப்புஞ்
சொன்ன வாறு துரிசற வுணர்வோன்
றுளக்கமில் புணர்ப்பிற் றுன்னுவ
னளக்கரி னடுவ ணமர்மலை போன்றே. 377

எனவ - என்னுடைய. ஈற்றகரம்: ஆறுவதன் பன்மைச்சொல்.

கடவுளின் செல்வமாவ தைந்தாம்பாட்டிற் கூறியவாறிறைவன் றன்னெஞ்சினின்று பதினொருவரைப் படைத்து அவர் வழியாக வேனை யெல்லா வுயிர்களையு முறை முறையாற் படைத்து நிறீஇ மீட்டலாம். எனவே கடவுளின் செல்வமாவன அடிமையு முடைமையு மென விருபாலினு ளடங்குவனவா மென்பது.

கடவுளின் புணர்ப்பாவது மேன்மூன்று நான்காம் பாட்டுக் களிற் கூறியவாறும்.

செல்வம் புணர்ப்பின்வழி வரற்பாலது.

துரிசு: அறியாமை முதலாய குற்றம்.

துன்னுவன் - அழுந்தித் தளராது நிலைபெற நிற்பான். அளக்கர் - கடல்.

அலையுங் கட னடுவ் ணலையாது நிற்கு மலைபோன்று வினையி னுழலு முலகச் சூழலி னடுவ ணெஞ் சசைவின்றி யினிது நிலைபெற நிற்பானென்க.

துளக்கம் - அசைவு.

அங்ஙனந் துரிசறவுணர்தலின் பயனுங் கூறப்பட்டது.

இதனான் ஞாலவழக்க மென்ப திறைவன் றன் புணர்ப்பிருத்தலா மென்பதூஉம் பெற்றும்.

எ. யாவற் றுக்கும் யாஅன் பிறப்பகந்
தூவுற் றென்னிற் றெழிற்படு மிவ்வெலா
மென் றுணர்ந் தார்வமுற் றென்னையா
னென் றுண ரறிஞ ரெற்றெழு குவரே. 378

இறைவன் றன் பெரும்பொருளெனி னேனையவற்றுக் கெல்லாம் பிறப்பிடனாகலானும் தானயக்கா லவையெல்லாம் பிறக்கு முதலாகிய வாற்றலைத் தனக்கி யாக்கையாகக் கொண்டு தானென நிற்றலானும் யாவற்றுக்கும் யானே பிறப்பக மென்றான்.

தூ - பற்றுக்கோடு.

என்னிற் றூவுற் றெனவு மென்னிற் றெழிற்படு மெனவு மிரு வயிற் கூட்டி யென்கட் பற்றுக்கோடாகப் பொருந்தி யெனவு மென்னுற் றெழிற்படுமெனவு மிரட்டுறமொழிதலாக்கி யிருபொருள் பட வுரைக்க.

இவ்வெலாந் தூவுற்றுத் தொழிற்படுமென்க.

உற்று - மிக்கு. இன்றியமையாமை நோக்கலிற் கடவுள்பாற் பிறர்க் கார்வ முறுதலாகும்.

சுட்டியுணரப்படு பொருளெல்லாஞ் செத்தையாகு மாதலிற் கடவுளை யானென வுணர்த லன்றி யுணருமாறில்லை யென்பதுணர்க. அல்லதூஉங் கடவுள்யாக்கையாகிய மூதலாற்றலும் யாரானுந் தாம் அவ்வுயிர்மருளினொருகூறுதலைநோக்கி யானென வுணரினன்றி யுணர்தற்காகாமை யுணர்க.

அவ்வறிஞர் முதலியின் செயலாயினு மூதலின் செயலாயினு மன்றித் தஞ்செயல் யாது மின்மை துணிதலின் அவர்க்குத் தொழுத லல்லது தொழி லில்லையாகும்.

அ. என்பா லூன்றிய வெண்ணம் போற்றி
யென்பாற் பட்ட வின்னுயிர் வாழ்க்கைய
ரன்பாற் றம்பு ளவரவர் கண்ணு
முணர்த்துவ ருரைப்ப ருவகைமீக் கூர்வர்
நினைத்தொறு மகிழ்வர் நெடும்புணர்ப் பயர்வ
ரங்ஙனம் வழிபடு மார்வலர்க் காயி
னுண்ணுணர் வொருமை நொய்தி னல்குவெ
னன்ன தன்மையி னவர்தா
மென்னைக் குறுகுத லெளிதா கின்றே. 379—380

ஊன்றிய - நிலைபெற்ற. போற்றி - நெகிழாமற் பாதுகாத்து. என்பாற்பட்ட - எனக்குரித்தாகிய.

என்பாற்பட்ட வின்னுயிர் வாழ்க்கையரென்பது எனக்குரித் தாதலா லுயிருடம்பின்க ணிற்றலல்லது ஞாலவாழ்க்கைத் துன்பங் கண் டுயிர் நிற்ற லாற்றுதவ ரென்றவாறும்.

கடவுளார்வலர்க்கு நெஞ்சு தொழி விழுத்தலின் நுண்ணுணர் வொருமை யெளிதி னமைவதாம். அவ்வொருமையமையவே யெங் கணு மொருவனுகிப் பொதுவனுகியானை யெதிர்ப்படுதலுந் தானே யமைவதாகலின் என்னைக்குறுகுத லெளிதாகின் றென்றுன். எளிதா கின்று - எளிதாகின்றது. எளிதாதல் : முயற்சிவேண்டாமேயிருந்துழி யிருந்தவாறே தலைப்படுதலாம். குறுகுதல் - மிகவணுகுதல்.

இது தானும் பேரின்பமா யழிவிலின்பமாகிய வீடுபேற்றினையு மெளிதிற் பயக்க வல்ல வியல்பு பிறிதிற் கின்றெனக் கடவுட்காதலின் சிறப்புணர்த்திற்று.

கூ. எமர்பொருட் டருள்கூர்ந் தெய்யா மையிரு
ளமர்தன் னுண்மை யகவயின் மிளிரு
மெய்யுணர் வென்னும் விளக்கொளி கொளீஇ
யொய்யெனத் துரக்குவெ னுண்ணின் றவர
தோருளங் கொண்டியா மோரிரு வேமு
மோருணர் வெனதே யுடைமையி
னீருயிர்த் தோற்ற மிலமா தும்மே. 381

எமர் - என்னன்பர். அருள்கூர்தல்: அவர் கடவுளேதானுதல். தான் அவராதலே மறைத்தலும் அவர் தானுதலே அருளலுமாமென வுணர்ந்துகொள்க.

எய்யாமை - அறியாமை. அமர் - மேவும்.

தன்னுண்மையாவது ஒருவன் ருன் சார்பின்றித் தனித்துத் தான் ருனுதல். தன்னுண்மைக்கண் மிளிருமுணர்வு மெய்யுணர் வெனப்படும். அஃதவ்வவுயிர்க்கே யிருள்சீத்தலின் விளக்கொளி யெனப்பட்டது.

அருள் கூர்ந்து உண்ணின்று மெய்யுணர்வென்னும் விளக் கொளிகொளுத்தி யெய்யாமையிருளை யொய்யெனத் துரக்குவெ னெனமுடிக்க.

ஒய்யென - விரைய. துரக்குவென் - ஓட்டுவேன்.

தன்மைப்பன்மை: படர்க்கையுளப்பாட்டுத் தன்மைப்பன்மை.

யா மிருவேமு மவர தோருளங்கொண்டு எனதோருணர்வுடை மையி னெனவே கடவுளு மன்பருந் தம்முட் டலேப்பெய்து கூடிய கூட்டத்துக்க ணிருவர்க்கு முணர்வொன்று முள்ள மொன்று மாயின. இங்ஙன மீருள்ளமு மீருணர்வு மாகாது ஓருள்ளமு மோரு ணர்வு மாயவற்றுள் உள்ளமன்பருடையது முணர்வு கடவுளுடைய துமாய்ப் பணிமாற்றமாயவா றுணர்க. இதனு லன்பரதுள்ளங் கட வுட்குரித்தாயிற்றுக் கடவுளுணர்வன்பர்க்குரித்தாயிற்று. இங்ஙன மிருவர்க்குள்ளமு முணர்வு மொன்ருென்ருகவே ஈருயி ருளவாதல் புலனுகாமையிற் கடவுளு மன்பரு மோருயிர்த்தோற்றமாயினமை பெறப்படும்.

கம. ஓங்குயர் பெரும்பெய ரோங்குயர் நிலேய
மோங்குயர் தூய்மை யீங்கிவை நீயென
வெம்மை யாட்கொள விழிந்த செம்மா
லிம்மை தானே யெமக்குவீ டாயிற்
றழியாய் நிலவு மண்ணலே நீயென
வொளிமாண் முதற்பே ரும்பர் நீயெனத்
தோற்ற மில்லாத் தொல்லோ னீயென
வாற்ற வெங்கணு மான்ருே னீயென
மண்ணகப் புலவரும் வாய்வதி னுரைப்பர்

விண்ணகப் புலவரு மேம்பட வுரைப்ப
ராங்கு நீயே யீங்குச் செப்புதி
பாங்கு படநீ யாங்குக் கிளக்குவை
மாற்ற மவ்வெலாம் வாயே யாகும்
போற்ற வருநின் றோற்றந் தன்னை
வானோர் தகுவ ரீனோ ருணரார்
நானோர் வேட்கைநீ நல்கிய விரப்ப
லாண்டகாய் நீயே யறிகுவை நின்னை
யீண்டிய மன்னுயிர் யாவு மாயினை
மன்னுயிர் முதல்வ! வானவர் வானவ!
விந்நில முழுதுக் கிறைவ நீதா
னெப்பெருஞ் செல்வப் பெற்றி யெழில்கொ
டிப்பெரு ஞால மெல்லாங் கஞன்றனை
யொப்பருங் கடவு ளொண்மை சான்ற
வப்பெருஞ் செல்வ வாற்ற லெல்லாஞ்
செப்பினை யாகுக செப்புங் காலை
யெப்பரி சானு திடையீ டின்றி
யானினை யுள்ளி ஞான்று முணர்கோ
யானினை யெவ்வெப் பான்மையி னினைக்கோ
புணரியர் தலைவவப் புணர்ப்பொடு செல்வம்
பெயர்க்கவு முரைத்தருள் பெரியோ
யுயர்க்குநின் னுரைமருந் துவட்டாச் சுவைத்தே.

ஓஙகுயர் - உயர்வறவுயர்ந்த. பெயர் - பொருள்.

நிலையம் - நிற்குமிடம்: நில்லாது வினைசெய்தியங்காநிற்கு முயிர் வினைமுடிந்து வினையின்றிநின் றமைதியுறுமிடமென்பதாம்.

தூய்மையாவதனைத் தூய்மைதருவதனைத் தூய்மையென்றதாகு பெயர்; இயற்பெயரெனினுமமையும். ஈங்கு: அசை. நீ: ஆகுபெயர்.

இழிந்த: விண்ணினின் றிறங்கிய.

செம்மால்! - தலைவனே!

எமக்கு இப்பிறப்புத் தானே வீடுபேருயிற்று, நின்னுலென்ரு னென்க. வீடியன் ஞாலத்துக் கடவு ளீண்டுவந்திருத்தலின் இப்பிறப் புத் தானே வீடாயிற்றென்ற தொக்குமா றுணர்க.

அழியாயாய் நிலவு மென்க. அண்ணலே - தலைவனுகவுள்ளாய். ஐ: முன்னிலையீ ற்றுச்சினை.

மாண் - மாட்சிப்பட்ட. உம்பர்: ஆகுபெயராய் இமையோ னெனப் பொருள்பட்டது.

உம்பர்நீ: இடவழுவமைதி. முன்னும் பின்னு மிங்ஙனங் கண்டு கொள்க.

தோற்றம் - பிறப்பு. ஆற்ற - மிக. ஆன்றோன் - நிறைந்தோன்.

வாய்வதின் - பொய்யாகாதவாற்றான்.

ஆங்கு - அவ்வாறு. ஈங்கு - இவ்விடத்து. என்பாலெனினுமாம்.

பாங்குபட - நன்றாக. யாங்கு - எவ்வாறு. மாற்றம் - சொல். அவ்வெலாம் - அவையெல்லாம். வாயே - உண்மையே.

தகுவர்: வானோர்க்கு நேர்மாறாய வொருசா ரணங்குகள். வானோர்செயலையு மவர்பாற்பட்டோர்செயலையுந் தடுக்குந் தொழிலினராதலிற் றகுவரெனப் பெயர் பெறுவர். தகுதல் - தடுத்தல்; தகைதலென்பதன்மரூஉ.

நல்கிய - நல்குதற்கு. செல்வப்பெற்றி - செல்வத்தன்மை. எழில்கொடு - தோற்றத்தானே. கஞன்றனை - நிறைந்தாய்.

கடவுளொண்மை - கடவுட்குச் சிறந்த வொளித் தன்மை. சான்ற - நிரம்பிய.

செல்வவாற்றல் - செல்வப் பெருமை. செல்வமாகிய வாற்றலுமாம்.

எப்பரிசு - எவ்வாறு. ஆனது - அமையாது. ஞான்றும் - எப்பொழுதும். உணர்கோ - உணர்வேனோ. நினைக்கோ - நினைப்பேனோ. எவ்வெப்பான்மையின் - எவ்வெக் கூற்றியல்பின் வைத்து.

அப்புணர்ப்புஞ் செல்வமு மீண்டு முரைத்தருளென்க. பெயர்க்கவும் - மீட்டும்.

உயர்க்கும்; எல்லாருரையினுங்காட்டி லுயர்த்துச் சொல்லப்படும். எல்லாரினு முயர்த்துச் சொல்லப்படு நின் னென்றுமாம்; கேட்டாரை வினைவழிப்பட்டுக் கீழாக வொட்டா துயர்த்து நிறுத்தும் நின்னுரை யெனினுமாம்.

உவட்டாச் சுவைத்து - ஆராத சுவையுடையது; தொகுதியொருமை. நுண்ணிய வரிய கருத்துக்களைப் பயத்தலானு மன்பொடும் வாய்மையொடுங் கூடுதலானுஞ் சொன்னயம் பொருணய மிக்கிருத்தலானு மினியகுரலோடு படுதலானுஞ் செம்பொருள்கண்டானு மொழுக்கமுடையானு மாகியான் வாய்ச்சொல் லாதலானுந் தெவிட்டாத சுவையுடைத்தாமா றுணர்க.

தனக்கித்துணைமுயன்று உணர்த்தற்கரியன வுணர்த்தும் நம்பியை மகிழ்வித்து மேலுஞ் சொல்லுமா றூக்குவித்தான் வில்லி. மேல நம்பி கூற்று.

கக. அருந்திறற் கோவே யச்சோ வென்பாற்
பொருந்துவிட் செல்வப் புணர்ப்பள விலகாண்
சிறந்தன வவற்றுட் சிலச்சில
சிறந்தன வெடுத்துச் செப்புவென் கேளே. 389

திறல் - ஆற்றல்; வென்றியுமாம். அச்சோ: வியப்புக் குறிப்பிடைச்சொல்.

விட்செல்வம் - வானகத்திருந்து நிகழ்த்துதற்குரிய செல்வம். புணர்ப்புச்செல்வ மென மாறுக; புணர்ப்பி னுகுஞ் செல்வம்.

அளவில் சிறந்தனவாகிய வவற்றுட் சிறந்தனவாகிய மிகச்சில வற்றை யென்க.

கஉ. எவ்விய லுயிர்க்கு மிருக்கையாகி
யவ்வுயிர் தோறு மகம்புகுந் துள்ள
வவ்வுயிர் தான்யா னவற்றுக் கெல்லா
மெழுவா யிடைமையொ டேனை
யிறுவா யெல்லாம் யானெனக் கொண்மே. 390

எத்தன்மையான வுயிர்க்குமென்க. எல்லாவுயிர்க்கு மென்பதாம். இருக்கை - இருப்பிடம்.

அகம்புகுந்து - உட்புகுந்து.

உயிராகிய தான் யானென்க.

எழுவாய் - தொடங்குமிடம்.

இடைமை - இடைநிலை: நிற்குமிடம்.

இறுவாய் - ஒடுங்குமிடம்.

கங. ஞாயிறு தம்முட் சாலி யானே
பாயிருஞ் சுடருட் பகலோன் யானே
வளிமர் தம்முள் வளிமன் யானே
விண்மீன் றம்முள் வெண்ணிலா யானே
தமிழ்மூன் றுள்ளுந் தண்ணிசை யானே
யமிழ்தா ணும்பரு ளண்ணல் யானே
வாயிலு ணெஞ்சம் யானே மற்று
மேயின தோற்ற மிகப்பல வற்றுளு
முணர்வியற் றோற்றம் யானென வுணர்க
சினவர் தம்முட் கலவன் யானே
நிணவர் தம்முளுங் களிமர் தம்முளுங்
கிளருங் கைத்து கிழாஅன் யானே
செப்பிய வெண்மர் சீரரு ளெரியனும்
நிற்பவை தம்முள் வெற்புயர் புள்ளியுங்
கழுவுளர் தம்முட் கடவுட் பணிக்கன்
பொருநருட் செவ்வே ளிருவரும் யானே
பொய்கையு ளெல்லாம் பொருகடல் யானே
யலரில் பெருந்தகை யந்தணர் தம்முண்
மலரி சேஎய் நுதலி யானே
வாய்மலர்ந் துள்ளு மறைமொழி தம்மு
ளோமெனு மோரெழுத் தொருமொழி யானே
வேள்வியு ணவிற்சி வேள்வி யானே
மரங்களு ளரச மரம்யா னென்க
விரங்குவிண் முனிவருள் யாழியும் யரனே

யாழரு ளழகிய தேரனும் யானே
யெண்பெருஞ் செல்வ நன்குடை யோரு
ளெண்பெருஞ் சேள யடிகள் யானே
மாவினந் தன்னுள் வான்பரி மாவும்
யானையு ளெல்லாம் யாக்கை விளர்த்த
நான்மருப் பும்பலு நானென வுணராய்
மக்களுட் செங்கோன் மன்னவன் யானே
தக்கவல் லெஃகந் தம்மு ளெல்லாம்
பற்பல முனைக்காழ்ப் படைக்கலம் யானே
யானினு ளும்ப ரானெனல் யானே
யீன்விப் போருள் வேனில் வேள்யான்
பரவிய பாம்பினுட் பைம்மன் யானே
யரவினுள் யானே யாயிரந் தலையன்
றண்புனல் வாழ்நருள் வண்புகழ்ப் புனலி
தென்புல வாழ்நருள் வெண்பொலங் கூற்றுவ
னென்றிவ ரிருவரும் யானே யாவர்
தற்செற் றோருட் கூற்றுவன் றானுங்
கொற்றைத் தகுவருட் கோளடு மகனும்
யாளியும் விலங்கினுள் யானெனக் கொள்ளாய்
கேளிது நண்ப கிளரும் புட்களுள்
வாள்விழி யிமையா வான்புள் யானே
துடைப்பவற் றெல்லாந் தூவளி யானே
படைக்கலக் கையருட் பண்டை ஞான்று
குரக்கணி நடாய கோமகன் யானே
மீன்பலாந் தம்முளும் யான்சுறு மீனே
மேம்படும் யாற்றுள் யான்பனி வெள்ளம்
படைப்புடை முதலிடை கடைப்புடை யானே
யடுக்கிய கல்வியு ளகவுயிர்ப் புலமையுந்
தொகுத்துரை வல்லுநர் சொற்களும் யானே
யெழுத்தினு ளஃகான் யானா கின்றே
னீட்டத் திரட்டை யானா கின்றேன்
பொன்றிய செய்த லல்லது பொன்றாத்
தொன்றியல் பொழுதும் யானே தொகுப்பி
னெவ்வழி யானும் யானே தலைவ
னழிவினுட் சாக்கா டாகுவென் யானே
யெழுதலுட் பிறப்பென யானா கின்றே
னசைவசை புல்லா நங்கையர் மருங்கி
னிசைதிரு வாய்மை யெண்ணணங் கூர்மை
யாண்மை பொறுமை யாயேழ் கூற்றி

யாணர் நன்னலம் யானென வுள்ளே
னெண்ணி னிசையு ளெழிற்பெரும் பண்ணும்
வண்ணந் தம்முட் பாஅ வண்ணமு
நன்ன ராள நானென வுள்ளேன்
றிங்களுண் மான்றலைத் திங்கள் யானே
பொங்கிய செவ்விப் போழ்தினுள் வேளூர்
மென்கா லசையிள வேனில் யானே
படிற்றுள மாக்கள் படிற்றுச் சூழ்ச்சியு
மொளிப்பெரு மக்க ளொண்மையும் யானே
யூற்றஞ் சான்றவர்க் குளவெனக் காணு
மூக்கந் துணிவு வென்றியிம் மூன்று
நோக்கின் யானென நுவலப் படுவே
னென்னினத் தாருள் யானும் யான்போ
னின்னினத் தாரு ணீயும் யானே
யருமறை முனிவரு ளந்தண ரிசைத்த
மறைமொழிச் செய்யுள் வனப்புறத் தொகுத்தோ
னல்லிசைப் புலவர் பல்லவ ருள்ளுந்
தொல்லிசைக் கடவுள் வெள்ளியங் கோளென
விருவரும் யானென வெண்ணினை கோடி
யடக்கி யாளு மன்னோ ரெல்லா
நடத்து செங்கோ லனென வுள்ளேன்
வென்றி வேண்டு மேலோர் மாட்டு
நின்ற செம்மை நினையின் யானே
யாய்வார் போற்று மற்றந் தம்முள்
வாய்வா ளாமை யானென வதிவேன்
மெய்யுணர் வெய்திய மேதகு புலவருட்
பொய்யகன் றொளிர்தரு புலமையும் யானே
தோற்று மெல்லாந் தோன்றுதல் வேண்டு
நாற்று வித்து நானெனக் கொள்க
வியம்பிய வாற்ற னிதுவரைப் போந்த
வயங்கெழு முதன்மை யன்றி மற்றை
யியங்குவ நிற்குவ வெனைத்து மென்னை
யின்றி யமையா வாக வியலுமென்
னன்றி யுணரி னனே
துன்றித் தோன்றுந் தொகைமுழு தும்மே.

அணங்கின் பிறப்புக்களுட் பதினெண்பா லினமுள வென்ப. அணங்கினம் பதினெட்டனுள்ளுந் தலைமை சான்றது உம்பரின மென்பது. உம்பருண் ஞாயிற்றர், சினவர், சீரர், மருத்துவரென நால் வேறு சாரா ருளர். அவருண் ஞாயிற்றர் பன்னிரு குழுவினர்;

சினவர் பதினொரு குழுவினர்; சீரர் எண்குழுவினர்; மருத்துவ ரிரு குழுவினர். ஆகவிம் முப்பான் மும்மைத் தொகையினரு மும்பராவர். இம்முப்பான் மூவருள்ளும் ஞாயிற்றர் பன்னிருதொகையருட் சாலிய ரொருசாரார். சாலியருட்டலைவன் சாலி. அவன் பன்னிருசார் ஞாயிற்றர்க்குந் தலைவனுவன். சாலி யென்னுஞ் சொற்பொருள் நிறைந்தவனென்பது.

சுடர்- ஒளி. காற்று மின் மழை முதலியவற்றில் உலவு மொருசா ரணங்குக ளுளர். அவர் வளிம ரெனப்படுவர். அவருட் டலைவன் வளிமன். வளியின் மன்னி யிருப்பவனென்பது பொருள்.

உம்பரண்ணல் - உம்பர் வேந்தன்.

வாயில் : பதினொருபொறி.

தோற்றம் - காணப்படுவன. உணர்வியற்றோற்றம் - உணர்வா கிய வியல்புடைய வுயிர்த்தோற்றம். தோற்றங்களுள் அதன்கண்ணே தலைமை தோன்றுமாறு காண்க.

சினவர் : மேற்கூறிய பதினொரு தொகை யும்பர். இவர் வெகு ளித் தோற்றமுடையவராய்த் தீயோரைச் சினத்த லுடைமையின் அப்பெயரினராவர். இவருட் டலைவன் கலவன். இவன் றன்னுடலி னிடப்பாற் பெண்பாற்கூறு கலத்தலிற் கலவனெனப்படுவன்.

நிணவர் : நிணமுண்ணு மொருசா ரிழிந்த வணங்குகள். இவர் இருளரெனவும்படுவர்.

களிமர் : களி மிக்கு வெறியாட் டயருமொருசா ரணங்குகள். நிணவர் களிமரென விருசா ரணங்குகளையும் வழிபடு மொருசார் மாக்கள்பண்டை ஞான் றீழமுதலிய தென்கடல் வரைப்புக்களுள் வாழ்ந்தன ரென்ப.

அவ் விருசா ரணங்குகட்குந் தலைவன் கைத்துகிழான். கைப் பொருட் காதற்கிழமை யுடையவனுதலான் இவற் கிப்பெயர் தகுவ தாகும். இவனை வடபால்கிழா னெனவுங் கொள்ப.

மேற்கூறிய சீர ரெண்மருள்ளே தலைவன் எரியனென்னும் பெயரினன். சீரர் : செல்வமுடையவர்.

வெற்புயர்புள்ளி - மலைகளு ளெல்லா முயர்ந்த பனிமலை. புள்ளி யென்பது வடபாற் பனிமலைக் கொருபெயர்.

கழுவுளர் : அணங்கு நலிவுறுமவர்க் கந் நலிவு கழிதற்பொருட் டுக் கழுவா யாற்றுபவர்.

கடவுட்பணிக்கன் : கடவுளாகிய வாசிரியன். கடவுளர்க் காசிரிய னெனினுமாம். என்றது வியாழனை.

பொருநர் - படைத்தலைவர்.

செவ்வேள் : வானோர் படைத்தலைவனுகிய முருகன்.

பொய்கை : உண்டாக்கப்படாம லியல்பா னமைந்த நீர் நிலைகள்.

அலர் - பழிச்சொல். மலரி - மலர்வாழ் படைப்புக் கடவுள். சேய் - மகன். அவன் மலரவனது நுதலிற் பிறந்தமைபற்றி நுதலி யெனப் பெயர் பெற்ற முனிவனுபினுன். நுதல் - புருவம்.

நவிற்சிவேள்வி : வாய் புடைபெயரு மளவு வாய்மொழியைப் பலகாலு மீளமீள நவிலுதல். இது வினைவேள்வி முதலிய வேள்வி யைந்தனுள் ஒன்று.

யாழி - யாழ் வல்ல வொருமுனிவன்.

தேரன் - தேருடையவன்.

சேய் : செந்நிறமுடையவன். இவ னெரு முனிவன். திருமால் பிறப்புக்களுட் சேயடிகளாதலு மொன்று.

மா - குதிரை. வான்மா - வானகத்து வெண்குதிரை. இதுவும் நான்மருப்பு வெள்யானையு மும்பர்வேந்தற்குரிய.

எஃகம் - படைக்கலம்.

பற்பல முனைக்காழ்ப் படைக்கலமென்றது இருதலையு மவ்வாயிர முனைகளை யுடைய வுறுதியாகிய படைக்கலத்தினை. இது காழகமென்ப தொருமணியாற் செய்யப்படுதலிற் சிதைக்கலாகா வுறுதியுடைத் தென்ப. இதுவும் மும்பர்வேர்துக் குரியது.

ஆனினுள் - ஆனிரைகளுள்.

ஈன்விப்போர் - சூற்பொறை யுயிர்ப்பிப்போர்.

பரவிய - வழிபட்ட.

பைம்மன் : பாம்புகட்கெல்லாந் தலைவனெருவன். பாம்பு அரவு என்பன ஓரினத்து விருவே றினம்.

புனலி - புனல்கிழான் என்னுங் கடவுள். இவன் கடல்கிழா னெனவும் படுவன். இவனை மேல்பால்கிழானெனவும் நெய்தற்றிணைக் கடவு ளெனவும் வழங்குப. இவனைக் கொடையிற்சிறந்தானெனவுங் கூறுப.

வெண் பொலங் கூற்றுவன் : உயிர்களை யுடலிற் பிரித்தற் றெழிற் குரிமை யில்லாமையான் வெறுங் கூற்றுவ னெனப்பட் டான். ஈண்டுவெண்மை வெண்கைமகளிரென்புழிப்போலக் கொள்க. வெள்ளிலையும் நோக்குக. இவன் றென்புலவாழ்நர் என்னுந் தந்தை கிழாருட் டலைவன்.

தற்செற்ருேர் - தன்னைத் தானடக்கினவர்.

கூற்றுவன் : இவன் வெண்கூற்றுவனின்வேருய கடவுள். இவனைத் தென்பால்கிழானெனவும் வழங்குப.

கொற்கை - கொல்லுதற் றெழிலுடைய கை. கோள் - இடையூறு. அடு - வெல்லும்.

இடையூற்றை வெல்லு மைந்தனென்றது திருமால் நடுகாலிடை மகன்யாளியாகத் தோன்றி யாட்கொளப்பட்டவன்.

வான்புள் : புள்வேந்து. படைப்புடை : உடை - உடைய. படைப்புச்செய னுடைய. கடைப்புடை : புடை - பகுதி.

துடைப்ப - துகள்சீத்துத் தூய்மைசெய்வன.

குரக்கணி - குரங்குப்படைவகுப்பு.

சுரு - சுருமீன். பலாம் - பல; "பலாஅஞ் சிலாஅமென்மனார் புலவர்" என்றார் பிறரும்.

பனிவெள்ளம் - கங்கையாறு.

அகவுயிர்ப் புலமை: உடம்பி னுள் ளிருக்கு முயிரைப் பற்றிய கல்வியறிவு.

தொகுத்துரை - சுருக்கி விளக்கி யுரைத்தல்.

அஃகான் - அகரவெழுத்து.

ஈட்டம் - கூட்டம். இரட்டை: இருபொருளின் சேர்வு. ஏனை முப்பொருள் நாற்பொருண்முதலாயவற்றின் கூட்டத்துக் கெல்லா மதுவே முதலாமாறுணர்க.

பொன்றிய - பொன்றுதற்கு.

பொழுது - காலம்.

தொகுப்பின் - சுருங்கக் கூறலுறின்.

எழுதல் - தோன்றுதல்.

நசை - ஐம்புல வவா. வசை - பழிச்சொல். நங்கையர் - கற்புடை மகளிர்.

இசை - புகழ். திரு: தமக்கு வேண்டுவதாமே யெய்தப் பெறுந் தன்மை. வாய்மை: மெய்ம்மொழி நெஞ்சு தம்முள் வேறுபடா தொத்து நிகழ்தல். எண்ணம் - நினைவு. கூர்மை - நுண் ணுணர்வு. ஆண்மை: அஞ்சாமையுங் கலங்காமையு முயற்சியுடைமையுமாம். பொறுமை: பிறர்தம்மைநோக்கிச் செய்யுங் குற்றங்களை யுட் கொள்ளாமை.

ஆயேழ் நலனுங் கற்புடைமகளிர்க் குரியன.

கூற்று - வகை. யாணர் - அழகு.

பெரும்பண்: ஏற்றிழி விருகூற்றினு மேழிசையு மெஞ்சாது நிரம்பிய பண்ணிசை. சிறி தெஞ்சினுந் திற மெனப்படும்.

செய்யுள்வண்ணமிருபஃதுள. பாவண்ணமாவது சொற்சீர் பயின்றுவருதல்.

நன்னாாள! - நன்மையுடையவனே!

மான்றலைத் திங்கள் - மார்கழித்திங்கள்.

வேள்ஊர்: வில்வேள் ஏறி நடாத்தும். மென்கால் - தென்றற் காற்று.

படிற்றுளம் - பிறரை மறைத்துக் கேடு சூழ்தலை யுடைய வுள்ளம்.

ஒளி - புகழ்; அறிவுமாம். ஒண்மை - நுண்ணிய விளக்கமான வுணர்வு.

ஊற்றம் - நிலைபெற்று வாழ்ந்துவருந்திட்பம். சான்றவர்க்கு - அமைந்தவர்க்கு.

ஊக்கம் - உள்ள மெலிவின்றிக் கிளர்தல். துணிவு - ஒருப்படுதல்.

என்னினத்தாரென்றது நம்பிகாரியி னினம். நின்னினத்தா ரென்றது வில்லியினினம். யான்: ஆகுபெயர்; முன்னும் பின்னுங் கண்டுகொள்க.

வனப்புறத் தொகுத்தோன்: வாதராயண னென்னும் வட மொழி முனிவன்; மாபாரதம்பாடிய வாதாராயணனுடைய முன் னேன்; வேதத்தின் முற்கூற்றுத் தொகுத்தோன். வியாழன் வெள்ளி யென்பாருள் வெள்ளியங்கோளென்க. இவனைத் தகுவர் கழுவு ளென்ப. கழுவுள்: அணங்குக்ளின்வருந்துன்பம் வாராமுற் காத்தற்குரியோன்.

செம்மை - முறை. அற்றம் - மறைக்கத்தகுமறை. வாய்வா ளாமை - யாதுஞ்சொல்லாடாமை பாதுகாத்தல்.

புலமை - மெய்யுணர்வு,

நாற்றுவித்து - முளைவிதை.

வய - வெற்றி. முதன்மை - தலைமை.

முதன்மை யன்றித் தொகைமுழுதும் நானே யென முடிக்க

துன்றி - இடையீடின்றிச் செறிந்து. தொகை: ஞாலத்தொகை.

தலைமையே யன்றித்தலைமை யல்லாதனவு மெல்லா நானென்ருன்.

ஒருபுடை யொப்புமைவழக்குப் பற்றியும் மரனுனிப்பிறைவழக் குப் பற்றியும் ஒன்றி னென்றன்கட் புலப்பாட்டுமிகுதி பற்றியும் உட லுயிர்போலு மொற்றுமை வழக்குப்பற்றியு மங்ஙனம் யானெனக் கூறிய கருத்துணர்ந்துகொள்க.

கச. தெவ்வடு கையவென் செல்வச் சிறப்பிற்
கிவ்வள வென்னவோ ரெல்லை யில்லை
யருமருந் தன்ன யவற்று
ளொருசில தாஅ முரைத்தனெ னிங்கே. 410

அடு - வென்று கொல்லும். செல்வச்சிறப்பு - செல்வவகை.

இதுமேற்கூறியதன்புறனடை; வருமிருபாட்டுமது.

கரு. நீதக வுணர்க நீரவர் தோழ
தீதகல் செல்வஞ் சீர்த்த தாயது
கிளர்ச்சித் தாயது திருத்தக் கேய்வது
வனப்பிற் றுயதிவ் வழக்கங் காண்டொறு
மாற்றலின் மிக்கவெற் கமைந்த
வீற்றெளிக் கூற்றின் றேற்றமென் றுவந்தே. 411

தக - பொருந்த. நீரவர் - இனிய பண்புடையவர்.

செல்வம்: கல்வி தொழின் முதலாயசெல்வம்.

சீர்த்தது - வாய்த்தது. கிளர்ச்சி - ஊக்கம். திருவினுற்றகுதியுற் றுப் பொருந்தியது.

வனப்பு - நிரம்பியவழகு.

வழக்கம் - உலகியனடை.

செல்வம், கிளர்ச்சி, திரு, வனப்பென்றிவை யொரோவொன்று தமித்தாயினும் இணைந்தாயினு முலகியலிற் றோன்று மிடந்தொறுங் கடவுளின் வீற்றொளிக் கூற்றின் றோற்ற முள வெனக் கண்டுகொளல் வேண்டு மென்றவாறும். எனவே அவையெல்லா மெஞ்சாது முற்ற வுடையவ னிறைவனாவா னென்பதாயிற்று.

வீற்றொளி - பிறவற்றுக் கில்லாத பெருமையொளி. கூற்று - பகுதி. தோற்றம் - காட்சி.

உவந்து நீ தக வுணர்க வென விற்பூட்டுப் பொருள்கோளாக் குக.

கசு. செவ்வே ளன்னாய் தெரிப்பதென் பலவு
மிவ்வேழ் ஞாலமு மென்னொரு கூற்றாற்
செவ்வே நிலைபெறச் செய்து
வெவ்வே றியக்க விளங்கு மெனினே. 412

பலவுந் தெரிவிப்ப தெற்றுக் கென்க ; வேண்டா வென்பதாம். கூற்று - பகுதித்தன்மை.

செவ்வே : தடுமாறாது நன்றாக.

வெவ்வேறு - தனித்தனியாக.

என் னொருகூற்றா னியக்க விவ் வேழ்ஞாலமும் விளங்குமெனிற் பலவுந் தெரிப்ப தென் என முடிக்க.

விளங்குதல் - உளவாகக்காணப்படுதல்.

நம்பியகவல்.
அணித்தரவு.
பெரும்பற்றப்புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பி வில்லியர் நல்வழக்காட்டு.
பத்தாவது பால்.
கடவுட்செல்வக்காட்சிப் புணர்ப்பு
முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினொன்றாவது பால்.

ஞாலப்பேர்யாக்கை.

க. பேரா சிரிய! பெயர்ந்ததென் மைய
லோரா வென்னை யுய்வித் தற்குப்
பன்னருஞ் சீரிய பழமறைப் பாற்படுந்
தன்னியற் புலமை யென்னுளங் கொளுமா
தெளிய நன்கு செப்பி
யளிய வெற்குநீ யளித்த மாறே. 413

ஓர்ந்துய்வித்தற்குமாம்.

பன்னரு : நின்னிற் பிறர் சொல்லுதற் கரிய.

பழமறை - தொன்றுதொட்டு வரு மற்றம்.

தன்னியற்புலமை : ஒரு தனியுயிராகிய தன்கண் அமையுமாற்றை யாராய்ந்து தெளிதல்.

கொளுமாறு : கடைக்குறை.

தெளிய - நுகர்வாகுமளவாக.

நன்கு : ஐயந் திரி பறியாமை யின்றிக் கண்கூடாக.

அளிய - இரங்கத்தக்க. அளித்தமாறு - அருளிச்செய்ததனால். மாறு : மூன்றாவதன் பொருள்படுவதோரிடைச்சொல்.

பேராசிரிய! நீ தன்னியற்புலமை யளித்தமாறே யென்மையல் பெயர்ந்ததென முடிக்க.

மேற்பெற்ற கடவுளியற்புலமையுந் தன்னியற் புலமையின் வேறன்று.

உ. முன்னுந் தோற்ற முகிழ்த்தலுங் கெடுதலு
நின்னால் விரித்து நிகழ்த்தப் படுதலி
னென்னாற் கேட்கப் பட்டன வெழில்கொ
ளல்லியங் கண்ண! வழியாத்
தொல்லிய னின்பெருந் தோற்றமொ டினியே. 414

முன்னுந் தோற்றம் – முன்னியாகின்ற காட்சி. அவை : உயிரு முயிரல்லவுமாகிய வெல்லாம்.

முகிழ்த்தல் – உண்டாதல்.

நிகழ்த்துதல் – சொல்லுதல்.

பேரல்லிமலர்போலுங் கண்ணுடையவனே! ஈண்டுப் பெருஞ் செவ்வல்லியென்க. அம்முச்சாரியை.

பெருந்தோற்றம் — பெரும்புகழ். இனி — இப்பொழுது.

அல்லியங்கண்ண ! நின்பெருந் தோற்றமொடு முன்னுந் தோற்ற முகிழ்த்தலுங் கெடுதலு நின்னுல்விரித்து நிகழ்த்தப்படுதலி னென்னுற் கேட்கப்பட்டனவென முடிக்க.

ந. ஆண்டகை வள்ளா லடியேன் பணிமொழி
மீண்டொரு பொருளென வேற்க வேண்டுவ
லைய! நீ மொழிந்தனை யரிய திருவருட்
செய்யநின் பேரெழிற் செல்வ மிதனைக்
காண்பா னவாவுவல் காட்டுக
காண்பா ரார்கொனீ காட்டாக் காலே. 415

பணிமொழி — பணிந்து கூறு மொழி.

பொருள் : ஏற்கத் தகுவது. பொருளன்றாயினும் பொருளென வேற்கவேண்டுவலென்க.

அருளி னுகுஞ் செல்வம். திருவருளென்னுங் கடவுளாற்றல்.

அச்செல்வ மன்னுயிர்களி னுணர்வு நீங்காமற் பிணித்தீர்க்குந் தன்மைத் தாதலிற் பேரெழிற் செல்வமாகும்.

காண்பான் — காணும்பொருட்டு.

நீ யெமக் கெளியையாய் யாங் காண வந்து நிற்பினல்லது நின்னை வந்து காண்டல் எமக்காவ தொன்றன்றென்றான். யாம்நின்னைக் காணுந் தகைய மல்லமாயினு நீ யெம்மைக் கண்டு காட்டுங்கால் யாங் காணு தொழிவே மல்ல மென்னுங் கருத்தும் போதரும்.

ச. எம்பெரு மானே யெம்மனோர் நின்னெழி
லிம்பரிற் காணிய வியலு மென்றாத்
திருவுள மாயிற் றெரித்தி
பொருவறு நின்னெழிற் பொன்று மாண்பே. 416

காணிய வியலு மென்றா — காண்டற்குக் கூடுமென்று.

தெரித்தி — உணர்த்துவாயாக.

பொன்று மாண்பு — ஒரு ஞான்று மழியாத நற்செல்வம்.

மாண்பு தெரித்தி யென்க. இந்நான்குபாட்டும் வில்லிவினு. இனி, நம்பிசெப்பு.

ரு. வேண்டுகோள் வினைய வேந்தே நன்று
காண்டியா லையநின் கருத்து முற்றுற
வேறுவேறு நிறத்து வேறுவேறி யாக்கை
வேறுவே ருக மிளிர்தரு
நூறுநூ றுயிரங் கூறுதோன் றும்மே. 417

நன்று : அங்ஙனமே காட்டுவ லென்னு முடன்பாட்டுக் குறிப் புணர்த்திற்று.

யாக்கையாகிய கூறு தோன்றும்.

கூறு – ஓரோவொரு சிறப்பு.

கூறுதோன்றும்; ஐய! நின் கருத்து முற்றக் காண்டி யென்க.

சூ. செஞ்சுட ரிவர்காண் சீர ரிவர்கா
ணெஞ்சிய மருத்துவர் வளிம ரிவர்கா
ணுவக்கா ணின்றி னூங்குத்
தவக்கா ணுப்பல தாங்கரு வியப்பே. 418

செஞ்சுடர் – ஞாயிற்றர். சீரரெண்மர். மருத்துவரிருவர். எஞ்சிய – ஒழிந்த. ஏனையென்பதாம்.

உவக்காண் – உங்கு.

உங்குத் தாங்கரு வியப்புக்களைக் காணெனக் காணென்னு மேவல் கூட்டி முடிக்க.

இன்றினூங்கு – இப்பொழுதைக்கு முன்னெல்லாம்.

இன்றினூங்குக் காணுத் தவப் பல வியப்பெனத் தவ வென்பதனைப் பல வென்பதனோடு கூட்டுக.

தவப்பல – மிகப்பல. தாங்கரு வியப்பு – பொறுத்தற் கரிய வியப்பு.

எ. இன்றிங் கென்பேர் யாக்கையிற் பரம்ப
நின்றுஞ் சென்று நிகழுமோ ராங்கு
ஞால முழுதொடு ஞாங்கர்ச்
சால விழைவ தம்மையுங் காணே. 419

பரம்ப – பரந்து. நிற்பன: மரனு மலையுமுதலாயின. ஏனைய: செல்வன.

நின்றுஞ் சென்று நிகழு ஞாலமெனக் கூட்டுக. ஞாங்கர் – முன். விழைவ: நீ காண விரும்புவன பிற.

ஞாங்கர் ஞாலமுழுதொடு விழைவ தம்மையு மோராங்குக் காணெனமுடிக்க.

ஓராங்கு - ஒருங்கு. விழைவ: செயப்பாட்டு வினைப்பெயர்.

அ. கருதுக விந்நின் கண்ணிணை காளா
யரிதினுங் காண்ட லாற்று வாகுங்
கடவுள ரெல்லொளிக் கண்ணினக் களிக்குவென்
சுடர்விடு மதனுற் றோன்றப்
படருமென் செல்வப் பாங்கு பாரே. 420

காளாய்!: விளி. நின்னுடைய விக் கண் ணிரண்டு மரிதின் முயன்றுயினு மென் செல்வத்தைக் காண்டன் மாட்டாவாகும்; இதனை நீ நினைக்க வென்க.

கடவுளர்க் குரிய கண். எல்லொளி: ஒருபொருட்பன்மொழி.

தோன்ற - நன்குபுலப்பட. தோன்றப்பாரென வியைக்க.

படரும் - மறவாது வைத்து நினைக்கத்தக்க.

செல்வப்பாங்கு - செல்வத்தின் நல்லொழுங்கு. எனவே பாங்கு புணர்ப்பாயிற்று.

கூ. இங்ஙனஞ் செப்பி யிப்பால் வில்லிக்
கங்ஙனந் தோன்ற வாயிடைக் காட்டின
னேங்குயர் தன்னெழி லொண்டிருச் செல்வ
மூவாப் புணர்ப்பின் முதல்வ
னுவா விருந்தவா வழகிய வாறே. 421

இப்பால் - பின். அங்ஙனம் - அவ்வாறு. ஆயிடை - அவ்விடத்து. எழிலாகிய செல்வம். எழில் - அழகிய தோற்றம். மூவா - அழியாத.

ஆவா : வியப்புக் குறிப்பிடைச் சொல்.

இருந்தவா : அஃதிருந்தவா றென்னை யென எஞ்சி முற்றிநிற்ப தொரு குறிப்புச்சொல்.

அழகியவாறு : அது பெரிது மழகியதாயிற்று.

இப்பாட்டு நம்பிவில்லியர்வழக்காட்டுத் ததராட்டற்குக் கூறிவரு முனிவனஞ்சயன்றன் கூற்று. அவனு மப் பேர்யாக்கை ஆண்டிருந்த வாறே கண்டான்.

இனி வரு மைந்து பாட்டு மஞ்சயன் றான் கண்டவா றப் பேர் யாக்கையை வியந்து கூறுவன.

க௦. எண்ணில் வாயு மெண்ணில் விழியு
மெண்ணில் வியத்தகு காட்சியு மியைந்த
தெண்ணில் வானெளி யிழைகளோ
டெண்ணில் வானெளி யெஃகமு முடைத்தே. 422

காட்சி - காணத்தக்க தோற்றம்.

இழை - அணிகலம். எஃகம் - படைக்கலம். வானெளியுடைய வென்க.

அவ்வெழில் இயைந்தது உடைத்தென எழுவாய் கொணர்ந்து கூட்டுதல் மேற்கோள்வரவு.

கக. வானெளித் தொங்கல் வான்மடி புனைந்து
வானெளி விரையும் வாலிதிற் சண்ணி
யெனைத்திறும் பூது மிதுவே யாகி
யெனைத்து வழியினு மெல்லையின் றாகி
யிருந்தாங்கு நோக்கு மெண்ணின் முகங்கெழு
மாயிரும் பேரொளி வனப்போ ரற்றே
யாயிரங் கதிர்ப்பிழம் பாகிய
வாயிரஞ் செஞ்ஞாயி றுய்விசும் பெழலே. 423—424

தொங்கல் - மாலை. வான்மடி - தூயபுத்தாடை.

விரை : அகிற்குழம்புமுதலிய நறுமணக்கலவை. வாலிதின் - நன்றாக. சண்ணி - அடித்துப்பூசி. சண்ணி : புதியனபுகுதல்.

எனைத்துவழியினும் - எவ்வாற்ருனும். கெழு - பொருந்திய.

மாயிரு: மீமிசைச்சொல். பிழம்பு - திரள். ஆய் - நுணுகிய; அழகியவென்றுமாம்.

விசும்பெழல் - விசும்பின்கட் புறப்படுதல்.

பேரொளிவனப்புச்செஞ்ஞாயிறு ஆய் விசும்பெழலோரற்றெனக் கூட்டிமுடிக்க.

எழலோரற்று - எழுதலோ டொருதன்மைத்து.

கஉ. ஆவயிற் கண்டா னறவற் கிளங்கோ
வீவரு தண்ணளி யியவுள் யாக்கையின்
மருங்குபல வேறு மரீஇ
யொருங்குதொகு ஞால மொருங்குபடு மாறே. 425

அறவன்: வில்லிதமையன். ஈவரு - ஈயும். தண்ணளி யீவரு மியவுளென்க. இயவுள் - தலைவன்.

மருங்கு - கூறுபாடு. பலவேறு மருங்கு மரீஇயென்க. மரீஇ - பொருந்திப்பயின்று.

ஒருங்கு தொகு ஞாலம் - ஒருங்கு திரண்ட ஞாலம். ஒருங்கு - முழுதும். படுமாறு - உள்ளவாறு.

ஆவயினிளங்கோ யாக்கையின்கணொருங்கு படுமாற்றைக் கண்டானென்னமுடிக்க.

கங. ஆங்கவன் பின்னர் வீங்கிய மருட்கையொ
டோங்குமெய்ம் மயிர்சிலிர்த் துரைக்க லுற்றனன்
வளைக்கை மாற்றலை வணங்கி
யிணைக்கை கூப்பி யிறைஞ்சி நின்றே. 426

ஆங்கு - அங்ஙனங்கண்டபொழுது. வீங்கிய - பெருகிய. மருட்கை - வியப்பு.

வளை: ஆழிவளை; முரல்வளையுமாம்.

மால்: இரண்டாவதன்கட்கெடாது திரிந்தது. மாலை யிறைஞ்சி நின் றுரைக்கலுற்ருனென முடிக்க. வில்லிக்கு மருட்கை, அச்சம், உவகை யென விம்மூன்றுமொருங்குண்டாயின. மேல் வருவன முனிவனஞ்சயன்கொண்டுகூற்ருகிய வில்லிகூற்று.

கச. கடவுளர் பரசுங் கடவு ணம்பீ
கடவுறு மெல்லாக் கடவுளர் தம்மையு
மின்னுயிர்ப் பல்வே றினத்தொகை தம்மையு
மன்னவை படைக்கு மலரோன் றன்னையு
மவன்வழி மரபி னந்தணர் யாரையுங்
குலவுறு பாப்பர் குழுவையு
நலமுறக் காண்குவெ னுனின் மருங்கே. 427

பரசும் - வணங்கி வழிபடும். கடவுறும் : மக்களையும் பிறவுயிர் களையுந் தம்பாற்படுத்து நடத்தும்.

அலரோன் : படைக்குங்கடவுள்.

குலவுறு - மகிழ்ந்து கொண்டாடுகின்ற. பாப்பர் - பாம்பின் றேற்றமாகிய வொருசார் அணங்குகள்.

அங்ஙனங் கடவுளரைக் காணுங் காட்சியாற் றீங்கு நீங்க நல முறுமாறுணர்க.

நான் நின்மருங்குக் காண்குவெ னென்க.

கரு. பலப்பல சுவலும் பலப்பல வயிறும்
பலப்பல வாயும் பலப்பல விழியோ
டுடையை யாக விடைதொறும் பிறங்குபு
கடையி லளவின காட்சி மல்கிய
வொருபெரு நினது திருவுட லிதுகொன்
ஞால முதலிநின் ஞாலப் பேருடல்
சால நன்று சால நன்றிஃ
திடையொடு முதலு மில்லது
கடையு மற்றிக் கவின்வா ழியவே. 428

சுவல் - தோட்கட்டு. இடைதொறும் - இடந்தொறும். பிறங்குபு - விளங்கி. கடை - முடிவு. முடிவில்லாத வளவினவாகிய காட்சி நிறைந்த.

காட்சி மல்கிய வுடலென்க. இதுகொல் - இதுபோலும்.

அடுக்கு : உவகைமிகுதிக்கண்ணது.

அற்று : அங்ஙனமில்லது ; முற்று.

இவ்வழகு வாழ்க வென்க.

கவின் : ஒளியுமாம்.

கசு. முடித்தலை கவித்து முளிகோல் கைக்கொடு
தொடித்துணைத் தோளுயர்ந் தொளித்திரள் சுடர்விட்
டருகு சூழொளி யழன்றெழு நெருப்பும்
வருமொண் ஞாயிறு மான யாவரும்
விழிக்க லாகா விளக்கமொ டொன்றி
யளக்கற் பாலை யல்லை யாகிய
நின்னையான் காண நெடுந்தவ
மென்னைகொல் செய்தே னேழெழு பிறப்பே. 429

முடியைத் தலையிற் கவித்து. முளிகோல் - காய்ந்துலர்ந்தலூன்று கோல். தொடி : மைந்துவளை.

பெருநெருப்புஞ் ஞாயிறும்போலக் கண்டிறந்து பார்க்கலாகா வாறு கண்கொள்ளா வொளியொடு பொருந்தி யென்க.

பிறப்பின்கண்ணுமென வேழாவ திறுதிக்கட் டொக்கது. முற்றும்மை : செய்யுட்டிரிபு.

ஏழாகியவெழுபிறப்பு.

கஎ. எந்தா யடிகேள் யாவ ரானுஞ்
சிந்தா துணர்ந்து தேர்பொரு டம்மு
ணந்தா ததுவென நவில்பொரு ணீகொன்
மண்பார் தாங்கு வைப்பு நீகொல்
வீயா வொருவனை நீயே யன்றே
மாயா நல்லறத் தாயா கின்றனை
யென்றும் வாழு மிறைவ
னென்றென் றேத்துத னின்னல திலெனே 430

எந்தாய்! அடிகேள்! என்பனவிளி.

சிந்தாது - தவறாது. தேர்பொருள் - ஆராய்ந்த பொருள். நந்தாதது - கெடாத பொருள். எனவே யேனை யெல்லா மழிவன வென்பதாம்.

நீகொல் - நீபோலும். ஈண்டுக்கொல் ஐயத்தின்மேற்றன்றி ஐயநீங்குதன்பொற்றுயிற்று. மேலு மிங்ஙனம் வேறுபாடு கண்டு கொள்க.

வைப்பு - உறையுள். மட்பாரெனற்பாலது மண்பாரென மெலிந்தது.

ஒருவனை : முன்னிலைக்குறிப்புப்பெயர். இதுநீயென்பதனொடொட்டித் தாயாகின்றனையென்பது கொள்ளும்.

நின்னையன்றி யென்றும் வாழு மிறைவனென்றென்று பிறரையேத்துதலிலெனென்க.

கஅ. முதலிடை கடையிவை நுதலிய வாரலை
யளவில வாகு மாண்மை யுடையை
யாயிர வாயிர வழகிய தோளு
ஞாயிறு திங்க ளாயிணை விழியும்
வேள்வியின் மடையுண் வாளொளி முகனும்
வழுத்துற நின்றநின் வலனுய ரொளியாற்
றொளுத்திய வதுபோற் குரைகடல் வைய
மொளிவிட் டொளிருமா காண்ப
லிளிகெட் டொளிவிடும் யானுளப் படவே. 431

நுதலிய வாரலை - கருதுதற்கு வருகின்றிலை. ஆண்மை - ஆற்றல்.

வழுத்துற - புகழ்ந்து வாழ்த்த.

வலன் - வென்றி.

வலனுயரொளியாவது பிறரெல்லாருங் காண்டலு மஞ்சி வணங்குதற்குரிய பெருமைத் தோற்றம்.

கொளுத்திய : நெருப்புக் கொளுத்திய. எனவே யுயிர்களெல்லாந் தம்மைத்தாமுணர்ந்து கடவுளை வணங்கலுறுகின்றன வென்பது படும்.

இளி : அறியாமையாற் கீழாதல்.

யானுளப்பட வையமுழுது மொளிருமாற்றைக் காணநின்றே னென்றானென்க.

கக. ஞாயிறு வைய மாயிடை வெளியு
மூயிரு நான்கு மூலையும் பெரும
நீயற நிறைந்தனை நீயே நினதிவ்
விறும்பூது பயக்குங் கொடும்பாட் டெழில்கண்
டுறும்பாரு முவணையு மொழிபு
நறுஞ்சோர்வு கொண்டு நடுங்கா நிற்குமே. 432

ஆயிடைவெளி - அவற்றுக் கிடையி லுள்ளவெறுவெளி.

மூய் - சூழ்ந்த. எட்டு மூலை : கிழக்கு முதலாயின.

நீயற - நீக்கமற.

பிறரை மயக்குறுத்து மிகுதி தோன்றக் கொடுமையாகிய தோற்றமென்றான்.

கொடும்பாடு - கொடுமை.

எழில் - தோற்றம்.

உறும்பார் - மிக்க மண்ணகம். உவணை-வானகம். ஓழிபு : கீழகம். முஞ்ஞாலமுமென்பதாம்.

நறுஞ்சோர்வு - நல்லசோர்வு. உயிர்நீங்காமையின் நல்லசோர் வாமாறு காண்க.

மேலைப்பாட்டிற் கூறிய வொளிகண் டுலக முறற்பாலது கூறியவாறு.

உ௦. உதுக்கா ணின்னுழை யும்பர் குழாஅம்
விதுப்போ டொருங்கு மேன்மேற் புகுதுவ
வொருசார் நிற்குக் குடந்த முற்று
வெருவா நின்று விளம்புவர் திருப்புகழ்
முனிவரொ டருமர் முற்றி மாயோ
யொளியொடு வாழ்கென வுவந்து
நளிமுதிர் வாழ்த்து நல்குவர் நிற்கே. 433

விதுப்போடு - விரைவாக.

ஒருசார் - சிலர். குடந்தம் - மார்பிற் கைகூப்பி மெய்கோட்டி நின்று வணங்குதல்.

புகழ் விளம்புகின்றாரென்க.

அருமர் : முயற்சிகைகூடுதற் குதவு மொருசார்வானவர். முற்றி - சூழ்ந்து.

நளி - செறிவு. முதிர் - முற்றிய. இடையீடின்றிச் செறிந்து நிரம்பிய வாழ்த்துரை வழங்குவரென்க.

உக. சினவ ரெல்லர் சீரர் பேற்றுவர்
ஞாலங் கிழாஅர் நவைதீர் மருத்துவர்
வளிமர் தென்புல வாழ்நர் யாமோர்
களிம ரிளிய ரரும ரென்றிக்
குழுவர் யாவருங் குழுமி நின்றிதோ
பழுனிய வன்பர் பாங்க !
கழுமிய வியப்பொடு காண்குவர் நின்னே. 434

சினவர்முத லருமரீருக வெடுத்தோதிய பன்னிருகுழுவரு மொரோரோவொருசார் வானவர்.

எல்லர் ; ஞாயிற்றரென மேற்கூறப்பட்டவர்.

இளியர் ; ஒளியராகியவும்பரோடுறழுந்தகுவர்.

பழுனிய வன்பர் பாங்க !-பழுத்து முதிர்ந்தவன்புடையோர்பாற் பட்டிருக்கு நண்பனே.!

கழுமிய வியப்பு - மயங்கிய வியப்பு.

நின்னைக் காண்குவரென்க.

உஉ. எளியேஞ் செல்வ ! வென்னே யென்னே
யளியேம் போற்று மளவின தேயோ
வெத்துணை வாய்விழி எத்துணைக் கைகா
லெத்துணைத் துடைகொடும் பெயிறுக ளிவற்றோ
டித்துணைப் பெரும்பே ரெழிலுடல் கண்ட
வத்துணை ஞாலமு மைய
கொத்தொடு விதிர்க்குவ யானுமக் குறிப்பே. 435

என்னே : வியப்பிடைச்சொல். அடுக்கு மிகுதிக்கண்ணது. ஐய ! : ஐயனென்பதன்விளி.

கொத்தொடு - கூட்டத்தொடு. விதிர்க்குவ - நடுங்குகின்றன. கொடும்பு - கொடுமை.

யானு மங் நடுக்கக் குறிப்புடையே னென்பதாம்.

உங. சிங்கா வண்புகழ்ச் செல்வக் கோவே
யங்கா வாயோ டவிரொளிப் பெருங்க
ணீன்றொளி சிறப்ப வேய்ந்தபன் னிறநெடு
வான்றொட நின்றநின் மாணெழில் கண்டேற்
குள்ள முந் திட்ப முற்றின்
றெள்ளள வாறுத லெய்தின்றோ விலெனே. 436

சிங்கா - குறையாத. வண்புகழ் - பெரும்புகழ்; கொடைப்புக ழெனினுமாம். வளவிய புகழுமாம். செல்வம் : புணர்ப்புச்செல்வம்,

அங்கா - திறந்த: வினைத்தொகை. அங்காந்தவாய். ஒளியின் றென மாறுக. சிறப்ப - மிக. சிறப்ப வொளி யீன்றென்க.

திட்பம் - கலங்காமை. உற்றின்று - உற்றிலது.

ஆறுதல் - அமைதி யுற்றுத் தணிதல்.

எய்தின்று: தொழிற்பெயர்.

உச. ஆழியங் கையநின் னகன்கொடும் பற்களு
மூழியின் றழலொ டுறழ்தரு முகங்களுங்
காண்டலு மிடமருண் டயர்கு காண்கிலன்
பூண்டகு மமைதி பொருந்தில
னாண்டகை யருள்கநின் னடியேன் றனக்கே. 437

அகன் கொடும் பற்கள் - விரிந்த கொடிய பற்கள். உறழ்தரு - மாறுபடும்.

இடமருண்டு - இடமறியாது. அயர்கு - அயர்வேன். அயர்வே னிடமருண்டு காண்கில னென்க. தன்மையொருமை வினைமுற்று வினைகொண்டு முடிந்தது.

காண்டலும்: ஒரு வினையெச்சவாய்பாடு.

நின்னடியேனுக் கருள்க.

ஆண்டகை: விளி.

உரு. முந்தை முத்தொழின் முற்று முதலீ!
யெந்தை தந்தையு மெம்மா சிரியனு
மேற்றுவந் தெதிரு மென்றாழ் மகனு
நூற்றுவர் தாமு நூற்றுவர் தமரோ
டுற்றுழித் துணைவரு மொருங்குடன் சேர
மற்றுநஞ் சாரார் வாளோ ருளப்பட
நின்முகந் தோறு நீண்டு தோன்றும்
வன்முரண் கொடிய வாய்நிரைப் பற்றொறும்
வல்லே புகுமிது வன்கட் கொடிதரோ
வெல்லே யவருட் சிலர்நின் னெயிற்றி
னிடைவெளி யகப்பட வெருக்கித்
துகள்படு தலைய ராகுவர் துமிந்தே. 438—439

முந்தை - பழமை. முற்று முதலீ! - முடியச்செய்யு முதல்வனே!

எந்தைதந்தை யென்றது வீடுமனை. எம்மாசிரியனென்றது தோணனை.

ஏற்று: போரேற்று. என்றாழ் - செங்கதிரோன்.

உற்றுழித் துணைவர்: இடையூ றுற்றவிடத் துதவுமவர்.

நண்பர்: படைத்தலைவரும் நட்புவேந்தரும்.

வாளோர் - வாட்போர்வல்லுநர்.

நிரை - வரிசை. வன்கண் - கொடுமை. மிகக்கொடிது. அரோ : அசை. எல்லே: இரங்குதற்குறிப்பு.

எயிறு - பல். அகப்பட - அகப்படுதலால்.

எருக்கி - ஒருங்கு மென்று கொல்லப்பட்டு.

துமிந்து - துணிபட்டு.

துமிந்து துகளாகின்ற தலையராகுவ ரென்க.

உசு. மண்ணக வாழ்க்கை வன்கண் மறவர்
துண்ணெனத் துவன்றுபு தோன்றா னின்னுடைக்
கண்ணகல் வாயிடைக் கதுமெனப்புகுவ
ரொருங்குபல் யாறு மோடிக்
கருங்கடல் புகுவது கடுப்ப மன்னே. 440

வன்கண் - அஞ்சாமை. மறவர் - போராண்மையுடையவர். துவன்றுபு - நெருங்கி. தோன்றால் : விளி. கண்ணகல் - இடமகன்ற.

கடுப்ப - போல. மன் : கழிவிரக்கப்பொருட்டு; அசையுமாம்.

கடுப்பப்புகுவர்.

உஎ. அடுதொழி னாடகங் கெடுதரற் படநின்
வடுவறு வாயிடை வந்துவல் வீழ்தல்
கடுவரல் விட்டில் கரிதற் பட்டிற
விளக்கொளி நோக்கி வெய்திற்
சளக்கென வீழ்ந்து சாவதோ ரற்றே. 441

அடுதொழில் நாடகம் - பிறரைக் கொல்லுந் தொழில்செய்யு முலகம். மக்கட்டொகை.

வடு - குற்றம்: கொன்றுதின்னுங் கொடுமைக்குற்றம். நாடகத்தா ரெல்லாந் தாமே கூற்றுவன் வாயிடை வந்து வீழ்தலிற் கூற்றுவன் வாய்க்குக் கொடுமை யின்று. இப்பொழுது வில்லிக்குத் திருமால் காட்டிய திருக்கோலம் தான் ஊழிப்பெருங்கூற்றுவனாகுங் கோலம். இது முனைவற்குரிய கொடும்பாட்டெழில், நுகர்ச்சியெழில், புணர்ப்பெழிலெனவருகோலமூன்றனுளொன்றென்ப.

கடுவரல் - விரைந்து வருதலையுடைய.

வெய்து - விரைந்து. சளக்கென: அறியாது விரைந்து வீழ்தற் குறிப்பிடைச்சொல்.

வீழ்தல் சாவதோ டொருதன்மைத்து.

உஅ. திருமறு மார்ப! நின் றீயழல் வாய்தொறும்
வெருவர ஞாலம் விரைய நுங்குழி
யெம்மருங் கண்ணு மினிது நக்குவை
நின்னருங் கொடிய நிழற்கதிர் தாமே
நீளொளி தன்னா னிரப்பிக்
கோளிளி ஞாலங் கொளுந்துபு தெறுமே. 442

திருமாலின் மார்பிற் கிடக்கு மறுவின்பெயர் திருவென்பது. திருமகள் பிறர்மார்பை மறுத்துத் தங்குமார்புடையவனென்று முரைப்ப.

தீயழல் - நெருப்பழலுகின்ற. வர - உண்டாக

ஞாலத்தை நுங்குழி. நீ விழுங்குமிடத் தென்க.

மருங்கின்கண் ணென்பதுமருங்கண் ணெனச் செய்யுண்மரூஉ வாயிற்று. இங்ஙனந் திருக்கோவைக்கண்வந்தது. (செய்யுள் -53.) மருங்கு : ஈறுதிரிந்ததென வாண்டுப் பேராசிரிய ருரைப்பர். இன்னு மவ ரதனை யிருசொல்லாக்கியு முரைப்பர்.

இனிது : இன்சுவைபட.

கொடிய : பொறுக்கலாற்றாத. நிழல்-ஒளி.

நிரப்பி : ஞாலமுழுதினையுநிரப்பி.

கோள் இளி ஞாலம்-தீங்குசெய்தலான்இளிவர லெய்திய ஞாலம். கொளுந்துபு - கொளுந்துவிட்டெரிந்து. தெறும் - சுடுகின்றன.

நிழற்கதிர்தாம் : எழுவாய்.

நிழற்கதிர்தாம் நிரப்பிஞாலத்தைக் கொளுந்துபு தெறு மென முடிக்க.

உகூ. ஊழி முதல்வ! வுரைத்தருள் செய்க
வாழி நனிகொடு வன்கட் டோற்றத்து
நீயார் பன்மா ணின்னடி தொழுவென்
மூயா நினது முயற்சியொ
டாயா முதன்மை யறியவேண் டுவலே. 443

வாழி : முன்னிலையசை. வாழ்கவென்றுமாம்.

தோற்றத்தையுடையநீ. பன்மாண் - பலமுறை.

மூயா - அழியாத.

ஆயா - ஆராயப்படாத.

நீ யிப்பொழுதெடுத்துக்கொண்ட முயற்சியையும் அதற்குரிய நினது முதன்மையையு மறிய வவாவுகின்றேன், உரைத்தருள்செய்க வென்பது.

௩௦. கோலக் குனிக்குங் கொடுவின் மள்ளயான்
ஞால மாய்க்குறுங் காலங் காண்டி
ஞால மாட்ட நானினி முயன்றனெ
னெதிரெதிர் மலையு மிருசார்ப் படையினும்
வெருவரு புனைகழன் மீளிய
ரொருவரு முய்யார் நின்னை யொழிந்தே. 444

கோலக் குனிக்கும் - வளைய வளைக்கும்.

கொடுவில் : வில்லளவாயிற்று. ''கோடாதசெங்கோல்'' போல. (சிந்தாமணி, பதிகம். 2.)

மாய்க்குறுங் காலம் - மாய்த்தற்குப் பொருந்துங் காலமாகிய கடவுள்.

காண்டி : முன்னிலையசை. தெளிவித்தற்குறிப்பிற்று.

மாட்ட - மாளச்செய்ய. இனி - இப்பொழுது. மலையும் - பொருகின்ற. கழல் - காலணி.

உய்யார் - சாவாது தப்பார்.

நின்னையொழிந்தெனவே வில்லிதான்றன்னுடன்பிறந்தாரின்றி யுய்யானாகலி னவரு மடங்குவர்.

யான் கால மெனவும் நான்மாட்ட முயன்றனனெனவுங் கூறிய வாற்றான் வில்லி வினைய முதன்மையு முயற்சியு மின்ன வென விறுத்தானம்பி.

இதுமுதன் மூன்றுபாட்டும் ஞாலப்பேர்யாக்கை நம்பிகூற்று.

௩௧. இன்னே யெழுக விடக்கை வலவ!
மன்னே யென்னன் மாள விங்கிவர்
முன்னே கொல்லப் பட்டனர் முடியக்
கொன்னே பொருட்டெனக் கொற்றவ வில்லொடு
நின்னேர் செயற்கு நீயார் தெவ்வரை
யட்டுவென் றிசையுல களவு
நட்டுநின் றுண்க நானில வேந்தே. 445

இன்னே - இப்பொழுதே. எழுக : போர் பொரத் தொடங்குக. மன்னே : விளி. இங்கிவர் - இங்குக்காணப்படுமிவர்

"உணர்வில னுதலிற் சாக்கா டில்லை" என்பது முதுமொழிக் காஞ்சியாகலின் உணர்வின்றி யறங் கெட முயன்றோரெல்லாங் கூற்றுவனாற் கொல்லப்படுதற்கு முன்னரே யறக்கடவுளாற் கொல்லப்பட்டவராதலின் 'முன்னே கொல்லப்பட்டனர்முடிய' வென்றான். எனவேவில்லியுங் கூற்றுவனுமினிஅவரைச் செய்யுங்கொலை யுயிர்க்கொலை யன்று : பிணக் கொலையளவே யென்பதாயிற்று.

முடிய - எல்லாரும். கொன்னே - வாளா.

பொருட்டென - பொருட்டென்று பிறர் சொல்ல. எனவே சொல்லுதலளவே யன்றி வில்லிபொருட்டல்ல னென்றவாறும்.

வில்லொடு நேர் நில் என மாறுக. வில்லொடு பகைவ ரெதிர் நில்லென் றேவினு னென்க. இதனானும் வில்லி வில்லைச் சுமக்குமளவே யன்றித் தொழிற்படுத்துமவ னம்பி யென்பது பெறப்படும்.

செயற்கு நீ யார் - தொழிற்கு நீயென்ன தொடர்புடையை; தொடர்புடையை யல்லை யென்பது.

அட்டு - கொன்று. இசை - புகழ். புகழ்க்கிடமாகிய வுலகு பொன்றப் புகழும் பொன்று மாகலின் உலகளவு மென்றவாறுணர்க. இசையை யுலகளவு நட்டு. நட்டு - நிலைபெறவூன்றி. நின்று : புகழுடல் கொண்டு சாவாது நின்று.

நானிலம் - வையகம். நானிலமாகியவேந்தினை.

வேந்தராலாளப்படுவது வேந்து.

உண்க - நுகர்க. நானிலவேந்துண்க.

வில்லிதான்செயலின்றியே யூதியம் பெறுகின்றான்.

௩உ. நுந்தை தந்தை நும்மா சிரிய
னுந்தை மருகன் றும்பை நோன்ற
வென்றூழ் செம்ம லேனை விடலைய
ரன்றே யென்னு லாவி நீத்தார்
கொன்று யாத லென்று வதிரல்
கேழிலாப் போர்க்களங் கிடைப்பப் பொருது
நூழிலாட் டயர்க நொய்திற்
கீழிலா வென்றி கிழவது நிற்கே. 446

நுந்தை மருகனென்றது ததராட்டனுருமகளை மணந்த சிந்து நாட்டு வேந்தனை.

தும்பை: மைந்துப் போர்க்குத் தமிழர் சூடு மடையாளப்பூ. நோன்ற - தாங்கிய.

செம்மல் - மகன். விடலையர் - ஆண்மையாளர்.

அன்றே - முன்னே ; நெஞ்சறிசுட்டு.

என் : எங்ஙனம் பொருந்தும்? தான் : அசை.

அதிரல் : வியங்கோளெதிர் மறை; நடுங்கற்க.

கேழ் - ஒப்பு.

பொதுவாய போர்க்களம் போர் வென்றார்க் குரியதாகு மாதலிற் போர்க்களங் கிடைப்பப் பொருதென்றவா றுணர்க.

நூழிலாட்டு : பகைவர் பலரை யொருங்குகொன்று குவித்தல்.

நொய்தி னூழிலாட்டயர்க.

முன்னவனே முன்னிற்றலி னெய்தி னூழிலாட்டயர்த லொல்லுமா றுணர்க.

கீழிலா வென்றி - உயர்ந்த வென்றி. அறத்திற்கு மாறுயவரோ டறத்தின்பொருட் டறங்கெடாவாறு பொருது பெறும் வென்றி கீழிலாவென்றி யாமாறுணரப்படும்.

அல்லதூஉம் போர்களிற் பெரிய போராகலின் இதன்கண் வென்றி வென்றிகளுட் பெரிய வென்றி யென்பது கருதிக் கொள்க.

கிழவது - உரியது. நிற்கே கிழவது : பிறர்க்குக் கிழவதன்று.

இவ்வாற்றானே யெவ்வாற்றானு மையுறாது துணிந்து போர் பொருக வெனப் பொருமா றாக்கங் கொளுவினன்.

இவ் வென்றி கொள்ளாவழிக் கீழாதலும் நினைப்பித்தான்,

௩௩. இப்பரி சாக விறைவன் றெளித்துச்
செப்பிய வாற்றைச் செவிமடுத் தலுமே
வில்லிமெய் விதிர்ந்து மீக்கை கூப்பின
னல்லியங் கண்ணனை யானது தொழுது
மறித்துங் கூறுமான் மாற்றங்
குறித்து வெரீஇக் குழறுபாட் டோடே. 447

இப்பரிசாக - இவ்வாறாக. மெய்விதிர்ந்து - உடனடுங்கி. மீ: தலைமேல். கூப்பினன்: முற்றெச்சம்.

மாற்றங்கூறுமெனமாறுக. மாற்றம்: ஈண்டுச் சொல்லளவே பொருளாயது. ஆல்: அசை.

குறிதது: நம்பியது கடவுட்பெருமை யுட்கொண்டு. குழறு பாடு - தடுமாற்றுரை: அச்சத்தானாயது.

இப்பாட்டு முனிவனஞ்சயன்கூற்று.

௩௪. நீத்தவர் தலைவ! நின்பெருந் திருப்புகழ்
நீத்தம துலகு நெடிது தோய்ந்து
திளைத்து மகிழ மார்வந் திகழ
விளைத்து நிணவ ரிடந்தொறு மிரிவ
ரருமர் குழாஅ மனைத்தும்
பெரும தொழுது பேணுவர் நின்னே. 448

நீத்தவர் - பற்றுவிட்ட முனிவர். நீத்தத்துக்கண்.

நீத்தம் - வெள்ளம். திளைத்து: அழுந்தி நுகர்ந்து.

உலகு மகிழும் திகழுமென்க.

இளைத்து - ஆற்றாது. இரிவர் - கெட்டோடுவர்.

நிணவரிரிவரென்க.

அருமர் குழா மனைத்து நின்னைத் தொழுது பேணுவரென வியைக்க.

௩௫. படைப்போற் படைக்கும் பான்மையி னனே
படைப்போன் றன்னினும் பழையை பெரியை
யளவில் லாய்நீ யாரணங் கணங்கு
ஞால நிலைய நன்கனந் தெரியி
னுலப்பில துயர்ந்த துள்ள தில்லது
புலப்பட லற்றமீப் பொருண்மை நீயெனி
ணிணங்கா ரெனினும் யாரும்
வணங்கா ராதல் யாவதோ மற்றே. 449

பான்மை - சிறந்த தன்மை.

அளவில்லாய்: அருள், அறிவு, இன்ப முதலியன வொரோ வொன்று மெல்லை யில்லாதவனே!

ஆரணங்கணங்கு - புத்தேளிர்க்குப் புத்தேள்.

ஞாலநிலையம் - ஞாலமிருக்கு மிடம். உலப்பு - கேடு.

பெரும்பொருளாகிய தன்னுண்மை யென்பது தானல்லாதவற்றி னின்மையாகலிற் கடவுள் உள்பொருளு மில்பொருளுமாமா றுண ரப்படும்.

மீப்பொருண்மை : உள்ளதில்லதல்லாத மேலாகிய பொருண்மை. அது சொல்லாவதன்மைபற்றிப் புலப்படலற்ற தென்றவா றுணர்க. உணரப்படுபொருளிற் பிரிந்தவழியுணர்ச்சியுமின்மையி னுணர்வது தானுந் தானாகவே புலப்படாதொழிந்து கொள்ளுமா றுணர்க.

உலப்பிலது முயர்ந்தது முள்ள து மல்லதுமாகிய மீப்பொருண்மை யென்க. நீயெனின் - நீயாயின்.

இணங்கார் - பகைவர்.

யாவது - எவ்வாறு? முடியாதென்பதாம். மற்று : அசை.

௧௬. முழுமுதற் கடவுண் முதுதொன் மூப்பன்
குழுமிய ஞாலக் கொள்கலம் யாண்டு
முணரு மோருயி ருணரப் படுதொகை
யுயர்மன் னிலையமென் றுள்ளாய் நீயே
வரம்பில் பலவெழில் வளவ!
நிரம்பிற் றுலகுநின் னிறைவி னனே. 450

முதுதொல் - மிகப்பழைய ; தொடக்க மில்லாத வென்றவாறு. மூப்பன் - முன்னோன்.

குழுமிய - திரண்ட. குழுமிய ஞாலங்களை யெல்லாந் தன்னுட் பொதிந்து வைத்திருக்குங் கொள்கல மென்பதாம்.

உணரப்படு பொருட்டொகை யிறைவன்யாக்கையாகலின் அத் தொகை அவனென வழிபடப்படும்.

உயர் மன் னிலையம் :— உயிர்கள் வாழு மெல்லா நிலையங்களினு முயர்ந்து நிலைபெற்ற நிலையம் : இறைவன்.

எழில்வளவ ! யாக்கைத்தோற்றமாகிய வளமுடையவனே !

நீ யுல கெங்கணும் நிறைந்தா யென்பதாம்.

௧௭. வளிகிழான் கூற்றுவ னெரிகிழா னேனைப்
புனல்கிழான் பொற்பிற் றிங்களஞ் செல்வன்
மக்கள் கிழாஅன் கொட்பாட் டன்னிவர்
யாவரு நீநிற் காயிர முறையு
மோவரு வணக்க முரிய வாகுக
பின்னரும் பின்னரும் பெரிது
நின்னடி பழிச்சுத லென்னுடைக் கடனே. 451

வளிகிழான் - காற்றுக்கடவுள். எரிகிழான் - நெருப்புக்கடவுள். புனல்கிழான் - புனற்கடவுள். பொற்பினையுடைய திங்கள்,

மக்கள்கிழான்: இவன் படைப்பு முதல்வன் மகன்.

கொட்பாட்டன்: பாட்டனுக்குத் தந்தை. பாட்டன்: தந்தைக்குத் தந்தை. இங்குப் படைப்பு முதல்வன் கொட்பாட்டனெனப் பட்டான்.

எல்லாவுயிரும் படைப்புமுதல்வன் வழிமரபினவாகலானும் கொட்பாட்டன்முதற் படைப்புமுதல்வன்காறு முள்ளோ ரெல்லா மொருதன்மையராய் விளக்கமற்றுத் தோன்றுதலானுங் கொட்பாட்டனே அம்முதல்வனுமாதலமையுமென்பதுபற்றிக் கொட்பாட்டரெல்லாம் படைப்போனாகக் கொள்ளத்தக்கவராவர்.

ஓவரு - ஒழிவில்லாத.

பழிச்சுதல் - பரவுக்கடன்பூண்டு வணங்குதல்.

ந௭. வரம்பி லாற்றலை வரம்பின் மொய்ம்பினை
பரம்பி நின்றனை பலவயி னானு
மம்முறை யெல்லா மாயினை யாதலின்
முன்மருங் கானும் பின்மருங் கானு
மெம்மருங் கானும் யான்றொழு
துய்ம்மருங் கிதுவென வொழியேன் யானே. 455

வரம்பில்லா வாற்றலுடையை. வரம்பின் மொய்ம்பினை - வரம்பில்லாத வலிமை யுடையை.

பரம்பி - நிறைந்து. பலவயினும் பரம்பிநின்றனை யென்க. ஆன்: வழாவது.

அம்முறை - அவ்வாறு.

மருங்கு – பக்கம். ஆனும் – ஆயினும்.

உய்ம்மருங்கு: பிறவித்துன்பத்திற் றப்பும்வகை.

இது: இவ்வாறு தொழுதல். இதனை யா னொழியாதுசெய்வேனென்றுனென்க.

ந௯. என்னையு முயக்கொளு மெந்தா யிதுகே
ணின்னையு முணரே னெடுநா ளெல்லாந்
தோழ னென்றே துணிந்து பட்டியி
னேல! கரிய! வென்றென் றிங்ஙன
மயர்வி னாத லன்பி னாத
லெளிதிற் காவா திழுக்கிய சொல்லு
மாட்டா டிடனு மணையினு மணையினு
மூட்டா டுழியு மொருதனி யிடத்தும்
பலர்தலைத் தாளும் பல்காற் பயில
நகைபொருட் டாக மிகைபடச் செய்து
தகவற வொழுகிய தாழ்வு மெல்லா
முளத்துக் கொள்ளே லளத்தற் கரியாய்
செயிர்த்த லொழிகெனச் சேவடி
பெயர்த்தும் பெயர்த்துமென் றலைமிசைப் பெய்கே.

என்னையு முயக்கொளும்: உம்மை: உயர்வுசிறப்பு. நின்னையு முணரேன்: உம்மை: யிழிவுசிறப்பு. கடவுடான் கட்பிழப்புகொண் டெதிரோ வலிந்து வந்து முணராமையினிழிவு மிக்கவாறு காண்க.

பட்டி – குறும்பு செய்யுஞ் சிறுபயல். இன்: ஒப்பு. எல: தோழன் முன்னிலைப்பெயர்; எட வென்றவாறு.

அயர்வு – அறியாமை.

காவாது: நாவடக்காது. இழுக்கிய – பிழைப்பச் சொல்லிய.

ஈண்டயர்வினைதலன் பினைதவிழுக்கிய வென்றதனோடு

"பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்"

(முப்பால் – பழமை. 5) என்னுமுப்பா லொப்புநோக்கற் பாலது.

ஆட்டு – விளையாட்டு. ஆட்டாடிடனும் – விளையாட்டு விளையாடு மிடத்தும்.

அணை – படுக்கையணை. மணை – இருக்கைமணை.

ஊட்டாடுழியும்: சுற்றம் நம்மை யூட்டுதல் செய்யு மிடத்தும்.

பலர்தலைத்தாள் – பலர்முன். பயில – அடுத்தடுத்து. நகை – விளையாட்டு.

மிகைபட: என் றகுதியளவின் மிகையாக.

தகவற: நினக்குத் தகுதி யன்றாக.

தாழ்வு: நினக் கிழிவான செயல்.

தான் நம்பியை யின்ன னென்று முன்னறிந்துகொள்ள மாட்டாமைக்கு வாயிலாவ திதுவென்பது தோன்ற அளத்தற்கரியா யென்றான்.

செயிர்த்தல்: பிறர் குற்றம் பொறாது வெகுளுதல்.

பெய்கு - வைக்கின்றேன்.

சேவடியைத் தலைமிசைப் பெய்கு.

சo. இயங்கு திணையொடு நிலைத்திணை யீட்ட
மயங்கு ஞாலம் பயந்த தந்தையை
தொழுதக வாளனை தொல்லா சிரியனை
முழுவது மெண்ணின் முனைவ நிற்கு
நிகர்நீ யல்லது நிகர்யார் வேறு
நிகர்நீத் தன்று நெடியோய்
பகர்பாக் கொல்லாநின் பழம்பெருஞ் சிறப்பே. 456

திணை – பொருண்மரபு. இயங்குதிணை நிலைத்திணையென வெல்லாப் பொருளு மிருபாற்படும்.

ஈட்டம் – கூட்டம். மயங்கு – கலந்த.

தந்தையை – தந்தையாயுள்ளாய்; முன்னிலைக் குறிப்பு முற்று

முனைவ – முதல்வ!

பகர்பாக்கு: ஒரு வினையெச்ச வாய்பாடு. பகர்தற்கெனப் பொருள்படும்; ஒல்லா வென்னு மெதிர்மறைவினை கொண்டது.

ஒல்லா – முடியாத

நின் பழம்பெருஞ்சிறப்பு நிகர் நீத்தன்றென்க.

நீத்தன்று – நீங்கியது.

சக. அன்ன வாய்மையி னின்னை யிறைஞ்சற்
கென்மெய் தந்தே னென்மிகை பொறுத்து
நீயருள் வழங்கியர் யானிது மொழிவேன்
றோய்தரத் தழுவுந் தூயநற் றந்தைதன்
சேய்நவை காணிற் செறினுஞ் செரூஅ
னட்பு வேண்டுவார் நட்டா ரிழுக்கிற்
பெட்புப் பெருகும் பெற்றிமை நோக்கா
யென்றனை யாட்கொள விங்கு
நின்றனை நின்னொடென் னிலையு மதுவே. 457

மெய் – உடம்பு. மிகை – குற்றம்.
வழங்கியர் – கொடுத்தற்பொருட்டு.
தோய்தர – செறிய. சேய் – மகன். நவை – குற்றம்.
செறினுஞ் செரூன் – வெகுளினும் வெகுளான். வெகுளி தோன்றிய பொழுதே கெடுமென்பதாம். அன்றிச் செற்றானாயினுங் கொண்டு திருத்திமேவுத லல்லது நீக்கானெனினுமாம்.
பெட்பு: அவ்விழுக்கினை விழையும் விழைவு.
பெற்றிமை – தன்மை.
பெற்றிமை நோக்கா யென்றது நட்புரிமை வெளிப்படுதலானே அப்பிழை காண்டொறுஞ் சுவை மிகுதியுளதாந் தன்மை கருதுவாயாக வென்றவாறு.

இங்கு – இம்மண்மிசை: கானிலந் தோயாக் கடவுளாகிய நீ கானிலந் தோயநின்றாயென்பது கருத்து.

நிலை: மகனாதலுந் தோழனாதலுமாம்.

அதுவே – அவ்வாறே.

சஉ. அன்னை யன்னாய் நின்ன காட்சியின்
முன்னைக் கண்டில முன்னைக் காண்டலி
னச்சம் வியப்பு மகிழ்ச்சி யாங்கவை
யொன்றொடொன் றெவ்வா தொன்றிய மூன்று
மின்றென துள்ள மியைந்துள காணா
யழலருட் கோல மமையும் பண்டுபோ
னிழலருட் கோல நேர்க
தொழலருட் டுறைபுகு தோழ னேற்கே. 458

அன்னை யன்னா யென்றதூஉங் குற்றம் பொறுப்பித்தற் குறிப்புடைத்து.

காட்சி: ஆகுபெயர்; காணப்படுவதன் மேற்றாகலின்.
முன்னையிரண்டனுண் முன்னது பொழுது பின்னதிடம்.
கண்டிலவற்றைக் காண்டலினென்க.

அச்ச முதலிய மூன்றுந் தம்மு ளுடனிற்கற்பாலவல்ல வாயினு மவைமூன்று மொன்றன்பி னொன்று விரையமாறிமாறித்தோன்று நிற்றலி னியைந்துள வெனப்படும்.

அழற்கோலம் - வெகுளிக்கோலம்: மேற்காட்டியது. அமையும் - சாலும்; முற்று.

நிழற்கோலம் - குளிர்ச்சியாகிய வமைதிக்கோலம்.

இவ்விருபெருங்கோலமுந் திருவருட்கோலம்.

நிழற்கோலங் கோடற் கியைந்தருள்க.

நின்னைத் தொழுதலாகிய வருட்டுறை.

அஃதவனருளானவதாய் அவ்வருளைச் சார்வதற்கு வாயிலாத லின் அஃதருட்டுறையாமாறுணரப்படும். எனைத்துறை மருட்டுறை.

தோழனேற்கென்றான்; அவ்வழற்கோலம் நூற்றுவர்முதலி யோர்க்கே வேண்டப்படுமாகலின்.

சா. பொன்முடி கவித்துப் பொற்கோ லூன்றி
மின்முர ணாழி கைம்மலர் கொடுநீ
யென்முனர் நிற்றல் யான்விழை வுறுவெ
னுயிரந் திணிதோ ளழக! வின்ன
மாயிரு ஞால வனப்பிய லாயவ!
வாயெழி லுற்றுமா ணலங்கல்
வேயன நாற்றோண் மேயவ னாகே. 459

மின்முரணாழி: ஒளியான் மின்னலொடு மாறுபடுந் திருவாழி. அல்லதூஉங் கரிய கொண்மூவொடு தோன்றுமின் கரியவன் றிருக் கோலத்தொடு தோன்றுந் திருவாழியோ டொக்குமாறுணர்க. இனிக், கண்ணிருள் போழுமின்னொடு முரணிப் பகையிருள் போழுந் திருவாழியுமாம்.

விழைவுறுவென்: நிகழ்வு.

ஞாலமாகிய வழகிய கோலமாயவனே!

ஆயெழில்: மேற்கூறிய கவின்றோற்றம்.

அலங்கல் - மலர்மாலை.

வேயன - மூங்கில்போலத் திரண்டுபைத்து நெய்த்த.

மேயவனுகு.

மேல்வருவன நம்பிகூற்று.

சச. விற்பெருந் தடந்தோள் வெற்ப நின்பா
லெற்குறு பரிவுமிக் கிருந்த வாற்றாற்
றன்னெசிப் பாற்றலி னின்னது தெரித்தே
னெள்ளொளிப் பிழம்பிஃ துலகெலா மாய
தெல்லையில் பன்மைத் தெழுவா யாவ
தின்னதொன் றியாரு மிதனின்
முன்னருங் காண்கிலர் நின்னலாற் பிறரே. 460

எற்கு உறு பரிவு — எனக்குற்றவன்பு.

நொசிப்பு — அசையா வொருமை யுள்ளம்.

நொசிப்பினுக்கு மாற்ற லென்க.

ஒளிப்பிழம்பு — ஒளித்திரள்; ஒளிக்கோலமுமாம்.

பன்மைத்து — பலகாட்சி யுடைத்து.

எழுவாய் — முதல்.

எழுவாயாவது: எனதியற்கையாயுள்ளதென்பது.

நின்னலாற் பிறர் யாருமிதனின் முன்னருங் காண்கிலரென்க. காண்கிலர் — காணலாற்றாராயினர்.

சரு. மாந்தர் வாழும் வையகத் தெனதொளி
யேந்து பேரெழில் யாக்கை யிதுதான்
மன்ன ரேறே நின்னி னன்றி
யென்னு மரிதா லின்னே காண்டல்
கேள்வியுங் கல்வியும் வேள்வியு மீகையு
மாள்வினை தன்னோ டாற்ற னோன்பு
மென்றிவ் வாறினு மேந்தா
லென்று மாகுக யாவரா னும்மே. 461

ஏந்து — உயர்ந்த. என்னும் — யாதும்! சிறிது மென்பதாம். இன்னே — இவ்வாறு.

ஆள்வினை — இடைவிடாமெய்ம்முயற்சி.

ஆற்றல் நோன்பு - ஆற்றலை விளைக்கு நோன்பு.

என்றுமாகுக யாவரானு மின்னே காண்டலென்னு மரிதென முடிக்க.

கடவுள்பாற் சிறந்த காதலா னல்லது காண்டலாகாதெனக் கடவுட்காதலின் சிறப்பு வலியுறுத்தவாறாயிற்று. ஏந்தால்: மக்கட்குத் தலைவனே!

சசு. கொடும்பெருங் கோலங் குறித்துக் கொற்றவ!
நடுங்கலு மாழ்கலு நண்ணு தொழியியர்
பெயர்ந்துமுற் கோலம் பெற்றேன் காண்டிக
வெருவரல் விட்டு மிக்கு
வருமகிழ் வோடு வாண்முக மலர்ந்தே. 462

மாழ்கல் — மயங்கல். நண்ணுதொழியியர் — நண்ணுதொழிக; வியங்கோள்.

பெயர்ந்து — மீண்டும். இக: முன்னிலையசை.

மகிழ்வொடு வாண்முக மலர்ந்து காண்டியெனக் கூட்டுக

ஒடு: ஆன்பொருட்டு கூடியென வொருசொல் வருவித்து மகிழ்வொடு கூடியென வுரைப்பினுமாம். வாள் — ஒளி.

சஎ. என்றிது வில்லிக் கிறைவ னருளித்
தன்றிருக் கோலந் தாங்கின னின்று
னின்றவன் வெருண்டு நின்றான் றன்னைத்
தண்ணளித் தோற்றந் தான்காண் டலுமே
தண்ணென் றுள்ளந் தளிர்ப்ப
வண்ணல் செய்தா னயாஅ வுயிர்ப்பே. 463

என்றென்பது மேலைப்பாட்டிற் காண்டியென முடிந்ததனோடியையும். இதனை யருளி யென்க.

தாங்கினன்: முற்றெச்சம். வெருண்டு - அஞ்சி. தண்ணளி - குளிர்ந்தவருள்.

தான்காண்டலுப்: அவ் வில்லிதான் கண்டதுணையானே.

தண்ணென்று - குளிர்ந்து; அச்சந் தணிந் தென்பதாம். தளிர்ப்ப - மகிழ.

உள்ளந் தளிர்க்குமாறு அயாவுயிர்ப்புச் செய்தானென்க.

அயாவுயிர்ப்பு - இளைப்பாறுதல்.

நின்றவனாகிய வண்ணல் வெருண்டு நின்றானை யயாவுயிப்புச் செய்தான்.

சஅ. பின்னை முயங்கு பெருந்தோ ணம்பி
யின்னை யாகி யெமர னயநின்
வெண்ணில வன்ன தண்ணளி யாக்கை
கண்ணனி குளிரக் கண்டேன் காண்டலு
மென்செய லென்னுணர் வென்னியல் பென்றிவை
யெஞ்சிய யான்மீண் டெய்தி
யுய்ஞ்சனெ னடியெனின் னுடைமையா கலினே.

பின்னை நப்பின்னையார்: நம்பிகாதவியார்.

நம்பி: விளி. இன்னையாகி - இத்தன்மை யுடையையாகி. எமரன் - எம்மினத்தினன்.

குளிர்ச்சி தருதலொப்புமையான் வெண்ணிலவு காரிக் கொப்பாயிற்று.

எஞ்சிய - குன்றிய.

அடியேனுய்ஞ்சனென். உய்ஞ்சனென் - பிழைத்தேன்; மரூஉ.

கடவுளொடு நோக்கத் தன் னிழிவுமிகுதி யுட்கொண்டு தன்னை யடிமையென்ன துடைமையென்றான்.

சகூ. கண்ணுறற் கரியவிக் கவினிய கோலங்
கண்ணுறக் காவல கண்டனை யாயினை
யிமையோர் பலருமிக் காண
வமையா வேட்கைய ரல்க றுறுமே. 465

கண்ணுறற்கு அரிய - காண்டற்கு அரிய.

கவினிய - அழகிய. காவல : விளி.

கண்ணுறக் கண்டனையாயினே - முன்னுகக் கண்டாயாயினய்.

இக்காண - இதனைக் காண.

அனமயா - ஆனுத

வேட்கையர் - வேட்கை புடையராகின்றனர். அல்கல்தொறும் - நாடொறும்.

இமையோர்பலருமிக்காண அல்கறெ்ுறு மமையா வேட்கையர் அவா கடவுட்காதல் போதாதார். அவரினும் வில்லி நனிசிறந்தான்.

ருo. ஈங்குநீ யென்னை யாங்குக் கண்டா
யாங்குக் கண்டோ ராகுநர் யாரே
பேணு வேள்வியிற் பிழையா நோன்பிற்
காணக் கூடுமோ கருதின்
மாணக் கேள்வியும் வல்லா ரெனினே. 466

யாங்கு - எவ்வாறு. ஆங்குக்கண்டோராகுநர் - அவ்வாறு கண்டோராபவர். யார் : ஒருவருமிலரென்பதாம்

பேணு வேள்வி - பாதுகாத்துச் செய்யும் வேள்வி.

மாண - திருந்த. காணக் கூடுமோ : ஓகாரம் : எதிர்மறை.

அன்பின்விழுப்பங் கூறுதற்பொருட் டிவ்வாறு மீண்டுங் கூறினன்.

ருக. நீயா னென்ன நிகழும் வேற்றுமை
யேயா தென்பா லிடையீ டின்றி
யென்புநெக் குருகி யொன்றுபட் டியையு
மன்புகொண் டிங்ஙன மென்றிற முள்ளவா
றுணரவுங் காணவு மொன்றென வென்னெடு
புணரவு மொல்லும் புகன்ற வாற்று
னன்பி னும் விழுமிய வாற்ற
லென்பெறு மாறிவ் வேழுல கினுமே. 467

ஏயாது - பொருந்தாமல். என்திறம் : என் கூறுபாடு பலவும். அன்புகொண்டு - அன்பினல். ஒன்றென - ஒரு பொருளாக.

ஒல்லும் - இயலும்.

அன்பினு லென்றிற முள்ளவா றுணரவுங் காணவும் புணரவுங் கூடுமென்க.

புகன்றுவாற்றுனே யன்பிற்காட்டினும் விழுமியவாற்றலாவ திவ்வேழுலகினும் பெறுமாறென். என் : எவ்வாறு : இல்லை யென்பது.

௫௨. என்பணி தலைநின் றென்னின் றமையா
தென்பெரும் பற்றல தேனைப் பற்றற
யானெனக் கோடலின் யாவுயிர் மாட்டும்
யானெனச் செற்றம் யாது மில்லெனி
னன்னோ னென்னை யணைகுவ
னென்னோ ருலகு மெய்தா னாவனே. 468

என்பணி - என்கட்டளை யென வினைசெய்தலின்கண். தலைநின்று - மேலாகநின்று.

என்னை யின்றியமையாதென்க.

பெரும்பற்று - தலையன்பு.

கடவுட்பற்றுத் தோன்ற மற்றைப் பற்றுமாயுமென்பது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

(முப்பால். துறவு. 10) என முப்பாலினுங் கூறப்பட்டது.

எல்லாவுயிரும் யானெனக் கருதலான் எல்லாவுயிர்மாட்டும் யானெனக் கருதி யென்பதனு ளிறைவன் முதற்கட் டன்னை யானெனச் சுட்டினான். பின்பு பிறவுயிரைத் தானென நினைத் தன்பு செய்வோன் றான் றன்னை நினைக்குமாறே யா னெனக் கொண்டு கூற்றாக்கினன்.

அங்ஙனமேனை யுயிரையெல்லா மொருவன் றானென நினைத்தலான் அவற் கவ்வுயிர்மாட்டுச் செற்றந் தோன்றாமே அதன்மறுதலை யாகிய வன்பு பிறக்குமென வெல்லாவுயிர்மாட்டு மொருவற் கன்பு பிறக்குமாறும் பெறப்பட்டது.

இதனாற் கடவுளை யுணர்ந்து காதல் செய்பவற்குத் தானும் பிற வுயிர்யாவு மொன்றென்னு மொற்றுமையுணர்வுண்டாதலான் அவன் மாட் டறச்செயலல்லது மறச்செயற்கிடனில்லையாகும்.

எனவே மலைகிழான் காடுகிழாள் என்றாற்போல விறைவனாவான் உயிர் கிழான் எனவும் அதனால் உயிர்ப்பொதுமைநோக்கி யுயிர்கண் மாட்டன்புசெய்தலே யிறைவழிபாடெனவுஞ் சார்புபற்றியவழி இறைவனு மன்னுயிருந் தம்முண் முறையே முதலுஞ்சினையுமா யொருபொருளாமெனவும் பொருட்டன்மைபற்றியவழித் தம்முள் வேறன்றி யொருதனியுயிராமெனவுங் கருதிக்கொள்க. சார்பாவன ஆவியாக்கமென்னுந் தூயமருளின் கூறுபாடுகள். தூயமருளினைச் சொன்மகளென்பாரும் புலமகளென்பாருந் திருமகளென்பாருங் கல்விமகளென்பாருமுளர்.

செற்றம் - வெகுளி.

செற்றம்யாதுமில்லாமையே அன்பு.

" அன்பெனப்படுவது தன்கிளை செறாமை" யென்றார் கலியினும்.

என்னோருலகுமெய்தானாவன் - எத்தன்மையுடையகடவுளருலகையுமடையானாவன்.

உலகங் கடந்த கடவுளாவனென்பதாம். இப்பாலுள் வில்லி கண்ட திருக்காட்சி அருட்டுயிலின்கட் பின்விளைவுணர வரு கனுக் காட்சி யெனப்படுமன்றி நனுக்காட்சியெனப்படாமை யோர்ந் துணர்க- அத்துயிலுமத்துயிற்காட்சியுமாவன இறைவனினைவு.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற் பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பதினென்றுவது பால்

ஞாலப்பேர்யாக்கை

முற்றும்.

ஓமுதுமெய்-

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பன்னிரண்டாவது பால்.

கடவுட்காதற்புணர்ப்பு.

க. இன்ன வாறே யிடையீ டின்றி
நன்னர்ப் புணர்ப்பொடு நண்ணி நின்னை
யின்றி யமையா வன்பர் கொல்லோ
நந்தா வற்ற நாடொறு முணர்தல்
சிந்தா தூன்றுஞ் செல்வர் கொல்லோ
புணர்ப்பு வல்ல புலவர்
பிணைப்பு நீவப் பகர்கமா யோயே. 469

இன்னவாறே: மேற்கூறியவாறே.

நன்னர் – நன்மை.

கடவுளை யின்றியமையாமையாவது கடவுளாகிய வொருபொது வுயி ரின்றேற் பலவேறுயிர்ப்பன்மையுளதாதல் செல்லாதெனவும் பொதுவுயிரே யேனை யுயிரீனு முதலுயிருந்தலையுயிருந் தனியுயிரு மாகற்பாலனெனவுமந் நன்றியுடைமைக்கின்றியமையாப் பேரு டைமை முதலியவெண்பெரும்பண்புமுடையனெனவும் ஓவாதுள்ளி அவன்றுணுகிய தன்னின்பநுகர்வில்வழி, நிலையாது பொய்படு ஞாலவாழ்க்கைத்துன்பம் பொறுக்கலாற்று திவணுயிர்வாழமாட்டா மையாம் இதுவே கடவுட்காதற் புணர்ப்பென்பது.

நந்தா–கெடாத: எஞ் ஞான்றுமொருபெற்றியே யாய. அற்றம்: அதுவிதுவுதுவென்னுஞ் சுட்டுணர்விற்குப் புலனுகாததாயுணர்வ தாகும் பேருயிராகிய பெரும்பொருள்.

சிந்தா தூன்றும் – தவறாது நிலைநிற்கும்.

செல்வர்: வேண்டாமையாகிய விழுச் செல்வமுடையார்.

புணர்ப்பு வல்ல புலவரென்றது புணர்ப்புவல்லராய் மெய்யுணர்வு கைவரப் பெற்றவ ரென்றவாறு.

பிணைப்பு - தவறுதல். நீவ – நீங்க.

பிணைப்பு நீங்கப் பகர்தலாவ துள்ளதுள்ளவாறு துணிந்து சொல்லுதல்.

கொல்: ஐயம் விளக்கிற்று. ஓ: வினைப்பொருட்டு.

புணர்ப்புவல்லவ ரெனத் தக்கார் அன்பர்கொல்லோ? செல்வர் கொல்லோ? வென வினையி னுன் வில்லி. மேல நம்பிமாற்றம்.

உ. நன்பாற் பட்ட நாட்புணர்ப் பாளரு
ளென்பாற் றம்மு வீடுபா டமுந்தி
யன்பாற் றலைவனென் றென்பால் வைத்த
நினைப்பு நீங்கா நெறியினர்
புணர்ப்பு வல்ல புலவரென் றுணிபே. 470

நன்பாற்பட்ட - நல்லகூறுபாடாகிய.

நாட்புணர்ப்பு : எப்பொழுதுஞ் செய்யும் புணர்ப்பு.

கடவுட்காதற் சிறப்பிற்கும் பெரும்பொருட் புலமைக்கு மின்றி யமையாமைபற்றி நன்பாற்பட்டநாட்புணர்ப்பெனச் சிறப்பிக்கப் பட்டது. எனவே நாட்புணரிகள் காதலஞ்செல்வரெனவும் புலமை யஞ் செல்வரெனவு மிருசாராயினர்.

ஈடுமாடு : காதற்புணரியாயினன் றன்னை யானுக்கி யென்னைத் தானுக்கிக் கொடல்.

தலைவன் - பணிகொள்பவன்.

அன்பால் நினைப்பு நீங்காநெறியினரென நினைப்பு நீங்காமைக் கன்பு பொருட்டாகக் கொள்க.

நெறி : அந்நினைவு நீங்காமையோ டியைந்த வொழுக்கம்.

புணர்ப்புவழிக்காதலும் புலமையுமே யுறுதியென நம்பியடிக ளார் கொள்ளப்பட்டன.

இஃ தென் றுணிபெனச் சுட்டுச்சொல்லெச்சம். எல்லாருமங் ஙனமேயாகல்வேண்டுமென்னும் யாப்புறவு மியற்கையு மில்லை யென் பது நம்பியடிகளது திருவுளம்.

ங. வாயிற் றெருகுதி வாய்ப்பச் செறிவுறுத்
தாயி னெருநே ரறிவா யமர்ந்து
மன் னுயி ரெல்லாந் தன்னெனப் பேணினர்
நந்த வில்லது நாட்டப் படாத
தந்தி லற்ற மார்ந்த தெங்கணு
முன்னப் படாதது முந்தைப் பொதுநிலை
யென் னு மலங்கா தெஞ்ஞான் றூனு
நின்றுங்கு நின்று நிலவுவ ததனைத்
தெளிந்த செல்வருந் தேரி
னளிந்த வென்னை நண்ணுவர் மற்றே. 471—472

வாயிற்றெருகுதி : பதினெரு பொறிகளின் கூட்டம். வாய்ப்ப— பிழையாமல்.

செறிவுறுத்து - நன்கடக்கி.

ஒருநோறிவு : எல்லா வுயிர்கட்கு மொத்தவொருபொதுவறிவு.

பேணினராய் : முற்றெச்சம்.

நந்தல் — கெடுதல். நாட்டப்படாதது — அளவைகளான் நிலை பெறுத்தப்படாதது ; தன்னிற்றனக்குத் தானே யமையு நுகர்ச்சி யுளவாகக் கொள்ளப்படுவ தென்றவாறும்.

அந்தில்: அசை. எங்கணுமார்ந்தது. ஆர்ந்தது – நிறைந்தது. முன்னப்படாதது – நினைக்கப்படாதது. நினைப்புவிட்டவழிப்பெறப் படுவதென்பதாம். முந்தை – முதல்.

முந்தைப்பொதுநிலையாபது. என்னும் – சிறிதும். அலங்காது – அசையாது.

நளிந்த: எங்குஞ் செறிந்த.

புலவர்தாமு முணர்வதுபெரும்பொருளையாயினுங் கடவுளையுண ராம லதனையுணர்த லமையாதென்று மவர்தம்முடம்பு நீத்தவழித்தாம் பெரும்பொருளாகியே யமைந்தொழியாது காதலர்போலக் கடவுளை யடைந்தபின்னரே தாம்பெரும்பொருளாயமைந்தொழிதல் கூடுமென் றும் நம்பி குறிப்பித்தருளினன்.

ச. அற்றம் விழையு மறிஞர்க் காயிற்
சுற்றுஞ் சிறுமைத் தோற்றம் பலவா
லற்றஞ் சாரு மருவழி யதுதா
னுற்றவிவ் வுடல்கொ ளுயிர்க்குப்
பற்றுத லரிது படர்தப வுய்ந்தே. 473

அற்றம் – பெருஞ்சார்பு. சுற்றும்: மேன்மேற் கடக்கலரிய வாகச் சூழும்.

சிறுமைத்தோற்றம் – துன்பத்தோற்றம். அருவழி: பெரும் பொருட் புலமை.

உற்ற – ஒட்டிய.

படர் – இடர்ப்பாடு. தப – கெட. உய்ந்து – தப்பி. படர் தப வுய்ந்து பற்றுத லரிதென்க.

உடல்கொ ளுயிரென்றது பற்றுதலருமைக்குப் பொருட்டாவ தனை யெடுத்துக்காட்டி வலியுறுத்தவாறும்.

இதனாற் காதல்வழியின் வேறாகப் புலமைவழியு முண்டென் பதூஉ மது காதல்வழிச்சென்று மீமிசைஞால மெய்தியவழியே யெளிதாவதன்றி யீண்டுக் காதல்வழிபோல வெளிதாவதன்றென் பதூஉ மதனாற் காதல்வழிச்செலவே சிறப்புடைத்தென்பதூஉம் பெற்றாம்.

முடியா தென்னுது அரிதென்றமையானேயொரோவழிப் புலமை வழியுஞ் சிறுபான்மை யரிதிற் கைகூடு மென்பது கொண்டாம்.

ரு. என்பாற் றஞ்செய லெல்லா நல்கி
யென்பாற் பட்டிருந் தென்னொடு தம்மிடை
யிருமை கொள்ளா தொருமை மேற்கொண்
டுரிமை தோன்ற வுன்னுபு வழிபட்
டென்றலைப் புக்க வின்னுணர் வெய்திய
வென்றோழும் பாளரை யெய்ப்பிடை முன்னின்
றின்னச் சாவுழல் வாழ்வென வியம்பு
மலைகட லழுவகின் றையென
வுலைவற வெடுத்தளித் துயக்கொள் வேனே.

அங்ஙனநல்குதலாவது அவற்றைக் கடவுள் பணியெனச் செய்தல்.

என்பாற்படுத லென்றது அவனுடைய வொரோவொரு கூறெனத் தம்மைக்கோடல்.

தலை : எழாவது. புக்க - ஆழ்ந்த.

இன்னுணர்வு - இன்பஉணர்வு.

எய்ப்பு ; இருவினையொப்பு.

சாவுழல்வாழ்வு : உலகவாழ்வு.

கடலழுவம் - கடற்பரப்பு ஐயென - விரைய.

உலைவு : களைசணிலபாயினே மெனத் தளர்தல்.

உயக்கொள்வேன் - தப்பிக்கச் செய்வேன்.

இதனாற் காதல்வழியி னெண்மையாமாறு கூறியருளினன்.

௬. நின்னக மென்வயி னிரீஇ நின்னுணர்
வென்னகஞ் செரீஇ யென்னுழை வாழ்தியே
லெற்றுக் கைய மினிமேற்
பெற்றுக் கொண்டனெ பெறற்பா லதுவே. 476

அகம் - நெஞ்சு. என்னகம் - என்னிடம்.

செரீஇ - செருகி : தன்னுணர்வின்றி யென்னுணர்வாகி யென்பதாம்.

வாழ்தியாயின் இனிமேல் ஐயமெற்றுக்கு : வேண்டாவென்றவாறு. எற்றுக்கு - எதற்கு.

பெறற்பாலது பெற்றுக்கொண்டனெ யெனத் துணிவுபற்றிக் காலமயங்கக் கூறினன்.

இனி, யவ்வாழ்வு தானே பெறற்பாலது. அதனிற் பெறற்பால தாண்டு மின்றீண்டு மின்றென்றுனுமாம்.

பெறற்பாலது கடவுளாகிப் பெரும்பொருளாதலாம்.

௭. ஏடா கேணீ யென்பா லுள்ளம்
வீடா தூன்றக் கூடா தாயிற்
பைப்பயப் புணர்ப்புப் பயில்க பயின்று
பிற்பட வெண்ணம் பிழையா
தப்பரி சென்னை யணைவான் விழைவே. 477

ஏடா ! தோழன் விளிப்பெயர். வீடாது - நீங்காது.

எண்ணம் பிழையாது - நினைவென்னிடத்தன்றிப் புலனிடத்துச் செல்லாதவாறு.

அப்பரிசு : மேற்கூறியவாறு.

அணைவான் - அணையும் பொருட்டு.

விழை - விரும்புவாயாக.

இதனாற் கடவுட்காதல் வாராவழிச் செயற்பாலது கூறினன்.

இதனற் புணர்ப்புப்பயிற்சியின்றியுங் கடவுட்காதல் எழக்கூடு மென்பதூஉம் பெறுதும். அவ்வாறெழுந்தார்க் கதனற் புணர்ப்புத் தானே யமையும். இவ்வாறு காதல்வழிப்புணர்ப்பும் புணர்ப்பின் வழிக்காதலு முய்த்துணர்ந்துகொள்க.

அ. புணர்ப்புப் பயிற்சி புககில் லாயெனி
னினைப்பு முதல நின்செய லெல்லா
மென்பணி யென்றுகொண் டினிதின் வைகுதி
யென்பொருட் டியற்ற னின்கட
னின்பொருட் டுதவுத னின்றவென் கடனே. 478

புககில்லாயெனின் - தொடங்கலாற்றுயாயின்.

நினைப்பு முதலியனவாகிய நின்செயல்.

"அன்றே யென்றனாவியு முடலு முடைமையெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
வின்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே"

(திருவாசகம். குழைத்தபத்து. 7) என்றவா றிருத்தல்வேண்டு மென்பான் எல்லா மென்பணி யென்றுகொண் டினிதின் வைகுதி யென்றான்.

ஈற்றடி யிரண்டனோடு

"தன்க டன்னடி யேனையுந் தாங்குத
லென்க டன்பணி செய்து கிடப்பதே"

எனவரும் அப்பர் தமிழ்மாலைச் செய்யுளடி நினைக்க.

மன்னுயிர்க்கடன் றீர்ந்தவழியுங் கடவுள்கடன் றீராது நிலை பெறுவ தொன்றாகலின் நின்ற வென் கடனென்றான். நின்ற - நிலை பெற்ற.

அன்பின்பொருட்டுக் கடவுள் பட்டகடன் றீராதா யத்துணை விழுப்பமுடைத்தாயிற் றன்பென்பதுணர்க.

கூ. என்பணி யாற்றவு மேலா தாயி
னின்பணி தன்னினு நிகழும் வினையினும்
யானென தென்னு மிருசார்ப் பற்று
நீத்தல் வேண்டுநீ நின்னை யாத்தி
யாத்த வினையை யாப்புறச் செய்க
வடைவி னின்னுள மடக்கிக்
கடையி னென்னைநீ காண்டற் பொருட்டே. 479

என் பணி - என் கட்டளை. நின்பணி - நின்செயல்.

வினை - ஊழ்வினை : இன்பத்துன்ப நுகர்ச்சி.

நின்னையாத்து : நின் செயலையும் நினைப்பையுமடக்கி,

யாத்த - வரையறுக்கப்பட்ட. யாப்புற - ஒருதலையாக; மடி புகுதாம லென்பதாம்.

அடைவின் - முறையான். கடையின் - முடிவில்.

காண்டற்பொருட்டு யாப்புறச் செய்க வென்பது.

காண்டற் பொருட்டெனவே அவ்வாறுசெய்யிற்காண்பா யென்பது கருத்தாயிற்று.

கடவுளைக் காண்டலாவன கடவுட்டோற்றங்காண்டலுங் கடவு ளுணர்வுகாண்டலுமாம்; முன்னதுகாதல். பின்னதுபுலமை.

கo. பயிற்சி யாக்கம் பயிற்சியி னூஉங்
குணர்ச்சி யாக்க முணர்ச்சியி னூங்கு
நினைத்த லாக்க நினைப்பி னூங்கு
நீத்த லாக்க நீத்தலி னூஉங்
கமைதி யாக்க மைய
வமைதி தன்னினுங் காக்கமோ வின்றே.

பயிற்சி: தொழிலாயினும் தொழிலடக்குதலாயினும் பலகாற் பயிலுதல்; புணர்ப்புப் பயிற்சி யென்பதாம்.

உணர்ச்சி: பயிற்சியின்கட் டோன்று மடக்கம் பற்றி யொரு வன் தான்றுன்பமில்லாதிருக்குமாற்றை விழையுமுணர்வு.

நினைத்தல்: அவ்வுணர்வினாற் றனக்குத் துன்பமில்லாதிருக்கு மாற்றை யெல்லா மெண்ணுதல்.

நீத்தல்: அவ்வெண்ணத்தான் எவ்வாற்றானும் முயற்சியும் முயற் சியான் வருவனவு மெல்லாந் துன்பமாதலின் வேண்டப்படாதவை யெனப் பற்றுவிடுதல்.

அமைதி: அங்ஙனம் பற்றுத் துறத்தலான் அவையிற்றைப்பற் றிச் சென்றதும் நிகழ்வதும் வருவது மெண்ணு தலைவின்றி யிருத்தல்.

ஆக்கம் - உயர்ந்தநிலை.

இது மேல் யாத்தவினையை யாப்புறச் செய்க வென்றலி னங்ங னஞ்செய்தலா னமைதி பிறந்து கடவுட்காட்சி தலைப்படுமா றுணர்த் திற்று.

கக. முற்றுயிர் மாட்டுஞ் செற்றமின் றாக
வெற்றிய வருண்மிக் கியானென தெனவரு
பற்றுவிட் டகன்று பருவர லின்பமென்
றிருவினை யொப்பும் பொறுமையுந் தழீஇ
யொருவறு மகிழ்ச்சியி னெருங்கிய வுளமொடு
பொருளியல் பற்றிய புரையறு துணிபினன்
றன்னெஞ் சுணர்வொடு தானெனக் காக்கி
யென்னன் பின்பமென் றிருப்போ
னென்னன் பாள னெனக்கினி யன்னே. 481—182

முற்றுயிர்மாட்டும் – ஓரறிவுயிர்முத லாறறிவுயி ரீருகிய வெல்லா வுயிர்மாட்டும். செற்றம் – வெறுப்பு.

எற்றிய – நினைத்த. பருவரல் – துன்பம்.

அருள் – பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்ய நினையாதுதவுதல்.

இருவினையொப்பு – இருவினையும் வேண்டாமை.

பொறுமை – பிறவுயிர் தனக்குச் செய்யுந் தீங்குகளை யுட்கொள்ளாமை.

ஒருவறுமகிழ்வு – நீங்குதலற்ற மகிழ்ச்சி. அஃதாவது முனிவில்லாமை. ஒருங்கியவுளம் – நினைப்பெல்லாம்விட்ட வுள்ளம்.

புரை – குற்றம். துணிபினன் – துணிபுடையவனுகி.

தன்னெஞ்சினையுந் தன்னுணர்வினையு மென்னெஞ்சு மென்னுணர்வுமாக்கி. என்றது யான் முழுமுதலுந் தானெவழியுமாமெனத் துணிந்தென்றவாறும்.

என்னன்பின்பமெனவே யொழிந்த நிலை யெல்லாந் துன்பமென் றிருப்போனுமாவன்.

என் அன்பாளன் – என்பாலன்புடையவன்.

எனக்கினியன் : அவன்பால் யானன்புடையயேன்.

இது மேற் சிறிப்பித்துணர்த்திய கடவுட்காதல் சிறந்தாரியல்புஞ் சிறப்பு முணர்த்திற்று. மேல்வருமாறுபாட்டுமது.

கஉ. தான்பிறர்ச் செறுதலுந் தற்பிறர் செறுதலு
மேம்பலுஞ் சினனு பெழூஉ மச்சமுந்
தேம்பலுந் தீர்தரு செல்வன்
றீம்பக லினியன் சிறந்தோ னெற்கே. 483

செறுதல் – வெறுத்தல். ஏம்பல் – மகிழ்ச்சி.

தேம்பல் – வருந்துதல்.

தான் பிறர்ச் செறுதன் முதலாயின தீர்தல் செல்வமாமாறுணர்க. செல்வன் : புணரியெனப் பெயருமாம்.

தீப்புஅகல் – தீங்குநீங்கிய.

சிறந்தோன் – அன்புடைய தமனுவன்.

கடவுளங்ஙனமிருத்தலானே யவனைச் சார்ந்த வன்பனு மங்ஙனமாவன்.

கங. எய்திய வெய்துவ வெண்ணூஉ விராஅத்
துய்யவன் றுயர்வாழ் வுய்யவல் லாள
னுகர்தற் கண்ணு நொதுமல னுவோ
னிடரிற் றளர்வில னெவ்வினை தொடங்கலுந்
தானனி கைவிடு தனியன்
யானன வன்ப னினியனெற் கவனே. 484

எய்திய: முன்னரெய்திய வின்பத்துன்பமுதலாயின. எய்துவ: இனிமேற் பெறப்படு மின்பத்துன்பமுதலாயின.

அவற்றை யெண்ணிக்கொண்டிராத தூயவன்.

எண்ணூஉ - நினையாநின்று.

அங்ஙனம் நினைவாகிய மாசு துடைத்தமையாற் றூய்யவனுமா றுணர்க.

உய்தற்குரியன வல்லது வாளா நினைந்துகொண்டிராத திறமை யுடைமைபற்றித் துயர் வாழ்வுய்யவல்லாள னெனப்பட்டான்.

நுகர்தற்கண்ணும் - ஐம்புலங்களை நுகர்வுழியும்.

நொதுமலன் - விருப்பு வெறுப்பற்று நுகர்பவன்.

இடர் வந்துழிக் கலங்குத லில்லாதவ னென்க.

அவ்வப்போது நேர்ந்த நேர்ந்த வினையைச் செய்தலல்லது தானென்று கருதி யெவ்வினைதொடங்குதலையுங் கைவிட்ட தனிய னுவோன்.

யானனவன்பன் - யான்போன்ற வன்பன்.

கச. நயப்பொடு வெறுப்பு நலத்தொடு தீங்கு
களிப்பொடு கவற்சியென் றிவற்றினை நீத்த
வெம்மோன் றானே யினிய
னம்மா வெனக்குநல் லார்வல னவனே. 485

நயப்பு - விருப்பு. நலந்தீங்கு: தான்பிறர்க்குச் செய்த நல்வினை தீவினை.

வினைத்தொகை, வினைவிளைவு, வினைவரவென விம் முப்பாற் பட்ட வினையினுள்ளும் நயப்பொடு வெறுப்பு வினையாய்வருவன வாகிய வினைவரவாமாறும் நலத்தொடு தீங்கு நுகரக்கடவனவாய்க் கிடந்த வினைத்தொகையாமாறும் களிப்பொடுகவற்சி யிப்பொழுது நுகராநிற்பனவாகிய வினைவிளைவாமாறு முணர்ந்துகொள்க.

கடவுட்காதற்புணர்ப்பானே நினைப்புக்களெல்லாமொழிதலின் அம்முப்பால்வினையு மொருங்கிலவாகும்.

எம்மோன் - எமக்குறவாயினேன். எமக்கென்றது தன்னன்பர் பிறரையு முளப்படுத்து. எனவே கடவுட் காதலராயினர் தம்மோரன் னேரெல்லார்மாட்டுங் காதலராவ ரென்ப தமையும்.

அம்மா: உரையசை நீட்டம்.

கரு. தட்ப வெப்பந் தாழ்ச்சி மீப்பு
நட்புப் பகைமை நயந்துயர் வசையிசை
யிப்பரி சியம்பிய விரட்டை தம்மி
னெப்பநின் றொன் றினும் பற்றுவிட் டொரீஇ
வாய்வா ளாதான் வருவ வருகென
வேய்வா னுள்ள மென்ன வானுங்
குறிக்கோ ளின்றி நிலைப்பா டூன்றிய
நெறிப்பாட் டுணர்வு நேர்வோ னுளனே
லவற்கியா னெங்கன மங்கன
மெனக்கவ னென்னினு மினியன் றானே. 486—487

தாழ்ச்சி - இழிவு - மீப்பு - மேன்மை.

நயம் - இன்பம். இசை - புகழ். இப்பரிசு - இவ்வாறு.

என்னுடையன, யானென்னும் பற்று விட்டு நீங்கி.

வாய்வாளாதான் - கடவுளைப்பற்றியன்றி யாதும் யாரொருவரொடு முரையாடாதான்.

வருவன வருக வென்று துணிந்து அவற்றைப்பற்றிய நினைவின்றிப் பொருந்துபவன். எய்தல் - பொருந்துதல். உள்ள மேய்வானெனமாறுக.

என்னவானும் - யாதாயினும். இன்னதனைப் பெறல்வேண்டுமென்னுங் குறிக்கோளில்லாமல் அசைவின்றி நிலைப்படுதலாக நிலைபெற்றவழியிலே படுதலுடையவுணர்வு தலைப்படுவோனென்க. நேர்தல் - தலைப்படுதல்.

வாய்வாளாதான் எய்வோன் நேர்வோ னென்பன வொருபொருட்பல்பெயரடுக்கெழுவாயாகும்.

அவற்கியானெவ்வாறு தன்னினு மினியனுகின்றேனே வவ்வாறே யெனக்கவனென்னினு மினியனுகின்ரு னென்ருன்.

கசு. உரைத்தவிவ் வறப்பா லொண்மருந் தேற்றுப்
புரைப்பற வூக்கமொ டெனைத்தலைக் கொண்டு
நினைப்பற நினைந்து நிற்குந
ரெனைப்பெரி தினிய ரெனக்குநீ யெனவே. 488

ஒள்ளிய மருந்து - உணர்வுவிளக்கான மருந்து.

மருந்து - வானவருணவு. ஏற்று - செவிவாய் மடுத்து நெஞ்சகடு நிறைய வுண்டு.

புரைப்பு: பிறர்பேணுதல் குறித்துச் செய்து பொய்படுதல். அற - இன்றி.

தலைக்கொண்டு - மேலாக வுணர்ந்து.

நினைப்பற நினைந்தெனச் செயவெனெச்சம் உண்ணவந்தானென்பதுபோலப் பொருட்டாக்கங்களின்மேல் வந்தது; கடவுளை நினைத்தற்கு நினைப்பறுதலுங் கடவுளைநினைத்தலானே நினைப்பறுதலுமுளவாகலினென்பது. கடவுளைநினைத்தலா னினைப்பறுதலாவது கடவுளை நினைத்தற்கற்ற நினைப்பறுதி தான் திறம்பாது நிலைபெற்றுப் பயத்தலாம். இதனுனீனைப்பெலாம் விட்டவழியன்றிக் கடவுணினைவு வாராதென்பதூஉ முணர்க.

பிறவற்றி னினைப்பறுதலுங் கடவுளைநினைத்தலு முடனிகழ்வனவாதலி னினைப்பற வென நிகழ்காலத்திற் குரிய செயவெனெச்சமாயிற்று.

இனி, நினைப்பற நினைந்தென்பதனை விட்டுவிட்டு நினையாது மறப்பின்றியே யிடைவிடாது நினைந்தெனக் கொள்ளினுமாம்.

நினைவாகிய அலைவின்மையின் நிற்குநராவர்.

எனைப் பெரிதினியர் - எவ்வளவுமிகவினியர்.

எனக்கு நீ யினிமையாயவாறுபோல வெனைப்பெரிதினிய ரென்ருன். நீ யென்றதுவில்லியை.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பன்னிரண்டாவது பால்

கடவுட் காதற்புணர்ப்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதின்மூன்றுவது பால்

செய் செய்யறிஞன் சிறப்பியற்புணர்ப்பு

க. இப்பா லுணர்வான் யான்விழை கின்றேன்
செப்பாய் நம்பி சிறியேன் வினஅ
மூத லெவனே முதலி யெவனே
செய்செய் யறிஞற் றேருமா றெவனே
வுண ரற் பாலது முணர்வு
மிணரிற் ருரோ யெவனே வெனவே. 489

இப்பால் - இனி. உணர்வான் - உணரும்பொருட்டு.

திரிபுபொருட்கெல்லா முதலாவதுமூதல். ஆவது : மருளென்னு மாற்றல். எவன் - யாது? ஓ: அசை. முதலி - வினை செய்வது.

செய் - விளைபுலம் : ஈண்டு வினைவிளையும்புலம்.

செய்யாமா றறிபவன் செய்யறிஞன்.

இணர் - மலர்க்கொத்து. இன் : சாரியை : வலிந்தது.

என விப்பாலுணர்வான் விழைகின்றேன், நம்பி! சிறியேன் வினவுக்குச் செப்பாயென விற்பூட்டிப் பொருள்கொள்க.

இவை வில்லியின் அறியாவினை. மேல்வருவன நம்பி மாற்றம். இப்பாலின்பெயர் தலைமைபற்றி யமைந்தது.

உ. தெவ்வடு கிற்குந் திறலோய் கேட்டி
யிவ்வுடல் செய்செய் யிதனு ளிஃதுணர்
செய்யன் செய்யறி ஞன்னெனல்
செய்செய் யறிஞற் றெளிகுநர் கூற்றே. 490

அடுகிற்கும் - வெல்லவல்ல. திறல் - ஆற்றல்.

செய்யாகிய விதனு ளிருந் திதனை யறியு மிச்செய்யுடையான் செய்யறிஞனென்று கூறுதல் அவ்விரண்டனையும் வேறுபட நன்குணர்பவர்கூற்றுமென முடிக்க.

செய்யன் : திரிபில்லாதானெனவு மிசைத்தது. செய் செய்யறி ஞன் : உம்மைத்தொகை.

ங. செய்பல வற்றுளுஞ் செய்யறி ஞன்யா
னெயவிச் செய்செய் யறிஞற் றெளிவே
யுணர்வெனப் படுமென வுணர்தல்
வணர்படு வேய்த்தோள் வளவவென் றுணிபே. 491

பலவற்றுளும் யான் செய்யறிஞனென்ற வதனு லோரோவொரு செய்யு ளோரோவொரு செய்யறிஞரு மெல்லாச்செய்யுளு மொரு செய்யறிஞனுமெனச் செய்யறிஞ ரிருசாருளரென்பது பெறப்படும். படவே செய்தொறுமிருவ ருடனிருந் துணர்பவராவர்.

வணர் - வளைவு.

உணர்த லென் றுணிபென்க.

ச. யாதுசெய் யெவ்வியற் றென்ன திரிபிற்
றியாதனிற் போந்ததி யார்செய் யறிஞ
னங்கவன் றகைமை யாவதெ
னென்பன தொகைஇ யிவணியம் புவெனே. 492

எவ்வியற்று - எவ்வியல்பிணையுடைத்து.

என்ன திரிபிற்று - என்ன திரிபுடையது.

அங்கவன் - அச்செய்யுள் வதியு மவன்.

தொகைஇ - தொகுத்து.

ரு. புகன்ற செய்யினைப் புலவர் பலரும்
வியன்ற வண்ணம் வேறுவே ருகிய
பாக்களிற் பெருநூற் பாற்படும்
போக்கறு சொற்றெடுத் தியாத்திசைத் தனரே.

புலவர் - முனிவர்.

வியன்ற - விரிந்த: உரிச்சொலிற்படுபெயரெச்சம். ஈண்டு வண்ணஞ் செய்யுட் குரிய தொடையிசை வண்ணப். அவை: செப்பலே யகவலே துள்ளலே தூங்கலே யென் றிந் நான்காகத் தொக்க பாவண்ண முதலிய விருபதுமாம்.

பெருநூல் - பெரும்பொருணூல். பொருளின் பெருமை பொரு ணுதலிவரு நூன்மே னின்றது.

போக்கறுசொல் - குற்ற மற்ற சொல்: குற்ற மறுக்குஞ் சொல்லுமாம்.

யாத்து - கட்டி. இசைத்தனர் - பாடினர். சொற்களைத் தொடுத்திணைத்துப் பாடினரென்க.

செய்யே யங்ஙன மிசைத்த பாக்களின் பொருள்.

பெருநூற்பாற்படுமென்றமையானே அப்புலவர் பாடியன நூலல்ல; பாட்டென்ப துணர்ந்து கொள்க. ஆயினு மவை நூல் போலச் சொற் சுருங்கிப் பொருள் பெருகிச் சுவைபடவருவன வென்றவாறு.

சூ. ஐம்பரும் பார்பொறி யையிரண் டொன்றொ
டைம்புலன் யான்றுப் பற்ற மென்றிந்
நவின்ற விருபா னுண்மையுந்
தவிர்ந்து செய்யெனத் தானென் றிலதே. 494

ஐம்பரும்பார் : மண்புன லெரிவளிவா னென்றிவை. ஒன்றற் கொன்று நுண்ணிய பரியவாகிய திரிபுகளெல்லாவற்றுள்ளு மிவற்றினுங்குப் பரியன வின்மையா னிவை பாரெனப்படும். உரியது ஊரெனவுங் கரியது காரெனவும் பட்டாற்போல. இவற் றுக்கு முதலாகிய வைம்புலனு நுண்பாரெனப்படுமாகலின் இவை பரும்பாரெனப்படுவவாயின.

பொறிபதினொன்றுவன : உணர்ச்சிவாயி லோரைந்தும் வினை வாயி லோரைந்தும் நெஞ்சொன்று மெனவிவை.

ஐம்புலன் : ஓசை, ஊற்றம், ஒளி, சுவை, மணமென விவை. இவை யைந்து முறையே செவி முதலிய வைம்பொறிகளைப் பற்றுக் கோடாக வுடையன. அப்பொறிகட்குப் புலனுவன வைம்பரும் பார்.

யானென்பது யானென்னு முனைப்புணர்ச்சிக்கு வாயிலாகிய வொருசா ருள்ளம் ; ஈண்டாகு பெயர். அவ் யானென்னு முள்ளம் உள்ளமென வொன்றுய் நின்றத னொருகூறு. அக்கூறுதா னுடம்பு முதலாயவற்றைத் தொழிற்படுத்துங்காலுந் தொழிற்படுங்காலும் யானென வெழுதலினப்பெயர்த்தாகும்.

துப்பென்பதியானென்பதற்கு முதலாய்நின்றவுள்ளம். இஃ தொன்றுய வுள்ளத்தின் இயற்கைமுதற்கூறு. ஒருள்ளத்தின் முதற் கூறு துப்பென்னுமுள்ளமாகவு மிடைக்கூறு யானென்னு முள்ளமாக வுங்கடைக்கூறு நெஞ்சென்னு முள்ளமாகவும் வழங்கப்படும். இவற்று ணெஞ்சென்ப துடம்பைத் தொழிற்படுத்துங்கால் அப்பெயரான் வழங்கப்படும். உடம்பைத் தொழிற்படுத்தாது தான் மட்டுந் தனித்துத் தொழிற்படுங்காலை நினைப்பென வழங்கப்படும். அது தொழிற்படுவுழித் தன்னுற் றொழிற்படுக்கலுறு முடம்பினை மெத் தெனத் தொழிற்படுத்தாநின்று தானு மெத்தெனத் தொழிற்படுதலு மதனைப் பெரிதுந் தொழிற்படுத்த லொழிந்து தான் பெரிதுந் தொழிற் படுதலு மென விருபாற்படும். அவ்விரண்டனுள்ளு முன்னது நினை வெனவும் பின்னது கனவெனவுங் கொள்ளப்படும். எங்ஙனமாயினு முடம்பைத் தொழிற்படுத்தாது தான் றொழிற்படுத லெஞ்ஞான்று மின்மையி னினைவுங் கனவுமெல்லாந் திண்ணிய வன்றி நொய்ய வாகவே யிருக்குமாதலின் அவை விரைவுபற்றுவழிச் செவ்விய வாகவும் விரைவுபற்றியவழித் தடுமாறுவவாகவும் உடனழிவனவு நின் றழிவனவுமாகவுமமையற்பால. உடற்றொழின்மிக்குழி யம்மிகைக் கேற்ப நினைவு குன்றும் அது குன்றியவழி யவ்வளவுக்கேற்ப நினைவு மிகும். இதனு னினைப்பென்பது நெஞ்சி னடங்கு மென்பது பெறுதும். அவ்வாறே யானென்பதுந் துப்பி னடங்கும் ; ஈண்டுவிதந்தோதப் பட்டது.

துப்பென்னு முள்ள மின்பத்துன்பமாகத்திரிந்துபிரா னுகரப் படுவதாகலின் அப்பெயர்த்தாகும். இஃதழிந்தவழி யவ்வுயிர்க்குப் பிறப்பில்லையாகும். இது தானே யானெனவும் நெஞ்செனவும் பொறியெனவும் உடம்பெனவுந் திரிந்துமாறி யெஞ்சுதலும மிகுதலு முண்டியது.

அற்றமென்பது துப்புக்கு முதலாவது. கீழ்நின் றொடுங்குமுறை யாற் றிரிபுபொருள்களின் மரபெல்லாஞ் சென்றொடுங்குமிடமற்ற மெனப் பெயர்த்தாயிற்று. சென்று முடியு மிடத்தை அற்றமென்றல் வழக்கினுங் காணப்படும். இதுவழக்கின்கண் அவ்வததம்வரையுங் கூட்டமிருந்ததென மரீஇ வழங்கும் முடிவினை அறுதி யென வழங்கு மாற்றானும் அறுதன்முடிதலை யுணர்த்துமாறு துணியப்படும். இஃ தறியாது அத்தமென்னும் வழக்கினை அயற்சொல்லெனமயங்குவாரு முளர்.

ஈண் டற்றமென்பதனை மருளெனவும் பண்பெனவும் ஆற்ற லெனவும் வழங்குப. இஃதொன்றிற் றோன்றியதன்றி யியற்கையா யமைந்து கிடப்பது. இது செத்தை. இதனினின்றே துப்புமுதலிய திரிபு செத்தை யெல்லா மொன்றினின் றொன்றாக முறையே யுண்டா யொடுங்குவன. செத்தை: அறிவில்லது. இவ்வற்றமே யெல்லாத் திரிபுபொருட்கு முதற்பொருட்டாதல்பற்றி மூதலெனவு முதனிலை யெனவும் வழங்கப்படும்.

ஏனைச் செத்தை யெல்லா மிவ்விருபத்துநான்கன்பாற்படுமாக னிவ்விரு பானன்மை யெனத் தொகுத்துக் கூறப்பட்டன. இவற்றுத் தொகையே செய்யென்ற வுடம்பாகலி னிவையல்லதுசெய்யென வொன் றின்றாயவா றுணரப்படும். ஞாலமுழுது மிவ்விருபத்துநான் கல்லது வேறன்மையான் அதுவுஞ் செய்யெனப்படும். அஃதிறைவ னுடல். அச்செய்க்குச் செய்யறிஞன் கடவுள்.

இப்பாட்டுச் செய்யென்ப திது வெனக்கூறிற்று.

எ. கவர்வு செற்றங் களிப்புக் கவற்சி
செறிவு திட்ப முணர்வென வேழு
மெய்யென் றோதிய மேலைச்
செய்யின் றிரிபெனத் தேறுக தொகுத்தே. 495

கவர்வு – விருப்பம். செற்றம் – வெறுப்பு.

களிப்பு – இன்பம். கவற்சி – துன்பம். செறிவு – கூட்டம்; செய்யென்னுமுடம்பு பலவுறுப்புக்களின் கூட்டமாமாறும் பலமுதற் பொருளின் கூட்டத்தானாகுதிரிபாமாறும் பிறவுடம்பொடு கூடுதலா மாறு முணர்க.

திட்பம் : அழியும்வரையு நிலைபெற்றிருத்தல்.

உணர்வென்ற தீண் டுணர்வு நிகழ்ச்சியை, உணர்வுயிரின் கண்ணதாயினு மதனிகழ்ச்சி யுயிருடம்பொடு கூடுதலானிகழ்வதாக லானும்அவ்வச்சார்பின் வண்ணமாதலானும் அந்நிகழ்ச்சி யுடம்பின் றிரிபெனப்பட்டது.

கவர்வு செற்றங் களிப்புக்கவற்சிக ளுள்ளத்திரிபெனப்படினும் பொறியு முடம்பு முள்ளத்தின் றிரிபேயாகலின் அவற்றுக்கண்ணு மத்திரிபுநான்கு மமைந்திருத்தல்வேண்டுமென்ப துய்த்துணரப்படும்.

தொகுத்துத் தேறுக – சுருக்கித் தெளிந்துணர்க.

இப்பாட்டுச் செய் யின்ன திரிபிற்றென்றது. கவர்வுமுதலியவே மூர்த்தனியுயிரியல்லவென்பது கண்டுகொள்க.

அ. தற்புக ழாமை தற்புனை யாமை
செத்தினு மின்னு செய்யா மையே
தண்மை நேர்மை சான்ற தூய்மை
தன்னு சிரியன் றகைமை போற்ற
றிட்ப முள்ளச் செறிவோ டைம்புல
வுவர்ப்புண் டாதன் முனைப்பின் றொழிதல்
பிறப்புப் பிணிமூப் பிறப்பொ டேனைத்
தாழ்துயர் குற்றந் தலைத்தலைக் காண்டல்
வாழ்மனை மனையாண் மக்கண் முதலிய
வீழ்வன வியைபு மேஎ வாமை
துய்ப்ப வேண்டுவ வேண்டா தொகினு
மொப்ப நிற்கு முள்ள முடைமை
யென்பால் வேற்றுமை யில்லா தொன்றிய
மன்பே ரன்பு வழாஅ லோம்பல்
வேறுவே றிடவயின் மேவல் பிறரொடு
கூடுத லார்வங் கொள்ளாத் தன்மை
தன்னிய லுணர்வு தணவாத் தன்மை
மெய்யுணர் வெழூஉ மெய்ந்நூற் பொருளை
யையுற வின்றி யாராய்ந் துணர்த
லென்றிவை முறையா னெண்ணித் தொகுத்த
வொன்பதும் பத்து முணர்வெனப் படுமே
யுணர்வா மிதனை யொழிந்த
துணரா மையென வுணரத் தகுமே. 496—500

தற்புகழாமை: ஒருவன் றன் ஞற்றலைப் பிறரறிக வென வெடுத்தோத நினையாமையும் பிறர் தன் ஞற்றலை யவர் தாமே யெடுத்தோதிய வழி யதற்குத்தான் மேவாமையுமாம்.

தற்புனையாமை: ஒருவன் றன்னைப் பிறர் நன்கு பேணுதற் பொருட் டாடையணிகலச் சிறப்புக்களானு மூர்திச்சிறப் பிருக்கைச் சிறப்புக்களானும் பலரைத் தனக்கு வழிபாடு செய்வித்துக்கோடன் முதலிய பிறவற்ருனுங் கோலஞ்செய்து கொள்ளநினையாமையும் பிறர் தாமே தன்னைக் கோலஞ்செய்யாநிற்புழி யதற்குத் தான் மேவாமையுமாம்.

செத்தினும்: வாளாற் போழினும். அங்ஙனந் தன்னைப் போழ்நர்க்கு மின்னுசெய்யாமையென்க. பிறரைக் காத்தற்பொருட் டவர்க்கின்னுசெய்வாரை யின்னுசெய்தடக்குதலென்பது தெற்றுத லெனப் பட் டின்னுசெய்த லன்ருய் வேருகும்.

தண்மை : ஒருவன் றனக்குப் பிற ரின்னுசெய்துழியும் இனிய செய்துழியுந் தன்னூழ்வினையென்றுந் தனக்கெவ்வாற்ருனுந் திரிபின்றென்றுந் தன்னேடியாதுந்தொடு மியைபின்றெனவு முணர்தலின் வாளா வமைந்திருக்குந்தன்மை.

நேர்மை : நினைவு சொற்செயல்கடம்முள் வேறுபடாது நேர்ந் திருக்குந்தன்மை.

தூய்மை : வாலாமை நீங்குதல். இது புனலானுந் தூயமண்ணனு முடம்பின்கணெச்சிலறத் துடைத்தல்.

தகைமை - பெருமை. போற்றல் - மறவாது நினைந்துவருதல். இதனனு மமைதியு மெய்யுணர்வு நிலைபெறுதல் வாய்ப்பதாம்.

திட்பம் : அஞ்சாமை.

செறிவு - அடக்கம். உள்ளச்செறிவாவது நினைப்பின்றியிருத்தல்.

உவர்ப்பு - வேண்டாமை.

முனைப்பு : யானெனதென்னும்பற்று.

தாழ்துயர் : தாழ்தற்கு வாயிலாகிய துன்பம். அவையாவன : விரும்பியன பெருமையானும் வேண்டாதன பெறுதலானு முள வாவன. அழுந்துந்துயருமாம். குற்றம் :

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிது."

(மணிமேகலை. பளிக்கறைபுக்ககாதை) எனவும்.

"குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு - மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்த ளீர்ங்கோதை யாள்."

நாலடியார். 46.) எனவும் பிறவாறு முணரப்படுவனவாம்.

தலைத்தலைக் காண்டல் - மேன்மேற் காணுதல்.

இவற்றை யெப்பொழுது முணர்ந்து வருதலானு மமைதியு மெய் யுணர்வு நிலைபெறுவனவாம்.

வீழ்வன - விரும்பப்படுவன.

வீழ்வனவற்றுக்கட் டொடர்பு பொருந்தாமை.

துய்ப்ப - நுகர்தற்கு. வேண்டுவவும் வேண்டாதனவும் வந்து கூடினும் விழைவு வெகுளியின்றி யிரண்டன்கண்ணு மொப்ப நிற்கு முள்ளமுடைமையாகிய நொதுமற்றன்மையென்க. ஆகாரவீற் றெதிர்மறைவினைமுற்று முற்ருயல்லது பெயராகாமையின் வேண்டா வென்பது வேண்டாதன வென்னும் அகரவீற்றுச் சொற்ருெக்கதாம்.

வேற்றுமை: யானீயென்னும்வேறுபாடு.

என்பா லென்றது நம்பிதன்னைச்சுட்டியவாறு.

மன்பேரன்பு - நிலைபெற்ற பெரிய காதல். காதலிக்கப்படுவாற் குங் காதலிப்பாற்கு மொருஞான்றுங் கேடின்மையா னிவ்விறைவன் வயிற்காதற்கு நிலைபேறு கொள்ளப்படும். இக்காத லெல்லாவுயிர் மாட்டு மெஞ்சாது செல்லுதலானு மிக்காதற்குப் புறமாய வுயி ரொன்று மின்மையானுந் தன்னையுடையாற் குற்றுழியெல்லா முதவு முறுதுணையாய் நல்வழியுய்த்தலானும் பெரிய காதலாமாறு முணரப் படும்.

வழாலோம்பல் - வழுவாமற் பாதுகாத்தல்.

வேறுவே றிடவயின் மேவல்: மெய்புணர்வு விழையும் புலவன் ஒருவயின்வதியிற் றன் பிறர்கட் பற்றுச்செய்தலும் பிறர் தன்கட் பற்றுச்செய்தலுந் தலைப்படும். அதனல் அமைதியு மெய் யுணர்வு மிடையறவு படுதல்கூடும். அதனை வேண்டாதவவன் மேன் மேல் வேறு வேறிடங்களில் விட்டுவிட்டுப்போய் வதிதலை மேற் கொளின் அஃதவ னமைதிக்கு மெய்யுணர்வுக்கும் பாதுகாவலாமா றுணர்க.

கூடுத லார்வங் கொள்ளாமை: ஒருவரோடாதல் பலரோடாதல் பிறரொடுகூடுதற்கண் விழைவுகொள்ளா தெஞ்ஞான்றுந் தனித் திருத்தற்கண்ணே விழைவு கோடலாம்.

தன்னிய லுணர்வு தணவாமை: புலவன் றன்னுள்ள மூடம்பு முதலியவற்றின் வேறாகிய தன்க ணமையு மியல்புகளையும் அங்ஙனம் பிற வுயிர்க்கணமையு மியல்புகளையு முணர்தற்கண் விட்டுநீங்கா தெப்பொழுது மிருந்து போதரல்

எழூஉம் - எழுப்பும்.

இங்ஙனந் தற்புகழாமை முதன் மெய்ந்நூற் பொருளாராய்ச்சி காறு மெடுத்தோதிய பத்தொன்பதற்குங் கிடக்கை முறையாமா றுய்த்துணர்ந்து கொள்க.

இவை பத்தொன்பது மமைதிக்கு மெய்யுணர்வுக்கு மின்றி யமையாத பாதுகாவலாய் மெய்யுணர்வின்பாற் படுமாகலின் மெய் யுணர்வென்னுந் தலைமைப் பெயரான் வழங்குதற் குரியவாயின.

இவை பத்தொன்பதும் பாதுகாவற் றுணைமட்டு மன்றி மெய் யுணர்வெழுதற் குறுந் தடைநீக்கு முகத்தா னதனை யுண்டாக்குஞ் சார்புமாகும்.

யாண்டு மாக்கத்துக் கழிவன்றி யழிவிற்காக்க மின்மை யொருதலையாகலிற் றடையழிந்தவழித் தடையின்மையிற் றடை நீக்குஞ் சார்பில்வழியு மெய்யுணர்வு கெடாது மன்னுவதாம்.

உணர்வென்னும் பொதுப்பெயர் சிறப்புப்பற்றி மெய்யுணர் வின் மேற்றாகும். எனவே யீண்டுணராமை மெய்யுணர்வில்லாமை யாயிற்று. பத்தொன்பது முணர்வு ஒழிந்தது உணராமை யென்ற தனை உற்றவன்கூறுமுதலிய நானன்கிய பதினறு மருந்தென்றது போலக் கொள்க. (முப்பால். பொருட்பால். மருந்து. ௯.)

௯. உணரற் பாலது முணரக் கூறுவ
னுணரற் பால துளதன் றிலதன்
றெதனை யுணரி னெஞ்சா திருத்திகொ
லதனை யிதுவென வறிக விதுதான்
முதலா தமைந்து முற்றி
நுதலா துயர்ந்த நுண்பெரும் பெயரே. 501

வினைப் பொருள்போல வுணர்விற்குப் புலனாகாமைபற்றி யுள்பொருளன்றெனப்படும். புலனாகாதாயினும் புலங்கொள்வதாய்த் தனக்குத் தான் பெறப்படுதலி னிலதன்றெனப்படும்.

எஞ்சாதிருத்திகொல் – சாவாதிருப்பையோ? என்ஞான்று மெஞ்சாத வப்பொரு டானெனத் தெருண்டுணர்தலின் எஞ்சாதிருப்பானாகும்.

பெரும்பெயர் வில்லிக்குச் சேய்த்தாகலின் அதுவெனவுந் தனக்கணித்தாய்த் தானாய்த் தன்னியல்பி னுகரப்படுவதாகலி னிதுவெனவுங் கூறியருளினான்.

முதலாது – தொடக்கமின்றி.

எல்லாப் பொருளிற்காட்டினு மோங்கி யாழ்ந் தகன்று நுணுகி யெல்லையாதலிற் பெரும்பெயர் முற்றியதெனப்பட்டது.

நுதலுதல் – கருதுதல். கருதலுற்றவழிக் கருத்துச் செல்லலாற்ருது கெடுதலானே நுதலாவா றுயர்ந்ததாகும். தன்மைப்பொருளன்றி முன்னிலைப்பொருளாகாமையா னஃதங்ஙனம் புலங்கொளலாற்ருது கெடுவதாகும். நுதலாது : எச்சத்திரிபு.

பெயர் – பொருள்.

௧0. ஞால முழுதுமோர் யாக்கை யாக
ஞால முழுதும் யானென வியங்கலின்
ஞால முழுது நன்கொருங் குணர்தலி
னுணர்வுஞ் செயலு மொருங்குட னின்மையின்
யாங்கணுங் கைகால் யாங்கணுந் தலைவா
யாங்கணுஞ் செவிமுகம் யாணர்ப்
பாங்குறக் கவைஇப் பரவுமா லதுவே. 502

ஒற்றுமைபற்றி யியங்காததன்னை யியங்குவனென்றவாறு. இயங்கலானும் உணர்தலானு மின்மையானும் பாங்குறுமென வுணர்க. நன்கு - கண்கூடாக.

உணர்வுஞ் செயலு மொருங்குடனில்லாமை யெல்லாவுணர்வு மெல்லாச்செயலு முடிந்ததனேடொக்குமென்பது தோன்ற வெல்லாவுணர்வுக்குஞ் செயற்கு முரிய வெல்லாவுயிர்களினுறுப்புக்களும் பெரும்பொருட்குக் கூறப்பட்டன வெனவுங் கருத்துணர்ந்துகொள்க.

யாணர் - அழகு. யாணர்ப்பாங்கு - அழகின்வகை. எனவே ஞாலத்தினெரோவொருகூறும் பெரும்பொருளி னெரோவொரழ கெனப்படும்.

கவைஇ: ஞாலத்தைச் சூழ்ந்துள்ளிட்டு.

பரவும் - நிறைந்திருக்கும்.

அது - அப்பெரும்பெயர்.

கக. எல்லாப் பொறிகளி னியல்பு மிலங்குவ
தெல்லாப் பொறியு மல்லாப் பொருளது
தோய்ந்தில தொன்றெடுந் தொன்றுதொட் டெல்லா
மேந்துவ தாவ திப்பெரும் பொருடான்
பண்பழிந் துள்ளது பண்பினை
யுண்பது தன்னே டென்பது தெளியே. 503

அவ்வியல்பாவன உணர்தலுஞ் செய்தலு நுகர்தலும் விழைதலு மாம்.

அல்லாப்பொருளென்றது பொறியி னியல்பெல்லா மிருப்பினும் பொறியன்றென்றவாறும். இதனற் பெரும்பொருடான் பொறிகளா னுணர்வதன்று பொறிகளையெல்லா முணர்விப்பதுஞ் செய்விப்பது நுகர்விப்பதுமாமென்பது கொள்ளப்படும். அது தா னுணராத தாயின் அவற்றை யுணர்விக்குமா றில்லையென்பதுணர்க. அல்லதூஉம் பொறி புலனை யுணரு முன்னரே யவை யிருசாரு முண்டாதற் குத் தான் பொருட்டாதலானு மவை பொருளாக வுண்டாகு முன்னர்த் தன்மையா யிருந்துழியு முணர்தலானும் பெரும்பொருள் பொறியின்றியே பொறியெல்லாவற்றினியல்பு மமைந்ததெனப்படும்.

பொருளது: அது வென்பதனை யெழுவாயாக்குக.

ஒன்றெடுந் தோய்ந்திலது. யாதொன்றனேடாயினுந் தோய்ந்த தாகுமாயின் எல்லைப்படுதன் மொய்த்திரளாதல் புடைபெயர்ச்சி யுடைத்தாத றிரிபுடைத்தாதலென் றிவ் வியல்புடையதாய்ச் செத் தையின் வேறன்றுமா றுணரப்படும். இதனற் கடவுளாயினும் மன் னுயிராயினு மப்பெரும்பொருளின் வேறெனக் கொள்ளப்படின் உணர்வுப்பிழம்பாகிய வதன துணர்விற்குப் புலனகுமெனப்பட் டுணர் வதனின் வேருகிய வுணரப்படுபொருளாய்த் திரிபுபொருளாகிய செத்தையாவான் செல்லுமா றுணர்க.

ஏந்துவது: தாங்குவது.

பண்பி யெல்லா மொய்த்திரளாய்த் திரிபுபொருளாமாகலிற் செம்மை முதலிய முப்பாற்பண்பும் பெரும்பொருட்காகாமை கொள் ளப்படும். இதனற்கடவுளு மன்னுயிருஞ் சார்பியலா னன்றித் தன் னியலாற் பண்பென்றுதல் பண்பியென்றுதல் கொள்ளக்கூடாமை யுணர்க.

முப்பாற்பண்பின்பாற்படுவ வெல்லாந் துப்புரவாதலானுந் துப்புரவு பலவாயினு மதனை நுகர்வதொன்றென்பதுபற்றிப் பண்பினை யுண்பதெனப்பட்டது. உண்டல் - நுகர்ந்தழித்தல்.

பெரும்பொரு டன்னிலைக்கண்ணே பண்புநுகர்ச்சியின்மையின் அது கடவுளு மன்னுயிருமாயநிலைக்கணுண்பதென்றல் வேண்டும். இதனானுங் கடவுளு மன்னுயிரும் பெரும்பொருளின் வேறன்மை பெறப்படும்.

அது பண்புநுகர்வுழித் தன்னையுந் தானுகர்வதாகலிற் றன்னொடு பண்பினை யுண்பதெனப்பட்டது. பண்புநுகர்ச்சியில்வழித்தன் னுகர்ச்சியுந் தன்னுகர்ச்சியில்வழிப்பண்புநுகர்ச்சியுமின்றியுட னிகழ்வனவாம்.

கஉ. அதுவே தானே யல்லவற் றெல்லாம்
பொதுவா யுள்ளும் புறம்பு மாவ
தியங்குவ நிற்ப யாவுந் தானே
தயங்கிய நுட்பத் தன்மை தன்னு
னல்லவை யெல்லா மறிவ தன்றி
யல்லவை யொன்றினு மறியப் படாத
துண்மை யொண்மை யுவகை
யண்மை சேய்மை யாகு மதுவே. 504

அது - அப்பெரும்பொருள். அல்லவற்றுக்க ணெல்லாமென்க.

வெளி எல்லாப்பொருளினுள்ளும் புறம்புங் காணப்படுதல் போலவுந்தன்கணியங்கும்வேறுபொருளை நோக்கியவழித் தான் வேறு தோன்றுமைபோலவும் பெரும்பொருளு முளதாகலின் உள்ளும் புறம்பு முள்ளதென்று மியங்குவ நிற்ப யாவுந் தானென்றுங் கூறப்பட்டவாறுணர்க.

தயங்கிய - விளங்கிய. அல்லவையெல்லாமதனிற் பருப்பமுடையவாகலி னவை யெல்லா மதனையறியப்படுவ வல்ல ததனை யறிய வல்லரவா யமைந்தன.

உண்மை: மூவிடத்தினு முப்பொழுதினு முள்ளவா றுளதாதல். ஒண்மை: மருணீங்கி விளங்கிய வுணர்வு. உவகை: அழியாப் பேரின்பம். அண்மை: யான் எனத்தன்னுகர்வு காட்சிக்குப் புலனுதல். சேய்மை: அவன் அவள் அதுவெனவும் நீ வெனவுந் தன் பொதுத் தன்மைநுகர்வுகாட்சிக்குப் புலனுதலுஞ்சார்பு நோக்கா வழித் தனக்கு வரம்பின்மையும் உணர்வு நிகழ்ச்சியின்மையுமாம்.

உண்மை முதலாயசொற்களாகுபெயராயன்றி யியற்பெயராகவே நின்று பெரும்பொருட்கமைந்தன. அதனு லவை பண்புப் பெயர்களின் வேறுய பெயரெனப்படும். உண்மையுடைய தெனக்கோடுமே லுடையது முடைமையுமாகிய முதலுஞ் சினையுமாய்ப் பெரும்பொருட்கேலாமை காண்க.

கங. தன்னிய லானுஞ் சார்பி னானும்
தன்னெழி பொருடொறு மன்னிநின் றொன்றி
யுயிர்தொறுந் தான்றனித் துளதன் றெனினு
முயிர்தொறுந் தான்றனித் துளதெனத்தோன்று
மாக்கிய வேனை யனைத்து
நோக்கிவைத் தேந்தி நுகர்வதூஉ மதுவே. 505

தன்னியல் - பொருட்டன்மை : சிறப்பியல்.

சார்பியல் : பொதுவியலெனப்படும். நிரனிறைப் பொருள்கோள் படவுரைக்க.

தன்னை யொழிந்த பொருடொறும். ஒன்றி - ஒன்றாய்நின்று.

பெரும்பொரு டன்னை நோக்குமிடத்துத் தானொன்றாயினுந் தன்னை யொழிந்த சார்புநோக்கியவழி அச்சார்புதொறுந் தான் வேறாய்த் தோன்றும். தனித்து : அவ்வுயிர்களின் வேறாகி.

ஆக்கிய - தன்னாலாக்கப்பட்ட

நோக்கி : சான்றளவாய். ஏந்திவைத்து - தாங்கிவைத்து.

ஏனையவற்றைப் பெரும்பொருடான் றாங்கிக்கொண்டுநிற்குஞ் செயலுடையதன் றெனினுமவைதாமே தம்மி னிற்றற்கு வாயிலாகிய தம் புடைபெயர்ச்சிக் கிடமாதல்பற்றி அவையிற்றைத் தாங்கிக் கொண்டு நிற்ப தெனப்படும்.

அதுவே யொன்றித் தோன்றும்; நுகர்வதூஉ மாமென முடிக்க. நுகர்வதாதல் : கடவுளு மன்னுயிருமாயமைதல்.

கச. எல்லொளிக் கெல்லா மெல்லொளி யதுவாங்
கல்லிருண் முழுதினு மப்பாற் பட்டன்
றுணர்வு மேனை யுணரற் பாலது
முணரற் பால துணரு முணர்விற்
புணரற் பாலது மாயது புகலி
னுள்ளகந் தோறு முண்ணின்
றுள்ளுவித் துள்ளுதொ றுள்ளுவ ததுவே 506

எல்லொளி : ஒருபொருட்பன்மொழி.

எல்லொளிக் கெல்லா மெல்லொளியாதலாவது அவ் வொளி யெல்லாந் தம்மிற் றாம் விளங்கிப் பிற பொருளும் விளக்குமாறு போலப் பெரும் பொருடானவ் வொளியெல்லாவற்றையும் விளக்கி அம்முறையானே தன்னை விளக்குவ தொன்றின்றித் தன்னிற் றான் விளங்கி நிற்றலாம்.

பெரும்பொருள் பிறவொளிகளை விளக்குதலாவது அவையிற் றைத்தானுணராவழி அவை யுளவெனப்படாமைபாம். அது தன் னிற் றான் விளங்குதலாவது பிறிதொன்றனை னுணரப்படாது தன்னாற்றானுணரப்படுதலாம்.

அல்லிருள் : மிக்கவிருள். அஃதல்லாதவிரு ளெனினுமாம். எனவே பெரும் பொருட்கேனை யெல்லொளியெல்லா மிருளின்பாற் படுவவாகும். பெரும் பொருளை யொழிந்த வெல்லாம் பெரும் பொருளை யொருவனேக்கிய வழிப் புலனுகாமை யானு மவற்றை நோக்கியவழி மெய்ப்பொருளாகிய பெரும் பொருள் புலனுகாமை யானு மவையிற்றுத் தொகை முழுது மிருளெனப் படுவதாயிற்று.

இருளின் அப்பாற்பட்டது பெரும்பொருளெனவே அப்பேரி ருள்ளவிடத்துப் பெரும்பொருளாகிய பேரொளி யில்லை யென்பதூ உம் பேரொளி யுள்ளவிடத்துப் பேரிருளில்லை யென்பதூஉ மவ்விரு பகையு மழிவின்றித் தத்த மெல்லைப்புறத் தெஞ்ஞான்று முளவென் பதூஉம் பேரிருளை நீங்கியவழிப் பேரொளியைச் சார்தலும் பேரொளியை நீங்கியவழிப் பேரிருளைச் சார்தலு மல்லதில்லை யென் பதூஉ மதனுற் பேரொளியைச் சார்ந்தவழி மீளாமையு மங்ஙனம் வீடுபெற்றவழியு மவன் றன்னைத் தா னுணர்த லொழியாமையு மென் றிவை கொள்ளப்படும்.

பேரொளிப் பெரும்பொருள் யாண்டு மெஞ்ஞான்று நீக்கமற நிறைந்து மன்னுவதாக வதனெல்லைப்புறத்துப் பேரிரு ணிற்றலாவது அப்பேரிருளிற்காட்டிற்கழிய நுண்ணிதாகிய பெரும்பொருணிலையோ டொத்தநிலையி னன்றி யந்நிலையின் மாருகிய பருமைநிலையி னிற்கும் பேரிருணிலையாற் பெரும்பொருளின் சால்புக் கிழுக்கின் ருதலானு மதனு லப் பெரும்பொருணிலை தன்னிலைக்குத் தடையாகாமையானு மப்பெரும் பொருட்குத் தானெதிர்மறையாகலின் உடன்பாடுள்வழி யெதிர்மறையு முடனிற்ற லின்றியமையாமையானு மப்பேரிருட னக்குக் கேடின்றித் தா னெஞ்ஞான்று முளதாதலாம். எனவே பேரிருளுந் தன்னிலைக்க ணுள்பொருளேயா மெனவு முற்றுப்பொரு ளேயா மெனவுந் துணியப்படும். அது பெரும்பொருளின்கண் இல் பொருட்போலியு மெச்சப்பொருட்போலியுமாகும். அங்ஙனமே பெரும்பொருடானுந் தன்னிலைக்கண் உள்பொருளு முற்றுப்பொரு ளுமாம். பேரிருளின்கண் இல்பொருட்போலியு மெச்சப்பொருட் போலியுமாகும். உடன்பாடு மெதிர்மறையுந் தம்மு ளொருநிகர்முற்று மொருநிகரெச்சமுமா யிருத்த லொருதலை யென்ப துணர்ந்து கொள்க.

பெரும்பொருள்தான் உணர்வுமட்டு மன்றி யுணர்தற் ருெழி லுடையது முணரப்படுபொருளு மன்ருயினுந் தன்க ணியங்கு மேனைப்பொருளின் ருெழிற்சார்புபற்றி நிலையாகிய தானு மியங்குவது போலு மாகலி னுணர்வ தெனவுந் தன்ன னுணரப்படுபொருளொடு தான் வேறுபடுதல்பற்றித் தனக்குத் தான் பெறப்படுதலி னுணரப் படுபொருளெனவுங் கொள்ளப்படும். இவ்வாறு கொள்ளாது பெரும்பொருள் உணர்தற் ருெழிலாகிய புடைபெயர்ச்சி யுடைத் தெனவுந் தா னுணரப்படுபொருளெனவுங் கொள்ளி னிழுக்காத லுய்த்துணர்ந்துகொள்க.

அப்பெரும்பொருள் தான் கடவுளாயநிலைக்கண் உள்ளுவிப்பது மன்னுயிராயநிலைக்கண் உள்ளுவதுமாமாறுணர்க. கடவுள் உள்ளுதலே அவன் மன்னுயிர்களை யுள்ளுவித்தல். அவன் உள்ளலுஞ் செய்தலுமொன்று.

கரு. உணர்வு மேனை யுணரற் பாலது
முணரச் செய்யோ டொருவா றுரைத்தன
னென்பாற் காதல னிஃதுணர்ந்
தின்பால் யானு மியல்பெய் துவனே 507

உணர - உணர்தற்பொருட்டு. உணருமாறெனினுமாம்.

செய்யோ டுணர வொருவா றுரைத்தேனென்க.

ஒருவா றுரைத்தனனென்பது தொகுத்துரைத்தே னென்றவாறு.

இன்பால் - இன்பத்தால்.

இன்பத்தாற் கடவுணிலையெய்துவா னெனவே கடவுட்குரிய வேனை முத்தொழிலுடைமை முதலாய சிறப்பிய லெய்தா னென்பது பெறப்படும். உண்மைத்தன்மையும் உணர்வுத்தன்மையு மின்பத்தின் வேறல்லவா மென்பதுணர்க.

கசு. முதலியு மேனை மூதலுந் தாமே
முதலுத லில்லா முதிய வென்க
பப்பிய திரிபும் பண்புஞ்
செப்பிய மூதலிற் றெற்றென் றவ்வே. 508

மூதலு மேனை முதலியு மெனற்பாலவற்றைச் செய்யுணோக்கி மாறி வைத்தாம்.

முதலுதல்-தொடங்குதல்: ஆவது உண்டாதல். முதிய-பழையன. எனவேயழிவில்லவுமாம்.

மூதலு முதலியு மெவ்வாற்றானு மாக்கவும் மழிக்கவும்படா தாதலு மழிதலு மின்றி மன்னு மியற்கைப் பொருளென்பது கூறப்பட்டது.

பப்பிய - பரந்த.

தெற்றென்ற - உண்டாயின. உண்டாதலாவது மறைந்து தோன்றுதிருந்தன தடைநீங்கியவழி வெளிப்பட்டுத் தெளியநிற்றலே யாமென்பது தோன்ற உண்டாயினவற்றைத் தெற்றென்றன வெனக் கூறியவா றுணர்க.

திரிபும் பண்பு மூதலிற் றெற்றென்ற வெனவே முதலிக் கிலவாயின.

திரிபாவது புலமுதலாகிய திரிபுபொருளாதலாம். பண்பு: செம்மை முதலிய மூன்றன்பாற்படுவன.

கஎ. ஆக்கந் துணைமுதல் வினைமுத லாதற்
கேற்கும் பொருண்மை மூத லென்க
துன்ப வின்பந் துய்ப்ப
தின்ப முதலி யென்பது கொளலே. 502

ஆக்கம் - ஆதலுடையபொருள். துணைமுதல் - அவையாதற்கு வேண்டப்படுஞ் சார்பு பொருள். வினைமுதல் - அவையாக்குஞ் செயலுடையது.

இம்மூன்றுமாவது மூத லென்றவாறு. எனவே யுயிரென்னு முதலி செய்பவ னல்ல னென்பதூஉ மூதலின் செயலை முதலிமே லேற்றிச் செய்பவனென வழங்குதலுளதாயிற்றென்பதூஉ முதலி கரியளவாய் மூதலின்செயற்குத் தானின்றியமையாதவனென்பதூஉந் தனக்கொருவாற்றானுஞ் செயலில்லையென்பதூஉமென் றிவை தாமே போதரும்.

துன்பவின்பந் துய்ப்பதாயினு முதலி தான்றுய்க்கு மின்பத்தின் வேறாகிய பேரின்ப மாதலின் இன்ப முதலி யெனப்பட்டது.

முதலி உயர்திணையாகவு மஃறிணையாகவும் வழங்கத்தகுங்கருத் தாற் றுய்ப்பதெனப்பட்டது.

கொளல்: வியங்கோள்.

இப்பாட்டான் மூதன் முதலி வேற்றுமை தெரித்துணர்த்தப் பட்டது.

கஅ. மூதலி னின்று மூதலி னெழூஉ
மூவயிற் பண்பு முதலி நுகரு
முயர்பிழி புறூஉம் பிறவிக டோறு
மாணுப் பிறவி வாயி
லாணுப் பண்பிற் பற்றெனு மதுவே. 503

முதலி மூதற்க ணின்று அதனின்று தோன்று மூவகைப்பண் பினையு நுகருமென்க.

மாணுப்பிறவி - திருந்தாதபிறப்பு; விதப்புக்கிளவி செஞ்ஞாயிறு போன்றது.

பிறவிகடோறு மவ்வப்பிறப்புக்கட்கு மடுத்தடுத்த பிறப்புக் கட்கும் வாயிலாவது அமையாது மேன்மே லுளதாகும் பண்பிற்பற் றெனப்படுமதுவாமென்க. எனவே அப்பற்றுவிடவே பிறவியில்லை யாகு மென்பதூஉம் பிறவாமையே பெரும்பே றென்பதூஉம் பெறப்படும்.

கக. யாக்கை யிதனுட் சேக்கு முதலி
சேக்கை யிதனோடு சேரா மூப்ப
னண்ணணிக் காண்வி யவ்வுடன் படுவி
காந்தி யைம்புலன் கடந்தோ
யேந்தி மாந்தி யிறைவ னவனே. 504

சேக்கும் - தங்கும். சேக்கை - தங்குமிடம்.

மூப்பன் : யாக்கையின் வேறுபட் டுயர்ந்தோன்.

அண்ணணி - அணியணி ; மிக்கவண்மையென்பதாம் ; அண்மை தொறு மெனினுமாம்.

அண்ணணிக் காண்வி : இவ் யாக்கையை மிக்கவண்மைக்க ணிருந்து காண்பவன். இதுவாய்நின் றிதனை யுணர்பவ னென்பதாம்.

அவ்வுடன்படுவி : அவ்யாக்கையின் மேவுதலை யுடன்பட்டிருப் போன். பெற்றபெற்ற யாக்கை யெவ்வா றிழிந்தன வாயினும் விட்டொழியவுடன்படாமையா னவ்வவ் யாக்கையை யுடன்பட்டி ருத்த லினிதுணரப்படும் ; தனியுயிர்க்குச் செயலின்றாகலின்.

காந்தி - வெகுண்டு. ஐம்புலனை வெகுண்டு வென்றோ யென வில்லியை நம்பி விளித்தான்.

ஏந்தி - தாங்குவோன் : அம்முதலி இவ்யாக்கையைத் தாங்கி நிற்போ னென்றவாறு.

மாந்தி - நுகர்வோன். இவ்யாக்கைக்க ணைம்புலன்களை நுகர்வோ னென்க.

இறைவன் - கடவுள்.

அவன் ஏந்தியு மாந்தியு மிறைவனுமாம்.

முதலி மூப்பனு மண்ணணிக்காண்வியு மவ்வுடன்படுவியுமாம். நீக்கமற நிறைவுடைமையின் அவ்வாறும். கடவுளு மன்னுயிரும் வேறுபடக் கூறிற்றிலன்.

உ0. மூதன் முதலி மூதற் பண்போ
டிதென் றுணர்வான் யாவன் கொல்லோ
வவற்கின் றினிமே லவன்றா
னெவற்றின் மேவி யியலினும் பிறப்பே. 505

ஈதென்னு மொருமை தனித்தனிச் சென்றியையுமாதலின் வழாமை யுணர்க.

எவற்றின் மேவி யியலினும் - எவ்வினைக்கட் பொருந்தி யொழு கினும்.

அவன்றா னெவற்றின் மேவி யியலினு மினிமே லவற்குப் பிறப் பின்றெனக் கூட்டிமுடிக்க.

அவன் மூதன் முதலி வேற்றுமை யுணர்வோ டொழுகலிற் பிறப்பின்றா மென்பதுணர்க.

உக. நினைப்பி னொருசார் நினைப்பு நீத்த
புணர்ப்பி னொருசார் புலமையி னொருசார்
வினைவயிற் புணர்ப்பின் வேறொரு சாரார்
தன்கட் டன்னைத் தன்னாற்
புன்கட் பிறப்பிறப் புலங்கொள் ளுபவே. 506

நினைப்பு - ஒருவன் ரு னிவ்வா றிருக்குமெனத் தன்னுளெண்ணி நோக்கல் : அளவைகளானும் பொருந்துமாற்றானு முய்த்துணர்தல்.

நினைப்பு நீத்த புணர்ப்பு : நினைப்பெல்லாம் விட்டு வினைசெய்யா தடங்கிய புலவயிற்புணர்ப்பு.

புலமை : ஈண்டு மூதன் முதலி வேற்றுமையுணர்வு.

புன்கண் - துன்பம். இற - கெட. புலங்கொள்ளுப - அறிவார்.

சிலர் நினைப்பினானுஞ் சிலர் நினைப்புநீத்த புணர்ப்பினானுஞ் சிலர் புலமையினானுஞ் சிலர் வினவயிற்புணர்ப்பினானுந் தன்கட் டன்னைத் தன்னாற் புலங்கொள்ளுப வென்றவாறு.

உஉ. தாமே யறிகிலா வேனோர் தாஅந்
தாமே யறியுஞ் சான்றோர் சாற்றுங்
கிளவி யேற்ற கேள்வி மாட்டு
நினைவு பயில்ப வினைய வாற்றாற்
கவரா தியலக் கடவருந்
தவறார் கடப்ப சாக்காட் டினையே 507

நினைவு பயிலுதல் : பல்காலு மக்கிளவிப்பொருளைப் பல மேற்கோளோடு மாராய்ந்து முடிவு கோடல்.

இனையவாற்றான் : இவ் விருபாட்டானுங் கூறிய விவ் வைந்து வழியானும்.

கவராது : ஐயுறாது துணிந்து.

இயல : தன்னிய லுணர்வு கொண்டொழுக.

தவறார் : முற்றெச்சம். தவறாது சாக்காட்டினைக் கடப்ப வென்பது.

கடவரும் : உம்மை : இழிவு சிறப்பின்க ணின்ற வெச்சவும்மை.

கடவுளுணர்வினின்று பெறும் பெரும்பொருளுணர்வாற் றன்னைத் தன்கட் டா னுணர்தலேயுயர்வு சிறப்பாதலி னவை யிழிவு சிறப்பாயின.

உங. இயங்கு திணையொடு நிலைத்திணை யென்றா
வயங்கு முயிருள் வரும்பிறப் பெல்லாஞ்
செய்செய் யறிஞன் சேர்க்கையிற்
கைசெய் தனவெனக் கருதினை கொள்ளே. 508

சேர்க்கையாற் பிறப்பெல்லா முண்டாக்கப்பட்டன வெனக் கருதிக் கொள் ளென்க.

அச் சேர்க்கையில்வழிப் பிறப்பில்லை யென்பது கருத்து.

அச் சேர்க்கையில்லாமையாவது செய்செய்யறிஞன் சிறப்பிய லுணர்வேயாம். சிறப்பியல் - வேறுபாட்டியல்.

செய்செய்யறிஞன் வேற்றுமையுணர்வோடு மூதன்முதலிவேற்றுமையுணர்விடை முறையே கடவுளையுயிராகக் கோடலு முயிரைக் கடவுளாகக்கோடலும்வேற்றுமையாமா றுணரப்படும். இவ்விருசாருணர்வினின்றுங் கடவுளுணர்வுங் கடவுட்காதலுணர்வும் பெரும் பொருளுணர்வும் வேறெனக்கொள்க. இவ் வெல்லாவுணர்வுக்கும் பிறப்பில்லாமை யொக்கும்; வீடு பேற்றியலொவ்வா.

உ௪. ஏற்றிழி வின்றி யெவற்றினு மொப்பத்
தோற்றர வுடைய தொன்மைசா லிறைவ
னுங்கவ னிற்பினு மவையழி வுறுதோ
ருங்கவ னழிவு மகற்சியு மில்லான்
காண்ட லரியவக் கடவுளைக்
காண்ட லதுவே காட்சி யென்மே. 509

ஏற்றிழிவு - உயர்வு தாழ்வு. தோற்றரவு - தோன்றுதல். என்றது பிறத்தலன்று; காணப்படுதல்.

ஆங்கு - அப் பொருளெல்லாவற்றுக்கண்ணும்.

அப்பொருட்க ணிற்பினு மவையழியுந்தோறு மவனுங்கழிதலு மில்லை; அவ்விடத்தை விட்டு நீங்குதலு மில்லை யென்க.

இங்ஙன மவற்றைக் காணுங்கா லவனைக் காண்டலே காட்சி யென்றுணர்க. அங்ஙனமன்றி யவற்றையே காண்டல் காணமையாகு மென்றான். என்: ஏவல். ஏகாரவீற்றசை மகரவெழுத்துப் பெற்று நின்றது.

காணு மழிபொருளிடைவைத் துணரப்படுதலிற் பெரும்பொருளென்றது கடவு ளென்றான்.

இவ்வுணர்வுதா னிலைநில்லாமை வேற்றுமை யுணர்வெனப்படும்.

உரு. எங்கணு மொப்பத் தங்கிய விறையை
யெங்கணு மொப்ப வெண்ணி நோக்குவோ
னவன்றற் கொல்லி யாகா னென்னெனிற்
றன்னிலை யென்னுஞ் சால வுயரிய
நன்னிலை நின்று நாளு
மன்னினன் சாவான் வாழ்தலி னனே. 510

இறையை யெங்கணு மொப்ப வெண்ணி நோக்குவோன் றன்கணு மங்ஙன நோக்கவே தான் றன்னை நோக்கித் தன்னிய லுணர்ந்து தன்னிலைக்கணிற்குங்காற் றனக்குப் பிறப்பிறப்புப், போக்குவரவு, திரிபுகேடு முதலாயின வில்லாமை யுணர்தலின் நாளு மன்னினன் சாவான் வாழ்த லெய்தினனவன். எனவே யங்ஙன மல்லாதான் றற் கொல்லியாயினன்.

மன்னினன் சாவானென்பன முற்றெச்சம்.

வாழ்தலின் அவன் றற் கொல்லியாகானென்பது தென முடிக்க.

உசு. என்னறச் செய்கை தன்னியல் பானே
யென்னவு முறையின் யாண்டு மென்று
மூதல் செய்து போதல் செல்லும்
யான்வினை செய்தல் யாங்கன மெனுஅத்
தான்வினை செய்யாத் தன்னை நோக்கல்
வாய்மை நோக்கு மற்றை
நோய்மை நோக்கு நோக்கா மையே. 511

செய்கையென்னவும் - செய்கையெல்லாம்.

போதல் செல்லும் - நடக்கும்; ஒரு சொல்.

மூதல் யாண்டு மென்றும் யாதானு முறைக்கட் டன்னியல் பானே செய்கை யென்னவுஞ் செய்துபோதல் செல்லு மென வியைக்க.

யாங்கனமென்னும் வினு இன்மைக்குறிப்பிற்று.

வினைசெய்யாத தான் வினைசெய்யாமையைக் காண்டல் வாய்மைக்காட்சியாயிற்று. மற்றைப் பொய்ம்மைக்காட்சி துன்பம் விளைத்தலி னேய்மைக்காட்சியாகும். அதனல் அக் காட்சிகாணுமை யாகுமென்றது கண்ணில்லாக் குருடென்றவாறு.

இது மூதன் முதலி வேற்றுமையுணர்வான் மெய்ம்மை தலைப்படு மாறு கூறிற்று.

உஎ. புலப்படுந் தனித்தனிப் பொருள்பல வற்றினு
நிலைப்படு மொன்று தொடர்ப்பட நிற்ற
லிடையீ டின்றி யென்றெவன் காணு
மன்றவ னதுமுத லகன்பெரி
தொன்றனை யெய்தியவ் வொன்றுதா னெனுமே.

இங்ஙனம் பலபொரு டொடர்ந்து நிற்றற் கொருபொருள் பற்றுக்கோடாகாவழி அது செல்லாதென வுய்த்துணர்தலானுங் கடவுட்காட்சியுணர்வு மதன்வழிப் பெரும்பொருட்காட்சியுணர்வு மதன்வழித் தற்காட்சியுணர்வுந் தலைப்படுதல் கூடுமென்ருன்.

அகன்பெரிது - விரிந்த பெரும்பொருள்.

பெரும்பொருளுணர் விருவகைப்படும். பிறிதுகாட்சியுணர்வு தற்காட்சியுணர்வென. அவை முறையே அதனைத் தன்னிற் பிறிதாக வைத்துக் காண்டலும் அப்பிறிதாயதனைத் தானுகக் காண்டலுமாம்.

அகன் பெரிதொன்றனையெய்துதலாவது தற்பிறிதுகாட்சி. அவ் வொன்று தா னென்றல் பிறிதுதற்காட்சி. தன்னிற் பெரியதொன்று மின்றிப் பிறவெல்லாந் தொக்குக்காலதரொன் றூழ்க் கதிரிடைமிதக்கு நுண்மொய்த்துணையாக வோங்கியாழ்ந்தகன் றுநுணுகியெல்லையற் றுப் பெரியதாயமைதலிற் பெரும்பொருளென வாளாவிதவாது கூறின் மெய்ப்பொருளாகிய மீயுயிரொன்றெனவே பொருள்படுதன் மரபாம். காலதர் - பல்கணி.

உஅ. இன்முத லானு மில்பண் பானு
மிவ்வுய ரொருதா னில்கேடாள
னிட்டிய வுடலகத் திருப்பினுந்
தொட்டிலன் செய்யலன் றூய னிவனே. 513

இன்முதல் - முதலில்லாமை. இல்பண்பு - பண்பில்லாமை. இல்கேடாளன் - கேடில்லாமை யுடையவன். ஒருதான் - தானொருவனே யாயுள்ளான்.

தொடக்கமில்லாமையானும் பண்பில்லாமையானுங் கேடில்லாதவனென்க.

அவன்றானதலி னம்பி யிவ் வுய ரொருதா னெனச் சுட்டினன். ஒருவன் றன்னை யிவனெனச் சுட்டுதலும் வழக்காறு.

இட்டிய வுடல் - சிறியவுடல். உடலு ளிருப்பினு மதனைத் தொட்டிலன்; அதனையொன்றுஞ் செய்கின்றிலன்; அது தானே செய்கின்றது. அதனு லிவன் றூய னென்க. தூய்மை - தொடுதலுந் திரிதலுமில்லாமை. இவனென்றது உந்தற்சுட்டு.

இதனு லவ னுடலு ளிருப்பதுபோலவு மதனையொட்டியிருத்தல் போலவு மதனுல் வினைசெய்தல்போலவுந் தோன்றியது மருட்காட்சியாகும்.

உகூ. எங்கணு மான்ற விவ்வெளி நுண்மையி
னெங்கனந் தொடாஅ திருக்கவற் றென்கு
மங்கனந் தானு மகலா தெங்கணுந்
தங்குமஃ திவ்வுடல் சார்ந்துள
தென்கினும் வறிது மேய்ந்தன் றிலதே. 514

ஆன்ற - நிறைந்த. நுண்மையின்: தன் னுட்பமாதற் றன்மையான். எங்கனம் - எவ்வாறு.

தொடால் - தொடாமல். இருக்க வற்று - இருக்க வல்லது. என்கும் - என்றுகூறுவோம்.

தானு மென்றது பெரும்பொருளை.

வெளி மனைகுடமுதலியவற்று ளிருப்பினு மவற்றோ டொட்டாதியாங்கு மொன்று யிருக்குமாறுபோலப் பெரும்பொருளும் பல்வேறுடலு ளிருப்பினு மவற்றோ டொட்டின்றி யாங்கு மொன்றாய் நிலவு மென வொப்புமையை விரித்துரைத்துக்கொள்க.

என்கினும் - என்றுகொள்ளினும்.

வறிதும் - சிறிதும்.

ஏய்ந்தன்று - பொருந்தியது. அவ்வுடலோடு பொருந்தியதில தென்க.

இதனுற் பெரும்பொருள் வினைசெய்யு முடம்பினு ளிருந்தும் வினைசெய்யாதிருக்கு மென்றதனை யெடுத்துக்காட்டோடு வைத்து விளக்கியவா றுயிற்று.

௫0. ஞாயி றென்றே நாளும் யாங்கு
ஞால முற்று நன்கன மிளிர்க்கு
மைய செய் யறிஞனு மாங்கத்
தெய்யசெய் யெல்லாந் தெளிய நிற்குமே 515

யாங்கு - எவ்வாறு. மிளிர்க்கும் - விளக்கும். ஆங்க - அவ்வாறு. ஐய : விளி. தெய்ய : அசை.

தெளிய - நன்குபுலனாக.

தெளிய நிற்றல் - தெளிவித்தல்.

இதனாற் செய்யெல்லாவற்றுக்குஞ் செய்யறிஞ னொருவனை மாற்றை யெடுத்துக்காட்டின் வைத்து விளக்கியவாறும்.

௫க. செய்செய் யறிஞன் சிறப்பிய லிவ்வென
மெய்ம்மை யுணர்வெனும் விழியி னானே
காணுங் காட்சி கன்றிய மேலோ
னேணின் றாக லெதிருந் தோற்றமு
மூதலு மொருங்கு முன்னிலை
யேதில வாக வெழில்வீ டுறுமே. 516

இவ்வென - இவையென.

கன்றிய - பயின்றடிப்பட்ட

ஏண் - நிலைபேறு. எதிரும் - எதிர்ப்படும்.

தோற்றமு மத்தோற்றங்கட் கெல்லா முதலாகிய மூதலு மென முன்னிலைப்பொருளெல்லாம்.

ஏதிலவாக - இயைபுடையன வல்லவா யொழிய

எழில் - உயர்வு ; அழகுமாம்.

உயர்வாகிய வீடெனுந் தனிமையைப் பொருந்துமென்க.

மேலோ னுறு மென வியையும்

இது செய் செய்யறிஞன சிறப்பியலுணர்வுடைமைக்குப் பய னுணர்த்திற்று.

நம்பியகவல்.
அணித்தரவு.
பெரும்பற்றப் புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.
பதின்மூன்றாவது பால்
செய்செய்யறிஞன் சிறப்பியற்புணர்ப்பு.
முற்றும்.

ஒழுதுமெய்

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினான்காவது பால்

முக்கூற்றுப் பண்பு

க. யாதனை யுணர்தலின் யாவயின் முனிவரு
மேதமி லாக்க மிவணின் றெய்தினர்
தலைமைசா லத்தகு தாவில்
புலமையுட் புலமை புகலுவென் மீண்டே 51

யாவயின் முனிவரும் - எவ்வகை முனிவர்களும்.

ஏதம் - துன்பம்; குற்றமுமாம்.

ஏதமி லாக்கமாவது ஒருவன் றான் பெரும்பொருளாதலாகிய வீடுபேற்றுணர்வு.

இவணின்று-இவ் வையகத்தினின்று; இவ்வுடற்கணின்றெனினு மாம்.

இவணின்றெய்துதலாவது ஈண்டிவ்வுடற்க ணிருந்தாங்கிருப்பவே மெய்யுணர்வளவா னொருவன் றான் பெரும்பொருளாதலைப் பெறுதலெனப்படுந் தற்பெறுதலாம்.

அத்தகு புலமை - அங்ஙன மதனை யவரெய்துதற்கு வாயிலாகத் தகுந்த வவ்வுணர்வு.

ஏனைப் புலமையெல்லா மப்புலமையாற் றாமே யெய்தக்கடவனவு மப்புலமையின்பொருட்டமைவனவு மப்புலமை முன்ன ரவையெல்லாம் புலமையல்லவுமா யமைதலான், அது தலைமைசால்புலமையுட் புலமையெனக் கூறப்பட்டது.

தாவில் புலமை - துன்பமின்மைக்கு வாயிலாகிய புலமை. கேடின்மைக்கு வாயிலாய புலமை யெனினுமாம்.

இப்புலமை முன்னுங் கூறுதலின் மீண்டு புகலுவெ னென்றான்; பொருண்முன்னர்க் கூறப்பட்டதேயாயினு மதனைக் கூறுமாறு முன்னர்க்கூறியவாற்றின் வேறுபடுதலிற் கூறிற்றுக் கூற்றன்றாமாறுணர்க. உளங்கொளச் சொல்லுமாறு பொருளொன்றன் கண்ணே பலவாறுபடும்.

உ. இப்பெரும் புலமை யேய்தலி னென்னே
டொப்புமை யுற்றோ ரொழிந்தோர் தோன்றுழி
யொருங்குடன் றோன்றல ரூழ்யி
னொருங்குடன் றாமு மொடுங்கல ராபவே. டுகஅ.

ஏய்தல் - பொருந்துதல்.

அவர் கடவுளோ டொப்புமை யுறுதலாவது அவருங் கடவுள் போலத் தம்மைத் தாம் பெரும்பொருளெனத் துணிந்திருத்தல். அவர் மீளாஞாலமாகிய கடவுட்குரிய மீமிசைஞாலமெய்தி யாண்டுத் தம்மோரன்ன பெரும்பொருட்புலவர் குழுவுட்பட் டெல்லாரோடு மொருங்கிருந்து தன்னைத்தா நுகராநின்று வினையின்றி வாழ்தலி னூழித்தொடக்கத்து முடிவினு மேனோரோ டொப்பத் தோற்ற வொடுக்க மெய்தார். இவர் தாம் பெரும்பொருளாயினராயினுந் தம்மோரன்னோர்மாட்டைப்பற் றொழியாமையி னதன்பொருட்டா கும் வினைமரூஉத் துடைக்க வெஞ்சிற்றாக அது துடைத்தற் குரிய புலவர்ஞால மெய்துத வியல்பாயிற்று. புலவர்ஞாலமெனினுங் கடவுண்ஞாலமெனினு மீமிசைஞாலமெனினும் தூமருண்ஞால மெனினும் வீடுபேற்றுஞாலமெனினும் ஏனைவீடெனினு மொன்று.

ஙு. தான்பெருஞ் சார்பின் யான்பிறந் தனனே
யான்பிறந் ததனை யான்புணர்ந் தயர்ந்தே
னுங்கது சூல்கொள லாயிற் றதுதான்
மேன்முறைத் தொட்டு மேன்மேல் வரூஉ
மீனுயிர்த் தோற்ற மெனைத்துஞ்
சூன்முதிர்ந் தீனத் தோன்றுந வாமே. ருகசு.

பெருஞ்சார்பிற்குத் தானென்ப தொருபெயர். அஃதெப் பொழுதும் யானீயவனென்னு மூன்றிடத்திற்கும் பொதுவாதலி னென்பது. தான்பெருஞ்சார்பு: ஒருபொருட் பல்பெயர்.

இன்: ஒப்பக்கூறலாற் றுணைப்பொருட்டு மிடப்பொருட்டுமாம். எனவே பெருஞ்சார்பின்கண்ணே அதனுனே அதனினின்றும் அதுவே பிறந்தபிறப்புக் கடவுளெனப்படுமெனக் கொள்க.

பெருஞ்சார்பு - பெரும்பொருள்.

கடவுடானே பெரும்பொருளா யமையினுமூதற்சார்புநோக்கிக் கடவுளெனவு மச்சார்புநோக்காது தனிமைநோக்கிப் பெரும்பொரு ளெனவுங் கொள்ளும் வேறுபாடுபற்றித் தன்னைப் பெரும்பொருளின் வேறாக வழங்கிக்கொண்டான்.

யான்பிறந்ததென்றது பெரும்பொருடான் கடவுளாதற்கு முன்னைய தன்னியல்பாகிய தான்: பெரும்பொருள்.

அதனைக் கடவுள் புணர்ந்தயர்தலாவது அவன் றன்னைத் தா னுகர்ந்து தன்னிலைக்கணின் றேனை புணர்வொன்று மின்றி யிருத்தல்.

அதன்பிற் பெரும்பொருடான் மன்னுயிராயமையுமாற்றினை அதுசூல்கொளலென்றான்.

கடவுடன்னைத் தானுகர்ந்தவழித் தோன்றிய பெரும்பொருட் சூற்பொறையைத் தான் வைத்ததாகப் புனைந்துரைத்தான்.

இதனான் மன்னுயிரெல்லாங் கடவுள்வழித் தோன்றியவாதலிற் கடவுள்வழியே தம்மைத்தாமுணர்வனவுங் கடவுள்வழியே வீடெய்து வனவு மாத லல்லது கடவுள்வழியானன்றி யுணர்தலும் வீடெய்தலு முளவாகாமை யொருதலை யென்பது பெறப்படுமாறுணர்க.

மேன்முறை - முற்காலம் : "மேன்முறைக்கண்ணே, கடியென்றூர் கற்றறிந்தாரென்பது நாலடியார். (செய்யுள். 56.)

ஈனுயிர் - இவ்வுயிர். "ஈனுலகத் தாயினிசைபெறு" மென்பது பழமொழிநானூறு.

சூன் முதிர்த லென்றமையானே யுயிருடல்கொண்டு வெளிப்படு காறும்வர முறையான் அமைந்தாகுமாறெல்லா முய்த்துணரக் கிடக்கும்.

ச. எவ்வுயிர்த் தோற்றமு மீனுயர் யாயே
யவ்வெழிற் பெரும்பொரு ளாவயின் வித்திடு
தந்தை யரனெனத் தகைசான்
மைந்த வெம்பிநீ வாய்ப்ப வுணரே. 520

ஈனு முயர்ந்த யாயென்க. யாய் - எமக்குத்தாய். யாயே பெரும்பொருளென முடிக்க ஆவயின் - அவ்யாய்வயின்.

வித்து - உயிர் தோன்றுதற் குரிய விதை. இடு - வைத்த.

தகைசால் - பெருமையமைந்த.

இக் கூறிய முறையான் வில்லி நம்பிக்கு மகன்முறையுந் தம்பி முறையு மாமாறுணர்க.

வாய்ப்ப - உண்மையாக.

இதனான் மேற்கூறிய விலங்குமாவின் வழக்காகிய புனைந்துரையை விளக்கிக் கூறினன்.

இவ்வாறு "எம்பெருமா னிமவான்மகட்குத் தன்னுடைக் கேள்வன், மகன்றமப்பன்றமையனெம்மையன் (திருவாசகம்-திருப்பொற் சுண்ணம். 13) எனவாதவூரடிகள் கூறுமாறுமுணர்க.

ரு பண்பெனக் கிளக்கும் பலவுந் தொக்க
பண்பெனப் படுவன பனுவ னவிலு
மொண்மை புன்மை மைம்மை யென்னு
மும்மை யென்ப முப்பாற் பண்பு
மூதலிற் றோன்றி முதிய
வீதலி னுயிரையிம் மெய்யுள் வீக்குமே. 521

பனுவல் நவிலும் - நூல்கள் பல்காற் கூறும்.

ஒண்மையெனினு முண்மையெனினுஞ் செம்மையெனினு மொன்று.

ஒண்மை முதலாய மூன்றுந் தனித்தனித் தொகைப்பெயர். அவை முறையே தலைநிலைப்பண்பு, இடைநிலைப்பண்பு, கடைநிலைப் பண்பெனக் கொள்ளப்படும்.

ஒண்மை : விளக்கமாதல். புன்மை : அத்துணைவிளக்கமாகா திடைநிகராதல். மைம்மை : விளங்காமை.

பண்பென்பது பொருள்புலப்படுமாறு. பண்பின்கூட்டமே பொருளெனப்படுவது. பொருளாவதுபண்பிற்குப்பற்றுக்கோடாவ தென்பாருமுளர். அது பொருந்தாமையுய்த் துணர்ந்துகொள்க.

முப்பாற்பண்புந் தொக்கதொகுதியொருமையே முதலென்னும் பொருளாவது. அவ்வாறன்றி முப்பாற்பண்புமுதலின்றிர்பென் பாருமுளர். ஒன்றன்றிரிபொன்ருகாது பலவாதற் கென்னையோ பொருட்டென வினுபினர்க்கு விடைகூறலாகாமையி னங்ஙனங் கூறுதல் பொருந்தாமை காணப்படும்.

வீதலிலுயிர் - அழிதலில்லாதவுயிர். வீக்குதல் - இறுகக்கட்டுதல்.

உயிரை யெவ்வாற்ருனு மழிக்கலாகாமையானே யவைவீக்கு வன வாயின; அத்துணைப்பொல்லாதனவென்க.

முதலினற் ருெடலாகாத நுண்ணியதும் யாண்டு நிறைதலின் வளையச் சூழலாகாததாய்ச் செயலில்லதாவதுங் கூட்டுப்பொரு ளன்றித் தனிப்பொருளாவதுமாய வுயிரைப் பண்புகள் பிணித்த லாவது தனக்குத் தான் வேறன்மையானு மதனற் றனக்குத் தா னுணரப்படுவதும் படாதது மன்ருதலானுந் தன்னைத் தானுணராது பிறிதினை 'ய நோக்கு மியல்பாய வுயிரின் முன்னிலையாற் பண்புகடா முளவாதலும் புதியனவாதலுமாம். சால்புடையவுயிரின் முன்னிலை யாவது உயிரினுட்பநிலையளவின் மாருய பருப்பநிலையளவினதாத லாம். எப்பொருளாயினு மொரோவொருபொருளு மொரோவொரு நிலையளவி னிருத்தலன்றி யாதானு மொருபொருடானே யொருகாற் பலநிலையளவாதல் கூடாமையானே யுயர்தனிச்செம்பொருடானுந் தன்னுட்ப நிலையளவினன்றி வேறுபலநிலையளவாக விருத்தல் கூடாமை யுணர்ந்துகொள்க.

சூ. அவற்று ளொண்மை யாவது கிளக்கி
னழுக்கின் மையு மறிவு விளக்கமு
மிழுக்குப் பிணிநோ யின்மையு மாகும்
பழிப்பி லுணர்விற் பற்ருே டேனைக்
கழிப்பி லின்பப் பற்றுந் தோற்றி
யின்னுயிர்ப் பிணிக்கு மியல்பிற்
றன்னதென் றுணர்க வதுவுந் தனையே. 522

அழுக்கு: உள்ளமுதலியன பிறவற்ருெடு கூடியிருத்தலும் வேறு படுதலுமாம். எனவே அமைதியுந் தூய்மையு மழுக்கின்மை யெனப் படும் அறிவு விளக்கமாவதுஉயிர் தன்னைத்தானேக்குதற்கருத்தின் றியே தன்னைத் தா னேக்கிநிற்றற் கமைதல். அவ் வமைவின்கட் செய்வன தவிர்வன வாய்மை பொய்ம்மை முதலாயின தாமே புலப் படுதலான் அவ்வமைவு தெளிவுணர்வெனப்படும்.

இழுக்கு: ஐயந்திரிபுகளும் ஆற்றலின்மையும்.

பிணி - உடற்கணோய். இழுக்கும் பிணியுமாகிய நோயில்லாமை யென்க. நோய் - உடன்முதலாயின தத்தநிலையின்வேறுபடுதல். அழுக்கின்மைகள் அறிவுவிளக்கங்களானமைவது நோயின்மை.

இவ் வொண்மைப்பண்பினுல் உண்டாகு முணர்வின்கண்ணு மின்பத்துக்கண்ணும் பற்றுண்டாதலி னிதுவுமுயிர் தன்னைத் தான் காண்டற்குத் தடையாய்த் தளையாவதாம். தளை - கட்டு.

எனவே இப் பண்பினின்றும் விடுபடுதலே வீடாகும்.

இது தலைநிலைப்பண்பாமாறு கூறிற்று.

எ. ஆர்வம் புன்மை யாகு மதுதா
ஞர்த லில்லா வவாவொடு பற்றி
ஞவது வினைப்பற் ருக்கி
யோவறப் பிணிக்குமா லுயிரை நன்கே. 523

புன்மைப்பண்பென்னு மிடைநிலைப்பண்பாவது விழைவு. ஆர்தல் - நிரம்புதல்.

அவ் விழைவு தான் வேட்கையினுலும் பற்றினுலு முண்டாவது. வேட்கையும் பற்று மூதலினுடையன.

வினைட்பற்று - வினையாகிய பற்று.

ஓவற - ஒழிவின்றி: இடையீடின்றியென்பதாம்; தப்பாதவா றெனினுமாம். நன்கு - மிக.

ஒண்மையினும் புன்மை நன்கு பிணிக்கு மென்க. அமைதியில்லாத கலக்கமே புன்மைப்பண்பென்றவாருப்.

இது புன்மையென்னு மிடைநிலைப்பண்பாமாறு கூறிற்று.

அ. மைம்மைப் பண்பு மயலெனத் தோன்றுவ
தொண்மை புன்மை யுரூஅக் காலை
யெனைத்துட லுயிரையு மயக்குவ திவற்றை
யிழுக்கொடு மடிதுயி லென்றிவற்
றிழுக்குறு பற்றி னிறுகத் தட்குமே. 524

மயல் - யாதுமறியாமை. எனவே மைம்மையாவதுணர்வு முயற்சியு மில்லாமையாம்.

உடலுயிரையென்றது முப்பாற்பண்பு முயிரின்கண்ண வல்ல வென்பஃதுபற்றி.

இழுக்கு - நன்னெறியினின்றுந் தவறுதல் - மடி; தொழி லொழிந்திருத்தல்.

இழுக்கு மடியுந் துயிலு மைம்மையினின்றுந் தோன்றுவன. மைம்மை யேனையிருபண்பிற்காட்டினும்பிணிப்பதுதோன்ற இவற் ருன் இழுப்புண்ணுதலாகிய பற்ருன் இறுகக்கட்டு மென்றவா றுணர்க. தட்கும் - கட்டும்.

இது கடைநிலைப்பண்பாமாறு கூறிற்று.

௯. மும்மைப் பண்பின் றன்மை தொகுப்பி
னுண்மை யின்பத் துய்க்கு மேனைப்
புன்மை வினையிற் பொருந்த வுய்க்கு
மைம்மை யுணர்வு மாய்த்துச்
செம்மை நெறியிற் றிறம்ப வுய்க்குமே. 525

இன்பத்துய்க்கும் - இன்பத்துக்கட் கொண்டு செலுத்தும்.

உணர்வுமாய்த்து - உணர்வை மறைத்து.

செம்மைநெறி - யாவர்க்குமொப்பாகியநற்செயல். திறம்ப-தவற.

செம்மைநெறியிற் றிறம்ப வுய்த்தலாவது தீநெறிக்கணுய்த்தலு மடிதுயில்களின்க ணுய்த்தலுமாம்.

௰. மும்மைப் பண்பு முற்படு மிடத்து
மும்மைப் பண்பினு முனைத்து நிற்கு
மொவ்வொரு பண்பு மொழிந்த
விவ்விரு பண்பையு மெஞ்சுவித் தெழுமே. 526

முற்படுமிடத்து - எதிர்ப்படுமிடத்து

பண்பினும் - பண்புகளுள்ளும்

முனைத்துநிற்கும் - முதன்மைப்பட் டெழுந்து நிற்கும்.

இவ்விரு பண்பையும் - இரண்டிரண்டு பண்புகளையும்.

எஞ்சுவித்து - வலி குன்றச் செய்து.

இதனால் யாக்கை முதலாய பண்பிகளெல்லாந் தனித்தனி முப்பாற்பண்புமொருசேர வுடையனவல்ல தொரோவொருபண்புடையன வல்ல வென்பதூஉம் பொருடொறுங் கிடக்கு முப்பாற்பண்பு மொருங்குட னெழுவன வல்ல வென்பதூஉ மோரோவொருகா லோரோவொன்றே யெழற்பாலவென்பதூஉ மெழுவனவு நீடுநிற்ப வல்ல வென்பதூஉ மவை மூன்றுந் தம்மு ளொான்றொழிய வொன் றெழ விங்ஙன மிடையீடின்றி மாறிமாறி நிகழாநிற்ற லல்லது மூன்று மொருங்குட னெழாது கிடத்த லொருஞான்று மில்லை யென்பதூஉ மவைமூன்று மொருங்குட னழிந்த ஞான்றே யவை யொன்று நிகழாதொழிதல்கூடுமென்பதூஉ மென்றிவை பெறப்படும்.

இதனை லறிஞராவார் தமக் கொண்மைப்பண்பு மிக்கு நிகழ்தற்கு வேண்டப்படு முணவு செயல் நட்பு முதலிய சார்புகணீங்காவாறு கடைப்பிடித்துப் பாதுகாத்தொழுகுதல் கடனென்பதூஉமெய்திற்று.

௧௧. உணர்ச்சி வாயின் முயற்சி வாயிலென்
றிறைச்சி யாக்கையு ளெனைத்து வாயிலு
மொட்ப மென்னு முணர்வு தோன்றிப்
பொற்ப நிகழும் பொழுது காணின்
முதற்பண் பாவயின் முனைந்துள
தெனப்பண் புணர்வா ரெண்ணிக் கொள்பவே

உணர்ச்சிவாயில் : செவி முதலாயின.

முயற்சிவாயில் - வாய் கை முதலாயின.

இறைச்சி : பொருட்குப் புறமாய்ப் பொருள் குறிப்பது. யாக்கையு முயிர்க்குப் புறமா யுயிருண்மை குறிப்பதாகலி னிறைச்சி யாக்கை யெனப்பட்டது.

எனைத்துவாயிலும் - எல்லா வாயிலின்கண்ணும்.

ஒட்பம் - விளக்கமான வுணர்வு.

பொற்ப - அழகுற.

ஆவயின் - அவ்வாயிலுடையார்மாட்டு.

முதற்பண்பு : ஒண்மை.

முனைந்துளது - முதன்மைப்பட்டுள்ளது.

இஃதொண்மைப்பண்புடையாரை யறியுமாறு மெய்ப்பாடு கூறிற்று.

கஉ. கடும்பற் றுள்ளங் கைவினை யாற்ற
விடும்பைக் கலக்க மெழூஉ மார்வம்
வினைபல வற்றுண் மேல்கீழ் கோடல்
வினைபல தொடங்க லினையவை யெல்லா
மிடைப்பண் பெழூவுழி யெழுவ
புடைப்பண் பிரண்டும் புறக்கொடை தரவே 528

கடும்பற்றுள்ளம் - பொருளைச் செலவு செய்யவேண்டுமிடத்துஞ் செய்யமாட்டாமை.

கை : மொழிமுதலசைநிலை.

ஆற்றல் - செய்தல்.

மேல்கீழ் - உயர்விழிவு.

இடைப்பண்பு : புன்மை. எழூவுழி - மிகுமிடத்து. எழூவ - தோன்றுவ.

புடைப்பண்பு : சார்பாகிய பண்பு; என்றதனை யிரண்டனையும்.

புறக்கொடைதருதல் - ஓடுதல்; குறிப்பிற்றோன்றல்; அடங்க வென்பதாம்.

இஃதிடைப்பண்பின் மெய்ப்பாடு கூறிற்று.

கக. ஒட்ப மின்மை யொழுக்கக் கேடு
பெட்பத் தாளாண் பேணு மடிமை
யயர்வெனு மின்னோ ரன்ன
மயர்வெனு மைம்மை வலிந்துழி வருமே 529

ஒட்பம் - அறிவு. பெட்ப - விரும்ப. பிறர்வெருது விரும்புமா றென்பதாம். தாளாண்மை - முயற்சியுடைமை. மை : தொகுத்தல். அயர்வு - மயக்கம்.

மயர்வு - அறியாமை.

வலிதல்: தடுக்கலாற்ருவாறு மீதூர்தல்.

இன்னோரன்ன வரு மென வியையும்.

இது கடைப்பண்பின் மெய்ப்பாடு கூறிற்று.

கச. உண்மை மிக்குழி யுடல்விடி னுடலி
தொன்மைப் புலவர் தொகூஉந் தூய
நவையறு மொள்ளொளி ஞாலங்
கவையறப் புக்குக் களிதூங் குபவே. 530

உண்மை - ஒண்மை. உடலி - உடலுடையவுயிர். தொன்மைப் புலவர். பழமையாகிய நூலுணர்வாளர். தொகூஉம்-குழுமிவதியும்.

நவை - குற்றம்.

ஒள்ளொளி ஞாலம்: வானகம்.

கவை - துன்பம்; ஐயுறவுமாம்.

களி - மகிழ்ச்சி. தூங்குப - ஆழ்ந்துதங்குவர்.

இதனல் வானகம் புகுவார் உண்மைப் பண்பு நிகழ்வுழித் துஞ்சுவ ரென்பது பெற்ரும்.

கரு. புன்மை மேலிடப் பொன்றினேன் வினைசெய்
தன்மைப் பற்றுச் சார்ந்தோ ருடைய
வின்மை நலியா வில்லிற் பிறப்பான்
மைம்மை வந்துழி மாய்ந்தோ
னெண்மை மம்ம ரிழிபிறப் புறுமே. 531

மேலிட - மிக. இன்மை - வறுமை.

இல் - குடி. ஆள்வினையுடைமையானே யின்மை நலியாத வில்லாகும். நலியா - இடர்ப்படுத்தாத எண்மை - எளிமை; கீழ்மை.

மம்மர் - அறியாமை. எண்மையுமம்மருமுடையவென்க. இழிபிறப்பு; இழிந்தமக்கட்பிறப்பும் விலங்குமுதலியபிறப்பு மின்னுஞாலப் பிறப்புமாம்.

மாய்ந்தோ னுறு மென வியையும்.

இது புன்மைமைம்மைகளிற் றுஞ்சுவார்க் குரிய மறுமைச்செலவு கூறிற்று.

கசு. தூய தெளிவு தொல்வினை நலத்தி
ேனய வொண்மையி னுய வூதியம்
புன்மையி னூதியம் புன்கண்
மைம்மையி னூதிய மருண்மை தானே. 532

தெளிவு - நிலைபெற்ற வுணர்வு. தொல்வினை நலம் - முற்பிறப்பிற் செய்த நல்வினை.

ஊதியம் - பயன். புன்கண் - துன்பம்.

மருண்மை – மயக்கம். இஃதூதிய மாதல்பற்றிப் பெயர்த் துரைத்தது.

கஎ. உண்மையிற் புலமைநன் குண்டா கும்மே
புன்மையின் வேட்கை புலனு கும்மே
மைம்மையின் மயக்கமு மடமையுஞ்
செம்மையிற் றிறம்பலுஞ் சேர வெழுமே. 533

புலமை - கல்வியுணர்வு.

வேட்கை : ஐம்புலவேட்கை. புலனுகும் : உண்டாகும்.

மயக்கம் : யாதுமறியாமை. மடமை : புல்லறிவாண்மை.

செம்மை : நற்பண்புநற்செயல்.

சேர - ஒருங்கு. எழும் - உண்டாகும். இன்ன பிறத்தல்பற்றிப் பெயர்த்துரைத்தது.

கஅ. தொல்லவர் மேலைத் துறக்கஞ் செல்ப
வல்லவ ரிடைய வையந் தங்குப
வல்லவர் கீழுல காழ்ப
சில்லைய பண்பொடு செயலுஞ் சேர்ந்தே. 534

தொல்லவர் : முற்பண்புமிக்கார்.

வல்லவர் : வினைவல்லவர் : இடைப்பண்புமிக்கார்.

அல்லவர் : பிற்பண்புமிக்கார். ஆழ்வர் - அழுந்துவர்.

சில்லையபண்பு சில்லைய செயலெனக்கூடும்.

சில்லை - இழிவு: இழிந்ததன்மையாகியவென்பது.

சேர்ந்து கீழுலகாழ்வ ரென வியையும்.

இது பண்புடையாரைப்பற்றி மறுமையுரைத்தது.

கக. உரைத்த பண்பினை யொழியவும் வினைமுத
லுரைக்க லாவதொன் றுண்டென் றுன்னுக்
காட்சி யிடையருக் கள்வன் றெள்ளிதிற்
பண்பி னுப்பாற் படுசிறப்புணரு
முணர்த லு மென்னியல் புடைய
னுணர்வறத் தன்னுணர்ந் தொருவனு குவனே. 535

உரைத்த : மேற்கூறிய. பண்பினை யொழியவும் - பண்புகளைத் தவிரவும்.

வினைமுதல் - தொழில்செய்வது.

இதனு லுயி ரொருஞான்றும் வினைமுத லன்றென்பது துணியப் படும்.

உன்ன - நினையாத. காட்சி - மெய்யுணர்வு. கள்வன் - சான்று. தெள்ளிது - ஐயந்திரிபின்றி.

பண்பி னுப்பாற்படு சிறப்பென்றது பண்பின் வேருய் அதனி னீங்கி யுயர்ந்த பெரும்பொருளை.

கள்வனுணருமெனவியையும்.

உடையனுகியென முற்றெச்சமாக்குக.

உயிர் தன்னிற் பிறிதாவதனைத் தானுணராமையளவே தன்னைத் தானுணர்தலென்ப தன்றித் தனக்குத் தன்னைத் தா னுணர்தலெனுஞ் செயல் கூடாமை தோன்ற உணர்வறத் தன் னுணர்ந் தென்றவா றுணர்க.

உ௦. உடற்கட் டோன்று மொருமூப் பண்பு
முடற்கண் வதிவோ னொரீஇ நிற்கிற்
பிறப்பிறப் பேனைப் பிணிமூப் பிடுக்க
ணீவா வின்ப நிலைஇச்
சாவா வாழ்வு தானெய் துவனே. 544

ஒரீஇ - நீங்கி. இடுக்கண்: ஏனைத்துன்பமெல்லாம். நீவா - கடந்து. நிலைஇ - நிலைபெற்று; திரிபின்றியென்பதாம். சாவா வாழ்வு: ஒரு பெற்றியேயா யிருக்கும் வாழ்வு.

இவ்விருபாட்டானும் உணர்வியற்பொரு ளொன்றன்றிப் பல வன்றென்பது தெளியப்படும்.

உக. வாழிய குரிசின் மாற்றந் தருதியோ
பாழிய தோளாய் பண்பிற் றீர்ந் தோற்
கடையா ளந்தா னுவதெ னவைதா
னெருவு மாறு முவன
தொழுக லாறு முள்ளவா றென்னே. 545

வாழிய; முன்னிலையசை. குரிசில்; விளி. மாற்றம் - விடை. தருதியோ - தருவாயோ; வினு. பாழிய - பெருப்புடைய; வலிமை யுடைய வென்றுமாம்.

பண்பிற் றீர்ந்தோர்க்கு - பண்புகளினின்று நீங்கினுனுக்கு. பண் பிற் றீர்தலாவது தான் பண்பின் வேறெனத் துணிதல்.

அடையாளமாவது தர னென்னென்க. உவன்: சுட்டுப்பெயர். உள்ளவாறென்? - இருக்கின்றவாறெவ்வாறு?

உஉ. ஒட்ப வுணர்வு முழப்பு மயர்வு
முற்றக் காலைச் செற்றங் கோடலு
மற்றக் காலை யதுகொள் ளாமையு
மென்றிவை யில்லா வியல்பின னுகிக்
கண்டுகா ணுமை கொண்டுளோன் ருன்முன்

னயின்ற பண்பி னலமரல் செல்லா
னியன்ற பண்பிவை யென்முன் னிகழ்வ
வென்னியை பிவற்ரு டெனக்கென வெண்ணி
யென்னது மசைவற் றிருப்பனுற்
பன்னிய பண்பிற் பற்றுவிட் டோனே. 546—547

ஒட்பவுணர்வு - ஒளியாகியவுணர்வு. உழப்பு - முயற்சி. அயர்வு - மயக்கம. முப்பாற்பண்பு மென்றவாறு.

செற்றம் - வெறுப்பு.

அற்றக்காலே : அவை நீங்கியபொழுது.

அது கொள்ளாமை - அச்செற்றங்கொள்ளாமை. எனவே யிழைவு கொள்ளுதலாயிற்று.

இயல்பு - திரிபின்மை.

அயின்ற - நுகர்ந்த. அலமரல் - கலங்குதல். செல்லான் - அடையான்.

இயன்ற : முன்னின்றி யிடையே யுண்டாகிய. எப்பொழுது மிருந்தவா றிருக்குமென் முன் னென வாற்றலான் விரித்துரைத்துக் கொள்க.

நிகழ்வ - தொழிற்படுவன.

என்முன் னிகழ்வ வெனவே யிவை யானு மல்ல வென்ப தாயிற்று.

இவற்றே டெனக் கியைபென் னென வெண்ணி.

என்னதும் - சிறிதும். அசைவு - நினேவு

ஆல் : அசை.

பற்றுவிட்டோன் - நீங்கினேன்.

உரு. இன்பத் துன்ப மிவைநே ரொப்பத்
தன்பெற் றியனுத் தளரா வுரவோ
னீடுறு புகழுரை நேர்ந்த விகழுரை
யோடுபொன் கல்லிவை யொப்ப வுள்ளுபு
செற்றம் விழைவு தீண்டுத லின்றி
யிகலொடு நட்பு மிழிப்பொடு சிறப்பு
நிகரெனப் பொதுவி னிலீஇ யாதும்
வினைதான் றெடுதல் விடுஉ
மனையான் பண்பி னப்பா லன்னே. 548—549

தன்பெற்றியனு - தன்னியல்பிற் றிரியாதவனுகி.

தளராவுரவோன் - நிலைகுலையாத திண்ணிய வறிவுடையோன்.

நீடுறு புகழுரை - நெடுநாணிற்கும் புகழுரை.

ஒப்பக்கொள்ளுதலாவ தவ் விரட்டைக ளூற்றுழியெல்லாம் புறக் கணித்திருத்தலாம். புறக்கணித்தல் - பொதுநோக்குச்செய்தல்.

இகல் - பகை. இழிப்பு: சிறப்புச்செய்யாமையுந் தாழ்வுசெய் தலுமாம். சிறப்பு - வழிபாடு.

தொடுதல் - தொடங்குதல்.

அப்பாலன் - வேருயினன்.

உரவோனாகிய அனையா னப்பால னெனமுடிவுசெய்க.

உச. வழுவில் காதலி னொருமை மரீஇப்
பழுதின் றென்னைப் பார்த்து வழிபடின்
மும்மைப் பண்பு முழுதுந் தாஅ
யுண்மைத் தன்மை யொருதா னென்னும்
பெரும்பொரு டானும் பேற்றுக்
கரும்பெருங் கிழவோ னாகு மவனே. 550

வழுவில்காதல் - அயராவன்பு. ஒருமை - வேற்றுமையில்லாமை.

வேற்றுமையில்லாமையாவது காதலாற் கடவுளையிடைவிடாது நினைப்பவே யந்நினைவொழிந்து நினைப்பா னினைக்கப்படுவானென்னும் வேறுபாடு தோன்றாமையாம். இந்நிலைக்கண்ணே நினைப்பழித லெனப்படு நொசிப்பினைப் புணர்ப்பு மீமிசைத் துயிலெனவும் தூயபுன் மீமிசைத் துயிலெனவும் வழங்குப. உயிர்தான்றானாகித் தன்னிலை நிற்றலாகிய தற்பெறுதியினைப்புலமைமீமிசைத்துயிலெனவுந் தூய மீமிசைத்துயிலெனவும் வழங்குப. மூச்சுத்தளைதல், ஐம்புலமீட்டல், நெஞ்சுபிணித்தல், ஒருவழி நினைவென்பன முறையே புணர்ப்புநனைப் புணர்ப்புக்கனைப் புணர்ப்புத்துயில், புணர்ப்புமீத்துயிலெனக் கொள் ளப்படும். வினையொப்புச், சார்புணர்ந்துவேறுதல், தன்கண்வினை யின்மையுணர்தல், தன்சிறப்பியல்புதானுணர்தலென்பன முறையே புலமைநனைப் புலமைக்கனைப் புலமைத்துயில் புலமைமீத்துயிலெனக் கொள்ளப்படும். இங்ஙனமிருசாரம்பாடுகாண்க.

மரீஇ - பயின்று

கடவுளைப் பார்த்தலாவது கடவுண் மும்மைப்பண்பினும் பொதுவாய் அவற்றின் வேறாய்த் தன்னியல்பினின்று தன்னைத் தானேக்கி யிருத்தலை நோக்குதலாம். அங்ஙன நோக்குவான் றானு மத்தன்மைய னாதலாற் பயப்புடைத்தாதல் கருதுமாறு பழுதின்று பார்த்தென்றதென்க. பழுது – பயனின்மை. பயனின்மையின்றி யெனவேபயனுடையதாக வென்பதாயிற்று.

தாய் - கடந்து: வேருய்

உண்மைத்தன்மை தானென்றேயாயிருக்கும் பெரும்பொரு டானாதலாகிய பேற்றுக் குரியோன்.

வழிபடின் அவன் தாய்க் கிழவோனாதுமென்க.

இஃதொருவன் றன்னியலுணர்வாற் ருன் முப்பாற் பண்பின் வேருதலைக் காணுந் தற்காட்சி யரிதாயி னங்ஙனமியல்பான் வேருய்க் காணுந் தற்காட்சியுடையவனுகிய கடவுளைக்காண்டலானே தானுந் தற்காட்சியை யெளிதிற் பெற்றுய்தல்கூடுமெனத் தற்காட்சி யெய்துமா ரென்றுணர்த்திற்று.

உரு. துஞ்சாத் தொலையாத் தொல்பெரும் பொருட்கு
மெஞ்சா வாய்மை யியல்பறந் தனக்கு
மஞ்சா தொருதனி யகவயி னமரு
மமைதி சாலு மருணய நகைக்கு
மன்னிய நிலைக்களம் யானென வாய்ப்ப
வுளளுத லுடைய வுணர்வினோர்
ருள்ளுத லென்மாட் டொழிவிலர் தாமே. 551

துஞ்சா - சாவாத; துயிலாதவெனவுமாம். ஒருபெற்றியேயாய்த் திரிபின்றி மன்னிய வென்பது கருத்து. பெரும்பொருடானுயினுற்குச் சாக்காடின்மை யுந் தன்னைத்தானுணர்ந்து தற்காண்டலாகிய விழிப்பு முளவாமாறு தோன்றத் துஞ்சாப்பெரும்பொருளென வெடுத் தோதப்பட்டது.

தொலையாத - கெடாத. அப்பெரும்பொருட்குத் தன்னை யொழிய வுள்ளமுடம்பு முதலியவுடைமை யொன்று மின்மையானு மவற்றை வேண்டாமையானுந் தொலையாத பொருளாமாறு காணப்படும். தொலைத்தல் - உடைமையிழத்தல்.

எஞ்சா – அழியாத. வாய்மை - பொய்யாமை. வாய்மையு மியல்புமாகிய வறம். ஒருவன் றன்னுணர்வொடு தன்னிலையி னிற்ப வந்நிலையோடு முரணுது துணையா யியல்பாக நிகழற்பாலதாகலான் அறமொருவற் கியல்பாவ தெனவு மதனின் மாருய மற மியல்பின் மாருயியல்புபோலும் பொய்யாய்த் திரிபா மெனவு முணர்ந்து கொள்க இதனுனு மொருவன் கடவுளையு மன்னுயிரெல்லாவற்றை யும் யானெனவுணர்ந் தன்புகோடற் குரியனுமாறு துணியப்படும். இனி, அவ்வறந்தான் மரபானும் நேரானு மொருவற்குத் தற்காட்சி யாகிய பொய்யா நுகர்வு பயத்தலான் வாய்மையாமாறு முணர்ந்து கொள்க.

ஒருதனி : பிறர்யாவரொடுங் கூடாதிருத்தலி னெருவனுய் யாதோருடைமையுமின்மையிற் றனியா யிருத்தல்.

அகவயினென்ற தங்ஙன மொருவன் ருனொருதனியா யிருக்குங் காற் றன்னைப் பிறரறிந்து வந்து கூடாதவா றிருக்கு முள்ளிட மென்றவாறு.

ஒருவன் றனக்கு நேரக் கடவு விடையூறுகட் கஞ்சாது திண்ணியனுயவழியன்றி யொருதனியகவயினமர்தல் கூடாமையின் அஞ்சாதமருமென்றது!

Dr. U. V. S. LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

சாலும் - நிரம்பும். நயம் - இன்பம். நகை - மகிழ்ச்சி.

அமைதி நிரம்புதற்கேற்ப வொருதனியகவயினமர்வோர்க் குயிர்கள்பா லருளுங் கடவுளது திருவருணினைவு மில்வழி அவனதுள்ள மமைதி யின்றிப் பலவாறு நினைவு கிளைக்குமாகலின் அருளொடு கூடிய நயநகையென்றது. நயநகை - இன்பமகிழ்ச்சி.

இம்மூன்று மியல்பாக நிரம்பி மன்னிய நிலைக்களங் கடவுளெனவே யிம்மூன்றும் பெற்றோரும் பெறுதற்கவாய் முயல்வோருங் கடவுளை யிடையறு துணர்தலானே யம்மூன்று மெய்துதலு மெய்தி நிலைபெறுதலும் பிழையா வென்பது போதரும்.

வாய்ப்ப - பொய்யாதவாறு.

உணர்வினோர் தா மென்மாட் டுள்ளுத லொழிவில ரென்க என்மாட்டு: ஏழாவதனொடிரண்டாவதன்பொருண்மயங்கிற்று.

இங்ஙனங் கூறியருளிய கடவுள் கூற்றானே கடவுளொடு பெரும் பொருளிடைக் கிடக்கு மொற்றுமை வேற்றுமை யினிதுணரப்படும்.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற் பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பதினான்காவது பால்

முக்கூற்றுப் பண்பு

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினைந்தாவது பால்.

ஆண்டகையியல்

க. நேர்மா றுக வேர்மே லிருந்து
கீழ்வா னோக்கிக் கிளைவீழ்த் தோங்கு
மரச மரமுண் டஃதழி வில்லது
புலவர் பாடும் புலநெறிச் செய்யுள்
வண்ணப் பச்சிலை மற்றஃ
தெண்ணக் கடவோ னெழிற்புல வோனே. 552

முதலென்னு மாற்றலினின்று மேன்மே லொன்றினின் றொன்று தொடர்புறக் கிளைத்து வளர்ந்து மன்னுயிர்களெல்லாவற்றுக்கு முறையுளு நுகர்ச்சியுமாய்ப் பெருகும்ஞால மேலே வேரோங்கக் கீழே கிளைவிழப்பதோ ராசமரமாக மாட்டப்பட்டது. இங்ஙன மாட்டுதல் இல்பொருண்மாட் டொப்புமையணி யெனப்படும். மரங்களு ளரச மரத்தின்கட் கடவுட் டன்மை காணப்படு மென மே லெய்து வித்தமையான் ஞாலமுழுதுந் தொக்க தொகைபெருமைக்கட் கடவுட்டன்மை புலனாவதனோ டியைய ஞாலத்தை வேறு மர மென்னா தரசமர மென்றான்.

நேர்மாறு - இயற்கைக்குமுரண்.

அவ் வரசமரத்துக்குப் புலவர் பாடும் புலநெறிச் செய்யுள் வண்ணங்களே வண்ண வண்ணப் பச்சிலைகளாம். வண்ணம் : தழூஉவணி; செய்யுள் வண்ணத்தோ டேனைவண்ணமு மிசைத்த தாகலின். ஏனைவண்ணம் அயற்சொற் சிதைவு செய்யுள் வண்ண மாவது இசையடுக்கு. இசையடுக்கிவருதற்கு வண்ணமென்ப தோரியற்பெயர். அவை பாவண்ண முதலாயின. செய்யுட் சொன் மலர்கள்.

புலநெறி : உள்வழக்காகிய வுலகியலு மில்வழக்காகிய கூத்தியலும் விராய வொழுக்கம். அது பரவைக்கண்ணுங் கூத்தின் கண்ணு மின்றி நுற்குரியதாய் நூல்கற்பார்க்கு நூற்பொருளை யினிது விளக்கி வலியுறுத்தற் பயப்பாடுடையதாகலிற் புலநெறி யெனவேறு வழங்கப்படும். புலம் - நூல். "நெறியெலாம் புலமாக்கிய வெந்தை" யென்றாற்போலத் தம் பொருளை யினிது புலமாக்குதலானே நூல்கள் புலமெனப்பட்டன.

கற்பார்க்கு மகிழ்ச்சி, நுகர்ச்சி, நன்னடை முதலியவற்றைப் பயக்கும் புலநெறிச்செய்யுள் மலர், காய், பழ முதலாயவற்றைப் பயக்கும் பச்சிலையாக்கப்பட்டது.

எழிற்புலவோனென்றது ஞாலவழ கெடுத்தோதுதலும் புனைதலு முடைமைபற்றியென்க.

அவ்வரசமரத் திமிழிசை வழங்கியுண் டுறங்கி யோடிப் பாடி யுழலும் பறவைக்குழா மன்னுயிர்ப்பன்மை யெனக் கொள்க. அப் பறவைகட்கெல்லாந் தலையாயுண்ணு துறங்கா தமைதி யுற்று வானையும் மற்றைப் பறவைகளையு மரமுழுதையும் பார்த்துக்கொண்டு சான்றளவாயிருக்கும் பறவையே கடவுளெனப்படும்.

இதனாற் சொற்சுவை பொருட்சுவைபடப் பாடுதலு மப்பாட்டுக் களின் சொற்சுவை பொருட்சுவைகளை யெடுத்துரைத்து விளக்குதலு முடையோர் புலவராவாரெனப் புலவராமாறும் பெறப்படக் கூறி யருளினு னம்பிகாரி.

உ. ஆலு மவ்வர சகன்ற வெள்ளிடை
மேலுங் கீழும் வீழ்த்துப் பாய
பைங்கிளை தாமே பண்பி னுக்கம்
பைந்தளிர் தாமே யைம்புல வழக்கு
மக்கண் ஞால வயினின் றோங்கி
மிக்க வினையெனும் வீழ்பல
தொக்க மேன்மேற் றொடர்ந்தியைந் தனவே. 553

ஆலும் - அசையும்: ஏனைமரம்போன்று நிலத்து வேரூன்றாது பற்றுக்கோடில்லாத பாழ்வெளியிடை வேரூன்றி வளர்தல்வேண்டு மாகலி னிவ்வரசமர முதன்முழுது மியங்கிக்கொண் டிருப்பதல்லது ஏனைமரம்போல வொருவழிநிற்கலாற்றாது. பாய - பரந்த.

பண்பினுக்கம்: மூதற்பண்பின் றிரிபினுக்கமாகிய வுள்ள முதலா யின. அவற்று ளைம்புலமொழியக் கிளையெனக் கொள்க. ஐம்புலங்களை அக்கிளையிற்றோன்றுந் தளிராகக் கூறலின்.

மாறனுனி மக்கண்ஞாலமாகலின் மாவிழுதுவையத்தினின்று மேனோக்கி யோங்குவன வாயின. இஞ் ஞாலஞ் செயன்ஞாலம். ஏனைஞாலம் நுகர்ச்சிஞாலம்.

இல்பொருளாகிய வரசு மூதலேயன்றி அதற்கு விழுதாகிய-கினையு மில்பொருளாயிற்று; அரசிற்கு வீழின்மையின்.

௩. முதியவிம் மரத்தின் முழுக்கோ லம்மும்
பதியவிங் கறியப் படாஅ தற்றே
முதலு முடிவு மொய்ந்நிலை பேறும்
விழுதுநன் கூன்றி மிளிர்தரு மிதனை
விழைவு நீத்த லெனப்படு மீககூர்
திண்ணிய வெஃகிற் சிதறத் துணித்தபின்
யாதனைச் சார்ந்தோ ரிவணினி மீளார்
தீதறு மந்நிலை தேர்தற் பால
தெவனிற் றெல்வினை யெழீஇப் படர்தரும்
தவநற் குயர்ந்த தனிமுத
லவனைப் புகுவ லடைக்கல மென்றே. 554—555

முதிய - பழைதான. பதிய: உள்ளத்தி னினைவாக வழுந்த. முழுக்கோலமு மறியப்படாது.

முதலு முடிவு நிலைபேறு மற்றே யென்ற தவையு மங்ஙனமே யறியப்படா வென்றவாறும். நிலைபே றறியப்படாமையாவ திஃ தெத்துணைக் கால மிருக்கு மென்ப தறியப்படாமையாம்.

மொய் - வலிமை; பெருமையுமாம். ஆம்: அசை.

மிளிர் - தலைகீழாகப்பிறழ்ந்த.

விழைவுநீத்தல்: விழையாமை. ஆவது: இது துன்பமுஞ் சாக் காடும் பயக்கு மென்று புறக்கணித்தல்.

விழைவுநீத்தலெனப்படு மெஃகினுற் சிதறத் துணித்தபின் னென்க. எஃகு - வாள். துணித்தல் - வெட்டுதல்.

ஞாலவாழ்க்கையில் விழையாமை பிறந்தபின் அவ்வாழ்க்கையை விட்டொழிந்து கேடின்றி யெஞ்ஞான்று மன்னுதலின் விழையற் பாலதி யாதோ வெனத் தேர்தல் வேண்டு மென்க. தேர்தல்-தேடுதல்: ஆராய்தல்.

எல்லாவினையும் வெறுவெளியினின்று தோன்றுதல் வேண்டுமாத விற் பெரும்பாழ்வெளியாகிய பெரும்பொருளினின்று வினை தோன்றி நிகழு மென்றான். வெளி யில்வழி யெப்பொருட்கு மசைவுநிகழாமை யான் வினை வெளியிற் றோன்றி வெளியி னிகழ்வ தென்பது துணியப் படும். இதநோக்கியே முன்னர் வில்லி கடாய கடா வேழனுள் ளையாவது யாதெனபதற்கு உயிருண்டென வுயிரதுண்மைத் தண்மையைத் தானுணர்தற்கு வாயிலாகத் தோன்று மியற்கை யாவதியாது அது வினையென நம்பி வினையியல் செப்பினன். உயிரென்றதீண்டொருதனியுயிர்; அது பெரும்பாழுணர்வுவெளி. அவ்வெளிதான் றன்முன்னர் உள்ளச்சார்பெதிர்ப்படுதொறுந் தனித் தனியுயிரெனத் தோன்றும். வினைக்குப் பற்றுக்கோடாவன துப்பென்னு முள்ள மன்றிப் பிறிதன்றாகலின் அவ்வ வுள்ளந்தொறு முயிர்க்குத் தன்னுண்மை தானே பெறப்படுவதாகும். வனையிடத்துப் பெறப்படுவதன்றாம். துப்புவிளக்கத்தின் ஏற்றத்தாழ்வு வேற்றுமை கள் அளவிறந்தனவாதலின் ஆண்டாண்டுத் தன்னுண்மைப்புலப்பாடு மிக்குங் குறைந்து மளவிறந்த பலவேறாகப் புலப்பட்டுப் பலவே றுயிரும் பலவேறுபிறப்புமாமெனத் தோன்றுவதாம். வினையெல்லா வற்றுள்ளுந் தலைசிறந்து வீறுபெற்றது புணர்ப்பேயாகலாற் புணர்ப்பு நிகழ்வுழி யுயிர்க்குத் தன்னுண்மைமுழுது மெஞ்சாது நன்கு விளங்கு வதாகும். அதுவே புலமையென்பது.

தவ - மிக. நற்கு - நன்கு.

தனிமுதலாகிய வவனை யடைக்கலம்புகுவலென் றந்நிலை தேர்தற் பால தென வினைமுடிவு செய்க. ஐ: வேற்றுமை மயக்கம்.

இதன்கட் பெரும்பொருள் உயர்திணைவாய்பாட்டானு மஃறிணை வாய்பாட்டானுங் கூறப்பட்டவாறுணர்க.

இதனால் விழைவுநீத்தபின் னன்றி விழுப்பொருடேர்தற்பாலதன் றென்பதூஉ மதன்பின் அதுவே தேர்தற்பால தென்பதூஉம் பெறப் பட்டன.

ச. தற்சிறப் பயர்விவை தகைந்தோ ராகிப்
பற்றெடு குற்றம் பாற வென்று
தற்புல மைக்க ணிற்றலிற் றிறம்பா
தார்வஞ் செற்றுமீண் டல்லலொ டின்பச்
சார்பென் கோட்டந் தவிர்ந்து நின்று
தெருள்கொள் புலவர் சேர்ப
பொருள்கொ ளழியாப் புரையுயர் நிலையே. 556

தற்சிறப்பு : தன்னைப் பிறர் பேணி யொழுகலின்கட் பற்றுச் செய்தல். அயர்வு : செய்வதவிர்வவும் பொருட்டு விளைவுகளுமெண் ணுதுமருண்டொழுகுதல்.

தகைந்தோராகி - விலக்கியோராகி.

குற்றம் : பற்றுப்பொருட்டாகச் செப்பமின்றி நிகழுந் தீய சொற்செயல்கள்.

பாற - கெட. வென்று - அடக்கியாண்டு.

தற்புலமை : ஒருவன்றன்னைத்தான்பற்றிநின்று அளவைகளானும் பொருந்துமாற்ருனு மாராய்ந்து கொண்டு வருதல்.

ஆர்வம் - வேட்கை. அல்லல் - துன்பம்.

அல்லலொ டின்பங்களைச் சார்தலென்னுங் கோட்டம். கோட்டம் — பொதுவின்மை ; ஒருபாற்கோடுதலென்பதாம்.

தெருள்கொள்புலவர் : அறியவறியவறியாதவற்றை மேன்மே லறியாநிற்றலைக் கொள்ளும்புலவர்.

பொருள் - உண்மை.

புரையுயர் : மீமிசைக்கிளவி. புரையுயர்நிலை : பெரும்பொரு ளாதல்.

இது மேற் றேர்தற்பாலதென்றதனைத் தேருமாறு கூறிய பெயர்த்துரை.

ரு. யாதனை யடைந்திவட் போதர லின்றுகொ
லோதரு வென்னுய ரொருதனி நிலைய
மதுவென வுணர்க வதனை வானூர்
கதிரொளி ஞாயிறுங் கங்குற் றிங்களு
மெரியொளி தானு மெல்லா
மொளிசெய லாற்ரு வொளிர்வது தானே. 557

போதரல் - வருதல் : பிறத்தல்.

என்னுய ரொருதனிநிலையமென்ற விதனுற் கடவுளாகிய தன்னிலையினு மேற்பட்டதுந் தனக்குமே லில்லதுமாகிய வேறு தன்னிலை யுண்டென்று னென்ப தாயிற்று. அந்நிலை யீண்டுக்கூறிப்போதரு மாற்றுன் மேற்பெறப்பட்ட பெரும்பொருளாதலாகியநிலை யென்பது தானேயமையும். மீமிசைஞாலநிலையு ஞாலமுழுதுமாயநிலையு மிப்பொழுதைவரவுபோலுஞ் செல்வநிலையு மல்ல அவ்வொருதனி யுயர் நிலையம்.

ஏனையுயிர்கட்கு மொப்ப நின்ற வொருதனிநிலையை என்னுய ரொருதனி நிலையமென நம்பிவிதந்தோதியது தான் அவ்வுண்மைத் தன்மையைத் தன்னியல்பினுணர்ந்து துய்க்குமுதன்மை பற்றியெனக் கொள்க.

எரி - நெருப்பு. ஒளிசெயல் - விளக்கல்.

இம் முச்சுடரு மதனை விளக்கலாற்றுவாய திவற்றினு மெத்துணை மடங்கு மது நுண்ணிய தாகலினென்பது.

இதனுலிம் முச்சுடரு மதனு லுளவாவன வல்ல திவையிற்று ணஃதுளதாவதன்று; தன்னுனே தா னுளதாவதாமென்பத குறிக்கப் பட்டது. ஒளிர்தல்: துணைவேண்டாது தனக்குத்தான் பெறப்படுதல்.

சூ. என்னுறு கூற்ற மன்னுயி ருலகின்
மன்னுவ வாகும் வாழுயி ராகி
முன்னிலை யாகிய மூதற் பாற்படு
நெஞ்சு நெஞ்சொடு நின்ற
வஞ்சு மிப்பொறி யாறு மீர்க்குமே. 558

என்னுறு - என்பாலுற்ற. கூற்றம் - பகுதி.

மன்னுயிர் வாழு முலகெல்லா மன்னுயிருலகெனப்படும். இவற்றின் வேருய வுலகு மீமிசைஞாலமென்னும் புலவர்ஞாலமேயாம்.

வாழுயிர்: உடலொடு வாழுமுயிர். வாழுயிரெனினு மன்னுயிரெனினு மொன்று. மன்னுவ - வாழ்வன. ஆதம்: எச்சம்

இதனுன் மன்னுயிரெல்லாங் கடவுளினெவ்வொரு பொதுப்பகுதி யென்பது பெறப்படும். கடவுளாகிய மன்னுயிருங் கடவுளல்லா மன்னுயிருமென மன்னுயிரிருதிறப்படும். அவற்றுள் இம்மன்னுயிர் கடவுளாகிய மன்னுயிரெனப்படும். இவை முதல்வனின்வேருய் முதல்வன் கூறெனப்படும். அவையாவன: முக்கணன், மாலோன், மலரவன், முருகன், கொற்றவை முதலாயின. ஞாலமுழுதுந் தொக்க தொகை கடவுளெனக் கொள்ளுங்கால் அத்தொகையி னெவ்வொரு கூறுகளுமொவ்வோருறுப்புக்களாம். அவ்வியைபுபற்றி யிம்மன்னுயி ரெல்லாங்கடவுளினெவ்வொரு கூறென்றதொக்கும். ஏனை மன்னுயிர் பெரும் பொருளின் கூறு. பெரும்பொருட்போலியெனினுமாம் கடவுள்போல.

பாற்படுதல்: அதனுக்கமாதல்.

அஞ்சு: மருஉ. அஞ்சாவன: செவிமுதலாயின. அஞ்சுப்: எண்ணும்மை. ஆறும்: முற்றும்மை.

... LIBRARY, ... NAGAR ...

ஈர்க்கும் - இழுக்கும்: தூமருளின் செயல் வாழுயிராகிய கடவுண்மே லேற்றப்பட்டது ; ஒற்றுமைவழக்கான்.

என்னுறுகூற்றம் வாழுயிராகி யீர்க்குமென முடிக்க,

வாழுயிர் : பொதுமையொருமை; தொகுதியொருமையுமாம்

எ. பண்புட னிற்பினும் பண்பி னுக்க
முண்புழி யேனு முடலி னின்று
புறப்படு வழியும் பொருந்தா துடலி
னிலைப்படு வழியு நிகழுந் தன்னை
யிழுதையர் யாது மெண்ணிலர்
தொழுபுலக் கண்ணினோர் தொடர்ந்து காண்பவே.

ஈண்டுப் பண்பெனவும் பண்பினுக்கமெனவுங் கூறப்பட்டன உள்ளமுடல்பொறி புலங்களாகும்.

உண்புழி - நுகருமிடத்து.

ஈண்டுத்தன்னையென்றது வாழுயிராகிய இறைவனை.

இழுதையர் - அறிவிலார்.

இங்ஙனம் பொறிபுலங்களின் வேறாகத் தன்னைக் காணுமிடந் தொறுங் காணலாயிருக்க வங்ஙனங் காணாது கொன்னே யுழலுவாரை யிழுதைய ரென்றான்.

தொழுபுலம் - நூலறிவு.

புலவராயினர் தொடர்ந்து காண்டலானே அவ்வப்பொது நிலைக் கூற்றணங்குகளைக் கண்டிறைவனாகக்கொண்டு வழிபட்டு ஆக்க முறுவர்

அ. மணமுடைப் பொருளை மணந்ததன் மாட்டுள
மணமது வாங்கி வாவும் வளியென
வெதிர்ப்படு மின்ன யாக்கையி னிறைவன்
னோயி லுடலி னெய்தின்
வாயி லாறும் வாங்கிப் போதுமே. 560

மணமுடைப்பொருள் : மலர் முதலாயின.

மணந்து - கூடி. அது : அசை. வாங்கி - கவர்ந்துகொண்டு. வாவும் - தாவிச்செல்லும். வளியென - காற்றுப்போல.

யாக்கையின் : இன் : இரட்டுறமொழிதல்.

நோய் இல் உடலின் - நோய்க்கு மனையாகிய வுடலினின்று.

ஆறும் : ஆறனையும்.

போதும் : இரட்டுறமொழிதல் : புறப்படும் ; வந்துபுகு மென்ற வாறு

ஈண்டிறைவனென்ற நிறைவன்கூறுகிய மன்னுயிரினை. ஆவது: எனைமன்னுயிர்களை யியக்குநிலையாகிய விறைவனிலை.

கூ. செவிமெய் விழிவாய் மூக்கு நெஞ்சென
விவையா றனையு மிருக்கை கொண்டோ
னைம்புல மெதிரேற் றருந்துமா
லும்பரொ டிம்பர்மற் றொழிந்த விடனே 561

இருக்கை கொண்டோன்: இருப்பிடமாகப்பற்றி நின்ற விறைவன்.

மூவுலகினுமருந்தும். அருந்தும் - நுகரும். ஆல்: அசை. எனவே உயிரு மிறைவனு முடனருந்துதல் பெறப்படும். உயிரருந்துதற் பொருட்டிறைவனருந்தும்; அதுவே அவற்றை யவனருந்துவித்தலு லாம்.

கo. தாளாண் புணரியர் தம்முட னிற்குங்
கேளாந் தன்னைக் காணநிற்ப
தாளாண் மையரு மாணராயி
னவற்கா ணுணர்வில ராதலி
னவர்க்காண் கல்லா ராவரெனவே. 562

தாளாண்புணரியர் - முயற்சியுடைய புணரியர். தம்முடனிற்குங் கேளாகின்ற தன்னை யென்க. உடலின்கணிற்கு மெனவிரிக்க.

தன்னையென்றது மேல் வாழுயிராகி நிற்குமென்ற விறைவன் கூற்றினை.

மாணுமை: புணர்ப்புப் பயின்று நெஞ்சடங்காமை. அவற்காண்- அவ்விறைவனைக்காணும்.

மன்: அசை.

இதனான் மேற்கூறியவா றிறைவனை முயற்சிக்க ணறியலாமா யினு மங்ஙனமறியு நோக்க மில்வழி யறியலாகாதெனவு மந்நோக்கமு நெஞ்சடக்க மெய்தியவழியே தலைப்படுமெனவு முணர்ந்துகொள்க.

அவரைக் கல்வியறிவில்லாரெனக் காண்என்க.

கக. ஞால முழுதுஞ் சாலத் தெளிக்கு
ஞாயிற் றின்க ணண்ணுஞ் சுடருந்
தண்கதிர் மாட்டுத் தங்குஞ் சுடரும்
பொங்கெரி யகத்துப் பொருந்துஞ் சுடருமென்
றிங்கிவை யெல்லா மெனவவென்
றெங்கணு மியலு மென்னை யுணரே 563

தெளிக்கும் - தெளியவிளக்கும். சுடர் - ஒளி. தண்கதிர் - திங்கள். பொங்கெரி - எழு நெருப்பு. எனவ - என்னுடையன.

இவை யெல்லாமென்ற திவைபோல்வன வெல்லா மென்றவாறு.

இவற்றை யிறைவனுடையகூறென வுணர்தலிறைவனையுணர்தலாமாறு காண்க.

இதனு லுயிரில்லனவாகிய வவைதாமும் வாழுயிராகிய விறைவனை யுடைய வென்பது துணியப்படும். இவ்வுயிரில்லனவெல்லா மொவ்வொரு வாழுயிரே யுடையன. உடம்புகளெல்லா மிவ்விரு வாழுயிருடைய. இறைவனுகிய வாழுயிர்வேறு. இறைவனல்லா வாழுயிர்வேறு.

இயலும் – இயங்கும்.

இது முதலாறு பாட்டு வரையுமிறைவன் கூறுகிய மன்னுயிர் சில வெடுத்துக் காட்டப்படுகின்றன. அவை: மூவொளிச்சுடர் முதலாயின. எனவே அவ்வப் பொருள்களின் ஆற்றல்க டொறும் புலப்படு மிறைவன் றேற்றரவுகளாயின.

கஉ. நிலத்துப் புக்கு நீடுயி ரெல்லாம்
வலத்த வாற்றல் வளத்தி னனே
யேந்தி நிற்பல் யானித னகத்து
மாந்து மின்சுவை மருத்துப் பிழியாய்
மருத்துப் புன்மரம் வளர்ப்ப
லருத்தி யின்னுயி ராக்கற் பொருட்டே. 564

நிலத்தை யேந்தி நிற்றலா னிதன்கண் மேன்மேலுளவாகு முயிரெல்லாவற்றையு மேந்திநிற்பலென்றான்.

வலத்தவாற்றல் - வெற்றியுடையவாற்றல். எல்லாராற்றல்களினு மேற்பட்ட வாற்றலென்பதாம். ஆவது: தூமருள்.

வளம் - மடிவில்லாத பெருக்கு.

இதன கத்து - இந்நிலத்தின்கண்.

மாந்தும் – உண்ணத்தகும். பிழி - சாறு.

மருந்தாகிய புல்லு மரனும் வளர்ப்பேன்.

பேரருளுடைய கடவுட்கெல்லாவுயிர்களுமினியனவாதலி னவை யின்னுயிரெனப்பட்டன.

அருத்தி - ஊட்டி. ஆக்கற்பொருட்டு - உண்டாக்கற்பொருட்டும் வளர்த்தற்பொருட்டும்.

கங. நான்சார்ந் துள்ளேன் ஞாலங் கிழானென
வூன்சே ருடம்புதொ றுரவோ யின்னு
முயிர்ப்பு வளியு முயிர்ப்ப லுயிர்ப்புமாய்ப்
பயிர்ப்பி லுணவு பாத்தந் துடனு
ணற்றிறச் செவ்வி நயப்பப்
பாற்படுத் துயிர்க்கும் பரிசுசெய் குவெனே. 565

ஞாலங்கிழான்: ஓராரணங்கு. அவன் யாக்கைதொறும் வயிற் றழலா யிருந்துணவுகளைத் திரித்துச் செவ்விப்படுத்துவனென்ப.

ஊன்சேர் - ஊன்றிரள். ஊன்சேராகிய வுடம்பு.

உரவோய் ஊன்சேருடம்புதொறு ஞாலங்கிழானென நான் சார்ந்துள்ளேனென மாறிக்கூட்டுக.

இன்னும் – மேலும்.

உயிர்ப்பல்லாத வுயிர்ப்பென்றது உடலுளீழிகாற்றினை.

உயிர்ப்பலுயிர்ப்புப் பவ்வீ காலச்செய்யுமுகத்தானே வயிற்றுணு மாற்றத்துக்குத் துணையெனப்படும்.

பயிர்ப்பு - அருவருப்பு. பாத்தந்து - பிரித்து. நாற்றிறம் - நாற் கூறுபாடு.

செவ்வி : உடம்புக்கு வேண்டுமளவாகிய மாற்றம்.

நாற்றிறச்செவ்வியாவன : சோரி, புலால், சில்லுவரி எருவென விவையாதலாம்.

பாற்படுத்து - கூறுபடுத்து. நாற்றிறச்செவ்வியாகப் பாற்படுத் தென்க. நயப்ப - மகிழ.

உயிர்க்கும்பரிசு - சாவாதுவாழுந்தன்மை.

கச. என்ன நெஞ்சினும் யான்புக் குறைகுவெ
னெண்ணம் புலமை வெண்மை யென்றிவை
யென்னின் றெழுமென வெண்ணுதி யானே
பனுவன் முற்றும் பன்னும் பொருள்யான்
சொல்லிசை நூன்முடிவு சொற்றனெ
னல்லிசைப் புலவனு நானென வணங்கே. 566

என்ன நெஞ்சினும் - எல்லா நெஞ்சினும்.

எண்ணம் - பொச்சாப்பின்றி நினைத்தல்.

புலமை : இயற்கையுணர்வொடுகூடிய நூலுணர்வ.

வெண்மை: எண்ணமும் புலமையு மில்லாமை. வெறுமை யென்பதாம்.

என்னின்றெழும் - என்னி னின் றுண்டாகும்.

பன்னும் - வழுத் தீர வாராய்ந்து சொல்லும்.

சொல்லிசை : பொருள் விளங்குமாறு சுருங்கச் சொற்களை பிசைத்த. இசைத்தல் - இணைத்தல்.

நூன்முடிபு - மெய்யுணர்வு நூல்.

சொற்றனென் - சொல்லினேன்.

நல்லிசைப் புலவன் - கற்றுவல்லனாகிச் செய்யுள்பாட வல்லு நனும் செய்யுளுரைக்கவல்லுநனுமாம். முப்பாலாசிரியர் வள்ளுவ னுரை நான்முகனென்றதூஉ மிதுபற்றி யென்க.

இக் கடவுள் சொல்லணங்கு; நாமகளென்பாரு நாமகனென் பாருமுளர்.

கரு. இருசா ராகவர் யாண்டு முளரா
லொருசா ருலவ னொருசார் நிலவ
னுலவ ரெல்லா வுயிருமா
நிலவன் முதல்வ னீயிது நினையே. 567

ஆகவர் - ஆகமுடையார். ஆகம் - உடம்பு.

ஆகவ ரிருசாரு ளொருசாராகவன் உலவன்; ஒருசாராகவன் நிலவன். உலவன் - உலத்தலுடையான். உலத்தல்: சாதலுங் கெடுதலுமாம். நிலவன் - நிலவுதலுடையான். நிலவல்: சாவாமையுங் கெடாமையுமாம். நிலவன் உலவன்: முறையே இறைவன் கூற்று மன்னுயிர் எனை மன்னுயிரென்றிவ் விருசாருமாம்.

உலவன்: இனஞ்செப்பல்: வெற்றிலை தின்றானென்பதுபோல.

உலவரென்றது சிறப்புப்பற்றியுயர்திணைப் பன்மைச்சொல்லானுயிர்முற்றுங் கூறியவாறும். ஆகவரென்றதூஉமது. முதல்வன்: எல்லாவுயிர் மரபுகட்கு முதல்வனாகிய வொருவன்: இம் முதல்வனெல்லாவுயிருடல்களினு மிருக்கும் பொதுவனாவன்.

கசு. ஒருவனென் றோது முயர்தனித் தலைவ
னொருமுஞ் ஞாலமு முள்புக் கேந்துந்
திருவின் செல்வன் சிதைவிலன்
மருவின் வண்பெரு மன்னுயிர் மற்றே. 568

தனித்தலைவன் - ஒப்பற்ற முதல்வன். சிதைவு - கேடு.

மருவின் - மருவுதற்கினிய. எனை மன்னுயிரின் வேறுபட வண்பெரு மன்னுயி ரென்றவாறுணர்க. மற்று: அசை.

இது நிலவனின்னனென்றது. இவனிறைவன் கூறு பலவற்றின் பொதுமை.

கஎ. எப்பொருட் டானே யீற்றுயிர்க் குப்பா
லப்பரி சாகா வவனின் யான்மே
லப்பொருட் டானே யாண்டகை யானெனச்
செய்யுளும் வழக்குஞ் சேர
மெய்யுறப் புகழ்ந்து மிகவாழ்த் தும்மே. 569

ஈற்றுயிரென்றது மேலுலவரென்ற வாகவரை. உப்பால் - மேல்.

அப்பரிசாகா வவன்: உலவ ருலக்குமாறு போலாத வவன். என்றது நிலவனை.

அவன்பொதுவன்; அவனிற்காட்டினு மேலாவான்முதல்வன்.

அப்பொருட்டானேயென்ற தங்ஙனமெல்லாரினு மேலாகி யினி, மே லில்லா திருத்தலாகியபொருட்டா னென்றவாறு.

யானாண்டைகை யெனச் செய்யுளும் வழக்கு மொருங்கு வாழ்த்துமென்க. ஆண்டகை - நம்பி. எப்பொருட்டான்யான் மேலோ அப்பொருட்டானே யானாண்டைகை யென்று வாழ்த்தும்.

இங்ஙனங்கூறித்தனக்கு மேலாளில்லை யென்கின்றமையின் இப்பால் ஆண்டகையியலாயிற்று.

கஅ. மம்மர் தீர்ந்த வாலிய வுணர்வினே
னென்னை யிவ்வா றாண்டகை யென்று
செவ்விதிற் றெளிதரு செம்மல் யாவன்
சொற்றகு மவன்காண் முற்றுணர் வாளன்
றெற்றென வுணர்க செல்வ
வெற்றினு மெண்ணி யெற்றொழு மவனே. 570

மம்மர் - அறியாமை. வாலிய - தூய.

செவ்விது : ஐயந்திரிபின்றி. செம்மல் - பெரியோன்.

சொற்றகு - புகழ்க்குத்தகுந்த.

செல்வ ! அவன்எற்றினுமெண்ணியெற்றொழும். இதனை நீ தெற்றென வுணர்கவென்க. இதனை நீயென்பது சொல்லெச்சம்.

எற்றினும் - எவ்வாற்றானும். முழுமுதற்கடவுள் வழிபாட்டானுந் தனித்தனிக் கடவுள் வழிபாட்டானுமென்றவாறு. எற்றொழும் - என்னைவணங்குவான் ; முற்று.

கசு. திருத்தகு புலவ சிறந்த வற்ற
முருத்தகு பனுவ லுரைசெய் தனனிவ்
வுய்வ துணர்தரு முயர்ந்தோன்
செய்வ செய்து தீர்ந்தோன் றானே. 571

திருத்தகுபுலவ ! நல்லூழாற் றக்க புலவனே !

அற்றம் - மறை. உரு - உட்கு : பெருமைகண்டஞ்சிப்பேணுதல். அற்றம்பனுவல் : ஒருபொருட்பல்பெயர். உய்வது - உய்தற்கு வாயிலாகியமறை. ஈண்டுப்பனுவலெனவும் அற்றமெனவுங் கூறிய திவ்வாண்டகையியற்பால்.

தீர்ந்தோன் : செயலினீங்கினேன்.

செய்வ செய்து தீர்தல் : செயலெல்லாஞ் செய்து முடித்தான் போன்று செயல் யாதும் வேண்டாமையாம். செயலி னூதியம் வேண்டாமையாற் செயல் யாதும் வேண்டாமையாயிற்று. எனவே செயலெல்லாவற்றின்பேற்றைக் காட்டினு நனிமேலாய தன்னைத் தான்பெறுதலாகிய தற்காட்சிப்பே றுடைய னென்றவாறாம்.

உயர்ந்தோன் றான் செய்வ செய்து தீர்ந்தோனெனக் கூட்டுக.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப் புலமை.

புணர்ப்பியற்பனுவல்

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பதினைந்தாவது பால்.

ஆண்டகையியல்

முற்றும்.

ஓமுதுமெய்

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினறுவது பால்.

உம்பர் வம்ப ருடைமை.

க. அச்ச மின்மை யகனமர் தூய்மை
யொருமைப் புலமை யூற்ற மீகை
யைம்புல னடக்கம் வேள்வி யாற்ற
லரும்பெரு வாய்ச்சொ லான நவிற்சி
நோன்பு நேர்மை நோவியற் றுமை
வாய்மை யன்பு வண்பெருந் துறவு
தண்மை புறங்கூ றுமை தண்ணளி
படர்நெஞ் சுறுமை பணிவு நாணந்
தெருமர லின்மை திட்ப மொளியொடு
பொறுமை தூய்மை யறைபோ காமை
தற்புக ழாமையென் றிப்பரி சியம்பிய
வாறுதலை யிட்ட வாயிரு பத்தொடு
வேறுபல வன்னவும் விளம்பி
னேறுபுக ழாரணங் குடைமையர்க் கெழுமே.

அகனமர் தூய்மை - உள்ள மேவிய தூய்மை. ஆவது: எவ்வுயிர்க்குங் கேடு சூழ்த லின்மை.

ஒருமைப்புலமையூற்றம்: புலமையாகிய வொருமைக்க ணூன்றி நிற்றல். புலமையாகியவொருமையாவது புலமையல்லது வேறில்லாவாறஃதிடையறுமை. புலமை - ஆராய்ச்சியுடைமை.

ஈகை: தன்பா லுள்ளதனை யேற்றவர்க்குமாற்றாது கொடுத்து மகிழ்தல்.

ஐம்புலனடக்கம்: அவற்றைச் சென்றவிடத்தாற்செலவிடாது தீதொரீஇ நன்றின்பாலுய்த்தல்.

வேள்விசெய்தலாவது தன்பாலிரவாதநல்லோராகியகடவுளர்க்கு மக்கட்கும் பிறவுயிர்க்குந் தான்முயன்ற வூதிய முழுதுங் கொடுத்தல்.

அரும்பெருவாய்ச்சொலான நவிற்சி: அறத்தினையாதன் மெய்ப் பொருளையாதல் தொகுத்துரைக்கு மொரோவொரு சிளவிகளைப் பலகா லிடை யறுது நவிலுதல். ஆனது நவிலற்பாலதனைப் பிறர்செவிப் புலனுமளவுசொல்லி னுடம்பு தளர்வெய்திப் பின் சிறிதுஞ்சொல்லலாகாதொழியுமாகலானும் அறிவிலாப்பயல்க ளிகழ்தல்கூடுமாகலானும் தத்தமஅகவபினுணர்த்தற்பாலதாய்த்தத்தநெஞ்சிற்குக்கூறற்பாலதென்பதுபடாதாய்க் கேட்பாரின்றிக் கிளக்கும் பயனில்கூற்றெனவெள்ளப்படுமாகலானும் பிறவாற்றானும் பிறர்செவிப்படாவாறு

மறைத்து மொழியக்கடவதென்பது தோன்ற அருவாய்ச்சொல் லெனப்பட்டது. பெருமை பயத்தலிற் பெருவாய்ச்சொல் லெனப் பட்டது. பெருமையாவதிடையூறுகளை வெல்லுதற்றன்மை. தன் பொருளைத் தப்பாது பயத்தலுடைத்தாதலின் வாய்ச்சொல் லெனப் பட்டது.

நோன்பு: ஐம்புலத்துன்பங்களை யாக்கிக்கொண்டு நோன்றல்.

நோவியற்றுமை - இன்னாசெய்யாமை.

வாய்மை: எவ்வுயிரையு மறைத்தொழுகலுறுமை; மறைந்தொழு காமையன்று.

வண்மையாகிய பெருந்துறவாவது பிறவுயிர்நலத்தின்பொருட்டுத் தன்னய மறுத்தல். அவை முல்லைக்குத்தேரு மயிற்குப்போர்வையு மளித்தல், விழியு முயிருமுவந்துகொடுத்தலென் றின்னோரன்ன.

தண்மை: செத்தினும் போழினுஞ் சிவிகையேற்றினு நெஞ் சோர்ந் தோடா நிலைமை.

தண்ணளி: உயிர்களின் றுன்பம் பொறுமையாகிய குளிர்ந்த வருள்.

படர்: நீளநினைந்துகொண்டிருத்தல். நெஞ்சுபடருருமையென்க.

பணிவு: செருக்கின்மை.

நாணம்: பழியஞ்சுதல்.

தெருமால் - கலக்கம். திட்பம்: கலங்காமையிற்றிறம்பாமை.

ஒளி: பிறர்கண்டுபேணுமுட்குடைமை.

பொறுமை: ஒருவர் தமக்குப் பிறர் செய்த தீங்குகளைப் புறக் கணித்தலு மறத்தலும்.

தூய்மை: நீரான் அமையும் புறத்தூய்மை.

அறைபோகாமை: தம்மைத் தேறிய பிறர்க்குத் தீங்கு மறுத்தல்.

அன்னவேறுபலவும் - அவைபோல்வன வேறுபலவும். இவற்றுக் கிடக்கை முறையு முய்த்துணர்ந்துகொள்க. ஏறுபுகழ் - உயரும்புகழ். ஆரணங்கு - கடவுளர். உடைமையுடையார்க்கு. உடைமை: உடைய நினைவு சொற் செயல் விழைவு நுகர்வுகள். எழும் - உளவாம்.

உ. தற்புனை வென்று வெக்கழுத் தம்மே
தற்சிறப் பென்று தகைவில் சினநெடு
கடுஞ்சொற் கல்வி கல்லாமை
யிடும்பை வம்ப ருடைமையர்க் கெழுமே. 575

தற்புனைவு - தன்னைத் தான் புனைந்து காட்டுதல். எக்கழுத்தம்: பெரியோர்ப்பேணா திறுமாத்தல்.

தற்சிறப்பு - தன்னைப் பிறர் பேணுவிக்க முயலுதல்.

தகைவு - தடுத்தல்.

இடும்பைவம்பர் - பிறவுயிர்க் கிடும்மைசெய்தலுந் தாமிடும்பை யுறுதலு முடையதகுவர். நிலையின்றி யாண்டுந் திரிந்து குறும்பு செய்பவராதலின் வம்பரெனப்படுவர். வம்பு - நிலையின்மை.

என்ரு : எண்ணிடைச்சொல். கல்லாமையென்றின்னோரன்ன வென்னுந் தொகைச்சொற் றெக்கது.

ந. ஒளிய ருடைமை யுய்திப் பொருட்டா
மிளிய ருடைமை யிருஞ்சிறைப் பொருட்டாங்
களிகொள் காவல கவல
லொளிய ருடைமை யுற்றனை யெனவே. 576

ஒளியர் - உம்பர். உய்தி - துன்பங்களிற்றப்புதல்.

இளியர் - தகுவர். இளி : ஒளியில்லாமை.

சிறை : பிறவிச் சிறை.

காவல! நீ யொளியருடைமையுற்றனையெனக் களிகொள். கவலல் : மறையேவல்.

ச. ஒளிய ராத லிளிய ராதலென்
றளிய வுயிர்ப்பிறப் பாயிரு பால
வொளிய ருடைமை யுரைத்தனெ
னிளிய ருடைமையு மியம்புவ லினியே. 577

அளிய - இரங்கத்தக்க. ஆயிருபால - அவ்விருவகைப் படுவன வாம். எவ்வுடைமையு மிவ்விருகூற்றின் வேறுதலில்லை.

உரைத்தேனென்றது இந்நூன் முழுது முரைத்துப்போதுவததுவாதலையுட் கொண்டு.

இயம்புவல்: சிறிது விரித்துச் சொல்லுவேன். இனி-இப்பொழுது.

ரு. நிகழ்ச்சி வினையு மீட்சி வினையு
மிகழ்ச்சி செய்வ ரிளியர் பான்மையர்
தூய்மையு மொழுக்கமுந் தோயார்
வாய்மையுங் காவார் மடமை யானே. 578

நிகழ்ச்சிவினை : நன்முயற்சி பல செய்தொழுகுதல்.

மீட்சிவினை : அவைபிற்றை விட்டுவிட்டடங்கி யொழுகுதல். வினையெல்லாமிவ் விருபாற்படும். நிகழ்ச்சி வினையாவன வேள்வியு முயற்சியுமாமெனவு மீட்சிவினையாவன நோன்பும் புணர்ப்புமாமெனவுங் கொள்க.

இளியர் பான்மையர் - தகுவர்தன்மையுடைய மாக்கள். தகுவர்: உம்பர்க்கு நேர்மாறுயவம்பர்.

தூய்மை : இனந் தூய்மை, செய்வினை தூய்மை, புறந்தூய்மை யென்றிவை. எனையுளத்தூய்மை வாய்மையெனப்படும். உயிர்த் தூய்மை வீடுபேறெனப்படும்.

ஒழுக்கம் : பெரியோர் வெறுப்பிற் கஞ்சி யொழுகுதல்.

தோயார் - தீண்டார்.

இளியர் பான்மையர் மடமையான் இகழ்ச்சிசெய்வர் தோயார் காவாரென வினை முடிவுசெய்க.

சூ. நாட்டப் படாதது ஞாலம் பொய்யே
காட்டப் படாதது கடவுளை யுடைத்தென
வியைபின் றியல்வ தியைவது காம
நுகர்வின் பொருட்டென நுவல்வ
ரிகழ்வி னிளிய ரிழுதையர் தாமே. 579

நாட்டப்படாதது : உண்மையென்று நிலை நிறுத்தப்படாதது. பொய் - இல் பொருள்.

கடவுளையுடைத்தெனல் காட்டப்படாதது.

காட்டுதல் - மெய்ப்பித்தல்.

இயைபு - தொடர்பு : பொருட்டாக்கத்தொடர்பின்றி வாளா தோன்றுவதென்றவாறு.

காமநுகர்வின் பொருட்டியைவது : வினையினீங்கிவீடுபெறுதற் பொருட்டன்றென்பதுகருத்து.

இகழ்வினை யுடைய விளியரெனச் சாரியை நிற்ப விரண்டாவது தொக்கது.

பிறரையிகழ்தலோடு நுவல்வரெனக் கூட்டி யுரைப்பினுமாம்.

இளியரிழுதையர் : ஒருபொருட்பல்பெயரடுக்கு.

இளியரிழுதையர் தாம் ஞாலம்நாட்டப்படாதது; பொய்யே; கடவுளை யுடைத்தெனல்காட்டப்படாதது; இயைபின்றியியல்வது; காமநுகர்வின்பொருட்டியைவதென நுவல்வரென வினைமுடிவு செய்க.

இப்பாட்டிற் கூறிய கொள்கை புத்தருடையதன்றி யுலகாயத ருடையதன்றென்பது ஞாலம் பொய், நாட்டப்படாததென்றதனாற் றுணிபப்படும். இதனாலிதன் முதனூல் புத்தர் நாளைக்குப்பிற்பட்டது போலுமென்பதாராயத்தக்கது. அல்லதூஉ மிக்கொள்கை முழுது மொருவ்கு வேறு சாங்கியர் மீமாஞ்சகர் ஆருகதர் முதலிய கடவுள் கொள்ளாவெச்சாரார்க்கு முரிமையன்மை நினைக்க. எனவேயிதன் முதனூலிற்றைக்கியாண் டீராயிரத்தைந்நூற்றுக்கு முற்பட்டதன் றென்பதுதேற்றம். இதனையுடையமாபாரத மிதனினும் பழை தெனெக்கோடுமே லதன்க ணிவ்வொருசெய்யுளாத லிந்நூன்முழுது மாதலிடைச்செருகலெனக் கோடல்வேண்டும். அல்லதூஉ மாபாரதச் செய்யுளாசிரியரு மிச்செய்யுளாசிரியரும் வேறுவேறுவான் செல் லும். இவ் வடநூலாசிரியர் தாஞ் செய்ததாக வழங்கப்படுமொரு புராணத்தும் புத்தன்பிறப்புத் தகுவரை மருட்டிக்கெடுத்தற்பொருட்டு வந்த திருமால்பிறப்பெனக்கட்டியதனானு மிச்செய்யு ளிவர்பாடிய

மாபாரதத்து இடைச்செருகலெனக்கோடலினுமிவரேயாத்ததாகக் கோடலிழுக்காகாது. அற்றுயிற் பாரதர்நாளை வாதராயணனுரென் பவர் இவ்வடநூலாசிரியராகிய வாதராயணு ருடைய மரபுமுதல்வ ரென்றுதல் புனைந்துரையிற் படைக்கப்பட்டவரென்றுதல் கோடல் வேண்டும். இவர்முன்னோராகிய பாரதநாளைவாதராயணனுரே வேத முற்கூற்றுத்தொகுத்தாரெனவும் பாரதம்பாடியவாதராயணனுர்அது தொகுத்திலரெனவும் அதன்பிற்கூறும் மாபாரதமும்பிரமசூத்திரமும் பிறவுஞ்செய்தவரெனவுங்கோடல் பொருந்தும்போலும். இந்நூற்கட் சாங்கியமுதலிய கொள்கைகளு மெடுத்தோதுதலான் அந்நூற்கெல் லாம் பிற்றோன்றிய திந்நூலென்றல் வேண்டும். இங்ஙனம் பிற்பட்ட நூலாசிரியராகிய வாதராயணனுர் தமக்கு முன் கேள்விமரபாற் கூறப்பட்டு வந்த பாரதர்வரலாற்றைப் புனைந்துரை தலைப்பெய்து விரித்துப் பாடியவராதல்கூடும். அன்றியு மிவர்நாளைக்குச் சிறிதுமுற் றெட்டுத் தான் வடமொழிக் கையெழுத்துப் பிறந்திருத்தல்வேண்டு மாதலானும் வடமொழிக்கையெழுத்தில்வான்மீகியார்க்குப் பின் னூலெழுதியவ ரிவரென்பது பெறப்படுதலானு மேறக்குறைய விவ ரிரண்டாயிரம் யாண்டுகட்கு மேற்பட்டவ ரென்றல் பொருந்தாதாய் முடியும். ஆரியருட்பெரும்பாலார் தம்மினநன்மையின்பொருட்டுச் சிறிது நாணுது பொய்புனைதல்வல்லுநராதலி னவர்கூறுமாறு கொண்டு வரலாற்றுண்மை துணியப்படாது.

ஏ. கண்ட வாறே காட்சி யென்றுதாங்
கொண்ட வாறே கொண்டொழி கேடிகள்
புல்லறி வாளர் புலைபர்
வல்லவர் தம்மொடு வையங் கெடுத்தலே. 580

கேடிகள் - குற்றவாளிகள்.

புலையர் - தீண்டத்தகாதவர். பிறர்புலையரல்லரென்பதாம்.

தம்மொடு வையங் கெடுத்தல் வல்லவரென்க.

ஐம்புலவிருப்பத்திற் கியைந்த கொள்கைகளைக் கூறின் வையம் விரைவிற் கைக்கொள்ளுநொய்யவுணர்வுடையதாதலி னிவர்கொள் கையை விரைய வேற்று மற்றை நுண்ணுணர்வுடையோர் கூறுங் கொள்கைகட் கிடையூறு விளைப்பதாகலின் வையங் கெடுத்தல் வல்லவரெனப்பட்டார்.

அ. ஆராக் காம மார்ந்து வைகலுந்
தீராச் செருக்கொடு சேர்ந்துகண் ணின்று
தற்புனைந் தெங்குந் தற்சிறப் பித்துப்
புற்கெனு மயக்கிற் பொருத்தமில் கோட்பா
டேற்றுப் புலைகொ ளிழித்தகு நோன்பு
போற்றி மிக்குப் புறமுந்
தூற்றி யுழல்வ திழிஞர் தொழிலே. 581

ஆராக்காமம் : எத்துணைநாள் எவ்வாறு நுகரினு நுகராதது போன்று நிரம்பாத காமம். ஆர்ந்து-நுகர்ந்து.

உலகோர் தம்மையிகழாநின்று வெறுப்பவு நோக்காது தந் நினைவே தாஞ் செய்து திரிதலிற் கண் ணின்றென்றவாறு.

புற்கெனும் - பொலிவில்லாத.

புலை : புலாலுண்டன் முதலாயின.

தூற்றுதல் - அலர் கூறுதல். இழிஞர் : தகுவர் பாற்பட்டவர்.

அவற்றையே நினைந்து மேன்மேற் செய்துகொண்டிருத்தலே கடைப்பிடித்தலின் அவை அவர்க்குத் தொழிலாகும்.

கூ. பன்னூ றுயிர மல்ல பற்பல
வின்னா வெண்ண மெண்ணி வெள்ள
வூழி காறு மோவா விழைவு
நிரப்ப வுழிதர னெடிது கன்றித்
தத்தமக் கற்றது சால முடிந்த
வத்தகு முடிபிது வாகுமா லெனக்கொண்
டெனைத்தும் வேட்கை யென்னுங் கயிற்றிற்
பிணிப்புண் டையகோ பெருக்கிய காமமொ
டிவர்சினப் பாற்பட் டிணைவிழைச் செய்த
விழிகொடுஞ் செயற்க ணிழிந்தன ராகி
யேனோர் கைப்பொரு ளெடுக்கிய
வாஅ தலைத விளிஞர்க் காவதே 582.–583.

இன்னா வெண்ணம் : துன்பஞ் செய்வனவாகு மெண்ணம். பன்னூறுயிரமல்ல, அவற்றின்மேலும் பலப்பலவாகிய நினைவென்க.

வெள்ளம் : கோடியின் மேற்படு மோரெண்ணின் பெயர். வெள்ளவளவாகிய வூழிகாறு மொழியாத விருப்பங்களை நிரப்பு தற்குத் திரிந்தலைதலில் நெடுநாளடிப்பட்டென்க.

அற்றது - முடிந்தது. எனைத்தும் வேட்கை - எவ்வளவுமாகிய வேட்கை.

பெருக்கிய காமமென்றதனான் அது பெருகாத வழியுந் தாமதனைப் பெருக்குவ ரென்பது தோன்றும்.

இவர் சினப்பாற்பட்டு - படர்கின்ற வெகுளியின் பாற்பட்டு. இணைவிழைச்சு - மெய்யுறுபுணர்ச்சி. எடுக்கிய : ஏமாற்றிக்கவர் தற்கு.

ஆவது : ஆகக்கடவது ; நல்லதாவதென்றுமாம்.

௯0. இஃதின் றென்ன லெய்தப் பட்ட
திஃதென் னெண்ண மினியிஃ தெய்துவெ
னிஃதெற் குளதா விதுவே யன்றி
யின்ன பொருளு மெனக்குள தாகு
மின்ன பகைஞரை யான்கொன் றொழித்தே
னேனைப் பகையையும் யான்கொன் றொழிப்பேன்
யான்பெருங் குரிசில் யானுகர் வாளன்
யானன் பெற்றியன் யானன் றிண்ணியன்
யானு னயவன் யானன் செல்வன்
யானன் கேளி ரினப்பெருக் குடையே
னின்ன வாற்று னென்னிகர் யாவர்?
நன்னர் வேட்குவ னல்குவன் மகிழ்வ
னென்று மயலி னன்று மூழ்கித்
துன்று நனிபல தொக்க நினைவொடு
மாழாந் தரில்படு மயல்வலை யகப்பட்
டாழாந் தமையா தலைவலை மாக்க
ளிடங்கழி காம நுகர்வி னீர்ப்புண்
டருவருப் பாகு மளற்றிருட்
பருவரற் குழிபுகப் பதைத்துவீழ் குவரே. 584, 587

இப்பாட்டுத் தகுவர்பாற்பட்டோர் கொன்னே விழைவினை நினைக்குமாறு தொகுத்துக்கூறிப் பழித்துரைக்கின்றது.

ஊழினலெய்தற்பாலதனை யென்னலெய்தப்பட்டதென்றலறியாமை.

என்னெண்ணம்: யானெய்தவுஞ் செய்யவு நினைத்திருக்குமெண்ண மென்றவாறு.

எய்துதலொருதலையன்றாகவு மெய்துவனென்பான் பேதை.

பெற்றியன்: எடுத்த வெடுத்த செயல்களின் முடிவு பேறுடையேன்.

நயவன் - இன்பமுடையேன்.

நன்னரென்பதனை மூன்றற்குமாக்கிக்கொள்க, நன்னர்வேட்குவன் நன்னர்நல்குவன் நன்னர்மகிழ்வனென்றவாறு.

வேட்குவன் - வேள்விசெய்வேன். கடவுட்சிறப்புக் கோயில் கட்டுதன்முதலாயின செய்வேனென்பதாம்.

நன்றும் - மிகவும்.

துன்றுநினைவு: மேன்மேலிடையறு தடுத்தடுத்து வரு நினைவு.

மாழாந்து - மயங்கி. அரில்படு - தெளிவின்றிச் சிக்குப் படுகின்ற. மயக்கமாகியவலை. ஆழாந்து - ஆழ்ந்து.

அமையாது ஈர்ப்புண்டெல விழைக்க.

அலேவலே - தீமைசெய்துழலுதல்.

இடங்கழிகாமம் - எல்லேகழிந்தகாமம். செவ்வி நோக்காத காம மென்பதாம்.

அளறு : துன்பமேபயக்குங்கீழுலகு.

பருவரல் - துன்பம்.

புக : குழியி னடிவரையு மழுந்த.

கக. தற்சுட் டுடையர் சால முருடர்
பொறப்பற் றுளர் புன்செருக் குற்றோர்
வறும்புக ழார வாரப் பொருட்டிவர்
வெறும்புகை வேள்வி வேட்பார்
குறும்புரை யுணர்விற் கட்டளே கொன்றே. 588

தற்சுட்டு - தற்புகழ்ச்சி. பொறப்பற்றுளர் - பொருட்பற்றுடையவர். புன்செருக்கு - இழிந்தசெருக்கு. என்றது தன்னேப் பெரியோனென நினைத்துக்கொண்டு பெரியோர்ப்பேணுமை.

வறும்புகழ் : அப்புகழாற் றனக்குக் கிடைப்ப தொன்று மில்லாத புகழ்.

புகழாகிய வாரவாரம் : சொல்லளவாகியபுகழ்.

இவர் : சுட்டு; எழுகின்றவெனினும் விரும்புகின்றவெனினுமாம்.

வெறும்புகைவேள்வியென்றது சுள்ளிகளேயொடித்திட்டுக்குளிர் காய்தற்குமூட்டிய நெருப்புப்போலும் பயனில்லாத வேள்வியென்றவாறு. வேட்பாரென்பது வேட்பிப்பாரை யுணர்த்துமிடத்து வியவுள் விணேமுதன்மேல்வந்த தொழிற்பெயரென்க; உழுவார்போல. வியவுள் - ஏவுவோன்

புரையுணர்வு : ஓட்டையுணர்வு.

கட்டளே : இன்னவாறுவேட்கவென்றபணி.

கொடுமை மிகுதி தோன்றக் கட்டளேயைக்கொலேசெய்தென்றது.

கஉ. முனேப்பொடு மிடுக்குத் தருக்குக் காமஞ்
சிவப்பொடு கோட்டஞ் செய்யுநர் தமவொ
டெல்லா ருடலினு மிருக்கு மென்னே
டொல்லா ராகி யுடலும்
பொல்லா ரெனப்படும் புல்லிய ரெனலே. 589

முனேப்பு : யான்மேலென முன்வருதல்.

மிடுக்கு : வலிந்து குறும்பு செய்தல்.

சிவப்பு - சினம். கோட்டம் – அழுக்காறு.

தமவொடு : தம்முடையவுடல்களினும்.

ஒல்லாராகி - பொருந்தாராகி. உடலும் - மாறுபடும். மாறுபடுதலாவதுதான்மேலென்று நினேத்துக்கொண்டு தன்னலங் கருதிப் பிறர்நலம் பேணுமை.

பொல்லார் : பிறர்க்குத் தீங்கிழைப்பவர். புல்லியர் - இழிந்தவர் எனல் — என்க.

செய்யுநர் புல்லியரென்க.

கரு. வாழ்க்கையிற் கடைப்படு மாக்களைக் கொடிய
போக்கிலி களையென் பொல்லாத் தெவ்வரை
நளிய மடமையி னலிவுகொ
ளிளியர் பிறப்பிடை யெற்றுவென் காணே. 590

கொடிய - இரக்கமில்லாத.

போக்கிலி : தனக்கென வொருநெறிப்பட்டுப் போகும் போக்கில்லாதவன்.

நளிய - செறிந்த.

மடமையானே நலிவுசெய்தலும் நலிவெய்தலு மாகின்ற

இளியர்பிறப்பு : தகுவர்பாற்பட்ட விழிந்த வின்னாப்பிறப்பு.

எற்றுவென் : உதைத்து வீசித் தள்ளுவேன்.

கடவுட்குச் சினமென்னு மெய்ப்பாடு பிறந்தது.

அவற்குச் சினந் தன்பொருட்டாகாமையிற் குற்றமன்மையுணரப்படும். இதுவு மவற்கருளின்பாற்பட்டது; அவரை யுய்விக்குமா றது வாகலின்.

கசு. இளிய ரிழிபிறப் பெய்துந் தோறு
மளிய ரவர்தா மென்னை யடாமை
யின்னு மிழிபிறப் பிழிவர்
துன்னுந் தீவினை தொடர்த லானே. 591

அளியர் - இரங்கத்தக்கார்.

அடாமை - சாராமல். இன்னும் - மேலும். துன்னும் : மேன்மேல்வரும்.

இழிபிறப்பெய்துதலான் மேன்மேற் றீவினைசெய்து மேன்மேலிழித லல்லது சிறிது முய்திகூடுத லரிதாகுமெனத் தகுத ரியல்பு சார்தலின் கொடுமைகூறி யச்சுறுத்தியவாறு.

கரு. தற்கொல் படைக்கலந் தாழிருள் வாயில்
சொற்ற மூன்றுள தோன்ற லவைதாங்
காமம் வெகுளி கடும்பற் றுள்ள
மாமம் மூன்றுமென் றறிக
நாம வில்லோய் நைக்க நீயே. 592

தற்கொல்படைக்கலம் : ஒருவன் றானே தன்னைக் கொன்று கொள்ளும் படைக்கலம். தன்னியல்பாகிய வறிவு, அருள், அன்பு களைக் கொல்லுதலிற் றன்னைக் கொல்லும் படைக்கலமாயின.

இருள் - துன்புலகு. ஆழ்ந்த விருட்குப் போகும் வாயிலாகும்.

சொற்ற: புலவரெல்லாஞ் சொல்லிய.

படைக்கலமும் வாயிலுமாவன காமமுதலாய வம்மூன்றுமென்றறிக. அவற்றை நீ கெடுக்கக்கடவாயாகுக. அவற்றை: சொல்லெச்சம். நாம் - அச்சம். நைத்தல் - தேய்த்துத் தேய்த்து முற்றக் கெடுத்தல்.

கசு. ஏவிய வின்ன மூவிருள் வாயிலு
நீவிய மகனே நீணில மக்களுட்
டனக்கு மேன்மை தான்வரச் செய்தோ
னவற்கு விழுமிய வந்நிலை
கிடைக்கு மென்பது கிளத்தல் வேண்டுமே. 593

ஏவிய - சொல்லிய. நீவிய - கடந்த.

அந்நிலையென்றது பெரும்பொருளாதலு மீமிசைஞாலமெய்துதலுமாகிய நிலையை.

சுட்டு: புகழறிசுட்டு; நெஞ்சறிசுட்டுமாம்.

கிளத்தல்வேண்டுமே: ஈற்றசைவினைப்பொருளுமுடன் பயந்து மறை குறித்தது.

கிளவாமே யமையுமென்பது.

அவற்கு இம்மை மறுமை வீடுபேறு மூன்று மெய்து மென்றான்.

கஎ. விழைவிற் றூண்டி விடுக்கப் படுதலிற்
பனுவற் கட்டளை பழித்தெழு முட்டாள்
செயலி னூதியஞ் சேரா
னயமு மெய்தா னண்ணலன் வீடே. 594

விழைவினானுந்திச் செலுத்தப்படுதலானென்க.

பழித்தெழு: இகழ்ந்து கடந்து செல்கின்ற.

முட்டாள்: வழுவுதலுடைய ஆள்.

ஊதியம்: நன்மையாகிய பயன். அவை; அறனும்பொருளும்.

நயம் – இன்பம்.

நூற்பொரு ளுன்கு மடையா னென்றவாறு.

விழைவை யடக்கி யுணர்ந்தொழுகுதல்வேண்டுமென்பதனை வற்புறுத்தது.

கஅ. செயற்பா லனவு மல்லவுந் தேறப்
பயப்பா டுடைய பனுவல் சான்றெனப்
பனுவல் கற்றுப் பனுவல் பணித்த
வினைசெயக் கடவை வேந்துநீ
யினைவற வேண்டி னிவ்விய னிலத்தே. 595

தேற – தெளிதற்கு.

பயப்பாடு : நாற்பொருளுணர்த்துதலிற்பயன்படுதல்.

இதனுனே நாற்பொருள் பயவா நூல் கற்கப்படா வென்பதாயிற்று ; சில்வாழ்நாட் பல்பிணியுடைய மக்கட்காகாமையின்.

பனுவல் சான்ருகச் செயற்பாலன தவிரற்பாலன வுணர்ந்தொழுகல் வேண்டுமென்பதாயிற்று.

இனைவு - வருத்தம்.

இவ்வியனிலத்துத்துன்பமறவேண்டுவையாயிற் பனுவல் பணித்த பணிசெயக்கடவையென்ருன்.

வியனிலம் - அகன்றவையம். வியனிலத்தென வெடுத்தோதியதிது கல்விக்கும் வினைசெய்தற்கு மமைந்ததாகலிற் கல்வியும் வினையு மக்கட்கின்றியமையாதன வென்ப துணர்த்துதற்பொருட்டு.

இவை யிரண்டுபாட்டானுங் கடவுளருடைமையெய்துதற்கு வேண்டுவன கல்வியறிவொழுக்கமென்பதூஉங் கல்வியாற்கடவுளரியல்பின்னவென்பதுணர்ந்துகொள்ளலாமென வவையிற்றையெஞ்சாதறிதற்கு வழியுங் கூறப்பட்டன.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப் புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பதினருவது பால்.

உம்பர் வம்ப ருடைமை

முற்றும்.

ஓமுதுமெய்

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினேழாவதுபால்.

முக்கூற் றுள்ளம்.

க. கரியவ! பனுவற் கட்டளை விலங்கின
ரரியநல் லூக்கமொ டாற்றுப வேள்வி
யன்பவங் கவர்நிலை யாக்கம்
பண்பினுள் யாதன் பாற்படும் பிறவே. 596

விலங்கினராய். விலங்குதல் - நீங்குதல். உள்ளம் : உள்ளக் கிளர்ச்சி : ஊக்கம். வேள்வியாற்றுப.

அங்கு : அங்ஙனமாகிய. நிலையாக்கம் - நிலையாமாறு.

பண்பு : முக்கூற்றுப் பண்பு. பிற : அசை. இது வில்லிவினு. மேல நம்பி மாற்றம்.

உ. கிளர்ச்சி தாமே கிளந்த பண்பி
னிகழ்ச்சி யெனஅ நிகழ்த்தப் படுதலி
னொள்ளியல் புல்லியன் மையிய லெனஅ
வெவ்வுயிர் தமக்கு மியல்பா
வவ்விய கிளர்ச்சி வழக்கு மூன்றே. 597

கிளர்ச்சி : ஊக்கம். கிளந்த பண்பின் : மேற் கூறிப்போந்த முப்பாற்பண்பினுடைய.

நிகழ்ச்சி : எழுச்சி.

ஒள்ளியல் : ஒண்மைப்பண்பினிய லூக்கம்.

புல்லியல் : புன்மைப்பண்பினிய லூக்கம்.

மையியல் : மைம்மைப் பண்பினிய லூக்கம்.

இயல்பாக வுயிரைக் கவர்ந்து பிணித்த.

இது கிளர்ச்சிவழக் கித்துணை யென்றது. அம்மூன்று முறையே தலை, யிடை, கடையெனப்படும்.

ங. உடலுயிர்க் கவ்வவ வுள்ளத் தியல்பொடு
புடைபடக் கிளர்ச்சி புலப்படு மியல்பிற்
றூகவ னூக்கத் தமைதி யளவின
னூக்க மெவ்வா றுள துகொ
லாக்க மதுதா னகு மவனே. 598

புடைபட - சார்பாக.

கிளர்ச்சி யுள்ளத்தியல்பொடு சார்பாகப் புலப்படுமியல்பிற் றென்க. உள்ளத்தியல்பு: உள்ள மமைந்த வமைதி; விலங்குள்ளம், பறவையுள்ளம், மக்களுள்ளம், வானவருள்ளம், தூயவுள்ளம் அழுக் குள்ளமெனவமைதி வேறுபாடுபற்றியுயிர்தொறு முள்ளம் வேறுபடு மாறு காணப்படும்.

ஆகவன் - உடம்புடையவுயிர். ஊக்கமமைந்த வமைதியளவா யிருப்பான். அதனல்.

ஒற்றுமைவழக்கான் அவன் அவ்வூக்கமே தானக வாக்கமாகு மெனமுடிக்க. ஆக்கம் - அமைவு.

ச. ஒள்ளியன் மாந்த ரொளியரை வேட்ப
புல்லியன் மாந்தர் புகன்று வேட்ப
விளிஞரைக் களிமரை யிருளரை யென்க
மையியன் மாக்கள் வேட்டு வழிபடுந்
துணைவ ராவோர் தோன்ருப்
பிணவர் கூளிய ரென்றிவர் பிறக்கே 599

ஒளியர் - உம்பர். வேட்ப - வழிபடுவர்.

புகன்று - விரும்பி.

புல்லியன் மாந்தர் இளிஞரையுங் களிமரையு நிணவரையும் புகன்று வேட்ப வெனக் கூட்டிமுடிக்க.

இளிஞர் - தகுவர் களிமர்: ஒருசார்வெறியயரும் வல்லணங் குகள். இருளர் - நிணவர். இவர் பகலிற் றிரியாதிரவிற் றிரிவோராத லின் இருளரெனப்படுவார்.

புல்லியன்மாந்தர்: இடையாய பண்பினர்.

மையியன்மாக்கள்: கடையாய பண்பினர்.

துணைவராவோர் பிணவருங்கூளியருமென்றிவரென்க.தோன்ரு மாந்தர் கண்ணிற்குப் புலனகாத, பிணவர்: பேய்களுளொருவகை யார். கூளியர்: அவருள் வேறொரு சாரார்.

பிறக்கு: அசை.

இதனல் அணங்குவழிபாட்டுக்க மூன்ருயின.

ரு. பனுவ லல்லாப் பனுவற் பணிகொடு
பணிவற் றிறுமாந் தணிவுற் றெருசிலர்
வேட்கை விழைவு மிடுக்கொடு
பூட்கைக் கொடுந்தவம் பூணுந ருளரே. 600

பனுவலல்லாப்பனுவல்: அவரவர் தத்தமக்கு வேண்டியவாறு செய்துகொண்டநூல். பணி — கட்டளை. பணிவற்று - பெரியோர்ப் பணிதலின்றி. அணிவுற்று: தம்மைத் தாமணிந்து கோலம் பூண்டுஞ் சொல்லியும்: மழித்தல், நீட்டல், பறித்தல், பூசுதல், பூணுதல், போர்த்தல், ஊர்தலென்றின்ன செய்தல் பழியாம்.

மிடுக்கு – முருட்டுத்தன்மை.

பூட்கை - மேற்கோள்.

தாமேற்கொண்ட கொடுந்தவத்தை வேட்கை முதலியவற்றெடு மேற்கொள்ளுவா ரொருசில ருளரென்க. வேட்கைமுதலாயின: நாடாட்சி, கைப்பொருள் முதலாயின வேண்டுமென்னும் வேட்கை முதலாயின.

சூ. கொடுநோன் பாற்றுதல் குறிக்கொண் மடவோர்
படுநோன் யாக்கைப் பாற்பட வியல்பிற்
றுன்னிய வைம்புலத் தொகுதி தன்னே
டென்னையு மொருங்குட னிடர்ப்படுத் துவரா
லன்னவர் தகுவ ரவாஅய்
முன்னிய முடிபின ரென்னவிஃ துணரே. 601

கொடியநோன்பாவன: நெருப்பிடைநிற்றல், புனலுண்மூழ்கி யிருத்தல், பன்னாட் சிறிது முண்ணது பட்டினிகிடத்தன்முதலாயின. இவை நோன்புசெய்யாமையேடொப்ப நெஞ்சடங்கி யுயிரைநோக்கி நின்றெருவன்றதன்னைத் தா னுணர்தற்குத் துணையாதலில்லை. மூளை மயங்கினனேடொப்ப வுள்ளஞ் சோர்ந்தடங்கிக் கிடத்தலே யுளதாவது.

ஆற்றுதலைக் குறிக்கொள்கின்ற மடவோர்.

நோன் - வலிமை. நோன்படு – வலிமையுண்டாகின்ற. யாக்கை யின்பகுதியாக வியற்கையிற்செறிந்த வைம்புலத்தொகுதி யென்க.

யாக்கைப்பாற்பட வியல்பிற் றுன்னிய வென்னும் விதப்புக் கிளவி என்னையுமென்பதற்கும் பொது; யாக்கையு ளிருக்குங் கடவுளையு மென்பதாம்.

தொகுதிதன்னேடென்புழித் தன்னென்பது சாரியை.

இடர்ப்படுத்துவ ரென்றதற்கு அத்துணையே பயன் பிறிதின் றென்பது கருத்து.

அன்னவர் தகுவராயினர் தாம் அவாவிக் கருதிய முடிபுகளை யுடையவராவர்.

இவ்விருபாட்டானும் தகுவர்பாற்பட்டோர் நோன்பாற்றுமாறு கூறப்பட்டது.

எ. மன்னுயிர் விழையூஉ வாய்க்கொ ளுணவு
மும்மைய வாமரோ மும்மைய வாக
வேள்வியு நோன்பு மீகையும் விளம்புப
வாயிடை வேறுபா டாயவு
நீயிவட் கேண்மதி நெறிப்பட வினிதே. 602

விழையூஉ - விழைந்து.

உணவு, வேள்வி, நோன்பு; ஈகையென்றிவை முப்பண்பின் மாறப்பட்டுத் தனித்தனி மும்மூன்றுவகையவாமென்பது. அரோ: அசை.

ஆயிடை - அவற்றிடை.

இவண் : என்பால். மதி : முன்னிலையசை. நெறிப்பட - நல் வழிப்படுதற்பொருட்டு.

இப் பாகுபாடுணர்ந்து கடைப்பிடித்துச் செயினல்லதினிது நெறிப்படுதல் செல்லாதென்பது குறிப்பு.

இதனு லுணவு முதலிய நான்குந் தனித்தனித் தலை யிடை கடை யென மும்மூன்றுவகையவாயினவெனக்கொள்க.

அ. வாழ்ச்சி யூக்கம் வன்மை நோயிற்
றூழ்ச்சி யின்மை தகுநய மூவகை
யென்றிவை வளர்க்கு மியல்பின வாகிச்
சுவையவு நெய்ப்பவுஞ் சோரி முதலவாய்
நிலையே றுடையவு நெஞ்சு கவர்வவு
மின்னவை யொண்மை யியல்பின்
மன்னுயிர்க் காகு மாட்சி யுணவே. 603

வாழ்ச்சி : நெடுநாளைவாழ்வு. ஊக்கம் : மடியின்மை. வன்மை : யாக்கை தொழில்செய்தற்குப் போது மாற்றலுடைமை.

நோயிற்றூழ்ச்சி : நோயின்கட்டங்குதல்.

தகுநயம் - தக்கவின்பம்.

எனவே வாழ்ச்சிமுதலாக வெடுத்தோதியவாறு முணவினு லுளவாவன வென்பது பெறுதும்.

சுவைய : பழமுதலியனவாக வுண்ணுதற் கமைந்த வுப் புடையன.

நெய்ப்ப : பால், முந்திரிப்பருப்பு, தேங்காய்முதலியனவாக நெய்த்தன்மையுடையன.

சோரிமுதலவாய் நிலைபேறுடைய வென்றது பெரும்பாலுங் கோதுபட் டெருவாகாமற் சோரியும் புலாலுமுதலியனவாக மாறி யுடலுறுப்பாவன.

நெஞ்சு கவர்வ : அருவருப்பும் புலப்படாதகூட்டு முடையவா காது தூயவாய் நெஞ்சு விரும்புவன.

மாட்சி - நன்மை. இத்தகை யுணவு மருந்தெனப்படும். இவ் வகை யுணவு கொள்ளிற் கொள்வார்க்கு நற்பண்புநற்செயல்கள் வளரும். அல்லுழி அவைகெடும்.

இதுதலையாயவுணவு இற்றென்றது.

கூ. கைப்பொடு புளிப்பே கார்ப்பே யுவர்ப்பென்
றிச்சுவை யாகுவ விறப்பவும் வெதும்புவ
வுடற்றக விகந்தன வுலர்ந்தன வழல்வவென்
றின்னவை கவலை யயர்வுநோ யீன்பன
சொல்லிய வின்ன துப்புப்
புல்லியன் மன்னுயிர் புகலு முணவே. 604

இவை நான்கு மிகாதளவாகக் கலந்திருத்தலு முதற்பண்பினர்க் காகாது.

இறப்பவும் வெதும்புவன - மிகவும்வெந்தனவுஞ் சூடாயினவும்.

உடற்றகவு - உடற்றகுதி. அவையாவன காற்றுத்தட்பவெப்ப மென்னு நோயியல்புக் கேற்பனவும் விரையச் செவ்விப்படுவனவு மாதல்.

உலர்ந்தன : வெப்பந் தணிந்துலர்ந்தனவும் வற்றல்களும்.

அழல்வ : சுவையின்றி யெரிப்புடையன.

அயர்வு - சோர்வு. துப்பு - உணவு.

புகலும் - விரும்பும்.

துப்புணவென வியையும்.

ஏகாரம் : எண்.

சுவையாகுவ முதலாயின பெயர்ச்செவ்வெண்.

இஃதிடையாயவுணு இற்றென்றது.

௧0. நள்ளிருள் கழிந்தவு நன்சுவை யிழந்தவு
மெள்ளிய நாற்ற மெடுத்தவுங் காணி
னருவருப் பாவவு மயின்ற மிச்சிலு
மெச்சிலு மென்றிவ் விரைகள்
கொச்சையர் தமக்குக் கொள்ளு முணவே. 605

நள்ளிருள் - நடுவிருள். எள்ளிய - இகழ்ந்த.

அயின்றமிச்சில் - பிறர் பிற வுண்டபிற்பா டுண்ணப்படு மெஞ்சிய வுணவு.

எச்சில் : உண்ணப்படுவதனு ளுண்ணுதொழியக் கிடந்தது.

இவை விலங்குணவகலின் இரைகளெனப்பட்டன.

கொச்சையர் : கடையாய பண்பினர்.

கொள்ளுமுணவு - தகுமுணவு.

இதுகடையாயவுணுவிற்றென்றது.

௧௧. ஊதிய முள்ளா துள்ள மமைய
வோதிய கட்டளை யொன்ற வூக்கம்
விள்ளலர் வேட்கும் வேள்வி
யொள்ளியல் வேள்வியென் றுன்னப்படுமே. 606

உள்ளாது - கருதாது. உள்ளமமைய - உள்ள மமைதியுறுதற் பொருட்டு.

நூலோதியகட்டளையோடு பொருந்த. ஒன்றவேட்கு மென வியையும்.

ஊக்கம் விள்ளலர் - உள்ளக்கிளர்ச்சி நீங்காதவராய்.

இது தலையாய வேள்வி யிற்றென்றது.

கஉ. ஊதியப் பொருட்டு மொழிந்தோர் தன்புக
ழோதுதற் பொருட்டு முஞற்றும் வேள்வி
பல்லவு மென்போ பண்பில்
புல்லியல் வேள்வி புலவ ரேறே. 607

தற்புகழ் - தனதுபுகழ். உஞற்றும் - செய்யும்.

பல்லவுமென் - பலவுமென்று கொள்க. போ : முன்னிலையசை.

பண்பில் - நன்மையில்லாத.

புலவரேறே வேள்விபல்லவும் புல்லியல்வேள்வி யென்னென விணைமுடிவுசெய்க.

இஃதிடையாய வேள்வி யிற்றென்றது.

கந. கட்டளை யிழுக்குபு கண்ட வதுவும்
பெட்டவர்க் குறூஅப் பேணிநல் காததுங்
கடவுட் பழிச்சுபு கருதாப் பராஅய்ப்
பண்ணொடு நெடுமொழி பாடப் பெறாததுங்
கையுறை யில்லதுங் காணிவை
மையியல் வேள்வி மன்னவர் மன்னே. 608

இழுக்குபு - வழீஇ. கண்டவது - செய்த வவ் வேள்வி.

பெட்டவர் - விரும்பினவர்.

பேணி - அன்போடு சிறப்புச்செய்து.

பழிச்சுபு – வணங்கி. கருதா – கருதி.

நெடுமொழி : கடவுளின் பொருள்சேர்புகழ்ப்பாடல்; ஆகுபெயர்

கையுறையில்லது : விருந்தினர் முதலியோர்க்குக் கையுறை கொடுத்த லில்லாத வேள்வி.

காண் : அசை.

இது கடையாய வேள்வி யிற்றென்றது.

கச. இமையவர் புலவ ரியலா சிரிய
ரமைவுறு சான்றோ ராயவர்ப் பேணுகை
தூய்மை நேர்மை பேராண் மையொ
டின்னா செய்த லின்மையு மூளப்படக்
காக்கு மைந்துங் கருதின்
யாக்கை நோன்பென யாப்புற வருமே. 609

புலவர் - புலனுழுதுண்மார். இயலாசிரியர் : ஆசிரியர்க் குரிய வியலுடைய வாசிரியர்.

அமைவுறு - அமைதி யென்னு மாட்சி மிக்க.

சான்றோரென்றது அம்மூவரு மொழிந்த மாட்சியுடையோ ரென்றவாறு.

பேணல் - உவந்து வழிபட்டுள்ளன நல்கல்.

தூய்மை - வாலாமை கழிதல்.

நேர்மை - செப்பம். நெஞ்சுசொற்செயல்க டம்முள் வேறு படாமை.

பேராண்மை : காமநுகர்ச்சி கடிந்தொழுகல்.

யாப்புற : வரைந்துணர.

இஃதியாக்கைநோன்பு, மொழிநோன்பு, நெஞ்சினோன்பென, வித்தலையாய நோன்பு மூன்றனுள்ளும் யாக்கைநோன்பின்ன வென்றது.

கரு. பிறர்க்குக் கடுமை பிறத்தல் செய்யா
துவப்புப் பயப்ப துள்பொருள் குறிப்பது
நயத்தகு நலத்தது நகுநவை யில்ல
தாயுரை மொழிதலு மறம்பொரு ளின்பக்
கட்டுரைப் பனுவல் கற்றலுங்
கட்டுரை நோன்பெனக் கண்டிகி னோரே. 610

கடுமை - சினம். செய்யாது : முற்று.

அன்போடு கூடுதலிற் சொற்கேட்பார்க்குவப்புப் பயப்பதாம்.

உள்பொருள் - நிகழ்ந்தசெயல்.

நயத்தகுநலத்தது : சொல்வார்க்குங்கேட்பார்க்கும்விரும்பத் தகு நன்மை தருவது.

நகுநவை : பழிக்கத்தகுங்குற்றம். அவை : எழுத்துச்சொற் பொருள்வழூஉ.

பிறப்பியாததும் பயப்பதும் குறிப்பதும் நலத்ததும் நவையில்லா ததுமாகிய வவ்வுரை. புலவர்கண்டாரென்க.

இது தலையாய மொழிநோன்பின்னவென்றது.

கசா. தெளிவுறு நெஞ்சு செந்தண் மையொடு
வாய்வா ளாமை தான் றன் யாத்த
லுள்ளற் றூய்மை யோரைந்
தெள்ளப் படாநெஞ் சியலு நோன்பே. 611

தெளிவுறுநெஞ்சு : மடிமுதலியவற்றான் மயங்காதொளிருநெஞ்சு

செந்தண்மை : இரட்டைகளின்கட் டிரியாதொப்ப விருக்கு மமைதி.

வாய்வாளாமை : யாதொன்றும் யாவரொடு முரையாடாமை. இஃதுணவுண்டன் முதலாயவற்றுக்கண் வேண்டற்பாலது.

தன்யாத்தல் - ஒருவன் றன்னைத் தீநெறிபிற் புகாவா றடக்கிக் காத்துக் கோடல்.

உள்ளற்றூய்மை ; எண்ணுதலின் றூய்மை : தூயவெண்ண மென்பது.

இது தலையாய நெஞ்சினோன்பினையவென்றது.

கஎ. விளைவு வேட்கையின் விடுபடு புலவர்
கிளர்வு குன்று துளமுன் மூன்றினு
மெள்ளற வியற்றுநோன் பெல்லா
மொள்ளிய னேன்பெனக் கொள்ளுக வுணர்ந்தே.

விளைவு - பயன். இன் : நீக்கம். கிளர்வு - ஊக்கம். உளமுன் மூன்றினும் - நெஞ்சுமுதலாய மூன்றினும்.

எள்ளற - இகழ்ச்சிகெட : புகழவென்பதாம்.

உணர்ந்துகொள்ளுகவெனமாறுக.

இது மேற்கூறியநோன்பு மூன்றுந் தலையாயநோன்பென்றது.

கஅ. தற்சுட் டற்குந் தற்புகழ் தற்குந்
தற்சிறப் பிற்குந் தற்புனைந் தியற்றுவ
தாவது நிலைபே றற்றது
நோவது புல்லிய நோன்பெனக் கொள்ளே. 613

தற்சுட்டல் - தற்பிறர்நன்குள்ளல்.

தற்சிறப்பு - தற்பிறர்வழிபடல்.

தற்புனைதல் : மழித்தல் மயிர்திரித்துநீட்டல் கல்லாடைபுனைதன் முதலவாகத் தன்னைப்புனைந்துகோடல்.

நோவது : நெஞ்சடங்காமையானும் பிறர் உண்மையுணர்ந்திகழ் தலானு நோதற்குப்பொருட்டாவது.

இஃதிடையாய நோன்பிதுவென்றது.

கக. முட்டாட் கொள்கையின் முனைந்து தன்னை
யிட்டாற் றுணர்வி னிட்டளப் படுத்துப்
பெட்டாங் கியற்றும் பிழைபடு நோன்பும்
பிறவுயிர் தன்னிற் பிறவல வென்னு
தவைதமைக் கெடுத்தற் காற்றுறு நோன்பு
மையிய னேன்பென வழங்குப
செய்யிய புக்கார்ச் செகுக்குமா லவையே. 614

முட்டாளுக் குரிய கொள்கை முட்டாட் கொள்கை.

முனைந்து - முதன்மைப்பட்டு.

இட்டாற்றுணர்வின் - சிறிய நெறியிற் சென்றவறிவினனே.

சிறிய நெறி - விரிவில்லா வொழுக்கம்; தன்னலங் கருதிய வொழுக்கமென்பதாம்.

இட்டளம் - துன்பம். தன்னைத் துன்பப்படுத்தென்க.

பெட்டாங்கு : தன்னெஞ்சு விரும்பியவாறு.

தன்னிற்பிறவல - தன்னினின்றும் வேறுவன வல்ல.

அவை தம்மைச் செய்பிய புக்காரைச் செகுக்குமென்க; செய் தற்குத் தொடங்கினரைக் கொல்லுமென்றவாறு.

அவைதம்மை : மகரந்தொகுத்தல்.

௨௦. ஈகை தானே யியற்றற் பாற்றென்
றேகை பொங்க வுரிய களனொடு
பொழுது கொள்கலம் பொருந்த நோக்கி
யெதிர்வரு கைம்மாறெண்ண தீத
லொள்ளிய வீகையென் றுணர்க
வள்ளியை யாகன் மன்னநின் கடனே. 615

இயற்றற் பாற்றென்று - செய்தற்குரிய கடமை யென்று.

களன் - இடம். ஈண்டஃதொருவர்க் குதவி கிடைக்கலாகாத நிலம். ஒடு: உடனிகழ்ச்சிப்பாற்படு விரவுதற்பொருண்மைத்து. களனொடு பொருந்த'வென்க.

பொழுது : அது கிடைத்தற்குரிய நிலத்துள்ளு மது கிடைக்க லாகாத நேரம்.

கொள்கலம் : கல்வியறிவொழுக்கமும் வறுமையு முடையவர். செல்வராயினர் தம்பொரு டமக்குமறுமைக் குதவுதற்பொருட்டுக் கெடாது பாதுகாப்பாகப் பொதிந்துவைக்குங் கொள்கலமாதலின் அவ ரங்ஙனம் வழங்கப்படுவர்.

எதிர்வரு கைம்மாறு : தம்மாற் கொடுக்கப்பட்டாரார் றமக் கெதிர்பொழுது வரு மெதிருதவி.

இது தலையாய வீகை யிது வென்றது.

௨௧. கைம்மா றெண்ணியுங் கருது மூதிய
மென்ன னும்பெற லெண்ணியு நெஞ்சி
னீர மின்றி யிடுக்க ணுற்று
நல்கிய வீகை நவிலிற்
புல்லிய வீகை புல்லியர்க் குரித்தே. 616

என்னனும் - யாதாயினும்.

ஈரம் : அன்புமருளும்.

இடுக்கணுற்று : உவகையின்றி வருத்தமுற்று. அது தான் புல் லியற்குரித்தென்பது சொல்லெச்சம். இஃதிடையாய வீகை யிது வென்றது

௨௨. களனொடு கொள்கலங் கால மென்றிவை
தகவில வற்றொடு சார்ந்த வீகையும்
வரிசை நோக்கார் வழங்கு மீகையு
மிகழ்வொடு வழங்கு மின்ன வீகையு
முய்யிய ருணரா துள்ளோர்
மையிய வீகை மடமைச் செயலே. 617

தகவிலவற்ெறாடு சார்ந்த வீகை: தகுதியில்லாத களம்பொழுது கொள்கலமென்றிவற்றொடு கூடிய வீகை.

வரிசை : செயற்பால சிறப்பு.

வரிசைகருதாராய்க் கொடுக்குமீகை.

உய்யிய ருணராதுள்ளார் - உய்தற்பொருட்டறியா திருப்பவர்.

அவ்வீகை மடமைச் செயலென்பது சொல்லெச்சம்.

இது கடையாய வீகையிது வென்றது.

உரு. ஓமுது மெய்யென வோதிநன் குய்தரு
நாமுகு மூன்று நாடுதற் கரிய
பெருஞ்சார் புணர்த்தும் பெரும்பெயர்க் கிளவி
யருஞ்சார் பென்னு மாமும் மொழியிற்
புலவருஞ் செய்யுளும் வேள்வியும் புலப்பட
வகுக்கப் படுதல் வாய்ந்தது
வகுக்கப் புக்கான் வாய்மை யானே. 618

உய்தரு மூன்று - உய்தற்கு வாயிலாகிய மூன்று.

நாம் - அச்சம். உகு - விடுக்கும். ஓம்; உது; மெய்யென்பன மூன்றுந் தம்மை நவின்றோதுவார்க்குத் தகுவர், திணவர், பிணவர், கூளியரென்றிவர் முதலாயவராற் கனவு முதலியவற்றின் வரு மச்சங் கெடுத்தலானே நா முகு மூன்றெனப்பட்டன.

பெருஞ்சார்புணர்வுபயத்தலானே யவைமூன்றுந் தம்மையோது வார் நன்குய்தற்குரியவாமாறு கொள்ளப்படும்.

நாடுதற்கரிய பெருஞ்சார்பென் விதந்தது பெருஞ்சார்புணர்வு நுகர்வாதற் கரிதாயினும் அந்நுகர்வு தளர்வுறலுற்றுழியு மப்பெரும் பெயர்க்கிளவி மூன்றனையு மிடையிடாதுள்ளவே யந்நுகர்வெளிதா தலு மதுதளராமையு மெய்துமென்னுங் குறிப்பிற்று. அக்குறிப்புப் பற்றியே அருஞ்சார்பென்றவாறு முணர்க.

புலவர்பாற் செய்யுளுஞ் செய்யுட்கண் வேள்வியும் மமைதலின் அம்முறையாற் கூறியவாறுணர்க.

வகுத்தல் - படைத்தல்.

வகுக்கப்புக்கான் - படைக்கத்தொடங்கியகடவுள்.

அக்கடவுள்பாற் றொடக்கத்துக்கட் புலவர்முதலிய முப்பொருளு முடன்றோன்றின வாதலானும் அம்முப்பொருளையு மொருங்குட னினைத்த வம்முதல்வனது நினைவு சொல்லோ டன்றி நிகழாமை யொருதலையாகலானும் அச்சொற் றனு மம்முப்பொருணினைவு மொருங்குடன் குறிக்கு மூவெழுத்தொருமொழியாதலன்றிச் செல் லாமையானும் அம்மூவெழுத்தும் எல்லாச்செய்யுளுமாதற்குரிய வெல்லாவெழுத்துக்களின்றொகையாதல் வேண்டுமாகலானும் அவ் வாறு தொக்கதுஓம் என்பதன்றியில்லாமையானு மங்ஙனமோமென் னுஞ்சொல்லொடு முன்னிலைப்பொருள்படைத்தான் றன்னையுந் தான்

பெருஞ்சார்பாதலேயுங் கண்டானுதலின் அக்காட்சியொடு நிகழற்பாலது உதுவென்பதாகலானும் உதுவெனப் பெருஞ்சார்பு கண்டவழி அதுவு மதனு லேனையவு மெய்யாதல்காணவே உதுவென்பதன் பிற்றேன்றற்பாலது மெய்யென்னுமொழியாகலானு மிவைமூன்றனையு மிவற்றெடு புலவர்முதலிய முப்பொருளேயும் வாய்மையாற் கண்டானுயினுன்.

உச. பெரும்பொருள் வழக்கியர் பிழையாது செய்யும்
பெரும்பொரு ளாயும் பெற்றிமை சான்ற
கேள்வி தன்னுற் கிளக்கப் பட்ட
வேள்வி யீகை நோன்பிவ் வினைதா
மோமென வோதித் தொடங்குத லுறீஇ
யாமென வுணர்க வதனு
லோமென வோவா துன்னுத லுறுமே. 619

பெருப்பொருள் வழக்கியர் : எல்லாப் பொருளுந் தாந் தோன்றி நின்றெடுங்குமிடமாகிய பெரும் பொருளினுடையன வெனக் கூறும் வழக்குடையவர்.

பிழையாது செய்யும் வேள்வி யெனக் கூட்டுக.

பெற்றிமை ரென்ற - இயல்பு நிரம்பிய.

கேள்வி : செய்யுள். உறீஇ – உற்று.

இது மேற்கூறிய தலேயாய வேள்வி யீகை நோன்பென்றிவை தொடங்குங்கா லோதுதல் வேண்டப்படு நவிற்சி யிது வென்றது. இது நவிலாது அவை தொடங்கற்கவெனப் புறனடையாயிற்று. உறும் – நல்லது.

உரு. வீடு பேறு வேட்டோர் தாமே
வேடு புரியா வேள்வியு நோன்புஞ்
செது வொழி யீகையுஞ் செய்தொறு
முதுவென வோதி யுஞற்றல் வேண்டுமே. 620

வேடு - கொலே. செது - தீமை.

ஓதி : ஓதாநின்றென நிகழ்வின்கணின்றது.

உஞற்றல் வேண்டும் - செய்தலின்றி யமையாது.

உசா. மெய்யென வோதி யுய்தரு கிளவி
யுண்மை நன்மை யுவ்விரு பொருண்மேற்
சொல்லப் படுதலிற் றேற்றஞ் சான்ற
வினைபல வற்றினு மெய்யென
நினைமொழி யாட்சி நேரப் படுமே. 621

மெய்யென்னுஞ் சொற்குப் பொருள் உண்மை நன்மை யென விவ் விரண்டாம்; அதனும் புகழமைந்த வினைபல்வும் பெருஞ்சார்

பின நிலைக்களமாகக்கொடலின் அவை தம்மை நோக்குவார்க்குத் தந்நிலைக்களமாகிய வுண்மையென்னும் பெருஞ்சார்பினைக் குறிப் பித்து நன்மை பயத்தலின் மெய்யென்னுஞ் சொல் முதற்கட்புணர்த்து மெய்வேள்வி மெய்யீகை மெய்ந்நோன்பென்றாற்போல வழங்கத் தகுவனவாயின. மெய்யென்பது அவையிற்றின் பொதுப்பெயராம். ஆகுபெயரான். தோற்றஞ்சான்ற - புமழுடைந்த.

இன் : வழாவது.

நினைமொழி : நினைக்கு மொழி.

ஆட்சி - வழக்கம். நேரப்படும் - உடன்படப்படும்.

உஎ. நோன்பொடு வேள்வி யீகை மூன்று
மேன்றிடு நிலைபே றென்பது தானே
மெய்யெனுஞ் சொற்குப் பெய்தரு பொருளா
மொருமுப் பொழுதினு மோராங் குறையு
மருமைப் பெரும்பொரு ளறிவின் பொருட்டுச்
செய்யும் வினையுஞ் செப்பின்
மெய்யென் றென்று விளம்பப் படுமே. 622

என்றிடு நிலைபேறு - பொருந்திய நிலைபெறுவன.

பெய்தருபொருளாம் - வைத்தபொருளாகும்.

முப்பொழுது : இறப்பெதிர்வுநிகழ்வு.

ஓராங்கு - ஒருபெற்றியாக.

பெரும்பொருளறிவு - பெருஞ்சார்பினையறியுமறிவு.

இதனால் அவ்வினை ஊதியங் கருதிச்செய்யப்படுவுழியுமூதியங் கருதாதுசெய்யப்படுவுழியு மொப்ப மெய்யென வழங்குதற்குரியன வென்பது பெறப்படும்.

என்றென்றென்னுமடுக்கு வினைப்பன்மைபற்றி வந்த பன்மை மேற்று.

உஅ. ஊக்க மின்றி யுணர்வு குன்ற
வேட்கப் பட்டது நோற்கப் பட்டது
மீயப் பட்டது மியற்றப் பட்டது
மெய்யொடு முரணிய பொய்யெனப் படுமா
லிம்மை மறுமை யிரண்டினு
நன்மை பயவாத் தன்மை யானே. 623

வேட்கப்பட்டது : வேட்கப்பட்டவேள்வி.

நோற்கப்பட்டது : நோற்கப்பட்டநோன்பு.

ஈயப்பட்டது : ஈயப்பட்டவீகை.

இயற்றப்பட்டது : செய்யப்பட்டசெயல். இவை நான்கு செயப் படுபொருளும் ஈண்டு அகனிலைச் செயப்படுபொருளாதலாற் செய லாயின.

இயற்றப்பட்டதென்றது பொருளீட்டுக் தொழின்முயற்சி.

இவை நன்மைபயவாத்தன்மையாற் பொய்யெனப்படுமென முடிக்க.

மேற் ரேற்றஞ் சான்ற வேள்வி முதலாயின மெய்யாமா றெதிர் மறையாற் கூறிவலியுறுத்ததிப்பாட்டு.

இவ்வைந்துபாட்டானும் வேள்விமுதலாயின தொடங்கற்கண் ஓமெனவுந் தொடங்கிச் செய்தற்கண் உதுவெனவுஞ் செய்தமுடிவின் கண் மெய்யெனவு மோதுதல்வேண்டுமென்பது பெறப்படுதல் குறித் துணர்க.

ஓமுதுமெய் யென்பன மூன்று மிடையீடின்றிக் கூறப்படுமேனு மவ்வவற்றுக்க ணோரோவொன்றனை யெடுத்தலோசையானு மேனை யிரண்டனையும்படுத்தலோசையானுங் கூறுதல்வேண்டுமெனக் கொள்க.

நம்பியகவல்.

அணித்தரவு.

பெரும்பற்றப்புலமை.

புணர்ப்பியற்பனுவல்.

நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.

பதினேழாவது பால்

முக்கூற்றுள்ளம்

முற்றும்.

ஓமுதுமெய்.

ஓமமைதி. ஓமமைதி. ஓமமைதி.

ஓம் :

பதினெட்டாவது பால்.

நீத்தல்வண்மை.

க. நறவுண் சுரும்புமொய்ந் நாண்மலர்த் தாரோய்
துறவி னுண்மை சொலக்கேட் டுணர்தற்
காரா வார்வ மாந்தனித்
தாரா ளத்தின் றன்மையு மதுவே. 624

நற - தேன். சுரும்பு - வண்டு. மொய் : வினைத்தொகை. துறவு - நீத்தல். உண்மை : உள்ளவாறு : அமைதியென்பதாம்.

தனி - ஒப்பில்லாத.

தாராளம் - வண்மை. தாராளமென்னுஞ் சொற்பொருளாவது தருதலை யாளுத லென்பதாம். ஆளுதல் - முட்டின்றி நடத்துதல். தாராண்மையென அம்மு மைப்பொருட்டாயிற்று.

அது வென்பது அங்ஙனஞ் சொலக்கேட்டுணர்தற்கு ஆராவார் வமாமென்றவாறு.

எனவே நீத்தல்வண்மை யென்னுந் தொகைப்பெயர் நீத்தலும் வண்மையுமென விரியும்.

நீத்தல்வண்மையென விவ் விரண்டு மொருவன் றன் னுடல் பொருள் சுற்றங்களாகிய பற்றுக்களைக் கைவிடுத லொப்புமையா மாறு மவற்று ணீத்தலாவது வினையு மூதியமு மொருங்கு நீத்தலும் வண்மையாவது வினையைக் கைவிடாது செய்துகொண் டூதியமே நீத்தலுமாய் அவை தம்முள் வேறுபாமாறு மே லெய்துவிக்கப்படும்.

உ. ஆக்க நச்சி யாக்கும் வினையெலா
நீக்க லதுவே நீத்த லென்க
வாக்கும் வினைக ளனைத்து மாக்கி
யாங்குண் டாகு மாக்கந்
தாங்கொள் ளாமை தாரா ளம்மே. 625

ஆக்கம் - ஊதியம். ஆங்கு : அவ்வினைகளான்.

தாம் : வினைசெய்வார்தாம்.

கொள்ளாமை - கொடுத்தல்.

இஃதவ்விரண்டுமாமா றெய்துவித்தது.

௩. எல்லா வினையும் பொல்லாக் குற்றமென்
றொல்லா தொழித லுறுதி யென்மரு
மற்றன் றாங்கண் வேள்வி வினையுங்
கற்ற வீகையுங் காழ்த்த நோன்பு
மென்றிவை யொழியற் கென்மரு
மென்றிரு சாருளர் நன்றுணர் வோரே. 626

ஒல்லாதொழிதல் - பொருந்தாது கைவிடுதல்.

உறுதி - மிக்க நன்மை.

அற்றன்று - அங்ஙனமாகாது.

ஆங்கண் - அங்ஙனங் கைவிடுகின்றுழி.

கற்ற - பயின்ற. காழ்த்த - கன்றிய.

ஒழியற்க - கைவிடாதொழிக; அகரந்தொகுத்தல். அவை யொழிந்தனவே கைவிடுக வென்றவாறு. என்று நன்றுணர்வோ ரிருசா ருளரென வியைக்க.

எனவே யிரண்டனு ளொன்று கொண்டோராலேனையோருடையது கடியற்பாற்றன் றென்பதாகும்.

௪. போரேர் மீளிப் புலியே கேளாய்
தாரா ளத்திற் றந்தவென் றுணிபு
தாரா ளந்தான் றகவுறச்
சீரார் மூன்று திறத்த தென்கவே. 627

தாராளத்திற் றந்தவென் றுணிபு கேளாயென வியையும்: வண்மைக்கண் யான்கொண்ட வென் றுணிபு கேளென்பதாம்.

தகவுற - தகுதியாக.

சீரார் - நன்மை நிறைந்த.

மூன்று வகையாவன: வேள்வி யீகை நோன்பெனவிவை மூன்றனுாதியமுங் கொடுத்தலாகிய கொடை மூன்றுமாம்.

௫. வேள்வியொ டீகை நோன்பென விளம்பு
மூவினை கைவிடன் முன்னுதல் வேண்டா
செயற்பா லனவே செப்பிய மூன்றுந்
தகவிய லுணர்வோர் தமக்குத்
துகடபத் துடைத்துத் தூய்தாக் கும்மே. 628

முன்னுதல் - நினைத்தல். கைவிடுதலை முன்னுதல் வேண்டா வென்க.

மூன்றுந் தந் தகுதியாமாற்றை யுணருமறிஞர்க்குக் குற்றங் கெடத் துடைத்துள்ளமு முயிருந் தூயவாக்குமென்க.

குற்றமாவது தாம் துறந்த விழைவு முதலாய குற்றமீண்டும் வருதலாகிய மரூஉ.

எனவே தமக்கு வினையினூதியம் வேண்டாவாயினுந் தாம் வேண்டும் புலமைக்குத் துணையாம்பாதுகாப்பாதலின் வினையொழியாது செய்க வென வலியுறுத்தவாறாயிற்று.

சூ. அவ்வினை மூன்று மாக்குங் காலு
மவ்வினை மேலு மவற்றி னுகும்
பேற்றின் மேலும் பெட்பு நீக்கி
யாற்றற் பாலன வதுவென்
போற்றத் தக்க புரையுயர் துணிபே. 629

பெட்பு - விருப்பம்: யானெனதென்னு மகப்பற்றுப்புறப்பற்றுக் களாம்.

ஆற்றற்பாலன - செய்யக்கடவன.

அது: அங்ஙனம் பெட்பு நீத்தாற்றுதல்.

போற்றத்தக்க - பாதுகாத்துச்செயத் தக்க.

புரையுயர் - மீமிசைக்கிளவி.

எ. யாப்புறு வினையை நீத்தலு மடாது
தாக்குறு மயக்கிற் றவிர்த லதுதான்
மைம்மைப் பண்பின் வருமெனச்
செம்மை யுணர்விற் றேறப் படுமே. 630

யாப்புறுவினை: செய்க வென வரையறுத்த வினை.

அடாது - தகாது. தாக்குறு - எதிர்ப்படும். மயக்கு - திரிபுணர்வு.

மைம்மைப்பண்பு: கடையாய மூன்றாவது பண்பு.

செம்மையுணர்வு - திரிபில்லாத மெய்யுணர்வு. தேறப்படும் - துணியப்படும்.

அது தான் றேறப்படுமென வியையும்.

அ. மயக்கி னன்றி வருந்து முடலென
விளைத்து வினையொழிந் திருக்குந் துறவுக்
கொல்லுவ தில்லை யூதியம்
புல்லியற் றுறவெனல் பொருந்து மதுவே. 631

மயக்கி னன்றி: மேற்கூறியவாறு திரிபுணர்வானே யல்லாமல்.

உடல் வருந்துமென மாறுக. துறவல்லதனைத் துறவென்றது இகழ்ச்சிக் குறிப்பு.

இத்துறவு மடியாண்மை யெனப்படும்.

இத்துறவுக்குஊதிய மொல்லுவதில்லை. அது புல்லியற் றுறவெனல் பொருந்துமென முடிக்க.

பழியுந் துன்பமும் பெறுத லல்லது அத்துறவுக்கு வேறாதிய மில்லை யென்ருன்.

இங்ஙனங் கூறவே மயக்கத்தானும் உடல் வருந்துமென்னு மடியானுமன்றி வினையொழிந்திருத்தலே வண்மையின்வேருகிய நீத்தலெனப் புகழப்படுவதாமென வுணர்ந்துகொள்க. இந்நீத்தலே புலவயிற் புணர்ப்பெனவும் எனைவண்மையே வினைவயிற் புணர்ப் பெனவு மேற்கூறப்பட்டன.

இப்பாட்டிற் கூறிய துறவு இடையாயபண்பினுகு மிடையாய துறவென்ருன். மேலைப்பாட்டிற் கூறிய துறவு கடையாயபண்பினு குங் கடையாய துறவென்ருன்.

கூ. செய்யக் கடவது செய்கென் றியாத்தது
செய்து செய்த செயலிற் பற்றுஞ்
செயலின் பேற்றிற் செல்லும் பற்று
மொழித்த லென்பதே யொண்மைப் பால
தாரா ளம்மெனச் சாற்றுப
காராள் கடமையிற் கடமையு மதுவே. 632

செய்யக்கடவுதுஞ் செய்க வென நூல்பணித்ததுமாயதனைச் செய்து அச்செயலிற் செல்லும் பற்றுஞ் செயலின்பேற்றிற் செல் லும்பற்றுங் கைவிடுதலென்று சொல்லப்படுவதே முதற்பண்பாகிய வொண்மைப்பண்பின்பாற்படுந்தாராளமென விளக்கிச் சொல்லுவ ரென்க.

சாற்றுதல் - விளக்கிச் சொல்லுதல்.

கார் - வான்மாரி. கடமை - ஒப்புரவு.

ஆள் : மேற்கொண்டு நடத்தும்.

இன் : ஒப்புப்பொருஉ. கடமைபோலுங் கடமையு மதுவென் பதாம்.

இவை மூன்று பாட்டானும் நீத்தலும் வண்மையுமென விதந் தெடுத்துக்கொண்ட துறவிரண்டனுள்ளும் வள்ளன்மையெனப்படுந் தாராளத்துறவு முப்பாற்பண்புபற்றித் தலையிடைகடையென முத் திறத்ததாமென்பதூஉ மம்முவ்வண்மையு மின்ன வென்பதூஉ மெய்துவிக்கப்பட்டன.

கo. ஒண்மைப் பண்பி னொன்றுபு நின்று
நுண்மை யுணர்வி னையுறவு நூறிய
வள்ள லென்பான் மாந்திய நேர்ந்த
நன்மை மருங்கி னசையு
மன்மை மருங்கி னசைவு மிலனே. 633

ஒன்றுபு நின்று - பொருந்தி நின்று.

இன் : துணைப்பொருட்டு. நூறிய - ஒருங்குகெடுத்த.

DR. U. V. S. ... BESANT NAGAR, MADRAS-90.

வள்ளல் - வண்பெருந் துறவி.

மாந்திய நேர்ந்த - நுகருமாறுதலைப்பட்ட.

நன்மை : இன்பம். நசை - பற்றும் வேட்கையும்.

நன்மையன்மை : துன்பம். அசைவு - வருத்தம்.

எனவே அவன்றானு மின்பத்துன்பப் பிணிப்புடையனுயிற் றன் செயல்வள்ளன்மை யெனப்படுந் துறவாகாதென வவனியல்பு கூறிற்று.

அவற்கு நுண்மையுணர்வாகிய மெய்யுணர்வின்க ணசையிருத் தலா னன்மையன்மைகளின்க ணசையில்லாமை கூடுமென்பதுணர்க.

கக. வினையைத் துறவான் வினைசெய் தெய்தும்
விளைவைத் துறக்கு மேலோன் றானே
தாரா ளன்னெனச் சாற்றல் வேண்டும்
யாரா னும்மிவ் யாக்கை வாழ்வோர்
வினையினை முழுதும் விடுத
லெனையது மாகா தென்பது தெளியே. 634

மேலோன் றான் றாராளனெனச் சாற்றல்வேண்டுமென்றது அவன்றுறவியாதன்மேலு முலகிற்புகழ்க்குரிய கொடையாளிகளுள் ளுங் கொடைவள்ளலெனத் தக்கானென்றவாறும்.

எனையதும் - எவ்வாற்றானும்.

இதனால் வினைத்துறவியாதலினும் வினையூதியத்துறவியாதலே முறையுமெளிதுமாமென வதன் சிறப்புணர்த்தினான். இப்பாட்டுப் போல்வன பெயர்த்துரையாமாறு நினைவுகூர்க.

கஉ. விழையற் பாலது வெறுக்கற் பாலது
விழையவும் வெறுக்கவும் பால தென்று
வள்ள லல்லா மாந்த ரெல்லாந்
துஞ்சிய வழியே துய்க்கக் கடவ
வெஞ்சிய வூதிய மிம்மூன் றாகு
மிருமையுந் துறந்தோர்க் கென்னின்
வருமவை யாண்டும் வாரா வழக்கே 635

விழையற்பாலது : இன்பம். வெறுக்கற்பாலது: துன்பம். விழைய வும் வெறுக்கவும் பாலது : அவ்விரண்டுமாய வின்பத்துன்பவிரவு. இம்மூன்று முறையே மேல் கீழ் நடுவென்னு மிஞ் ஞாலமுன்றன் கண்ணு மெய்தற்பால. இம்மூவயின் ஞாலவாழ்வு மிருசார்த்துறவிய ரல்லார்க்கே யுரிய.

என்று வூதிய மிம்மூன்றாகு மென வியையும்.

துய்க்கக் கடவவாக வெஞ்சிய வூதியம்.

துஞ்சியவழி - இறந்தபின்.

இருமை : விழைவு வெகுளியு மின்பத்துன்பமும்.

வருமவை - வரக்கடவனவாகிய வம்மூன்றும்.

யாண்டும் : மூவயின்ஞாலத்தும்.

வாராமையாகிய வழக்கே புள்ளதென வொருசெல் வருவித்து முடிக்க.

இதனுன் வள்ளற்கு நீத்தாற்கு மீமிசைஞாலமும் விழுமியவீடு பேறுமே கொளப்படுமென்பது பெற்ரும்.

கங. எனேவினே தாமு மினிது முற்றுதற்
கனேவினே முடிவென வமையும் புலமைநூ
லாய்தரு பொருட்டிவை யைந்து
மேய்தர வென்பா லிவணீ கேளே 636

எனேவினேதாமும் - எவ்வளவுவினேயும் : எல்லாவினேயுமென்பதாம். இனிது - இடையூறின்றி.

வினேயின்முடிவு புலமையாதலின் புலமை அனேவினேமுடிவென வமைவதெனப்பட்டது.

அனேவினேமுடிவு - அவ்வினேகளின் முடிவு. வினேமுடிவு : வினே நீத்தல்.

புலமை : மூதன்முதலிவேற்றுமையுணர்வு. அதனேப் பயக்கு நூலாராய்ந்த வினேப்பொருட்டுக்களிவை யைந்துமென்பா லிவ்விடத்துப் பொருந்தக் கேள்.

பொருட்டு - வாயில் : வினேமுடிவுக்குவேண்டப்படுவன. அவை மேற்கூறப்படும்.

கச. களனே வினேமுதல் கலனேடு கையூ
ழிவைதா மைந்து மென்ப
நவைதீர் வினேசெய நச்சிய பொருட்டே. 637

களன் - வினேசெய்யிடம். வினேமுதல் - வினேசெய்பவன். கலன்- துணே. கை - செய்யுமாறு. ஊழ் : ஒன்றன்பின் ஞென்று நிகழற்பால முறை.

களன், வினேமுதல், கலன், செய்கை, ஊழென்றிவையைந்த னுள்ளும்பொழுது களத்துள்ளு மூழுள்ளு மடங்கும்.

இவ்வைந்தனுள்ளு மொன்றில்வழியும் வினே முடிவுபெறெய்தப் படாதாம்.

நவை - குற்றம். செய - செய்தற்கு.

நச்சிய பொருட்டு - வேண்டிய வாயில்களாம்.

ஐந்தும் வினேசெயப் பொருட்டாவன வென முடிக்க.

இப்பாட்டு அகவற்பாவிற்கோதிய சிற்றெல்லேயாயிற்று.

ஏகாரமுமொடுவுமெண்.

கரு. உடல்வாய் நெஞ்சென வொருமூன் றானுந்
தொடலேய் வினைதான் றுரிசோ பரிசோ
வெற்றே யானு மியலா
துற்றோ ரைந்து மொழிய மற்றே. 638

தொடலேய் - தொடங்குதல் பொருந்துகின்ற.

துரிசு - குற்றம். பரிசு - நல்லது. ஓகாரம் : உறழ்ச்சிப்பொருண் மேல் வந்தது.

எற்றேயானும் - யாதேயாயினும்.

எற்றேயானு மோரைந்து முற்றொழிய வியலாதெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

மற்று : அசை.

இங்ஙனங் கூறுதல் பின் வினையிற் பற்றொழிதல் கூறுதற் பொருட்டு வேண்டப்பட்டது.

இதனால் வினைக்குப் பற்றுக்கோடாவன உடன்முதலிய மூன்றுமா பெனவு மவ்வாற்றான் வினை மூவகைப்படுமெனவுங் கொள்ளப்படும்.

கசு. ஐந்தினுட் டானு மொன்றென விருப்ப
வைந்தினு மாகு மவ்வினை தானே
செய்பவ னென்றுதன் றிருந்தா வுணர்விற்
பொய்படக் காணும் புல்லறி வாளன்
காணுங் கண்ணில னதனாற்
பூணுங் காட்சியும் பொருந்துமா றென்னே. 639

ஐந்து : மேற்கூறப்பட்ட வினைப்பொருட்டு.

தானும் : வினைமுதலாகிய தானும். ஒன்றெனவிருப்ப - ஒரு வாயிலாயிருக்க.

அவ்வினையைத் தானே செய்பவ னென்று தன் றிருந் தாவுணர் விற் பொய்படக் காணும் புல்லறிவாளனென்க.

இங்ஙனமைந்தினுபாகும் வினையென்பது கண்கூடாகப் புலனாகவு மதனைக் காணுதான் றானே வினைசெய்பவனெனக் கருதிக்கோடலிற் பொய்படக் காணும் புல்லறிவாளனெனவுங் காணுங்கண்ணிலனென வுங் கூறப்பட்டான்.

கண்ணிலனாகலிற் காட்சியிலனாவனென முடித்தது. கண்ணுள னெனி னிகழ்ந்ததனை நிகழ்ந்தவாறு கூறுது நிகழாதவாறு கூறுதற் கென்னையோபொருட்டென மறுக்க.

புல்லறிவாளன் கண்ணிலன் அதனாற் காட்சியும் பொருந்துமா றென் னென முடிக்க.

கள. யானிவை செய்வே னென்னு மையலும்
யானிவை யுடைய னென்னும் பற்று
மில்லா னெவனவ னெல்லா வுலகுங்
கொன்றா னாயினுங் கொன்றில
னொன்றா வினையினு முற்றிலன் கட்டே.

மையல் - மயக்கம் : ஒன்றை மற்றொன்றாக வுணரு மருள். இங்குச் செய்யாமைக்கட் செயல் காண்டன் மையலாயிற்று.

ஒன்றுஞ் செய்யாதவனுக் கொன்று மின்மையி னொன்றன்கட் பற்றுச்செய்தலும் பொய்யாகும்.

ஒன்றாவினையினுங் கட்டுற்றிலனென மாறுக. தன்னோடியைபில்லாத வினையானும் பிணிப்புண்டிலனென்பதாம்.

கட்டுற்றிலனாதலிற் கொன்றானாயினுங் கொன்றிலனென முடிக்க.

பிறர்கருத்தாற் கொன்றானெனவு மவன் கருத்தாற் கொன்றிலனெனவுங் கூறப்பட்டான்.

கஅ. உணர்வொடு மற்றை யுணரப் படுவது
முணர்வது மெனவினை யுந்துவ மூன்று
வினைத்துணை வினைச்செயல் வினைமுத
லெனத்தகு மம்மூன் றியைபுவினைத் தொகையே.

வினையுந்துவ - வினைநிகழ்தற் கமைவன. உந்துதல் - தூண்டுதல்.

அவை : உணர்வு உணரப்படுவது உணர்வதெனமூன்றென்றவாறு.

வினைக்குப் பற்றுக்கோடாவதே யுணரப்படுபொருள். வினைக்குச் சான்றாவதே யுணரும்பொருள். வினைச்சான்றும் வினைப்பற்றுக் கோடுந்தம்முளமையு மியைபே உணர்வும் வினையுமென விவ் விரண்டுமாம். இயைபுகொள்ளு மவ் விரண்டனுள்ளு முணர்வதனியைபுஉணர்வெனவு முணரப்படுவதனியைபுவினையெனவுங் கொள்ளப்படும். இங்ஙனங் கூறாதுணர்வதனோடுணர்வும் வினையு மொட்டிக்கொண்டிருக்கும் பண்புப்பொருளென்றல் வழுவாமாறு காண்க. ஈண்டு இயைபு: தம்முளொத்த நிறைவாதல்.

வினைத்தொகையுட்படு மூன்றனுள்ளும் வினைத்துணையாவதுணரப்படுவது ; வினைச்செயலாவதுணர்வு ; வினைமுதலாவதுணர்வது.

எனவே வினையுந்துவ மூன்றுந் தொக்கதொகையே வினைத் தொகை யெனவுப் படுவதாயிற்று.

அம்மூன்றியைபெனச் சுட்டுவினை உந்துவ மூன்றன்மேலது.

அம்மூன்றியைபு வினைத்தொகையாமென வெழுவாயும் பொருணிலையுமாய் முடிந்தமையும்.

கக. உணர்வு செய்தி வினைமுதலென் றிப்
புணர்வு தம்மையும் புகன்று போந்த
பண்பு மூன்றன் பாற்படுத்
தொன்பஃ தாக்கியு முரைப்பக் கேளே. 642

புணர்வு : ஒன்றனோ டொன்று பொருந்தியன.

புகன்றுபோந்த : முன் வேள்வி யீகை நோன்பு துறவு முதலிய வற்றுக்குச் சொல்லி வந்த.

இவ்வுணர்வு முதலிய மூன்றும் முட்பாற்பண்பின் சார்புடை யன வென்பதுபடும். இவ்வுணர்வு முன்னிலை யுணர்வு; பண்பினீங் கிய மெய்யுணர்வன்று.

உ௦. வெவ்வே றுயிர்தொறு மெவ்வாற் றானு
மொவ்வா மைக்க ணொருநிகர்த் தோற்றத்
தொருமைத் தன்மை யுண்மை யென்னுஞ்
செம்மை காணுஞ் சிறப்பு
மும்மை யுணர்வுளு மொண்மை யுணர்வே. 643

எவ்வாற்றானும் - எல்லாவாற்றானும்: உடல், செயல், விழைவு, நுகர்வு முதலியபலவற்றானு முயிரெல்லாந் தம்மு ளொன்றனினொன்று சிறிது சிறிதாயினும் வேறுபடுத லல்லதி யாண்டாயினு மொன்று போன் றொன் றில்லாமைகாணப்படும்.

அவ் வொவ்வாமை சார்பின்கண் ணல்லது தனியுயிர்க்க ணின்மையிற்றோன் று முணர்வொற்றுமை ஒருநிகர்த்தோற்றத்தொரு மைத்தன்மையுண்மைச் செம்மை யெனப்பட்டது.

இதனானுயிர்தொறுங் காணப்படும் பொய்யாய வேற்றுமை நோக்காமல் அவ்வேற்றுமைதொறுங் காணப்படும் பொதுமையாகிய வொருமை காண்டலே தலையாயவுணர்வெனப்படு மொண்மையுணர் வென்பதாயிற்று. அதுவே சிறப்புணர்வு. ஏனையுணர்வெல்லாவுயிர்க்கு முரிய பொதுவுணர்வு. இச்சிறப்புணர்வு திருவருளுணர்வாகிய தலை வனைக் காண்டலுணர்வு, பெருஞ்சார்புணர்வு, தற்காட்சியுணர் வென்பவற்றை யெளிதிற் பயக்கும்.

இச்சிறப்புணர்வுதான் வாழுயிரென்னு மிறைவனைக் காண்ட லெனவும் இவன்றான் உடற்பொறிகளைக் கொண்டு போதலுங் கொண்டுபுகுதலு மியக்குதலுமுடையனெனவு முணர்ந்துகொள்க.

உக. உடலிடை நோக்க மொன்றே மேலிட்
டுடலிடந் தோறு முயிர்பல வாகச்
சார்பியல் வேற்றுமைத் தன்மை யென்னும்
பொய்ம்மை காணும் புரிவு
மும்மை யுணர்வுளும் புன்மை யுணர்வே 644

உயிர்களை வேறுவேறுகக் காண்டற்கு வாயிலாவதுஉயிர்ப் பார்வை யின்றி யுடற்பார்வை யொன்றே யுளதாத லென்பது பெறப்படும். உயிர்ப்பொதுமை யொருமைத்தன்மை : உணர்தற் றன்மை.

சார்பு : உடன்முதலாயசெத்தை.

சார்பியலாகிய வேற்றுமைத்தன்மை யென்னும் பொய்ம்மை யென்க.

இதனுல் அப்பொய்யியல் உயிர்க்குச் சிறப்பியலாகிய தன்னியலன் றென்ப தாயிற்று.

புரிவு - விருப்பம். விருப்பத்தாஞய வுணர்வு விருப்ப மெனப் பட்டது.

இஃதிடையாயவுணர்வென்னும் புன்மையுணர்விதுவென்றது.

உஉ. ஆக்கம் பலவு நோக்கு கின்றுழி
யாக்க மடைய வமைந்து தோன்றும்
பொதுமுத லாற்றற் பொருண்மை யென்னு
மதுதனை யொன்றை யறியகி லாமே
பொருட்டென வொன்றும் புரிந்துண ராமே
தனித்தனி நோக்கித் தனித்தனி யோரொன்
றெனைத்துமா மதுவது வென்றுங் கொட்டுபு
பொய்ம்மை மருளும் புல்லர திழிந்த
தன்மை யுணர்வு சாற்றின்
மும்மை யுணர்வுளு மைம்மை யுணர்வே 645

ஆக்க்ம் : மண்ணினுகுங் குடம்போலுஞ் செயற்கைப்பொருள். அடைய - எல்லாம்.

பொதமுதலாற்றற்பொருண்மை - பொதுவு முதலு மாற்றலு மாகிய பொருட்டன்மை. ஆவன : குடம்பலவர்றிற்குப்பொதுவு முதலு மாற்றலுமாகிய குடத்தன்மையெனப்படுமண்பால்வன. அவை யவ்வவாக்கம் பலவற்றிற்கு மொரோவொன்று யல்லதில்லாமையின் அதுதனை யொன்றை யென்றவாறுணர்க.

பொருட்டென வொன்றும் புரிந்துணராமே : இதனனிஃதுண் டாகுமென வாயலாவதொன்றனையும் பொருந்தி யுணராமல். இதனல் யாதானு மொன்று புலப்படக் கண்டுழி அஃதெற்றின னுயிற்றென வுணராது தோன்றியதோன்றியவளவி லனமங்தொழுகுதல் மயக்க வுணர்வென்பது பெறப்படும்.

ஒவ்வொன்றனையுங் காண்டலு மதுவதுவே யெல்லாமாமென் ஞெட்டுதலாவது யாதானு மொன்று தோன்றியவழி யதனைப் பல் பொருட்கூட்டத்துள்வைத்தியைபுகாணுமையாம்.

பொய்ம்மைமருளுதல் : பொய்யாகிய வுடலமுதலாடவற்றை மெய்யென்றும் மெய்யாய வுயிர் முதலாயவற்றைப் பொய் யென்று மயங்கல் இவ்வுணர்வு கல்வியில்லாத பொதுமக்களுணர்வு.

இது கடையாய வுணர்வென்னு மைம்மையுணர்விதுவென்றது.

உ௩. விழைவு வேட்கை வெகுளி விட்டு
விளையு மூதியம் வேண்டான் முயலுஞ்
செம்மை யாப்புச் செய்தி
மும்மைச் செயலுளு மொண்மைச் செயலே 646

வேண்டான் : முற்றெச்சம்.

செம்மை - திரிபின்மை. தனியுயிர்த்திரிபின்மையாகிய வியல்பொடு நிகழுஞ் செயல் செம்மைச்செய்தி. வரைவாய செயல் யாப்புச்செய்தி. இச்செய்தியுடையான்றன் பண்பினீங்கின னாயினுமவன் கட்டளையாயபண்பின்செய்தி நிகழ்தல்கூடுமெனபது பெற்றும்.

இது தலையாயசெயலென்னு மொண்மைச்செய்தி யிது வென்றது.

உ௪. ஆர்வு கோட்பட் டாதல் செருக்குச்
சார்பு கோட்பட் டாதல் சாயுந்
தளர்வு மிடருஞ் சாரச் செய்யும்
வெம்மைச் செய்தி விளைப்பின்
மும்மைச் செயலுளும் புன்மைச் செயலே 647

ஆர்வு - ஆர்வம்.

கோட்பட்டு : தன்னினாகியதொழில்.

ஆதல் : உறழ்ச்சிப்பொருட்டாய விடைச்சொல்.

சாயும் - மெலியும்.

வெம்மை - விருப்பம்; விருப்பத்தை வளர்க்குஞ்செய்தியென்க

இஃநிடையாயசெயலென்னும் புன்மைச்செயலிதுவென்றது.

உரு. பிற்சேர் தடையுந் தற்சேர் கேடு
முற்சே ரின்ன மூள லு மாண்மையுஞ்
சூழான் மருண்டு தொடங்க லுற்ற
தின்மைப் பாற்படுஞ் செய்தி
மும்மைச் செயலுளு மைம்மைச் செயலே 648

தா னெடுத்துக்கொள்ளும் வினைக்குப் பகைவரா னேரக்கடவது பிற்சேர்தடையெனப்பட்டது.

எடுத்துக்கொண்ட வினையை யிடையூறு வந்துழிக் கைவிடுதலா னேரக்கடவது தற்சேர்கேடெனப்பட்டது.

இன்னமூளல் : பிறவுயிர்கட்குத் துன்பமூளுதல்.

ஆண்மை : வினையுய்க்குந் தன் றகுவரவு.

சூழான் - ஆராயானாய் : இந்நான்கனையு மாராயானாகி யென்க.

தின்மை - தீமை.

இது கடையாய செயலென்னு மைம்மைச் செயலிதுவென்றது.

உசு. ஒட்டுப் பற்றிலன் யானென வுரையான்
முட்டுக் கெய்ப்பறு துணிவொடு முயல்வான்
பெருகு மிழவினும் பேற்றினுந் திரியான்
றண்மை பூண்ட சான்றோன்
மும்மை யாட்களு ளொண்மை யாளே. 649

ஒட்டு: பற்றின்மருஉ. ஒட்டும்பற்றுமெனவும்மைத்தொகை.

முட்டு - இடையூறு.

தண்மை - அமைதி.

இது வினைமுதலாவார்மூவருள்ளுந் தலையாய வொண்மையா ளிவனென்றது. இவனும் பண்பி னீங்கினனாயினுஞ் சார்பு நோக்கி ஒண்மையா னெனப்படும்.

ஆள் - வினைமுதல்.

உஎ. விழைவு சாலி வினைவிளை வொட்டி
கடும்பற் றுளி காணுயிர்க் கெல்லா
மின்னா செய்யு மிடும்பை யாளி
தூய்மை யில்லி துன்ப வின்பந்
தோய்பு மூழ்கி யென் றிச் சொல்லிய
பொய்ம்மை யாளனைப் புகலின்
மும்மை யாட்களுட் புன்மை யாளே 650

விழைவுசாலி - விருப்பமிக்கோன்.

வினைவிளைவொட்டி - வினைக்கண்ணு மூதியத்துக்கண்ணும் பற்றுடையவன்.

கடும்பற்றுளி - கடும்பற்றுடையான்.

தூய்மையில்லி - தூய்மையில்லாதான்.

துன்பவின்பந்தோய்புமூழ்கி - துன்பவின்பங்களிடைத்தோய்ந்து மூழ்குவோன்.

இவ் வைம்பெயரு மொருபொருண்மேற்பல்பெயர்.

பொய்ம்மை - போலியுணர்வு. ஆள்: உயர்திணை முப்பாற் பொதுப்பெயர்..

இஃதிடையாய வினைமுதலிவனென்றது.

உஅ. புணர்ப்பின் வழுவலும் பொதுவியற்பயலு
முணர்ச்சி யில்லா வூர்க்கா லெருமையும்
படிறு சூழும் பதரு மேனை
யழுக்கா றுடைய வலியு மடியுங்
கவலை யாளியு நெடுநீ ராளியொ
டிம்மை மறுமை யிலரிவர்
மும்மை யாட்களுண் மைம்மை யாளே 251

புணர்ப்பின்வழுவல்: புணர்ப்பினின்றுவழுவுவோன். இழிவு பற்றி வழீஇயினனை வழுவலென்பது வழக்கு.

பொதுவியற்பயல்: திருந்திய நடை, யுடை, மொழி, யெண்ணங் களில்லாதடக்கமின்றித் தான் வேண்டியாங்குத் திரிவோன்.

ஊரின் கட் டிரியு மெருமையென்ற தெருமைபோல்வானை. அவனவனாராயாதுசெய்யுமுருடன்.

படிறு : பிறரை மருட்டுதல். சூழும் - ஆராயும். பதர் : அறிவாகிய வுள்ளீடின்றிப் பதர்போலத் தூற்றப்படு மவன்.

தாளாண்மையுடையான். இயல்பல்லாத வழுக்காறுடையான், அப்பெற்றியானே ஆணும் பெண்ணு மல்லாப் பேடெனத் தகுமாதலின் அலி யெனப்பட்டான்.

கவலையாளி : கவலைநேர்ந்துழி யதன்கண்வாளா வாழ்ந்து செயற்பால செய்யாது மடிவோன்.

நெடுநீராளி : தூங்காது செயற்பாலதனை மடியானே தூங்கிச் செய்யு மியல்பினன். தூங்குதல் - நீட்டித்தல்.

நெடுநீராளியொடு இவர் மும்மையாட்களுள் இம்மை மறுமையிலராகிய மைம்மையாளென முடிக்க.

இது கடையாயினனாகிய வினைமுதலிவனென்றது.

உசு. பண்பு மூன் றிற் படுங்கூர் திட்ப
மென்ப தம்மி னியலும் வேறுபா
டனைத்துந் தனித்தனி யாக
நினைத்துட் கொள்கென நிகழ்த்துவெ னிற்கே 652

கூர் - நுண்ணுணர்வு. திட்பம் - வினையு ணெஞ்சு கலங்காமை.

இன் : ஏழாவது. இயலும் - உளவாகும். நினைத்து உட்கொள்ளல் வேண்டுமென்று.

நினைத்துட்கொள்க : கடைக்குறை.

நிற்கு நிகழ்த்துவெ னென்க. நிகழ்த்துதல் - சொல்லுதல்.

இஃதினிச்சொல்லற்பாலவற்றை நுதலிப் புக்கது.

நூ0. இன்னது நிகழ்ச்சி யின்னது மீட்சி
யின்னவை செய்வ வின்னவை தவிர்வ
வின்னவை யச்ச மின்னவஞ் சாமை
யின்னது கட்டுமற் றின்னது வீடெனு
முண்மைக் கூறுபாட் டுணர்வு
மும்மைக் கூருளு மொண்மைக் கூரே 653

நிகழ்ச்சி : செய்தல். மீட்சி : செய்யாமை. செய்வ - செயற்பாலன. தவிர்வ - செய்யாதொழியற்பாலன.

கட்டு : வினைக்கட்டு. வீடு : வினைவீடு.

எனும் : என்றாற்போலும்.

உண்மையாகிய கூறுபாடுகளை யுணருமுணர்வு உண்மைக்கூறுபாட்டுணர்வெனப்படும் ; உண்மைகளைக் கூறுபடுத்துணரு முணர்வென்பதாம்.

இது கூர்மூன்றனுள்ளுந் தலையாயதென்னு மொண்மைக்கூர் இதுவென்றது.

நூக. செம்மையுந் தின்மையுஞ் செய்வவுந் தவிர்வவு
முண்மையி னுமா றுணரா வுணர்வு
வின்மைக் குரியருண் மிக்கோய்
மும்மைக் கூருளும் புன்மைக் கூரே. 654

செம்மை - அறன். தின்மை - மறன்.

இவை யுண்மையா ஞமாற்றை யுணராவுணர்வென்க. எனவே செப்மையென்று தின்மையைச் செய்தலுந் தின்மையென்று செம் மைய்யைத்தவிர்தலுஞ் செய்வனவற்றைத் தவிர்வனவென்றெழிதலுந் தவிர்வனவற்றைச் செய்வனவென்று தவிராமையு முணர்தலாகும் : திரிபுணர்வென்பதாம்.

வின்மைக்கு - விற்றெழி லுடைமைக்கு.

இஃதிடையாயதென்னும் புன்மைக்கூர் இதுவென்றது.

௩௨. அறிவில் லாமை யாரிருள் கவைஇப்
பொறியில் லாது பொல்லாங் கென்ப
நன்மை யென்று நயப்பது
மும் மைக் கூருளு மைம்மைக் கூரே 655

அறிவில்லாமையாகிய நிறைந்த விருளாற் சூழப்பட்டு.

பொறி — நல்லூழ். பொல்லாங்கென்ப — தீயன வெனப்படு பவற்றை.

நயப்பது - விரும்புமுணர்வு.

இது கடையாயதென்னு மைம்மைக்கூரிதுவென்றது.

௩௩. நெஞ்சக முயிர்ப்பொ டைம்புலக் கூட்டர
வென்றிவை தாமே யியல்செயல் யாவும்
புணர்ப்பின் வழாஅப் புரைமை யோடு
தணப்பின் றாகத் தாங்கா வுய்த்தன்
மும்மைத் திட்ப முயக்கினு
ளொண்மைத் திட்பமென் றுணர்ந்து கோடியே.656

கூட்டரவு - கூட்டம்.

இயல் - புடைபெயர்கின்ற.

புரைமை - உயர்வுடைமை.

தணப்பின்றாக - நீக்கமில்லையாக.

புரைமையோடென வைந்தாவதனிக்கப்பொருண் மூன்றாவதன் கண் மயங்கிற்று. புரைமையினின்று நீங்குத லில்லையாக வென் பதாம்.

தாங்கா - தடுத்து. உய்த்தல் - நடத்துதல். செயலெல்லாந் தடுத் துய்த்தலென வியையும்.

கோடி - கொள்ளாய்.

இது திட்ப மூன்றனுன்ளுந் தலையாயதென்னு மொண்மைத் திட்ப மிது வென்றது.

௩௪. ஊதியங் கண்ணி யூறிய பற்றினெ
டோதிய வறம்பொரு ளின்ப மோம்புதல்
குறிக்கொண் டொழுகுங் கோடாத் திட்ப
மும்மைத் திட்ப முயக்கினுட்
புன்மைத் திட்பம் பரவல காணே 657

கண்ணி- கருதி. ஊறிய - மேன்மேலாறுதெழுந்த. ஓதிய - கற்ற.

அறம் பொரு ளின்ப மோம்புதலைக்குறிக்கொண்டொழுகுதற்க ணமைந்து கோடாத் திட்பமென்க.

காண் : இதனையறிந்துகொள்.

இஃதிடையாய தென்னும் புன்மைத் திட்ப மிது வென்றது.

௩௫. கனவு மச்சமுங் கவலையும் புலம்பலுங்
தினவுச் செருக்குஞ் சிதையாத் திட்ப
மும்மைத் திட்ப முயக்கினுண்
மைம்மைத் திட்ப மன்னவ ரேறே 658

கனவு - துயில். தினவுபோல வடுத்தடுத்து மேற்கோட லின்றி யமையாமையிற் செருக்குத் தினவுச் செருக்கெனப்பட்டது.

கனவு முதலாயவற்றின்கண் மீட்கலாகாவாறு நிற்குமுறுதிமைம் மைத்திட்பமென்பதாயிற்று.

இது கடையாயதென்னு மைம்மைத்திட்ப மிது வென்றது.

௩௬. அன்பகல் கில்லா வாருயிர்த் தோழ!
வின்பமு மும்மைப் பண்பொடு படுமே
தொடக்கத் துக்கட் டுன்னரு நஞ்சாய்
முடிக்க லுற்றுழி மூவா மருந்தாய்ப்
பயிறொறு மேன்மேற் பருவரல் கெடலு
மயிறொறு மகிழ்வு மளிக்க வற்றாய்
மிளிருந் தளது விழுமிய வுணர்வின்
றெளிவிற் றோன்றிச் சிறந்தது
விளிவி லொண்மை யின்பகல் விருந்தே. 659-660

இன்பமு மும்மைப்பண்பொடுபடுமெனவே யவ்வாற்று னின்பந் தானு முத்திறத்ததாமென்றதாயிற்று.

செயற்கரிய நற்செயல் செய்தொழுகிப் பெறற்பாலதாகலின், அடக்கமில்லார் அது மாட்டாராய் ஐம்புலவின்பத்திற் பிணிப்புண் டிருத்தலின் அவரானறியலாகாதவின்பந் தொடக்கத்தக்க ணஞ்சு போல்வதாய்த் துன்னற்கரியதாமாறுணர்க.

முடிக்கலுற்றுழி வேட்கை தணியப்பெருத கழிபேரின்பமாக லின் மூவாமருந்தெனப்படுவதாம்.

பண்பினீங்கிய வீடுபேற்றின்பம்போலு முற்றின்பமன்மையிற் பயிலுந் தொறும் பருவரற்கேடும் அயிலுந்தொறுமகிழ்வுமளிக்க வற்றென்றே கூறியொழிந்தது காண்க.

வற்றாய் - வல்லதாய்.

விழுமியவுணர்வின் றெளிவு : இயற்கையுணர்வொடு கூடிச் சிறந்த கல்வியுணர்வின்விளக்கம்.

உணர்வின்றெளிவு : தெளிவுணர்வு.

இவ்வின்பம் அடக்கம், நெஞ்சுசொற்செயல்கள் நல்வழிப்படுதல், அழுகை, சூழ்ச்சி, அறிவுநிகழா நிற்றலென்றிவற்றான் வருவது. விளிவு கேடு.

இது நெடுநாளாகத் தெவிட்டாது வேட்கையொடு நுகரப்படுதல் பற்றி விருந்தெனப்பட்டது.

இஃதின்பமூன்றனுள்ளுந் தலையாயதெனப்படு மொண்மையின்ப மிது வென்றது.

௩௭. அடிக்க ணின்சுவை யான மருந்தாய்
முடிக்க லுற்றுழி முருக்கு நஞ்சா
மைம்புல வின்ப மறிவிலா
ரின்புறு புன்மை யின்ப மென்கவே 661

அடிக்கண் - முதலில். மருந்து : துறக்கவுணவு.

முருக்குநஞ்சு — கொல்லுநஞ்சு.

ஐம்புலவின்பத்தாற் பின் றுந் துன்பமுறுதலை யறியாது மகிழ்ந்து செருக்குதலின் அறிவிலராவார்.

இஃதிடையாயதெனப்படும் புன்மையின்ப மிது வென்றது.

௩௮. தொடக்கந் தொட்டு முடிக்குங் காறு
நடக்குந் துன்ப நல்குவ தாகித்
தன்னை யுடையார் தமக்கயர் வீன்பது
மடி துயி லிழுக்கென வரூஉ மூன்றி
னடியுறத் தோன்றி யாவது
கடியுறு மைம்மை யின்பங் காணே 662

மடி : தொழில்செய்யவிரும்பாமை.

இழுக்கு : தவறியொழுகுதல்.

மூன்றினடியாகவென்பது மூன்றும் பொருட்டாக வென்பதாம்.

ஆவது : வளர்வது.

கடியுறு : அறிஞராற் கடிந்தொதுக்கப்படும்.

இது கடையாயதெனப்படு மைம்மையின்ப மிது வென்றது.

இம் மூன்றுபாட்டானுந் தொடக்கத்துத் துன்பமாய் முடிவி னின்பமாவதுந் தொடக்கத்தின்பமாய் முடிவிற் றுன்பமாவதுந் தொடக்கந்தொட்டு முடிவுகாறுந் துன்பமாவது மென்றிவை முறையே தலை, யிடை, கடையின்ப மென்றவா றுயிற்று.

௩௯. இயல்பி னகு மிம்முப் பண்பின்
மயலி னீங்கிய மன்னுயிரென்ப
வீண்டை யாங்கணு மில்லை
யாண்டை வானுமை யாயினு மற்றே 663

மயல் : இன்பமல்லாதவற்றை யின்பமெனக்கொண்டு பற்றுதல்.

வானோர் தலையாய வொண்மையின்பத்துக்கண் மயலுடையராக லின் அற்றே யென்றது. வானுழை - வானுலகின்கண். ஆயினும் - ஆராயினும்.

சo. புலவர் தலைவர் விலைஞர் வினைஞ
ரிவர்தந் தொழில்வே றிவர்த மியல்பி
னமையும் பண்பி னருங வதனு
லமையுந் தோறு மவ்வவ ரெனலே. 664

தலைவர் : நாடு பாதுகாத்து நடத்துந் தொழிலுடையவர்.

விலைஞர் : கொண்டுவிற்போர். வினைஞர் : உழுதல், செய் பொருளாக்கன்முதலிய தொழிலுடையவர்.

தொழில்வேறு பண்பினருங வென்க.

இவர்த மியல்பி னமையும் பண்பு.

அமையுந்தோறு மவ்வவ ரென்க வென்றது புலனுழுதுண்ணும் புலவராயினர் அத் தொழிலாற் குடிவாழ்க்கை நடத்துதலைவிட்டுத் தலைவர்முதலாயினர்க்குரிய தொழில்செய்துழி அவரை யது பற்றிப் புலவரென்னது தலைவர்முதலியவராக வவ்வத்தொழிற்கேற்பவே வழங்கல்வேண்டும். இதுபோல வேனோர்க்குங் கருதிக்கொள்க.

ஒருவர் வேறு வேறு தொழில் செய்தலும் அதனல் வேறுவேறு பெயர்க்குரியராதலு மவர்தம்பண்பி னமைந்தனவாதலி னவையும் பிறப்பொடுபட்டன வெனவேபடும். அதனுலவரை யங்ஙனஞ் செய் யற்க வென விலக்குதலுந் தொழிற்குரிமை யில்லாத பெயரான் வழங் குதலுங் குற்றமாப்.

ஒருவரை அவர்தந் தாய்தந்தையர்வயிற்றிற் பிறந்தபிறப்புக் கொண் டின்ன பிறப்பினரென வழங்கல் பொய்படும். திருமாற்கு நிலமகளிடைப்பிறந்தானொருவன் உம்பராகாதிளிஞனயினனென்ப. ஆகலினவரவர் தொழில்கண் டின்ன பிறப்பினரெனக்கோடலே சான் றோர்முடிபு. பல தொழில் செய்வாரைப் பல பிறப்பினரென்றலே முறையாகும். அன்றுயிற் றலைமைத்தொழில்பற்றி ஒருபிறப்பின ரென்றலு மமையும்.

சக. செறிவொடு தகைப்பு நோன்பு தூய்மை
தண்மை நேர்மை புலமை கல்வி
கடவுட் சிறப்பெனக் காட்டிய வொன்பதும்
புலவர்க் கியல்பிற் பொருந்தி
நிலவக் கடவ தொழிலென நினையே 665

செறிவு : நெஞ்சடக்கம், தகைப்பு : ஐப்புலன் மீட்டல். தண்மை : விழைவுவெகுளியின்மை.

புலமை : மெய்யுணர்வு. கல்வி : கற்றலுங்கற்பித்தலும்.

கடவுட்சிறப்பு : கடவுளைவழிபடுதலும் வழிபடுவித்தலும்.

இவர் பரிசுபெற்று வாழ்பவராதலி னிவையிவர்க்கு நிரம்ப வமையற்பாலவாம்.

உழுவானொருவன் சேறு முதலியவற்றொடு படுத லியல்பாகலின் அவன் எப்பொழுதுந் தூய்மையோடிருத்தலாகாமையுணர்க. பிற வற்றையு மிங்ஙன மிவர்க்கே நிரம்புதற் குரிய வெனக் கண்டு கொள்க.

சஉ. ஆண்மை யொண்மை திண்மை யாற்றல்
போர்ப்புறங் கொடாமை யீகை கொற்றமொ
டிலகு மிருநான் கியல்பினோர்
புலவர் வழிப்படுந் தலைவ ரெனலே, 666

ஆண்மை : அஞ்சாது பாதுகாத்தல்.
ஒளியுடைமை : பிறர்கண் டஞ்சத் தக்க பெருமை.
திண்மை : இடையூறு நேர்ந்துழிக் கலங்காமை.
ஆற்றல் : சூழ்ச்சியொடு மடியின்றி வினைமேற்கொண் டுய்த்தல்.
கொற்றம் : நாடாளுதல்.
வழிப்படும் - பிற்படும்.
தலைவர் புலவர்வழிப்படவே பிறர் தலைவர்வழிப்படுவாராவர்.

சங. வேளாண் மையொ டானிரை புரத்தல்
விற்பனை யென்றிவ் வினையியல் பானோர்
விலைஞ ரென்று விளம்பப் படுவ
ரேனை முத்தொழிற் கின்றி யமையா
வான வெத்தொழி லாற்றினு மவர்தாம்
வினைஞ ரென்றல் வேண்டு
மினையர் நால்வரு மென்னுடற் கூறே. 667

வேளாண்மை : பயிர்செய்தலுஞ் செய்வித்தலும்.
விற்பனை - கொண்டுவிலை.

இவ்வித் தொழில்க ளெவரெவர்பாற் காணப்படுமோ வவ்வத் தொழிலுடையாரை யவ்வவரென்க.

இந் நாற்பாலாரு மொருவர்க்கொருவ ரின்றியமையாதுதவி செய்பவரா யொழுக வுலகங் காணப்பட்டியலுதலின் இவர் நால்வரு முலகமே யாக்கையாகிய கடவுட் கொரோவோருறுப்பாவர். அவரவ ரின்னவுறுப்பென்பதுணர்ந்து கொள்ளப்படும்.

சச. தத்தமக் கியன்ற வெத்தொழிற் கண்ணு
மொத்தியன் றுள்ள முவகை கொள்ளுநர்
நன்ன ராக்க நண்ணுப
வன்ன ராமா றதுவுங் கூறுகே, 668

அவரவர்க் கியன்ற தொழில்செய்துண்ணுதற்க ணேற்றிழிவு நோக்காது தப்முளொத்து நட்பாடி யுவகைகொள்ளுபவர்க் கமைதியும் வறுமையின்மையு மமையுமாகலின் நன்னராக்க நண்ணுவராவர்.

ஒழுக்கம்பற்றி யேற்றிழிவு கொள்ளல்வேண்டும்; தொழில் பற்றிக் கொள்ளுதல் கூடாது.

சரு. மன்னுயிர்க் கெல்லாம் வாய்த்த வினைக
ளென்னுழி நின்று மெய்தற் பாலகொ
லெதனி னின்ன வெல்லாஞ் சான்றகொ
லதனைத் தத்தமக் கமைந்த தொழில்கொடு
பணியென வழிபடற் பாலார்க்
கணியென வாக்க மளிக்கு மவ்வே. 669

வாய்த்த வினைகள் - நேர்பட்ட தொழில்கள்.
என்னுழிநின்றும்? - எவ்விடத்திருந்து.
எதனின் - எதனால். சான்ற - நிறைந்தன
அதனை :- அச்செம்பொருளை, கடவுளுமாம்.
பணி: அச்செம்பொருளினுலேவப்படுங்கட்டளை: கடவுளானேவப்படுங் கட்டளை யெனினுமாம்.

தத்தந் தொழில்களைக் கடவுளின் பணியெனக்கோடலே அவற்ருன் அவனை வழிபடுதலாம். அப்பணியி னூதியங் கடவுணுகர்தலாகக் கோடல்வேண்டு மென்பதுதானே யமையும்.

அவ்வாறு வழிபடி னெல்லாத் தொழிலுந் தம்மு ளேற்றிழிவின்றி யொக்கு மென்பதாம்.

அணி: அழகு செய்வது அணியென வாகி யென வொருசொல் வருவிக்க.

ஆக்கம் : இம்மை மறுமை வீடு பேறுகள்.

அவையளிக்கும்: அத்தொழில்கடாமே கொடுக்குமென்பது. அதனாலவையிற்றைக் குற்றமென விடல்வேண்டா வென்பது கருத்து.

சசு. அடிமைத் தொழிலை யமிழ்கிய வாறு
மடிமை யின்றி மாணச் செய்தலிற்
றற்கிழ மைத்தொழில் சாலவு நன்று
பொற்புடைத் தன்ருப் புலப்படு மேனு
மூழிற் றன்னியற் கொத்த தொருதலை
வீழின் றியற்றல் வேண்டுமாற்
கூழிற் றன்றியுங் கொடுமைத் தன்றே. 670

மாணச் செய்தலின் - நன்ருகச் செய்தலினும்.

தற்கிழமைத்தொழில் - தனக்குரிமையாகிய தொழில். சாலவு நன் றென்றது இழிந்ததாயினும் பிறர்க்குரியதாயதனுயர்வு கண்டு தா னதனைச் செய்தலினு மிகநல்லதென்பதாம். பொற்புடைத் தன்ரு - பொலிவுடையதன்ருக.

ஊழின் -' ஊழ்வினைமுறையான்.

ஒருதலை - துணிவாக.

வீழ் இன்று - செய்யாது கழிதலின்றி.

ஆல் : அசை.

கூழிற்று : உணவுபயத்தலுடையது.

கொடுமை - தீவினைத்தன்மை.

எத்தொழிலுங் கொடுமை பயத்தலில்வழிக் குற்றமெனப்படா தென்பது கருத்து. உயர்ந்ததொழிலெனக் கருதப்படுவது கொடுமை யொடுபட்டதாயி னஃதிழிந்ததே; அதுசெய்வாரும் பிறப்பி னிழிந் தவரே.

இதனை லெத்தொழிலைச் செய்யினு மடிமையின்றித் தன் றொழிலையே கடவுட்பணியாகச் செய்தொழுகல்வேண்டும். பிறர்க் கடிமையாகித் தொழில்செய்பவர்தந்தொழில் பிறர்பணியாதலிற் கடவுள்பணியாக்க லரிதாகும்.

சஎ. தன்னியல் பாகிய தற்கிழ மைத்தொழில்
பன்னிய விழிபெனப் படினும் விட்டற்க
வென்னைகொ லென்னி னெல்லாத் தொழிலுளும்
புகைசூழ் நெருப்புப் பொருவ
நகைசூழ் வுற்றில நாடினு மிலவே. 671

பன்னிய - உலகுகூறிய.

பொருவ : ஒப்பிடைச்சொல். இவ் வெச்சம் உற்றிலவென்பதன் கண் உறுதலொடு முடிந்தது.

நகை : எள் ளி நகைத்துப் பழிக்கப்படும் பழி.

ஆராயினும் பழிசூழாத தொழி லொன்று மின்று.

புகை சூழாத நெருப்பில்லாவாறுபோல நகை சூழாத தொழிலு மில்லை.

இங்ஙன மெல்லாத்தொழிலு மிழிவெனல்வேண்டுமாகலின் அவற்றுட் சிலவற்றை யிழிவென்று கூறுத லறிவில்லார் கொள்கை யாகும். அதனை லெத் தொழிலாயினு மடிமையில்லாத தற்கிழமைத் தொழிலாயின் அமையும்; அஃதென்பணியாகும் பெருமை புடைத் தென்றான்.

நாடினு மிலவேயாதலி னென்பதென விரித்து வினவுக்கு முடிபாக்குக.

சஅ. எப்பொருண் மாட்டு மிவர்தலும் பற்றுந்
தப்பின னாகித் தணந்து மீட்ட
சால்புளங் கோடலிற் றன்னை வென்றோன்
குழையாத் துறவு கோடலின்
விழையா வினையினும் விழுப்பம் பெறுமே. 672

இவர்தல் - நிரம்பாவேட்கை. பற்று : கிடைத்ததனை யொட்டி விடமாட்டாமை.

நப்பினனாகி - நீங்கினேனாகி.

தணந்து : தன்னுள்ளத்தினின்றுந் தான் வேறுதலுணர்ந்து.

மீட்ட - திரிந்து செல்லாது தடுத்தடக்கப்பட்ட

சால்புளம் - அமைதியுள்ளம்.

சால்புளங் கோடலிற் றன்னை மென்றேனென்றது தன்முயற்சித்தொழிலைக் கடவுள்பணியெனச் செய்பவனாகி அதனாதியமுங் கடவுட்காக்கும் வள்ளலை. கடவுட்காக்குதலாவது கடவுட்டன்மை வெளிபடுகின்ற பிறவுயிர்களைநுகர்வித்தலுந்தன்னுகர்வுக்கடவுணுகரு நுகர்வென வுணர்தலுமாம்.

அவன் முன் செய்யும் வினைக்கண் யான் செய்தேன்; எனக்கென்னும் பற்று மவாவுந் துறந்த துறவு கோடலானே யவன்றொழில் விழையாவினையோடொக்கு மாகலின் விழையாவினையினலுண்டாகக் கடவ சீர்மையைப் பெறுவா னென்றவாறு.

அச்சீர்மை கடவுளோடொப்புஞ் செம்பொருளுணர்வுஞ் செம்பொருளாக்கமுமாம். செம்பொருள் : பெரும் பொருள். செம்பொருளாக்கபாவது அவன் செம்பொருடானாதல்.

விழையாவினை : வினை செய்யாமை : உள்ளம் வினைசெய்துழியுந் தா னது வன்றென மெய்யுணர்தல்.

விழையாவினை கடவுள்பணியாகச் செய்யுந்தொழின் முயற்சியின் வேறு. கடவுட் பணிக்கட் கடவுட்காதற்சுவை யின்பமன்றித் தற்காட்சிச் சுவையின்ப நிரம்ப வின்று. விழையாவினைக்கண்ணே தற்காட்சிச்சுவை நிரம்பலுளதாம். பற்றும் வேட்கையு மின்றிச் செய்த லொற்றுமையாற் கடவுட்பணி விழையாவினையோடொக்கு மென்றான். இங்ஙனம் விழையாவினையோடு கடவுட்பணியிடை வேற்றுமை யுணர்ந்துகொள்க.

சசு. வினைமுடித் தெய்த்தோன் விழுப்பெருஞ் சார்பினை
யெனையவா றெய்து மென்ப தாகிய
நண்ணரும் புலமை நன்னிலை
கண்ணுறத் தொகுத்துக் காட்டுவல் கேளே 173

முடித்து - முற்றச்செய்து. வினைமுடித்தலாவது வினைத் தன்மை நோக்குதல். எய்த்தலாவது வினையெல்லாமு மவற்றுவிளைவுந் துன்ப மல்லது தொழுதகவன்றென வெகுண்டு வினையி னீங்க வெண்ணுதல்.

நண்ணுதற்கரிய புலமையாவது விழுட்பெருஞ் சார்பாராய்ச்சி யுணர்வு.

அப்புலமையினல்ல நிலையாவது அச் செம்பொரு டானாகி நிலை பெறுதல்.

கண்ணுற - நுகர்வுகாட்சியாக. தொகுத்துக் காட்டுவல் - சுருக்கி யுணர்த்துவேன்.

ருo. யாது மொன்று மெண்ணு மையென
வோதுந் தூய்மை யுற்ற வுணர்வொடு
திண்ணிதிற் றற்செற் றைம்புலந் தீர்ந்து
விழைவொடு வெகுளி வீசி யெற்றி
வேறுவே றொருதனி மேவிடஞ் சார்ந்து
கூறுபாட் டுணுஅக் குறைய வுட்கொண்
டுழைசெய லெண்ண மொருங்குடன் மாய்த்து
நினைவொரு மைக்க ணீடுநின் றாழ்ந்து
முன்னிலைத் தோற்ற முன்னியக் காலை
யின்னவை பொய்யென வெண்ணி முனிதல்
வைகலு மோம்பி மருவின் வரூஉம்
யானென் பற்று மிடுக்கொடு தருக்குக்
காமம் வெகுளி கையேற் றலுமென
வின்னவை நோக்கா தென்னெனக் கென்றுதா
னுறைந்தாங் குறையூஉ வுடைமையொன் றின்றி
வான்பெருஞ் செம்பொருண் மன்னினோன்
றான்பெருஞ் செம்பொரு டானெனத் தகுமே

திண்ணிது - தளராது, இன்: அல்வழிச்சாரியை, திண்ணிய வுள்ளத்தானென்றுமாம். தற்செற்று - தன்னைத்தானடக்கி.

வேறுவேறொருதனி மேவிடம்: ஒருவனுகத் தனித்திருத்தற்குரிய வேறுவே றிடம். அங்ஙனமன்றி யோரிடத்தே வதியிற் பற்றுளதாதல்கூடும்.

நினைத்த வுணவெல்லா முண்ணுது தானுண்ண வெனக் கூறு படுத்த கூறுபாடாகிய வுணு: அவை: ஆன்பால் பழமுதலாயின.

அவற்றை யுண்ணுங்கானு நிரம்ப வுண்ணுது அளவிற் குறைய வுண்டல்வேண்டும். உணவு வேண்டப்படுவது உடம்பு வீழா வளவிற்கே யல்லது தொழில் செய்யு மளவிற் கன்று.

முன்னிலைத்தோற்றங் காட்சிப்படுவழி யிவைகனவும் பேய்த் தேருங் கயிற்றிற் பாம்பும்போலும் பொய்யென நினைதலான் மரூஉப் பற்றி முன்னிலை நோக்கிய வுணர்வு மீண்டு தன்னையே நோக்கி நிற்குப்.

மருவின்வரும் - பயின்ற பயிற்சியினுல் வரும்.

மிடுக்கு: உடல் வலிமை தன் வலிமையாதல். தருக்கு- செருக்கு.

கையேற்றல்: பிறர்பாற் கேட்டு வாங்குதலுமவர் கொடுப்ப வாங்குதலும். அவர்பணிந்த வேண்டிக் கொடுப்பக் கோடலிழுக் கன்று. அதனையுமெதிர்பார்த்திருத்தல்கூடாது. எனக்கென்னென்று: எனக் கெற்றுக் கென்று.

உறைந்தாங் குறையூஉ - இருந்தவா றிருந்து.

தன்னிணைவெழுமாறு தன்னுடையதென வுடைமை யொன்று மின்றி யென்க.

செம்பொருளின்க ணுணர்வு நிலைபெற்றேன்.

ருக பெருஞ்சார் பொருதா ளுயவன் பிறங்குபு
நறுந்தூ வான்மை நண்ணின னுலவா
வுயர்வற வுயர்நல மயர்வற வாயினன்
கவலையும் விழைவுங் காண னுகுவ
னெனைவகை யுயிரும் யானென நிற்பா
னெனையும் யானென விருந்து
நினையும் பேரன் பாகுவ னிவந்தே 677

பெருஞ் சார்பொருதாளுயவன்: பெரும் பொருளாகிய தாளொருவனே யாயினேன்.

நறுந்தூவான்மை - நல்ல தூய்மைமிகுதி. ஆவது வினையின்மை; அவாவின்மையுமது.

நலம் - இன்பம்.

யானென்பதிரட்டுறமொழிதல். நம்பிகூற்றாகக்கொண்டு கடவுளென்று கண்டு நிற்பானெனவுங் கொண்டெடுத்து மொழிதலாக்கிக் கூறப்படுமவன்யானென்று கண்டு நிற்பானெனவு மிருபொருள்படு மாதலின்.

எனையும்: கடவுளாகிய வென்னையும்.

யானெனவிருந்த: ஒப்புமையானும் சார்பானுங் காதலானும் யான்றானெனத்தானமைந்து.

நிவந்து - உயர்ந்து. கடவுளோ டொப்பாகியானை மன்னுயிரெல்லாவற்றினு மிக்கென்றவாறு. தன்னினுயர்வி யாண்டு மின்று.

இக் கூறிய வைந்தியல்பும் பெருஞ்சார்பொருதாளுயவ னியல்பு.

ருஉ எத்துணை மாண்பினேன் யான்யா ரெனுஅ
மெய்த்தக வென்னை விளங்க வுணர்வுறி
னயரா வன்புகொ டறிகுவ னுங்கவன்
றவறு துள்ளவா தானுணர்ந் தினிதி
னதுதா னுகை வுளனே
யதுதான் யானவ னனைத்துயி ரும்மே 678

எத்துணைமாண்பினேன்: கடவுட்குச் சிறந்த நற்பண்புநற்செயல் களாகிய மாட்சியெவ்வள வுடையேன்.

மெய்த்தக: மெய்மைக்குப் பொருந்த.

அங்ஙன மென்னையவன் றப்பா துணர்ந்தவிடத்துப் பெருஞ்செம் பொரு டாளுகை வுளனவன்.

அதுதான் - அப்பெரும்பொருடான்.

அதுதான் யானு மவனு மெல்லாவுயிருமாம். ஆகலின் என்னை அவனறியவே அவனெளிதின் அது தானாகி வுளனவ னென்று னென்க.

இதனா லது தானாய முடிபு நிலை தளராது நிற்றற்கு மருஉவாற் சிறிது தளர்ந்துழி மீண்டுமந் நிலையிற் கடிதுநிற்றற்கும் வாயில்கடவுட் காட்சி யென்பது கூறப்பட்டது.

௫௩. எல்லா வினையு மிழைத்த லாற்றி
யெல்லாப் பொழுதினு மிடையீ டின்றி
யென்னின் றமையா னென்னருட் டுணைகொண்
டெய்துவன் கண்டா யிறைவ
பொய்தப நிலவு பொன்று நிலையே. 679

இழைத்தல் ஆற்றி - செய்த லியல்வதாய்.

கிணற்றிற் புனற்குடந் தலைக்கட் டாங்கிக்கொணராநிற்பவள் பிறரொடு தானுரையாடாநின்றுழியு நினைவு தலைக்குடத்தின்மேல தாமாப்போல வினைசெய்பாநின்றே கடவுட்காதலித்து நினையாநிற்றல் கூடு மென்ப துணர்க. தற்காதலித்து நினையாநிற்றலு மது வென்ப.

என்னின்றமையான் - என்னையின்றியமையாதான்.

என்னருள் : யானவனாதல்.

கண்டாய் : முன்னிலையசை.

இறைவ ! - வேந்தே !.

தப - கெட.

பொய்பொய்யாகவே பொய்யாதெஞ்சிநின்று நிலவு பொன்று நிலை யெய்துவ னென முடிக்க.

௫௪. செவ்விய வுணர்விற் செவ்விதி னாரு
மெவ்வியல் வினையு மெற்கு நல்கி
யென்னை யின்றி யமையா யாகி
யொருங்கிய வுணர்வி னொருமை விடாஅ
தென்பாற் படுநெஞ் சிகலற்
றின்பா னயர்ந்திரு வெப்பொழு தும்மே. 680

செவ்வியவுணர்வு - திரிபில்லாத வுணர்வு.

செவ்விது - திரிபின்றி.

ஒருங்கியவுணர்வு - உணர்வுநிகழாமை.

நெஞ்சிகலற்று : நெஞ்சொடு பகை யற்று ; நெஞ்சுதன்வழிப்படு தலாம். என்பது தன்னைத்தானுணர்தற்கு மாறுகாது, நெஞ்சு புடை பெயராமையாம்.

இன்பான் எப்பொழுது மயர்ந்திரு: இன்பமிகுதியானே யென்னை யொழிந்தவற்றை யெல்லா நினையாதொழிவாயாக.

ருரு. என்பாற் படுநெஞ் சியைந்தனை யாகிநின்
னன்பாற் படுமென் னருட்டுணை வலிகொடு
கடக்கருங் கோள்பல கடக்கக் கடவை
செருக்கி னென்சொற் செவிமடா
திருக்கிற் கெடுவை யெனக்கென் மற்றே. 681

நின்னன்பானே யுண்டாகின்ற வெனதருளாகியதுணைவலி கொண்டு.

கோள் - இடையூறு.

செவிமடாது - செவிக்கட்புகுத்தாது.

நீ கெடுதலானெனக் காவதோ ரிழுவில்லை யென வருளிலான் போற் கூறிய தவன் றன் சொற்கட் பிணிப்புண்டு தன்பாலன்பு பொங்கித் தன்கட்டளைமருது செய்வித்தற் பயத்தது.

ருசு. யானெனச் செருக்கி யான்செருப் பொரேன்
யானின துரைகொளல் யாங்கென மறுப்பா
னினைத்தியேற் பொய்படு நினது துணிபு
நின்மரு ளியற்கை நின்னை
யென்வழிப் படப்போர்க் கேவவற் றயர்த்தே. 682

யாங்கு? - எவ்வாறு?. மறுப்பான் - மறுக்க.

நினைத்தியேல் - நினைப்பாயாயின்.

நினது துணிபு பொய்படுமென்க.

வில்லியின் புலம்பலு முறையினன்றி யிடையேவந்ததாகலி னது மருளின்பாற்பட்டதாகலின் அப்புலம்பனீங்கிப் போர்பொருதலு மரு ளின்பாற்பட் டொருதலையாக நிகழற்பாலதென்பது நம்பிதிருவுளம். அன்றியும் வினை துணையாக வன்றி மெய்யுணர்வு தலைப்பெய்தலுங் கூடாமை தேற்றமாகலானு பங்ஙன மவன் கூறியருளியது வாய்மை யாமாறு துணியப்படும்.

ஏவவற்று - செலுத்தவல்லது.

அயர்த்து : நின்னை மறக்கச்செய்து ; பிறவினை.

அயர்த்தேவவற்றென மாறுக. உயிர்களின் மருளென்னு மாற் றல் கடவுள் வழிப்பட்டதென்பது நினைக்க.

ருஎ. தனக்கியல் பெறூஉந் தன்வினை யானே
பிணிக்கலுற் றிருக்கும் பிள்ளாய் மருண்டுநீ
யெதனைச் செய்வா னிவர்கின் றிலையோ
வதனைச் செய்வை யாற்ற லின்றித்
தனையிழந் திருப்பினுந் தராஅ
வினையுழந் திடுதி வினைவழிப் பட்டே. 683

இயல்பெறூம் - இயல்பா யுண்டாகும்.

பிள்ளாய்! : விளி. பிள்ளை - ஒருவனுகி யஞ்சாது போர் பொர வல்லவன்.

இவர்கின்றிலேயோ - விரும்புகின்றிலேயோ.

செய்தற்குரிய வாற்றலின்றி நின்னை நீ மறந்திருப்பினு மென்க.

தானுக வினைவழிப்பட்டு வினையுழந்திடுதி. துயிலுங் கனவும் விழிப்பு மொருவர்க்குத் தம்வரையின்றி யிருப்ப நிகழுமாறுபோல வினைமுயலுதல் கூடுமென்பது நம்பிதிருவுளம்.

உழத்தல் - முயலுதல். இடு : துணிவுக் குறிப்பிற்று.

ருஅ. இறைவ னுவா னெவ்வுயிர் நெஞ்சினு
மிறைகொள லான்றிசி னிறைவன் ருனே
மருளெனு மணையின் மயங்கி யேறிய
மன்னுயிர் மரபின் வரூஉ
மென்னவுஞ் சுழற்று மிருவினை யானே. 684

இறை - தங்குதல். ஆன்றிசின் - அமைந்தான்.

மருள் - ஆற்றல். மணை : தானேயியங்குபொறி. மயங்கி - அறியாது.

என்னவும் - எல்லாவற்றையும்.

என்னவு மிருவினையாற் சுழற்றுவானென்க,

சுழற்றுதல் - மீளமீளப் பிறந்திறந்து மேலுங் கீழு முழன்று வரச் செய்தல்.

மருளெனு மணையெனவே மருளினுக்கமாகிய நெஞ்சு பொறி யுடன் முதலிய வெல்லாமடங்கும்.

இதனுனும் வில்லிக்கு வினைக்கிழமையன்றித் தற்கிழமையின் றென்ருன்.

இவைநான்குபாட்டானும் வில்லியைநம்பி வன்சொற் சொல்லித் தன்பணி நயப்பித்தருளினன்.

ருசு. எவ்வாற் ருனு மெவ்வா றெண்ணியு
மெவ்வா யிடையு மெந்நிலைக் கண்ணு
மியவுள் கடவு ளிறைவன் முனைவன்
வியவுள் புலவன் விழுமியோன் றன்னைப்
புகல்புகற் பாலை புகுக புகல்புகி
னவனரு ளானே யையமின் றெய்துதி
தவவுயர்ந் தொருதா னுகிச் சார்புட
னவாஅ வழிய வமையுந்
தவாஅ வின்பத் தன்னியல் பிணையே. 685

எவ்வாற்ருனுமென்றது வேள்வி யீகை நோன்பு பணி முதலிய வற்று ளெவ்வாற்ருனு மென்றவாறு.

எவ்வாறெண்ணியு மென்றது படைப்போன், காப்போன், அழிப்போன் முதலாகவுந்தந்தை தாய் மகன் நண்பன் றலைவன் முதலாகவு மெவ்வா றெண்ணியு மென்றவாறு.

எவ்வாயிடையுமென்றது ஞாயிறு திங்கள் ஐம்புலம் பெரியோர் முதலிய வெவ்விடத்துக்கண் ணு மென்றவாறு.

எந்நிலைக்கண் ணு மென்றது இல்வாழ்க்கைநிலை, ஏனைவாழ்க்கை நிலை, வாலியநிலை, செல்வநிலை, வறியநிலை, மேற்பிறப்புநிலை, கீழ்ப் பிறப்புநிலை, இளமைநிலை, சாகாட்டுநிலை முதலாகக் கூறு மெந்நிலைக் கண் ணு மென்றவாறு.

இயவுள் - தலைவன். முனைவன் - முதல்வன். வியவுள் - ஏவுப வன். ஒரு பொருட்பல் பெயர்.

புகற்பாலை - புகுதற்குரியை.

புகல்புகற்பாலை ; புகல்புகுக. புகல் - அடைக்கலம்.

தவவுயர்ந்து - மிகவுயர்ந்து.

சார்பு : உடல் நெஞ்சு முதலாயின.

சார்போ டவாவு மொருங்குடன்கெடத் தானே யமையுங் கெடா வின்ப மென்க. அவைகெட்ட துணையானே யமையுமுயிரமை தியே வீடுபேறென்பதல்லது வேறு செய்து கொளப்படுவதன்றாகலிற் றன்னியல்பெனவும் பட்டது.

தன்னியல்பென்னு மாறுவது விலங்காகிய பிறப்பினை விலங்கி னது பிறப்பென்றாற்போல நின்றது.

இஃதிதுகாறு மிச்செய்வுளகத்துக் கூறிப்போந்தவழி யொன்றுங் கடைப்பிடிக்கலாற்றார்க்குரிய அடைக்கலம்புகுதலென்னு மீற்று வழியு மதன்பயனுங் கூறிற்று. இதுவே யாக்கமெய்தும் வழி யெல்லாவற்றினு மெளிதாவது. இதனினு மெளிதாவதொன்று மின்மையி னிதுவுஞ் செய்யலாற்றார்க் குய்யுமா றில்லை யென்பதே முடிவு.

கூ0. எமரு ளெமரனை யாதலி னண்ப
மறையுள் விழுமிய மறையை வாய்மையைப்
புலமையை யுய்தியைப் பொன்று வுறுதியை
வீடு பேற்றினை விரித்துரை செய்தேன்
பீடு சான்ற பெருந்தகாய் நீபாய்ந்
தீங்கன முற்று மெண்ணி
யாங்கனம் விரும்புதி யாங்கனஞ் செய்யே. 686

எமர் - எம்முறவினர். எமரனை - உறவினனாகியுள்ளாய்.

மறை - பிறரறியாமற் பாதுகாக்கத் தக்கது.

இரண்டாவது பெயர்தொறு மடுத்து நின்றது. மறைமுதல் வீடுபேறிறுதியாகக் கூறப்பட்டன வொருபொருட்பல் பெயர்.

மீடுசான்ற - பெருமை நிறைந்த

யான் சொல்லவேண்டு மவையெல்லாஞ் சொல்லினேன்; இனி, நீவிரும்பியவாறு செய்யலாமென்றதனனும் தன்பணி நயப்பித்தருளி னன்.

சூக. ஈற்றின் மறித்து மிஃதொன் றுரைக்கே
னூற்ற வெல்லா வற்றந் தம்முளுஞ்
சாற்றற் கரிய தாவி லற்ற
மின்ன வென்பே ரின்னெழிற் கிளவி
மன்ன கேண்மோ வாழியர் நீதா
னெற்குநல் லளிய வெலுவ னல்லையோ
நிற்கிது நலஞ்சொல நினைப்பல்
பொற்குவை தன்னினும் போற்றத் தக்கதே 687

ஈற்றின் - இம்முடிவின்கண். மறித்தும் - மீட்டும். ஆர்ற - மிக. தா - கேடு.

பேரின்னெழிற்கிளவி — பெரிய வினிய அழகிய சொல். கிளவியை யற்ற மென்முன்.

வாழியர் - வாழ்க. அளிய - இரங்கத்தக்க. எலுவன் - தோழன் இதுநலம் - இந்நலம்.

போற்றத்தக்கது - இடைவிடாது நினைத்திருந்து பாதுகாத்துப் பேணத் தக்கது.

சூஉ. நீயெனக் கினியை நீயெனைச் சார்வை
வாய்வது பொய்யா தேய்தரு மிவ்வுரை
சூளுரை தருவென் றேலா வில்லி!
நின்னுளந் தன்னை யென்னுள மாக்கி
மன்னுறு மார்வல னுகுக வைகலும்
விராஅ யென்னை வேட்டுப்
பராஇப் பழிச்சுக பன்மாண் பெரிதே 688

இனியை - மகிழ்ந்தார்வஞ் செய்யப்படுகின்றனை.

சார்வை - அடைவாய்: முன்னிலைவினைமுற்று.

வாய்வது: அது தப்பாது. ஏய்தருமிவ்வுரைபொய்யாது-பொருந் தியவிவ்வுரை பொய்யாது.

பொய்யாதென்பதற்குச் சூளுரை தருவேனென்முன்.

மன் - நிலைபெற்ற.

உறுமார்வலன் - நல்லஅன்பன்.

வைகலும் - எப்பொழுதும்.

என்னைவிராய் - என்னைக்கலந்திருந்து.

வேட்டு: உள்ளனகொடுத்து.

பராய் - புகழ்ந்து. பழிச்சுக - வணங்குக.

பன்மாண் - பலகாலும். பெரிது - மிகவும்.

ருரு. என்னவும் வினைநல மெண்ணு திகந்தனை
யென்றொரு வேண யின்னே புகல்சார்
யானினைத் தீவினை யாதனி னின்று
நீயினை யாக்குவெ னெடியோய்
நீயினை துயர நீங்குக வினியே 689

என்னவும் - எல்லாம். வினைநலம் - அறம்.

இகந்து - விட்டுநீங்கி. எண்ணுதிகந்து - நினைப்பின்றிநீங்கி.

இன்னேபுகல்சார் - இப்பொழுதே யடைக்கல மடைக.

நீயினையாக்குவன் - விட்டுநீங்கினையாக்குவென்.

நீயினை துயர மினி நீங்குக - நீவருந்தும் வருத்த மிப்பொழுது நீங்குவாயாக,

இவையிரண்டுபாட்டானு மிதுகாறுங் கூறிப்போந்தவற்றுள் யாதனைச் செய்யினுஞ் செய்யாதொழியினுங் கடவுளன்பு செய்க. அன்றேற்கடவுளை யடைக்கலம் புகுக. மேல்ஆகக் கடவ வெல்லாந் தாமே நிகழ்வனவாமென வழிதுறைகூறுஞ் சொற்பொழிவ்வினை முடித் தினிமுடிவுரை கூறியருள்கின்றான்.

ருச. நிற்கியான் செவியறி வுறுத்த நெடுமொழி
தொக்குரை யற்க துகளறு கேள்வியோய்
நோலா னென்வயி னோக்கிய காதல்
சாலான் றக்கோர்ச் சார்ந்து பணிபு
செவிக்கொள நயவான் செப்புமென் மாட்டு
மௌவித் தழுக்கா றுக்குவோ
ளிவ்வித் தன்மையர்க் கெஞ்ஞான் றும்மே 690

நெடுமொழி : இந்நூற்கிளவி.

துகள் - ஐயந் திரியறியாமையாகிய கசடு.

துகளறுக்கும். துகளற்றவெனினுமாம்.

நோலான் - நோன்புகொண்டொழுகாதான்.

நோக்கிய - இன்றியமையாத; "வானோக்கி வாழு" மென்புழிப் போல (முப்பால். செங்கோன்மை. உ)

காதல்சாலான் - அன்புநிரம்பாதான்.

பணிபு - பணிந்து. செவிக்கொள - கேட்க

என்மாட்டுமௌவித்து ; உம்மை : இழிவு சிறப்பு. கடவுளர் மாட் டழுக்காறுகொள்வோற் கொருஞான்று முய்தி யில்லை யாக லின் அவ்வழுக்காற்றி னிழிவுமிகுதி புலனாகும். ஔவித்தல் : தன்னு ளங்கோடுவித்தல். இவ்வித்தன்மையர் : பன்மைக்கட் சுட்டடுக்கு.

இஃதறவுரை கேட்பிக்கத் தகா ரிவரென்றது. இதுவு மிந்நூல் பயக்குமாறு கூறியதாம்.

சுரு. இப்பெரு மறையினை யென்னோர் வலர்பாற்
செப்புவன் யாவனத் திருத்தகு சீரிய
னென்பாற் காத லீண்டி யின்பமர்ந்
தென்பா லெய்துதற் கில்லை யையுறன்
மக்களு ளவனின் மகிழ்ச்சியெற் கீயத்
தக்கவ ரில்லையித் தன்மையி னுனே
யன்னேன் றன்னினு மன்பரெற்
கென்னோர் தாமு மில்லை யிவணே 691—692

திருத்தகு சீரியன் - நல்வினையாற் றகுந்தமேலோன்.

ஈண்டி - பெருகி.

எய்துதற்கையுறலில்லை - எய்துதற்கணையுறவில்லை; வேற்றுமை மயக்கம்.

அவனின் - அவன்போல. எற்கு மகிழ்ச்சி யீயத் தக்கவ ரில்லை.

தன்னினும் : இன் உறழ்பொருஉ. உம்மை : உயர்வு சிறப்பு.

இது கேட்பிக்கத் தக்கா ரிவ ரென்றது.

சுசு. மறத்தகை களையும் வன்க ணாள !
திறத்துளி நாமிவட் செப்புக் கடாவொ
டப்பெருங் கட்டுரை யாடிய வாற்றை
மறக்கில னோதி வருத லென்னும்
புலமை வேள்வியிற் போத
வளமை யுவகையேன் மற்றிதென் கொட்பே. 693

மறத்தகை - தீவினைத்தன்மை - வன்கணாள ! - அஞ்சாமை யுலடயவனே.

திறத்துளி - தகுதியான். உளி : மூன்றுவதன் பொருள்படுவதோ ரிடைச்சொல்.

செப்புக்கடா - வினாவிடை.

மறக்கிலனாகி. மறவாதோதுதல் புலமைவேள்வியெனப்படும்.

போத - நிரம்ப.

உவகைவளமுடையேனவேன்.

மற்று : அசை. கொட்பு - கொள்கை.

சுஎ. ஊக்க மேற்கொ டமுக்கா றொழிந்து
தேக்கி யிதனைச் செவிமடுக் குநருந்
தீவினை தீர்ந்துநற் செயலிற்
கேவிய நல்லுல கெய்திவாழ் குவரே. 694

மேற்கொடு - மேற்கொண்டு.

இதனைச் செவித்தேக்கி மடுக்குநர்.

ஏவிய - சொல்லப்பட்ட.

இவை யிரண்டு பாட்டானு மிந்நூலைக் கற்பார்க்குங் கற்றூர் சொல்லக் கேட்பார்க்கும் பயன்கூறப்பட்டது.

சூஅ. உசாத்துணை யாள வுரைப்ப விதுகா
றசாக்கெட நின்னு லறிவொரு முனைப்பட்
டினிது கேட்கப் பட்டவே யிதனு
லறியா மையு மயர்வும்
பறியா வீசப் பட்டுமாய்ந் தனவே. 695

உசாத்துணையாள ! - சூழ்ச்சிக்குத் துணையாந்தான்மை யுடையவனே !

இதுகா றுரைப்ப - இதுகாறு மிவையிற்றை யான் சொல்லியதனுல்.

அசா - துன்பத்தளர்வு.

இனிது : ஐயந்திரியின்றிமுற்ற.

பட்டவே : ஏ : வினு.

இதனுல் - இக்கேள்வியானே.

பறியா - பிடுங்கி.

மாய்ந்தனவே : ஏ : ஈற்றசையும் வினுவுமாயிற்று.

இதனுனே நம்பிக்கு வில்லிபா லெழும்பரிவுமிகுதி புலனுகும். இது தலைப்பேராசிரிய ரியல்பு.

இப்பாட்டு நம்பிவினு. மூவகை வினுக்களுள் அறிவினுவின்யாற் படும். இதனை அவனறிவுதான்காண்டலென்னும் வினுவென்ப.

சூகூ. நின்னரு ளானே யென்னயர் வொழிந்து
தென்னினை வெய்திற் றெம்பெரு மானே
யிற்ற தையுற வினிநீ
யிட்ட கட்டளை யென் றலை மேற்றே. 696

என்னயர்வு - என்னறியாமை.

என்னினை வெய்திற்று - எனது நினைவென்கண் மீண்டு வந்துற்றது. அறியாமையா னினைவிழந்தயா னிழந்த நினைவினை யெய்தினே னென் றுன்.

ஐயுறவிற்றது - ஐயவுணர்வு கெட்டது.

இட்ட கட்டளை - கொடுத்தபணி.

இனி, நீ யிட்ட கட்டளையை மருது செய்வேனென்பதாம்.

இதுவில்லி விடை.

எ0. எனவிது நம்பி வில்லிய ரிறைவர்
நனவிய ஞாட்பு நாப்பட் கிளந்த
மெய்சிலிர்ப் பரும்பு வியத்தகு விழுமிய
நல்வழக் காட்டு நயவுரை மருந்து
செவிமடுத் துண்டு திருந்தினேன்
கவிகுடை நீழற் காவல யானே 697

இதுவாகிய மருந்தென வியையும். இறைவர் - தலைவர்.
நனவிய - அகன்ற. ஞாட்பு - போர்க்களம். நாப்பண் - நடு.
கிளந்த அரும்பு வியத்தகு விழுமிய வென்பன பெயரெச்சவடுக்கு. இவற்றுட்கிளந்த வென்ப தொழிந்தன இடைப்பிறவரல்.
நயம்: சொன்னயம் பொருணயம்.
திருந்தினேன்: அறியாமைநோய் தவிர்ந்துய்ந்தேன்.
கவிந்த குடை. காவல வென விளித்தது ததராட்டனை.
இது முனிவனஞ்சயன்கூற்று.

எக. இணைப்பி லிப்பெரும் புதையலை யெடுத்துப்
புணர்ப்பு கிழவோன் புயலெழிற் றிருமால்
வாய்ப்பத் தானே வழங்கயான் கேட்டோ
வென்னா சிரியன் யாதன்
றன்னற் றலைப்படு தண்ணரு ளானே. 698

இணைப்பில் - ஒப்பில்லாத. பெரும்புதையலென்றது இந்நூ னுதலிய வுறுதிப்பொருளை.
புணர்ப்புகிழவோன் - புணர்ப்பிற் குரிய கடவுள்: முதல்வன்.
புயல் - கொண்மூ.
வாய்ப்ப: வில்லிக்கு நல்லூழ் தலைப்படுதலானே. வழங்க - கொடுப்ப.
திருமால் புதையலை யெடுத்து வழங்காநிற்ப யான் கேட்டேன்.
கேட்டு - கேட்டேன்: து: இறப்பின்வந்த தன்மையொருமையீற்றுநிலை. ஓ: அசை. கேட்டேனென ஓதல்கொளினுமாம்.
யாதன் - முனிவன் வாதராயணன். இதுவியாதனென்னும்வடசொற்சிதைவு.
தண்ணருளான் யான் கேட்டென்க. இவன் போர்க்களனிகழ்ச்சி யெல்லா மஞ்சயற்குப் புலப்படுத்துமாற்ற லருளினன்.
இதுவு மேல்வருமூன்றுபாட்டு மேலதுபோலத் ததராட்டனை நோக்கி முனிவனஞ்சயன் கூறுவன.

எஉ. நம்பி வில்லியர் நல்வழக் காட்டு
நன்கிறும் பூது நல்குந் திருவிது
நினைபு நினைபு நினைதொறு நினைதொறும்
பூத்திடு முவகையிற் பொலிகுவென்
கோத்தத ராய குறிப்புவே றிலெனே. 699

நம்பிவில்லியர் : உயர்திணையும்மைத்தொகை.

வழக்காட்டு - வழக்காடியவுரை.

நன்கு - மிகவும். திருவிது - அழகியது.

நினைபு நினைபு - நினைத்து நினைத்து.

கோவாகிய ததராயனே யென்க. ததராயன் - ததராட்டன்.

அந் நல்வழக்கு நினைவல்லது வேறுநினைவிலனுகின்றேன் யானென்றானென்க.

எ௩. மன்னர் மன்ன நும்பி மகற்கு
முன்னர் நம்பி முனையிற் றோற்றிய
தன்னெழிற் கோலஞ் சாலப் பெரிது
மிகுவியப் பெய்த விரிந்த வதனை
நெகுமுளத் தோடு நெடிது நினையூ
வியப்புங் களிப்பு மேன்மே
னயப்பு மொருங்கு நண்ணு நிற்பெனே, 700

நும்பி மகனென்றது வில்லியை. முனை - போர்க்களம்.

தன்னெழிற் கோலம் : ஞாலப்பேர் யாக்கை.

களிப்பு - மகிழ்ச்சி. நயப்பு - அன்பு

நம்பி திருக்கோலமுங் கண்டேனெனக் கேள்வியே யன்றிக் காட்கியு மெய்தியவாற்றை விதந்து வேறுகூறினன்.

எ௪. புணர்ப்பின் செல்வப் புரவலன் காரியொ
டிணைப்ப வில்லி மள்ளன் யாண்டுள
ணுண்டுள வாகு மன்ற வழியாத்
திருவும் வென்றியுஞ் செல்வமு
மருவுஞ் செம்மையு மிதுவென் வழக்கே. 701

புரவலன்காரியென்றது நம்பியை. இணைப்ப : சேர்த்து வையம் வழங்குமாறு.

மள்ளன் : அஞ்சாத போர்மீளி. யாண்டுளன் : யாவர்பாலுள் ளான் ? ஆண்டு : அவர்பால்.

மன்றவென்கிளவி தேற்றஞ்செய்தது.

அழியாவென்னும் விதப்புத்திருமுதலிய நான்கற்கும் பொது.

திரு - நல்லூழ்வினையுடையனுந்தன்மை.

மருவும் : இடையீடின்றிப்பயிலும்.

செம்மை - அறனுமுறையும்.

திருவும் வென்றியுஞ் செல்வமுஞ் செம்மையு முளவாகு மென மேற்சென்றியையும்.

வழக்கு : மேற்கொண்டு வருங் கொள்கை.

அந்நாற்பேறு மைவரெய்துதலு நூற்றுவரிழத்தலு மொருதலை யென்பது அஞ்சயன் குறிப்பு.

இதனாற் கடவுட்சார்பினுக்கமு மச்சார்பின்மையிற் கேடு முளவா மென்பது பெற்றமுடிபு.

நம்பியகவல்.
அணித்தரவு.
பெரும்பற்றப் புலமை.
புணர்ப்பியற்பனுவல்.
நம்பிவில்லியர் நல்வழக்காட்டு.
பதினெட்டாவது பால்
நீத்தல்வண்மை
முற்றும்.

புலவர் பாண்டியனூர் படைத்த நம்பியகவல்

குறிப்புரையோடு முற்றுப்பெற்றது.

இந்நூல் இரண்டாவது பால் மூன்ருவது பால்களுண் முறையான் வரற்பால வாய் மறந்து தப்பவிட்ட வொரோவொன்றிருபாட்டுக்களுங் குறிப்புரையும்:

தொகை யுணர்வின் புணர்ப்பு.

ருசுூ. துன்பம் வந்துழித் தொலேதலு மேனே
யின்பம் வந்துழி நகுதலு மின்றி
யார்வம் வெகுளியொ டச்சங் கடிந்த
மார்வம் வயங்கு வாய்மை யாள
னலேயுற லீயா தவிந்து
நிலேயுறு முணர்வுகெழு நீத்தோ னென்பவே. 103

தொலேதல்: கிளர்ச்சியின்றி மெலிந்துகெடுதல்.

நகுதல்: இயைந்து மகிழ்தல்.

ஆர்வமுதலாயவற்றைக் கடியாமை உணர்வு நிலேயுருது அலேயுறுதற்கு வாயிலாவதாம்.

இன்றிக் கடிந்த மார்வமென்க. மார்வம்: நெஞ்சம்; இடத்திஞகுபெயர்.

வயங்குதல்: மாசுநீங்கி யொளிவிடுதல்.

வாய்மை: அதனுற்பொருள்களுள்ளவாறு காண்டலுங் கண்டவாறு சொல்லுதலுமாம்.

அலேயுறலீயாது: ஒருசொல்; அலேயாதென்பதாம்.

அலேதல்: வேறுவேறுணர்தலும் ஐயுறுதலுமாம். அந்நீத்தோன்றன்னுகர்ச்சியளவிற் பொருளெல்லாவற்றையு மொருங்கு கண்கூடாகக்காண்டவானே அவனதுணர்வு அலேயுருதாகும்.

அவிதல்: தன்னுணர்வுதன்கணிற்ற லன்றிப்புடைபெயர்தலின்மை.

உணர்வு அலேயுருமையானு மவிதலானும் நிலேயுறுவதாம்.

கெழு: உடைய. நீத்தோன் – முனிவன். என்ப: அசையுமாம்.

வினவயிற் புணர்ப்பு.

ருரு. ஐம்புலத் தாங்க ணேம்பொறி தமக்கு
வெம்புறு விழைவு வெகுளியென் றிவைதாம்
வெற்றென் றுளவா மிற்றென் றுள்குபு
பற்றின்று தம்பாற் படாமை
பெற்றன்று படினிவற் பிணிக்கில வவையே. 153

ஆங்கண்: ஏழாவது. வெம்புதல்: நிரம்பாது நுகர்தற்கின்னுவாதல்; காய் வெம்பிற்றென்புழிப்போல. இனி, வெம்புறு: வெம்புதற்குப் பொருட்டாய வெனினுமாப். வெம்புதல்: உடல் வெதும்புதலும் உளம்படருறுதலும் எதிர்வினிடுக்கணெய்தலிற் பிழையாமையுமாம். விழைவு - விருப்பு. வெகுளி - வெறுப்பு.

'இவை' யெனப் பெயர்ச் செவ்வெண் டொகை பெற்றது.

வெற்றென்று - வெளிப்பட்டு; "வெற்றெனத்தொடுத்த" லென வழங்குப. வெளிப்படுதலும் உளதாதலுமொன்று.

விழைவு வெகுளிகள் புலத்துக்கட் பொறிக்குண்டாகியிருக்கு மியல்பாவனவா மென்க.

இற்றென்று - இங்ஙனமென்று: அவை தன்னியல்பென மருளர்து பொறியியல்பெனத்தெருண்டுதான் புறமாகிய சான்ருய்ப் பொது விருந்தென்பதாம். உள்குபு - நினைந்து.

அவை பொறிகட்குச் சார்புபற்றி வெளிப்படுமியற்கைப் பண் பென்பது தோன்ற இற்ருமெனவிரிக்க.

இற்றென்றுள்கவே அவை தம் முதலாகிய மயக்கமின்மை யென்னு மெய்யுணர்வமைதல் பெறுதும்.

மெய்யுணர்வுதோன்றவே விழைவு வெகுளிகள் பற்றற வீயு மென்பதாயிற்று; வீதலாவது: அவை தனியுயிராயினுனற் றன்னியல் பல்ல, தன்னெழிந்தவற்றினியல்பென வுணரப்படுதலாகிய வேருத லென்பதாம். வேருதலும் நீங்குதலும் முனைப்பின்றி முன்னிலைப் படுதலு மொன்று.

விழைவு வெகுளிகள் நன்கு புலப்படத்தோன்றி நிற்கும் பற்றுக் கோடு பொறிகளாதலிற் பொறியியல்பெனப்படினும் ஏனை மருள் பண்பு முதலாய அகச்சார்புகளெல்லாவற்றிற்கும் பொதுவியல் பென்பது கருதிக்கொள்க.

எனவே விழைவு வெகுளிகள் ஆருயிரியல்புகளல்லவென்பதூஉம் அவ்வுயிர்தன்னெடு பிறிதிடையியைபின்மை துணிந்தவழியு மவை சேய்மைக்கண்ணவாய் நிகழ்ந்து மருஉவாதல்கூடுமென்பதூஉம் அதனுல் அத்துணிவுக்கோரிழுக்குமின்றென்பதூஉம் பெறப்படும்.

பற்றில்லாமை: தான்றனியுயிராயினுன் ருனல்லவற்ருெடு தானெதிர்மறைப்பொருளாந்தன்மை புலப்பட நிற்றலாம். தானெதிர் மறைப்பொருளாதலாவது உண்மைத்தன்மையு முணர்வு மின்பமு மொருதானுதலும் வரம்பின்மையுஞ் சுட்டப்படாமையுமா யமைந்து கிடத்தலாம்.

தம்பாற்படாமை: அவன் அவ்விழைவு வெகுளிகளின் பாற் படாது தன் பாற்பட்டுத் தன்னை நோக்கி நிற்றலிற் புலனினைவு பண்டுபோன் முனைத்தலின்றி மெத்தென நொய்தாய் மெலிந்து தேய வமைதலாம்.

இன்று - இன்றி; இன்மையினென முதற்பொருட்டு வினை யெச்சமறைக் குறிப்புத்திரிசொல்.

பெற்றன்று - பெற்றது; பெற்றமையென்பதுபோல வந்த தொழிற் பெயர்க்கிளவி. இன்னவற்றை முற்றுச்சொற்ருெழின் மேனின்ற வென்ப.

படின் - உண்டாயின்; செயினென் வாய்பாடு பேற்றினருமை குறித்தது. "புணரின் வெகுளாமை நன்" றென்புழிப்போல; வெகுளாமைகூடுமாபி னென்பது பொருள். இத்திருக் குறட்சொற் றொடர்க்கு இடனேக்காது தாம் வேண்டியாங்கு விரித்துரைத்து இசை யெச்சத்துக்கு எடுத்துக்காட்டாக்குவாரு முளர்.

இவற்பிணிக்கிலவென இரண்டாவதன்றிரிபுபுணர்ச்சி யெய் திற்று.

அவை: அவ்விழைவு வெகுளிகள்.

அவைபிணியாமை: அவைபுணரி தான் றன்னையயர்ந்து முன் னிலைக்காட்சியுற்றுத் தான்வேறுவேறு யொருவழிப்படுதலாகிய பொய்ம்மை கெட வொதானு கலொ டிகலி நிற்கலாற்றுமை.

இவனெனவும் அவையெனவும் போந்த அணமைச்சுட்டுச் சேய் மைச்சுட்டுக்களானே இறைவற்குப்புலனுவன உயிர்க்கூறுகளேயா மென்பதூஉம் அவற்றின்வழியே அவற்றுவிழைவுமுதலாய மெய்க் கூறுகள் புலனுவனவல்லது தனக்குமுன்னிலையாகுநவல்ல வென்ப தூஉமுணர்ந்து கொள்க.

மெய்யுணர்வு வீடுபேறுகட்குப் புணரி தான் பிறிதொன்றன் பாற்படாது தன்பாற்படுமுணர்வாகிய துறவுதானே சாலும்; வினை வினைக்குற்ற நிகழ்ச்சிகள் தன்னேடியைபில்லாப் பிறவற்றினியல்புக ளாதலான் அவைபற்றி யாராய்ச்சிவேண்டா வென்பதிப்பாட்டிற் போதரு குறிப்பாமாறு காண்க.

இங்ஙத் தந்தவற்றை அவ்வப்பால்களுள் அவ்வ வெண்முறையின் வைத் தோதிக் கொள்க.

எனவே இவ்விருபாட்டுக்களின் வழிவரும் பாட்டுத்தொறுங்கொடுக்கப் பட்டுள்ள கடையெண்கள் ஐந்நூற்று நாற்பத்து மூன்ருவது பாட்டுவரையு முரண்படுதலின் அவையிற்றைத் திரித்துத்திருத்தி வைத்துக்கொண்டு அவ்வப் பாட்டுக்களையும் அவற்றுத் தொகையினையும் அவ்வமுதனூற் பாட்டுக்களோடும் அவற்றுத் தொகையொடு மொப்புநோக்கிக் கொள்க.

இரண்டாவது பாற்கண் ஐம்பத்தாறு முதல் எழுபதுகாறுமுள்ள தலை யெண்களும் மூன்ருவது பாற்கண் முப்பத்துமூன்று முதல் நாற்பத்தொன்று காறுமுள்ள தலையெண்களுங் கோடியவாதலிற் செவ்விய வாக்கிக்கொள்க.

பதினெண்பாற் பாட்டுத் தொகை.

எண்	பால்	நம்பியகவற்கேற்ப		முதனூற்கேற்ப	
க.	,,	உஅ.	,,	47.	,,
உ.	,,	எக.	கூகூ.	72.	119.
ந.	,,	சஉ.	கசக.	43.	162.
ச.	,,	நகூ.	கஅ௦.	42.	204.
ரு.	,,	உஅ.	உ௦அ.	29.	233.
சா.	,,	ச௦.	உசஅ.	47.	280.
எ.	,,	உசா.	உஎச.	30.	310.
அ.	,,	உக.	உகூரு.	28.	338.
கூ.	,,	ந௦.	நஉரு.	34.	372.
க௦.	,,	கசா.	நசக.	42.	414.
கக.	,,	ருஉ.	நகூந.	55.	469.
கஉ.	,,	கசா.	ச௦கூ.	20.	489.
கந.	,,	நக.	சச௦.	35.	524.
கச.	,,	உரு.	சசாரு.	27.	551.
கரு.	,,	ககூ.	சஅச.	20.	571.
கசா.	,,	கஅ.	ரு௦உ.	24.	594.
கஎ.	,,	உஅ.	ருந௦.	28.	623.
கஅ.	,,	எச.	சா௦ச.	78.	701.

ஓம்:

அரும் பொருள்.

அற்றம் : உணர்வில் பொருளெல்லாமாகி மீளு மியற்கை முதற் பொருள்.

அற்றத்தின் பெயர் : ஆற்றல். பண்பு. மருள். மூதல். முதனிலை. முன்னிலை. இயற்கை. மெய். செய்.

அற்றத்தின் வகை 2. தூமருள், ஏனைமருள். தூமருள் இறைவனுடையது. ஏனை மருள் மன்னுயிருடையது. மருளில்லது பெரும்பொருள்.

தூமருட் பெயர் : திருவருள். செம்மருள். சொல். இசை. ஆவியாக்கம். நுண்மருள். கல்விமகள். திருமகள். உணர்வுமகள். மீமிசை ஞாலம். ஏனைவீடு. தெருள். இறைமுதலுடல்.

ஏனை மருட் பெயர் : இருள். புன்மருள், அன்மருள். வினைச் சார்பு. அறியாமை. திரிபு. செத்தை மன்னுயிர் முதலுடல். நுண்ணுடல் பருவுடல்கள் இறைவற்கும் மன்னுயிர்க்கும் பொது.

இயற்கை யுள் பொருள் 2. உயிர், மெய். உயிர்வினையில்லது. மெய் வினையின்றியமையாதது. உயிர் நுண்ணிது. மெய் பரிது.

உயிரின் பாற் படுவன 3. பெரும் பொருள். கடவுள். வாழுயிர்.

இருவேறு வாழுயிர் : இறைவன் கூற்றுவாழுயிர், ஏனைவாழுயிர். தூமருள் இறைவன் கூற்று வாழுயிருடையது. ஏனைமருள் ஏனை வாழுயிருடையது. இறைவன் கூற்றுவாழுயிரொன்றெனவும்படும் பலவெனவும்படும். ஏனை வாழுயிர் பல. இறைவன்கூற்று வாழுயிர் உலகைத் தொழிற்படுத்தும். பிறப்பிறப்பில்லாதன. ஏனை வாழுயிர் தொழிற்பட்டுப் பிறந்திறந்துழல்வன. பெரும்பொருள் உயிரியற்கை. கடவுளு மன்னுயிரும் உயிர்ப்போலிகள்.

வீடு 2. விழுமிய வீடு; ஏனை வீடு. விழுமிய வீடு திருவருண் மெய்ப்புலமையினெய்தற்பாலது. ஏனை வீடு கடவுளை யுணர்தல் கடவுட் புணர்ப்புக் கடவுட்காதலென்றிவற்ரு னெய்தற்பாலது.

மேற்செலவு 2. மிசை ஞாலம், மீமிசை ஞாலம். மிசை ஞாலம் : மீளு மேலுலகு. மீமிசை ஞாலம் : மீளாமுடியுலகு. மீமிசை ஞாலம் முதல்வன் வாழ் நிலம். ஏனை ஞாலம் மன்னுயிர் வாழ்நிலம். பெரும்பொருள் நிலமும் நிலத்தினிகழ் பொருளுமன்று.

மேற்செலவு வழி 2. ஞாயிற்றுவழி, திங்கள் வழி. மீமிசை ஞாலஞ் செல்வழி ஞாயிற்றுவழி. மிசை ஞாலஞ் செல்வழி திங்கள் வழி.

உயிர்மெய் : உடம்பினுள் உயிர் ஏவலுமில்லை இயற்றலுமில்லை. கடவுளது முன்னிலையளவிலே ஆற்றலென்பதுதானே ஞாலமாக முறைப்படத் திரிந்து நின்றொடுங்குதல் அதனியற்கை.

மெய்யுணர்வு : உயிர் தன் பொதுவியல் சிறப்பியல்களை யுணர்தல்.

கட்டு : உயிர் தன்னெதிர்மறையாகிய மருளின்வினையை வினையில்லாத தன்கட் காணு மருட்சி.

வீடு : மருளின் வினையைத் தன்கணின்றி மருளின் கண்ணே காணுந் தெருட்சி. வினையினின்று விடுபடுதலே வீடெனப்பட்டது.

புணர்ப்பு : நெஞ்சு திரிபின்றி நினைப்புமுற்று மொழிந்து நின்றுங்கு நீடுநிற்கச் செய்தல். இது வினையு ளெல்லாஞ் சிறந்திறுதிக் கணிற்பது. வினை, அன்பு, புலமை யென்றிவற்றின் பாற்

படு நிகழ்ச்சி யெவ்வெவை நிகழ்வுழிப் புணர்ப்புளதாகுமோ அவ்வவிடத்து அவ்வப் புணர்ப்பென விதந்தோதப்படும். வினை முயற்சி நிகழ்வுழியுளதாகும் புணர்ப்பு வினைவயிற் புணர்ப்பெனப்படும். கடவுட்காதன் முதலிய அன்பு நிகழ்வுழியுளதாகும் புணர்ப்பு அன்புவயிற் புணர்ப்பெனப்படும். யாதானு மொன்றுபற்றி யாராய்ச்சி யுணர்வு நிகழ்வுழியுளதாகும் புணர்ப்புப் புலவயிற்புணர்ப் பெனப்படும். பிறிது நிகழ்த்தாமே ஒருவன்றன்னையே குறித்து நிகழ்த்துழித் தன்னியற்புணர்ப் பெனப்படும். இங்ஙன மேனைப் புணர்ப்புஞ் சொல்லிக் கொள்க. புணர்ப்பொடு பொருந்தி நின்று வினை செய்யினுஞ் செய்யா தொழியினும் வீடுபேறு தலைப்படும். அங்ஙனமன்றி வினை செய்யினுஞ் செய்யா தொழியினும் பிறவித் துன்பமுளதாகும். ஒருவற்குப் பிறப்பினாலாதல் பயிற்சியினாலாதல் புணர்ப்பு வரும்.

மெய்யுணர்வின் வகை 15.	பெரும்பொருளுணர்வு. கடவுணிலையுணர்வு. தன்னியலுணர்வு. தொகையுணர்வு. தனித்தனியுணர்வு. செய்செய்யறிஞன் சிறப்பியலுணர்வு. மூதன்முதலி வேற்றுமையுணர்வு. நிலைநிலையாமைக் கூறுபாட்டுணர்வு. உணர்வதுணரப்படுபொருளுணர்வு வினைவினையின்மை வேறுபாட்டுணர்வு. தன்மைமுன்னிலைத் தனித்தனியுணர்வு. ஆராய்ச்சியுணர்வு. புணர்ப்புணர்வு. கேள்வியுணர்வு. முப்பாற் பண்புணர்வு.
கடவுள் வழி 6.	கடவுண் முதன்மையுணர்வு. கடவுட் புணர்ப்புணர்வு. கடவுட் செல்வக்காட்சி யுணர்வு. கடவுட் காதல். கடவுட் பணி புரிதல். கடவுட் புகல் புகுதல்.
ஒருதலையாகச் செயற்பால வினை 3.	வேள்வி, நோன்பு, ஈகை.
பண்பு 3.	ஒண்மை, புன்மை, மைம்மை
முப்பாற்பண்பின் பாற்படுத்துக் கூறப்பட்டன 20:	வேள்வி. ஈகை. நோன்பு. கல்வி. துறவு. தன்மை. உணவு. கூர். திட்பம். உணர்வு. செய்தி. வினைமுதல். ஞாலம். அணங்கு. மெய்ப்பாடு. உடைமை. ஊதியம். பிறப்பு. நுகர்வு. மறுமை.
நினைவு நிகழ்த்துவன 3.	விழைவு, வெகுளி, வெரூஉ.
இருளுலகஞ் செல்வழி 3.	விழைவு, வெகுளி, கடும்பற்றுள்ளம்.
சார்பு 24. :	புலம், 5. பார், 5. செயல்வாயில், 5. உணர்ச்சிவாயில், 6. நுகர்ச்சிவாயில், 3.
பார் 5. :	மண், புனல், எரி, வளி, விண்.
புலம் 5. :	ஓசை, ஊற்றம், ஒளி, சுவை, மணம்.
செயல்வாயில் 5. :	வாய், கை, கால், இழிகண், விழைச்சு.
உணர்ச்சி வாயில் 6.	செவி, மெய், விழி, நா, மூக்கு, நெஞ்சு.
நுகர்ச்சிவாயில் 3.	பண்பு, துப்பு, யான்.
வினை முடிதற்கு வேண்டுவ 5.	களன், வினைமுதல், கலன், செய்யுமாறு, முறை.
மக்கட் பிறப்பு 4. :	புலவர், தலைவர், விலைஞர், வினைஞர்.
வீடுபேற்று வழி 2.:	புலமை, புணர்ப்பு.
உயிரின் பெயர் :	ஆவி. இறைவன்: முதலி: செய்யறிஞன். தான். சான்று.

ஓம் :

பாட்டு முதற் குறிப்பு.

அகர முதல்.

எண் பக்கவெண்.

அகன்றிய	23	அன்ன	14	இமையவர்	321
அகனய	141	அன்னவாய்மை	243	இமையவர்ப்	204
அகநெடு	55	அன்னஞமினு	196	இமையோர்	209
அச்ச	305	அன்னே	243	இயங்குதிணை	242
அசைவி	159	ஆக்கந்	723	இயங்குதிணை	275
அஞ்சிவர்	184	ஆக்கநச்சி	329	இயங்குந	133
அடக்க	20	ஆக்கம்	338	இயங்கும்	57
அடிக்க	344	ஆங்கவன்	229	இயம்பிய	172
அடிமை	347	ஆசிரி	18	இயல்பி	344
அடுதொழி	235	ஆட்சியு	43	இயற்கைப்	84
அத்துணை	89	ஆண்டகை	226	இருசார்	27
அதுவேதானே	269	ஆண்மை	346	இருசாராகவர்	303
அதுவேபடர்க்கை	136	ஆயிடை	12	இருளின்	135
அந்தில்	16	ஆர்வஞ்	104	இவ்வுயிர்	31
அம்மகேண்மதி	1	ஆர்வம்	284	இவ்வுயிர்த்	35
அம்மகேண்மோ	158	ஆர்வமுஞ்	56	இவணிதன்	40
அம்மலர்	186	ஆர்வலர்	148	இளிய	313
அயற்பொருளியை பினவா	139	ஆர்வு	339	இற்கெடின்	20
		ஆராக்	309	இற்றெனு	33
அயற்பொளியை பிறகிப	139	ஆராவியற்கை	91	இறைவ	354
		ஆலு	295	இன்பத்	290
அபிலுதன்	151	ஆவயிற்	229	இன்பக்	39
அரவுயர்	10	ஆவுரித்	206	இன்புறு	200
அருந்திறற்	216	ஆழியங்	234	இன்மூத	278
அரும்பெறல்	140	ஆற்றவும்	25	இன்னணந்த	151
அருளின்	136	ஆன்றவிந்	204	இன்னணந்து	93
அல்வினை	178	இஃதின்	311	இன்னணம்	22
அவ்வழி	162	இங்ஙனஞ்	228	இன்னணமறு	74
அவ்வினை	331	இச்செய	100	இன்னது	341
அவற்று	283	இணைப்பி	360	இன்னமுற்றும்	31
அழுக்கா	85	இத்துணை	61	இன்னவாறே	250
அளக்கரும்	173	இப்பரிசம்ம	182	இன்னவெனவ	212
அளியை	160	இப்பரிசன்ப	39	இன்றிங்	227
அற்றம்	252	இப்பரிசாக	239	இன்னுங்	209
அற்றமாகியே	193	இப்பால்	13	இன்னே	237
அற்றமென்ற	187	இப்பாலுணர்வான்	260	இனிக்கடுங்	14
அறிவில்	342	இப்பெரும்	280	இனிதுதற்	134
அன்பகல்	343	இப்பெருமறை	358	இனிமற்	34
அன்பவெற்	79	இப்பெருவேள்வி	119	இனையது	47
அன்றியுங்	37	இப்போர்	15	இனைவற	12

ஈங்குநீ 247
ஈகை 324
ஈடுபா 108
ஈண்டிதன் 127
ஈதுரைத் 27
ஈரப் 33
ஈற்றின் 356
உசாத்துணை 359
உடம்பொடு 133
உடல்வாய் 335
உடல்வாழுயிர் 29
உடலிடை 337
உடலின் 157
உடலுயிர்க் 316
உடற்கட் 289
உண்மைபுன்மை 171
உண்மைமிக்குழி 287
உண்மையிற் 288
உணர்ச்சிவாயி 68
உணர்ச்சிவாயின் 285
உணர்வி 125
உணர்வுசாலி 87
உணர்வு செய்தி 337
உணர்வுமேனை 272
உணர்வொடு 336
உணரற் 267
உணவி 72
உணவே 151
உதுக்கா 232
உதுவெனும் 180
உயிர்த்தெழு 35
உயர்வற 180
உரைத்தபண் 288
உரைத்தவிவ் 258
உலையா 154
உள் பொரு 30
உள்ளம் 49
ஊக்கங் 159
ஊக்கமின்றி 327
ஊக்கமேற் 358
ஊதியங் 342
ஊதியப் 321
ஊதியமுள்ளா 320
ஊழிமுதல்வ 236
ஊழியீற்றி 195
ஊனை 203
எங்கணுயினு 182
எங்கணுமான்ற 278
எங்கணுமொப்ப 276
எஞ்ஞான் 152
எடுக்கு 38
எண்ணில் 228
எத்துணை 351
எதனி 155
எந்தாய் 21
எந்தாயடிகே 231
எப்பரி 58
எப்பொருட் 303
எப்பொருண் 348
எப்பொழு 32
எம்பெரு 226
எம்மனோ 17
எமர்பொருட் 214
எமரு 355
எய்திய 256
எரியொளி 188
எல்லாப் 268
எல்லாவினையு 352
எல்லாவினையும் 330
எல்லொளிக் 270
எலுவ 185
எவ்வாற் 19
எவ்வாற் 354
எவ்வினைத் 110
எவ்வினைதாமு 108
எவ்விய 217
எவ்வுட 36
எவ்வுயிர்க் 206
எவ்வுயிர்த் 282
எவ்வுயிரா 66
எவ்வெவ 174
எளியேஞ் 233
எற்குக் 97
எற்றுளு 157
என்பணி 248
என்பணி 254
என்பாலுள 194
என்பாலுன் 213
என்பாற் 252
என்பாற்படு 353
என்பெருக் 17
என்முது 25
என்மாட் 166
என்றிது 246
என்னடி 207
என்னபோழ் 188
என்னநெஞ் 302
என்னவும் 357
என்னறச் 277
என்னினு 169
என்னுறு 298
என்னையு 241
என்னையேனை 156
என்றொடு 208
என்றோ 96
எனது 197
எனவிது 360
எனையும் 116
எனைசினை 334
ஏடாகேணீ 253
ஏடாவில்வி 24
ஏதமில் 205
ஏவிய 314
ஏற்றிழி 276
ஏன்று 132
ஏனை 168
ஐந்தினுட் 335
ஐம்பரும் 261
ஐம்புலத் 363
ஐம்புலன் 146
ஐம்பொறி 91
ஒண்மைப் 332
ஒட்டுப் 113
ஒட்டுப் 339
ஒட்பமின்மை 286
ஒட்பவுணர்வு 289
ஒருசார் 115
ஒருவனென் 303
ஒள்ளியன் 317
ஒளியராத 307
ஒளியருடை 307
ஓங்குவண் 114
ஓங்குயர் 214
ஓமுது 325
ஓரா 167
ஔவியம் 86
கட்டளை 321
கடவுளர் 229
கடிந்தனர் 199

கடும்பற்	19	செய்யா	109	துணிபிய	40
கடும்பற்	26	செயற்பா	314	துப்பா	43
கடும்பற்	286	செருவிற்	38	துன்பங்	30
கடையர்	172	செவ்விய	352	துன்பம்	363
கண்ட	309	செவ்வே	224	தூயதெளிவு	287
கண்ணுறற்	246	செவிமெய்	300	தூயநில	150
கதுவிய	82	செறிவெனு	115	தெண்கடல்	26
கரியவ	316	செறிவொடு	345	தெவ்வடுகிற்	260
கருதுக	227	சொல்லுவார்	51	தெவ்வடுகைய	223
கல்வியும்	137	சொற்றமன்	95	தெளிவுண்ட	56
கவர்வு	263	ஞாலமுழுது	300	தெளிவுறு	322
கவலுந்தற்	28	ஞாலமுழுது	267	தெற்றென்	34
களனொடு	324	ஞாயிறுதம்	217	தென்றலு	152
களனே	334	ஞாயிறுவைய	232	தொடக்கங்	344
களிமகிழ்	52	ஞாயிறென்றே	279	தொடக்கரு	51
கனவு	342	நட்ப	257	தொல்லவர்	288
காமமுஞ்	141	தடுமாற்	63	தோற்றமுங்	98
கிளர்ச்சி	316	தண்புன	170	நண்ப	172
குடிமையுங்	21	தத்தமக்	346	நண்பன்	15
கூரிருள்	187	தலையுடல்	150	நப்பி	360
கேண்மதி	64	தற்கொல்	313	நயப்பொடு	257
கேள்வி	190	தற்சுட்டற்	323	நல்லவை	53
கைப்படை	21	தற்சுட்டுடை	312	நல்லறஞ்	161
கைப்பொடு	319	தற்சிறப்பயர்	297	நள்ளிருள்	320
கைப்பொருள்	120	தற்சிறப்பித்து	147	நறவுண்	329
கைம்மா	324	தற்செய	112	நன்கன	59
கொடுநோன்	318	தற்புக	264	நன்பாற்	251
கொடும்பெருங்	245	தற்புனை	306	நனிகடுங்	131
கொலப்படின்	39	தற்பெற்	76	நாட்புணர்ப்	185
கொற்றப்	186	தன்வழி	162	நாட்டப்	308
கொன்னை	175	தன்னறங்	37	நால்வரும்	173
கோடை	45	தன்னியல்பா	348	நான்சார்ங்	301
கோலக்	236	தன்னியல்பே	179	நிகழ்ச்சி	307
சார்புஞ்	111	தன்னியலா	270	நிலத்துப்	301
சாலவும்	13	தன்னியலுண	85	நிற்கியான்	357
சிங்கா	233	தன்னெஞ்	147	நின்னக	253
சிதவ	33	தன்னைவெல்	159	நின்னரு	359
சிறந்தது	93	தன்னைவென்	148	நின்றொடு	12
சினவ	233	தாமே	275	நினைப்பி	274
செஞ்சுட	227	தாளாண்	300	நீத்தல்	145
செப்பிய	116	தான்பிறர்ச்	256	நீத்தவர்	239
செம்மலர்	70	தான்பெருஞ்	281	நீதக	223
செம்மையுங்	341	திருத்தகு	304	நீவிர்	71
செய்செய்	279	திருமறு	235	நீயா	247
செய்பல	260	துஞ்சுறு	181	நீயெனக்	356
செய்யக்	332	துஞ்சாத்	292	நுகராக்	53

நுட்ப 210
நுந்தை 238
நுவன்ற 142
நூற்றுவர் 18
நெஞ்சக 342
நெஞ்சமசை 55
நெஞ்சே 158
நேர்மா 294
நோன்பியர் 164
நோன்பொடு 327
படைப்புயி 138
படைப்போற் 239
பண்டை 78
பண்பணை 171
பண்புட 299
பண்புமூன் 341
பண்பெனக் 282
பண்பொடு 83
பண்பொடு 106
பயிற்சி 255
பலப்பல 230
பழுதுறு 198
பற்பல 173
பற்றொடு 61
பன்னூ 310
பனுவ 317
பிணைய 141
பிற்சேர் 339
பிறக்கி 186
பிறந்ததி 34
பிறர்க்குக் 322
பிறவா 210
பின்னை 246
புகழ்ந்த 193
புகன்ற 261
புகன்ற 58
புகன்றங் 50
புகையிற் 90
புகையோ 189
புணர்ப்பி 131
புணர்ப்பிற் 161
புணர்ப்பின் 340
புணர்ப்பின் 361
புணர்ப்பின் 123
புணர்ப்பு 134
புணர்ப்பு 149
புணர்ப்பு 156
புணர்ப்புப் 254
புணர்ப்பென 153
புணர்ப்பெனு 146
புணர்ப்பொடு 88
புணரி 57
புணரியர் 164
புரிவளை 13
புல்லறி 175
புலப்படுங் 277
புலம்பொறி 29
புலமை 199
புலமையிற் 124
புலமையும் 129
புலவ 82
புலவ 211
புலவயிற் 131
புலவர் 345
புலவனை 92
புலைஞ் 207
புறப்புலன் 75
புறப்பொருட் 142
புன்மை 287
பெருஞ்சார் 351
பெருஞ்சார் 138
பெருந்தகை 24
பெருந்தகைச் 198
பெரும்பொருள் 326
பேராசிரிய 225
பொருட்பா 132
பொருநர் 48
பொல்லார்ப் 101
பொற்கும் 155
பொறிபல 53
பொன்முடி 244
போரேர் 330
மக்கள் 197
மகட்கொடை 16
மண்ணக 235
மண்யுன 167
மணமுடைப் 299
மம்மர் 304
மயலகப் 51
மயக்கி 331
மற்றுமூப் 178
மற்றுவினை 67
மறத்தகை 358
மன்பெரும் 192
மன்னர் 361
மன்னுயிர்க் 347
மன்னுயிர்பல 169
மன்னுயிர்விழை 318
மாந்தர் 245
மாந்தரிர் 71
மாயா 32
மாவரை 31
முட்டாட் 323
முடித்தலை 230
முதலிடை 231
முதலியு 272
முதியவிம் 295
முதுமை 79
முந்தை 234
மும்மைப்பண்பின் 285
மும்மைப்பண்பு 285
மும்மைப்புலமை 201
முயற்சி 37
முயற்றி 144
முழுமுதற் 240
முற்றுயிர் 255
முன்னுங் 225
முனைப்பொடு 312
முனைப்பொழிந் 203
மூச்சுச் 117
மூதலி 273
மூதலிற் 83
மூதன் 274
மெய்யென 326
மேதகு 183
மைம்மைப் 284
யாக்கை 273
யாங்கணும் 195
யாங்கன 106
யாதனையடைக் 297
யாதனையுணர்த 280
யாதனையுணர்ந் 120
யாதனையுணரிற் 192
யாதுசெய் 261
யாதும் 112
யாதுமொன் 350
யாதொரு 50
யாப்புறு 331

யாமிவர்க்	25	வாழ்க்கை	313	வினையினு	63
யாவருக்	87	வாழ்ச்சி	319	வினையினைத்	65
யாவருந்தாங்	174	வாழிய	289	வினையு	108
யாவற்றுக்கு	176	வானுறு	103	வினையெனக்	206
யாவற்றுக்கும்	212	வாளொளிச்	202	வினையைத்	333
யாவனி	187	வாளொளித்	228	வினையொழி	129
யான்பிறர்	28	விருப்பஞ்	177	வினைவினை	I09
யான்மடி	80	விழையற்	333	வீடுபேறு	326
யானிவை	336	விழைவிற்	314	வீடுமன்	12
யானெனச்	353	விழைவுசா	340	வீடுமன்	15
வடிவாட்	123	விழைவுவேட்	339	வீற்று	196
வந்தவு	177	விழைவுளங்	42	வெவ்வே	337
வரம்பி	241	விழைவொடு	129	வெள்ளிய	189
வரைந்து	118	விளைவு	323	வெற்றியும்	77
வரைவு	69	விற்பெரும்	244	வேட்டு	72
வல்வினை	163	விறகிற்	123	வேட்டொறும்	203
வழியிரண்	190	வினைச்செய	106	வேண்கோள்	226
வழுவில்	291	வினைசெய்	81	வேத	41
வளிகிழான்	240	வினைதாம்	73	வேள்வி	118
வளைக்கை	160	வினைமாசு	156	வேள்விப்	70
வாயில்	125	வினைமுடித்	349	வேள்வியொ	330
வாயிற்	251	வினைமுத	135	வேளாண்	346
		வினைமுயல்	54		

பிழைதிருத்தம்

பிழை	பக்கம்	திருத்தம்
கெடுமாரெமர்.	1	கெடுமாறெமர்
முதல்வெனுருவற்கே.	,,	முதல்வனொருவற்கே.
கெடுமார் – கெடுவார் ; கெடுவாராகிய எமர்.	8	கெடுமாறு : வினையெச்சம். கெடுமாறு கடுமாறென் கண்டனரெனவியையும். ஒடு ; எண்ணொடு.
அங்கையிர்றுங்கின.	14	அங்கை விற்றுங்கின.
நீமுயன் னுஞற்று.	48	நீமுயன் றுஞற்று.
வினைபடு மூதியம்.	50	வினைப்படுமூதியம்.
பரிமேழகி.	,,	பரிமேலழகி.
வேள்வியே வினையிற் புணர்ப்பு	70	வேள்வியே வினைவயிற்புணர்ப்பு
வளியுறுத்தப்பட்டது.	74	வலியுறுத்தப்பட்டது.
தெருளோடு.	98	தெருளொடு.
நலலற.	102	நல்லற.
பெரும்பொடான்.	119	பெரும்பொருடான்
உடல்வாழ்வீடாகிய.	,,	உடல்வாழ்வீடராகிய.
கனவிற்போன்மயங்குமயக்க.	120	கனவிற்போன்மயங்குமயக்கம்.
ஓங்கு வெண்சார்பி.	122	ஓங்கு வண்சார்பி.
யிருவயிர்புணர்ப்பு.	129	பிருவயிற்புணர்ப்பு.
மிம்பர்.	138	மிம்ப.
னுளர்த லன்றி.	,,	னுளர்த லின்றி.
தன்முனிலையளவா.	177	தன்முன்னிலையளவா.
அன்றிவுயிர்.	183	அன்றி உயிர்
பிரித்தல்.	204	விரித்தல்.
காண : அசை.	208	காண் : அசை.
புலவா ராயினர்.	211	புலவராயினர்.
னளக்கரி னுடுவ.	212	னளக்கரி னடுவ.
சிரர் எண் குழுவினர்	220	சீரர் எண் குழூவினர்.
பிறறெல்லாருங்.	231	பிறரெல்லாருங்.
ஞாலப்பேர்யாக்கை.	239	ஞாலப்பேர்யாக்கை.
யயாவுயிப்புச்	246	யயாவுயிர்ப்புச்
அவர கடவுட்காதல்.	247	அவர் கடவுட்காதல்
நம்பியடிகளார்.	251	நம்பியடிகளாற்.
வாழ்த்தியாயின்.	253	வாழ்தியாயின்.

அவ்வாறெழுந்தார்க.	254	அவ்வாறெழுந்தார்க்
பலகாற பயிலுதல்.	255	பலகாற் பயிலுதல்.
யானன்புடையயேன்.	256	யானன்புடையேன்.
செய்யாமாறறிபவன்.	260	செய்யினையறிபவன்.
யுயிரியல்ல.	264	யுயிரியலல்ல.
தானெதிற்மறை.	271	தானெதிர்மறை.
யிதனோடு சேரா.	273	யிதனொடு சேரா.
செய்செய்யறிஞர் சிறப்பியற் புணர்ப்பு.	279	செய்செய்யறிஞன் சிறப்பியற் புணர்ப்பு.
தந்தையரனென.	282	தந்தையானென.
தற்புகழ் – தனதுபுகழ்.	321	
பொரேன்.	353	பொரேஎன்.
தரனு.	,,	தானு.
வாவியநிலை.	355	வாவியநிலை. வாலரமைநிலை.
சாகாட்டுநிலை.	,,	சாக்காட்டுநிலை.
புகல்புசற்பாலை.	,,	புகல்புகற்பாலை.
தான்மை.	359	தன்மை.
காட்கியு.	361	காட்சியு.
காண்டவானே.	363	காண்டலானே.
விளைஞர்.	368	விளைஞர்.
173.	349	673.

* வேறு காணப்படும் எழுத்துவழு எண்வழுப்புள்ளிவழுக்களையுமிங்ஙனந் திருத்திக் கொள்க.

நீத்தல்வண்மைப் பாட்டு நாற்பதாவது ஈற்றயலடி முச்சீரடியாகாது நாற்சீரடியாகக் காணப்படுகின்றது. அதனீற்றுச்சீராகிய அதனைலென்பதனை நீக்கியாயினுங் கூன்வைத்தாயினும் ஓதல்கொள்க. அங்ஙனமின்றி அப்பாட்டொன்றனை நேரிசையகவலெனக்கொள்ளாது நிலையாழி யகவலெனக் கொள்ளினுமிழுக்கன்று.